நாற்கவிராச நம்பி

இயற்றிய

# அகப்பொருள் விளக்கம்

[ பாடநுண் பதிப்பு ]

பதிப்பாசிரியர்

வெ. பழனியப்பன், எம்.ஏ., எம்.லிட்.

பொதுப்பாசிரியர்

க. வெள்ளைவாரணன்

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

நாற்கவிராச நம்பி

இயற்றிய

# அகப்பொருள் விளக்கம்

[ பாடநுண் பதிப்பு ]

பதிப்பாசிரியர்

வெ. பழனியப்பன், எம்.ஏ. எம்.லிட்.

பொதுப் பதிப்பாசிரியர்

க. வெள்ளைவாரணன்

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

1977 Rs 2-50

முதற் பதிப்பு: 1977

திருப்பனந்தாள் திருமட நிதிய வெளியீடு

அச்சிட்டோர் :
ஸ்ரீ விநாயகா பிரஸ்,
சிதம்பரம்.



திருப்பனந்தாள் காசிமடத்து இருபத்தொன்ருவது பட்டத்து
எழுந்தருளியுள்ள, திருப்பெருந்திரு.

காசிவாசி முத்துக்குமாரசாமித்தம்பிரான் சுவாமிகள்

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| பதிப்புரை | | |
| ஆய்வு முன்னுரை | .. | 1 |
| ஆசிரியர் வரலாறு | ... | 13 |
| அகத்திணையியற் கருத்து | .. | 18 |
| அகத்திணையியல் | .... | 39 |
| அகத்திணையியல் விளக்கம் | .. | 93 |
| களவியற் கருத்து | ... | 102 |
| களவியல் | .. | 116 |
| களவியல் — விளக்கம் | .... | 274 |
| வரைவியற் கருத்து | .... | 284 |
| வரைவியல் | .... | 290 |
| வரைவியல் — விளக்கம் | .... | 346 |
| கற்பியற் கருத்து | ... | 352 |
| கற்பியல் | .... | 355 |
| கற்பியல் — விளக்கம் | .... | 385 |
| ஒழிபியற் கருத்து | .... | 388 |
| ஒழிபியல் | .... | 395 |
| ஒழிபியல் — விளக்கம் | .... | 423 |
| நூற்பா முதற்குறிப்பகர வரிசை | .... | 425 |
| மேற்கோட் செய்யுள் முதற்குறிப்பகர வரிசை | .... | 429 |

# பதிப்புரை

உலகிலுள்ள காட்சிப் பொருள், கருத்துப்பொருள் ஆகிய எல்லாவற்றையும் நன்கு ஆராய்ந்து அவற்றை முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என மூன்ருகப் பகுத்து இவ்வுலகத்து வாழ்வாங்கு வாழும் மக்களது வாழ்க்கை முறையினை வகுத்துரைப்பது தமிழின் பொருளிலக்கணமாகும். இப்பகுதி தமிழுக்கே சிறப்புரிமையுடையதாகும்

நிலமும் காலமும் உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத அடிப்படைப் பொருள்கள் ஆதலின் முதற்பொருள் எனப்படும். நிலமும் காலமுமாகிய முதற்பொருளின் சார்பினுலுண்டாகும் தாவரம் முதல் மக்கள் ஈருகவுள்ள உயிர்களும் உயிரல்பொருள்களும் கருப்பொருள்கள் ஆகும். இவை நிலமும் காலமுமாகிய முதற்பொருளின்கண்ணே கருக்கொண்டு தோன்றுவனவாதலின் கருப்பொருள் என வழங்கப்பட்டன. அறஞ்செய்தலும் பொருளீட்டலும் இன்பம் நுகர்தலுமாகிய ஒழுகலாறுகள் உரிப்பொருள்களாகும், இவை மனவுணர்வுடையராய் உயர்ந்த மக்கட் குலத்தார்க்கே உரிய பொருள்களாதலின் உரிப்பொருள் எனப்பட்டன. கணவனும் மனைவியும் என அன்பினுற் கலந்து வாழும் குடும்ப வாழ்வினை அகம் எனவும், இங்ஙனம் பல்லாயிரங் குடும்பங்கள் இகலின்றி ஒத்து வாழ்தற்கு அரணுகிய அரசியல் வாழ்வினைப் புறம் எனவும் வழங்குதல் தமிழிலக்கண மரபாகும். அகமாவது ஒருவனும் ஒருத்தியும் அன்பினுற் கூடி நுகரும் போக நுகர்ச்சியாதலின், அதனுலாய பயன் அதனைத் துய்த்த அவ்விருவருள்ளத்திற்கே புலனுதலின் அகம் எனப்பட்டது. புறப்பொருளாவது மறஞ் செய்தலும் அறஞ்செய்தலும் ஆதலால் அவற்ருலாய பயன் பிறர்க்குப் புலனுதலின் புறம் எனப்பட்டது. இவ்வாறு உலகத்துப் பொருள்கள் எல்லாவற்றையும் முதல், கரு, உரி என மூன்ருகப் பகுத்து அவற்றை அகம், புறம் என இருவகையாக வகுத்து விளக்குதல் பண்டைத் தமிழர் கண்டுணர்ந்த பொருளிலக்கண மரபாகும்.

தமிழ் கூறும் நல்லுலகத்து உலக வழக்கினையும் செய்யுள் வழக்கினையும் அடிப்படையாகக் கொண்டு தமிழ் மொழியின் எழுத்திலக்கணத்தினையும் சொல்லிலக்கணத்தினையும் பொருளிலக் கணத்தினையும் முறைப்பட ஆராய்ந்து விளக்கும் முழுமையான இயற்றமிழ் இலக்கண நூல் ஆசிரியர் தொல்காப்பியனாராற் செய்யப்பெற்ற தொல்காப்பியமாகும். இடைச்சங்கத்தார்க்கும் கடைச்சங்கத்தார்க்கும் இலக்கணமாயமைந்த தொல்காப்பியத்தின் இலக்கணக் கூறுகளுள் ஒவ்வொன்றையும் தனித்தெடுத்துக் கொண்டு பிற்காலத்தில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி பற்றிய தமிழ் இலக்கண நூல்கள் பல இயற்றப்பட்டன.

எழுத்தும் சொல்லும் ஆகிய இரண்டிற்கும் இலக்கணம் கூறும் முறையில் நன்னூல், நேமிநாதம் முதலியனவும், தமிழ் யாப்பியலை விளக்கும் நிலையில் யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை முதலியனவும், தமிழுக்கேயுரிய பொருளிலக்கண வகை களுள் அகத்திணை யொழுகலாற்றினைத் தொகுத்துக் கூறும் முறையில் இறையனார் களவியலும், புறத்திணையிலக்கணத்தினை விரித்துரைக்கும் முறையில் பன்னிரு படலம், புறப்பொருள் வெண்பாமாலை என்ற நூல்களும் இயற்றப் பெற்றன.

தொல்காப்பியத்துள் விரித்துரைக்கப் பெறும் அகப்பொருள் இலக்கணத்தினையும், அதன்வழித் தோன்றிய இறையனார் களவிய லுரையினையும், சங்கத் தொகை நூல்கள் பாண்டிக்கோவை, திருச் சிற்றம்பலக்கோவை முதலிய அகப்பொருளிலக்கியங்களையும் நன்கு ஆராய்ந்து, அகத்திணையிலக்கணங்களை வகைப்படுத்து விரித்து விளக்கும் முறையில் நாற்கவிராச நம்பி என்பவரால் இயற்றப் பெற்றது அகப்பொருள் விளக்கம் என்னும் நூலாகும்.

இந்நூல் அகப்பொருள் இலக்கணங்கற்பார்க்கு மிகவும் பயன் தரும் முறையில் அமைந்திருத்தலால் கல்லூரியிற் புலவர் முதனிலை வகுப்பிற் பயிலும் மாணவர்க்குத் தொடர்ந்து பாடமாகப் பயிற்றப் பெற்று வருகின்றது.

கல்லூரியிற் பயிலும் மாணாக்கர்களுக்குரிய கருவி நூல்களாகக் கற்பிக்கப் பெறும் இத்தகைய தமிழிலக்கண நூல்களை இன்றி யமையாத விளக்கங்களுடன் பாடநூல் பதிப்பாக அடக்கவிலையில்

வெளியிட்டு வழங்குதல் தமிழ் பயிலும் மாணவர்களுக்குப் பேருதவி யாகும். அண்ணுமலைப் பல்கலைக் கழகம் திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடத்தின் அறக்கட்டளையின் ஆதரவில் யாப்பருங்கலக் காரிகையைப் பாடநுண் பதிப்பாக வெளியிட்டுதவியது. அதனையடுத்து அகப்பொருள் விளக்கம் என்னும் இந்நூல் பாடநுண் பதிப்பாக வெளியிடப்பெறுகின்றது.

இதன்கண் அகப்பொருள் விளக்கம் பற்றிய ஆய்வுமுன்னுரை யும்; ஆசிரியர் வரலாறும், ஒவ்வோரியலுக்கு முன்னும் அவ்வியல் பற்றிய கருத்து விளக்கமும் ஆராய்ந்து எழுதப் பெற்றுள்ளன. ஐந்திணைக்குரிய முதல், கரு, உரி பற்றிய அட்டவணையும் பிரிவு வகை, பிரிவின் பகுப்பு, பிரிவிற்குரியோர், பிரிவிற்குரிய காலம் பற்றிய அட்டவணையும் தரப்பெற்றுள்ளன.

அகப்பொருள் விளக்கமாகிய இந்நூலைப் பாட நுண்பதிப்பாகச் செய்தவர் அண்ணுமலைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர் திரு. வெ. பழநியப்பன், எம். ஏ., எம். லிட். அவர்களாவார். இவர் பல்லாண்டுகளாக இப்பல்கலைக் கழகத்தில் புலவர் வகுப்புக்கும், இளங்கலை வகுப்புக்கும், முதுகலை வகுப்புக்கும் பாடங்கற்பித்த பயிற்சியும், புலவர் வரலாற்று அகர வரிசையினைத் தொகுத்து ஆராயும் ஆராய்ச்சிப் பயிற்சியும் ஒருங்கு வாய்க்கப் பெற்றவர். இதுவரை வெளிவந்த அகப்பொருள் விளக்கப் பதிப்புக்களை ஒப்பிட்டுப் பார்த்தும், இதன் தொடர்பான பிற அகப்பொருள் நூல்களைக் கற்றும், மாணவர்கள் நூற்பொருளை எளிதில் உளங் கொள்ளும் முறையில் இப்பதிப்புப் பணியினைச் செவ்விதின் நிறை வேற்றியுள்ளார். தமக்குரிய பாடப் பணி ஆராய்ச்சிப் பணிகளுக் கிடையே இப்பணியை மேற்கொண்டு முடித்த ஆசிரியரின் தனி முயற்சியும் ஆர்வமும் நமது பாராட்டுக்குரியன.

சிறந்த தமிழ் நூல்களை ஏழை எளியவர்களும், விரும்பி வாங்கிக் கற்றுப் பயன் பெறுதல் வேண்டும் என்னும் விரிந்த நோக்கத்துடன் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் தேவாரத் திருமுறைப் பரிசுக்கும், தமிழ் இலக்கண இலக்கிய வெளியீட்டுக்கும் நிதியளித்து அறக்கட்டளையினை நிறுவிய அருளாளர் திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடத்தின் 19-ஆம் பட்டத்தில் எழுந்தருளியிருந்த

திருப்பெருந்திரு காசிவாசி சாமிநாதத் தம்பிரான் சுவாமிகளாவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சார்பில் நல்ல தமிழ் நூல்கள் வெளிவருதற்கு அறக்கட்டளை வகுத்தருளிய திருப்பெருந்திரு காசிவாசி சாமிநாதத் தம்பிரான் சுவாமிகளையும், அவர்களது அறப் பணியினைப் போற்றி வளர்க்கும் நோக்குடன் செந்தமிழுக்கும் சிவநெறிக்கும், அறக் கட்டளைகள் பலநிறுவிப் புகழுருவெய்திய திருப்பெருந்திரு. காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகளையும் பல்கலைக்கழகம் நன்றியொடு நினைவுகூர்கின்றது. தமிழ் நலம் வளர்க்கும் திருவினராகிய அவ்விருவர்தம் திருப்பணி, தமிழ்ப் பணிகள் மேலும் வளம் பெற்றுச் செழிக்க திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் இருபத்தொன்றுவது பட்டத்தில் அமர்ந்து அருட் பணிபுரிந்தருளும் செந்தமிழ்ப் புலமை நலம் சிறக்கப் பெற்ற அருளாளர் · திருப்பெருந்திரு. காசிவாசி முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கட்குப் பல்கலைக்கழகம் தன் நன்றியைப் புலப்படுத்துகின்றது.

இந்நூலை வனப்புற அச்சிட்டுதவிய சிதம்பரம் ஸ்ரீ விநாயகா அச்சகத்தாரது பணி பாராட்டத் தகுவதாகும்.

க. வெள்ளைவாரணன்

# அகப்பொருள் விளக்கம் - ஆய்வு முன்னுரை

**த**மிழ் மொழியில் காலந்தோறும் பல்வேறு வகையான இலக்கியங்கள் பெருகி வளர்ந்து வந்துள்ளன. இவற்றின் போக்கினையொட்டி மொழியினை ஒழுங்குபடுத்தக் கருதிய பேரறிவாளர்கள் தமிழ்மொழி மரபிற்கேற்பச் சிலவிதிகளை வகுத்தனர். இவ்விதிகளே இலக்கணமெனப்படும். இதனைக் கருதியே 'இலக்கியத்தினின்றும் எடுபடும் இலக்கணம்' என்பர் ஆன்றோர்.

## அகத்தியம்

இலக்கியப் பெருக்கத்திற்கேற்பத் தமிழில் காலந்தோறும் கிளைத்த இலக்கண நூல்களும் பலவாகும். இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழுக்கும் இலக்கணங்கண்டமொழி தமிழ்மொழி. அகத்தியம் முத்தமிழுக்கும் இலக்கணநூல் என்றதொரு கருத்துண்டு. அகத்தியரைப் பற்றியும், அகத்தியத்தைப் பற்றியும் இறையனார் களவியலுரையில் குறிப்புண்டு. இவ்வுரை அகத்தியம் தலைச்சங்கத்திலும், இடைச்சங்கத்திலும் இலக்கணநூலாக விளங்கியது என இயம்புகிறதேயன்றி அந்நூல் இன்றுவரை கிடைத்திலது.

தமிழில் அகத்தியம்போல முத்தமிழுக்குமுரிய இலக்கணநூல்கள்தோன்றியதோடன்றி இயல், இசை, நாடகம் என்ற பிரிவு ஒவ்வொன்றிற்கும் தனித்தனி அமைந்த இலக்கண நூல்களும் பலவாகத் தோன்றின. எனினும் இயற்றமிழ் இலக்கணமே இன்று இலக்கணம் என்னும் பொருளுக்குத் தனியுரிமையுடையதாக விளங்குகின்றது.

## தொல்காப்பியம்

தமிழ்மொழி வரலாற்றில் இன்று கிடைத்துள்ள நூல்களுள் காலத்தொன்மையும் முதன்மைச் சிறப்புமுடையது தொல்காப்பியமே. இந்நூல் ஓர் இயற்றமிழ் இலக்கண நூல். இது எழுத்து, சொல், பொருள் என்ற முப்பகுப்பினதாயினும் இதனை ஐந்திலக்கண நூல் என்றுரைப்பாருமுளர்.

## ஐந்திலக்கண நூல்கள்

எழுத்து, சொல், பொருள் என்ற பகுப்பு இறையனார் அகப்பொருள் தோன்றிய காலத்துச் சற்று விரிவடைந்தது. பொருளினின்றும் யாப்புத் தனியாகப் பிரிந்து யாப்பிலக்கணம் பற்றியும், அணியிலக்கணம் பற்றியும் தனித்தனி இலக்கண நூல்கள் பல தோன்றின. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐந்திலக்கணப் பகுதியுங்கொண்ட இலக்கண நூல்களும் தோன்றின. இவ்வகையில் கி. பி. 11 ஆம் நூற்றாண்டில் தோன்றியது வீரசோழியம். இது வடமொழி இலக்கண அமைப்பைப் பெரிதும் தழுவியது. இதனையடுத்துக் கி. பி. 12 ஆம் நூற்றாண்டில் எழுந்தது, ‘தமிழ் நெறி விளக்கம்’. இந்நூலுள் இன்று 25 நூற்பாக்களே கிடைத்துள. இவையனைத்தும் அகப்பொருள் பற்றியனவே. இந்நூல் ஐந்திலக்கணமும் அமைந்த முழு நூலாக விளங்கியிருக்க வேண்டுமென்பது, இந்நூலைப் பதிப்பித்த டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களின் முன்னுரையால் தெரியவரும். அதன்பின் எழுந்த இலக்கண நூல் பவணந்தி முனிவரின் நன்னூல். இஃது எழுத்து, சொல் என்ற ஈரிலக்கணம் உணர்த்துவதெனினும் தொல்காப்பியம்

போல மூவதிகாரங்கள் கொண்டதாய் ஐந்திலக்கணமும் உணர்த்தியிருத்தல் வேண்டுமென்பர். 'அரும்பொருளைந்தையும் யாவரும் உணர' என்ற நன்னூல் சிறப்புப்பாயிரப் பகுதியும், மயிலைநாதர், சங்கரநமச்சிவாயர் முதலிய உரையாசிரியர்களின் குறிப்புக்களும் இக்கருத்துக்குச் சான்றுகளாம். இதன் பின்னர் 17-ஆம் நூற்றூண்டில் வைத்திநாத தேசிகர் எழுதிய 'இலக்கண விளக்கம்', 18-ஆம் நூற்றூண்டில் வீரமாமுனிவர் எழுதிய 'தொன்னூல் விளக்கம்' 19-ஆம் நூற்றூண்டில் முத்துவீர உபாத்தியாயர் எழுதிய 'முத்து வீரியம்' அதே நூற்றூண்டில் சாமி கவிராசர் எழுதிய 'சாமிநாதம்' முதலிய ஐந்திலக்கண நூல்கள் தோன்றின. இவர்களுக்குப் பின்னர் தண்டபாணி சுவாமிகள் இந்த ஐவகை இலக்கணத்தோடு 'புலமை இலக்கணம்' என்ற ஒன்றினைக் கூட்டி 'அறுவகை இலக்கணம்' என்ற பெயரில் ஒரு நூல் செய்துள்ளார்.

## அகப்பொருள் இலக்கண நூல்கள்

யாப்பு, அணி இலக்கணங்கள் தனித்தனியாகத் தோன்றியது போல அகப்பொருள் புறப்பொருள் பற்றிய தனித்தனி இலக்கண நூல்களும் தமிழில் தோன்றின. தொல்காப்பியப் புறத்திணையியலுக்குப்பின் புறப்பொருள் பற்றிய தனி இலக்கண நூலாகப் பன்னிரு படலம் தோன்றியது. அதன் வழிநூலாகக் கி. பி. 8-ஆம் நூற்றூண்டில் 'புறப்பொருள் வெண்பாமாலை' இயற்றப் பெற்றது. அதன்பின் புறப்பொருள் கூறும் தனி இலக்கண நூல் தோன்றவில்லை. பின்னர்த் தோன்றிய நூல்களுள் வீரசோழியம், இலக்கண விளக்கம் என்பன ஓரளவு புறப்பொருளைப் பற்றிக் கூறுகின்றன.

சங்க இலக்கியங்களுள் புறப்பொருளிலும் அகப்பொருள் பாடல்களே மிக்குள்ளனபோலத் தமிழ் இலக்கணங்களிலும் புறப்பொருளினும் அகப்பொருள் இலக்கணங்களே விரித்துரைக்கப் பெற்றுள்ளன. (அகப்பொருள் இலக்கண வரிசையில் கடைச்சங்க காலத்தில் தோன்றியதாகக் கருதப்படும் 'இறையனார் அகப்பொருள்'; 13-ஆம் நூற்றூண்டில் தோன்றியது 'அகப்பொருள் விளக்கம்'; அதனையடுத்து எழுந்தது 'களவியற் காரிகை'; 16-ஆம் நூற்றூண்டில் தோன்றிய 'மாறனகப் பொருள்' என்பன அகப்

பொருள் பற்றிய தனி இலக்கண நூல்களாகும். தொல்காப்பியம், வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்து வீரியம், சாமிநாதம் என்பன ஐந்திலக்கணத்தின் பகுதியாக அகப்பொருள் இலக்கணம் கூறுவன. இவையன்றித் திருக் கோவையார், பழனிக்கோவை என்ற நூல்களில் அமைந்த நூற் பாக்களும் அகப்பொருள் இலக்கணம் கூறுவனவாகும்.

## நம்பியகப் பொருள் விளக்கம் – நூல் அமைப்பு

(தமிழ் அகப்பொருள் இலக்கண நூல்களுள் 'அகப்பொருள் விளக்கம்' தொல்காப்பிய அகப்பொருள் இலக்கணத்தைத் தழுவியும், சான்றேருரைத்த தமிழ் இலக்கிய மரபிற்கேற்பவும், கி. பி. 13-ஆம் நூற்ருண்டின் முற்பகுதியில் இயற்றப்பெற்றது.) சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல் முதலிய பத்தழகுடன் இனிய நடையினையுமுடையது. அகப்பொருட்டுறைகளாகிய கிளவிகள் தொகை, வகை, விரி என்னும் யாப்பினுல் கூறப் பெற்றுள்ளன. விரிக்க வேண்டுவனற்றை விரித்தும், சுருக்க வேண்டுவனவற்றைச் சுருக்கியுமுரைப்பது இந்நூலின் தனிச் சிறப்பு. இந்நூலுக்கு உரையுமுண்டு. இது பழைய உரையென்பர். இந்நூலின் சிறப்புக் கருதியே 17 ஆம் நூற்ருண்டில் எழுந்த இலக்கண விளக்கம் என்னும் நூல் அகப்பொருள் இலக்கணங் கூறுமிடத்துப், பெரும்பான்மையும் இந்நூலின் நூற்பாக்களைக் கொண்டே அவ்விலக்கணங்களை விதிக்கின்றது.

## நூலமைப்பு

| | | | |
|---|---|---|---|
| 1. | அகத்திணையியல் | நூற்பா | 116 |
| 2. | களவியல் | ,, | 54 |
| 3. | வரைவியல் | ,, | 29 |
| 4. | கற்பியல் | ,, | 10 |
| 5. | ஒழிபியல் | ,, | 43 |
| | கூடுதல் நூற்பாக்கள் | | 252 |

இந்நூற்பாக்களுடன் இந்நூலில் இரண்டு சிறப்புப் பாயிரங்களும் உள. ஒன்று 'பூமலிநாவன்' என்று தொடங்குவது. மற்றொன்று 'பூமிசை நடந்த' என்று தொடங்குவது. இவற்றுள் பின் கூறப்பட்டதே பழைய சிறப்புப்பாயிரமென்பது சுன்னுகம் அ. குமாரசாமிப்பிள்ளை பதிப்பின் கருத்து.

இந்நூலின் இறுதியில் இரண்டு வெண்பாக்கள் உண்டு. அவற்றுள் ஒன்று

'அகத்திணை நூற்றுப் பதினே ழடங்கா
மிகுந்தகள வைம்பதுடன் மேனுன் — கிருத்த
வரைவிருபத் தொன்பஃது மன்னுங்கற் பீரைந்
துரையொழிபு நாற்பஃ தோடொன்று'

என்பது நூற்பா எண்ணிக்கைபற்றியது. இவ்வெண்ணிக்கையின் அடிப்படையில் அகத்திணையியலிலும், ஒழிபியலிலும் நூற்பா எண்ணிக்கையில் வேறுபாடு காணப்படுகின்றது. அகத்திணையியலில் சிறப்புப் பாயிரமும் சேர்த்து 117 நூற்பாக்கள் கூறப்பட்டதாக அமைதி கொள்ளலாம். ஆனுல் ஒழிபியலுக்குரியனவாக 41 நூற்பாக்களே கூறப்படுகின்றன. பின்வந்தோர் ஒருநூற்பாவை இரண்டாகக் கொள்ளும் போக்கில் இவ்வேறுபாடு ஏற்பட்டிருக்கலாம்.

## அகப்பொருள் விளக்கம் - ஒப்பீடு

தொல்காப்பியப் பொருளதிகாரம் அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் என நான்கு இயல்களில் அகப்பொருள் இலக்கணத்தை விரித்துக் கூறுகின்றது. இறையனுர் அகப்பொருள் களவியல், கற்பியல் என ஈரியல்களாகப் பிரித்துக் களவியலில் 33 நூற்பாக்களிலும், கற்பியலில் 27 நூற்பாக்களிலும் இவ்விலக்கணத்தைச் சுருங்கக் கூறும். (இறையனுர் அகப்பொருள் நூலின் உரையாசிரியர். அகப்பொருளைக் கற்பனை வளம்மிக்க நாடகமாக்கி, நாடக மாந்தர்களை உருவாக்கி ஒன்றன்பின் ஒன்ருகப் பல நிகழ்ச்சிகளைக் கதைப்போக்கில் அமைத்துக் காட்டுகின்ருர். இவ்வுரையே பிற்காலத்தில் கோவை நூல்கள் பல தோன்ற வித்திட்டது என்பது மிகையன்று.)

நாற்கவிராச நம்பி தொல்காப்பியத்துள் விரித்துக் கூறிய அகப்பொருள் இலக்கணத்தைச் சுருக்கியும், இறையனூர் கூறிய தனை விரித்தும், தொல்காப்பிய உரையாசிரியர்கள் மேற்கோளாகக் காட்டிய செய்யுட்களைத் தழுவியும், இறையனூர் களவியலுரையில் வரும் பாண்டிக் கோவை, திருக்கோவை முதலிய கோவை நூல்களின் நாடக அமைப்பினை உட்கொண்டும் 252 நூற்பாக்க ளால் தமது நூலை அமைத்துள்ளார். சுருக்கிக் கூறுவதும் விரித்துரைப்பதுமட்டும் இந்நூலின் சிறப்பன்று. இவ்விரு ஆசிரியர் களுக்கும் பன்னூறு ஆண்டுகள் கழித்து வாழ்ந்த நம்பியார், முன்னோர் வழி நின்று அகப்பொருள் இலக்கண மரபுகளைத் தழுவி அவற்றை மாணவர்கள் கற்கு முறையில் ஓர் ஒழுங்கு முறைப்படுத்தித் தந்திருப்பது தனிச் சிறப்பாகும். தொல்காப்பியர் கூற்று அடிப்படையில் அகப்பொருள் இலக்கணங்கூற, நம்பியார் அக்கூற்றுக்களைத் துறைப்படுத்திக் கதை நிகழ்ச்சி போல கோவை செய்து கிளவித்தொகை, வகை, விரியென முத்திறப்படுத்தி வகுத்துரைத்துள்ளது இந்நூலின் புதுவமைப் பாகும். தொல்காப்பியரும், இறையனூரும் களவியல், கற்பியல் என ஈரியல் வகுக்க, இவர் களவுக்கும் கற்புக்குமிடையே 'வரைவியல்' என ஓரியியலை அமைத்துக் கொண்டது வரைவின் இன்றியமையாமையைக் காட்டுவதாகும்.

இனி இயல்தோறும் தொல்காப்பியத்தையும் நம்பி அகப் பொருளையும் ஒப்பிட்டு ஒற்றுமை வேற்றுமைகளைச் சுட்டி அகப் பொருள் இலக்கணத்துறையில் ஏற்பட்ட புதிய வளர்ச்சியினைக் காண்போம்.

## 1. அகத்திணையியல்

### அ) கைக்கிளையும் பெருந்திணையும் :—

தொல்காப்பியர் ' காமஞ்சாலா' இளமையோள்வயின் ' (53) என்ற நூற்பாவில் இது கைக்கிளைக் குறிப்பு என்றும், ' ஏறிய மடற்றிறம் ' (54) என்ற நூற்பாவில் இவையிவை பெருந்திணைக் குறிப்பு என்று மட்டும் சுட்டியமைவர். அவற்றின் தன்மைகளை

இலக்கணமாகக் கூறவில்லை. கைக்கிளை — ஒருதலைக்காமம், பெருந்திணை — பொருந்தாக் காமம் என நம்பியார் இவற்றின் இயல்பினை

அவற்றுள்

கைக்கிளையுடைய தொருதலைக் காமம் (3)
பெருந்திணை யென்பது பொருந்தாக் காமம் (5)

என விளக்கமாக வெளிப்படுத்துவர். இங்ஙனம் மேல் விளக்கம் செய்வதால் இந்நூல் அகப்பொருள் விளக்கம் என்று பெயர் பெற்றிருப்பது பொருத்தமாகின்றது.

**ஆ) சிறுபொழுது :—**

தொல்காப்பியர் பெரும்பொழுது ஆறென வகுத்துக் கூறியது போலவே சிறுபொழுதும் ஆறெனக் கொண்டார். ஆனால் நம்பியார் பெரும்பொழுதினை ஆறென உடன்பட்டுக்கூறி, சிறுபொழுது மாலை, யாமம், வைகறை, எற்படுகாலை, நண்பகல் (12) என ஐந்தாகக் கூறுவர். மேலும் தொல்காப்பியர் எற்பாடு என்பதனை நண்பகலின் பிற்பொழுதெனக் கொள்ள இவர் எற்பாடுகாலை — கதிரவன் தோன்றும் காலைப்பொழுது என்பர்.

**இ) கருப்பொருள் :—**

தொல்காப்பியர் எட்டுவகைக் கருப்பொருள்களை வியந்துகூறி 'அவ்வகை பிறவும் கருவென மொழிப' எனப்பொதுவாக முடிப்பர் உரையாசிரியர்கள் 'பிற' என்ற இலேசினைக் கொண்டு மேலும் பல கருப்பொருள்கள் கொள்வர். நம்பியார் அவ்வுரைக் கருத்துக் களைத்தழுவி அதற்கு ஒரு வரையறை கொடுக்க எண்ணி கருப் பொருள்வகை பதினான்கென விரித்து மேலும் ஒவ்வொரு திணைக்கும் தனிநூற்பாவில் கருப்பொருள்களைத் தொகுத்துரைப்பர்.

**ஈ) அறத்தொடுநிற்றல் :—**

தொல்காப்பியப் பொருளியலில் இரண்டே நூற்பாக்களில் (203, 204) அறத்தொடு நிற்றல் இடம்பெறுகின்றது. இவற்றுள்

ஒன்று (203) தோழி அறத்தொடு நிற்கும் மரபுரைப்பது; மற்றொன்று (204) அறத்தொடு நிற்றல் எழுவகைப் படுமென எடுத்துரைப்பது, தொல்காப்பியர் எழுவகைப் படுமெனக் கூற நம்பியார்

'முன்னிலை முன்னிலைப் புறமொழி யென்றுங்
கன்ன விருவகைத் தறத்தொடு நிலையே' (175)

எனத் தொகுத்து இருவகைப் படுத்துகின்றார். மேலும் அகத்திணை யியலில் (47, 48, 49, 50, 51, 52, 53, 54) எட்டு நூற்பாக் களிலும் வரைவியலில் (175, 176, 177, 178, 179) ஐந்து நூற் பாக்களிலும் அறத்தொடு நிற்றல் குறித்து விரிவான இலக்கணம் கூறுவர். இந்நூற்பாக்கள் அறத்தொடு நிற்றல் நிகழுமிடம், நிற்றற்குரியர், நிற்கும்நெறி, தலைமகள், பாங்கி, செவிலி, நற்றாய் முதலியோர் அறத்தொடு நிற்கும் திறம், உடன் போக்கில் அறத் தொடு நிற்றற்குரியர் யார்? யார்? அறத்தொடு நிற்றலின் வகை, அவற்றின் விரி என்பவற்றை விரிவாகக் கூறும். இது அகப்பொருள் விளக்கத்தின் வளர்ச்சிக்குத் தக்கதொரு சான்று.

**உ. கற்பின் வகை :—**

தொல்காப்பியர் கற்பென மொழிந்தாரேயன்றி அதனை வகைப்படுத்திக் கூறினாரல்லர். நம்பியார் கற்பினைக் களவின் வழிவந்த கற்பு, களவின் வழிவாராக் கற்பு என இருவகைப் படுத்துவர்.

**ஊ. பிரிவு வகைகள் :—**

தொல்காப்பியர் களவுக்கும், கற்பிற்கும் உரிய பிரிவுகள் அனைத்தையும் மொழிந்துள்ளார். எனினும் நம்பியார் அவற்றைக் களவிற்குரியன இவை; கற்பிற்குரியன இவை யென வகைப் படுத்திக் காட்டியுள்ளார்.

**எ) வாயில்கள் :—**

தொல்காப்பியர் 'தோழி தாயே' (191) என்ற நூற்பாவில் கற்பின்கண் வாயில்களாவார் பன்னிருவரைக் குறிக்கின்றார்.

நம்பியார் ' கொளைவல் பாணன் ' (68) என்ற நூற்பாவில் பாகன், காதற் புதல்வன் இருவரையுங் கூட்டி, வாயில்கள் பதினுன்கென்றதோடு அவ்வாயில்களுக்குரிய செயல்களையும் அவர்களது உரிமைகளையும் விரித்துக் கூறியுள்ளார்.

ஏ) **காமக்கிழத்தி, காதற்பரத்தை :—**

பரத்தயரைக் காமக்கிழத்தியர், காதற்பரத்தையர் எனப் பிரித்துக்கொண்டு அவர்களுக்குரிய இலக்கணங்களை இந்நூற்பாக்க ளில் (113, 114) எடுத்து மொழிந்தவர் நம்பியாரே.

## 2 களவியல்

**களவு — கிளவித்தொகை :—**

தொல்காப்பியரும், இறையனரும் களவிற்குரிய இலக்கணத்தை வகுத்துரைத்தனரேயன்றி, களவிற்குரிய கிளவித்தொகை இவை யிவையென தொகுத்துரைத்தாரல்லர். நம்பியார் ' இயற்கைப் புணர்ச்சி, வன்புறை, தெளிவே ' (123) என்ற நூற்பாவில் பதினேழு கிளவித்தொகைகளை எடுத்துக் காட்டுகின்ருர். நம்பியார் கூறிய கிளவித்தொகைகளில் சில தொல்காப்பியத்தில் கூற்று வகைகளாகச் சுட்டப்பட்டுள்ளன. எனினும் விரித்தும் தொகுத்தும் கூறுவது நம்பியாரின் தனிச்சிறப்பு.

**இரவுக்குறியிடையீடு :—**

தொல்காப்பியர் களவியலில் ' மறைந்தவற் காண்டல் தற் காட்டுறுதல் '109) எறன் நூற்பாவில் ' வருந்தொழிற் கருமை வாயில் கூறினும் என்று ' குறிப்பிடுவது களவுக் காலத்தில் தலைவிக்குக் கூற்று நிகழுமிடங்களில் ஒன்ருகும்.

நம்பியார் ' வருந்தொழிற் கருமை என்பதனை இரவுக்குறி இடையீட்டின் வகைகளுள் ஒன்ருக்கி ' தாயும் நாயும் ஊரும் துஞ்சாமை ' (161) என்ற நூற்பாவில் அதனை ஏழு பிரிவுகளாகப் பகுத்துக் காட்டுகின்ருர். அகநானூற்றில் " இரும்பிழி மகாரின்

அழுங்கன் மூதூர் ' (அகம் 122) என்று தொடங்கும் செய்யுளிலும் பின்னர் இறையனார் அகப்பொருள் உரையிலும் இவ்விடையீடுகள் எண்ணப்பட்டுள. ஆனால் இறையனார் அகப்பொருளுரை இவற்றைக் களவுத் தவிர்ச்சியின் காப்புக்களாகவே காட்டுகின்றது. இவற்றை இரவுக்குறி இடையீட்டின் வகையொன்றின் பிரிவுகளாக்கி இலக்கணம் வகுத்துக்காட்டுவது நம்பியகப்பொருளின் தனிச் சிறப்பாகும்.

**காமமிக்க கழிபடர் கிளவி :**

தொல்காப்பியப் பொருளியலில் ' பொழுதும் ஆறுங் காப்பும் ', (207) என்னும் நூற்பா வரைதல் வேட்கைப் பொருளைப் பற்றிப் பேசும். இங்கு ' காமமிக்க கழிபடர் கிளவி ' சுட்டிக் கூறப்பட வில்லை. எனினும் இக்கிளவி போன்ற ஓர் அமைப்பை ' நோயும் இன்பமும் இருவகை நிலையிற் ' (194) என்ற நூற்பாவில் காண்கி றோம். இங்கும் காமமிக்க கழிபடர் கிளவி என்ற பெயர் சுட்டப் பெறவில்லை. எனினும் சங்க இலக்கியங்களில் இது துறையாகக் காட்டப்பட்டுள்ளது. ஆனால் இறையனார் அகப்பொருளிலும், நம்பியகப்பொருளிலும் வரைதல் வேட்கையின் விரிகளுள் ' காம மிக்க கழிபடர் கிளவி ' ஒன்றாக உருப்பெருகின்றது. நம்பியார் இதனை ஒருவழித் தணத்தலின் விரியகவும் கூறியுள்ளார்.

## 3 வரைவியல்

தொல்காப்பியர் அகப்பொருளை அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் என்ற நான்கு இயல்களிலும், இறையனார் களவியல், கற்பியல் என்ற ஈரியல்களிலும் கூற, நம்பியார் களவுக்கும் கற்புக்குமிடையே வரைவியல் எனப் புதிய இயலொன்றைப் படைத்துள்ளார். இவ்வியல் கற்பென்னும் கைகோளின் நிமித்தமாகிய வரைந்து கோடலின் இயல்பினைத் தனியே விரித்துரைப்பதாகலின் வரைவியலென்னும் பெயர்த் தாயிற்று.

4) கற்பியல்

தொல்காப்பியர்,

'கற்பெனப் படுவது கரணமொடு புணர' (140)

என்ற நூற்பாவில் வதுவைச் சடங்கே கற்பெனக் கூற, நம்பியார் இல்வாழ்க்கைக்கு முதன்மை தந்து

'இல்வாழ்க்கையே பரத்தையிற் பிரிவே' (201)

என்று தொடங்கும் நூற்பாவில் இல்வாழ்க்கையைக் கற்பிற்குரிய கிளவித்தொகைகள் ஏழனுள் ஒன்ருகச் சுட்டியுள்ளார். மேலும் அடுத்துவரும் நூற்பாக்களில் இல்வாழ்க்கையை நான்காக வகைப் படுத்திப் பத்தாக விரிவு படுத்தியுள்ளார். இவ்விரிவு இல்வாழ்வு பற்றிய முழு ஓவியமாகும்.

5. ஒழிபியல்

தொல்காப்பியர் செய்யுளியலில் செய்யுளுக்குரிய உறுப்புக் களாக 34 கூறுவர். அவற்றுள் திணை, கைகோள், கூற்று, கேட்போர், களன், காலம், பயன், மெய்ப்பாடு, எச்சம், முன்னம், பொருள். துறை என்ற பன்னிரண்டனையும் அகப்பாட்டு உறுப்புக் களாகக் கொண்டு அவற்றின் விரிவை ஒழிபியலாக விளக்கியுள்ளார் நம்பியார்.

## அகப்புறக் கைக்கிளை, அகப்புறப் பெருந்திணை

ஆசிரியர் தொல்காப்பியர் கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை என்னும் ஏழினையும் அகமென்று கொண்டாராயினும் அவற்றுள் நடுவண் ஐந்திணையே சிறப்பாக அகமெனக் கொள்ளுதற்குரியது என்பதனை 'மக்கள் நுதலிய அகனைந்திணையும்' என்ற தொடரால் குறிப்பர். ஐந்திணையின் முன்னும் பின்னும் வைத்து எண்ணப்படும் கைக்கிளையும், பெருந்திணையும் அகப்புறம் எனவும் வழங்குதற் குரியன என்பதனை இளம்பூரணர் குறிப்பாக உணர்த்தியுள்ளார். நம்பியாசிரியர் காலத்தில் குறிப்பாக உணர்த்திய கருத்து விரிவு பெற்றமையை நம்பியகப் பொருள் காட்டுகின்றது நம்பியார், அகத்திணைக்குரிய கைக்கிளையை அகத்திணையியலிற்கூறி, அகப்புறக்

கைக்கிளை, அகப்பொருட் பெருந்திணை, அகப்புறப் பெருந்திணை என்பவனவற்றை ஒழிபியலில் குறித்ததுடன் அவற்றிற்குரிய தலைமக்களையும் சுட்டிக் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனால் நம்பியார் கைக்கிளை பெருந்திணை ஆகிய இரு திணைகளையும் அகத்திற்குரியது, புறத்திற்குரியது எனப்பகுத்துக் கொண்டதனை உணரலாம். மேலும் கைக்கிளையை அகத்திணையியலிற் கூறி, அகப்புறக் கைக்கிளையை ஒழிபியலில் குறித்துள்ளமையால் நம்பியாசிரியர், களவும் கற்புமாக மாறுகின்ற கைக்கிளையை அகத்திணை என்றே கருதிய மனநிலை வெளிப்படும். இது தொல்காப்பியப் போக்குடையதாகும். நம்பியாசிரியர் அகப்பொருட் பெருந்திணை, அகப்புறப் பெருந்திணை ஆகிய இரண்டினையும் ஒழிபியலில் கூறியுள்ளமையால் இவைகள் ஒத்த அன்புடைய காதலை வெளிப்படுத்துவன அல்ல என்று கருதியமைப் பெறப்படும். எனவே தொல்காப்பியத்தினின்று மாறுபட்டு வளர்ந்த நிலையை நம்பியகப்பொருள் காட்டுகின்றது. நம்பியகப்பொருளுக்கு முன்னமேயே கி. பி. 6 ஆம் நூற்றாண்டில் தோன்றியதாகக் கருதப்படும் 'புறப்பொருள் வெண்பாமாலை'யில் கைக்கிளைப்படலம், பெருந்திணைப்படலம் என இரு படலங்கள் உள்ளன. இவற்றை நோக்கினால் கைக்கிளையும் பெருந்திணையும் புறச்சார்புடையன என்பது விளங்கும். இவ்வளர்ச்சியே நம்பியாசிரியர் கைக்கிளையையும் பெருந்திணையையும் அகப்புறம் என்று கொண்டதற்கு ஏதுவாகலாம்.

# அகப்பொருள் விளக்கம் - ஆசிரியர் வரலாறு

தமிழின் தொன்மை இலக்கணமான தொல்காப்பியம் எழுத்து. சொல் பொருள் என்ற முப்பகுப்பினது. இவற்றுள் தமிழர்தம் ஒழுகலாற்றின் இலக்கணமாக அமைந்தது தொல் காப்பியப் பொருளதிகாரம். பொருள் அகப்பொருள், புறப்பொருள் என இருவகைத்து. அகப்பொருள் இவ்வுலகில் வாழும் மக்களின் அன்பொழுக்கத்தை உரைப்பது; இவ்வுலக வாழ்வின் நலன் கருதியது. தமிழ் இலக்கண இலக்கிய நூல்கள் புறப்பொருளினும் அகப்பொருளையே விரித்துப் பேசுகின்றன. இது கருதியே தொல்காப்பியனாருக்குப்பின் இறையனார் முதலியோர் இவ்வகப் பொருளுக்குத் தனியிலக்கணம் வகுக்க முற்பட்டனர். இறை யனாருக்குப்பின் நாற்கவிராச நம்பி என்பவர் தொல்காப்பியத்தின் வழிநூலாக இந்நூலை இயற்றினார். இந்நூலின் சிறப்புக் கருதியே கி. பி. 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வைத்திநாத தேசிகர் தாம் எழுதிய இலக்கண விளக்கம் என்ற நூலில் அகப்பொருள் இலக்கணம் கூறுமிடத்துப் பெரும்பாலும் இந்நூற்பாக்களைக் கொண்டே அவ்விலக்கணங்களை விரித்துள்ளார். இந்நிலையில் ‘அகப்பொருள் விளக்கம்’ தமிழ் அகப்பொருள் இலக்கணம்

கற்போர் விரும்பிப் பயிலும் சிறந்த இலக்கண நூலாகத் திகழுகின்றது. (தஞ்சைவாணன் கோவை என்னும் தனி நூல் இவ்விலக்கண நூலுக்கு முழுமையான இலக்கியமாக அமைந்துள்ளது ஈண்டு குறிப்பிடத்தக்கது) தொல்காப்பியத்தில் விரித்துக் கூறப்பட்ட அகப்பொருள் இலக்கணநெறிகள் ஈண்டு கிளவித்தொகை, வகை, விரி என்னும் யாப்பினுல் ஒழுங்குபடுத்திக் கூறப்பட்டுள்ளன.

இந்நூலின் ஆசிரியர் நாற்கவிராச நம்பி; இவரைப் பற்றிய வரலாறு ஏனைய தமிழ்ப் புலவர்களின் வரலாற்றினைப் போலவே இருள் சூழ்ந்துள்ளது. இந்நூலின்கண் அமைந்த சிறப்புப் பாயிரத்தைக் கொண்டே இவரது வரலாற்றை ஓரளவு நாம் உணர்ந்துகொள்ள முடிகின்றது.

நாற்கவிராச நம்பி என்பது ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தாரகவி என்ற நால்வகைக் கவிபாடும் திறத்தால் இப்புலவர் பெற்ற சிறப்புப் பெயராகும்.

> '' இருபெருங் கலைக்கும் ஒருபெருங் குரிசில்
> பாற்கடற் பல்புகழ் பரப்பிய
> நாற்கவிராச நம்பி '

எனச் சிறப்புப்பாயிரப் பகுதி இவரைப் புகழ்ந்து கூறுகின்றது. இருபெருங் கலையினைக் கற்ற குரிசில் என்பதனுல் இவர் வடமொழி, தமிழ் இரண்டிலும் வல்லவராகத் திகழ்ந்தார் என்பது தெளிவு. நம்பி என்பது இவரது இயற்பெயர் போலும்.

இவரது தந்தையார் உய்யவந்தான் புளிங்குடி எனும் ஊரில் வாழ்ந்தவர். தந்தையும் முத்தமிழில் வல்லவர் என்பதனை

> ' உத்தமன் புளிங்குடி உய்யவந்தான் எனும்
> முத்தமிழ் ஆசான் மைந்தன் '

என்ற சிறப்புப்பாயிரப் பகுதியால் அறியலாம். இப்புளிங்குடியே புளியங்குடி என்று அழைக்கப் படுகின்றது. தமிழகத்தில் பாண்டிய நாட்டுப் பொருநையாற்றின் வடகரையில் ஒரு புளியங்குடியும்

தொண்டை நாட்டில் மற்றொரு புளியங்குடியும் உள்ளன. இவ்விரண்டினுள் இவர் எப்புளியங்குடியினர் என்பது தெரிந்திலது. சிறப்புப்பாயிரத்தில் மற்றொரு பகுதிக்கண்

'மாந்தரும் தேவரும் வாழ்த்த முக்குடைக்கீழ்
ஏந்தெழில் அரிமான் ஏந்துபொன் அணைமிசை
மதிமூன்று கவிப்ப உதயமால் வரை
கதிர்ஒன்று இருந்தெனக் காண்டக இருந்து
தத்துவம் பகர்ந்தோன் சரணம் பொருந்திய உத்தமன்'

என்று பூமிசை நடந்த வாமனை வாழ்த்துவதால் இவர் சார்ந்த சமயம் சமணமெனக் கொள்ளலாம்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் ஏனைய தமிழ்ப் புலவர்களைப் போலவே இவர் வாழ்ந்த காலமும் அறுதியிட்டுக் கூற இயலவில்லை. இதுகாறும் வெளிவந்த பல பதிப்புக்கள் இவர் கி. பி. 12 ஆம் நூற்றாண்டினர் என்று மேலோட்டமாகச் சுட்டிச் செல்கின்றன. இவர் வாழ்ந்த காலம் குலசேகரபாண்டியன் (கி. பி. 1196-1266) ஆட்சி நடத்திய காலம் என்று சிறப்புப்பாயிர உரை குறிக்கின்றது. வேறு சான்றுகள் கிடைக்கும் வரை இவர் வாழ்ந்த காலம் கி. பி. 13 ஆம் நூற்றாண்டு என்று வைத்துக்கொள்ளலாம்.

## உரையாசிரியர் வரலாறு

அகப்பொருள் விளக்கம்' என்னும் இந்நூலுக்கு அடக்கமும் அமைதியும் எளிமையும் தெளிவுமுடைய உரையொன்று வழங்குகின்றது. இவ்வுரைக்குப்பின் கி. பி. 1878-ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வ. ச. வைத்தியலிங்கம் பிள்ளை என்பவர் தஞ்சைவாணன் கோவை மேற்கோள் செய்யுளுடன் ஓர் உரை வரைந்துள்ளார். பின்னர் சுன்னாகம் அ. குமாரசாமிப்பிள்ளையும், திருக்கோணமலை த. கனகசுந்தரம் பிள்ளையும் சேர்ந்து ஓர் உரை வரைந்துள்ளனர். இவ்வுரைகள் புத்துரைகள் என வழங்கப் படுகின்றன.

அகப்பொருள் விளக்கத்திற்கு வரையப்பட்ட பழைய உரை நூலாசிரியராலேயே வரையப்பட்டதா? அன்றிப் பின்னே வந்த

அறிஞர் ஒருவரால் இயற்றப்பட்டதா? என்பது குறித்து ஐயம் ஏற்பட்டுள்ளது. நூலின் சிறப்புப் பாயிரம்

‘அகப்பொருள் விளக்கம் என்று அதற்கு ஒரு நாமம்
புலப்படுத்து இருளறப் பொருள்விரித்து எழுதினன்’

என்று குறிப்பிடுகின்றது. ‘இருளறப் பொருள்விரித்து எழுதினன்’ என்பதற்கு ‘மயக்கம் தீர உரையைப் பரப்பி எழுதினன்’ என்று உரைப்பகுதியில் விளக்கம் தரப்படுகின்றது. இச்செய்திக்கு முதன்மை கொடுத்தால் நூலாசிரியரும் உரையாசிரியரும் ஒருவரே என்பது தெளிவாகும். இக்கருத்துப் பரவலாகவும் வழங்கப் படுகின்றது. அகப்பொருள் விளக்கத்தில் பல பதிப்புக்களில் இப் பகுதி அடங்கிய ‘பூமலி நாவன் மாமலைச் சென்னி’ என்று தொடங்கும் சிறப்புப்பாயிரமே அமைந்துள்ளது. ஆனால் சுன்னுகம் அ. குமாரசாமிப்பிள்ளை பதிப்பித்த அகப்பொருள் விளக்கப் பதிப்பில்

“பூமிசை நடந்த
வாமனை வாழ்த்தி வடமலைச் சென்னி
ஈண்டிய கடவுளர் வேண்டலிற் போந்து
குடங்கையின் அலைகடல் அடக்கி ஈண்டிய
தென்மலை இருந்த இருந்தவன் இயற்றமிழ்
கெழீஇய அகப்பொருள் தழீஇ நோக்கி
வழிகொடுத்து நிறீஇ வகுத்துப் புலப்படுத்தாங்கு
இகப்பில் அகப்பொருள் விளக்கம் பகர்ந்தனன் எழுதிச்
செந்தமிழ் நாட்டு மைந்தன் குரிசில்
பாற்கடல் பலபுகழ் பரப்பிய
நாற்கவி ராச நம்பியென் பவனே”

என்ற சிறப்புப்பாயிரம் காணப்படுகின்றது. இச்சிறப்புப் பாயிரமும் பழைய சிறப்புப் பாயிரம் என்றே கூறுகின்றனர். இச்சிறப்புப் பாயிரப் பகுதியில் நூலாசிரியரும் உரையாசிரியரும் ஒருவரே என்பதற்குச் சான்றேதுமில்லை. இவ்விரு சிறப்புப் பாயிரங்களுள் எதனைக் கொண்டு உண்மையை அறிவது?

இன்று அச்சில் வந்துள்ள பழையவுரையில் தஞ்சைவாணன் கோவைச் செய்யுட்கள் பெரும்பான்மையான மேற்கோள்களாகத் தரப்பட்டுள்ளதுடன் தொல்காப்பியம், இறையனுர் அகப்பொருள் முதலிய இலக்கண நூற்பாக்களும் எடுத்தாளப் பெற்றுள்ளன. சங்க இலக்கியங்கள், பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், திருக் கோவையார், திருவாரூர்க்கோவை, அம்பிகாபதிக்கோவை முதலிய நூல்களின் செய்யுட்களும் மேற்கோளாகத் தரப்பட்டுள்ளன. நம்பியகப் பொருளுக்குப் பின்னே எழுந்தன தஞ்சைவாணன் கோவை, திருவாரூர்க்கோவை முதலியன. எனவே நூலாசிரியரும் உரையாசிரியரும் ஒருவராக இருந்தால் பதின்மூன்றும் நூற்ருண்டில் வாழ்ந்த நம்பியார் இவற்றை எவ்வாறு எடுத்தாள இயலும்? இங்கு இவ்வுரையில் காணப்படும் பழைய நூல்களே நம்பியாரால் மேற்கோளாக எடுத்தாளப் பெற்றவை என்றும், தஞ்சைவாணன் கோவையும் பிறவும் அவ்வுரையின் கண்ணே பிற்காலத்தா ரொருவரால் மேற்கோளாக இணைக்கப் பட்டிருக்கலாம் என்றும் கருத இடமுண்டு. இந்நூலில் 129 ஆம் நூற்பாவிற்கு வரையப் பட்ட உரை 'நடுங்க நாட்டத்திற்குச் சான்ருேர் செய்யுள் இல்லை' யென்று கூறுகின்றது. எனினும் அதன் பின்னர் 'பால்போல் மொழி வஞ்சி' என்ற தஞ்சைவாணன்கோவைப் பாடல் மேற்கோளாகத் தரப்பட்டமையால் இங்ஙனம் கருதுகின்றனர். இதனைத்தவிர நூலாசிரியரே உரையெழுதினுர் என்னும் இக்கருத்துக்குச் சான்றேதுமில்லை. இது மேலும் ஆராய்தற்குரியது.

# அகத்திணையியற் கருத்து

நாற்கவிராசநம்பி இயற்றிய 'அகப்பொருள் விளக்கம்' அகத்திணை இயல், களவியல், வரைவியல், கற்பியல், ஒழிபியல் என ஐந்தியல் கொண்டது. முதலியலாகிய அகத்திணையியல் அகத்திணை இலக்கணத்தை விரித்துக் கூறுகின்றது.

## அகப்பொருள் வகை

அகப்பொருள் கைக்கிளை, குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல், பெருந்திணை என எழுவகைப்படும்.

இவை புனைந்துரை, உலகியல் என இரண்டு கூறுபாட்டானும் பழைய நெறி பிழையாமற் கூறப்படும்.

**கைக்கிளை :—**

அகப்பொருள் திணைகள் ஏழனுள் கைக்கிளை ஒருதலைக் காமம். **(கை — பக்கம்)**

**ஐந்திணை :—**

குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்ற ஐந்தொழுக்கங்களுமே ஐந்திணையாகும். இவை ஐந்தும் நிலம்

பெறுவன. கைக்கிளை, பெருந்திணை என்பன நிலம் வகுக்கப் படாதன; ஐந்திணை என்பதன் பொருள் அன்புடைக்காமம்.

**பெருந்திணை :—**

இது பொருந்தாக்காமம்.

## முதல், கரு, உரிப்பொருள்கள்

குறிஞ்சி முதலாகிய ஐந்திணையும் முதற்பொருள், கருப்பொருள் உரிப்பொருள் என்று கருதத்தக்க மூன்றுனும் சொல்லப்படும்.

## முதற்பொருள்

இது நிலம் பொழுதென இருவகையினது.

**அ) முதற்பொருள் — நிலம்**

1. குறிஞ்சி — மலையும் மலைசார்ந்த பகுதியும்
2. பாலை — மணலும் மணல் சார்ந்த பகுதியும்
3. முல்லை — காடும் காடு சார்ந்த பகுதியும்
4. மருதம் — வயலும் வயல் சார்ந்த பகுதியும்
5. நெய்தல் — கடலும் கடல் சார்ந்த பகுதியும்

**ஆ) முதற்பொருள் — காலம்**

முதற்பொருளில் காலம் என்பது பெரும்பொழுது, சிறுபொழுது என இரண்டு வகையினது.

| ஐந்திணைப் பெயர் | பெரும்பொழுது | சிறுபொழுது |
|---|---|---|
| 1 குறிஞ்சி | கூதிர், முன்பனி | யாமம் |
| 2 பாலை | வேனில் | நண்பகல் |
| 3 முல்லை | கார் | மாலை |
| 4 மருதம் | பெரும்பொழுது ஆறும் | வைகறை |
| 5 நெய்தல் | பெரும்பொழுது ஆறும் | எற்படு |

| கருப்பொருள் வகை | குறிஞ்சி நிலம் | பாலை நிலம் | முல்லை நிலம் | மருத நிலம் | நெய்தல் நிலம் |
|---|---|---|---|---|---|
| 1. தெய்வம் | முருகன் | துர்க்கை | திருமால் | இந்திரன் | வருணன் |
| 2. உயர்ந்தோர் | பொருப்பன், வெற்பன், சிலம்பன், கொடிச்சி | விடலை, காளை, மீளி, எயிற்றி | குறும்பொறை நாடன், தோன்றல், மனைவி, கிழத்தி | ஊரன், மகிழ்நன், கிழத்தி, மனைவி | சேர்ப்பன், புலம்பன், பரத்தி, நுளைச்சி |
| 3. அல்லோர் | குறவர், கானவர், குறத்தியர் | எயினர், எயிற்றியர், மறவர், மறத்தியர் | இடையர், இடைச்சியர், ஆயர், ஆய்ச்சியர் | உழவர், உழத்தியர், கடையர், கடைச்சியர் | நுளையர், நுளைச்சியர் பரதர், பரத்தியர், அளவர், அளத்தியர் |
| 4. புள் | கிளி, மயில் | புரு, பருந்து, எருவை, கழுகு | காட்டுக்கோழி | வண்டானம், மகன்றில், நாரை, அன்னம், பெருநாரை, கம்புள், குருகு, தாரா | கடற் காகம |
| 5. விலங்கு | புலி, கரடி, யானை, சிங்கம் | செந்நாய் | மான், முயல் | எருமை, நீர் நாய் | சுறு மீன் |
| 6. ஊர் | சிறுகுடி | குறும்பு | பாடி | பேரூர், மூதூர் | பாக்கம், பட்டினம் |
| 7. நீர் | அருவி நீர், சுனை நீர் | நீரில்லாக்குழி, நீரில்லாக் கிணறு | குறுஞ்சுனை நீர் கான்யாற்று நீர். | ஆற்று நீர், கிணற்று நீர், குளத்துநீர் | உவர் நீர்க்கேணி உவர் நீர் |
| 8. பூ | வேங்கைப்பூ, குறிஞ்சிப்பூ, | குராஅம்பூ, மராஅம்பூ | முல்லைப்பூ, தோன்றிப்பூ, பிடவம்பூ | தாமரைப்பூ, கழுநீர்ப்பூ, பிடவம் பூ | நெய்தற் பூ தாழம பூ முண்டகப்பூ |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 9. | மரம் | சந்தனம், தேக்கு, அகில், அசோகு, நாகம், மூங்கில் | பாலை, உழிஞை, ஓமை, இருப்பை | கொன்றை, காயா, குருந்தம் | மருதம், வஞ்சி, காஞ்சி | புன்னை, ஞாழல் |
| 10. | உணவு | மலை நெல், மூங்கிலரிசி, தினை | வழியிற் பறித்த பொருள், பதியிற் கவர்ந்த பொருள் | வரகு, சாமை, முதிரை | செந்நெல்லரிசி வெண்ணெலரிசி | உப்பும் மீனும் விற்றுப் பெற்ற பொருள் |
| 11. | பறை | தொண்டகப்பறை | துடி | ஏறங்கோட்பறை | நெல்லரிகிணை மணமுழவு | மீன் கோட்பறை நாவாய்ப் பம்பை |
| 12. | யாழ் | குறிஞ்சியாழ் | பாலை யாழ் | முல்லையாழ் | மருதயாழ் | விளரி யாழ் |
| 13. | பண் | குறிஞ்சிப்பண் | பஞ்சுரம் | சாதாரி | மருதப்பண் | செவ்வழிப் பண் |
| 14. | தொழில் | வெறியாடல்,மலை நெல் விதைத்தல், தினை காத்தல் தேனழித்தெடுத்தல், கிழங்கு கிண்டி எடுத்தல், அருவி நீராடல், சுனை நீராடல் | போர் செய்தல் பகற் சூறையாடுதல் | சாமை விதைத்தல் வரகு விதைத்தல் அவற்றின் களை கட்டல், அரிதல், கடா விடுதல் கொன்றைக் குழ லூதல், மூவின மேய்த்தல், கொல் லேறு தழுவல் குரவைக் கூத்தாடல் காளி யாட்டம் | விழாச்செய்தல் வயற் களை கட்டல் நெல்லரிதல் கடா விடுதல், குளங் குடைதல் புது நீராடல் | மீன் பிடித்தல் உப்பு உண்டாக்கல் உப்பு விற்றல், மீனு ணக்கல் அவற்றை உண்ண வரும் பறவைகளை ஓட்டுதல்,கடலாடல் |

## உரிப்பொருள்

உரிப்பொருள் என்றுல் ஒழுக்கம்; அதாவது அந்தந்த நிலத்து உயர்மக்கட்குரிய ஒழுகலாறு.

| நிலம் | ஒழுக்கம் (உரிப்பொருள்) |
| --- | --- |
| குறிஞ்சி | புணர்தல், புணர்தல் நிமித்தம் |
| பாலை | பிரிதல், பிரிதல் நிமித்தம் |
| முல்லை | இருத்தல், இருத்தல் நிமித்தம் |
| மருதம் | ஊடல், ஊடல் நிமித்தம் |
| நெய்தல் | இரங்கல், இரங்கல் நிமித்தம் |

## கைகோள்வகை

கைகோள் - ஒழுக்கம். எல்லையில்லா இன்பத்தை நல்கும் ஐந்திணை யொழுகலாறு, களவு, கற்பு என இருவகைப்படும்.

## களவிற்புணர்ச்சி வகை

களவிற்புணர்ச்சி என்பது இயற்கைப்புணர்ச்சி, இடந்தலைப்பாடு பாங்கற் கூட்டம், பாங்கியிற் கூட்டம் என நான்கு வகைப்படும்.

யாழினை உடைய கந்திருவர் விரும்பும் இத்தகைய களவிற் புணர்ச்சிக்கு முன் கைக்கிளை நிகழும். கைக்கிளை என்பது ஒரு மருங்கு பற்றிய காமம். அதாவது காமம் நுகர்வதற்குரிய தலைமக்கள் இருவருள் தலைவியிடத்தன்றித் தலைவன்பால் மட்டும் தோன்றும் வேட்கை.

இக்கைக்கிளை அந்தணர் முதலிய நால்வகை வருணத் தலைமக்கட்கும் உரியதாகும். இதனை ஐந்து நிலத்தின்கண் வாழும் நிலமக்களுள் தலைமக்களும் சிறுபான்மை பெறுவர்.

## இயற்கைப்புணர்ச்சி

இயற்கைப்புணர்ச்சி என்பது அன்புடைத் தலைமக்கள் இருவரும் தம் மனக்குறிப்பின்றி ஒருவரையொருவர் எதிர்பாராத நிலையில் எதிர்ப்பட்டுக் கூடும் கூட்டமாகும். இக்கூட்டம் தெய்வத்தால் நிகழுங்கால் தலைமக்கள் முயற்சியின்றித் தானே முடியும்.

இத்தகைய களவுப் புணர்ச்சி, உள்ளப் புணர்ச்சி, மெய்யுறு புணர்ச்சி என இருவகைப்படும். தலைமகனுக்குப் பெருமையும் உரனும் நிலைபெற்ற குணமாதலானும், தலைமகளுக்கு அச்சம், நாண் மடன் என்பன நிலைபெற்ற குணமாதலானும் இக்குணங்கள் நீங்க இவ்விருவரும் எதிர்ப்பட்டவுடனே மெய்யுற்றுக் கூடுதல் இயலாதாகலின் உள்ளப் புணர்ச்சியே முத்றகண் நிகழ்வதாகும். உள்ளப்புணர்ச்சி நிகழ்ந்தபின் காட்சிவேட்கை, ஒருதலை உள்ளு தல், மெலிதல், ஆக்கஞ்செப்பல், நாணுவரையிறத்தல், நோக்குவ வெல்லாம் அவையே போறல், மறத்தல், மயக்கம், சாக்காடு என்ற பத்து அவத்தைகளும் ஒருங்கே நிகழ்ந்தபின் மெய்யுறு புணர்ச்சி நிகழும்.

## களவிற் குறியிடம்

மறைந்த ஒழுக்கமாகிய களவின் கண்ணே புணர்ச்சி நிகழும் இடத்திற்குக் குறியிடம் எனப்பெயர். அதாவது தலைவியைத் தலைவன் எதிர்ப்படுதற்காகத் தலைவியாலோ, தோழியாலோ குறிக்கப்படும் இடம் குறியிடமாகும். இது பகற்குறி, இரவுக்குறி என இரண்டாம். பகற்குறி இல்லத்தின் எல்லையைக் கடந்தது; அஃதாவது இல்லிற்கும் சேரிக்கும் அப்பாற்பட்டதாய் ஊரின் எல்லைக்கு உட்பட்டதாய் உள்ள இடம்

## களவிற் பிரிவு

களவின்கண் புணர்ச்சி நிகழ்தல் போலப் பிரிவு நிகழ்தலும் உண்டு. இப்பிரிவு ஒருவழித்தணத்தல், வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல் என இரண்டாம்.

தணத்தல் என்றால் பிரிதல் என்று பொருள். ஒருவழித் தணத்தல் ஒருரின் கண்ணும் ஒரு நாட்டின் கண்ணும் பிரிதல். வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல் என்பது திருமணத்தை முன்வைத்து அதற்குரிய பொருள் தேடுதற் பொருட்டுக் காடிடை யிட்டும் நாடிடையிட்டும் பிரிதலாகும். இவற்றுள் ஒருவழித் தணத்தற்குக் காலவரையறையில்லை. வரைவிடை வைத்துப்பொருள் வயிற் பிரிவோர் இரண்டு திங்கள் எல்லையினைக் கடவார்.

**வரைவு :—**

வரைவு களவு வெளிப்படாமுன் நிகழ்தலும் உண்டு; வெளிப் பட்டபின் நிகழ்தலும் உண்டு.

களவு வெளிப்படாமுன் நிகழும் வரைவு இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கியற் கூட்டம் என்ற நான்கு வகைப் புணர்ச்சிக்கண்ணும் தலைமகன் தானே தெருண்டு வரைதலும், பாங்கனாலோ, பாங்கியாலோ தெருட்டப்பட்டு வரைத லும் என்ற நிலையில் ஏற்படும்.

களவு வெளிப்பட்டபின் நிகழும் வரைவு புணர்ந்துடன் சென்ற தலைமகன் தன்னூரின்கண்ணே வரைதலும், மீண்டுவந்து தம்மூரின் கண்ணே வரைதலும், உடன்போக்கு இடையீடுபட்டுத் தலைமகள் தமரை வழிபட்டு வரைதலும் என்ற நிலையில் ஏற்படும்.

இவற்றுள் உடன் போய் வரைதல் ஒருவகையினையுடையது. மீண்டு வரைதல் என்பது தலைமகள் மனையின்கண்ணே வரைதலும் தலைமகன் மனையின்கண்ணே வரைதலும் என இரண்டு வகையினை உடையதாகும்.

**அறத்தொடு நிற்றல் :**

இது களவின் எல்லைக்கண் நிகழும் ஒரு செயலாகும். களவின்கண் கூடிய தலைவனும் தலைவியும் அறத்திற்கு மாறுபடாத முறைக்கண் நிற்றலே அறத்தொடு நிற்றலாகும்.

தலைமகன் களவின்கண் வரும் வழியின் ஊறுபாட்டிற்குத் தலைவி அஞ்சிய இடத்தினும், தலைமகன் வரைவினைத் தமர் எதிர்கொள்ளாத விடத்தும், பிறர் வரைவிற்குத் தமர் உடன்பட்ட இடத்தினும், தலைவிக்குக் காவல் மிகுதியாகிய இடத்தும் அறத்தொடு நிற்றல் நிகழும்.

இந்நான்கிடத்தும் தலைவிக்கு மெய்வேறுபாடு தோன்றும். இவ்வேறுபாட்டை உணர்ந்து தலைவியைத் தோழியும், தோழியைச் செவிலியும் நற்றாயும் வினவுவர். இவ்வாறு வினவிய காரணத்தாலும் அறத்தொடு நிற்றல் நிகழும். தலைவி, தோழி, செவிலி, நற்றாய் என்ற நெறிமுறையில் அறத்தொடு நிற்பர். தலைமகளும் தலைமகனும் புணர்ந்துடன் போயகாலத்துத் தோழி, செவிலி, நற்றாய் ஆகியோர் அறத்தொடு நிற்பர். இவ்வாறு நிற்குங்கால் முன்னிலை மொழியாலேனும், முன்னிலைப் புறமொழியாலேனும் கூறுவர்.

தோழியர் கூட்டம் நீங்கலாக ஏனைய மூன்று புணர்ச்சிக்கண் தலைவன் ஒழுவழித்தணந்தாலும், வரைவிடைவைத்துப் பொருள் வயிற் பிரிந்தாலும், தலைவனைச் செவிலி குறியிடத்துக் கண்டாலும், மனையின்கண் தலைவி இற்செறிக்கப்பட்டாலும் தலைவிக்கு வருத்தம் மிகும். இவ்விடத்துத் தோழி தன்னை வினவினும், வினவாவிட்டாலும் தலைவி தோழிக்கு அறத்தொடு நிற்பாள்.

தோழி முன்னிலை மொழியாலேனும், முன்னிலைப்புறமொழியாலேனும் செவிலிக்கு அறத்தொடு நிற்பாள்.

செவிலி நற்றாய்க்கு முன்னிலை மொழியால் அறத்தொடு நிற்பாள். நற்றாய் அறத்தொடு நிற்குங்காலத்துத் தந்தை, தன்னையர் ஆகியோருக்குக் குறிப்பால் உணர்த்துவாள்.

**கற்பு:—**

அகப்பொருளார் கற்பொழுக்கத்தைக் களவின் வழிவந்த கற்பு, களவின் வழிவாராக் கற்பு எனப் பாகுபாடு செய்வர்.

இக்களவு வழிக் கற்பில் ஏற்படும் புணர்ச்சி, பெற்றோரால் திருமணம் கூட்டிப் புணரும் புணர்ச்சி, வாயில்களால் ஊடல் நீக்கிப் புணரும் புணர்ச்சி என இரு வகைப்படும்.

தலைமகன் தலைமகளை உடன் அழைத்துச் சென்று தன்னூரின் கண்ணே மணந்துகொள்ளுதலும் உண்டாதலால் அவ்வழிச் சுற்றத்தார் கொடுப்பக் கொள்ளாமலும் கற்பிற் புணர்ச்சி நிகழ்தல் உண்டு. மேற்கூறப்பட்ட இருவகைக் கற்பினுள்ளும் தலைமகற்குக் களவிற் புணர்ச்சியும், வதுவைப் புணர்ச்சியும் பொருந்துதலுண்டு. இவ்வொழுக்கம் இரண்டிற்குமுரிய மகளிர் காதற் பரத்தையர், காமக்கிழத்தியர், பின்முறை வதுவைப் பெருங்குலக் கிழத்தியர் என்று மூவகையினராவர். இவருள் காதற் பரத்தையர் எனப் படுபவர் ஆடலும் பாடலும் வல்லாராகி, அழகும் இளமையும் காட்டி இன்பமும் பொருளும் வெஃகும் இயல்பினர் ஆவர். காமக்கிழத்தியர் எனப்படுபவர் காமம் காரணமாக இல்லற உரிமை கொடுத்துத் தலைவனால் பின்முறை ஆக்கிக்கொள்ளப் பட்டவர்.

இவருள் காதற் பரத்தையரே களவொழுக்கத்திற்குரியவர். காமக்கிழத்தியும், பின்முறை வதுவைப் பெருங்குலக் கிழத்தியும் வதுவை புணர்ச்சிக்குரியவர்.

**கற்பிற் பிரிவு:**

கற்பிற் பிரிவு, ஓதற் பிரிவு, காவற் பிரிவு, தூதிற் பிரிவு, துணைவயிற் பிரிவு, பொருள்வயிற் பிரிவு, பரத்தையர் பிரிவு என அறுவகைப்படும். இவற்றின் உட்பகுப்புக்களையும், இப்பிரிவுகளை நிகழ்த்துதற்குரியர் யார் என்பதனையும், பிரிவுக்காலம் எவ்வளவானது என்பதனையும் பின்வரும் அட்டவணையிற் காண்க.

| பிரிவின் வகை | பிரிவின் பகுப்பு | பிரிவிற்குரியார் | பிரிவிற்குரிய காலம் |
|---|---|---|---|
| 1. ஓதற் பிரிவு | அ) வேதம் ஓதல் | அ) அந்தணர், அரசர் வணிகர் | மூன்றுண்டு |
| | ஆ) வேதமல்லாக்கல்வி | ஆ) அனைவரும் | ,, |
| | இ) படைக்கலம் பயிறல் | இ) அந்தணர் | ,, |
| | ஈ) பகடுபிறவூர்தல் | ஈ) அரசர், வணிகர் | ,, |
| 2. காவற் பிரிவு | அ) அறப்புறங் காவல் | அனைவரும் | காலமின்று |
| | ஆ) நாடு காவல் | அரசர், சிறப்புப் பெயர் பெற்றார் | ,, |
| 3. தூதிற் பிரிவு | உட்பிரிவு இல்லை | அந்தணர், அரசர், சிறப்புப் பெயர் பெற்றார் | ஓராண்டு |
| 4. துணைவயிற் பிரிவு | உட்பிரிவு இல்லை | அரசர், வணிகர், வேளாளர் | ஓராண்டு |
| 5. பொருள்வயிற் பிரிவு | உட்பிரிவு இல்லை | அனைவரும் | ஓராண்டு |
| 6. பரத்தையிற் பிரிவு | அ) அயல்மனைப் பிரிவு அயற்சேரிப் பிரிவு | அனைவரும் | காலமின்று |
| | ஆ) புறநகர்ப் போக்கு | | காலமின்று |

இவ் அறுவகைப் பிரிவினுள் பரத்தையிற் பிரிவு ஒழிந்த ஏனைய அனைத்தும் சமுதாய நோக்குடையன. பரத்தையிற் பிரிவு ஒன்றே தன்னின்பம் கருதியது. பரத்தைக்கு இன்பம் நிகழுமாயின் அதுவும் பொதுநோக்குடையதே.

இப்பரத்தையிற் பிரிவு அயல்மனைப் பிரிவு, அயற்சேரிப் பிரிவு, புறநகர்ப் போக்கு என மூன்று வகைப்படும். இவற்றுள் அயல்மனைப் பிரிவு என்பது காமக்கிழத்தி காரணமாகத் தலைமகன் தன் மனைக்கு அயல்மனையின் கண்ணே பிரிவது. அயற்சேரிப் பிரிவு என்பது இரண்டாவதாக வரைந்து கொள்ளப்பட்ட பெதும்பைப் பருவக் கிழத்தியும், காதற்பரத்தையும், இனிய விழவும் காரணமாகத் தலைமகன் அயற்சேரியின் கண்ணே பிரிதல். புறநகர்ப் போக்கு என்பது பூத்துக் குலுங்கும் சோலையின் கண்ணே விளையாடுதல் காரணமாகவும், புனலாடுதல் காரணமாகவும், தலைமகன் புதியளாகிய பரத்தையைத் தேர் மேல் ஏற்றிக்கொண்டு நகர்ப்புறத்தே செல்வது. பரத்தையிற் பிரியும் தலைமகன், தலைவி நீராடியபின் பன்னிரண்டு நாளுங் கருப்படுங் காலமாதலால் அந்நாட்களில் தலைவியைப் பிரியான்.

அறுவகைப்பட்ட பிரிவின் கண்ணும் தலைவன் தலைவிக்குச் சொல்லிப்பிரிதலும், சொல்லாது பிரிதலும் உண்டு. ஆயினும் தலைமகளுக்குச் சொல்லாது பிரியினும் தோழிக்குச் சொல்லியே பிரிவான். த லை வி யி ட ம் சொல்லாது பிரியினும் குறிப்பால் உணர்த்துவான். பிரியுங்காலத்து நடந்து செல்லுதலும், கப்பலேறிச் செல்லுதலும், குதிரை முதலிய ஊர்திகளில் ஏறிச்செல்லுதலும் உண்டு. இவ்வாறு செல்லுதல் அனைவர்க்கும் உரியதாயினும் கப்பலேறிச் செல்லுதல் அந்தணர்க்கு இல்லை. அரசர், வணிகர், வேளாளர் என்ற பிரிவினர் மூவரும் கப்பலிற் செல்லும்போதும், பாசறை செல்லும்போதும் குலமாதரை அழைத்துச் செல்லுதல் இல்லை. அவ்வாறு அழைத்துச் செல்லுதல் குற்றமாகும்.

கல்விக்காகப் பிரிந்த தலைமகன் கல்விகற்றலை விடுத்து இடையில் மீண்டுவருதலும், அவ்விடத்துத் தலைமகளை நினைத்துப் புலம்புதலும் செய்யான்.

தூது காரணமாகவும், துணைவயிற்பிரிவு காரணமாகவும் சென்றோரும் தாம் சென்றவினை நீட்டித்த விடத்துப் பாசறையின் கண்ணே புலம்புதலும் உண்டு.

**ஊடல்**

ஊடல் என்பது தலைவன் புறத்தொழுக்கம் காரணமாகத் தலைவிக்கு ஏற்படும் மனப்பிணக்கு, தலைமகன் பரத்தை காரணமாகப் பிரியத்தலைவிக்கு ஊடல் நிகழும்.

இவ்வூடலைத் தீர்க்க முன் நிற்போர் வாயில்கள் எனப்படுவர். இவர்கள் பாணன், பாடினி, கூத்தர், இளையர், கண்டோர், இருவகைப்பாங்கர், பாங்கன், பாங்கி, செவிலி, அறிவர், காமக் கிழத்தி, காதற்புதல்வன், விருந்தினர், ஆற்றாமை எனப்படுவோர்.

## செலவழுங்குதல்

தலைமகளைப் பிரிந்து வினை மேற்கொள்ளக் கருதிய தலைமகன் அச்செலவினைத் தவிர்ப்பது செலவழுங்குதலாகும். ஓதற்பிரிவு, காவற்பிரிவு, தூதிற்பிரிவு, துணைவயிற்பிரிவு, பொருள்வயிற்பிரிவு என்ற ஐந்து பிரிவின் கண்ணும் பிரியும் தலைமகன் பிரிதலேயன்றிச் செலவழுங்குதற்கும் உரியன் ஆவன். இவ்வாறு செலவழுங்குதல் இல்லத்தின் கண்ணும், இடைச்சுரத்தின் கண்ணும் நிகழும். இல்லத்தின் கண்ணே தலைமகளையும் தன் நெஞ்சினையும் தேற்றுதல் காரணமாகவும், இடைச்சுரத்தே தன் நெஞ்சினைத் தேற்றுதல் காரணமாகவும் செலவழுங்குதல் நிகழுமேயன்றி, செலவு தவிர்தல் இல்லை.

## கற்பில் தலைமகள் செயல்

தலைவி தான் பூப்படைந்ததனைத் தோழி வாயிலாகத் தலைவனுக்கு உணர்த்துவாள்; தலைவன் பிரிவினைப் பழித்துக் கூறும் காமக்கிழத்தியை இடித்துக் கூறுவாள்; தலைவன் செயலை இடித்துக் கூறுவாள்; தலைமகனையும் பாங்கனையும் பரத்தையையும்

பழிப்பாள்; வழிமுறை மனையாளோடு வந்த கணவனை எதிர்கொள்ளுதலும் உண்டு; தலைமகனோடு புறநகர்ப் பகுதிக்குச் சென்று மலர்ச்சோலையும், பொழிலும், கழனியும் அருவியும், கானமும் கண்டு விளையாடியும், ஆறும் குளமும் குடைந்தாடி விளையாடியும் வருவாள்.

## பாணர் செயல்

தலைவியின் நலன் அழிவு கண்டு வருந்தித் தலைவன்பால் சென்று அவள் நிலையை அவனுக்கு உணர்த்துவர்; தலைமகள் வரவினை மீண்டு வந்து தலைவிக்கு உணர்த்தி, அவனுக்காகத் தலைவியிடம் வாயில் வேண்டி அமைத்து ஊடல் தீர்ப்பர்; தலைவி அணிநலம் பெற்றதை அறியார் போன்று அவளைப் பணிவொடு வினவுவர்.

## விறலியர் செயல்

தலைவனுக்காகத் தலைவியிடம் வாயில் வேண்டி அதனை அமைத்துத் தலைவியின் ஊடல் தீர்ப்பர்; பிரிவுக்காலத்தே தலைவியைத் தெளிவிப்பர்.

## கூத்தர் செயல்

தலைவன் தலைவியர்க்கு அறிவுரை கூறுவர்; அவர்கள் செல்வ நிலையினை வாழ்த்துவர்; கலன் அணியும் காமநுகர்வும் உணர்த்துவர்; ஊடல் முதிர்ந்த காலைக் காரணம் காட்டித் தேற்றுவர்; சேய்மை செப்பலோடு பாசறையின் கண்ணே சென்று தலைவியின் நிலையுரைப்பர்; தலைவன் மீண்டு வருவதனைத் தலைவிக்கு உரைப்பர்.

## இளையோர் செயல்

தலைவியை வாயில் வேண்டி இசைவித்து ஊடல் தீர்ப்பர்; தலைவன்பாற் சென்று தலைவி நிலை உணர்த்துவர்; குற்றேவல்

செய்வர்; தலைவியிடம் சென்று அவன் வரவு கூறுதலோடு அவன் திறமும் கூறுவர்; வினை முடிபுரைப்பர்; வழியியல்பு கூறுவர்; வழியிடைக் கண்டன மொழிவர்.

## கண்டோர் செயல்

தலைவன் வரவைத் தலைவிக்கு உரைத்தலொடு அவளது ஊடல் தீர்ப்பர்.

## பார்ப்பனப் பாங்கர் செயல்

இளமை, யாக்கை, செல்வம் முதலியவற்றின் நிலையாமையை எடுத்துக் கூறுவர்; தலைவனைச் செலவழுங்குவிப்பர்; அவனைச் செலவு உடன்படுத்துவர்.

## ஏனைப்பாங்கர் செயல்

தலைவன் தலைவியரை நன்னெறியின் கண்ணே நிறுத்தித் தீய நெறியின்கண்ணே அகற்றுவர்.

## பாகன் செயல்

தலைவியை வாயில் வேண்டி அதனை அமைத்து ஊடல் தீர்ப்பர்; வினை முடித்த தலைமகன் தன் பதி சேய்மையில் உள்ளது என வருந்த அவனைத் தேற்றுவன்.

## பாங்கி செயல்

பிரிவின்கண் விலக்கலும், உடன்படுத்தலும், தேற்றலும் செய்வர்; பிரிவில் அழுங்குவர்.

## செவிலி அறிவர் செயல்

இவர் முன்வரு நீதியும் பின்வரும் பெற்றியும் உரைப்பர்; உலகியல் முறைமை கூறுவர்.

## காமக்கிழத்தியர் செயல்

தலைவன் குடிப்பிறந்தோர் மீது குற்றத்தையேற்றிக் கூறுவர்; தலைவியைப் பழிப்பர்; தலைவியின் ஊடலுள் தலைவனைக்கழறுவர்; தலைமகள் ஒழுக்கமுரைப்பர்.

## பரத்தையர் செயல்

தலைவன் தலைவியரை இகழ்ந்துரைத்தலொடு தம்மைப்புகழ்வர்; நிகழ்பொருள் காப்பர் ; காதற்பரத்தையரைப் புகழ்தலுடன் தம்மை இகழ்தலுமுண்டு.

## அகப்பொருள் மாந்தர்

இளையர் : இவர் தலைவன் தலைவியருக்கு நீங்காக் கவசம் போல்வர்.

இருவகைப்பாங்கர் : பார்ப்பணப்பாங்கர், ஏனைப்பாங்கர் என்ற இருவகைப்பாங்கரும் தலைமகனுக்கு இனிய உயிர்த்துணையாவர். அவன் தாயும் தந்தையும் அவனை அடைக்கலமாகக் கொடுக்கப் பட்ட தன்மையோராவர்.

## தோழி

தோழி எனப்படுபவள் செவிலியின் மகள். தலைவியின் நன்மை தீமையை ஆராய்பவள். தலைமகனுக்கு உசாத் துணையாய் அவனது வருத்தந் தீர்த்தற்குரிய அன்பு பொருந்திய துணையாவாள்.

## செவிலி

செவிலி எனப்படுபவள் தலைமகளின் நற்றாய்க்குத் தோழி. தலைமகளுக்கு வரும் துயரங்களைக் களைந்து, நல்லறிவும், குல ஒழுக்கமும் கற்பித்துத் தலைமகளை வளர்த்த தாயாவாள்.

## அறிவர்

தலைவன் தலைவியர் இருவருக்கும் உறுதி பயக்கும் நல்லுரை கூறும் சான்றோர்.

## காமக்கிழத்தியர்

இவர் சேரிப்பரத்தையர் போலப் பலருக்கும் உரியாரன்றி ஒருவர்க்கே உரிமை பூண்டு வரும் குலப்பரத்தையர் மகளிராகி, காமங்காரணமாகத் தலைமகனால் மணந்து கொள்ளப்பட்டவராவர்.

## காதற்பரத்தையர்

இவர் யாவரையும் விரும்பாத இயல்பினால் சேரிப்பரத்தை யருடைய மகளிராய், தம் அன்பினால் தலைமகனோடு கூடுவர். இவர்களுள்ளும் தலைமகனால் மணந்து கொள்ளுதற்குரியாரும் உளர்.

## துறவறம்

தலைவனும் தலைவியும் இல்லறப் பேற்றினை யேற்று, மனையறங் காத்து, மக்களைப் பெற்று மகிழ்ந்து, காம வேட்கை தீர்ந்து, தம் பதியைவிட்டு நீங்கி அமைதியான இடத்திற்குச் சென்று எல்லையில்லாச் சுற்றத்தோடு துறவறம் காப்பர்.

# அகப்பொருள் விளக்கம் மூலமும் உரையும்

## சிறப்புப்பாயிரம்

பூமலி நாவன் மாமலைச் சென்னி
ஈண்டிய விமையோர் வேண்டலிற் போந்து
குடங்கையின் விந்த நெடுங்கிரி மிகைதீர்த்
தலைகட லடக்கி மலையத் திருந்த
இருந்தவன் றன்பா லியற்றமி ழுணர்ந்த
புலவர்பன் னிருவருட் டலைவ னாகிய
தொல்காப் பியனரு ளொல்காப் பெரும்பொரு
ளகப்பொரு ளிலக்கண மகப்படத் தழீஇ
இகப்பருஞ் சான்றோ ரிலக்கிய நோக்கித்
தொகுத்து முறைநிறீஇச் சூத்திரம் வகுத்தாங்
ககப்பொருள் விளக்கமென் றதற்கொரு நாமம்
புலப்படுத் திருளறப் பொருள்விரித் தெழுதினன்
மாந்தருந் தேவரும் வாழ்த்தமுக் குடைக்கீழ்
ஏந்தெழி லரிமா னேந்துபொன் னணைமிசை
மதிமூன்று கவிப்ப உதய மால்வரைக்
கதிரொன் றிருந்தெனக் காண்டக விருந்து

தத்துவம் பகர்ந்தோன் சரணம் பொருந்திய
யுத்தமன் புளிங்குடி உய்யவந் தானெனும்
முத்தமி ழாசான் மைந்த னித்தலத்
திருப்பெருங் கலைக்கு மொருபெருங் குரிசில்
பாற்கடற் பல்புகழ் பரப்பிய
நாற்கவி ராச நம்பியென் பவனே.

என்பது பாயிரம். பாயிரம் என்பது புறவுரை என்றவாறு. ஆயின், நூல் கேட்பான் புகுந்தே நூல் கேளாது புறவுரை கேட்டாற் பயன் என்னை யெனின் ;

" பருப்பொருட் டாகிய பாயிரங் கேட்டார்க்கு
நுண்பொருட் டாகிய நூலினிது விளங்கும் "

என்பவாகலாற் பாயிரங்கேட்டே நூல் கேட்க வேண்டும். அப் பாயிரம் பொதுப்பாயிரமும், சிறப்புப்பாயிரமும் என இரண்டு வகைப்படும். அவற்றுள், முன்னையது நூன்முகத்து உரைப்பினும் உரையா தொழியினும் அமையுமாதலிற் பொதுப் பாயிரம் என்றா யிற்று. பின்னையது நூன்முகத்து உரைக்க வேண்டுதலிற் சிறப்புப் பாயிரம் என்றாயிற்று.

அச்சிறப்புப் பாயிரம் எட்டு வகைப்படும்.

" ஆக்கியோன் பெயரே வழியே யெல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனோ டாயெண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே " என்றாராகலின்.

இனி இதனைக் காலமும், களனும், காரணமுங் கூட்டிப் பதினொன் றென்பாரும் உளர். என்னை ?

" காலங் களனே காரண மென்றிம்
மூவகை யேற்றி மொழிநரு முளரே " என்றாராகலின்.

ஆக்கியோன் பெயர் என்பது, நூல் செய்த ஆசிரியரின் பெயராயிற்று; வழி, நூலின் வழியாயிற்று; எல்லை, நூல் நடக்கும்

எல்லையாயிற்று; நூற்பெயர், நூலின் பெயராயிற்று; யாப்பு தொகுத்தலும், விரித்தலும், தொகை விரியும், மொழி பெயர்த்தலும் என்னும் நான்கனுள் ஒன்ருன நூல் செய்தலாயிற்று; நுதலிய பொருள், நூலாற் கருதப்பட்ட பொருளாயிற்று; கேட்போர், நூல் கேட்டற்கு உரியாராயிற்று; பயன், நூல் கற்றதனுலாய பயனுயிற்று; காலம், நூல் செய்த காலமாயிற்று; களன், நூலரங்கேறிய அவைக்களமாயிற்று; காரணம், நூல் செய்தற்குக் காரணமாயிற்று. இப்பதினென்றனுள்ளும் பாயிரச் சூத்திரங்களுள் எடுத்தோதப்படாதன எல்லேயும், கேட்போரும், பயனும், காலமும், களனும் என்னும் ஐந்துமாம். அவற்றையும் ஒருவாற்ருன் உய்த் துணர்ந்து, அல்லாத ஆறும் இச்சூத்திரப் பேருரையிற் காண்க.

**(இதன் பொருள்)** பூமலி .... வேண்டலிற் போந்து என்பது, பூ மிக்க நாவலேயுடைய பெரிய மேருவினது உச்சியின்கண்ணே திரண்ட முப்பத்து முக்கோடி தேவர்களும் வேண்டிக்கொள்கை யாலே அங்குநின்றும் போந்து என்றவாறு.

குடங்கை .... அடக்கி என்பது, குழிந்தகையாலே விந்த மென்னும் நெடிய மலேயினது மிகையைத் தீர்த்து அலேகடலினே அடக்கி எ – று.

(குடங்கையின் என்பதனே யிரண்டிடத்துங் கூட்டிக் கொள்க).

மலேயத் .. தன்பால் என்பது, பொதிய மலேயின்கண்ணே இருந்த பெருந்தவத்தோனுகிய அகத்தியன் பக்கத்து எ — று.

இயற்றமிழ் . பன்னிருவருள் என்பது, இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழுள்ளும் இயலாகிய தமிழைக் கற்ற மாணுக்கர் பன்னிருவருள்ளும் எ — று.

தலேவ .... பெரும்பொருள் என்பது, முதல்வனுகிய தொல்காப்பி யனுல் அருளிச்செய்யப்பட்ட கோடாத பெரிய பொருள் என்னும் நூலுள் எ — று.

அகப் தழீஇ என்பது, அகப்பொருட்குரிய இலக்கணத்தை உளப்படக் கூட்டிக்கொண்டு எ — று.

இகப் . நோக்கி என்பது, அகப்பொருள் இலக்கணத்தைக் கடவாத சங்கத்தாருடைய செய்யுள்களை ஆராய்ந்து எ — று.

தொகு ... நிறீஇ என்பது, அவ்விலக்கண இலக்கியங்களுட் கலந்துகிடந்த கிளவிகளைச் சேர்த்து அடைவுடன் நிறுத்தி எ — று.

சூத்திரம் வகுத்தாங்கு என்பது, அவ்வடைவிற்கு ஏற்பச் சூத்திரஞ்செய்து எ — று.

அகப் .... படுத்து என்பது, அந்நூற்கு அகப்பொருள் விளக்கம் என்று ஒருபெயரை வெளிப்படுத்தி எ — று.

இருளற .... எழுதினன் என்பது, மயக்கந்தீர உரையைப் பரப்பி எழுதினன் எ — று.

மாந்தரும் .... வாழ்த்த என்பது, மனிதரும் அமரரும் துதிக்க எ — று.

முக்குடைக்கீழ் என்பது, முக்குடையின் கீழ் எ — று.

ஏந் .... மிசை என்பது, உயர்ந்த அழகினையுடைய சிங்கஞ் சுமந்த பொன்னணைமேல் எ — று.

மதி ... இருந்து என்பது, நிறைமதி மூன்று கவிப்ப உதயம் என்னும் பெரிய மலையின்கண்ணே இளஞாயிறென்று இருந்தாற் போல அழகுதக இருந்தருளி எ — று.

தத்துவம் .... மைந்தன் என்பது, உண்மைப் பொருளை அருளிச் செய்தோனுடைய திருவடிகளைச் சேர்ந்த மேலோன் என்றும், திருப்புளிங்குடி என்னும் ஊரகத்துத் தோன்றிய உய்யவந்தான் என்றுஞ் சொல்லப்படா நின்ற முத்தமிழாசானுடைய மைந்தன் எ — று.

இத்தல .... குரிசில் என்பது, இவ்வுலகத்தின்கண் உண்டாய ஆரியம் முத்தமிழ் என்னும் இரண்டு கலைக்கும் ஒரு பெரிய நாயகன் எ — று.

பால் .... என்பவனே என்பது, பாற்கடல்போலும் பலவாகிய புகழைப் பரப்பின நாற்கவிராசநம்பி என்னும் பெயருடையோன் எ — று.

'மாமலைச் சென்னி' என்புழி ஆருமுருபும், 'சென்னியீண்டிய என்புழி ஏழாமுருபுந் தொக்கன. 'போந்து' 'தீர்ந்து' 'அடக்கி யென்னும் வினையெச்சங்கள் அடுக்காய் இருந்த என்னும் பெயரெச்சத்தோடு முடிந்தன; அப்பெயரெச்சம் இருந்தவன் என்னும் பெயர் கொண்டது. இயற்றமிழ் என்பது இருபெயரொட்டு. தமிழை என இரண்டாவது விரிக்க. 'பெரும் பொருள்' என்புழி உள்ளென்னும் ஏழாமுருபு தொக்கது. 'பெரும் 'தழீஇ,' 'நோக்கி', 'தொகுத்து', நிறீஇ,' 'வகுத்து', 'புலப்படுத்து' என்னும் வினையெச்சங்கள் அடுக்காய் 'எழுதினன்' என்னும் முற்றுவினை கொண்டன. ஆங்கு என்பது அசை. 'வாழ்த்துப் பகர்ந்தோன்' என இயையும். இருந்து என்னும் வினையெச்சம் பகர்ந்தோன் என்னுந் தொழிற்பெயருட் 'பகர்தல்' என்னுந் தொழிலோடு முடிந்தது. பரப்பிய என்னும் பெயரெச்சம், நாற்கவிராசன் என்னுஞ் சிறப்புப் பெயர் கொண்டது. நாற்கவி யாவன ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்பனவாம். 'பாற்கடற் பல்புகழ்' என்புழி உவமந் தொக்கது. நம்பி என்னும் இயற்பெயர் எய்தினன் என்னும் முற்றுவினைப்பயனிலை கொண்டது.

ஆக்கியோன் பெயர் நம்பி; வழி தொல்காப்பியத்தின் வழி; அதன் வழியாயினும், தொல்காப்பியம் வழி நூலானமையின் இது சார்புநூல் எனப்படும். எல்லையும் அதனனே அடங்கும். நூற் பெயர் அகப்பொருள் விளக்கம்; யாப்பு தொகுத்தியாத்தல்; நுதலிய பொருள் அகப்பொருள்; கேட்போர் கற்று வல்லோர்; பயன் வீடுபேறு; காலம் பாண்டியன் குலசேகரன் காலம்; களம் அறிவோரவைக்களம். காரணம் கிளவிகளையடைவுறக் கோத்தல். இவையெல்லாம் பாயிரத்தியல்பு எனக் கொள்க.

# அகத்திணை இயல்

அகப்பொருள் வகை

1. மலர்தலை யுலகத்துப் புலவோ ராய்ந்த
அருந்தமி ழகப்பொருள் கைக்கிளை ஐந்திணை
பெருந்திணை யெனவெழு பெற்றித் தாகும்.

என்பது சூத்திரம். மேற் பாயிரத்திலக்கணம் உணர்த்திப் போந் தாம். இனி, நூலிலக்கணம் உரைக்கின்றாம். அஃதுரைக்குங் கால் நூல் நுதலியது உரைத்தலும், நூலுள் அதிகாரம் நுதலி யது உரைத்தலும், அதிகாரத்துள் ஓத்து நுதலியது உரைத்தலும், ஓத்தினுட் சூத்திரம் நுதலியது உரைத்தலும் என நான்கு வகை யால் உரைத்தல் வேண்டும்.

அவற்றுள் நூல் நுதலியது உரைக்குங்கால் நூலாமாறும்; நூலென்ற சொற்குப் பொருளாமாறும் உரைத்தல் வேண்டும்.

அவற்றுள் நூலாமாறுரைக்குங்கால் நூல் மூன்று வகைப் படும், முதனூலும் வழி நூலும் சார்பு நூலும் என. என்னை?

''முதல்வழி சார்பென நூன்மூன்ருகும்'' என்ருராகலின்.

அவற்றுள், முதனூலாவது வரம்பில் அறிவன் பயந்ததாகும். என்னை ?

''வினையி னீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதனூ லாகும்''
(தொல். பொருள் மரபு நூ. 94)

என்ருராகலின்.

வழிநூலாவது முதனூலின்வழி தப்பாமற் பின்னரும் வேண்டும் விகற்பங் காட்டி வழுவாமற் சொல்வது. என்னை ?

''முன்னோர் நூலின் முடிபொருங் கொத்துப்
பின்னோன் வேண்டும் விகற்பங் கூறி
அழியா மரபினது வழிநூ லாகும்'' என்ருராகலின்.

சார்பு நூலாவது அவ்விருவர் நூலின் முடிந்த பொருளை ஒருபகாரம் நோக்கி ஒரு கோவைப்பட வைப்பது. என்னை ?

''இருவர் நூற்கு மொருசிறை தொடங்கித்
திரிபுவே றுடையது புடைநூ லாகும்'' என்ருராகலின்.

நூல் என்ற சொற்குப் பொருளுரைக்குங்கால் தந்திரம் என்னும் வடமொழியை நூலென்று வழங்குவது தமிழ் வழக்கமெனக் கொள்க. நூல் நுதலியது உரைத்தலாவது, இந்நூல் இன்னது கருதிற்று என்று உரைத்தல். அது தமிழ் நுதலிற்று என்றல்; அந்நூல் மூன்று வகைப்படும், இயனூலும், இசை நூலும் நாடக நூலும் என. அவற்றுள், இயனூல் மூன்று வகைப்படும் எழுத்தும், சொல்லும், பொருளும் என. என்னை ?

''தமிழ்கூறு நல்லுலகத்து
வழக்குஞ் செய்யுளு மாயிரு முதலி
னெழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடி''
(தொல். பாயிரம்)

என்ருராகலின்.

அஃதேல், யாப்பும் அலங்காரமும் அவற்றுள் யாதனுள் அடங்குமோவெனின், அவை இரண்டும் பொருளினுள் அடங்கும் எனக் கொள்க. அதிகார நுதலியது உரைத்தலாவது, இவ் வதிகாரம் இன்னது கருதிற்று என்றல். ஆயின், இவ்வதிகாரம் என்னுதலிற்றோவெனின். அது பாயிரவுரையுள் உரைத்துப் போந்தாம். இவ்வதிகாரம் அகத்திணையியலும், களவியலும், வரைவியலும், கற்பியலும் ஒழிபியலும் என ஐந்தோத்துக் கொண்டதாம். அதிகாரத்துள் ஓத்து நுதலியது உரைத்தலாவது இவ்வதிகாரத்துள் இவ்வோத்து இன்னது கருதிற்று என்றல். ஆயின், இவ்வதிகாரத்துள் இவ்வோத்து என்னுதலிற்றோவெனின் அகத்திணை இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்றெனக் கொள்க. ஓத்தினுட் சூத்திரம் நுதலியது உரைத்தலாவது, இவ்வோத்தினுள் இச்சூத்திரம் இன்னது கருதிற்று என்றல்.

ஆயின். இவ்வோத்தினுள் இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், அகப்பொருளெல்லாந் தொகுத்து உணர்த்துதல் நுதலிற்று. அன்னதால் இச்சூத்திரப் பொருளுரைப்பவே விளங்கும்.

அப்பொருளுரை நான்கு வகைப்படும். கருத்துரைத்தலும் கண்ணழித்துரைத்தலும், பொழிப்புத் திரட்டலும், அகலங்கூறலும் என. என்னை ?

‘‘ கருத்துரை கண்ணழிபு பொழிப்புத் திரட்ட
லகலங் கூற லெனநால் வகைத்தே
புகலுஞ் சூத்திரப் பொருளுரை யென்ப ’’

(காரிகை முதல் நூற்பாவுரை)

என்றாராகலின்.

அவற்றுள் கருத்துரைத்தலாவது, சூத்திரத்து உட்கோள் உரைத்தல். என்னை.

‘‘ சூத்திரத் துட்கோள் சொல்லல் கருத்துரை ’’ என்றாராகலின்

கண்ணழித்தலாவது சூத்திரத்துச் சொற்றோறும் சொற்றோறும் பொருளுரைத்தல். என்னை ?

"சொற்சுருக்குஞ் சொற்றொடருந் துணிபொரு ளுரைத்தல்
கற்றறி புலவர் கண்ணழி பென்ப" என்றாராகலின்

பொழிப்புத் திரட்டலாவது, சூத்திரத்துப் பொருளை யெல்லாம் தொகுத்துரைத்தல். என்னை?

"பொழிப்பெனப் படுவது பொருந்திய பொருளைப்
பிண்டமாகக் கொண்டுரைப்பதுவே"

(காரிகை முதற் நூற்பா வுரை)

என்றாராகலின்

அகலங் கூறலாவது, சூத்திரப் பொருளைத் தூய்மை செய் தற்குக் கடாவும் விடையும் உள்ளுரைத்து விரித்துரைத்தல். என்னை?

"அகல மென்ப தாசறக் கிளப்பின்
விகல மின்றி விரித்துரைப் பதுவே" என்றாராகலின்.
அவற்றுள் கருத்துரை முற்கூறப்பட்டது.

இனிக் கண்ணழிக்குமாறு; மலர்தலை உலகத்து என்பது' பரந்த இடத்தையுடைய தமிழ் நாட்டகத்து என்றவாறு. புலவோர் ஆய்ந்த அருந்தமிழ் அகப்பொருள் என்பது. தலைச்சங்கத்தோரும், இடைச்சங்கத்தோரும், கடைச்சங்கத்தோருமாகிய சான்றோரால் ஆராயப்பட்ட அரிய தமிழ் நூலகத்து அகப்பொருள் என்றவாறு. 'கைக்கிளை யைந்திணை பெருந்திணை என வெழு பெற்றித் தாகும்' என்பது, கைக்கிளையும் ஐந்திணையும் பெருந்திணையும் என ஏழியல் பினை உடைத்து என்றவாறு. என்னை?

'கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணையென்ப"

(தொல். பொருள்-அகத். நூ 1)

என்றாராகலின்

பொழிப்புத் திரட்டலாமாறு: பரந்த இடத்தையுடைத்தாகிய தமிழ்நாட்டிடத்து மூன்று வகைப்பட்ட சங்கத்தோரான் ஆராயப் பட்ட அரிய தமிழ் நூலகத்து அகப்பொருளாவது கைக்கிளையும்,

ஐந்திணையும், பெருந்திணையும் என ஏழியல்பினை உடைத்தாம் என்றவாறு.

இனி அகலங் கூறுமாறு: இச்சூத்திரத்துள் மலர்தலை என்பதி யாதோ வெனின் வினைத்தொகை எனக் கொள்க. வினைத் தொகையாவது ஒரு காலத்திற்கே உரித்தாகாது, மூன்று காலத் திற்கும் பொதுவாய் நிற்பதாம். மூன்று காலமாவன இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்பனவாம். அஃது அவற்றோடு வருங்கால் மலர்ந்த என்றும், மலராநின்றவென்றும், மலரும் என்றும் வரும். அவற்றுள் ஈண்டு மலர்ந்த என்பதே பொருளாம். தலையுலகத்து என்புழி இரண்டாம் உருபும் ஏழாம் உருபும் தொக்கன. புலவோர் என்னும் எழுவாய்க்கு ஆய்ந்த என்னும் வினை பயனிலையாம். ஆயினும், அது பெயரெச்ச வாய்பாடு ஆதலான், அருந்தமிழ் என்னும் பெயரோடு முடிந்தது. அருந்தமிழ் அகப்பொருள் என்புழி ஏழாம் உருபு தொக்கது. அகப்பொருள் என்னும் எழுவாய், பெற்றித்து என்னும் குறிப்புவினை கொண்டது. கைக் கிளை, ஐந்திணை, பெருந்திணை என உம்மைத் தொகையாய் ஏழென்னுந் தொகை பெற்றன. என என்பது எண்ணிடைச் சொல். (1)

சொல்லப்படும் திறன்

2. அதுவே
புணைந்துரை யுலகிய லெனுந்திற மிரண்டினுந்
தொல்லியல் வழாமற் சொல்லப் படுமே.

இச்சூத்திரம் மேற்சொல்லப்பட்ட அகப்பொருட்குரிய விதி உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) அதுவே — அவ்வகப்பொருள் இல்லதும் உள்ளது மாகிய இரண்டு கூறுபாட்டானும் பழைய நெறி பிழையாமற் கூறப்படும் என்றவாறு. என்னை ?

"நாடக வழக்கினு முலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கங்
கலியே பரிபாட்டாயிரு பாங்கினும்
உரிய தாகும் என்மனார் புலவர்"

(தொல்-பொருள்-அகத் நூ. 53)

என்றுராகலின். (2)

*கைக்கிளை இலக்கணம்*

**3. அவற்றுள்**

**கைக்கிளையுடைய தொருதலைக் காமம்.**

**(இ - ம்)** *நிறுத்தமுறையானே* கைக்கிளைக்குரிய காமப்பொருள் உணர்த்துதல் நுதலிற்று.

**(இ - ள்)** மேற்சொல்லப்பட்ட அகப்பொருள் விகற்பமாகிய ஏழனுட் கைக்கிளை என்பதனுடைய பொருள் ஒருதலைக்காமம் என்றவாறு.

அவற்றுள் என்பதனை மேல்வருகின்ற சூத்திரம் இரண்டற்குந் தந்துரைக்க. (3)

*ஐந்திணை இலக்கணம்*

**4. ஐந்திணையுடைய தன்புடைக் காமம்.**

**(இ - ம்)** ஐந்திணைக்குரிய காமப்பொருள் உணர்த்துதல் நுதலிற்று.

**(இ - ள்)** ஐந்திணை என்பதனுடைய பொருள் அன்புடைக் காமம் என்றவாறு. (4)

பெருந்திணை இலக்கணம்

**5. பெருந்திணை யென்பது பொருந்தாக் காமம்.**

**(இ - ம்)** பெருந்திணைக்குரிய காமப்பொருள் உணர்த்துதல் நுதலிற்று.

**(இ - ள்)** பெருந்திணை என்பதனுடைய பொருள் பொருந்தாக் காமம் என்றவாறு.

இவற்றின் விகற்பமெல்லாம் மேலே காட்டப்படும். (5)

## ஐந்திணையின் பெயர்

**6. குறிஞ்சி பாலை முல்லை மருதம்**
**நெய்த லைந்திணைக் கெய்திய பெயரே.**

**(இ - ம்)** நிலம் வகுக்கப்படாத கைக்கிளையும் பெருந்திணையும் ஒழித்து - நிலம் வகுக்கப்படும் ஐந்திணைக்கும் உரிய பெயர் உணர்த்துதல் நுதலிற்று.

**(இ - ள்)** குறிஞ்சியும் பாலையும் முல்லையும் மருதமும் நெய்தலும் அவ்வைந்து திணைக்கும் பொருந்திய பெயராம் என்றவாறு. என்னை?

"மாயோன் மேய காடுறை யுலகமும்
சேயோன் மேய மைவரை யுலகமும்
வேந்தன் மேய தீம்புன லுலகமும்
வருணன் மேய பெருமண லுலகமும்
முல்லை குறிஞ்சி மருத நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"

என்றாராகலின் (தொல். பொருள். அகத். நூ 5)

மற்றிதனுட் பாலைக்குத் திணை இல்லையாலோ வெனின், அது நிலம் இன்மையான் ஒழிக்கப்பட்டது எனக்கொள்க. அஃதேல் ஈண்டுக் கூறியது என்னை யெனின், மதுரைக் காஞ்சியுள். "பாலை சான்ற சுரஞ்சார்ந் தொருசார்" (அடி 314) என்பதனாலும், பிற வாற்றானுங் கூறப்பட்டது எனக்கொள்க. அஃதற்றாக, முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்று இம்முறை எண்ணாது குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம் நெய்தலென எண்ணிய தென்னையோவெனின் அச்சூத்திரத்துள், "சொல்லிய முறையாற் சொல்லவும் படும்" என்ற உம்மையாற் பிறவாற்றானும் சொல்லப்படும் என்பதுபட நிற்றலானும் பத்துப்பாட்டும் கலித்தொகையும் ஐங்குறுநூறும் கீழ்க்கணக்கும், சிற்றட்டகமு முதலாகிய சான்றோர் செய்யுள்கள் எல்லாம் வேண்டிய முறையானே வைத்தலானும் இவ்வாற்றான், எண்ணப்

பட்டது எனக்கொள்க. மற்றுக் குறிஞ்சி முதலாகிய பெயர் இந் நிலங்கட்கு எய்தியவாறு என்னையெனின், உலகத்தார் வழங்கிப் போந்த முறையாம் எனக் கொள்க. அன்றியும் குறிஞ்சியும் பாலையும் முல்லையும் மருதமும் நெய்தலும் என்னும் பொருள்கள் அவ்வந் நிலத்திற்குச் சிறந்தனவாதலால் அவற்றாற் பெற்ற பெயர் எனவுமாம் என்னை?

"கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு பெருந்தே னிழைக் கும்," (குறுந்-3) எனவும் "கோடுறு பல்கால் வாலிணர்ப் பாலை", எனவும், "முல்லையந்தண் பொழில்', எனவும். 'மருதமா நீழல்" எனவும் 'பாசடை நிவந்த கணைக்கா னெய்தல்" எனவும் சான்றோரால் எடுத்துக் கூறப்படுதலான் எனக் கொள்க. இவை ஆகுபெயராம். (6)

ஐந்திணையுரிப்பொருள்

7. அவைதாம்

முதற்பொருள் கருப்பொருளு ரிப்பொரு ளெனமுறை
நுதற்பொருண் மூன்றினும் நுவலப் படுமே.

(இ - ம்) ஐந்திணைக்கும் உரிய பொதுவாகிய பொருள் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) மேற்சொல்லப்பட்ட குறிஞ்சி முதலாகிய ஐந்திணைதாம் முதற்பொருளும் கருப்பொருளும் உரிப்பொருளும் என முறையானே கருதுதலையுடைய பொருள் மூன்றானுஞ் சொல்லப்படும் என்றவாறு என்னை,

"முதல்கரு வுரிப்பொரு ளென்ற மூன்றே
நுவலுங் காலை முறைசிறந் தனவே
பாடலுட் பயின்றவை நாடுங்காலை"

(தொல். பொருள். அகத். நூ. 3) என்றாராகலின்.

அவைதாம் நுவலப்படும் எனக் கூட்டுக. எனவெனப்படுவது எண்ணிடைச் சொல். (7)

முதற்பொருள் வகை

**8 நிலமும் பொழுதுமென முதலிரு வகைத்தே**

**(இ - ம்)** நிறுத்த முறையானே முதற்பொருளின் பாகுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

**(இ - ள்)** முதற்பொருளாவது நிலமும் பொழுதுமென இரண்டு கூற்றினை உடைத்தாம் என்றவாறு. என்னை ?

> ''முதலெனப் படுவது நிலம்பொழு திரண்டி
> னியல்பென மொழிப வியல்புணர்ந் தோரே''
>
> (தொல். பொருள். அகத். நூ. 4)

என்றுராகலின். (8)

நிலமுதற் பொருள்வகை

**9. வரையே சுரமே புறவே பழனந்**
**திரையே யவையவை சேர்தரு மிடனே**
**யெனவீ ரைவகைத் தனையிய னிலமே.**

**(இ - ம்)** முதற்பொருளின் பாகுபாடாகிய இரண்டனுள்ளும் முன்னதாகிய நிலத்தின் வரையறை உணர்த்துதல் நுதலிற்று.

**(இ - ள்)** மேற்சொல்லப்பட்ட இயல்பினையுடைய நிலம் என்னும் முதற்பொருள். வரையும் வரைசார்ந்த இடமும், சுரமுஞ் சுரஞ்சார்ந்தவிடமும், புறவும், புறவு சார்ந்தவிடமும், பழனமும், பழனஞ்சார்ந்தவிடமும், கடலும், கடல் சார்ந்தவிடமும் எனப் பத்துவகையினை யுடைத்து என்றவாறு.

இவற்றிற்கு விதி மேலே காட்டப்பட்டன. இவற்றை ஐந்திற்கும் நிரனிறையாகக் கொள்க. புறவு எனினும் காடு எனினும் ஒக்கும் பழனம் என்புழி ஏகாரந் தொக்கதாயினும் குற்றமின்றும். என்னை ?

> '' எண்ணே காரமிடையிட்டுக் கொளினு
> மெண்ணுக் குறித்தியலு மென்மனார் புலவர் '
>
> (தொல். சொல். இடையல் – நூ. 40)

என்றுராகலின், அனையவியல் எனற்பாலது அனையியல் என விகாரமாயிற்று. (9)

### காலமுதற் பொருள்வகை

10 பெரும்பொழு தென்றே சிறுபொழு தென்று
இரண்டு கூற்ற தியம்பிய பொழுதே.

**(இ-ம்)** பொழுது என்னும் முதற்பொருளின் பாகுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

**(இ-ள்)** மேற்சொல்லப்பட்ட பொழுது என்னும் முதற் பொருள், பெரும் பொழுது என்றும், சிறுபொழுது என்றும் இரண்டு பகுதியினை யுடைத்து என்றவாறு.

என்றுவென்பது எண்ணிடைச் சொல். (10)

### பெரும்பொழுதின் வகை

11 காரே கூதிர் முன்பனி பின்பனி
சீரிள வேனில் வேனி லென்றுங்
கிருமூன்று திறத்தது தெரிபெரும் பொழுதே.

**(இ-ம்)** நிறுத்த முறையானே பெரும்பொழுதினது பாகுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

**(இ-ள்)** கார் முதலாக வேனில் ஈறாகச் சொல்லப்பட்ட ஆறு பகுதியினை உடைத்தாம் புலவோரான் ஆராயப்பட்ட பெரும் பொழுது என்றவாறு.

ஆங்கு : அசை. (11)

### சிறுபொழுதின் வகை

12 மாலை யாமம் வைகறை யெற்படு
காலை வெங்கதிர் காயுநண் பகலெனக்
கைவகைச் சிறுபொழு தைவகைத் தாகும்.

**(இ-ம்)** சிறுபொழுதின் பாகுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

**(இ-ள்)** மாலை முதலாக நண்பகல் ஈறாகச் சொல்லப்பட்ட ஐவகையினை உடைத்தாம் அவ்வவ் வொழுக்கத்திற்குரிய சிறு பொழுது என்றவாறு.

அவற்றுள், மாலையாவது நிசியின் முன்னும் எற்பாட்டின் பின்னும் உண்டாகிய காலம். யாமமாவது இடையிரவு. வைகறை யாவது விடியற்காலம். எற்படுகாலையாவது ஆதித்தன் படுகிற பொழுது. நண்பகலாவது உச்சிப்பொழுது. கை என்பது ஒழுக்கம். (12).

குறிஞ்சி - பெரும்பொழுது சிறுபொழுது

13 அவற்றுள்,

கூதிர் யாமம் முன்பனி யென்றிவை
ஓதிய குறிஞ்சிக் குரியவாகும்.

(இ - ம்) குறிஞ்சிக்குரிய பெரும்பொழுதும் சிறுபொழுதும் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) பெரும்பொழுதும் சிறுபொழுதுமாகிய பதினொன்ற னுள்ளும் கூதிரும் யாமமும் முன்பனியுமாகிய மூன்றும் மேற் சொல்லப்பட்ட குறிஞ்சிக்குரியவாம் என்றவாறு.

இதனுட் பெரும்பொழுதாகிய முன்பனியைக் கூதிர் என்பத னோடு சேரக்கூறுது யாமமாகிய சிறுபொழுதின்பிற் கூறியது என்னையோவெனின், அது கூதிரின்றுணைச் சிறப்புடைத்து அன்மை யின் அவ்வாறு கூறப்பட்டது எனக்கொள்க. வருகின்ற சூத்திரத் திற்கும் ஒக்கும். (13)

பாலை - பெரும்பொழுது சிறுபொழுது

14 வேனில் நண்பகல் பின்பனி யென்றிவை
பான்மையி னுரிய பாலை தனக்கே.

(இ - ம்) பாலைக்குரிய பெரும்பொழுதும் சிறுபொழுதும் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) பாலைக்கு வேனிலும் நண்பகலும் பின்பனியுமாகிய மூன்றும் விதியான் உரியவாம் என்றவாறு.

இனி, அவற்றது சிறப்புண்மையும் சிறப்பின்மையும் எற்றாற் பெறுவதெனின், "குறிஞ்சி. கூதிர் யாம மென்மனார் புலவர்" (தொல். பொ. அகத். 6) எனவும்; "பனியெதிர் பருவமு முரித்தென மொழிப" (தொல். பொ. அகத். 7) எனவும்; "நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு, முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே" (தொல். பொ. அகத். 9) எனவும்; "பின்பனி தானு முரித்தென மொழிப" (தொல். பொ. அகத். 10) எனவுங் கூறிய வதனாற் பெறுதும் எனக் கொள்க. (14)

முல்லை – பெரும்பொழுது சிறுபொழுது

**15 மல்குகார் மாலை முல்லைக்குரிய.**

**(இ-ம்)** முல்லைக்குரிய பெரும்பொழுதும் சிறுபொழுதும் உணர்த்துதல் நுதலிற்று.

**(இ-ள்)** மிகாநின்ற கார்காலமும் மாலைக்காலமும் ஆகிய இரண்டு காலமும் முல்லைக்குரிய என்றவாறு. என்னை?

"காரு மாலையு முல்லை" (தொல். பொருள். அகத். 6) என்றாராகலின். (15)

மருதம் – சிறுபொழுது

**16 இருள் புலர் காலை மருதத்திற் குரித்தே.**

**(இ-ம்)** மருதத்திற்குரிய சிறுபொழுது உணர்த்துதல் நுதலிற்று.

**(இ-ள்)** மருதத்திற்கு விடியற்காலம் உரித்து என்றவாறு. என்னை?

"வைகுறு விடியன் மருதம்" (தொல். பொ. அகத். நூ 8) என்றாராகலின். (16)

நெய்தல் - சிறுபொழுது

17. வெய்யோன் பாடு நெய்தற் குரித்தே.

(இ-ம்) நெய்தற்குரிய சிறுபொழுது உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஆதித்தன் படுகின்ற காலம் நெய்தற்கு உரித்து என்றவாறு என்னை?

"எற்பாடு, நெய்தலாதன் மெய்பெறத்தோன்றும்"
(தொல். பொ. அகத். நூ. 8)

என்றாராகலின். (17)

மருதம், நெய்தல் இரண்டற்குரிய பெரும்பொழுது

18 மருதம் நெய்தலென் றிவையிரண் டற்கும்
உரிய பெரும்பொழு திருமூன் றும்மே.

(இ-ம்) மருதத்திற்கும் நெய்தற்கும் உரிய பெரும்பொழுது உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மருதமும் நெய்தலும் என்னும் இரண்டற்கும் பெரும் பொழுது ஆறும் உரியவாம் என்றவாறு.

இஃது எற்றாற் பெறுதும் எனின், ஞாபகத்தாற் பெறுதும் எனக் கொள்க. அஃதியாதோவெனின் ஏனை மூன்றற்கும் பெரும் பொழுது கூறிப்போந்து மருதத்திற்கும் நெய்தற்கும் பெரும் பொழுது கூறாததனல் என்க. அதனாற், பெரும்பொழுதாறும் உரியவாம் எனக்கொள்க. (18)

கருப்பொருள் வகை

19 ஆரணங் குயர்ந்தோ ரல்லோர், புள், விலங்
கூர், நீர், பூமர முணப்பறை யாழ், பண்,
டொழி, லெனக் கருவீ ரெழுவகைத் தாகும்.

(இ-ம்) கருப்பொருளின் பாகுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) தெய்வம் முதலாகத் தொழில் ஈறாகச் சொல்லப் பட்ட பதினான்கு வகையினை உடைத்தாங் கருப்பொருள் என்றவாறு என்னை?

"தெய்வ முணவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
இவ்வகை பிறவுங் கருவென மொழிப"

(தொல். பொருள். அகத். நூ. 18)

என்றுராகலின்.

மற்று, அக்கருப்பொருள் எண் பதினான்கு என்று வரையறுத்தது என்னை? இதனுள் எடுத்தோதப்பட்டது எட்டன்றேவெனின், ஒழிந்த ஆறும் இச்சூத்திரத்துப் 'பிற' என்னும் இலேசானே பெறப்பட்டன என்க. (19)

குறிஞ்சியின் கருப்பொருள்

20 விறற்சேய் பொருப்பன் வெற்பன் சிலம்பன்
குறத்தி கொடிச்சி குறவர் கானவர்
குறத்தியர் கிளிமயில் மறப்புலி குடாவடி
கறையடி சீயஞ் சிறுகுடி யருவி
நறுஞ்சுனை வேங்கை குறிஞ்சி காந்தள்
ஆரந் தேக்ககில் அசோகம் நாகம்
வேரல் ஐவனந் தோரையேனல்
கறங்கிசைத் தொண்டகங் குறிஞ்சியாழ் குறிஞ்சி
வெறிகோள் ஐவனம் வித்தல் செறிகுரற்
பைந்திணை காத்தல் செந்தேன் அழித்தல்
செழுங்கிழங் ககழ்தல் முழங்கிவீ ழருவியொடு
கொழுஞ்சுனை யாடல் குறிஞ்சிக் கருப்பொருளே.

(இ-ம்) குறிஞ்சிக்குரிய கருப்பொருள் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) சேய் முதலாகச் சுனையாடல் ஈறாகச் சொல்லப் பட்டனவெல்லாங் குறிஞ்சிக் கருப்பொருளாம் என்றவாறு. (20)

பாலையின் கருப்பொருள்

21 கன்னி விடலை காளை மீளி
இன்னகை எயிற்றி எயினர் எயிற்றியர்

மறவர் மறத்தியர் புறவுபருந் தெருவை
கழுகு செந்நாய் கல்கெழு குறும்பு
குழிவறுங் கூவல் குராஅ மராஅ
உழிஞ்சில் பாலை யோமை யிருப்பை
வழங்குகதிக் கொண்டன செழும்பதிக் கவர்ந்தன
பகைத்துடி பாலையாழ் பஞ்சுரம் வெஞ்சமம்
பகற்சூறை யாடல் பாலைக்கருப் பொருளே.

(இ - ம்) பாலைக்குரிய கருப்பொருள் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) கன்னி முதலாகச் சூறையாடல் ஈருகச் சொல்லப் பட்டன வெல்லாம் பாலைக் கருப்பொருளாம் என்றவாறு. (21)

முல்லையின் கருப்பொருள்

22 நெடுமால் குறும்பொறை நாடன்றோன்றல்
வடுவில் கற்பின் மனைவி கிழத்தி
இடையர் இடைச்சியர் ஆயர் ஆய்ச்சியர்
கான வாரண மான்முயல் பாடி
குறுஞ்சுனை கான்யாறு குல்லை முல்லை
நிறங்கிளர் தோன்றி பிறங்கலர்ப் பிடவம்
கொன்றை காயா மன்றலங் குருந்தந்
தாற்றுக்கதிர் வரகொடு சாமை முதிரை
ஏற்றுப்பறை முல்லை யாழ்சா தாரி
சாமை வரகு தரமுடன் வித்தல்
அவைகளை கட்டல் அரிதல் கடாவிடல்
செவிகவர் கொன்றைத் தீங்குழலூதல்
மூவின மேய்த்தல் சேவினந் தழுவல்
கழுமிய குரவையொடு கான்யா றென்றிவை
முழுதுடனுடன் முல்லைக்கருப் பொருளே.

(இ-ம்) நெடுமால் முதலாகக் கான்யாருடல் ஈருகச் சொல்லப் பட்டனவெல்லாம் முல்லைக் கருப்பொருளாம் என்றவாறு. (22)

## மருதத்தின் கருப்பொருள்

23 இந்திரன் ஊரன் பைந்தார் மகிழ்நன்
கெழுதகு கற்பின் கிழத்தி மனைவி
உழவர் உழத்தியர் கடையர் கடைச்சியர்
மழலை வண்டானை மகன்றில் நாரை
அன்னம் போதா நன்னிறக் கம்புள்
குருகு தாரா எருமை நீர்நாய்
பெருகிய சிறப்பின் பேரூர் மூதூர்
யாறு மனைக்கிணறிலஞ்சி தாமரை
நாறிதழ்க் கழுநீர் நறுமலர்க் குவளை
காஞ்சி வஞ்சி பூஞ்சினை மருதஞ்
செந்நெல் வெண்ணெல் அந்நெல் லரிகிணை
மன்றன் முழவ மருதயாழ் மருதம்
மன்றணி விழாக்கோள் வயற்களை கட்டல்
அரிதல் கடாவிடல் அகண்குளம் குடைதல்
வருபுன லாடன் மருதக் கருப்பொருளே.

(இ-ம்) மருதத்திற்குரிய கருப்பொருள் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) இந்திரன் முதலாக வருபுனலாடல் ஈருகச் சொல்லப் பட்டனவெல்லாம் மருதக் கருப்பொருளாம் என்றவாறு. (23)

## நெய்தலின் கருப்பொருள்

24 வருணன் சேர்ப்பன் விரிதிரைப் புலம்பன்
பருமவல்குற் பரத்தி நுளைச்சி
நுளையர் நுளைச்சியர் பரதர் பரத்தியர்
அளவர் அளத்தியர் அலைகடற் காக்கை
சுறவம் பாக்கம் பெறலரும் பட்டினம்
உவர்நீர்க் கேணி கவர்நீர் நெய்தல்
கண்டகக் கைதை முண்டக மடம்பு
கண்டல் புன்னை வண்டிமிர் ஞாழல்
புலவு மீனுப்பு விலைகளிற் பெற்றன

நளிமீன் கோட்பறை நாவாய்ப் பம்பை
விளரியாழ் செவ்வழி மீனுப்புப் படுத்தல்
உணங்கவை விற்றன்மீன் உணக்கல்புள் ளோப்பல்
நெடுங்கடலாடல் நெய்தற்கருப் பொருளே.

(இ-ம்) நெய்தற்குரிய கருப்பொருள் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) வருணன் முதலாகக் கடலாடல் ஈருகச் சொல்லப் பட்டனவெல்லாம் நெய்தற் கருப்பொருளாம் என்றவாறு.

இச்சூத்திரங்களுள் தெய்வ முதலாகத் தொழில் ஈருகச் சொல்லப்பட்ட கருப்பொருள் பதினன்கும் முறையானே வந்தவாறு கண்டு கொள்க. (24)

உரிப்பொருள்

25 புணர்தலும் பிரிதலு மிருத்தலு மூடலும்
இரங்கலு மிவற்றி னிமித்தமு மெனவாங்
கெய்திய வுரிப்பொருள் ஐயிரு வகைத்தே.

(இ - ம்) உரிப்பொருளின் பாகுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) மேலெய்திய உரிப்பொருள் புணர்தலும் புணர்தல் நிமித்தமும்; பிரிதலும், பிரிதல் நிமித்தமும்; இருத்தலும் இருத்தல் நிமித்தமும்; ஊடலும், ஊடல் நிமித்தமும்; இரங்கலும் இரங்கல் நிமித்தமும் எனப் பத்துவகையினையுடைத்தாம் என்றவாறு. என்னை ?

" புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் இவற்று னிமித்த மென்றிவை
தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே "

(தொல். பொருள். அகத். நூ. 14)

என்றுராகலின், இச்சூத்திரத்தானும் ஐந்திணையையும் வேண்டிய முறையானே வைத்தெண்ணலாம் என்பது பெறப்பட்டது. (25)

கைகோள்

26 அளவி லின்பத் தைந்திணை மருங்கிற்
களவுகற் பெனவிரு கைகோள் வழங்கும்.

(இ - ம்) ஐந்திணைக்குரிய கைகோள் வரையறை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) எல்லையில்லாத இன்பத்தையுடைய ஐந்திணை யிடத்துக் களவும் கற்புமென இரண்டொழுக்கமும் நிகழும் என்றவாறு.

களவுங் கற்புமென உம்மை விரிக்க. கைகோள் என்பது ஒழுக்கம். (26)

களவொழுக்கத்தில் புணர்ச்சி வகை

27 இயற்கைப் புணர்ச்சி யிடந்தலைப் பாடு
பாங்கற் கூட்டம் பாங்கியிற் கூட்டமென்
றுணர்த்திய களவிற் புணர்ச்சிநால் வகைத்தே.

(இ - ம்) நிறுத்த முறையானே களவென்னுங் கைகோளிற் புணர்ச்சி உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) மேற்சொல்லப்பட்ட களவென்னுங் கைகோளிற் புணர்ச்சி: இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கியிற் கூட்டமென நான்கு வகையினை யுடைத்தாம் என்றவாறு. என்னை ?

"காமப் புணர்ச்சியும் இடந்தலைப் பாடும்
பாங்கொடு தழாஅலுந் தோழியிற் புணர்வுமென்
றுங்கநால் வகையினு மடைந்த சார்பொடு
மறையென மொழிதன் மறையோ ராறே"

(தொல். பொருள். செய். நூ. 186)

என்றுராகலின். (27)

### கைக்கிளை நிகழுங்காலம்

28 மெய்க்கிளை யாழோர் வேண்டும் புணர்ச்சிமுன்
கைக்கிளை நிகழ்தல் கடனென மொழிப.

(இ - ம்) கைக்கிளை நிகழும் இடம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) பொருள்படும் கிளைநரம்பினை உடைத்தாய் யாழினை யுடைய கந்திருவர் விரும்பும் களவிற் புணர்ச்சிமுன் கைக்கிளை நிகழ்தல் கடனென்று சொல்லுவர் புலவர் என்றவாறு. (28)

### கைக்கிளை இலக்கணம்

29 அதுவே,
காமஞ் சான்ற இளமை யோள்வயிற்
குறிப்பறி காறுங் குறுகாது நின்று
குறிப்படு நெஞ்சொடு கூற லாகும்.

(இ - ம்) கைக்கிளைக்குரிய இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) மேற்சொல்லப்பட்ட கைக்கிளையாவது காமநுகர்தற் கமைந்த இளமையுடைய தலைமகளிடத் துண்டாகிய குறிப்பினைத் தானறியுமளவும் தலைமகன் அவளைச் சாராது நின்று தன் வசமாகிய நெஞ்சினோடு சொல்லுதலாம் என்றவாறு. (29)

### கைக்கிளைத் தலைமக்கள்

30 மறையோர் மன்னவர் வணிகர்சூத் திரரெனு
மிறையோர் தத்தமக் கெய்துமற் றதுவே.

(இ - ம்) கைக்கிளைக்குரிய தலைமக்களை யுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) மேற்சொல்லப்பட்ட கைக்கிளை : மறையோரும், மன்னரும், வணிகரும், சூத்திரருமாகிய நால்வகைத் தலைமக்கட்கே கூடுவதாம் என்றவாறு. (30)

### இதுவுமது

31 அதுவே,

மொழிந்தோர் நால்வரு மொழிந்தைந் நிலத்துறை
யிழிந்தோர் தம்முளு யர்ந்தோரு மெய்துப.

**(இ - ம்)** கைக்கிளைக் கெய்துவதொரு வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) மேற்சொல்லப்பட்ட கைக்கிளையை நால்வகைத் தலைமக்களுமன்றி ஐந்து நிலத்தும் உறையும் கீழ் நிலைமக்களுள் தலைமக்களும் பெறுவர் என்றவாறு.

உம்மை இழிவு சிறப்பாதலாற் சிறுபான்மை நோக்கி நின்றது எனக்கொள்க. (31)

### இயற்கைப் புணர்ச்சி இலக்கணம்

32 தெய்வந் தன்னினெ ய்தவுங் கிழத்தியி
னெய்தவும் படூஉ மியற்கைப் புணர்ச்சி.

(இ - ம்) இயற்கைப் புணர்ச்சிக்கு இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) மேற்சொல்லப்பட்ட நால்வகைப் புணர்ச்சியுள்ளும் இயற்கைப் புணர்ச்சியாவது தெய்வத்தாற் பெறவும் படும்; தலைமகளாற் பெறவும்படும் என்றவாறு.

படுமென்றதனை இரண்டிடத்துங் கூட்டிக்கொள்க. (32)

### இயற்கைப் புணர்ச்சியின் சிறப்பு விதி

33 இயற்கைப் புணர்ச்சி தெய்வத்தி னெய்துழி
முயற்சியின்றி முடிவ தாகும்.

(இ- ம்) இயற்கைப் புணர்ச்சிக்கு எய்தியதன்மேற் சிறப்பு விதி உணர்த்துல் நுதலிற்று.

(இ - ள்) அவ்வியற்கைப் புணர்ச்சி தெய்வத்தாற் பெறுங் காலத்து முயற்சியின்றித் தானே முடிவதாம் என்றவாறு.

எனவே, அப்புணர்ச்சி தலைமகளாற் பெறுங்காலத்து முயற்சி யானே முடிவதாகும் என்பதாயிற்று. முயற்சியின்றி முடிவதற்கு விதி, '' சொல்லிய நுகர்ச்சி வல்லே பெற்றுழி '' (தொல், பொருள் களா. நூ 11) என்பதாம். (33)

களவிற் புணர்ச்சி நிகழும் திறம்

34 உள்ளப் புணர்ச்சியு மெய்யுறு புணர்ச்சியுங்
கள்ளப் புணர்ச்சியுட் காதலர்க்குரிய.

(இ - ம்) எய்தாதது எய்துவித்தல் நுதலிற்று.

**(இ - ள்)** உள்ளத்தாற் புண நம் புணர்ச்சியும், மெய்யுற்றுப் புணரும் புணர்ச்சியு மென்னும் இரண்டுந் தலைமகற்குந் தலைமகட் கும் உரியவாங் களவுப் புணர்ச்சிக்கண் என்றவாறு. கள்ளமென்பது களவு. (34)

உள்ளப்புணர்ச்சி நிகழுங் காலம்

35 பொருவிறந் தோற்குப் பெருமையு முரனும்
நண்ணுதற் கச்சமும் நாணும் மடனும்
மன்னிய குணங்க ளாதலின் முன்னம்
உள்ளப் புணர்ச்சி யுரிய தாகும்.

(இ - ம்) உள்ளப் புணர்ச்சி நிகழுமிடம் உணர்த்துதல் நுத லிற்று.

(இ - ள்) பெருமையும், உரனும் தலைமகற்கு நிலைபெற்ற குணமாதலானும்; அச்சமும், நாணும், மடனும் தலைமகட்கு நிலை பெற்ற குணமாதலானும் மேற்சொல்லப்பட்ட இரண்டு புணர்ச்சி யுள்ளும் உள்ளப்புணர்ச்சி முன்னிகழ்தற்குரித்தாம் என்றவாறு.

உரனெனினும் அறிவெனினும் ஒக்கும். பெருமையென்பது பழியும் பாவமுமஞ்சுதல். அறிவென்பது தக்கதறிதல். அச்சமென்பது காணாததொன்று கண்டாற் பெண்டிரிடத்து நிகழ்வது. நாணமென்பது பெண்டிர்க் கியல்பாகிய குணம். மடமென்பது பேதைமையெனக் கொள்க. அவை அவர்க்குக் குணமாகியவாறு என்னையெனின் ;

"பெருமையு முரனு மாடூஉ மேன" எனவும்,

"அச்சமு நாணு மடனுமுந் துறுத்த
நிச்சமும் பெண்பாற் குரிய வென்ப"

எனவும் சொன்னாராதலின் எனக்கொள்க. (35)

மெய்யுறு புணர்ச்சி நிகழுங் காலம்

**36 காட்சி முதலாச் சாக்கா டீருக்**
**காட்டிய பத்துங் கைவரு மெனினே**
**மெய்யுறு புணர்ச்சி யெய்துதற் குரித்தே.**

**(இ - ம்)** மெய்யுறு புணர்ச்சி நிகழுமிடம் உணர்த்துதல் நுதலிற்று.

**(இ - ள்)** காட்சியும், வேட்கையும், ஒருதலையுள்ளுதலும் மெலிதலும், ஆக்கஞ் செப்புதலும் நாணுவரையிறத்தலும், நோக்குவ வெல்லா மவையே போறலும், மறத்தலும், மயக்கமும், சாக்காடும் என்னும் பத்தவத்தையும் ஒருங்கே நிகழுமாயிற் தலைமகற்கு மெய்யுறு புணர்ச்சி கூடுதற்குரித்தாம் என்றவாறு.

அவற்றுள், காட்சியாவது தலைமகளைத் தலைமகன் றனியிடத்துக் காண்டல். வேட்கையாவது இவளைப் பெறவேண்டும் என்னுமுள்ள நிகழ்ச்சி. ஒருதலையுள்ளுவதாவது, இடைவிடாது நினைத்தல். மெலிதலாவது, உடம்புவாடுதல். ஆக்கஞ் செப்பலாவது, தன்னெஞ்சின்கண் வருத்த மிகுகின்ற படியைப் பிறர்க் குரைத்தல். நாணுவரையிறத்தலாவது, நாணத்தின் எல்லையைக் கடத்தல். நோக்குவவெல்லாம் அவையே போறலாவது. காணுமவையெல்லாம் அவளுறுப்புகளே போலத்தோற்றுதல். மறத்தலாவது, அறிவு

திரிதல். மயக்கமாவது, மோகித்தல். சாக்காடாவது, இறந்து படுதல். இவற்றுட், சாக்காடொழிந்த வொன்பதும் மேலே காட்டுதும். அஃதேல் இவற்றுக் கிலக்கணம் யாண்டுப் பெறுது மெனின்.

'' ஒத்த கிழவனுங் கிழத்தியுங் காண்ப ''

(தொல். பொருள். கள. நூ 2)

எனவும்,

'' வேட்கை யொருதலை யுள்ளுதன் மெலிதல்
ஆக்கஞ் செப்பல் நாணுவரை யிறத்தல்
நோக்குவ வெல்லா மவையே போறன்
மறத்தன் மயக்கஞ் சாக்கா டென்றச்
சிறப்புடை மரபினவை களவென மொழிப

(தொல். பொருள். கள. நூ 9)

எனவும் வந்த சூத்திரங்களிற் பெறுதும் எனக்கொள்க. (36)

களவுப்புணர்ச்சி நிகழுமிடம்

37 பகற்குறி யிரவுக் குறியெனும் பான்மைய
புகற்சியி னமைந்தோர் புணர்ச்சிநிக ழிடனே.

(இ - ம்) குறியின் பாகுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) அன்பினல் அமைந்தோர் புணர்ச்சி நிகழிடம் பகற் குறியும், இரவுக் குறியுமென்னும் இரண்டு பகுதியினை உடையவாம் என்றவாறு. (37)

பகற்குறி, இரவுக்குறி

38 இல்வரை யிகந்தது பகற்குறி யிரவுக்குறி
இல்வரை இகவா யியல் பிற் ருகும்.

(இ - ம்) குறிகட்கு இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) பகற்குறி இல்லினெல்லையைக் கடந்ததாம்; இரவுக் குறி இல்லினெல்லையைக் கடவாததாம் என்றவாறு. (38)

களவிற் பிரிவு

39 ஒருவழித் தணத்தல் வரைவிடை வைத்துப்
பொருள்வயிற் பிரிதலென் றிருவகைத் தாகும்
நிறைதரு காதன் மறையினிற் பிரிவே.

(இ-ம்) களவின்கட்பிரியும் பிரிவுவரையறை உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஒருவழித் தணத்தலும், வரைவிடை வைத்துப் பொருள் வயிற் பிரிதலுமென இரண்டு பகுதியினை யுடைத்தாம் நிறைந்த காதலையுடைய களவின்கட் பிரியும் பிரிவு என்றவாறு.

அவற்றுள், ஒருவழித் தணத்தலாவது ஓரூரின் கண்ணும் ஒரு நாட்டின் கண்ணும் பிரிதல். வரைவிடை வைத்துப் பொருற்வயிற் பிரிதலாவது வரைவிடை வைத்துக் காடிடையிட்டும் நாடிடையிட்டுப் பொருள் வயிற்பிரிதல் எனக் கொள்க. (39)

ஒருவழித்தணத்தல்

40 அவற்றுள்,
ஒருவழித் தணத்தற்குப் பருவங் கூறார்.

(இ-ம்) ஒருவழித் தணர்த்தற்குரியதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட இரண்டினுள்ளும் ஒருவழித் தணத்தல் காடிடையிட்டுங் நாடிடையிட்டும் பிரியப்படாமையின் இதற்குப்பருவ வரையறை சொல்லார் சான்றோர் என்றவாறு. (40)

வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல்

41 வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவோர்
இருதுவின் கண்ணுடைத் தென்மனார் புலவர்

(இ - ம்) வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதற்கு இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

**(இ - ள்)** வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல் காடிடையிட்டும் நாடிடையிட்டும் பிரிதலின், அஃதிரண்டு திங்களின் இகவாமையை யுடைத்தென்று சொல்லுவராசிரியர் என்றவாறு. என்னை ?

> " களவினுட் டவிர்ச்சி வரைவி னீட்டந்
> திங்க ளிரண்டி னகமென மொழிப "
>
> (இறை. அகப். நூ. 32)

என்றாராகலின். (41)

வரைவு நிகழுங் காலம்

42 களவு வெளிப்படா முன்னும் பின்னும்
வினையு நெறித்தென விளம்பினர் வரைவே.

**(இ - ம்)** வரைவு நிகழுங்காலம் உணர்த்துதல் நுதலிற்று.

**(இ - ள்)** களவு வெளிப்படா முன்னும் களவு வெளிப்பட்ட பின்னும் வினையும் நெறியினையுடைத்தாம், வரைவென்று சொல்லுவர் புலவர் என்றவாறு.

களவு வெளிப்படா முன்னும் என்றதனாற் களவு வெளிப்பட்ட பின்னுமெனத் தந்துரைக்கப்பட்டது. இவ்வாறுரைத்தற்கு இலக்கணம் யாதோவெனின் ?

> " களவு வெளிப்படா முன்னுற வரைதல்
> களவு வெளிப்பட்ட பின்னுற வரைதலென்
> றுயிரண் டென்ப வரைதலாறே " (இறை. அகப், நூ. 74)

என்பதாம். (42)

களவு வெளிப்படுமுன் நிகழும் வரைவு

43 நான்கு வகைப் புணர்வினுந் தான்றெருண்டு வரைதலும்
பாங்கனிற் பாங்கியிற் றெருளுற்று வரைதலுங்
களவு வெளிப்படா முன்வரைதலாகும்.

**(இ - ம்)** களவு வெளிப்படா முன்னிகழும் வரைவுக்கிலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) மேற்சொல்லப்பட்ட இயற்கைப் புணர்ச்சி முதலாகிய நான்குவகைப் புணர்ச்சிக் கண்ணுந் தலைமகன்றானே தெருண்டு வரைதலும். பாங்கனாலாதல் பாங்கியாலாதல் தெருட்டப்பட்டு வரைதலுமாகிய அவை, களவு வெளிப்படாமுன் வரைவாம் என்றவாறு. (43)

களவு வெளிப்பட்டபின் நிகழும் வரைவு

44 உடன்போய் வரைதலு மீண்டுவரைதலும்
உடன்போக் கிடையீ டுற்று வரைதலுங்
களவு வெளிப்பட்டபின் வரைதலாகும்.

(இ - ம்) களவு வெளிப்பட்டபின் நிகழும் வரைவிற்கு இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) புணர்ந்துடன்போய்த் தலைமகன் தன்னூரின் கண்ணே வரைதலும், மீண்டுவந்து தம்மூரின் கண்ணே வரைதலும், உடன்போக்கிடையீடுபட்டுத் தலைமகன் தமரை வழிபட்டு வரைதலுமாகிய இவை, களவு வெளிப்பட்டபின் வரைதலாம் என்றவாறு. (44

உடன்போய் வரைதல்

45 அவற்றுள்,
உடன்போய் வரைதல் ஒருவகைத் தாகும்.

(இ - ம்) உடன்போய்வரைதல் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) மேற்சொல்லப்பட்ட மூன்றனுள், உடன்போய்த் தன்னூரின்கண்ணே வரைதலாகிய அஃது ஒருவகையினையுடைத் தாம் என்றவாறு. (45)

மீண்டுவரைதல்

46 அவன்மனை வரைதலுந் தன்மனை வரைதலு
மெனமீண்டு வரைத லிருவகைத் தாகும்

(இ - ம்) மீண்டுவரைதலின் வகை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) தலைமகள் மனையின்கண்ணே வரைதலும் தலைமகன் மனையின்கண்ணே வரைதலும் என இரண்டு வகையினை யுடைத் தாம் உடன்போய் மீண்டு தம்மூரின் கண்ணே வரைதல் என்றவாறு. (46)

அறத்தொடுநிலை நிகழுமிடம்

**47 ஆற்று றஞ்சினு மவன்வரைவு மறுப்பினும்**
**வேற்றுவரைவு நேரினுங் காப்புக்கை மிகினும்**
**ஆற்றுறத் தோன்றும் அறத்தொடு நிலையே.**

**(இ - ம்) அறத்தொடுநிலை நிகழுமிடம் உணர்த்துதல் நுதலிற்று.**

(இ - ள்) தலைமகன் வரும் வழியில் உண்டாகும் ஏதத்தினை யஞ்சியவிடத்தும், தமர் வரைவு எதிர்கொள்ளாத விடத்தும், பிறர் வரைவு நேருமிடத்தும். காவல் கைமிகுந்த விடத்தும், நெறிப்படப் புலப்படும் அறத்தொடுநிலை என்றவாறு. என்னை?

"காப்புக் கைமிக்குக் காமம் பெருகினும்
நொதுமலர் வரையும் பருவ மாயினும்
வரைவெதிர் கொள்ளாது தமரவண் மறுப்பினும்
அவனூ றஞ்சுங் கால மாயினும்
அந்நா லிடத்து மெய்ந்நா ணொரீஇ
யறத்தொடு நிற்றல் தோழிக்கும் உரித்தே"
(இறை. அகப். நூ 29) (47)

என்றாராகலின்.

அறத்தொடு நிற்றற் குரியாரும். அறத்தொடு நிற்கும் நெறியும்

**48 தலைவி பாங்கிக் கறத்தொடு நிற்கும்**
**பாங்கி செவிலிக் கறத்தொடு நிற்குஞ்**
**செவிலி நற்றாய்க் கறத்தொடு நிற்கும்**
**நற்றாய் தந்தை தன்னையர்க் கறத்தொடு**
**நிற்கு மென்ப நெறியுணர்ந்தோரே.**

(இ- ம்) அறத்தொடு நிற்றற்கு உரியாரை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) தலைவி முதலாய நால்வரும் இவ்வாறு அறத்தொடு நிற்றற்கு உரியர் என்று சொல்வர் அகப்பொருளிலக்கணம் அறிந்தோர் என்றவாறு. (48)

தலைமகள் அறத்தொடு நிற்குமிடம்

49 ஒருபுணர் வொழிந்தவற் றெருவழித் தணப்பவும்
வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரியவும்
இறைவனைச் செவிலி குறிவயிற் காணவும்
மனைவயிற் செறிப்பவும் வருத்தங் கூறின்
வினவியக் கண்ணும் வினவாக் கண்ணும்
அனநடைக் கிழத்தி அறத்தொடு நிற்கும்.

(இ - ம்) தலைமகள் அறத்தொடு நிற்குமிடம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) பாங்கியிற்கூட்டம் என்னு மொன்று நீங்கிய மூன்று புணர்ச்சிக்கண்ணும், தலைமகள் ஒருவழித் தணத்தலானும் வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதலானும், செவிலி தலைமகனைக் குறிவயிற் காண்டலானும், இற்செறித்தலானும் தனக்கு வருத்தம் மிகுமாயின் தன்னை அவள் வினவிய விடத்தும், வினவாத விடத்தும் தலைமகள் பாங்கிக்கு அறத்தொடு நிற்கும் என்றவாறு.

பாங்கிக்கு என்பது அதிகாரத்தான் வந்தது. இதற்கு விதி யாதோவெனின் ?

"வரைவிடை வைத்த காலத்து வருந்தினும்
வரையா நாளிடை வந்தோன் முட்டினும்
உரையெனத் தோழிக் குரைத்தற் கண்ணும்
தானே கூறுங் காலமு முளவே"

என்பதாம் (49)

### பாங்கி அறத்தொடு நிற்கும் திறம்

50 முன்னிலைப் புறமொழி முன்னிலை மொழிகளிற்
சின்மொழிப் பாங்கி செவிலிக் குணர்த்தும்.

(இ - ம்) பாங்கி அறத்தொடு நிற்கும் திறம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) முன்னிலைப் புறமொழியும். முன்னிலைமொழியுமாகிய இரண்டினுலும் பாங்கி செவிலிக்கு அறத்தொடு நிற்கும் என்றவாறு. (50)

### செவிலி அறத்தொடு நிற்றல்

51 செவிலிநற் ருய்க்குக் கவலையின் றுணர்த்தும்.

(இ - ம்) செவிலி அறத்தொடு நிற்குந் திறம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) செவிலி அறத்தொடு நிற்குங் காலத்து நற்ருய்க்கு விளங்க அறிவிக்கும் என்றவாறு. (51)

### நற்ருய் அறத்தொடு நிற்குந் திறம்

52 நற்ரு யறத்தொடு நிற்குங் காலைக்
குரவனுந் தன்னையுங் குறிப்பி னுணர்ப.

(இ - ம்) நற்ருய் அறத்தொடு நிற்குந் திறம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) நற்ருய் அறத்தொடு நிற்குங் காலத்துச் சொல்லாடப் பெருள் ஆதலின், தலைமகள் தந்தையும், தன்னையும் அவள் குறிப்பினுனே அறிவர் என்றவாறு. என்னை ?

" தந்தையுந் தன்னையும் முன்னத்தின் உணர்ப "
(தொல். பொருள். களு. நூ 46)

என்ருராகலின். (52)

அறத்தொடு நிற்பார்க்கு வினா நிகழுமிடம்

53 பாங்கி தலைவியை வினவுஞ் செவிலி
பாங்கியை வினவும் பாங்கி தன்னையும்
நற்றாய் தானும் வினவுஞ் செவிலியிற்
பொற்றொடிக் கிழத்தியை யுற்று நோக்கின்.

(இ - ம்) அறத்தொடு நிற்பார்க்கு வினா *நிகழுமிடம்* உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) தலைமகள் மாட்டு வேறுபாடு கண்டுழிப் பாங்கி முதலாகிய மூவரும் இவ்வாறு வினவப் பெறுவர் என்றவாறு.

'பாங்கி தன்னையும்' என்ற உம்மை 'நற்றாய் செவிலியை வினவுதலன்றி' என்னும் பொருள்பட நின்றது. 'நற்றாய்தானும்' என்னும் உம்மை 'பாங்கியைச் செவிலி வினவு தலன்றி' என்னும் பொருள்பட நின்றது. இவ்வாறு நற்றாய் வினவுவது செவிலியைப் போலத் தலைமகளை உற்றுப் பார்த்தவிடத்து எனக் கொள்க. (53)

உடன் போக்கில் அறத்தொடு நிற்றற்குரியார்

54 ஆங்குடன் போயுழி யறத்தொடு நிற்ப
பாங்கியுஞ் செவிலியும் பயந்த தாயும்.

(இ - ம்) புணர்ந்துடன் போயினவிடத்து அறத்தொடு *நிற்றற்கு* உரியாரை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) தலைமகளும், தலைமகனும் புணர்ந்துடன் போய காலத்து அறத்தொடு *நிற்பார்* தோழியும், செவிலியும், நற்றாயும் என்றவாறு.

ஆங்கென்பது அசை. (54)

கற்பின் வகை

55 களவின் வழிவந்த கற்பும் பொற்பமை
களவின் வழிவாராக் கற்புமென்றாங்கு
முற்படக் கிளந்த கற்பிரு வகைத்தே.

**(இ - ம்)** கற்பின் பாகுபாடு உணர்த்துதல் நுதலிற்று,

**(இ - ள்)** மேற்சொல்லப்பட்ட கற்பு, களவிற் புணர்ச்சி வழியான் வந்த கற்பும், களவிற் புணர்ச்சிவழியின் வாராக்கற்பும் என இரண்டு பகுதியினை உடைத்தாம் என்றவாறு..

அஃதேற் களவின்வழி வந்த கற்பினை முற்கூறியது என்னை யெனின்?

> ''முற்படப் புணராத சொல்லின் மையிற்
> கற்பெனப் படுவது களவின் வழித்தே''
> (இறை. அகப். நூ. 15)

என்றூராகலின்; அதன் சிறப்பு நோக்கி எனக் கொள்க. (55)

கற்பிற் புணர்ச்சி

**56 குரவரிற் புணர்ச்சி வாயிலிற் கூட்டமென்**
**றிருவகைத் தாகுங் கற்பிற் புணர்ச்சி.**

**(இ - ம்)** கற்பென்னுங் கைகோளிற் புணர்ச்சி வரையறை உணர்த்துதல் நுதலிற்று.

**(இ - ள்)** கற்பென்னுங் கைகோளிற் புணர்ச்சி குரவராற் புணரும் புணர்ச்சியும், வாயில்களாற் புணரும் புணர்ச்சியும் என இரண்டு பகுதியினை உடைத்து என்றவாறு.

இவற்றுள், குரவராற் புணரும்புணர்ச்சியாவது, வதுவை கூட்டிப் புணரும் புணர்ச்சி, வாயில்களாற் புணரும் புணர்ச்சியாவது, புலவிதீர்த்துப் புணரும் புணர்ச்சி எனக் கொள்க. (56)

களவின் வழிவந்த கற்பிற் புணர்ச்சியின்
சிறப்பிலக்கணம்

**57 அவற்றுள்,**

**களவின் வழிவந்த கற்பிற் புணர்ச்சி**
**கிளைஞரின் எய்தாக் கேண்மையு முடைத்தே**
**உடன்போய் வரைதலு முண்மையான.**

(இ - ம்) களவின்வழி வந்த கற்பிற் புணர்ச்சிக்கு எய்தியதொரு வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) மேற்சொல்லப்பட்ட 'இருவகைய கற்பி' னுள்ளுங் களவின்வழி வந்த கற்பினுட் புணரும் புணர்ச்சி, தலைமகள் சுற்றத்தாராற் பெறப்படாத கோட்பாட்டினையும் உடைத்தாம். புணர்ந்துடன்போய்த் தலைமகன் தன்னூரின் கண்ணே வரைந்து கோடலும் உண்டாதலான் என்றவாறு. என்னை?

"கொடுப்போ ரின்றியுங் கரண முண்டே
புணர்ந்துடன் போகிய காலை யான"

(தொல், பொருள். கற். நூ. 2)

என்றுராகலின். (57)

கற்பில் தலைவன்பால் நிகழும் நிகழ்ச்சி

58 மறையிற் புணர்ச்சியு மன்றற் புணர்ச்சியும்
இறைவற் கெய்தலுண் டிருவகைக் கற்பினும்.

(இ - ம்) தலைமகற்குக் கற்புக் காலத்து நிகழும் ஒழுக்க வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) மேற்சொல்லப்பட்ட இருவகைக் கற்பின் கண்ணுந் தலைமகற்குக் களவிற் புணர்ச்சியும் வதுவைப் புணர்ச்சியும் பொருந்துதலுமுண்டு என்றவாறு. (58)

நிகழ்ச்சிக்குரிய மகளிர்

59 காதற் பரத்தையர் காமக் கிழத்தியர்
பின்முறை வதுவைப் பெருங்குலக் கிழத்தியென்
றன்னவ ருரியர வையிரண்டிற்கும்.

(இ - ம்) அவ்வொழுக்கம் இரண்டிற்குமுரிய மகளிரை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) காதற்பரத்தையர் முதலாகிய மூவகையோருந் தலைமகன் அவ்வாறொழுகும் ஒழுக்கம் இரண்டற்குமுரியர் என்றவாறு. (59)

களவிற்புணர்ச்சிக் குரிய மகளிர்

60 அவருட்,
காதற் பரத்தையர் களவிற் குரியர்.

(இ - ம்) களவிற்குரிய மகளிரை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) மேற்சொல்லப்பட்ட மூவகையோருள்ளுங் காதற் பரத்தையர் களவொழுக்கத்திற்குரியர் என்றவாறு. (60)

மன்றற்புணர்ச்சிக்குரிய மகளிர்

61 ஒழிந்தோர் மன்றற் புணர்ச்சிக் குரியர்.

(இ - ம்) வதுவைப்புணர்ச்சிக்குரிய மகளிரை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) காமக்கிழத்தியும், பின்முறை வதுவைப் பெருங்குலக் கிழத்தியுமாகிய இருதிறத்தோரும் வதுவைப் புணர்ச்சிக்குரிய மகளிர் என்றவாறு. (61)

கற்பிற் பிரிவு

62 பரத்தையிற் பிரித லோதற்குப் படர்தல்
அருட்டகு காவலொடு தூதிற் ககறல்
உதவிக் கேகல் நிதியிற் கிகத்தலென்
றுரைபெறு கற்பிற் பிரிவறு வகைத்தே.

(இ - ம்) கற்பிற் பிரியும் பிரிவின் வரையறை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) பரத்தையிற் பிரிதல் முதலாக நிதியிற்கிகத்தல் ஈறாக ஆறு வகையினை யுடைத்தாங் கற்பின்கட் பிரியும் பிரிவு என்றவாறு. என்னை ?

'' ஓதல் காவல் பகைதணி வினையே
வேந்தர்க் குற்றுழி பொருட்பிணி பரத்தையென்
றுங்கவ் வாறே யவ்வயிற் பிரிவே ''

(இறை. அகப். நூ 35)

என்றுராகலின். அஃது ஈண்டுப் பரத்தையிற் பிரிவு முற்கூறியது என்னையோ? எனின், அது தொல்காப்பியனாரது துணிபு எனக் கொள்க. (62)

பரத்தையிற் பிரிவின் வகை

63 அயன்மனைப் பிரிவயற் சேரியி னகற்சி
புறநகர்ப் போக்கிவை புரவலற் குரிய
பரத்தையிற் பிரியும் பருவத்தான.

(இ - ம்) தலைமகற்குரிய சில தொழில் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) அயன் மனைப்பிரிவு முதலாகிய மூன்று பிரிவும் தலைமகற்குரியனவாம் பரத்தையிற் பிரியுங்காலத்து என்றவாறு. (63)

அயன்மனைப் பிரிவு

64 கெழீஇய காமக் கிழத்தியர் பொருட்டாத்
தழீஇய அயல்மனைத் தலைவன் பிரியும்.

(இ - ம்) நிறுத்தமுறையானே அயல்மனைப்பிரிவிக்கு ஏது உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) பொருந்திய காமக்கிழத்தியர் காரணமாகத் தலைமகன் தொடர்ந்து அயல்மனைக் கண்ணே பிரியும் என்றவாறு. (64)

அயற்சேரிப் பிரிவு

65 பின்னர் வரைந்த பெதும்பையும் பரத்தையும்
இன்னியல் விழவு மேதுவாக
அவனயற் சேரியி னகலு மென்ப.

(இ - ம்) அயற்சேரியிற் பிரிவுக்கு ஏது உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) இரண்டாவது வரைந்து கொள்ளப்பட்ட பெதும்பைப்பருவக்கிழத்தியும், காதற்பரத்தையும், இனிய

தன்மையுடைய விழவும் காரணமாகத் தலைமகன் அயற்சேரியின் கண்ணே பிரியும் என்றவாறு. (65)

### புறநகர்ப் போக்கு

66 விருந்தியற் பரத்தையைப் பெருந்தேர்மிசைக்கொண்
டிளமரக் காவின் விளையாடற்கும்
புனலாடற்கும் புறநகர்ப் போகும்.

(இ - ம்) புறநகர்ப்போக்குக்கேதுவுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) இளமரக்காவின்கண்ணே விளையாடுதல் காரணமாகவும், புனலாடுதல் காரணமாகவும், தலைமகன் புதியளாகிய பரத்தையைத் தேர்மேல் ஏற்றிக்கொண்டு நகர்ப்புறத்திலே போவான் என்றவாறு. நகர்ப்புறம் என மாறுக. (66)

### தலைவிக்கு ஊடல் நிகழுமிடம்

67 ஊடலவ்வழிக் கூடுங் கிழத்திக்கு.

(இ - ம்) தலைமகளுக்கு ஊடல் நிகழுமிடம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ம்) அம்மூன்று பிரிவின்கண்ணுந் தலைமகட்கு ஊடல் பொருந்தும் என்றவாறு. (67)

### ஊடல் தணிக்கும் வாயில்கள்

68 கொளைவல் பாணன் பாடினி கூத்தர்
இளையர் கண்டோர் இருவகைப் பாங்கர்
பாகன் பாங்கி செவிலி யறிவர்
காமக் கிழத்தி காதற் புதல்வன்
விருந்தாற் றுமை யென்றிவை ஊடல்
மருந்தாய்த் தீர்க்கும் வாயில்கள் ஆகும்.

(இ - ம்) மேற்சொல்லப்பட்ட வாயில்களாவன இவை யென்பது உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) பாணன் முதலாக ஆற்றுமை ஈறுகச் சொல்லப் பட்ட இவையனைத்துந் தலைமகள் ஊடலைத் தீர்க்கும் வாயில்களாம் என்றவாறு.

இதனுள் உயர்திணையும் அஃறிணையும் விரவி யெண்ணி இவையென அஃறிணையால் தொகை கொடுத்தது என்னை ?

"பலவயி னானு மெண்ணுத்திணை விரவுப்பெயர்
அஃறிணை முடிபின செய்யு ளுள்ளே"

(தொல். சொல். கிளவி. நூ. 51)

என்றுராகலின். (68)

ஓதற்பிரிவு: வேதம் ஓதற்குரியர்

**69 ஓதற் றொழிலுரித் துயர்ந்தோர் மூவர்க்கும்.**

(இ - ம்) ஓதற்றொழிற்கு உரியதொரு சிறப்பு உணர்த்து தல் நுதலிற்று.

(இ - ள்) ஓதலென்னுந் தொழில் அந்தணர், அரசர், வைசியர் என்கிற மூவர்க்குமுரித்து என்றவாறு. (69)

ஏனைக் கல்விக்குரியர்

**70 அல்லாக் கல்வி எல்லார்க்கு முரித்தே.**

(இ - ம்) ஒழிந்த கல்வியது தன்மை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) வேதமல்லாத கல்வி நால்வர்க்கும் உரித்து என்றவாறு. (70)

படைக்கலம் முதலியன பயிலுதற்குரியர்

**71 படைக்கலம் பயிறலும் பகடுபிற ஊர்தலும்
உடைத்தொழி லவர்க்கென வுரைத்திசி னோரே.**

(இ - ம்) நாவினாற் கற்குங் கல்வி அல்லாத தொழிலுரிமை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) படைக்லகங்களைக் கற்றலும், யானையும் தேரும் குதிரையும் முதலாயின ஊர்தலும் மூவர்க்கும் உடைமையாகிய தொழிலெனச் சொன்னார் புலவர் என்றவாறு.

'பிற' என்றதனால் தேரும் குதிரையும் முதலாயினவுங் கொள்ளப்பட்டன. 'பகடுபிற' என்றது உம்மைத் தொகை. (71)

காவற்பிரிவின் வகை

72 அறப்புறங் காவல் நாடுகா வலெனச்
சிறப்புறு காவற் றிறமிகு வகைத்தே.

(இ - ம்) காவற்றொழிலின் பாகுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) அறப்புறங்காவலும், நாடுகாவலும் என இருகூற்றதாம் மேம்பாடுற்ற காவற்றொழிலின் பாகுபாடு என்றவாறு. (72)

அறப்புறங் காவற்குரியர்

73 அவற்றுள்,
அறப்புறங் காவலனைவர்க்கு முரித்தே.

(இ - ம்) அறப்புறம் காவற்றன்மை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) மேற்சொல்லிய இரண்டனுள்ளும் அறப்புறங்காவல் என்பது நால்வர்க்குமுரித்து என்றவாறு. (73)

நாடுகாவற்குரியர்

74 மற்றைக் காவல் கொற்றவர்க் குரித்தே.

(இ - ம்) நாடுகாவற்றன்மை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) நாடுகாவலென்பது அரசர்க்குரித்து என்றவாறு (74)

தூதிற்பிரிவிக்குரியர்

75 வேத மாந்தர் வேந்தரென் றிருவர்க்கும்
தூது போதற் றொழிலுரித் தாகும்.

(இ - ம்) தூதுபோதற்றொழிலின் தன்மை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) பார்ப்பாரும் வேந்தரும் என்னும் இருவர்க்கும் உரித்தாந் தூதுபோதற்றொழில் என்றவாறு.

பகைதணிவினை எனினும், தூதுவினை எனினுமொக்கும்.

" வயலைக் கொடியின் வாடிய மருங்குல்
உயவ லூர்திப் பயலைப் பார்ப்பான்
எல்லி வந்து நில்லாது புக்குச்
சொல்லிய சொல்லோ சிலவே யதற்கே
ஏணியுஞ் சீப்பு மாற்றி
மாண்வினை யானையு மணிகளைந் தனவே " (புறம். 305)

என்பதனாலும்,

" மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சங்
கடந்தானை நூற்றுவர்பா'லாற்றிசையும் போற்றப்
படர்ந்தா ரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை யேத்தாத நாவென்ன நாவே
நாரா யணாவென்னா நாவென்ன நாவே "

(சிலம்பு. படர்க்கைப் பரவல் 3)

என்பதனாலும் அவ்விருவர்க்குந் தூது போதற்றொழில் உரித்தாயினவாறு காண்க. (75)

நாடுகாவற்பிரிவு, தூதிற்புரிவு சிறப்புவிதி

76 சிறப்புப் பெயர்பெறிற் செப்பிய இரண்டும்
உறற்குரி மரபின ஒழிந்தோ ரிருவர்க்கும்.

(இ - ம்) நாடுகாவற்றொழிற்கும், தூதுபோதற் றொழிற்கும் உரியதொரு வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) அரசனாற் சிறப்புப்பெயர் பெற்றாராயின், வைசியரும், சூத்திரரும் என்னுமிருவர்க்கும் மேற்கூறிய நாடுகாவற்றொழிலும் தூதுபோதற்றொழிலும் ஆகிய இரண்டும் பொருந்துதற்குரிய மரபினவாம் என்றவாறு. உரிய மரபென்பது விகாரம். (76)

துணைவயிற் பிரிவுக்குரியர்

77 உதவி யந்தண ரொழிந்தோர்க் குரித்தே.

(இ - ம்) உதவியிற்ருெழிலுரிமை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) வேந்தற்குற்றுழியாகிய தொழில் அந்தணரொழிந்த மூவர்க்கும் உரித்தாம் என்றவாறு. (77)

நான்கு வருணத்தார்க்கு முரிய பிரிவு

78 பரத்தையிற் பிரிவும் பொருள்வயிற் பிரிவும்
உரைத்த நால்வர்க்கு முரிய வாகும்.

(இ - ம்) நால்வர்க்கும் பொதுவாகிய தொழில் இவை யென்பது உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) பரத்தையிற் பிரிவும், பொருள்வயிற் பிரிவுமாகிய இரண்டும் மேற்சொல்லப்பட்ட நால்வர்க்கும் உரியவாம் என்றவாறு. (78)

நிலமக்களுள் தலைமக்களுக்குரிய பிரிவு

79 இழிந்தோர் தமக்கும் இவற்றுண்மேம் பட்டவை
ஒழிந்தன வாமென மொழிந்தனர் புலவர்.

(இ - ம்) நிலமக்களுள், தலைமக்கட்குரிய தொழில் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) இவ்வறுவகைத் தொழிலுள்ளும் மேம்பட்டனவாகிய ஓதலும், நாடுகாவலும், தூதுபோதலும் ஆகிய மூன்று மொழித்து அல்லாதனவெல்லாம் இழிந்தோராகிய நிலமக்களுள் தலைமக்கட்கும் உரியவாமெனச் சொன்னூர் அறிவோர் என்றவாறு. (79)

தலைமகன் பிரிவு

80 கல்வி முதலா எல்லா வினைக்குஞ்
சொல்லி யகறலுஞ் சொல்லா தகறலும்
உரியன் கிழவோன் பெருமனைக் கிழத்திக்கு.

(இ - ம்) பிரியுந் தலைமகற்குரியதோர் இலக்கணம் உணர்த்து தல் நுதலிற்று.

(இ - ள்) கல்வி முதலாகிய எல்லா வினைக்குந் தலைமகட்குச் சொல்லிப் பிரிதலும், சொல்லாது பிரிதலும் உரியன் தலைமகன் என்றவாறு. (80)

இதுவுமது

81 சொல்லா தகலினுஞ் சொல்லும் பாங்கிக்கு.
இதுவுமது.

(இ - ம்) தலைமகன் தலைமகட்குச் சொல்லாது பிரியும், ஆயினுந் தோழிக்குச் சொல்லியே பிரியும் என்றவாறு. (81)

இதுவுமது

82 குறிப்பினு ணர்த்தும் பெறற்கருங் கிழத்திக்கு.
இதுவுமது.

(இ - ள்) தலைவன் பிரிவுரையாது செல்லுமாயினும் குறிப்பின் உணர்த்துந் தலைவிக்கு என்றவாறு. (82)

தலைமக்கள் நாடிடையிட்டுச் செல்லுந்திறன்

83 காலிற் சேறலுங் கலத்திற் சேறலு
மூர்தியிற் சேறலும் நீதி யாகும்.

(இ - ம்) பிரியுங் காலத்து நால்வர்க்கும் பொதுவாகியது உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) காலிற் சேறல் முதலாகிய மூன்றும் எல்லாப்பிரிவின் கண்ணும் எல்லார்க்குமியல்பாம் என்றவாறு. (83)

செல்லுதலில் அந்தணர்க்குரிய சிறப்புவிதி

84 புலத்திற் சிறந்த புரிநூன் முதல்வர்க்குக்
கலத்திற் சேறல் கடனன் றென்ப.

(இ - ம்) அந்தணர்க்கு ஆகாத தொழில் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) காலிற்சேறல் முதலாகிய மூன்றுள்ளும் கலத்திற் சேறலாகிய தொழில் கல்வியினுன் மிக்க அந்தணர்க்கு முறைமை அன்றென்று சொல்லுவர் என்றவாறு. (84)

அரசர் முதலிய தலைமக்கள் குலமாதரொடு செல்லற்கு ஆகாதவை

85 வலனுயர் சிறப்பின் மற்றை மூவர்க்குங்
குலமட மாதரொடு கலமிசைச் சேறலும்
பாசறைச் சேறலும் பழுதென மொழிப

**(இ - ம்)** அரசர் முதலாகிய மூவர்க்கும் ஆகாத தொழில் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) குலமடமாதரொடு கலமிசைச்சேறலும், குலமட மாதரொடு பாசறைச்சேறலுமாகிய இரண்டும் வெற்றியுயர்ந்த சிறப்பினையுடைய வேந்தர் முதலாகிய மூவர்க்குங் குற்றம் என்று சொல்லுவர் கற்றுவல்லோர் என்றவாறு.

குலமடமாதர் என்பதனை ஈரிடத்துங் கூட்டிக்கொள்க.

> '' மணன்மலி பூங்கானல் வருகலன்க ணோக்கிக்
> கணவன்வரக் கல்லுருவ நீத்தாள் ''

என்பதனுற் குலமடமாதரொடு கலமிசைச்சேரலாகாமை அறிக.

> '' பனியிருங் கங்குலுந் தமிய ணீந்தித்
> தம்மூ ரோளே நன்னுதல் யாமே
> ........இரவுத்துயின் மடிந்த தானை
> உரவுச்சின வேந்தன் பாசறை யோமே ''

என்பதனுற் குலமாதரொடு பாசறைக்கட் செல்லாமை அறிக. 'குலமாதரொடு செல்லார்' எனவே, பரத்தையரோடு செல்வ ரென்பது பெற்றும்.

" துயிலின்றி யானீந்தத் தொழுவையம் புனலாடி
மயிலியலார் மருவுண்டு மறந்தமைகு வான்மன்னோ
வெயிலொளி யறியாத விரிமலர்த் தண்காவிற்
குயிலாலும் பொழுதெனக் கூறுந ருளராயின் "

என்பதனாற் பரத்தையரோடு பாசறைக்கட் சென்றவாறறிக. ஏனையது வந்தவழிக் கண்டுகொள்க. (85)

தலைமகன் செலவழுங்கல்

**86 ஓதன் முதலா வோதியஐந்தினும்**
**பிரிவோன ழுங்கற்குமுரிய னாகும்.**

(இ-ம்) தலைமகற்குப் பிரிவிடத்து வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

**(இ-ள்)** ஓதல் முதலாகச் சொல்லப்பட்ட ஐந்தன் கண்ணும் பிரியுந் தலைமகன் போதற்கேயன்றிப் போகாமைக்கும் உரியனும் என்றவாறு. (86)

செலவழுங்கற்குரியயிடம்

87 இல்லத் தழுங்கலு மிடைச்சுரத் தழுங்கலு
மொல்லு மவற்கென வுரைத்திசி னோரே.

இதுவுமது.

**(இ-ள்)** பிரியக்கருதிய தலைமகன் அவ்வில்லின்கண்ணே செலவழுங்குதலும், இடைச்சுரத்தின்கண்ணே செலவழுங்குதலும் பொருந்துமெனக் கூறினர் புலவர் என்றவாறு.

இவற்றுக்கிலக்கியம் :

" புணரிற் புணராது பொருளே பொருள்வயிற்
பிரியிற் புணராது புணர்வே யாயிடைச்
சேரினுஞ் செல்லா யாயினும் நல்லதற்
குரியை வாழியென் நெஞ்சே பொருளே
வாடாப் பூவின் பொய்கை நாப்பண்
ஓடுமீன் வழியிற் கெடுவ யானே

விழுநீர் வியலகந் தூணி யாக
வெழுமா ணளக்கும் விழுநிதி பெறினுங்
கனங்குழைக் கமர்த்த சேயரி மழைக்கண்
அமர்ந்தினிது நோக்கமொடு செகுத்தன
னெனைய தாகுக வாழிய பொருளே '' நற்றிணை (16)

எனவும்,

' புறந்தாழ் பிருண்ட கூந்தற் போதி
னிறங்கிளர் நிரையிதழ்ப் பொலிந்த வுண்க
ணுள்ளம் பிணிக்கொண் டோள்வயி னெஞ்சே
செல்ல நீர்கஞ் செல்வா மென்னுஞ்
செய்வினை முடியா தெவ்வஞ் செய்த
லெய்யா மையோ டிழிவுதலைத் தருமென
உறுதி தூக்கத் தூங்கி யறிவே
சிறிதுநனி விரைய லென்னு மாயிடை
யொளிறேந்து மருப்பிற் களிறுமாறு பற்றிய
தேய்புரிப் பழங்கயிறு போல
வீவது கொல்லென் வருந்திய வுடம்பே ''
(நற்றிணை - 284)

எனவும் வரும்.

செலவழுங்கற்குக் காரணம்

88 தலைவி தன்னையுந் தன்மனந் தன்னையு
மலமர லொழித்தற் கழுங்குவ தல்லது
செல்வத் தோன்றல் செல்லா னல்லன்.

(இ - ம்) எய்தியது விலக்குவதோர் இலக்கணமும் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) இல்லகத்துத் தலைமகளையும் தன்னெஞ்சினையும் தேற்றுதல் காரணமாகவும், இடைச்சுரத்துத் தன்னெஞ்சினைத் தேற்றுதல் காரணமாகவும் அழுங்குதல் மாத்திரமல்லது தலைமகன் போகானல்லன் என்றவாறு.

இல்லகத்துத் தலைமகளைத் தேற்றுதற்குச் செய்யுள்:

" பொன்னும் மணியும் போலும் யாழநின்
நன்னர் மேனியு நாறிருங் கதுப்பும்
போதும் பணையும் போலும் யாழநின்
மாத ருண்கணும் வனப்பின் றோளு
மிவைகாண்டோறு மகமலிந் தியானு
மறநிலை பெற்றோ ரனையே னதன்றலைப்
பொலந்தொடிப் புதல்வனும் பொய்தல் கற்றனன்
வினையும் வேறுபுலத் திலனே நினையின்
யாதனிற் பிரிவா மடந்தை
காத லுனுங் கடலினும் பெரிதே " (நற்றிணை - 166)

என வரும். பிறவுமன்ன. (88)

ஓதற்பிரிவு காலவரையறை

89 அவற்றுள்,

ஓதற் பிரிவுடைத் தொருமூன் றியாண்டே.

(இ-ம்) ஓதற்பிரிவுக்கு யாண்டு வரையறை உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட பிரிவுகளுள் ஓதற்குப் பிரியும் பிரிவு மூன்றியாண்டெல்லையினை உடையது என்றவாறு. என்னை?

" வேண்டிய கல்வி யாண்டுமூன் றிறவாது "
(தொல். பொருள். கற். நூ. 47)

என்றாராகலின். (89)

தூதிற் பிரிவு, துணைவயிற் பிரிவு, பொருள்வயிற் பிரிவு காலவரையறை

90 தூதிற் பிரிவுந் துணைவயிற் பிரிவும்
பொருள்வயிற் பிரிவு மோர்யாண் டுடைய.

(இ-ம்) தூதிற்பிரிவு முதலாய மூன்று பிரிவிற்கும் யாண்டு வரையறை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) தூது காரணமாகப் பிரியும் பிரிவும், உதவி காரண மாகப் பிரியும் பிரிவும், பொருள் காரணமாகப் பிரியும் பிரிவும் ஒரு யாண்டெல்லையினை உடைய என்றவாறு. என்னை ?

" வேந்துறு தொழிலே யாண்டின தகமே "
(தொல். பொருள். கற். நூ. 47)

எனவும்,

" பிரிவின் நீட்டம் நிலம்பெயர்ந் துறைவோர்க்
குரிய தன்றே யாண்டுவரை யறுத்தல் "
(இறை. அகப். நூ. 41)

எனவும்.

" தூதும் பொருளும் ஓதிய வாகும் "

எனவுஞ் சொன்னாராகலின். அஃதேற் பரத்தையிற் பிரிவுக்குங் காவற்பிரிவுக்கும் யாண்டு வரையருதது என்னையோ? எனின், அவை காடிடையிட்டும் நாடிடையிட்டும் பிரியப்படாமையின் ஈண்டு வரையறுத்திலர் எனக் கொள்க. (90)

பரத்தையிற் பிரிவு நிகழ்தற்காகாக் காலம்

91 பூத்த காலைப் புனையிழை மனைவியை
நீரா டியபின் னீராறு நாளுங்
கருவயிற் றுறூஉங் கால மாதலிற்
பிரியப் பெறூஅன் பரத்தையிற் பிரிவோன்.

(இ - ம்) பரத்தையிற் பிரிந்த தலைமகற்குரியதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று

(இ - ள்) நீராடியபின் பன்னிரண்டுநாளுங் கருப்படுங் கால மாதலாற் பரத்தையிற் பிரிந்த தலைமகன் அப் பன்னிரண்டுநாளுந் தலைமகளைப் பிரியப்பெறான் பூப்பு நிகழுங்காலத்து என்றவாறு. என்னை ?

" பூப்பின் புறப்பா டீரறு நாளும்
நீத்தகன் றுறையா ரென்மனார் புலவர்
பரத்தையிற் பிரிந்த காலை யான "
(தொல். பொருள். கற். நூ 46)

எனவும்,

"தீண்டாநாண் முந்நாளு நோக்கார்நீ ராடியபின்
ஈராறு நாளு மிகவற்க வென்பவே
பேரறி வாளர் துணிவு" (ஆசார. கோ. 42)

எனத் தொல்காப்பியனாரும், பெருவாயின் முள்ளியாரும் எடுத்தோதினாராகலின். (91)

ஓதற் பிரிவில் செய்தற்காகாதன

92 ஓதற் ககன்றோன் ஒழிந்திடை மீண்டு
போதற் கியையவும் புலம்பவும் பெறாஅன்.

(இ-ம்) ஓதற்குப் பிரிந்த தலைமகற்கு ஆகாதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஓதற்குப் பிரிந்த தலைமகன் அவ்வோதலையொழிந்து இடையிட்டு மீண்டு வருதற்குடம்படவும், அவ்விடத்துத் தலைமகளை நினைந்து புலம்பவும் பெறான் என்றவாறு. (92)

தூது, துணை சென்றாற் பற்றிய சிறப்புவிதி

93 தூதுந் துணைமையு மேது வாகச்
சென்றோ னவ்வினை நின்றுநீட் டித்துழிப்
புலந்து பாசறைப் புலம்பவும் பெறுமே.

(இ-ம்) தூதுந் துணைமையுங் காரணமாகப் பிரிந்த தலைமகற்கு எய்துவதொரு வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) தூது காரணமாகவும், உதவி காரணமாகவும் பிரிந்த தலைமகன், அத்தொழில்கள் பிரிவிற்குரியதொருயாண்டின் கண் முடியாது நீட்டித்த காலத்துப் பாசறைக்கண்ணேயிருந்து தலைமகளை நினைந்து வெறுத்துப் புலம்புதல் பெறும் என்றவாறு.

அஃதாயினவாறென்னை யெனின்,

"மூன்றன் பகுதியு மண்டிலத் தருமையுந்
தோன்றல் சான்ற மாற்றோர் மேன்மையும்
பாசறைப் புலம்பலும்"

என்னும் இலக்கணத்தான் ஆயிற்றெனக் கொள்க. (93)

### கற்பில் தலைமகளுக்குரிய ஒழுகலாறு

94 பூத்தமை சேடியிற் புரவலர் குணர்த்தலும்
நீத்தமை பொருது நின்றுகிழ வோனைப்
பழிக்குங் காமக் கிழத்தியைக் கழறலும்
கிழவோர் கழறலும் வழிமுறை மனைவியைக்
கொழுநனொடு வந்தெதிர் கோடலும் அவனொடு
பாங்கொடு பரத்தையைப் பழித்தலும் நீங்கிப்
புறநகர்க் கணவனொடு போகிச் செறிமலர்ச்
சோலையுங் காவும் மாலையங் கழனியும்
மாலைவெள் ளருவியும் மலையுங் கானமும்
கண்டுவிளை யாடலும் கடும்புனல் யாறும்
வண்டிமிர் கமல வாவியும் குளனும்
ஆடிவிளை யாடலுங் கூடுங்கிழத்திக்கு.

(இ - ம்) தலைமகட்குக் கற்புக்காலத்துரிய ஒழுகலாறெல்லாந் தொகுத்து உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) பூத்தமை சேடியிற் புரவலற்குணர்த்தல் முதலாகக் குளனாடல் ஈருகச் சொல்லப்பட்டனவெல்லாங் கற்புக்காலத்துத் தலைமக்கட்குப் பொருந்தும் என்றவாறு.

கற்பென்பது அதிகாரத்தான் வந்தது. இவற்றுக்கு உதாரணம் மேலே காட்டப்படும். (94)

### பாணற்குரிய செயல்

95 வாயில் வேண்டலும் வாயினேர் வித்தலுஞ்
சேயிழை யூடல் தீர்த்தலும் போயுழி
அவணலந் தொலைவுகண் டழுங்கலும் அவன்வயிற்
செல்ல விரும்பலுஞ் சென்றவற் குணர்த்தலும்
சொல்லிய கூற்றெனச் சொல்லலுங் கிழவோன்
வரவு மீண்டுவந் தரிவைக் குணர்த்தலும்
அணிநலம் பெற்றமை யறியான் போன்றவட்
பணிவொடு வினவுதலும் பாணற் குரிய.

(இ - ம்) வாயில்களுட் பாணற்கு உரியன எல்லாந் தொகுத்து உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) வாயில்வேண்டன் முதலாகச் சொல்லப்பட்டன வெல்லாம் பாணற்குரியன என்றவாறு. (95)

விறலிக்குரிய செயல்

96 செலவிற் றேற்றலும் புலவியிற் றணித்தலும்
வாயில் வேண்டலும் வாயினேர் வித்தலும்
தெரியிழை விறலிக் குரிய வாகும்.

(இ - ம்) விறலிக்குஉரியன வெல்லாந்தொகுத்து உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) செலவிற்றேற்றன் முதலாகச் சொல்லப்பட்டன வெல்லாம் விறலிக்குரியனவாம் என்றவாறு. (96)

கூத்தர்க்குரிய செயல்

97 செல்வம் வாழ்த்தலும் நல்லறிவு கொளுத்தலுங்
கலனணி புணர்த்தலுங் காமநுகர் புணர்த்தலும்
புலவிமுதிர் காலைப் புலங்கொள வேதுவிற்
றேற்றலும் சேய்மை செப்பலும் பாசறை
மேற்சென் றுரைத்தலும் மீண்டுவர வுணர்த்தலுங்
கூற்றரு மரபிற் கூத்தர்க் குரிய.

(இ - ம்) கூத்தர்க்கு உரியனவெல்லாந் தொகுத்து உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) செல்வம் வாழ்த்தல் முதலாகச் சொல்லப்பட்டன வெல்லாங் கூத்தர்க்கு உரியனவாம் என்றவாறு. (97)

இளையோர்க்குரிய செயல்

98 மடந்தையை வாயில் வேண்டலும் வாயி
லுடன்படுத் தலுமவள் ஊடல் தீர்த்தலுங்
கொற்றவற் குணர்த்தலுங் குற்றேவல் செய்தலுஞ்
சென்றுமுன் வரவு செப்பலு மவன்றிறம்
ஒன்றிநின் றுரைத்தலும் வினைமுடி புரைத்தலும்
வழியியல்பு கூறலும் வழியிடைக் கண்டன
மொழிதலு மிளையோர் தொழிலென மொழிப.

(இ - ம்) இளையோர்க்கு உரியனவெல்லாந் தொகுத்து உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) மடந்தையை வாயில்வேண்டல் முதலாகச் சொல்லப் பட்டன வெல்லாம் இளையோர்க்குரியனவாம் என்றவாறு. (98)

கண்டோர்க்குரிய செயல்

99 தீதுடைப் புலவி தீர்த்தலு மவன்வரல்
காதலிக் குரைத்தலுங் கண்டோர்க் குரிய.

(இ - ம்) கண்டோர்க்கு உரியனவெல்லாந் தொகுத்து உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) புலவிதீர்த்தல் முதலாகச் சொல்லப்பட்டன வெல்லாங் கண்டோர்க் குரியனவாம் என்றவாறு. (99)

பார்ப்பனப் பாங்கர்க்குரிய செயல்

100 இளமையும் யாக்கையும் வளமையு மேனவும்
நிலையாத் தன்மை நிலையெடுத் துரைத்தலுஞ்
செலவழுங்கு வித்தலுஞ் செலவுடன் படுத்தலும்
பிறவு மெல்லா மறையோர்க் குரிய.

(இ - ம்) இருவகைப் பாங்கரிற் பார்ப்பனப் பாங்கர்க்கு உரியனவெல்லாந் தொகுத்து உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) இளமை முதலாகச் சொல்லப்பட்டன வெல்லாம் பார்ப்பனப் பாங்கர்க் குரியனவாம் என்றவாறு. பிறவுமென்றத னால் வாயில் வேண்டல் முதலாயினவுங் கொள்க. (100)

சூத்திரப்பாங்கற்குரிய செயல்

101 நன்மையி னிறுத்தலுந் தீமையி னகற்றலுஞ்
சொன்னவை பிறவுஞ் சூத்திரர்க் குரிய.

(இ - ம்) சூத்திரப்பாங்கர்க்கு உரியனவெல்லாந் தொகுத்து உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) நன்மையின் நிறுத்தல் முதலாகச் சொல்லப்பட்டன வெல்லாஞ் சூத்திரப் பாங்கர்க்குரியனவாம் என்றவாறு.

சொன்னவையும் பிறவும் என்றதனுல் வாயில் வேண்டல் முதலாயினவுங் கொள்க. (101)

பாகற்குரிய செயல்

102 சேயிழைக் கிழத்தியை வாயில் வேண்டலும்
வாயினேர் வித்தலும் வயங்குதுனி தீர்த்தலும்
வினைமுடித் ததற்பின் வியன்பதி சேய்த்தென
வினைவோற் றேற்றலும் பாகற் கியல்பே.

(இ - ம்) பாகற்கு உரியன வெல்லாந் தொகுத்து உணர்த்து தல் நுதலிற்று.

(இ - ள்) தலைமகளை வாயில்வேண்டல் முதலாகச் சொல்லப் பட்டன வெல்லாம் பாகற்கியல்பாம் என்றவாறு. (102)

பாங்கிக்குரிய செயல்

103 பிரிவுழி விலக்கலும் பிரிவுடன் படுத்தலும்
பிரிவுழித் தேற்றலும் பிரிவுழி அழுங்கலும்
பிறவு முரிய இறைவனைப் பாங்கிக்கு.

(இ - ம்)பாங்கிக்கு உரியன வெல்லாந் தொகுத்து உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) பிரிவுழி விலக்கல் முதலாகச் சொல்லப்பட்டன வெல்லாம் பாங்கிக்கு உரியனவாம் என்றவாறு.

'பிறவும்' என்றதனுல் வாயில்வேண்டல் முதலாயினவுங் கொள்க. (103)

செவிலி அறிவர் செயல்கள்

104 முன்வரு நீதியு முலகியன் முறைமையும்
பின்வரும் பெற்றியும் பிறவு மெல்லாந்
தெற்றெனக் கூறல் செவிலித் தாய்க்கு
முற்ற வறிவர்க்கு முரியன வாகும்.

(இ - ம்) செவிலிக்கும், அறிவர்க்கும் உரியனவெல்லாந் தொகுத்து உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) முன்வருநீதி முதலாகச் சொல்லப்பட்டனவெல்லாந் தெளியச் சொல்லுதல் செவிலித்தாய்க்கும், பொருந்திய அறிவர்க்கும் உரியனவாம் என்றவாறு.

'பிறவும்' என்றதனால் வாயில்வேண்டல் முதலாயினவுங் கொள்க. (104)

காமக்கிழத்தியர்க்குரிய செயல்

105 குடிப்பிறந் தோரை வடுப்படுத் துரைத்தலும்
மனைவியைப் பழித்தலும் வாடா வூடலுட்
டலைவற் கழறலும் மனைவிக் கமைந்த
வொழுக்கமுங் காமக் கிழத்தியர்க் குரிய.

(இ - ம்) காமக்கிழத்தியர்க்கு உரியனவெல்லாந் தொகுத்து உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) குடிப்பிறந்தோரை வடுப்படுத்துரைத்தல் முதலாகச் சொல்லப்பட்டன வெல்லாங் காமக்கிழத்தியர்க்கு உரியனவாம் என்றவாறு. (105)

பரத்தையர்க்குரிய செயல்

106 கிழவோன் தன்னையுங் கிழத்தி தன்னையும்
இகழ்தலும் தம்மைப் புகழ்தலும் நிகழ்பொருள்
காத்தலும் பரத்தையர் கடனென மொழிப.

(இ - ம்) பரத்தையர்க்கு உரியன வெல்லாந் தொகுத்து உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) தலைமகனையுந் தலைமகளையும் இகழ்தல் முதலாகச் சொல்லப்பட்டன வெல்லாம் பரத்தையர் முறைமை என்றவாறு. (106)

பரத்தையர்க்குரிய சிறப்பு விதி

**107 பரத்தையர் காதற் பரத்தையைப் புகழ்தலும்**
**தம்மை யிகழ்தலுந் தம்முளுங் கூறுப.**

**(இ - ம்)** பரத்தையர்க்கு உரியதொரு வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) காதற் பரத்தையைப் புகழ்தலும், தங்களை யிகழ்தலும் தம்முளேயுங் கூறுவர் பரத்தையர் என்றவாறு. (107)

இளையர் தலைமகற்கு இன்ன உரிமையர் என்பது

**108 இளையர் கிழவோற் கிரவும் பகலுங்**
**களைத லில்லாக் கவசம் போல்வார்.**

(இ - ம்) இளையரது உரிமை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) இளையராவார் தலைமகற்கு நீங்காக் கவசம் போலு நந் தன்மையர் இரவும் பகலும் என்றவாறு. (108)

இருவகைப் பாங்குரிமை

**109 இருவகைப் பாங்கரு மொருபெருங் குரிசிற்**
**கின்னுயிர்த் துணையா விருபெருங் குரவருந்**
**தன்னை யளித்த தகைமை யோரே.**

**(இ - ம்)** பாங்கரது உரிமை உணர்த்துதல் நுதலிற்று.

**(இ - ள்)** பார்ப்பனப் பாங்கரும் சூத்திரப் பாங்கரும் என்னும் இருவருந் தலைமகற்கினிய உயிர்த்துணையாக அவன் தாயுந் தந்தையும் அவனை அடைக்கலமாகக் கொடுக்கப்பட்ட தன்மையோர் என்றவாறு. (109)

தோழியுரிமை

**110 தோழி செவிலி மகளாய்ச் சூழ்தலோ**
**டுசாத்துணை யாகி யசாத்தணி வித்தற்**
**குரிய காதல் மருவிய துணையே.**

(இ - ம்) தோழியது உரிமை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) தோழியென்பாள் செவிலிக்கு மகளாய் நன்மையும் தீமையும் ஆராய்தலுடனே தலைமகட்கு உசாத் துணையாய் அவளது வருத்தந் தீர்த்தற்குரிய அன்பு பொருந்திய துணையாம் என்றவாறு. **(110)**

செவிலியுரிமை

111 **செவிலி நற்றாய் தோழி யாகி**
**யவல நீக்கி யறிவுமா சாரமுங்**
**கொளுத்தித் தலைவியை வளர்த்த தாயே.**

(இ - ம்) செவிலியது உரிமை உணர்த்துதல் நுதலிற்று.

**(இ - ள்)** செவிலியென்பாள் தலைமகளுடைய நற்றாய்க்குத் தோழியாகிய தலைமகட்கு வருந் துக்கங் களைந்து நல்லறிவும் ஆசார முங் கொளுத்தித் தலைமகளை வளர்த்த தாயாம் என்றவாறு. (111)

அறிவருரிமை

112 **அறிவர் கிழவோன் கிழத்தியென் றிருவர்க்கு**
**முறுதி மொழிந்த உயர்பெருங் குரவர்.**

**(இ - ம்)** அறிவரது உரிமை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) அறிவரென்பார் தலைமகற்குந் தலைமகட்கும் உறுதி யைப் பயக்கும் உபதேசங்களைச் சொல்லும் மேம்பட்ட குருக்கள் என்றவாறு. (112)

காமக்கிழத்தியர்

113 **ஒருவன் றனக்கே யுரிமை பூண்டு**
**வருகுலப் பரத்தையர் மகளி ராகிக்**
**காமக்கு வரைந்தோர் காமக் கிழத்தியர்.**

**(இ - ம்)** காமக்கிழத்தியரது உரிமை உணர்த்துதல் நுதலிற்று.

**(இ - ள்)** காமக்கிழத்திய ரென்பார் சேரிப்பரத்தையர் போலப் பலர்க்கும் உரியரன்றி ஒருவற்கே உரிமை பூண்டுவருங் குலப்

பரத்தையர் மகளிராய்க் காமங் காரணமாகத் தலைமகனால் வரைந்து கொள்ளப்பட்டார் என்றவாறு. (113)

காதற்பரத்தையர்

114 யாரையும் நயவா வியல்பிற் சிறந்த
சேரிப் பரத்தையர் மகளிராகிக்
காதலிற் புணர்வோர் காதற் பரத்தையர்.

(இ-ம்) காதற்பரத்தையர் உரிமை உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) காதற் பரத்தையர் என்போர் யாவரையும் விரும்பாத இயல்பினால் மிக்க சேரிப்பரத்தையருடைய மகளிராய்த்தம் அன்பினால் தலைமகனோடு கூடுவார் என்றவாறு. (114)

காதற்பரத்தையருரிமை

115 அவருளும் வரைதற் குரியோ ருளரே.

(இ-ம்) காதற்பரதையர்க்கு உரியதொரு சிறப்புவிதி உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) காதற்பரத்தையருள்ளும் உளர், தலைமகனால் வரைந்து கோடற்கு உரியர் என்றவாறு. (115)

தலைமகன் தலைமகள் துறவறம்

116 மக்களொடு மகிழ்ந்து மனையறங் காத்து
மிக்க காம வேட்கை தீர்ந்துழித்
தலைவனுந் தலைவியுந் தம்பதி நீங்கித்
தொலைவில் சுற்றமொடு துறவறங் காப்ப.

(இ-ம்) தலைவனும் தலைவியுந் துறவறங் காக்குங்காலம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மக்களொடு கூடிமகிழ்ந்து இல்லறத்தினைக் காத்துத் தமக்குப் பெருகிய காம வேட்கையெல்லாந் தீர்ந்த காலத்துத் தலைமகனும் தலைமகளும் தம்மூர் நீங்கி வனத்தின்கட்சென்று எல்லையில்லாச் சுற்றத்தோடு துறவறத்தினைக் காப்பர் என்றவாறு. (116)

# அகத்திணையியல் - விளக்கம்

நூற்பா எண்

1. ‘மலர்தலையுலகம்’ என்னும் முதற்குறிப்புடைய சிறப்புப் பாயிரம் பாடியவர் இன்னார் என்பது தெரியவில்லை. இந் நூலாசிரியருக்கு மாணவராகவோ, பிற்காலத்தார் ஒருவராகவோ இருத்தல் கூடும்.

2. அகப்பொருட் செய்யுள் ‘ புனைந்துரை உலகியல் ’ எனும் இருதிறத்தால் உரைக்கப் படுவது.

இதனையே தொல்காப்பியர் நாடக வழக்கு உலகியல் வழக்கு என்பர்.

நாடக வழக்கு — புனைந்துரை ( இல்லதுரைத்தல் )
உலகியல்வழக்கு — உலகியல் (உள்ளதுரைத்தல்)

புனைந்துரை — புனைந்து உரைப்பது. அதாவது உலகில் இல்லாததுரைப்பது. உலகியல் — உலகில் உள்ளதுரைப்பது இவ்விரு திறத்தால் உரைத்தற்கண்ணும் தொன்று தொட்டு வருகின்ற நெறிபிறழாமல் கூறவேண்டும்.

6 ஐந்திணைக்கும் பொருந்திய பெயர் :— குறிஞ்சி, பாலை, முல்லை மருதம், நெய்தல் என்பன.

இத்திணைகள் அவ்வவ் நிலத்திற்குச் சிறப்பாகவுரிய கருப்பொருளாகிய பூவால் பெயர் பெற்றன.

'குறிஞ்சி ... ... நெய்தல் ஐந்திணை' — இந்நூற்பா ஐந்திணைப் பெயரைக் குறிஞ்சி தொடங்கி நெய்தல் ஈருகச் சுட்டுகின்றது. ஆனால் தொல்காப்பியர் 'மாயோன் மேய காடுறையுலகமும்' [தொல் - பொருள் - அகத். 5] என்ற நூற்பாவில் முல்லை தொடங்கி நெய்தல் ஈருக நானிலப் பெயர் சுட்டுகின்றார். நம்பியார் கொண்ட இம்முறை மாற்றத்திற்குக் காரணம் என்ன? தொல்காப்பியரே 'மாயோன் மேய' என்ற நூற்பாவில் 'சொல்லிய முறையாற் சொல்லவும் படும்' எனக் கூறியுள்ளார். இவ்வும்மையாலும், பத்துப்பாட்டு, கலித்தொகை முதலிய சங்க நூல்களிலும், கீழ்க்கணக்கு நூல்களிலும் இம்முறை மாற்றம் காணப்படுவதாலும் நம்பியார் ஐந்திணைப் பெயர் கூறும் இந்நூற்பாவில் குறிஞ்சியை முன்வைத்து முறை மாற்றினர்.

நானிலம் — ஐந்நிலம் :— தொல்காப்பியர் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என நானிலப் பாகுபாடுரைப்பர். நம்பியார் பாலையினையும் இணைத்து ஐந்நிலங் கூறுவர். எழுதிணைகளுள் கைக்கிளையும் பெருந்திணையும் நிலம் வகுக்கப் படாதன. பாலைக்குத் தனி நிலம் இன்மையால் தொல்காப்பியர் அதனை விடுத்தார். நம்பியார், மதுரைக் காஞ்சியுள் 'பாலை சான்ற சுரஞ்சார்ந்தொரு சார்' என்று கூறப்படுவதாலும் பிறவற்றுலும் பாலையினைக் கொண்டார்.

7. முதற் பொருள், கருப்பொருள், உரிப்பொருள் எனப் பொருள் மூன்றுகும்.

'சேர்தருமிடனே' — நிலத்தைச் சார்ந்த பகுதி. குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்ற நிலங்களேயன்றி அவ்வவ் நிலங்களைச் சார்ந்த பகுதிகளும் அவ்வவ் நிலங்களே. மலையும் மலை சார்ந்த பகுதியும் என்பது போல.

10. என்று என்பது எண்ணிடைச் சொல்

11. 'வேனிலென்றுங்கு' — ஆங்கு - அசைச்சொல்

12. எற்படுகாலை :- எல் — கதிரவன்

'எற்படுகாலை' என்பதற்கு நம்பியகப் பொருளின் பழைய உரையாசிரியர் ஆதித்தன் படுகிறபொழுது என உரை கூறியுள்ளார். படுதல் — தோன்றுதல். இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் எற்பாடு என்பதற்கு (படு - பாடு என நீண்டது) சூரியன் மறையும் அமையம் எனக்கொண்டு பகற்பொழுதின் பிற்கூறு என்றே பொருள் கொள்கின்றனர்.

தொல்காப்பிய முதற் சூத்திர விருத்தியில் சிவஞான முனிவர் எற்பாடு என்பதற்கு நம்பியின் கருத்தினையேற்று 'நாள் வெயிற் காலை' (சூரியன் உதிக்கும் காலம்) என்றே பொருள் கொண்டுள்ளது இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.

13. **கூதிர்யாமம் முன்பனி** :— ஈண்டு கூதிர் முன்பனி எனப் பெரும்பொழுது இரண்டனையும் ஒருசேர இணைத்துக் கூறுமைக்குக் காரணம், முன்பனி கூதிர்போல அத்துணைச் சிறப்புடையதன்று என்பதனாலாகும். தொல்காப்பியரும் 'பனியெதிர் பருவமும் உரித்தென மொழிப' என முன்பனிக் காலத்தைப் பிரித்தே சுட்டியுள்ளார்.

14. **'வேனில் நண்பகல் பின்பனி'** :— ஈண்டும் முன் நூற்பா போலவே பின்பனி சிறுபொழுதினை அடுத்து வருகின்றது. மேலை நூற்பாவிற் கூறிய காரணம் இதற்கும் ஒக்கும்.

தொல்காப்பியர் 'தெய்வ முணாவே' (தொல் - பொருள் - அகத் நூ. 18) என்ற நூற்பாவில்

| | |
|---|---|
| 1) தெய்வம் | 5) புள் |
| 2) உணவு | 6) பறை |
| 3) மா | 7) தொழில் |
| 4) மரம் | 8) யாழின் பகுதி |

என்ற கருப்பொருள் எட்டனை எடுத்தோதி இவை போன்ற பிற எனக் குறிப்பிட்டுள்ளார். பிற என்ற இவ்விலேசினாலேயே

தொல்காப்பிய உரையாசிரியர்கள் மேலும் பல கருப்பொருள்களைச் சுட்டுகின்றனர். நம்பியார், 'கரு வீரெழுவகைத்தே' என அவற்றை வரையறுத்தமை குறிப்பிடத்தக்கது.

25. **உரிப்பொருள்:-** உரிய ஒழுக்கப்பொருள். ஐத்திணைக்குரிய உரிப்பொருள்கள் புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்பன. இவையேயன்றி இவற்றின் காரணமும் அவ்வவ் வொழுக்கங்களேயாம். புணர்தல், புணர்தல் நிமித்தம் என்ற வகையில் உரிப்பொருள் பத்து வகைத்தாகும்.

27. **இயற்கைப்புணர்ச்சி :—** ஒருவனும் ஒருத்தியும் ஊழ்வினை வயத்தால் ஒரு பொழிலின்கண் எதிர்ப்பட்டு அன்பினுற் கூடுதல்.

**இடந்தலைப்பாடு :—** முன்னர்க் கூடிய இடத்தில் மீண்டும் எதிர்ப்படுதல்.

இயற்கைப் புணர்ச்சியில் கூடிச் சென்ற தலைமகன் அடுத்தநாள் வந்து தலைமகளைக் கூடுதல்.

**பாங்கற்கூட்டம்:—** தோழன் துணைபெற்றுத் தலைமகளைக் கூடும் கூட்டம்.

**பாங்கியிற்கூட்டம் :—** தோழியின் இசைவு பெற்று அவள் கூட்டி வைக்கத் தலைவன் தலைவியைக் கூடுதல்.

28. **மெய்க்கிளையாழோர் :—** பிழையின்றிப் பண் எழுப்பும் கிளை நரம்பினையுடைய யாழினைக் கையில் தாங்கிய கந்திருவர்.

தொல்காப்பியர் இவர்களைத் 'துறையமை நல்யாழ்த் துணைமையோர்' என்பர்.

29. **காமஞ்சான்ற இளமையோள் :—** காமத் தன்மை அமைந்த இளையாள் (தக்க பருவத்தாள்), இவள் மாட்டுத் தலைமகன் கொள்ளுகின்ற ஒருதலையுறவைக் கைக்கிளை என்றும், காமஞ்சாலா இளையோள் (சிறுமி) மாட்டுக் கொள்கின்ற ஒரு தலையுறவை அகப்புறக் கைக்கிளை என்றும் நம்பியார் சுட்டுவர். நம்பியார் கூறும் அகப்புறக் கைக்கிளையைத் தொல்காப்பியர் கைக்கிளைக்குறிப்பு என்பர்.

அகப்பொருளில், கைக்கிளை வளர்ச்சிக்குரியது; இது அன்பின் ஐந்திணைக்கு நுழைவாயில் போன்றது; எனவே காமஞ்சான்ற இளையோள் மாட்டுக் கொள்கின்ற ஒருதலையுறவைக் கைக்கிளை எனக் கூறுவதே பொருத்தமுடையது. சிறுமி மாட்டும் ஒருதலை யுறவு ஏற்படுமாயின் அது அகப்புறத்திற்குரியது.

30 நிலத்துறை இழிந்தோர்:—' நிலத்தின்கண் வாழும் இழிந்த மக்கள். அகப்பொருள் மாந்தர்களுள் தலைமக்கள் நில மக்கள் என இரு வகையினர். அவர்களுள் நிலமக்களே ஈண்டு சுட்டப்படுபவர், (எ. கா) குறிஞ்சி நிலம் :-

தலைமக்கள் :— பொருப்பன், வெற்பன், சிலம்பன்.

நிலமக்கள் :— குறவர், கானவர், குறத்தியர்,

34 உள்ளப்புணர்ச்சி :— பொழிலின்கண் எதிர்ப்பட்ட தலைவன் தலைவியர் மெய்யுறலின்றி உள்ளத்தாற் கூடுதல்.

மெய்யுறு புணர்ச்சி:— தலைவன் தலைவியர் உடற்கலப்பு.

கள்ளப்புணர்ச்சி :— கள்ளம் - களவு; களவிற் கூட்டம்.

36 'காட்சி முதலாகச் சாக்காடீருகக் காட்டிய பத்து':— மெய்யுறு புணர்ச்சி நிகழுவதற்கு முன் நிகழும் பத்து அவத்தைகளே 'காட்டிய பத்து' எனப்பட்டன. அவையாவன :

1) காட்சி
2) வேட்கை
3) ஒருதலையுள்ளுதல்
4) மெலிதல்
5) ஆக்கம் செப்புதல்
6) நாணுவரையிறத்தல்
7) நோக்குவவெல்லாம் அவையே போறல்
8) மறத்தல்
9) மயக்கம்
10) சாக்காடு

| | | |
|---|---|---|
| 1 காட்சி | — | தலைமகளைத் தலைமகன் தனியிடத்தில் காண்டல் |
| 2 வேட்கை | — | தலைமகளைப் பெறவேண்டும் என்ற உள்ள விருப்பம் |
| 3 ஒருதலையுள்ளுதல் | — | தலைவியை இடைவிடாது நினைத்தல் |
| 4 மெலிதல் | — | உடம்பு வாடுதல் |
| 5 ஆக்கம் செப்பல் | — | தன் நெஞ்சின்கண் மிகும் வருத்தத்தைப் பிறர்க்குத் தெரிவித்தல் |
| 6 நாணுவரையிறத்தல் | — | நாணத்தின் எல்லையைக் கடத்தல் |
| 7 நோக்குவவெல்லாம் அவையே போறல் | — | காண்பன எல்லாம் தலைவியின் தோற்றமாகவே தோன்றல் |
| 8 மறத்தல் | — | அறிவு திரிதல் |
| 9 மயக்கம் | — | செய்யும் திறனறியாது செயலற்றுப் போதல் |
| 10 சாக்காடு | — | இறந்துபாடு எய்தியது போன்ற நிலை |

47 **ஆற்றூறஞ்சல்:—** ஆறு – வழி. ஊறு – இடையூறு அஞ்சல் – அஞ்சுதல். தலைமகன் தலைமகளைக் காணவரும் வழியில் உண்டாகிய ஊறுபாட்டிற்கு அஞ்சுதல்.

**காப்புக்கை மிகுதல் :—** தலைமகள் பருவப்பொலிவு கண்டு பெற்றோர் அவளை இற்செறித்துக் காக்கும் காவல் கடுமையாதல்.

49 'ஒருபுணர் வொழிந்த' பாங்கியிற் கூட்டம் தவிர்ந்த என்பதாம். அதாவது களவிற் கூட்டம், இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், பாங்கியிற் கூட்டம் என நான்கு வகைப்படும். இவற்றுள் பாங்கியிற் கூட்டம் தவிர்ந்த ஏனைய மூன்று புணர்ச்சிக் கண்ணும் தலைமகள் தோழியிடம் அறத்தொடு நிற்பாள்.

50 **முன்னிலைப் புறமொழி :—** தன்முன் நிற்பார்க்குக் கூற வேண்டுவனவற்றைப் பிறருக்குக் கூறுவது போலக் கூறுதல்.

முன்னிலை மொழி :— தன்முன் நிற்பார்க்குத் தெளிவுபட நேரே கூறுதல்.

51 கவலையின்றுணர்த்தல் — விளங்க அறிவித்தல்

55 'களவின் வழிவந்த கற்பு', 'களவின் வழி வாராக் கற்பு'

அகப்பொருள், களவு கற்பு என்ற இரண்டு கைகோளினை யுடையது. இவற்றுள் தலைவன் தலைவியர் களவு நெறியில் தலைப்பட்டுக் கற்பு நெறி நிற்றல் களவின்வழிவந்தகற்பு. களவு நெறியில் தலைப்படாமலேயே கற்பு நெறியில் நிற்றல் களவின் வழி வாராக் கற்பு.

56 வாயிலிற் கூட்டம் :— தலைமகளின் ஊடலைத் தீர்ப்பதற்கு வாயிலாக அமைந்த பாணன் முதலியோர் துணையினால் கூடும் கூட்டம்.

58 மறையிற் புணர்ச்சி — களவிற் கூடும் கூட்டம்

மன்றற் புணர்ச்சி — வதுவைக் கூட்டிக் கூடும் கூட்டம்.

63 புரவலன் — தலைமகன்.

66 நகர்ப்புறம் என்பது முன்பின்னாகத்தொக்குப் புறநகர் என்று ஆயிற்று. தலைமகன் தனது புதிய பரத்தையைத் தேர் மீதேற்றிச் சோலையின்கண்ணே விளையாடுதல் காரணமாகவும், புனலாடுதல் காரணமாகவும் நகர்ப்புறத்தே செல்வான். இதுவே புறநகர்ப்போதலாகும்.

67 'ஊடல் அவ்வழிக் கூடுங்கிழத்திக்கு'

அவ்வழியாவன : தலைமகன் காமக்கிழத்தியர் காரணமாக அயல் மனைப்பிரிந்த இடமும்; பின்னர் வரைந்த பெதும்பையும் பரத்தையும் விழவும் காரணமாக அயற்சேரிக்கண் பிரிந்தவிடமும், பரத்தையைத் தேர்மிசையேற்றிப் பொழிலாடவும் புனலாடவும் புறநகர்ப்போகிய விடமும் ஆம். இவ்விடங்களில் தலைவிக்கு ஊடல் நிகழும்.

69 உயர்ந்தோர் மூவர்— அந்தணர், அரசர், வணிகர்.

71 'பகடுபிற ஊர்தல்' — பகடு பிற என்பது உம்மைத் தொகை. பகடும் பிறவும் என விரியும். பகடூர்தல் — யானையைப் போரின்கண் செலுத்தப் பெறும் பயிற்சி. பிற என்றதனுல் குதிரைப் பயிற்சி, தேர்ப் பயிற்சி முதலியனவும் கொள்ளப்படும்.

75 வேதமாந்தர் - அந்தணர். துரியோதனனுக்காக உலூகன் என்பான் பாண்டவர்பால் தூது சென்றமை அந்தணர் தூது சென்றது. கண்ணன் பாண்டவர்க்காகத் துரியோதானுதியரிடம் தூது நடந்தது அரசர் தூது சென்றது.

76 சிறப்புப் பெயர் பெறுதல் :— செயற்கரிய செயல்களுக்காக அரசனுல் பெறும் எட்டி, ஏனுதி போன்ற பெயர்கள் சிறப்புப் பெயர்களாகும்.

78 உரைத்த நால்வர்— அரசர், அந்தணர், வணிகர், வேளாளர்.

84 புரி நூல் முதல்வர் — முப்புரி நூலினை அணிந்த அந்தணர் ஒன்பது நூல்களைக் கொண்ட மூன்று பிரிவினதாகிய நூல் முப்புரி நூல் (பூணூல்).

88 செல்வத் தோன்றல் — செல்வச் சிறப்புடைய தலைமகன்.

91 பூத்தகாலை — பூப்பு நிகழ்ந்த காலம் ; அஃதாவது வீட்டிற்கு விலக்காகியகாலம்.

97 நல்லறிவு கொளுத்தல் — நல்லறிவு கொளுத்துவோர் கூத்தர். இவர்கள் வாயில்களுள் ஒருவர். பரத்தையிற்பிரிந்த தலைவன்பால் சென்று அவனது பரத்தமை நீங்க எடுத்துக் கூறுதல் நல்லறிவு கொளுத்தலாம்.

ஏதுவிற்தேற்றல் — தலைவிஊடலுற்று அவ்வூடல் முதிர்ந்த காலை காரணங்காட்டித் தேற்றுவித்தல் ஏதுவின் தேற்றலாகும்.

99 தீதுடைப்புலவி — புலவி - ஊடல். ஊடுதல் காமத்திற் கின்பம் எனினும் அவ்வூடல் நீட்டிக்குமாயின் அதுபகையாகும். பகைக்கு ஏதுவான புலவியைத் தீதுடைப்புலவி என்றார்.

100 நிலையாத்தன்மை நிலையெடுத்துரைத்தல் — நிலையாமை யாகிய தன்மையின் நிலைமையினை எடுத்துக் கூறுதல்.

101 நன்மையின் நிறுத்தல் - நல்வழியில் நிலைபெறச்செய்தல்.

105 வடுப்படுத்துரைத்தல் - குற்றமற்றுரை குற்றமுண்டாகும் படி பழித்துக் கூறுதல்.

108 இளையர்.... .... .... .... ....
களைதலில்லாக் கவசம் போல்வார்.

இளையர் — ஏவலாளர். இவர் தலைமகனோடு இரவும் பகலும் உறவுபூண்டு பணிபுரிதலால் தலைமகனுக்குக் கவசத்தைப் போன்ற வராவார். எனவே இவர் தலைவனுக்கு மெய்க்காப்பாளராவர்.

110 உசாத்துணை — உசாதல் - ஆராய்தல். தோழி தலைவிக்கு வரும் நன்மை தீமைகளை ஆராய்ந்து துணைநிற்பவளாதலின் உசாத்துணை என்றார்.

அசாதணிவித்தல் — வருத்தம் தீர்த்தல்.

அறிவர் — தலைவன் தலைவியர் இருவருக்கும் உறுதியயக்கும் நல்லுரை கூறும் மேலோர்.

# களவியற் கருத்து

அன்பின் ஐந்திணை களவு கற்பு என்ற இரண்டு கைகோள் களையுடையது. அவற்றுள் களவு என்னும் கைகோள் வேதத்துட் கூறப்பட்ட எண்வகை மணங்களுள் யாழோர் கூட்டமாகிய காந்தருவ மணத்தை ஒத்ததாம்.

**கைக்கிளை :—**

அகப்பொருளுக்குரிய திணைகள் கைக்கிளை, அன்பின் ஐந்திணை, பெருந்திணை என ஏழாகும். இவற்றுள் ஒருதலைக் காமமாகிய கைக்கிளை காட்சி, ஐயம், துணிவு, குறிப்பறிதல் என நான்கு வகைப்படும்.

காட்சி எனப்படுவது முற்பிறப்பில் காமம் நுகர்ந்தார் இருவரும் மறு பிறப்பினும் கூட்டுவதும் பிரிப்பதுமாகிய நல்வினை தீவினை என்னும் இரண்டனுள் நல்வினை வயத்தால் எதிர்படுவர். இவ் வாறு எதிர்ப்படுபவர் குலத்தானும், செல்வத்தானும், அறிவானும் பிறவற்றானும் தம்மோடு ஒத்தாரும் மிக்காருமின்றித் தம்மில் தாமே ஒத்த தலைமக்களாகத் திகழ்வர். அவர்களுள் தலைவன்

உயர்ந்தவனாயினும் குற்றமின்று. இங்ஙனம் தலைமக்கள் எதிர்ப் படுதலே காட்சியாகும்.

தலைமகள் வடிவும் அவளைத் தான் கண்ட இடமும் சிறப் புடையதாகிய காலத்துத் தலைமகன்பால் ஐயம் நிகழும்.

தலைமகள் நகிலினும் தோளினும் எழுதப்பட்ட கொடி, அவள் அணிந்துள்ள அணிகலன்கள், மலர், மலரைச் சூழும் வண்டு, நடைபயிலடி, மருண்டு நோக்கும் கண் என்பனவும், பயின்றறியாத ஆண்மக்களைக் கண்டவிடத்து உண்டாகும் மெய்ப்பாடாகிய அச்சமும், அவை போல்வன பிறவும் தலைமகன் ஐயங்களைப் போக்கும். இதுவே துணிவாகும்.

குறிப்பறிதலென்பது தலைமகளின் வேட்கைக் குறிப்பினை அவளது கண்பார்வையால் தலைமகன் குறிப்பால் அறிதல்.

**களவிற்குரிய கிளவித்தொகைகள் :—**

இது இயற்கைப் புணர்ச்சி தொடங்கி, வரைவிடைவைத்துப் பொருள் வயிற்பிரிதல் ஈருகப் பதினேழாகும்.

## 1 இயற்கைப் புணர்ச்சி

இப்புணர்ச்சி தெய்வத்தின் எய்தும் புணர்ச்சி, தலைவியினெய்துப் புணர்ச்சி என இருவகைப்படும்.

தெய்வத்தின் எய்தும் புணர்ச்சி எனப்படுவது, தலைவன் தலைவியர் தெய்வத்தால் கூடும் கூட்டமாகும். இக்கூட்டத்தில் தலைவன் தலைவியர் கலந்து மகிழ்வர்; தலைவன் தலைவியின் நல பாராட்டி, அவள் அணிகலன்களை முன்பு அணிந்திருந்தது போல அணிவிப்பான்.

தலைவியின் எய்தும் புணர்ச்சி எனப்படுவது தலைவியா கூட்டமாகும். இக்கூட்டத்தில் தலைவன் தலை வேட்கையை, உணர்த்த அவள் மறுப்பது போலக்காட் உடன்படக் கூட்டம் நிகழும்.

இக்கூட்டத்தில் தலைவன் தலைவியை இரந்து பின்நிற்க எண்ணி அவ்வாறே பின் நிற்பான். தலைவியை முன்னிலைப் படுத்தி, அவளது மெய்தொட்டுப் பயின்று, பொய் பாராட்டி அணிமைக்கண் சென்று தழுவ விரும்புவன். அவள் தலைவனின் வழிபாட்டினை மறுத்து, தமக்குள்ள இடையூறுகளை மொழிவாள். நீடுநினைந்திரங்கி மறுத்தெதிர் கொள்வாள்; தமது உடன்பாட்டைப் புலப்படுத்தும் வகையில் முறுவற் குறிப்புணர்த்துவாள். இவ்வாறு முயங்கிப் புணர்ச்சியினால் மகிழ்வர்.

## 2 வன்புறை

வன்புறை — வலியுறுத்தல். இது தலைவியின் ஐயம் தீர்த்தல், பிரிவு அறிவுறுத்தலென இரண்டு வகையினையுடையதாகும்.

தலைவன் தலைவியின் கலைந்துபட்ட அணிகலன்களைத் திருத்தத் தலைவி நாணமடைவாள்; தலைவன் பலவாறு கூறியும் ஊழ்வலியினது திறம் கூறியும் அவளைத் தெளிவிப்பான். தலைவன் மீண்டும் வருவானோ? என்று தலைவி ஐயங் கொள்ளத் தலைவன் தனது மிகுந்த காதலைத் தெரிவித்துப் பிரியேன் என்பான். அவள் பிரிந்து வர இசைவாள்; பின்னர் தலைவன் பதி அணிமைக் கண் உளதோ? சேய்மைக் கண் உளதோ என்று தலைமகள் கவலையுறத் தலைவன் தன் பதி அணிமைக் கண்ணதேயென்று ஆறுதல் மொழிவன்.

## 3 தெளிவு

தலைமகன் சொல்லைத் தலைமகள் உண்மையென நம்பித் தெளிந்தாற்றுதல் தெளிவு.

### ிரிவுழி மகிழ்ச்சி

ிவி பிரிந்து செல்லுங்கால் அவள் செல்லுகின்ற தன்மை ு தலைவன் மகிழ்வான்.

தலைவி தன்னைக் காணா வகையில் அவளைக் காண்ப மக்கண் நின்று அவளது செலவு கண்டு தன் பாங்கனொடும் கூறி மகிழ்வான்.

## 5 பிரிவுழிக் கலங்கல்

பிரிந்து செல்லும் தலைவியின் செலவு கண்டு தலைமகன் கலங்கிக் கூறுதல் பிரிவுழிக் கலங்கல். இது மருளுற்றுரைத்தல், தெருளுற்றுரைத்தல் என்று இருவகையினையுடையது.

பிரிந்து வரும் தலைவியைத் தோழியர் கூட்டம் சூழ்ந்து வழி பட, அதனைக் கண்ட தலைவன் இத்தகையாள் இவர்களைப் பிரிந்து தன்னைத் தனித்து வந்து கூடியது என்ன மாயமோ? என்று மயங்கிக் கூறுவன்.

தலைவியின் முகக் குறிப்பால் அவளது உயிர்தோழியை அறிந்து, அவளைத் தூதாகப் பெற்று உய்யக் கருதுவன். தலைவியின் பண்பு நலங்களைப் பாராட்டிப் பெற்றோரை வாழ்த்தித் துயில் கொள்ளாது இரவுப் பொழுதை நொந்து கொள்வன்.

## 6 இடந்தலைப்பாடு

தலைப்படுதல் — எதிர்ப்படுதல். படு - பாடு என நீண்டது.

முன்னர்க் கூடிய இடத்தில் இக்கூட்டம் மீண்டும் நிகழும். இது தெய்வம் தெளிதல், கூடல், விடுத்தல் என்று மூன்று வகைப்படும்.

முன்பு இவளைத் தந்த தெய்வம் மீண்டும் தருமெனக் கருதித் தலைவன் அவ்விடம் சேர்வான். தோழியர் கூட்டத்திடையே முன் நாளில் கண்ட அதே அழகுடன் தலைவி பொலிவுற்று நிற்பதைக் கண்டு மகிழ்ந்து முயங்கிப் புகழ்வான் மீண்டும் அவளை ஆயத்தாரிடையே செல்ல விடுவன்.

## 7 பாங்கற் கூட்டம்

களவின் மூன்றும் நாள் பாங்கன் துணையினால் தலைவன் தலைவியைக் கூடுதல். இக்கூட்டம் சார்தல், கேட்டல், சாற்றல், எதிர்மறை, நேர்தல், கூடல், பாங்கிற் கூட்டல் என்று எழுவகைப் படும்.

தலைவன் தலைவியை அடையப் பாங்கன் துணையை நாடிட, அவன் நிகழ்ந்ததனைக் கேட்டத் தலைவன் நிகழ்ந்தது உரைப்பன். பாங்கன் இடித்துக்கூறத் தலைவன் அதனை மறுத்து மொழிவன். பாங்கன் தலைவனைப் பழிக்க, தலைவன் தனது வேட்கை தாங்கற் கருமையெனச் சாற்றுவன்; பாங்கன் தன்மனத்தும் தலைவனோடும் அழுங்கி, தான் கண்டது எவ்விடத்து? எவ்வியற்று? என்று வினவத் தலைவன் இவ்விடத்து இவ்வியற்று என மொழிவன். பாங்கன் தலைவனைத் தேற்றிக் குறியிடம் சென்று தலைவியைக் காண்பன். தான் தலைவனை இகழ்ந்து கூறியமைக்கு இரங்கித் தலைவனையும் தலைவியையும் வியந்துரைப்பன். பின்னர் தலைவன்பாற் சென்று தலைவி நிலை கூறத் தலைவன் குறியிடம் சென்று தலைவியைக் காண்பன் களவில் மகிழ்ந்து தலைவியைப் புகழ்ந்து, அவளைப் பாங்கியொடு வருகெனக் கூறுவன்.

## 8 பாங்கிமதியுடன்பாடு

தலைவன் தலைவியரது கூட்டவுண்மையைத் தோழி தனது அறிவால் அறிவது. இது முன்னுறவுணர்தல், குறையுறவுணர்தல், இருவரும் உள்வழி அவன்வரவுணர்தல் என மூன்று வகைப்படும்.

**முன்னுறவுணர்தல் :—**

தலைவியின் நிலையைத் தோழி குறிப்பால் அறிதல். தலைவியின் மெய்யின்கண் ஏற்படும் புதுநாற்றத்தாலும், தோற்றப் பொலிவாலும், ஒழுக்கம், உண்டி, செயல் மறுப்பு, மறைப்பு, செலவு, பயில்வு என்ற எழுவகையாலும் ஐயமுற்றுத் தோழி தலைவியின் ஒழுக்கத்தை ஆய்வாள்; அவற்றுலேயே ஐயந்தீர்வாள்; மரபு பிழையாமல் மெய்யாகவும் பொய்யாகவும் இருபொருள் படும்படியான சொற்களினுலும் ஆய்வாள்.

**குறையுறவுணர்தல் :—**

தலைமகளால் பேணப்பட்ட வாயிலைப்பெற்ற தலைமகன் தழையும் கண்ணியுங் கொண்டு சென்று தோழியிடம் ஊர், பெயர், கெடுதி பிறவும் வினவியவிடத்துத் தோழி கூட்டவுண்மையை அறிவது.

இது இவ்வாறு குறையிரந்து நிற்பவர் யாரெனவும், இவர் மனத்தின்கண் உள்ள எண்ணம் யாதெனவும் தேர்தலும், அவனகத்து எண்ணத்தினைத் தெளிதலுமென இரண்டு வகைப்படும்.

**இருவருமுள்வழி அவன் வரவுணர்தல்**

தலைவியும் தோழியும் ஒருங்கிருந்த வழி தலைவன் தழையுங் கண்ணியுங் கொண்டுவரக் கண்டு முன்போல 'ஊர், பெயர் முதலியன வினவியவிடத்துத் தோழி கூட்டம் உண்மையை அறிதல். இது தலைவனிடம் எதிர் மொழி கொடுத்தல், தலைவனை நகுதல், அறிவால் அவரவர் மனக் கருத்துணர்தலென மூன்று வகையினையுடைத்து.

## 9 பாங்கியிற் கூட்டம்

தோழியின் துணையால் தலைவன் தலைவியைக் கூடுதல். இது இரந்து பின் நிற்றல், சேட்படை, மடற்கூற்று, மடல் விலக்கு உடன்படல், மடற் கூற்று ஒழிதல், குறை நயப்பித்தல், நயத்தல், கூட்டல், கூடல், ஆயங் கூட்டல், வேட்டல் என்ற அறுவகையினை யுடையது.

தலைவன் தன் உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்தத் தோழி தங்கள் குலமுறை கூறி இயையாதென மறுப்பது; தலைவன் தலைவியை உயர்த்திக் கூறத் தோழி அறியாதாள் போன்று வினவுவது; தலைவன் தலைவியது தன்மை இயம்பத் தோழிதலைவியது அருமை சாற்றுவது; தலைவன் தன் இன்றியமையாமையை எடுத்துக் கூறத் தோழி நின் குறையை நீயே சென்று தலைவிக்கு உரையென்பது; தோழியைத் தலைவன் பழிக்க தோழி தலைவி, பிறர் துயர் அறியாதவளென அவளது பேதைமையைத் தலைவன் உட்கொளக் கூறுவது; தலைவன் தலைவியின் மூதறிவைப் பாராட்டத் தோழி தலைவனை நோக்கித் 'தலைவ'! முன் நின் வேட்கை தீர்த்தாளென்று கூறினையே அவ்வாறு இன்னும் கூடுக' என்று கூறுவது; தலைவன் தன் நிலை கூறத் தோழி உலகியல் உரைப்பது; தலைமகன் மறுத்துக் கூறத் தோழி அஞ்சி அச்சுறுத்துவது; தலைவன் கையுறையைப் புகழத் தையல் மறுப்பது; ஆற்று

நெஞ்சினனாகிய தலைவன் புலந்து கூற ஆற்றுவித்து அகற்றுவது என்பனவெல்லாம் இரந்து பின்னிற்றற்கும் சேட்படுத்தற்கும் பொருந்துவனவாகும்.

**மடற் கூற்று, மடல் விலக்கு**

தலைவியை அடையத் தலைவன் பனங்கருக்கால் கட்டப்பட்ட குதிரையின் மேல் ஏறி வருவேனென்று கூறுவது மடற் கூற்று.

தலைவன் மடலே பொருளென மதித்துக் கூறத் தலைவி அருளியல் கூறியும், பிறவாறும் அதனைத் தடுத்தல் மடல் விலக்கு.

**குறை நேர்தல், மடற்கூற்றொழிதல்**

தோழி தலைவனது குறையை முடிக்க உடன்படுதல் குறை நேர்தல்.

தோழி குறையை முடிக்க உடன்பட்டமையின் தலைவன் தன் மடலேறும் முயற்சியைக் கைவிடுதல் மடற் கூற்றொழிதலாகும்.

**குறை நயப்பித்தல், மறுத்தல்**

தோழி தலைவனது குறையை முடித்தற்குத் தலைவியை உடன் படச் செய்தல் குறை நயப்பித்தல்.

தலைமகன் வலிதாகச் சொல்லி மறுத்தல் மறுத்தலாகும்.

**குறை நயப்பித்தல், நயத்தல்**

தோழி தலைவியிடம் தலைவனது துயர் நிலையை வலிதாக எடுத்துக் கூறித் தலைவியை இசைவித்தல் குறை நயப்பித்தல்.

தோழி தலைவனது குறையைக் கூற அக்குறையை முடிக்கக் கருதித் தலைவி விரும்புதல் குறை நயத்தல்.

**கூட்டல், கூடல், பாங்கிற் கூட்டல், வேட்டல்:—**

தோழி குறியிடத்துத் தலைவியை உய்த்தல் கூட்டல்; தலைவன் தலைவியைக் கூடுதல் கூடல்; தோழி தலைவியைப் பாங்கியரிடம்

அழைத்துச் சேர்தல் பாங்கிற் கூட்டல்; தலைவன் தோழியின் சொற்படி விருந்து விரும்பல் வேட்டல்.

தலைவன் கொடுத்த கையுறையினைத் தலைவி ஏற்றுக் கொண்டமையைத் தோழி தலைவனுக்கு உணர்த்துதல்; தோழி தலைவிக்குக் குறியிடம் கூறல்; குறியிடத்துத் தலைவியைக் கொண்டு சேர்தல்; குறியிடத்துத் தலைவியைச் சேர்த்து நீங்கல்; தலைவி தலைவனிடம் எதிர்ப்படுதல்; புணர்ச்சியில் மகிழ்தல்; தலைமகன் தலைமகளைப் புகழ்தல்; அவளைத் தலைமகன் விடுத்தல்; தலைவி தோழியைச் சார்ந்து கையுறை காட்டல், அவள் தலைவியைப் பாங்கிற் கூட்டல்; பின்னர்த் தலைவியை நீங்கித் தலைவற்கு ஓம்படை சாற்றல்; தோழி தலைமகனை உலகியல் மேம்பட விருந்து விலக்கல்; தலைமகன் விருந்திறை விரும்பல் முதலியன வெல்லாம் இவண் நிகழும்.

## 10 பகற்குறி

தலைவன் தலைவியர் களவுக்காலத்தில் சந்திப்பதற்காகக் குறிக்கப்படும் இடம் குறி; பகற்காலச் சந்திற்பிக்குரிய இடம் பகற்குறி; இத்தகைய இடம் எயிற்புறம் என்பர் தொல்காப்பியர். பகற்குறி கூட்டல், கூடல், பாங்கியிற் கூட்டல், வேட்டல் என்று நால்வகைப்படும். பாங்கியிற் கூட்டலில் கூறப்பட்ட குறியிடல் கூறல் முதலாக விருந்திறை விரும்பல் ஈருகவுள்ள பன்னிரண்டும் இதன் விரியாகும்

நம்பியார் பகற்குறியில் ஒருசார் பகற்குறியென ஒருவகை கூறுகின்றார். பகற்குறியின் முடிவில் தலைவன் இரவுக்குறிக்கு நேர்ந்தான் எனினும், வேட்கை மிகுதியால் மறுநாளும் பகற்குறி வேண்டி வந்து நின்றான். தோழி இற்செறிப்புக்கூறி அதற்குடன் படாள். இவ்வாறு முந்திய பகற்குறிக்குப்பின் நடக்கும் பகற்குறி ஒருசார் பகற்குறியெனப்படும். தலைவன் தலைவியின் கூட்டப் பெருமையானும் இது ஒருசார் பகற்குறியாயிற்று. இவ்வொருசார் பகற்குறி இரங்கல் வன்புறை, இற்செறிப்புணர்த்தல் என்ற மூன்று வகையினையுடையது.

தலைவன் பிரியத் தலைவி மாலைப்பொழுது கண்டு இரங்கல். அதுகண்டு தோழி புலம்பல்; தலைவன் பகற்குறிக்கண் வாராது

நீட்டித்தவிடத்துத் தலைவி வருந்துதல்; தலைவியைத் தோழி இடித்துக் கூறல்; தலைவி முன்னிலைப் புறமொழி கூறல்; உயிர்த்தோழியொடு கூறல்; தோழி அச்சுறுத்தல்; தலைவனை நீங்குதற்குரிய அருமைப் பாட்டினைத் தலைவி நினைந்திரங்கல்; தலைவன் வரவினைத் தலைவிக்குத் தோழி சாற்றல்; தலைவன் சிறைப்புறமாகக் குறியிடத்திற்கு வரத் தோழி தங்களுக்குற்ற இற்செறிப்பை அறிவுறுத்திக் கூறல்; முன்னிலைப் புறமொழி கூறி அறிவுறுத்தல்; முன்னின்று உணர்த்தல்; முன்னின்று உணர்த்தி ஓம்படை சாற்றல்; தலைமகன் தஞ்சம் பெறாது நெஞ்சொடு கிளத்தல் என்பனவெல்லாம் இவண் நிகழும்.

## 11 பகற்குறியிடையீடு

பகற்குறி தடைப்படுதல் பகற்குறியிடையீடு. இது விலக்கல், சேரல், கலக்கம் என்ற மூன்று வகையினையுடையது.

தலைவனும் தலைவியும் குறியிடம் வருதலைப் பாங்கி விலக்குவது விலக்கல்; தோழி தலைமகளை ஆடுங்களத்தினின்று அழைத்துச் செல்லுதல் சேரல்; தலைவனை அடையாமல், தலைவி மனங்கலங்குவதும், தலைவியை அடையாமல் தலைவன் மனங்கலங்குவதும் கலக்கம்.

## 12 இரவுக்குறி

தலைவன் தலைவியர் களவுக்காலத்தில் இரவு நேரத்தில் சந்திப்பதற்காகக் குறிக்கப்படும் இடம் இரவுக்குறி. இத்தகைய இடம் வீட்டின்கண் மனையகம் புகாவிடத்து மனையோர்க்கிளவி கேட்கும் அணிமைத்தாக அமையும் என்பர் தொல்காப்பியர்.

இரவுக்குறியெனப்படுவது இரவுக்குறி வேண்டல், மறுத்தல், உடன்படல், கூட்டல், கூடல், பாராட்டல், பாங்கியிற் கூட்டல், உயங்கல், நீங்கல் என ஒன்பது வகைப்படும்.

தலைவன் தோழியிடம் இரவுக்குறி வேண்டுதல்; அவ் வேண்டுகோளைத் தலைவியும் தோழியும் மறுத்தல்; தோழி

தலைவன் வேண்டுகோளுக்கு உடன்படல் ; தோழியின் சொல்லுக்குத் தலைவி கட்டுப்படுதல் ; தோழி தலைவியைக் குறியிடத்திற்கு அழைத்துச் செல்லுதல் ; தலைவன் தலைவியர் கூடுதல் ; தலைவன் தலைவியைப் பாராட்டுதல் ; தோழி தலைவனளித்த கையுறையைப் பாராட்டுதல் ; தலைவன் தலைவியை விரும்பத் தோழி தலைவியை இல்லத்திற்கு அழைத்துச் செல்லுதல் ; இரவுக்குறிக்கண் தலைவன் வரும் வழியின் அருமையையெண்ணித் தலைவி வருந்துதல் ; அதனால் தலைவன் மயங்கி வருந்துதல்; தோழி தலைவியைக் குறிக்கண் உய்த்து நீங்கல்; தலைவன் தலைவியைக் கூடி நீங்கல் என்பன இரவுக்குறி தொடர்பான நிகழ்ச்சிகள்.

தலைவன் இரவுக்குறி வேண்டத்தோழி நெறியின் அருமை கூறல் ; தலைவன் நெறியின் எளிமை கூறல் ; தோழி தலைவன் மாட்டு அணியியல் வினாதல் ; தலைவனுக்குத் தோழி தன் நாட்டு அணியியல் சாற்றல் முதலான இருபத்தேழும் இதன் விரியாகும்.

## 13 இரவுக்குறியிடையீடு

இரவுச்சந்திப்பின் தடைப்பாடு இரவுக்குறி இடையீடு. இது அல்ல குறி, வருந்தொழிற்கு அருமை கூறல் என்ற இரண்டு வகையினையுடையது.

குறிபிழைபடுதல் அல்லகுறி. தலைமகன் இரவுக்குறிக்கண் தன் வருகையை உணர்த்தப் புள் எழுப்பல், புன்னைக்காய் சொறிதல் போன்ற அடையாளக் குறிகளைச் செய்வான். சில நேரங்களில் இக்குறி இயற்கையாகவே நிகழ்தலுண்டு. இங்ஙனம் தலைவனாற் செய்யப்பட வேண்டிய குறி பிறிதொன்றால் நிகழ்வது அல்ல குறியாகும்.

வருந்தொழிற்கு அருமையென்பது தலைவன் இரவுக்குறிக்கண் வருவதற்கு இடையீடாகிய நிகழ்ச்சிகள் நிகழ்தல். தாய் துஞ்சாமை, நாய் துஞ்சாமை, ஊர் துஞ்சாமை, காவலர் கடுகுதல், நிலவு வெளிப்படுதல், கூகை குழறல், கோழி குரல் காட்டுதல் என்பன இத்தகைய இடையீடுகளாகும்.

## 14 வரைவு வேட்கை

தலைவி தலைவனை மணந்து கொள்ளும் விருப்பம் கூறல் வரைவு வேட்கை. இது அச்சம், உவர்த்தல், ஆற்றாமை என்ற மூன்று வகையினையுடையது.

தலைவனை அடைதற்குத் தடையான நிகழ்ச்சிகள் உண்டாகத் தலைவி அஞ்சுதல் அச்சம். தோழி தலைவனை வெறுத்துக் கூறுதல் உவர்த்தல். தலைவனது வரவின்மையைத் தலைவி பெரிதும் வருந்துதல்.

## 15 வரைவு கடாதல்

களவில் தோழி தலைவனிடம் தலைவியை மணந்து கொள்ளும்படி வேண்டுதல் வரைவு கடாதல்.

இது பொய்த்தல், மறுத்தல், கழறல், மெய்த்தல் என்று நான்கு வகைப்படும்.

தலைவியைத் தலைவன் மணந்து கொள்ளச் செய்யக் கருதித் தோழி தலைவனிடம் பொய்யானவற்றைத் தானே புனைந்து கூறல் பொய்த்தல்.

தலைவன் குறியிடம் வருதலைத் தோழி குறிப்பாகவும் வெளிப்படையாகவும் மறுப்பது மறுத்தல்.

தலைவன் தலைவியை மணந்து கொள்ளாமல் களவினை நீட்டித்தல் நின்னுடு முதலியனவற்றிற்கு ஏற்றதல்லவெனக் கூறுவது கழறல்

தலைவனுக்குத் தோழி மெய்யானவற்றைக் கூறுதல் மெய்த்தல்.

அலர் அறிவுறுத்தல், தாய் அறிவுணர்த்தல், வெறி அச்சுறுத்தல், பிறர்வரைவு உணர்த்தல், வரைவு எதிர் உணர்த்தல், வரையும் நாள் உணர்த்தல் என்பன இவ்வரைவு கடாதலில் நிகழ்வன.

## 16 ஒருவழித் தணத்தல்

தணத்தல் — பிரிதல். களவுக்காலத்தில் ஊரில் அலர் எழுந்தால் அவ்வலர் சிறிது அடங்குமாறு தலைவன் ஒரோவழிப் பிரிதல் ஒருவழித் தணத்தல். இது ஓரிரு நாட்களே நீடிக்கும். இது நாடிடையிட்டும் காடிடையிட்டும் பிரியப்படாமல் ஒரூரின் கண்ணும் ஒரு நாட்டின் கண்ணும் நிகழும்

இவ்வொருவழித் தணத்தல் செலவு அறிவுறுத்தல், செலவு உடன்படாமை, செலவு உடன்படுத்தல், செலவு உடன்படுதல், சென்றுழிக் கலங்கல், தேற்றி ஆற்றுவித்தல், வந்துழி நொந்துரைத் தல் என்று ஏழுவகைப்படும்.

தலைவன் தன் பிரிவைத் தோழிக்குத் தெரிவித்தலும், அவள் அதனைத் தலைவிக்குத் தெரிவித்தலும் செலவறிவுறுத்தல்.

தலைவன் செலவைத் தோழி தடுத்தல், செலவு உடன்படாமை.

தலைவன் தன் செலவின் இன்றியமையாமையைக் கூறித் தோழியை உடன்படச் செய்தல் செலவுடன் படுத்தல்.

தலைவன் செலவிற்குத் தோழியுடன்படல், செலவுடன் படுதல்.

தலைவன் ஒருவழித்தணத்தற்கால் தலைவி மனங்கலங்குதல் சென்றுழிக் கலங்கல். அதுபோழ்து அமைதியான சொற்களால் தோழி தலைவியை ஆற்றுவித்தல் தேற்றி ஆற்றுவித்தல். மீண்டு வந்த தலைவனிடம் தோழி வருந்தியுரைத்தலும், தன் பிரிவினால் தோழிக்கும் தலைவிக்கும் உண்டான துயரத்திற்காகத் தலைவன் வருந்தியுரைத்தலும் வந்துழி நொந்துரைத்தலாகும்.

இவ்வொருவழித் தணத்தலில் தலைவன் தன் பதிக்குச் செல்வதனைத் தோழியிடம் சாற்றத் தோழி தலைமகனைச் செலவு விலக்குவாள்; தலைமகன் நீங்கல் வேண்டத் தோழி தலைமகனை விடுப்பள்; தோழி தலைவிக்குத் தலைவன் செலவுணர்த்தத் தலைவி நெஞ்சொடு புணர்த்துக் கூறுவாள்; தலைவனின் செலவு நீட்டிக்கத்

தலைவி காமம்மிக்க கழிபடர் கிளவி கூறுவள்; இந்நிலையில் தோழி தலைவியை ஆற்றுவிப்பள்.

## 17 வரைவிடைவைத்துப் பொருள்வயிற்பிரிதல்

களவின்கண் தோழி தலைவனை வரைவு வேண்ட, தலைவன் வரைவிற்கு உடன்பட்டுப் பொருள் தேடுதற்காகப் பிரிவான். இவ்வாறு வரைவைக் காரணமாக வைத்துப் பொருள் தேடுதற்குப் பிரிதல் வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல்.

இப்பிரிவில் தலைவன் காடிடையிட்டும், நாடிடையிட்டும் பிரிவான். இப்பிரிவு இரு திங்களினைக் கால எல்லையாக உடையது.

வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல் பிரிவறிவுறுத்தல், பிரிவுடன்படாமை, பிரிவுடன் படுத்தல், பிரிவுடன்படுதல், பிரிவுழிக் கலங்கல், வன்புறை, வன்பொறை, வரும் வழிக் கலங்கல், வந்துழி மகிழ்தல் என ஒன்பது வகைப்படும்.

வரைவினை இடைவைத்துப் பொருள் காரணமாகப் பிரிவதைத் தலைவன் தலைவிக்குத் தெரிவிக்கும்படித் தோழியிடம் கூறுதல் பிரிவறிவுறுத்தல். தலைவன் பிரிவுக்குத் தோழி உடன்படாமை பிரிவுடன் படாமை. உடன்பாட்டிற்குரிய சொற்களைக்கூறித் தோழி தலைவியை உடன்படச் செய்தல் பிரிவுடன்படுத்தல். தலைவன் பிரிவிற்குத் தலைவி உடன்படுதல் பிரிவுடன்படுதல். பிரிவின்கண் தலைவி மனங்கலங்கி வருந்தல் பிரிவுழிக் கலங்கல். தோழி தலைவிக்கு வற்புறுத்திக் கூறுதல் வன்புறை. தலைவன் பிரிவால் உளதாகிய பொறுத்தற்கரிய துயரத்தைத் தலைவி பொருத்துக் கொள்ளுதல் வன்பொறை. மீண்டுவரும் வழியில் தலைவன் தன் பிரிவால் தலைவிக்கு உண்டாகக் கூடிய ஆற்றுமையை நினைந்து மனங்கலங்கிக் கூறுதல் வரும்வழிக் கலங்கல். தலைவன் மீண்டு வந்தபோது தலைவிக்கு ஏற்படும் மகிழ்ச்சி வந்துழி மகிழ்ச்சியாம்.

இப்பிரிவில் தலைவன் தலைவிக்குத் தன்பொருட்டுப் பிரிவுணர்த்தும்படித் தோழியிடம் வேண்ட, தோழி நின் பொருட்டு நீயே அவளுக்குப் பிரிவுரை என்று கூறுவள்; பின்னர்த் தோழி

தலைமகளுக்குத் தலைமகன் செலவுணர்த்தத் தலைவி இரங்குவள்; தலைவன் செயல் குறித்துத் தோழி கொடுஞ்சொற் கூறுதலும், தலைவி கொடுஞ்சொற் கூறுதலும் உண்டு. தலைவன் மீண்டும் வருவானெனத் தோழி வலித்துக் கூறுவள்; தலைமகன் கூறிச் சென்ற பருவ வரவு கண்டு தலைமகள் புலம்பத் தோழி புதிதாக வந்ததெனக் கூறுவள்; தென்றல் முதலியவற்றைத் தலைவன் விடுத்த தூதாகக் கருதித் தலைமகள் ஆற்றுவிப்பள்;

தலைமகளை மீண்டும் காண வருகின்ற தலைவன் பாகனொடு சொல்லுதலும், தலைமகள் மேகத்தொடு சொல்லுதலும் உண்டு; வலம்புரிச் சங்கின் ஒலி கேட்டுத் தோழி அவன் வரவுணர்த்துவள்; அச் சங்கொலியினைத் தலைவி வாழ்த்துவள்; தலைமகன் வந்த வழி தோழி தாங்கள் அவனை நினைத்தமை வினவ, தலைமகன் நினைத்தமை கூறுவன்; தலைமகளை ஆற்றுவித்திருந்த அருமையினைத் தோழி தலைவனுக்குக் கூறுவள்.

# களவியல்

## களவு

117 உளமலி காதற் களவெனப் படுவ
தொருநான்கு வேதத் திருநான்கு மன்றலுள்
யாழோர் கூட்டத் தியல்பின தென்ப.

என்பது சூத்திரம். இவ்வோத்து என்னபெயர்த்ததோ? எனின், களவுணர்த்தினமையாற் களவியல் என்னும் பெயர்த்து. இதனுள் இத்தலைச் சூத்திரம் என்னுதலிற்றோ? எனின், களவு, கற்பு என்னுங்கைகோள் இரண்டனுள் களவென்னும் கைகோளினது இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) உளமலிதற்குக் காரணமாகிய அன்பினையுடைய களவென்று சொல்லப்படுகிறது, நான்காகிய வேதத்தும் சொல்லப் பட்ட எட்டாகிய மணத்துட் காந்தருவ மணத்தோடு ஒத்த இயல்பினையுடையதென்று சொல்லுவர் புலவர் என்றவாறு. என்னை?

“இன்பமும் பொருளு மறனு மென்ருங்
கன்பொடு புணர்ந்த வைந்திணை மருங்கிற்
காமக் கூட்டங் காணுங் காலை
மறையோர் தேஎத்து மன்ற லெட்டனுட்
டுறையமை நல்லியாழ்த் துணைமையோ ரியல்பே

(தொல். பொருள். கள. நூ. 1)

என்ருராகலின். வேதம் நான்காவன இருக்கு முதலாயின. மன்ற லெட்டாவன, பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந் தருவம், ஆசுரம், இராக்கதம், பைசாசம் என இவை. என்னை?

“அறனிலை யொப்பே பொருள்கோ டெய்வம்
யாழோர் கூட்ட மரும்பொருள் வினையே
யிராக்கதம் பேய்நிலை யென்றிக் கூறிய
மறையோர் மன்ற லெட்டவை; அவற்றுட்
டுறையமை நல்லியாழ்த் துணைமையோ ரியல்பிதன்
பொருண்மை யென்மனர் புலமை யோரே”

(இறை. அகப். முதல். நூற்பா உரை மேற்கோள்)

என்ருராகலின். அவற்றுட் பிரமமாவது, பிரமசாரியாய்த் தக்கானுமாய் இருப்பானுக்குக் கன்னியை அலங்கரித்துத் தீ முன்னர்க் கொடுப்பது. பிரசாபத்தியமாவது, தலைமகன் குரவர் வேண்டத் தலைமகள் குரவரும் மருதே உடன்பட்டுத் தலைமகளை அலங்கரித்துத் தீ முன்னர்க் கொடுப்பது. ஆரிடமாவது, ஒன்ருனு மிரண்டானும் ஆவும் ஆனேறும் வாங்கிக்கொண்டு கன்னியை அலங்கரித்துத் தீ முன்னர்க் கொடுப்பது. தெய்வமாவது, வேள்வி யாசிரியனுக்குக் கன்னியை அலங்கரித்துத் தீ முன்னர்க் கொடுப்பது. காந்தருவமாவது, கொடுப்பாரும் கேட்பாரும் இன்றித் தலைமகனும் தலைமகளும் தனியிடத்தெதிர்ப்பட்டுத் தாமே கூடுவது. ஆசுரமாவது, தலைமகட்குப் பொன்பூட்டிச் சுற்றத்தார்க்கும் வேண்டுவன கொடுத்துக் கொள்வது. இராக்கதமாவது, தலை மகடன்னினும் தமரினும் பெருது வலிதிற் கொள்வது. பைசாசமாவது, துயின்ருேள் மாட்டும் களித்தோள் மாட்டும் சென்று சேர்வது.

இவற்றுள், ஆசுர முதலாகிய மூன்றும் கைக்கிளைக்கு உரியவாம். தெய்வமீறாகிய நான்கும் பெருந்திணைக்கு உரியவாம் என்னை ?

'' முன்னைய மூன்றுங் கைக்கிளைக் குறிப்பே
பின்னைய நான்கும் பெருந்திணை பெறுமே ''
(தொல். பொருள். கள. நூ. சூ. 14)

என்றாராகலின்.

கைக்கிளைப் பாகுபாடு

118 காட்சி யையந் துணிவுகுறிப் பறிவென
மாட்சி நான்கு வகைத்தே கைக்கிளை.

(இ - ம்) மேற்சொல்லப்பட்ட எழுதிணையுள்ளும் முதலாகிய கைக்கிளைத்திணையின் பாகுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

**(இ - ள்)** கைக்கிளையாவது, காட்சிமுதலாகக் குறிப்பறிதல் ஈறாகச் சொல்லப்பட்ட நான்கு வகையினை உடைத்தாம் என்றவாறு. (2)

காட்சி

119 புணர்ப்பதும் பிரிப்பது மாகிய பால்களுட்
புணர்க்கும் பாலிற் பொருவிறந் தொத்த
கறைவேற் காளையுங் கன்னியுங் காண்ப
விறையோ னுயரினுங் குறைவின் றென்மனார்

**(இ - ம்)** நிறுத்த முறையானே காட்சிக்கு இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று,

(இ - ள்) முற்பிறப்பினுங் காமநுகர்ந்தார் இருவரையும் மறு பிறப்பினுங் கூட்டுவதும் பிரிப்பதுமாகிய நல்வினை தீவினை என்னும் இரண்டனுள் நல்வினை வயத்தால் தனியிடத்து எதிர்ப்படுவர்; குலத்தானுஞ் செல்வத்தானும் அறிவானும் பிறவாற்றானுந் தம்மோடு ஒத்தாரு மிக்காருமின்றித் தம்மிற்றாமே ஒத்த தலைமகனும் தலைமகளும். அவருள் தலைமகன் உயர்ந்தனனாயினுங் குற்றமின்றென்று சொல்லுவர் புலவர் என்றவாறு.

எனவே, தலைமகள் உயர்தல் குற்றமென்பதாம். என்னை?

" ஒன்றே வேறே யென்றிரு பால்வயி
னொன்றி யுயர்ந்த பால தாணையி
னொத்த கிழவனுங் கிழத்தியுங் காண்ப
மிக்கோ னயினுங் கடிவரை யின்றே"
(தொல்- பொருள். கள. நூ. 2)

என்றுராகலின். ஈண்டுக் காளை என்றது பருவங்குறித்து வந்த தோர் ஆகுபெயர் எனக்கொள்க. அதற்குச் செய்யுள்.

" புயலே சுமந்து பிறையே யணிந்து பொருவிலுடன்
கயலே மணந்த கமல மலர்ந்தொரு கற்பகத்தின்
அயலே பசும்பொற் கொடிநின்ற தாள்வெள்ளை யன்
னஞ்செந்நெல்
வயலே தடம்பொய்கை சூழ்தஞ்சை வாணன்
மலையத்திலே". (த. கோ. 1)

எனவும்,

" கருந்தடங்கண் வண்டாகச் செவ்வாய் தளிரா
அரும்பிவர் மென்முலை தொத்தாப் — பெருபணைத்தோள்
பெண்டகைப் பொலிந்த பூங்கொடி
கண்டேங் காண்டலுங் களித்தவெங் கண்ணே"
(பு. வெ. கைக்கிளை — செ.1)

எனவும் வரும். (3)

ஐயம்

120 மடமா னேக்கி வடிவுங் கண்ட
விடமுஞ் சிறந்துழி யெய்துவ தையம்.

(இ - ம்) ஐயம் நிகழுமிடம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) தலைமகள் வடிவும் அவளைத் தான் கண்ட இடமுஞ் சிறப்புடைய ஆய காலத்துத் தலைமகன்பால் ஐயம் நிகழும் என்றவாறு.

எனவே, அவை சிறப்புடைய அல்லாத காலத்தையம் நிகழாதென்பதாம். என்னை ?

" சிறந்துழி யையஞ் சிறந்த தென்ப
இழிந்துழி யிழிபே சுட்டலான"
(தொல். பொருள். கள. நூ 3)

என்றுராகலின் ; அதற்குச் செய்யுள் :-

"பாரணங் கோதிருப் பாற்கடலீன்றபங் கேருகத்தின்
ஓரணங் கோவெற் புறையணங் கோவுயர் பாவலர்க்கு
வாரணங் கோடி தருந்தஞ்சை வாணன்றென் மாறைவையை
நீரணங் கோநெஞ்ச மேதனி யேயிங்கு நின்றவரே"
(த. கோ. 2)

எனவும்,

" அணங்குகொ லாய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொன் மாலுமென் னெஞ்சு" (குறள் 1081)

எனவும்,

"தாமரைமேல் வைகிய தையல்கொ ருழ்தளிர்க்
காமரு பூங்கணையான் காதலிகொ — றேமொழி
மையம ருண்கண் மடந்தைக
ணைய மொழியா தாழுமென் னெஞ்சே,'
(பு. வெ. கைக்கிளை. செ 2)

எனவும் வரும். (4)

துணிவு

121 எழுதிய வல்லியுந் தொழில்புனை கலனும்
வாடிய மலருங் கூடிய வண்டும்
நடைபயி லடியும் புடைபயர் கண்ணு
மச்சமும் பிறவு மவன்பா னிகழுங்
கச்சமி லையங் கடிவன வாகும்.

(இ-ம்) துணிவு நிகழ்தற்கு ஏதுவாவன இவையென்பது உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) எழுதிய வல்லி முதலாக அச்சம் ஈருகச் சொல்லப் பட்ட ஏழும் அவை போல்வன பிறவுந் தலைமகன்மாட்டு நிகழா நின்ற எண்ணிலா ஐயங்களைப் போக்குவனவாம் என்றவாறு.

பிறவும்' என்றதனுல் நிழல் வியர்வு முதலாயினவுங் கொள்க என்னை?

"வண்டே யிழையே வள்ளி பூவே
கண்ணே யலமர லிமைப்பே யச்சமென்
றன்னவை பிறவு மாங்கணிகழ் கின்ற
ஐயங் களையுங் கருவி யென்ப"

(தொல். பொருள். கள. நூ. 4)

என்ருராகலின். அதற்குச் செய்யுள் :-

"மையார் குவளை வயற்றஞ்சை வாணனை வாழ்த்தலர்போல்
நையா தொழிமதி நன்னெஞ்ச மேயினி நம்மினுந்தன்
நெய்யார் கருங்குழற் செம்மலர் வாடின நீலவுண்கண்
கையா லழைப்பன போலிமை யாநிற்குங் காரிகைக்கே"

(த. கோ. 3)

எனவும்,

திருநுதல் வேரரும்புந் தேங்கோதை வாடும்
இருநிலஞ் சேவடியுந் தோயு — மரிபரந்த
போகித ழுண்கணு மிமைக்கும்
ஆகு மற்றிவ ளகலிடத் தணங்கே"

(பு. வெ. கைக்கிளை ப. செ. 3)

எனவும் வரும். (5)

குறிப்பறிதல்

122 அரிவை நாட்ட மகத்துநிகழ் வேட்கை
தெரிய வுணர்த்துங் குரிசிற் கென்ப.

(இ — ம்) குறிப்பறிதற்கு ஏது உணர்த்துதல் நுதலிற்று.

(இ — ள்) தலைமகளுள்ளத்து நிகழாநின்ற வேட்கையினைத் தலைமகற்கு விளங்க அறிவிக்கும் அவள் கண் என்றவாறு. என்னை?

"நாட்ட மிரண்டு மறிவுடம் படுத்தற்குக்
கூட்டி யுரைக்குங் குறிப்புரை யாகும்"
(தொல். பொருள். கள. நூ. 5)

என்றாராகலின். அதற்குச் செய்யுள் :—

"மண்ணிற் சிறந்த புகழ்த்தஞ்சை வாணன் மலயவெற்பிற்
பெண்ணிற் சிறந்தவிப் பேதைதன் பார்வை பெருவினையேன்
எண்ணிற் சிறந்த விருந்துயர் நோய்தனக் கின்மருந்தாய்க்
கண்ணிற் சிறந்த உறுப்பில்லை யாவதும் காட்டியதே"
(த. கோ. 4)

எனவும்,

"இருநோக் கிவளுண்க ணுள்ள தொருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து" (குறள் — 1091)

எனவும் வரும். (6)

களவிற்குரிய கிளவித்தொகை

123 இயற்கைப் புணர்ச்சி வன்புறை தெளிவே
பிரிவுழி மகிழ்ச்சி பிரிவுழிக் கலங்கல்
இடந்தலைப் பாடு பாங்கற் கூட்டம்
பாங்கிமதி யுடம்பாடு பாங்கியிற் கூட்டம்
பாங்கமை பகற்குறி பகற்குறி யிடையீ
டிரவுக் குறியே யிரவுக்குறி யிடையீடு
வரைவு வேட்கை வரைவு கடாதல்
ஒருவழித் தணத்தல் வரைவிடை வைத்துப்
பொருள்வயிற் பிரிதலென் றிருபதி னேழுங்
களவிற் குரிய கிளவித் தொகையே.

(இ — ம்) களவிற்கு உரிய கிளவித்தொகை உணர்த்துதல் நுதலிற்று.

(இ — ள்) இயற்கைப் புணர்ச்சி முதலாக வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல் ஈறாகச் சொல்லப்பட்ட பதினேழுங் களவென்னுங் கைகோளிற்கு உரிய கிளவியின்றொகையாம் என்றவாறு. (7)

## 1. இயற்கைப் புணர்ச்சி

இயற்கைப் புணர்ச்சியின் இலக்கணம்

124 தெய்வம் புணர்ப்பச் சிந்தைவே றுகி
எய்துங் கிழத்தியை யிறையோ னென்ப.

(இ - ம்) இயற்கைப் புணர்ச்சியது இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) தெய்வங் கூட்டத் தன்மனம் வேறுய்த் தலைமகளைக் கூடும் தலைமகன் என்று சொல்லுவர் புலவர் என்றவாறு. (8)

தெய்வத்தி னெய்தும் புணர்ச்சியின் விரி

125 கலந்துழி மகிழ்தலும் நலம்பா ராட்டலு
மேற்புற வணிதலும் என்னுமிம் மூன்றும்
போற்றிய தெய்வப் புணர்ச்சியின் விரியே.

(இ - ம்) இயற்கைப் புணர்ச்சியின் பாகுபாடாகிய இரண்டனுள், முன்னையதாகிய தெய்வப் புணர்ச்சியின் விரி உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) கலந்துழி மகிழ்தலும், நலம் பாராட்டலும், ஏற்புற வணிதலும், என்னும் இம்மூன்று கிளவியும் அகத்திணையியலுட் போற்றப்பட்ட தெய்வப் புணர்ச்சியின் விரியாம் என்றவாறு. (9)

தலைவியின் எய்தும் புணர்ச்சியின் வகை

126 வேட்கை யுணர்த்தல் மறுத்தல் உடன்படல்
கூட்டமென் றிறைவியிற் கூட்டநால் வகைத்தே.

(இ - ம்) தலைமகளாற் புணரும் புணர்ச்சியின் வகை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) வேட்கையுணர்த்தல் முதலாகக் கூட்டம் ஈறுகச் சொல்லப்பட்ட நான்கு வகையினை உடைத்து, தலைமகளாற் புணரும் புணர்ச்சி என்றவாறு. (10)

தலைவியினெய்தும் புணர்ச்சியின் விரி

127 இரந்துபின் னிற்றற் கெண்ணலு மிரந்து
பின்னிலை நிற்றலும் முன்னிலை யாக்கலும்
மெய்தொட்டுப் பயிறலும் பொய்பா ராட்டலும்
இடம்பெற்றுத் தழாஅலும் வழிபாடு மறுத்தலும்
இடையூறு கிளத்தலும் நீடுநினைந் திரங்கலும்
மறுத்தெதிர் கோடலும் வறிதுநகை தோற்றலும்
முறுவற்குறிப் புணர்தலு முயங்குத லுறுத்தலும்
புணர்ச்சியின் மகிழ்தலும் புகழ்தலும் பிறவும்
உணர்த்திய தலைவியிற் புணர்ச்சியின் விரியே.

(இ-ம்) தலைமகளாற் புணரும் புணர்ச்சியின் விரி உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) இரந்து பின்னிற்றற்கெண்ணல் முதலாகப் புகழ்தல் ஈருகச் சொல்லப்பட்ட பதினைந்தும் பிறவும் மேற்சொல்லப்பட்ட தலைமகளாற் புணரும் புணர்ச்சியின் விரியாம் என்றவாறு.

அவற்றுள், இரந்து பின்னிற்றற் கெண்ணற்குச் செய்யுள்:

"தேங்கிய காதர வாதரஞ் செப்பித்தண் செப்பிணைபோல்
வீங்கிய மாமுலை மேவுதும் யாம்விச யக்கொடிமேல்
வாங்கிய சாப முயர்த்தவன் போர்வென்ற வாணன்வையந்
தாங்கிய மாலனை யான்றஞ்சை சூழ்வரைத்
தாழ்குழற்கே" (த. கோ. 5)

எனவும்,

"மருந்திற் றீராது மணியி னுகா
தருந்தவ முயற்சியி னகற்றலு மரிதே
தான் செய் நோய்க்குத் தான்மருந் தாகிய
தேனிமிர் நறவின் றேறல் போல
நீதர வந்த நிறையழி துயர
மாடுகொடி மருங்குனின் னருளி னல்லது
பிறிதிற் றீரா தென்பது பின்னின்
றறியக் கூறுது மெழுமோ நெஞ்சே
நாடுவிளங் கொண்புகழ் நடுதல் வேண்டித்தன்

ஞுடுமழைத் தடக்கை யறுத்துமுறை நிறுத்த
பொற்கை நறுந்தார்ப் புனைதேர்ப் பாண்டியன்
கொற்கையம் பெருந்துறைக் குனிதிரை தொகுத்த
விளங்குமுத் துறைக்கும் வெண்பற்
பன்மாண் சாயற் பரதவர் மகட்கே''
(அகப். விள. நூ 123ன் உரை மேற்கோள்)

எனவும் வரும்.

இரந்து பின்னிலை நிற்றற்குச் செய்யுள் :

''செறிவேழ வெஞ்சிலை வேடஞ்சை வாணன் றிருந்தலர்மே
லெறிவேலை வென்றகண் ணென்னுயிர்க்கேவி
யிருண்டறல்போல்
நெறிவே யலங்கன் முடித்தலை சாய்த்திங்ங னிற்பதுதா
னறிவே யறிந்த வுனக்கலர் மாளிகை யாரணங்கே''
(த. கோ. 6)

எனவும்,

''ஓடுந் திமில்கொண் டுயிர்கொல்வர் நின்னையர்
கோடும் புருவத் துயிர்கொல்வை மன்னீயும்
பீடும் பிறரெவ்வம் பாராய் முலைசுமந்து
வாடுஞ் சிறுமென் மருங்கிழவல் கண்டாய்''
(சிலம்பு. கானல்வரி 19-2)

எனவும் வரும்.

முன்னிலையாக்கற்குச் செய்யுள் :

''வழுதியர் நாமம் வளர்க்கின்ற வாணன்றென்
மாறைவண்டு
கொழுதிய லார்செய் குழன்மட வீர்நுங்குற் றேவல்செய்து
தொழுதிய லாயத் தொகுதியோ டாடிச் சுனைகுடையா
தெழுதிய பாவையைப் போனின்ற வாறென்
னியம்புமினே'' (த. கோ. 7)

எனவும்,

"ஒள்ளிழை மகளிரொ டோரையு மாடாய்
வள்ளிதழ் நெய்தற் றொடலையும் புனையாய்
விரிபூங் கான லொருசிறை நின்றோய்
யாரை யோநிற் றொழுதனம் வினவுதும்
கண்டோர் தண்டா நலத்தை தெண்டிரைப்
பெருங்கடற் பரப்பி னமர்ந்துறை யணங்கோ
இருங்கழி மருங்கி னிலைபெற் றனையோ
சொல்லுநீ மடந்தை யென்றனெ னதனெதிர்
முள்ளெயிற்று முறுவலுந் திறந்தன
பல்லித ழுண்கணும் பரந்தவாற் பனியே"
(நற்றிணை. 155)

எனவும் வரும்.

மெய்தொட்டுப் பயிறற்குச் செய்யுள்:

"நல்லார் விழிபோ லிருந்து மளியெனு நாமம்பெற்றும்
அல்லார் குழலி லமர்ந்திருந் தாலம ராரைவெல்ல
வல்லான் வரோதயன் வாணன்றென் மாறை மதுகரங்கா
ணில்லா திடையுமக் கேபழி சால நிலைநிற்குமே"
(த கோ. 8)

எனவும்,

"பிறை நுதலாள் கொங்கைப் பெருக்கத்தாற் றேய்ந்து
குறையு மிடைகண்டுங் கொண்டற்— பொறையளகத்
தண்டே னசையாற் சனநாதன் றொண்டியின்வாய்
வண்டே மகிழ்ந்தேறல் வந்து"

எனவும் வரும்.

பொய் பாராட்டற்குச் செய்யுள்:

"பருந்தொன்று கூரிலை வேற்படை வாணன் பரிமளப்பூஞ்
செருந்தொன்று சோலைத்தென் மாறையன் னீர்செழுந் [திங்களுங்கண்
முருந்தொன்று சோதி முகங்கண்டு நாணி முயன் மறுத்தீர்
மருந்தொன்று நாடியன் றேவட மேருவலங்கொள்வதே"
(த. கோ.9)

"மாதர் முகம்போ லொளிவிட வல்லையேற்
காதலை வாழி மதி" (குறள். 1119)

எனவும் வரும்.

இடம்பெற்றுத் தழாஅற்குச் செய்யுள் :

"படம்பட்ட வாளரா வல்குலி லேதனை பட்ட நெஞ்சம்
விடம்பட்ட வாள்பட்ட வேதனை தீரவிண் டோய் பொழிலுந்
தடம்பட்ட வாவியுஞ் சூழ்தஞ்சை வாணன் றமிழ்க்கிரிநா
மிடம்பட்ட வார முலைத்தடந் தோய்தற் கிடமிதுவே"
(த. கோ. 10)

என வரும்.

வழிபாடு மறுத்தற்குச் செய்யுள் :

"தேருத தெவ்வென்ற வாணன்றென் மாறைச்செந்
தேனருவி
யூருத காலத்து மூறுதண் சார லொதுக்கிடந்தந்
தாருத சோகமு மாற்றுதல் வேண்டு மசோகமெய்தி
மாருத தண்ணளி கூர்மலர் வாண்முக மாதவியே"
(த. கோ. 11)

எனவரும்.

இடையூறு கிளத்தற்குச் செய்யுள் :

"சிதையா முளரித் திருமாளிகையிற் சிறந்ததென்றென்
இதயார விந்தத் தினிதிருப் பீரிரு கோட்டொருகை
மதயானை வாணன் வருந்தஞ்சை சூள்வையை
நாட்டுறைவோர்
புதையார் தனமென்ப தோமதர் வேற்கண் புதைந்ததுவே"
(த. கோ. 12)

எனவும்,

"சொல்லிற் சொல்லெதிர் கொள்ளா யாழநின்
றிருமுக மிறைஞ்சி நாணுதி கதுமெனக்
காமங் கைம்மிகிற் றுங்குத லெளிதோ
கொடுங்கே ழிரும்புற நடுங்கக் குத்திப்

புலிவிளை யாடிய புலவுநாறு வேழத்தின்
றலைமருப் பேய்ப்பக் கடைமணி சிவந்தநின்
கண்ணே கதுவ வல்ல கண்ணு
ராண்டலை மதில ராகவு முரசுகொண்
டோம்பரண் கடந்த வடுபோர்ச் செழியன்
பெரும்பெயர்க் கூட லன்னநின்
கரும்புடைத் தோளு முடையவா லணங்கே''
(நற்றிணை. 39)

எனவும் வரும்.

நீடுநினைந் திரங்கற்குச் செய்யுள் :

''தமிழ்தங் கியதஞ்சை காவலன் வாணன் றடஞ்சிலம்பிற்
குமிழ்தங் கியமதிக் கொம்பரன் னீர்குளிர் வெண்ணிலவூ
டுமிழ்தண் டரளப் பவளச்செங் கேழ்வள்ளத் துள்ளிருக்கும்
அமிழ்தந் தருவதென் றேபெரு வேட்கையென்
னுருயிர்க்கே'' (த. கோ. 13)

எனவும்,

''தீண்டலு மியைவது கொல்லோ மாண்ட
வில்லுடை வீளையர் கல்லிடு பெடுத்த
நனந்தலைக் கானத் தினந்தலைப் பிரிந்த
புன்கண் மடமா னேர்படத் தன்னையர்
சிலைமாண் கடுவிசைக் கலைநிறத் தழுத்திக்
குருதியொடு பறித்த செங்கோல் வாளி
மாறுகொண் டன்ன வுண்க
ணறிருங் கூந்தற் கொடிச்சி தோளே. (குறுந் — 272 )

எனவும் வரும்.

மறுத்தெதிர்கோடற்குச் செய்யுள்:

''கறையா ரிலங்கிலை வேலன்பர் காமக் கடற்கெதிர்ந்த
நிறையாம் வரம்பினி நிற்பதன் றுனிறை நீருலகை
மறையாமல் வன்கலி மாற்றிய வாணன்றென் மாறையினும்
பொறையார் தவஞ்செய்திலேநெஞ்ச மேயென் புகல்வதுவே?''
(த. கோ. — 14)

எனவும்,

"பண்டுநாம், வேறல்ல மென்பதொன் றுண்டா லவனொடு
மாறுண்டோ நெஞ்சே நமக்கு" (கலி. முல்லை. 26)

எனவும் வரும்.

வறிதுநகை தோற்றற்குச் செய்யுள் :

"எறிதே னலம்புஞ் சிலம்பினெப் போது மிரந்திவள்பின்
வெறிதே திரிந்து மெலிந்தன நாமுள்ள மெல்லியற்குப்
பிறிதேகொ லென்னும் பெருந்தகை தேறப் பெரிதுயிர்த்து
வறிதே முறுவல்செய் தாடஞ்சை வாணன்
வரையணங்கே"
(த. கோ. 15)

எனவும்,

"அன்னையோ, மன்றத்துக் கண்டாங்கே சான்றோர் மகளிரை
யின்றி யமையேனென் றின்னவுஞ் சொல்லுவாய்"
(கலி. முல்லை. 10)

எனவும் வரும்.

முறுவற்குறிப்புணர்தற்குச் செய்யுள் :

"வின்மலை வேலன்ன நன்னுதல் வாட்கண்ணி
வேட்கையெண்ணுள்
என்மலை வேனென்னு மென்னுயிர் தாங்கு
மெதிர்ந்தவொன்னார்
மன்மலை வேழந் திறைகொண்ட சேய்தஞ்சை
வாணன் மஞ்சார்
தென்மலை வேய்நிக ரும்பெருந் தோளி சிறுநகையே"
(த. கோ. 16)

எனவும்,

"முகைமொக்கு ளுள்ளது நாற்றம்போற் பேதை
நகைமொக்கு ளுள்ளதொன் றுண்டு" (குறள். 1274)

எனவும் வரும்.

முயங்குதலுறுத்தற்குச் செய்யுள் :

"வானக் கதிரவன் மண்ணக மாதை மணந்ததன்றே
நானக் குழலியை நானின்று பெற்றது நாவலர்க்குத்
தானக் களிறு தரும்புயல் வாணன் தமிழ்த்தஞ்சைசூழ்
கானக் கடிவரை வாய்விரை நாண்மலர்க் காவகத்தே"

(த. கோ. 17)

எனவும்,

"கோட லெதிர்முகைப் பசுவீ முல்லை
நாறிதழ்க் குவளையோ டிடைப்பட விரைஇ
யைது தொடை மாண்ட கோதை போல
நறிய நல்லோண் மேனி
முறியினும் வாய்வது முயங்கற்கு மினிதே"

(குறுந். 62)

எனவும் வரும்.

புணர்ச்சியின் மகிழ்தற்குச் செய்யுள் :

"மலைநாடு கொண்ட வழுதிகண் போல்பவன்
வாணனெண்ணெண்
கலைநாடு தஞ்சையர் காவலன் மால்வரைக்
கன்னிபொன்னுண்
முலைநா முயன்று முயங்கின மான்முயன்
றுலினியைந்
தலைநாக நன்மணி யும்பெற லாமித்
தரணியிலே" (த. கோ. 18)

எனவும்,

"கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுள" (குறள். 1101)

எனவும் வரும்.

புகழ்தற்குச் செய்யுள் :

'' திரண்மா மரகதச் செய்குன்று காளென்றுஞ் செவ்வன நீர்
முரண்மா தவங்கண் முயன்றுசெய் தாலுமுளரிமங்கை
சரண்மாறை வாணன் றமிழ்த்தஞ்சை நாட்டென் றனியுயிர்க்கோர்
அரண்மா னனையகண் ணாள்கொங்கை போற லரிதுமக்கே''

(த. கோ. 19)

என வரும்.

இவற்றுள் இரந்து பின்னிற்றற்கெண்ணல் முதலாக நீடு நினைந்திரங்கல் ஈறுகச் சொல்லப்பட்ட ஒன்பதனுள், வழிபாடு மறுத்தல் ஒன்றுமொழித்தல்லாதன எட்டும் வேட்கையுணர்த்தற் குரியவாம் ; வழிபாடு மறுத்தலாய ஒன்றுந் தலைமகள் மறுத்தற் குரித்தாம் ; மறுத்தெதிர் கோடலும் வறிதுநகை தோற்றலும் என்னுமிரண்டுந் தலைமகள் உடன்பாட்டிற்குரியவாம் : முறுவற் குறிப்புணர்தலும், முயங்குதலுறுத்தலும் தலைமகள் உடன்பாட்டிற் குரியவாம் ; புணர்ச்சியின் மகிழ்தலும், புகழ்தலும் என்னும் இரண்டுந் தலைமகன் கூட்டத்திற்குரியவாம். 'பிறவும்' என்றதனால் அணிதலும் கொள்ளப்படும். இலக்கியம் மேலே காட்டப்படும். (11)

## 2 வன்புறை

### வன்புறையின் வகை

128 ஐயந் தீர்த்தல் பிரிவறி வுறுத்தலென்
றெய்திய வன்புறை யிருவகைத்தாகும்.

(இ – ம்) வன்புறையின் வகை உணர்த்துதல் நுதலிற்று.

(இ – ள்) மேற்சொல்லப்பட்ட வன்புறை ஐயந்தீர்த்தலும் பிரிவறிவுறுத்தலும் என இரண்டு கூற்றினையுடைத்தாம் என்றவாறு.

இக்கிளவி '' தீராத்தோற்றம் '' (தொ. பொ. கள. 11) என்பதனுற் கொள்ளப்படும். (12

வன்புறையின் விரி

129 அணிந்துழி நாணிய துணர்ந்து தெளி வித்தலும்
பெருநயப் புரைத்தலும் தெய்வத்திறம் பேசலும்
பிரியே னென்றலும் பிரிந்துவரு கென்றலும்
இடமணித் தென்றலு மென்றிவை யாறும்
மடனறத் தெரிந்த வன்புறை விரியே.

(இ - ம்) வன்புறையின் விரி உணர்த்துதல் நுதலிற்று.

(இ – ள்) அணிந்துழி நாணியது உணர்ந்து தெளிவித்தல் முதலாக இடமணித் தென்றல் ஈறுகச் சொல்லப்பட்ட ஆறும் தலைமகன் தலைமகளது அறிவின்மை நீங்க ஆராய்ந்து சொன்ன வன்புறையின் விரியாம் என்றவாறு.

வன்புறுத்தலான் வன்புறை என்று பெயராயிற்று. அவற்றுள் அணிந்துழி நாணியது உணர்ந்து தெளிவித்தற்குச் செய்யுள்:

" நாவியுங் காரகி லாவியுந் தோய்குழ ஞணியஞ்சேல்
வாவியுஞ்சோலையுஞ் சூழ்தஞ்சைவாணன்றென் மாறைவயற்
காவியுஞ் சேலுங் கமலமுங் காட்டுநின் கண்மலரும்
ஆவியும் போலினி யாரணியாக வணிந்தனனே "

(த. கோ. 20)

என வரும். அணிந்துழி நாணியது உணர்ந்து தெளிவித்தற்கு விதி யாதோ வெனின்?

" முன்புற் றறியா முதற்புணர்ச்சி மொய்குழலை
யின்புற் றணிந்த வியலணியும் — வன்பணியு
நாணேனுந் தொல்லை யணியென்ன நன்னுதலை
.......... னந்து "

என்னும் பரிபாட்டினுட் செய்யுளாம் எனக் கொள்க,

பெருநயப் புரைத்தற்குச் செய்யுள் :

" மன்னு வுலகத்து மன்னிய சீர்த்தஞ்சை வாணன்வெற்பில்
என்னுவி யன்ன விவளிடை மேலிணை கொண்டெழுந்த
பொன்னு ணணிகொங்கை போலவண் டீருங்கள் பொய்கை
யுண்டோ
நன்னு ளரும்பொருதாளிரண்டீனு நளினங்களே "

(த. கோ. 21)

எனவும்,

" கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோநீ யறியும் பூவே " (குறுந். 2)

எனவும் வரும்.

தெய்வத்திறம் பேசற்குச் செய்யுள் :

" மன்னிய பார்புகழ் வாணன் றென்மாறையின்
மாந்தளிர்போன்
மின்னிய மாமை விளர்ப்பதென் னேவிதி கூட்டநம்மிற்
பின்னிய காதல் பிரிப்பவர் யாரினிப் பேரருவி
இன்னிய மாக விளமயி லாடு மிரும்பொழிற்கே "

(த. கோ. 22)

எனவரும்.

பிரியேனென்றற்குச் செய்யுள் :

" வண்கொடி யேய்மதின் மாறை வரோதயன்
வாணனென்னூர்
எண்கொடி யேனெய்த விவ்வண்ண நீயிரங் கேலிரங்கேல்
நுண்கொடி யேரிடை வண்டிமிர் பூங்குழ னூபுரத்தாட்
பெண்கொடி யேபிரி யேன்றரி யேனிற் பிரியினுமே "

(த. கோ. 23)

எனவும்,

" யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையு நுந்தையு மெம்முறைக் கேளிர்
யானு நீயு மெவ்வழி யறிதுஞ்
செம்புலப் பெய்நீர் போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே" (குறுந். 40)

எனவும் வரும்.

பிரிந்து வருகென்றற்குச் செய்யுள் :

" சென்றே பகைவென்ற திண்படை வாணன் தெழுந்தஞ்சைசூழ்
நன்றே தருவையை நாடனே யாய்நம தாருயிர்போல்
ஒன்றே யெனதுரை யூங்குயர் சோலையி னூடொளித்து
நின்றே வருவலிங் கேவிளை யாடுக நீசிறிதே"
(த கோ. 24)

எனவரும்.

இடமணித் தென்றற்குச் செய்யுள் :

" மணிபொன் சொரியுங்கை வாணன்றென் மாறை மருவினர் போல்
தணிபொன் சொரியுந் தடமுலை யாயுயர் சந்தமுந்தி
அணிபொன் சொரியு மருவியெஞ் சார லகத்தலர்தேங்
கணிபொன் சொரியுநின் சாரன்மென் காந்தளங் கையகத்தே"
(த. கோ. 25)

எனவும்,

" நெடுவே றுடக்கிய நீர்க்குமதி காதல்
வடிவே றுடக்கியநீர் மாதோ — நெடுவேய்க்
கணமா மழைக்குவட்டெங் கார்வரைப்பூஞ் சாரன்
மணநாறு நுங்குன்றின் வந்து"

எனவும் வரும். இவற்றுள், முன்னைய மூன்றும் ஐயம் தீர்த்தற்குரிய; பின்னைய மூன்றும் பிரிவறிவுறுத்தற்குரிய எனக்கொள்க (43)

## 3 தெளிவு

### தெளிவின் இலக்கணம்

**130 தலைவன் மாற்றந் தலைவி தேற்றந்
தெளிவா மென்பர் தெளிந்திசி னோரே.**

(இ - ம்) தெளிவு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) தலைமகன் சொல்லைத் தலைமகள் தெளித்தலைத் தெளிதலென்று சொல்லுவர் புலவர் என்றவாறு.

அதற்குச் செய்யுள் :

''எத்துந் தமதுரை தேறிநின் றேனையிங் கேதனியே
வைத்தங் ககன்று மறந்துறை யார்வறி யோர்கவர
முத்துந் துகிரு மிரங்குந் தரங்க முகந்தெறிந்து
தத்துங் கரைவையை சூழ்தஞ்சை வாணன் தமிழ்வெற்பரே''
(த. கோ. 26)

எனவும்,

''நின்ற சொல்லர் நீடுதோன் றினியர்
என்று மென்றோள் பிரிவறி யலரே
தாமரைத் தண்டா தூதி மீமிசைச்
சாந்திற் றொடுத்த தீந்தேன் போலப்
புரைய மன்ற புரையோர் கேண்மை
நீரின் றமையா வுலகம் போலத்
தம்மின் றமையா நந்நயந் தருளி
நறுநுதல் பசத்த லஞ்சிச்
சிறுமை யுறுபவோ செய்பறி யலரே'' (நற்றிணை. 1)

எனவும் வரும். (14)

## 4 பிரிவுழி மகிழ்ச்சி

பிரிவுழி மகிழ்ச்சியின் விரி

**131 செல்லும் கிழத்தி செலவுகண் டுளத்தொடு**
**சொல்லலும் பாகனொடு சொல்லலு மிரண்டும்**
**பிரிவுழி மகிழ்ச்சியின் விரியெனக் கொளலே.**

(இ - ம்) பிரிவுழி மகிழ்ச்சியின் விரியுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) அவ்வாறு அவ்விடத்து நீங்கித் தலைமகள் தன்னைக் காணுமல் தானவளைக் காண்பதோர் அணிமைக்கண் நின்ற தலைமகன், புணர்ச்சிக் களத்தினின்றும் போகாநின்ற தலைமகளது செலவு கண்டு, தன்னெஞ்சொடு கூறலும், பாகனொடு கூறலுமாகிய இவ்விரண்டும் பிரிவுழி மகிழ்ச்சியின் விரியாம் என்றவாறு.

இங்குக் கிளவிப்பன்மையின்மையின் வகை இன்ருயிற்று.

செல்லுங்கிழத்தி செலவுகண்டு உளத்தொடு சொல்லற்குச் செய்யுள் :

'' அகிலேந்து கூந்த லொருகையி லேந்தி
யசைந்தொருகை
துகிலேந்தி யேந்துந் துணைச்சிலம் பார்ப்பத்
துளிகலந்த
முகிலேந்து பூம்பொழில் சூழ்தஞ்சை வாணன்முந்
நீர்த்துறைவாய்
நகிலேந்து பூங்கொடி போற்செல்லு மானெஞ்ச
நம்முயிரே '' (த. கோ. 27)

எனவும்,

'' காணு மரபிற் றுயிரென மொழிவோர்
நாணிலர் மன்ற பொய்ம்மொழிந் தனரே
யாஅங் காண்டுமெம் மரும்பெற லுயிரே
சொல்லு மாடு மென்மெல வியலுங்
கணைக்கா னுணுகிய நுசுப்பின்
மழைக்கண் மாதர் பணைப்பெருந் தோட்டே ''

(தொல். பொருள். களவியல். நூ. 10 உரையின் மேற்கோள்)

எனவும் வரும்.

பாகனொடு சொல்லற்குச் செய்யுள் :

''தென்பாற் றிலகமன் ஞன்றஞ்சை வாணன்றென்
மாறைமுந்நீர்
வன்பாற் றிரண்முத்த வண்டலின் மேல்வரு
மேதமஞ்சி

முன்பார்த்தென் னெஞ்சம் வரும்வழி பார்த்து
முறைமுறையே
பின்பார்த் தொதுங்குதல் காண்வல வாவொரு
பெண்ணணங்கே '' (த. கோ. 28)

என வரும். இவையிரண்டற்கும் இலக்கணவிதி இவையாகக் கொள்க. (15)

## 5 பிரிவுழிக் கலங்கல்

பிரிவுழிக் கலங்கலின் வகை

132 மருளுற் றுரைத்தல் தெருளுற் றுரைத்தலென்
றிருவகைத் தாகும் பிரிவுழிக் கலங்கல்.

(இ - ம்) பிரிவுழிக் கலங்கலின் வகை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) மருளுற்றுரைத்தலும், தெருளுற்றுரைத்தலுமென இரண்டு வகையினை யுடைத்தாம் பிரிவுழிக் கலங்கல் என்றவாறு. (தொ. பொ. கள. 102) (16)

பிரிவுழிக் கலங்கலின் விரி

133 ஆய வெள்ளம் வழிபடக் கண்டிது
மாயமோ வென்றலும் வாயில்பெற் றுய்தலும்
பண்புபா ராட்டலும் பயந்தோர்ப் பழிச்சலுங்
கண்படை பெருது கங்குனோ தலுமெனு
மைந்தும் பிரிவுழிக் கலங்கல்விரி யாகும்.

(இ -ம்) பிரிவுழிக்கலங்கலின் விரி உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) தலைமகளை ஆயவெள்ளம் வழிபடக் கண்டிது மாயமோவென்றல் முதலாகக் கண்படை பெருது கங்குனோதல் ஈருகச் சொல்லப்பட்ட ஐந்தும் பிரிவுழிக் கலங்கலின் விரியாம் என்றவாறு.

ஆயவெள்ளம் வழிபடக் கண்டிது மாயமோவென்றற்குச் செய்யுள்

" சீயங்கொ லோவெனத் தெவ்வென்ற வாணன்றென்
மாறைவையைத்
தோயங்கோ லொவெனு நேயநம் பால்வைத்துச்
சோலைமஞ்ஞை
யாயங்கொ லோவெனு மாயத்துள் ளாளிவ்
வரிவையென்ன
மாயங்கொ லோநெஞ்ச மேமணம் போலிங்கு
வந்துற்றதே " (த. கோ. 29)

எனவும்,

" மனவே ரல்குன் மடந்தை கூட்டங்
கனவே தெரியினும் யாவது
நனவே தெரியினு நண்ணலோ வரிதே "

எனவும் வரும்.

வாயில் பெற்றுய்தற்குச் செய்யுள் :

" பெருமான் மருந்தொன்று பெற்றனம்
யாநெஞ்சம் பேதுறல்பார்
மருமான் வரோதயன் வாணன்றென் மாறை
மணங்கமழ்பூந்
திருமான் முகமலர்ச் சேயரி பாய்கயல்
சென்றுசென்றவ்
வொருமா னகைமுக மாமல ரோடை
யுலாவருமே " (த. கோ. 30)

எனவும்,

" நோக்கினும் பிறர்முக நோக்காள் சாரினும்
பூக்குழன் மடந்தை தோள்சா ரும்மே
யன்ன தலையளி யுடைமையி
னின்னுயிர்த் தோழி யேந்திழை யிவட்கே "

எனவும் வரும்.

பண்புபாராட்டற்குச் செய்யுள் :

'' மயலார் களிற் றண்ணல் வாணன்றென் மாறையில்
வாய்ந்தவர்கண்
கயலா மெனிற்கயல் கள்ளங்கொள் ளாகருந்
தாழளகம்
புயலா மெனிற்புயல் போதுகொள் ளாவிப்
புனையிழையார்
இயலா மனத்தையும் வேறென்ன பேரிட்
டியம்புவதே '' (த. கோ. 31)

எனவும்,

'' குன்றக நாடன் குன்றத்துக் கவாஅற்
பைஞ்சுனை பூத்த பகுவாய்க் குவளையும்
அஞ்சி லோதி யசைநடைக் கொடிச்சி
கண் போன் மலர்ந்த லரிதிவள்
தன்போற் சாயன் மஞ்ஞைக்கு மரிதே'' (ஐங்குறு. 260)

எனவும் வரும்

பயந்தோர்ப் பழிச்சற்குச் செய்யுள் :

'' அணியுஞ் சுடர்விரி சங்குபங் கேருக மாடகமும்
மணியுந் தரமன்னி வாழிய ரோதஞ்சை வாணன் வெற்பில்
தணியுந் தொழிலொழித் தின்பமுந் துன்பமுந் தன்பதமே
பணியும் பணியெனக் குப்பயந் தாளைப் பயந்தவரே ''
(த. கோ. 32)

எனவும்,

'' அல்குபட ருழந்த வரிமதர் மழைக்கட்
பல்பூம் பகைத்தழை நுடங்கு மல்குற்
றிருமணி புரையு மேனி மடவோள்
யார்மகள் கொல்லிவ டந்தை வாழியர்
துயர முறீஇயின ளெம்மே யகல்வய
லரிவன ரரிந்துத் தருவனர் பெற்றுந்
தண்சேறு தாஅய் மதனுடை நோன்றாட்
கண்போ னெய்தல் போர்விற் பூக்குந்
திண்டேர்ப் பொறையன் றொண்டித்
தன்றிறம் பெறுகவிவ ளீன்றதாயே '' (நற்றிணை. 8)

எனவும் வரும்.

கண்படை பெருது கங்குனேதற்குச் செய்யுள் :

"வாமக் கலையல்குல் வாணுத லார்தஞ்சை வாணன்வெற்பில்
நாமக் கலவி நலங்கவர் போது நமக்களித்த
காமக் கனலவர் கையகல் காலைக் கடும்பனிகூர்
யாமக் கடலகத் துந்தணி யாதினி யென்செய்துமே"

(த. கோ. 33)

எனவும்,

"ஓதமு மொலியோ வின்றே யூதையுந்
தாதுளர் கானற் றெளவென் றன்றே
மணன்மலி மூதூ ரகல்நெடுந் தெருவிற்
கூகைச் சேவல் குராலோடேறி
யாரிருஞ் சதுக்கத் தஞ்சுவரக் குழறு
மணங்குகால் கிளரு மயங்கிரு ணடுநாட்
பாவை யன்ன பலராய் வனப்பிற்
றடமென் பணைத்தோண் மணமிகு குறமகள்
சுணங்கணி வனமுலை முயங்குத லுள்ளி
மீன்கண் டுஞ்சும் பொழுதும்
யான்கண் டுஞ்சிலன் யாதுகொ னிலையே"

(நற்றிணை. 319)

எனவும் வரும்.

இவற்றுள் ஆயவெள்ளம் வழிபடக் கண்டிது மாயமோ வென்றலாகிய ஒன்றும் மருளுற்றுரைத்தற்குரித்து. ஏனைய நான்குந் தெருளுற்றுரைத்தற்குரியன. இவை ஐந்துகிளவிக்கும் ஈண்டுக் காட்டிய செய்யுளே இலக்கணமாகக் கொள்க. (17)

## 6 இடந்தலைப்பாடு

இடந்தலைப்பாட்டின் வகை

134 தெய்வந் தெளிதல் கூடல் விடுத்தலென்
றிவ்வோர் மூவகைத் திடந்தலைப் பாடே.

(இ - ம்) இடந்தலைப்பாட்டின் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) இடந்தலைப்பாடென்பது, தெய்வந் தெளிதலும் கூடலும், விடுத்தலும் என மூன்று வகையினை உடைத்து என்றவாறு.

ஓர் : அசை. இக்கிளவி "பெற்றவழி மகிழ்ச்சி" (தொல். பொருள். கள. நூ. 11) என்பதனாற் கொள்ளப்பட்டது. (18)

இடந்தலைப்பாட்டின் விரி

135 தந்த தெய்வந் தருமெனச் சேறலும்
முந்துறக் காண்டலும் முயங்கலும் புகழ்தலும்
உடன்புண ராயத் துய்த்தலும் எனவைந்
திடந்தலைப் பாட்டி னிலக்கண விரியே.

(இ - ம்) இடந்தலைப்பாட்டின் இலக்கண விரி உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) தந்த தெய்வந் தருமெனச் சேறல் முதலாக உடன் புணராயத் துய்த்தல் ஈருகச் சொல்லப்பட்ட ஐந்தும் இடந்தலைப் பாட்டின் இலக்கண விரியாம் என்றவாறு.

தந்ததெய்வந் தருமெனச் சேறற்குச் செய்யுள் :

"மன்றும் பொதியினு மாமயில் சேர்தஞ்சை வாணன்வெற்பில்
துன்றும் புயலிளஞ் சோலையின் வாய்ச்சுற வுக்குழையைச்
சென்றுந்து சேல்விழி மின்னைமுன் னூட்டந்த தெய்வநமக்
கின்றுந் தருநெஞ்ச மேயெழு வாழியிங் கென்னுடனே"
(த. கோ. 34)

என வரும்.

முந்துறக் காண்டற்குச் செய்யுள் :

"மருவூாய நாப்பண் மயிலுரு வாய்நென்னல் வாணன்றஞ்சைத்
தருவாய்த் தழைகொய்து தண்புனங் காத்துத் தடங்குடைந்து
திருவாய் மலர்ந்து சிலம்பெதிர் கூயின்றோர் தெய்வதப் பெண்
உருவா யொருதனி யேநின்ற தாலென் னுயிர்க்குயிரே"
(த. கோ. 35)

எனவரும்.

முயங்கற்குச் செய்யுள் :

" மானு கரன்றஞ்சை வாணன் வரோதயன் மாறையன்னுள்
தானுவி நின்றலர் தாமரை யேயத் தடமலர்வா
யானு தொழுகுசெந் தேனல்லி மேவு மரசவன்னம்
யானு கிடைப்பது வேயின்ன பான்மை யிருவர்க்குமே "
(த. கோ. 36)

என வரும்.

புகழ்தற்குச் செய்யுள் :

" அரும்பா மளவிற் றணத்தொடோவ் வாயல ராமளவிற்
கரும்பா மொழிவத னத்தொடோவ் வாய்களி யானைசெம்பொன்
தரும்பாரி வாணன் றமிழ்த்தஞ்சை யான்றறி யாரின்முன்செய்
பெரும்பாவ மல்லது நீர்நின்ற பேறல்லி பெற்றிலையே "
(த. கோ. 37)

என வரும்.

ஆயத்துய்த்தற்குச் செய்யுள் :

" மேவிக் கலைக்கட லென்புலன் மீனுண்டு மீண்டுவந்தென்
ஆவிக் கமலத் தமரன்ன மேநின் னயில்விழிபோல்
வாவிக் கயலுக ளுந்தஞ்சை வாணன் வரையினுடன்
கூவிக் கயங்குடை நின்குயி லாயங் குறுகுகவே "
(த. கோ. 38)

என வரும். இவற்றுள், தந்ததெய்வந் தருமெனச் சேறலாகிய ஒன்றும் தெய்வந் தெளிதற்குரித்தாம். காண்டலும் முயங்கலும் புகழ்தலுமாகிய மூன்றும் கூடற்குரியவாம். ஆயத்துய்த்தலாகிய ஒன்றும் விடுத்தற்கு உரித்தாமெனக் கொள்க. (19)

## 7 பாங்கற் கூட்டம்

### பாங்கற்கூட்டத்தின் வகை

**136 சார்தல் கேட்டல் சாற்ற லெதிர்மறை**
**நேர்தல் கூடல் பாங்கிற் கூட்டலென்**
**றுங்கெழு வகைத்தே பாங்கற் கூட்டம்.**

(இ - ம்) பாங்கற்கூட்டத்தின் வகை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) சார்தல் முதலாகப் பாங்கிற்கூட்டல் ஈருக எழு வகையினை உடைத்தாம் பாங்கற்கூட்டம் என்றவாறு.

ஆங்கு : அசை. (20)

பாங்கற்கூட்டத்தின் விரி

137 "தலைவன் பாங்கனைச் சார்தலும் பாங்கன்
றலைவனை யுற்றது வினுதலும் தலைவன்
யுற்ற துரைத்தலுங் கற்றறி பாங்கன்
கழறலும் கிழவோன் கழற்றெதிர் மறுத்தலும்
கிழவோர் பழித்தலும் கிழவோன் வேட்கை
தாங்கற் கருமை சாற்றலும் பாங்கன்
தன்மனத் தழுங்கலும் தலைவனோ டழுங்கலும்
எவ்விடத் தெவ்வியற் றென்றலும் அவனஃ
திவ்விடத் திவ்வியற் றென்றலும் பாங்கன்
இறைவனைத் தேற்றலும் குறிவழிச் சேறலும்
இறைவியைக் காண்டலும் இகழ்ந்ததற் கிரங்கலும்
தலைவனை வியத்தலும் தலைவியை வியத்தலும்
தலைவன் றனக்குத் தலைவிநிலை கூறலும்
தலைவன் சேறலும் தலைவியைக் காண்டலுங்
கலவியின் மகிழ்தலும் புகழ்தலும் தலைவியைப்
பாங்கியொடு வருகெனப் பகர்தலும் பாங்கிற்
கூட்டலும் என்றீங் கீட்டுநா லாறுங்
காட்டிய பாங்கற் கூட்டத்து விரியே.

(இ - ம்) பாங்கற்கூட்டத்து விரி உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) தலைவன் பாங்கனைச் சார்தல் முதலாகப் பாங்கிற் கூட்டல் ஈருக இவ்விடத்துத் தொகுத்த இருபத்து நான்கும் மேற்காட்டிய பாங்கற்கூட்டத்து விரியாம் என்றவாறு.

அவற்றுள், தலைவன் பாங்கனைச் சார்தற்குச் செய்யுள் :

" புனையாழி யங்கைப் புயல்வளர் பாற்கடற் பூங்கொடிவாழ்
மனையா கியதஞ்சை வாணனென் னுரென மற்றிங்ஙனே
இனையா தெழுமதி நன்னெஞ்ச மேநமக் கின்னுயிரே
அனையா னருட்புன லாலனங் கானல மாற்றுதற்கே"

(த. கோ. 39)

எனவரும்.

பாங்கன் தலைவனை உற்றது வினைதற்குச் செய்யுள் :

" வலம்புரி போற்கொடைவாணன் றென்மாறை மழைவளர்பூஞ்
சிலம்புறை சூர்வந்து தீண்டின போலொளி தேம்பியிவ்வா
றுலம்புனை தோளுநின் னுள்ளமும் வாடி யுருகிநின்று
புலம்புவ தென்னை கொல் லோசொல்ல வேண்டும் புரவலனே"

(த. கோ, 40)

எனவரும்.

தலைவன் உற்றது உரைத்தற்குச் செய்யுள் :

" மலைமுழு துங்கொற்றம் வைக்கின்ற வாணன்றென் மாறைநண்பா
சிலைமுழு துஞ்சுற்று முற்றுமெய் யாநிற்பச் செந்நிறத்தே
கொலைமுழு துங்கற்ற கூரிய வாளி குளிப்பவின்றென்
கலைமுழு தும்பட்ட தாலொரு மான்முடிக் கண்ணியிலே"

(த. கோ. 41)

எனவும்,

" எலுவ சிறாஅ ரேமுறு நண்ப
புலவர் தோழ கேளா யத்தை
மாக்கட னடுவ ணெண்ணாட் பக்கத்துப்
பசுவெண் டிங்க டோன்றி யாங்குக்
கதுப்பயல் விளங்குஞ் சிறுநுதல்
புதுக்கோள் யானையிற் பிணித்தற்று லெம்மே"

(குறுந். 129)

எனவும் வரும்.

பாங்கன் கழறற்குச் செய்யுள் :

" தருகற் பகமன்ன சந்திர வாணன் றடஞ்சிலம்பின்
முருகக் கடவு ளனையவெற் பாமுகி லும்பிறையுஞ்
செருகக் கிளர்வரை வந்தவொர் பேதைக்குன் சிந்தையெல்லாம்
உருகக் கலங்கினை நீதகு மோமற் றுனக்கிதுவே "

(த. கோ. 42)

எனவும்,

" பெருவரை மிசையது நெடுவெள் ளருவி
முதுவாய்க் கோடியர் முழவிற் றதும்பிச்
சிலம்பி னிழிதரு மிலங்குமலை வெற்ப
நோதக் கன்றே காமம் யாவதும்
நன்றென வுணரார் மாட்டுஞ்
சென்றே நிற்கும் பெரும்பேதை மைத்தே " (குறுந். 78)

எனவும் வரும்.

கிழவோன் கழற்றெதிர் மறுத்தற்குச் செய்யுள் :

" மாலாய் மதம்பொழி வாரண வாணன்றென் மாறையன்னார்
சேலார் கருங்கண்ணுஞ் செங்கனி வாயுஞ் சிறியநுண்ணேர்
நூலார் மருங்கும் பெருந்தன பாரமு நும்மையன்றி
மேலா னவருங்கண் டாலுரை யாரிந்த வீரங்களே "

(த. கோ. 43)

எனவும்,

" அம்ம வாழி கேளிர் முன்னின்று
கண்டனி ராயிற் கழறலிர் மன்னோ
நுண்டாது பொதிந்த செங்காற் கொழுமுகை
முண்டகங் கெழீஇய மோட்டுமண லடைகரை
பேஎய்த் தலைஇய பிணரரைத் தாழை
யெயிறுடை நெடுந்தோடு காப்பப் பலவுடன்
வயிறுடைப் போது வாலிதின் விரீஇப்
புலவுப்பொரு தழித்த பூநாறு பரப்பின்
இவர்திரை தந்த வீர்ங்கதிர் முத்தம்

கவர்நடைப் புரவி கால்வடுத் தபுக்கு
நற்றேர் வழுதி கொற்கை முன்றுறை
வண்டுவாய் திறந்த வாங்குகழி நெய்தற்
போதுபுறங் கொடுத்த வுண்கண்
மாதர் வாண்முகம் மதைஇய நோக்கே'' (அகம். 130)

எனவும் வரும்.

பாங்கன் கிழவோர் பழித்தற்குச் செய்யுள்:

"சூரார் சிலம்பிற் சிலம்பிமென் னூல்கொண்டு சுற்றவெற்றிப்
போரார்களிறு புலம்பிநைந் தாங்கொரு பூவைகொங்கை
வாரா லணைப்ப வருந்தினை நீதஞ்சை வாணன்வெற்பா
வோராழி சூழுல கத்தெவ ரேநின்னை யொப்பவரே''
(த. கோ. 44)

எனவும்,

''காமங் காம மென்ப காமம்
அணங்கும் பிணியு மன்றே நினைப்பின்
முதுசுவற் கலித்த முற்ரு விளம்புல்
மூதா தைவந் தாங்கு
விருந்தே காமம் பெருந்தோ ளோயே'' (குறுந். 204)

எனவும் வரும்.

கிழவோன் வேட்கை தாங்கற்கருமை சாற்றற்குச் செய்யுள்:

''பொறைகொண்ட தாமரைப் போதன்ன கொங்கையும் பொங்கரிசேர்
கறைகொண்ட வாளன்ன கண்களுங் கொண்டொரு கன்னிதெவ்வைத்
திறைகொண்ட வாணன் செழுந்தஞ்சை சூழுஞ் சிலம்பிலென்றென்
நிறைகொண்ட வாறறி யாதிக ழாதிற்றி நீயுநின்றே'' (த. கோ. 45)

எனவரும்.

பாங்கன் தன்மனத் தழுங்கற்குச் செய்யுள் :

"சீதள வாரங் கமழ்தஞ்சை வாணன்றென் மாறையன்னுள்
காதள வாவெங் கடுவள வாவொளிர் காவியந்தண்
போதள வாவிழி யென்னுமென் னுசைப் புறத்தளவா
சூதள வாமுலே யென்னுமென் னுமினிச் சொல்லுவதே"

(த. கோ. 46)

எனவரும்.

பாங்கன் தலைவனே டழுங்கற்குச் செய்யுள் :

"என்மே லறைவ தியானிங்கு நின்செவிக் கென்சொலெல்லாம்
வன்மே லடர்கொங்கை காரண மாத்தஞ்சை வாணன்வெற்பா
கன்மே லறைகின்ற மென்முளை போலுங் கடல்வெதும்பிற்
றன்மேல் விளாவவுண் டோதரை மேலொரு தண்புனலே"

(த. கோ. 47)

எனவரும்.

பாகன் எவ்விடத் தெவ்வியற் றென்றற்குச் செய்யுள் :

"முகத்திற் பகழி யிரண்டுடை யார்க்கிட மூரிமுந்நீர்
அகத்திற் பிறந்த வரவிந்த மோவடை யார்தமக்கு
மகத்திற் சனியன்ன சந்திர வாணன்றென் மாறைவெற்பா
நுகத்திற் பகலனை யாய்தன்மை யேது நுவலெனக்கே"

(த. கோ. 48)

எனவரும்.

தலைவன் இவ்விடத்திவ்வியற்று என்றற்குச் செய்யுள் :

"கனமே குழல்செங் கயலே விழிமொழி கார்க்குயிலே
தனமே முகையென் தனிநெஞ்ச மேயிடை தன்பகைக்கு
வனமே யருளிய வாணன்றென் மாறை மணிவரைசூழ்
புனமேயிடமிங்ங னேயென்னை வாட்டிய பூங்கொடிக்கே"

(த. கோ. 49)

எனவும்,

"கடற்கோடு செறித்த வளைவார் முன்கைக்
கழிப்பூத் தொடர்ந்த விரும்பல் கூந்தற்
கானன் ஞாழற் கவின்பெரு தழையள்
வரையர மகளிரி னரியளென்
நிறையரு நெஞ்சங் கொண்டொளித் தோளே"

(ஐங்குறு. 191)

எனவும் வரும்.

பாங்கன் இறைவனைத் தேற்றற்குச் செய்யுள்:

"மழைவளர் மாளிகை மாறை வரோதயன் வாணன்வெற்பின்
இழைவளர் வார்முலை யேரிளந் தோகையை யிக்கணம்போய்க்
கழைவளர் சாரலிற் கண்டுனை யான்வந்து காண்பளவுந்
தழைவளர் தாரண்ண லேதணி வாய்நின் றகவின்மையே"

(த. கோ. 50)

எனவரும்.

பாங்கன் குறிவழிச் சேறற்குச் செய்யுள்:

"பாரித்த திண்மையெம் மண்ணலுண் ணீரைப் பருகிநின்று
பூரித்த செவ்விள நீர்களுந் தாங்கியப் பூங்கொடிதான்
வாரித் தலம்புகழ் வாணன்றென் மாறை வரைப்புனஞ்சூழ்
வேரித் தடம்பொழில் வாய்விளை யாடுங்கொன் மேவிநின்றே"

(த. கோ. 51)

எனவரும்.

பாங்கன் இறைவியைக் காண்டற்குச் செய்யுள்:

"கானே யளகங் கரும்புய லேயியல் கார்மயிலே
மானே விழிமுக மாமதி யேதஞ்சை வாணன்வெற்பிற்
றேனேய் தொடையலச் சேயனையான் சொன்ன சேயிழையாள்
தானே யிவளிது வேயிட மாகிய தண்புனமே" (த. கோ. 52)

எனவரும்.

பாங்கன் இகழ்ந்ததற் கிரங்கற்குச் செய்யுள் :

"கொலைகா லயிற்படை நேரியர் கோனகங் கோடவங்கைச்
சிலைகால் வளைத்துத் திருத்திய வாணன்றெ ன் மாறைவெற்பில்
முலைகால் கொளக்கண் டிளைத்த நுண் ணூரலிடை முற்றிழைகண்
வலைகால் பிணிப்பவந் தார்வருந் தாரல்லர் மாலுழந்தே"
(த. கோ. 53)

எனவும்,

"இரவி ஞனு மின்றுயி லறியா
தரவுறு துயர மேய்துப தொண்டித்
தண்ணறு நெய்த ஞறும்
பின்னிருங் கூந்த லணங்குற் றோரே" (ஐங்குறு. 173)

எனவும் வரும்.

பாங்கன் தலைவனை வியத்தற்குச் செய்யுள் :

"தலங்கா வலன்தஞ்சை வாணன்முந் நீர்பொருந்
தண்பொருந்தத்
திலங்கார வல்வடக் கொங்கைவெற் பாலிணை
நீலவுண்கண்
பொலங்காம வல்லி கடைந்தவப் போது
புடைபெயர்ந்து
கலங்கா திருந்ததெவ் வாறெம் பிரான்றன்
கலைக்கடலே" (த. கோ. 54)

எனவும்,

"தாழை தவழ்ந்துலாம் வெண்மணற் றண்கானல்
மாழை நுளையர் மடமக - ளேழை
யிணைநாடி லில்லா விருந்தடங்கண் கண்டுந்
துணைநாடி னன்றோ மிலன்" (திணை. மா. 45)

எனவும் வரும்.

பர்ங்கன் தலைவியை வியத்தற்குச் செய்யுள்:

''வெங்கோன் மழைபொழி வானவர் போர்வென்ற
மீனவர்தஞ்
செங்கோன் முறைமை செலுத்திய வாணன்றென்
மாறைவெற்பில்
நங்கோன் மெலிய நலிகின்ற காமவெந்
நஞ்சினையிப்
பைங்கோன் மணிவளை யார்தணி யாரல்லர்
பார்வை கொண்டே'' (த. கோ. 55)

எனவும்,

''துறைமேய் வலம்புரி தோய்ந்து மணலுழுத
தோற்ற மாய்வான்
பொறைமலி பூம்புன்னைப் பூவுதிர்ந்து நுண்டாது
போர்க்குங் கானல்
நிறைமதி வாண்முகத்து நேர்கயற்கண்
செய்த
உறைமலி யுய்யாநோ யூர்சுணங்கு மென்முலையே
தீர்க்கும் போலும்'' (சிலம்பு. கானல் 8)

எனவும் வரும்.

பாங்கன் தலைவன்றனக்குத் தலைவிநிலை கூறற்குச் செய்யுள்:

''வளங்கனி மாறை வரோதயன் வாணன் மலையவெற்பா
உளங்கனி காத லுடனின்ற தானின் னுடலமெல்லாங்
களங்கனி போலக் கருதிவெண் கோட்டுக் களிறுண்டதோர்
விளங்கனி போல்வறி தாநிறை வாங்கிய மென்கொடியே''

(த கோ. 56)

எனவரும்.

தலைவன் குறிவழிச் சேறற்குச் செய்யுள்:

''புறங்கூரிருட்கங்குல் போன்றக நண்பகல்
போன்ற பொங்கர்
நிறங்கூர் படைக்கண்ணி நின்றன ளேதிழ
லைச்சுளித்து
மறங்கூர் களிற்றண்ணல் வாணன்றென் மாறையில்
வாணுதலாள்
அறங்கூர் மனத்தரு ளானின்ற தாமென
தாருயிரே'' (த. கோ. 57)

எனவரும்.

தலைவன் தலைவியைக் காண்டற்குச் செய்யுள்:

''பாகையுந் தேனையும் போன்மொழி யார்தமிழ்ப்
பைந்தொடையும்
வாகையுஞ் சூடிய வாணன்றென் மாறை
வளமுமவன்
ஈகையும் போலு மெழிலியை நோக்கி
யிரங்குபுள்ளுந்
தோகையும் போனின்ற வாதனி யேயிந்தச்
சோலையிலே'' (த. கோ. 58)

எனவரும்.

தலைவன் கலவியின் மகிழ்தற்குச் செய்யுள்:

''யாரும்பர் தம்பத மென்போல வெய்தின ரிம்பரம்பொன்
வாருந் துறைவையை சூழ்தஞ்சை வாணன் மலயவெற்பில்
தேருந் தொறுமினி தாந்தமிழ் போன்றிவள் செங்கனிவா
யாருந் தொறுமினி தாயமிழ் தாமென தாருயிர்க்கே''
(த. கோ. 59)

எனவரும்.

புகழ்தற்குச் செய்யுள் :

"தழல்கண்ட தன்ன கலிவெம்மை யாறத்தன் தண்ணளியால்
நிழல்கண்ட சந்திர வாணன்றென் மாறை நிழல்பொலியுங்
கழல்கண்ட தன்ன கதிர்முத்த மாலிகைக் காரிகைநின்
குழல்கண்ட பின்னல்ல வோவற னீருட் குளித்ததுவே"

(த. கோ. 60)

என வரும்.

தலைவன் தலைவியைப் பாங்கியொடு வருகெனப் பகர்தற்குச் செய்யுள் :

"என்கா தலிஞெென் றியம்புகின் றேனிங் கினிவருங்கால்
நின்கா தலியொடு நீவரல் வேண்டு நிலைமடந்தை
தன்கா தலன்றஞ்சை வாணன்றென் மாறைத்தண்
டாமரைவாழ்
பொன்காதல் கொண்டு தொழுஞ்சிலம் பாரடிப் பூங்கொடியே"

(த. கோ. 61)

எனவும்,

"எமக்குநயந் தருளினை யாயிற் பணைத்தோ
ணன்னுத லரிவையொடு மென்மெல வியலி
வந்திசின் வாழியோ மடந்தை
தொண்டி யன்னநின் பண்புபல கொண்டே" (ஐங்குறு-175)

எனவும் வரும்.

தலைவன் தலைவியைப் பாங்கிற் கூட்டற்குச் செய்யுள் :

"என்னூடு நின்ற விளங்கொடி யேசங்க மேய்ந்துகுழாந்
தன்னூடு செல்லுஞ் சலஞ்சலம் போற்றஞ்சை வாணன்வெற்பிற்
பொன்னூடு செல்லும் புகழ்மணி போனின் புடையகலா
மின்னூடு நுண்ணிடை யாருட னீசென்று மேவுகவே"

(த. கோ. 62)

என வரும்.

இவற்றுள், முன்னைய மூன்றும் சார்தல் கேட்டல் சாற்றல் என்னும் மூன்றற்கும் உரியவாம். பாங்கன் கழறல் முதலாகக் கிழவோன் வேட்கை தாங்கற்கு அருமை சாற்றல் ஈருகச் சொல்லப் பட்ட நான்கும் எதிர்மறுத்தற்கு உரியவாம். பாங்கன் தன் மனத்து அழுங்கல் முதலாகத் தலைவன் தனக்குத் தலைவிநிலை கூறல் ஈருகச் சொல்லப்பட்ட பதினொன்றும் நேர்தற்குரியவாம். தலைவன் சேறல் முதலாகத் தலைவியைப் புகழ்தல் ஈருகச் சொல்லப்பட்ட நான்கும் கூடற்குரியவாம். தலைவன் பாங்கியொடு வருகெனப் பகர்தலும், பாங்கிற்கூட்டலும் ஆகிய இரண்டும் பாங்கிற்கூட்டற் குரியவாம். இதனுள், பாங்கனொடு தலைவன் கூறினவெல்லாம்,

"நிற்பவை நினைஇ நிகழ்பவை யுரைப்பினும்"
(தொ. பொருள் கள. நூ. 11)

என்பதனாற் கொள்ளப்பட்டன. பாங்கன் கூற்றுயினவெல்லாம்,

"குற்றங் காட்டிய வாயில் பெட்பினும்"
(தொ. பொருள் கள. நூ. 11)

என்பதனாற் கொள்ளப்பட்டன. (21)

## 8 பாங்கி மதியுடன்பாடு

பாங்கி மதியுடன்பாட்டின் வகை

138 முன்னுற வுணர்தல் குறையுற வுணர்தல்
இருவரு முள்வழி யவன்வர வுணர்தலென்
ருெருமூன்று வகைத்தே பாங்கிமதி யுடன்பாடு.

(இ - ம்) பாங்கி மதியுடன்பாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) முன்னுறவுணர்தலும், குறையுறவுணர்தலும், இருவரு முள்வழி அவன் வரவுணர்தலும் என மூன்று வகையினை உடையது பாங்கி மதியுடன் பாடு என்றவாறு.

அவற்றுள், முன்னுறவுணர்தலாவது: பாங்கி தலைமகளது வடிவு வேறுபாடு கண்டு, அதனானே கூட்டம் உண்மையறிதல். குறையுறவுணர்தலாவது, தலைமகன் தழையும் கண்ணியும்

கொண்டு தன்பாற் குறையுற்று நிற்பது கண்டு அதனாலே கூட்டம் உண்மையறிதல். இருவருமுள்வழி அவன் வரவுணர்த லாவது, தலைமகளும் தானும் ஒருங்கிருந்துழித் தலைமகன் அவ்வாறு வரக் கண்டு அதனாலே கூட்டம் உண்மை அறிதல். (22)

முன்னுறவுணர்தல்

139 நாற்றமும் தோற்றமு மொழுக்கமு முண்டியுஞ்
செய்வினை மறைப்பும் செலவும் பயில்வுமென்
றிவ்வகையேழினும் ஐயமுற் றோர்தலு
மவ்வகை தன்னால் ஐயந் தீர்தலும்
மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது
பல்வேறு கவர்பொருள் சொல்லினா டலுமென
முன்னுற வுணர்தல் மூன்றா கும்மே.

(இ - ம்) முன்னுறவுணர்தலின் பாகுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) நாற்ற முதலாகப் பயில்வு ஈறாகச் சொல்லப்பட்ட அவ்வகையுடைய ஏழினுமே பாங்கி ஐயமுற்றாராய்தலும், அவற்றானே ஐயம் தீர்த்லும், மெய்யினானும் பொய்யினானும் குற்றேவல் தப்பாமல் பலவாய் வேறுபட்ட இருபொருட்பட்ட சொற்களான் ஆராய்தலும் என முன்னுறவுணர்தல் மூவகையாம் என்றவாறு. என்னை ?

'' நாற்றமுந் தோற்றமு மொழுக்கமு முண்டியுஞ்
செய்வினை மறைப்பினுஞ் செலவினும் பயில்வினும்
புணர்ச்சி யெதிர்ப்பா டுள்ளுறுத்து வருஉ
முணர்ச்சி யேழினு முணர்ந்த பின்றை
மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது
பல்வேறு கவர்பொரு ணாட்டத் தானும் ''

(தொல். பொருள். கள. நூ. 23)

என்றாராகலின். அவற்றுள், நாற்றமாவது தான் பண்டு பயின்றறி யாததொரு நாற்றம். தோற்றமாவது கூட்டத்தால் பிறந்ததோர்

அழகு. ஒழுக்கமாவது, தெய்வந்தொழாமை முதலாயின. உண்டியாவது, பண்டையிற் குறைந்த உண்டி. செய்வினை மறைத்தலாவது, தலைமகள் தான் செய்யுந் தொழிலைப் பாங்கிக்கு மறைத்தல். செலவாவது, ஆயத்தை நீக்கித் தனியே பெயர்தல், பயில்வாவது, எப்பொழுதும் ஓரிடத்தே நிற்றல்.

பாங்கி அவற்றுள் ஐயமுற் றோர்தற்குச் செய்யுள் :

'' வண்டலை யாயத் துடன்யர்ந் தோவன்றி
வண்டிமிர்பூந்
தண்டலை யாரத் தழைகள்கொய் தோதஞ்சை
வாணன்வெற்பிற்
புண்டலை வேலினுங் கண்சிவப் பாரப்
பொலஞ்சுனைத்தேன்
கொண்டலை நீர்குடைந் தோவிவள் மேனி
குழைந்ததுவே '' (த. கோ. 63)

எனவும்,

'' கண்ணுஞ் சேயரி பரந்தன்று நுதலும்
நுண்வியர் பொறித்து வண்டார்க் கும்மே
வாங்கமை மென்றோள் மடந்தை
யாங்கா யினள்கொ லென்னுமென் னெஞ்சே ''
(தொல். பொருள். கள. நூ. 23 உரை மேற்கோள்)

எனவும் வரும். பிறவுமன்ன.

ஐயந் தீர்தற்குச் செய்யுள் :

'' திளைக்குந் திரைமே லுனக்குமுன் றோன்றலிற்
செம்பொன்வெற்பை
வளைக்கும் பிரான்முடி வைகுத லாற்றஞ்சை
வாணன் மண்மேல்
விளைக்கும் புகழ்போல் விளங்குத லாற்செக்கர்
விண்பிறைகாள்
தளைக்குங் குழற்றிரு வேதொழ வேதகுந்
தன்மையதே '' (த. கொ. 64)

எனவும்,

"முன்னுந் தொழத்தோன்றி முள்ளெயிற்று யத்திசையே
யின்னுந் தொழத்தோன்றிற் றீதேகாண்—மன்னும்
பொருகளிமால் யானைப் புகார்க்கிள்ளி பூண்போற்
பெருகொளியால் மிக்க பிறை"

(தொல். பொருள், கள. நூ. 23 உரை மேற்கோள்)

எனவும் வரும். பிறவுமன்ன.

மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது பல்வேறு கவர்பொருட் சொல்லிநாடலுட்

சுனைநயப்புரைத்தற்குச் செய்யுள் :

"பூட்டிய வார்சிலை வீரரை வென்றெப் பொருப்பினுஞ்சீர்
தீட்டிய வாணன்றென் மாறையன் னீரிதழ்ச் செம்மையுமை
யூட்டிய வாளின் கருமையுந் தான்கொண் டுமக்கிங்ஙனே
சூட்டிய வாறுநன் றுன்முல்லை மாலை சுனைப்புனலே"

(த. கோ. 65)

எனவரும்.

சுனைவியந்துரைத்தற்குச் செய்யுள் :

"மறலா யெதிர்ந்த மறமன்னர் வேழ மலையெறிவேல்
திறலார்முருகன் செழுந்தஞ்சை வாணன்றென் மாறைவையை
யறலார் குழலாய் நுதற்குறு வேர்வு மழகுநின்போற்
பெறலா மெனிற்குடை வேனடி யேனும் பெருஞ்சுனையே"

(த. கோ. 66)

எனவும்,

"பையுண் மாலைப் பழுமரம் படரிய
நொவ்வுப் பறைவாவ ஞேன்சிற கேய்க்கு
மடிசெவிக் குழவி தழீஇப் பையாந்
திடுகுகவுண் மடப்பிடி யெவ்வங் கூர
வெந்திற லாளி வெரீஇச் சந்தின்
பொரியரை மிளிரக் குத்தி வான்கே
ழுருவ வெண்கோ டுயக்கொண்டு கழியுங்

கடுங்கண் யானை காலுற வொற்றலிற்
கோவா வாரம் வீழ்ந்தெனக் குளிர்கொண்டு
பேஎ நாறு'ந் தாழ்நீர்ப் பனிச்சுனை''
''தோளா ரெல்வளை தளிர்ப்ப நின்போல்
யானு மாடிக் காண்கோ தோழி
வரைவயிறு கிழித்த சுடரிலை நெடுவேற்
றிகழ்பூண் முருகன் றீம்புன லலைவாய்க்
கமழ்பூம் புறவிற் கார்பெற்றுக் களித்த
வொண்பொறி மஞ்ஞை போல்வதோர்
கண்கவர் காரிகை பெறுதலுண் டெனினே''
(தொல். பொருள். கள. நூ. 23 உரை மேற்கோள்)

எனவும் வரும்.

தகையணங்குறுத்தற்குச் செய்யுள் :

''குவளை சிவந்து குமுதம் வெளுத்த குறையல்லவேல்
அவளை மறைத்துன்னைக் காட்டலு மாமலர்த் தேன்குதிக்கத்
தவளை குதிக்குந் தடம்பொய்கை சூழ்தஞ்சை வாணன்வெற்பில்
இவளை வரக்கண்டு நீயணங் கேபின் னெழுந்தருளே''
(த. கோ. 67)

எனவும்,

''அம்ம வாழி வெம்முலை யணங்கே
நிலனோ விசும்போ நீரோ வரையோ
அலமருந் தனிக்கோ லஞ்சிறைச் சேவல்
உளிவாய்ப் புட்கொடி யினியன் றெண்டித்
தன்கயத் தலர்ந்த செந்தா மரையோ
யாவ தாகநின் னுறைபதி தானே
மாயிருஞ் சிலம்பின் மடமகண் மாவின்
றண்டளிர் புரையு மேனி வண்டுகொளச்
சொரிமது விழிந்த பின்னருங் கூழை
நின்னே போலு மின்னிசைத் தேமொழி
யென்னிணைக் குறுமகட் பிரிந்தவென்
இன்ன னெஞ்சத் தொன்றுதெரி விலனே''

எனவும் வரும்.

நடுங்க நாட்டத்திற்குச் செய்யுள் :

"பால்போன் மொழிவஞ்சி யஞ்சிநின் றேனிந்தப் பார்முழுது
மால்போற் புரந்தவன் மாறை வரோதயன் வாணன்வென்றி
வேல்போற் சிவந்து நெறிமுறை கோடிய வேந்தன்வெய்ய
கோல்போற் கொடியன வாங்கொலை யானையின் கோடுகண்டே

(த. கோ. 68)

எனவும்,

"பண்டிப் புனத்துட் பகலிடத் தேனலுட்
கண்டிக் களிற்றை யறிவன்மற் — றிண்டிக்
கதிரன் பழையனூர்க் கார்நீலக் கண்ணு
யுதிர முடைத்திதன் கோடு"

(தொல். பொருள். கள. நூ. 23 உரை மேற்கோள்)

எனவும் வரும்.

இவற்றுள், முன்னைய மூன்றும் மெய்யினுற் சொல்லிப் பின்னைய மூன்றும் பொய்யினுற் சொல்லிய. பிறவுமன்ன : இவற்றுள் நடுங்க நாட்டத்திற்குச் சான்றேர் செய்யுளில்லை; ஆகலின் அஃதிலக்கணமன்று. (23)

குறையுற வுணர்தல்

140 பெட்ட வாயில்பெற் றிரவுவலி யுறுத்தோன்
கண்ணியுந் தழையு மேந்தி நண்ணி
ஊர்பெயர் கெடுதியோ டொழிந்தவும் விஞவுழி
யாரே யிவர்மனத் தெண்ண மியாதெனத்
தேர்தலு மெண்ணந் தெளிதலு மெனவாங்
கோரிரண் டாகுங் குறையுற வுணர்தல்.

(இ - ம்) குறையுற வுணர்தலின் பாகுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) இயற்கைப் புணர்ச்சிப்பின்னே தலைமகளாற் பேணப்பட்ட வாயிலைப்பெற்றுப் பின் இரந்து குறையுறுதலை வலியுறுத்தத் தலைமகன், கண்ணியும் தழையும் ஏந்திச் சார்ந்து நின்று, ஊரும் பெயரும் கெடுதியும் ஒழிந்தவும் வினயவிடத்து இவர் யாரெனவும், மனத்தின்கணுளதாகிய எண்ணம் யாதெனவும் பாங்கி யாராய்தலும், அவனகத்து எண்ணத்தினைத் தெளிதலும் என இரண்டாங் குறையுற வுணர்தல் என்றவாறு.

அவற்றுள், பாங்கியை இரவு வலியுறுத்தற்குச் செய்யுள் :

"பொருமணி வெண்டிரைப் பைங்கடல்வங்கம் பொருந்திமுன்பு
தருமணி பின்பெற் றணிபவர் போற்சென்று சார்ந்திருந்து
பருமணி நன்கலப் பாங்கியை நீங்கியப் பாவையைநா
மருமணி வண்டுறை தார்வாணன் மாறை மருவுதுமே"
(த. கோ. 69)

எனவரும்.

ஊர் வினதற்குச் செய்யுள் :

"புதியேன் மிகவிப் புனத்திற் கியான்றனிப் போந்தனனும்
பதியேது செல்லும் படிசொல்லு வீர்படி மேற்படிந்த
மதியேய் சுதைமதில் சூழ்தஞ்சை வாணன்றென் மாறைவையை
நதியேய் சுழிநிக ரும்பழி தீருந்தி நல்லவரே" (த. கோ. 70)

எனவரும்.

பேர் வினதற்குச் செய்யுள்

"கரைத்தாவி யுந்திய காவிரி வைகிய காலத்தினுந்
தரைத்தாரு வன்னசெந்தண்ணளி வாணன் றமிழ்த்தஞ்சைசூழ்
வரைத்தாழ் சிலம்பினும் வாழ்பதி யீதென்று வஞ்சியன்னீர்
உரைத்தா லிழிவதுண் டேற்பெய ரேனு முரைமின்களே"
(த. கோ. 71)

எனவும் வரும்.

கெடுதிவினாதற்குச் செய்யுள் :

“ தண்பட்ட மேவும் வயற்றஞ்சை வாணன் றமிழ்ச்சிலம்பிற்
பண்பட்ட தேமொழிப் பாவையன் னீர்பனை பட்டகையும்
மண்பட்ட கோடு மதம்பட்ட வாயும் வடிக்கணைதோய்
புண்பட்ட மேனியு மாய்வந்த தோவொரு போர்க்களிறே

(த. கோ. 72)

எனவும்,

“ சீத விரைக்கனகச் செந்தா மரைப்பொகுட்டு
மாதனையீ ரம்போடு வந்ததோ — சோதிப்
பொருதாரை வேற்கண்டன் பூபால தீபன்
கருதாரி லிங்கோர் களிறு

எனவும் வரும்.

ஒழிந்தது வினாதற்குச் செய்யுள் :

“ வனமார் குடிஞைப் பகைக்குர லாமென வாணன் றஞ்சைப்
புனமார் குளிரிப் புடைப்பொலி யாற்கிள்ளை போயினமீண்
டினமா மெனவந்திவ் வேனலெல் லாம்வெளவு மென்பதற்கோ
கனமா நறுங்குழ லீர்மொழி யாதொழி காரணமே ”

(த. கோ. 73)

எனவரும். பிறவுமன்ன

‘ யாரே இவர் மனத்து எண்ணியதுயா ’தெனத் தேர்தற்குச் செய்யுள் :

“ தரையார வண்புகழ் தேக்கிய வாணன் றமிழ்த்தஞ்சைசூழ்
வரையாது நும்பதி யாதுநும் பேரென்பர் வார்துளிக்கார்
புரையானை யம்பொடு போந்ததுண் டோவென்பர் பூங்கொடியீர்
உரையாத தென்னென்ப ராலென்கொ லோவிவருட் கொண்டதே ”

(த. கோ. 74)

எனவும்,

"கையது செயலையந் தழையே வினைய
தைய புண்வாய் மாவே கைவிட்
டகலா னம்மவிவ் வகன்புனந்
தகையோ னுள்ளிய தறிதலு மரிதே"

எனவும் வரும்.

எண்ணந் தெளிதற்குச் செய்யுள் :

"யாரே யிவரென் றறிகின்றி லேமெதிர்ந் தாரைவென்று
வாரேய் கழற்புனை வாணன்றென் மாறை வரையுறைவீ
ரூரே தெனமுன் வினவிப்பின் வேறொன் றுரைப்பதெல்லாம்
நேரே யிவள் பொருட் டாலென்று தோன்றுமென்
னெஞ்சினுக்கே"

(த. கோ. 75)

எனவும்,

"பூத்த வேங்கை வியன்சினை யேறி
மயிலின மகவு நாட
னன்னுதற் கொடிச்சி மனத்தகத் தோனே"

(தொல். பொருள். செய்யுளியல் நூ. 100 உரை மேற்கோள்)

எனவும் வரும்.

இவையெல்லாம்,

"பெட்ட வாயில்பெற் றிரவுவலி யுறுப்பினும்
ஊரும் பேருங் கெடுதியும் பிறவு
நீரிற் குறிப்பி னிரம்பக் கூறித்
தோழியைக் குறையுறும் பகுதியுந் தோழி
குறையவட் சார்த்தி மெய்யுறக் கூறலும்"

(தொல். பொருள். கள. 11)

என்பதனால் வந்தன. (24)

இருவருமுள்வழி யவன் வரவுணர்தல்

141 கையுறை யேந்திவந் தவ்வகை வினவுழி
எதிர்மொழி கொடுத்தலு மிறைவனை நகுதலும்
மதியி னவரவர் மனக்கருத் துணர்வுமென்
றிருவரு முள்வழி யவன்வர வுணர்தல்
ஒருமூன் றுகுந் தெரியுங் காலே.

(இ - ம்) இருவருமுள்வழி அவன் வரவுணர்தலின் பாகுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) இருவருமுள்வழி அவன் வரவுணர்தல் என்பது தலைமகன் தழையும் கண்ணியும் ஏந்தி முன்போல ஊர் பெயர் முதலியன வினவினவிடத்துத் தோழி அதற்கெதிர்மொழி கொடுத்தலும், இறைவனை நகுதலும், மதியினின் அவரவர் மனக் கருத்துணர்தலும் என ஒரு மூன்றுகும் ஆராயுங் காலத்து என்றவாறு.

கையுறை யேந்தி வருதற்குச் செய்யுள் :

"தண்டா மரைமலர்ப் பொன்னையும் பார்மங்கை தன்னையும்போல்
வண்டார் குழன்மட வார்மணந் தார்சென்று வாணன்றஞ்சை
நுண்டா தணிபொங்கர் நீழலின் கீழந் நுடங்கிடையார்க்
கண்டா தரவையெல் லாஞ்சொல்ல வேநல்ல காலமிதே"

(த. கோ. 76)

எனவரும்.

தலைவன் அவ்வகை வினதற்குச் செய்யுள் :

"வல்லா ரிளங்கொங்கை வஞ்சியன் னீர்தஞ்சை வாணனைக்கண்
டொல்லார் களத்தி னுடைந்தது போல வொருகலைபோர்
வில்லார் கணைதைப்ப மெய்சோர்ந் தினம்விட்டு வெய்துயிர்த்துப்
புல்லார் வதுமின்றி யேவந்த தோநும் புனத்தயலே"

(த. கோ. 77)

எனவரும் பிறவுமன்ன.

பாங்கி எதிர்மொழி கொடுத்தற்குச் செய்யுள் :

"வாக்குந் திறனு மதனையொப் பீர்தஞ்சை வாணன் மஞ்சு
தேக்குங் குடுமிச் சிறுமலைக் கேதிரி கோட்டிரலை
கோக்குஞ் சரமுங் குருதியுஞ் சோரக் கொடிச்சியரேங்
காக்கும் புனமருங் கேதனி யேவரக் கண்டிலமே"

(த. கோ. 78)

எனவும்,

"வேங்கை மலர வெறிகமழ் தண்சிலம்பின்
வாங்கமை மென்றோட் குறவர் மகளிரேஞ்
சோர்ந்து குருதி யொழுகமற் றிப்புனத்தே
போந்தில வைய களிறு" (திணைமொழி. ஐம். 9)

எனவும் வரும்.

பாங்கி இறைவனை நகுதற்குச் செய்யுள் :

"மைவா ளிலங்குகண் மங்கைநல் லாய்தஞ்சைவாணன்வெற்பில்
இவ்வாளி மொய்ம்பரின் றெய்தமெய்ம் மானிள மாந்தளிரின்
செவ்வாளி யுங்கொண்டு சேட்சென்ற தாலன்று
சீதைகொண்கன்
கைவாளி யுங்கொண்டு போனபொய்ம் மானினுங் கள்ளத்ததே"

(த. கோ. 79)

எனவரும்.

பாங்கி மதியின் அவரவர் மனக்கருத்துணர்தற்குச் செய்யுள் :

"புனங்காவ லன்றிவள் பூண்டது மாண்டகை போந்ததுமா
னினங்காவ லின்கலை யெய்யவன் ருலிக லாழிவிந்தை
தனங்காவ லன்றஞ்சை வாணனன் ஞட்டிவர் தங்களிற்ரு
மனங்காவல் கொண்டதெல் லாங்கண்க ளேசொல்லும்
வாய்திறந்தே"

(த. கோ. 80

எனவும்,

"ஏனல் காவ லிவளு மல்லள்
மான்வழி வருகுவ னிவனு மல்ல
னரந்தங் கண்ணி யிவனோ டிவளிடைக்
கரந்த உள்ளமொடு கருதியது பிறிதே
நம்முன் னாணினர் போலத் தம்முண்
மதுமறைந் துண்டோர் மகிழ்ச்சி போல
உள்ளத் துள்ளே மகிழ்ப
சொல்லு மாடுப கண்ணி னானே"

(தொல், பொருள். கள. நூ. 23 உரை மேற்கோள்)

எனவும் வரும், இவையெல்லாந் தோழி கூற்றுள் :

"வந்த கிழவனை மாயஞ் செப்பிப்
பொறுத்த காரணங் குறித்த காலையும்"

(தொல். பொருள். கள. நூ. 23 உரை மேற்கோள்)

என்பதனாற் கொள்ளப்பட்டன. (25)

பாங்கி மதியுடன்பாட்டின் விரி

142 ஈங்ஙன மியம்பிய இருநான்கு கிளவியும்
பாங்கி மதியுடன் பாட்டது விரியே.

(இ-ம்) பாங்கி மதியுடன்பாட்டின் விரி இவையென உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஐயமுற்றோர்தல் முதலாக மதியின் அவரவர் மனக் கருத்துணர்தல் ஈருகச் சொல்லப்பட்ட எட்டுக் கிளவியும் பாங்கி மதியுடன்பாட்டது விரியாம் என்றவாறு. (26)

## 9 பாங்கியிற் கூட்டம்

பாங்கியிற் கூட்டத்தின் வகை

143 இரந்துபின் னிற்றல் சேட்படை மடற்கூற்று
மடல்விலக் குடன்படன் மடற்கூற் றொழிதல்
குறைநயப் பித்தல் நயத்தல் கூட்டல்
கூடல் ஆயங் கூட்டல் வேட்டலென்
றீராறு வகைத்தே யிகுளையிற் கூட்டம்.

(இ - ம்) பாங்கியிற் கூட்டம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) இரந்து பின்னிற்றல் முதலாக வேட்டல் ஈருகச் சொல்லப்பட்ட பன்னிரண்டு வகையினை உடைத்துப் பாங்கியிற் கூட்டம் என்றவாறு (27)

இரந்துபின் நிற்றலும் சேட்படையும்

144 தலைவ னுட்கோள் சாற்றலும் பாங்கி
குலமுறை கிளத்தலுந் தலைவன் தலைவி
தன்னை யுயர்த்தலும் நன்னுதற் பாங்கி
அறியாள் போன்று வினுதலு மிறையோ
னிறைவி தன்மை யியம்பலும் பாங்கி
தலைவி யருமை சாற்றலுந் தலைவன்
இன்றியமை யாமை யியம்பலும் பாங்கி
நின்குறை நீயே சென்றுரை யென்றலும்
பாங்கியைத் தலைவன் பழித்தலும் பாங்கி
பேதைமை யூட்டலும் காதலன் தலைவி
மூதறி வுடைமை மொழிதலும் பாங்கி
முன்னுறு புணர்ச்சி முறையுறக் கூறலுந்
தன்னிலை தலைவன் சாற்றலும் பாங்கி
யுலகியல் உரைத்தலுந் தலைமகன் மறுத்தலும்
பாங்கி யஞ்சியச் சுறுத்தலு மாங்கவன்
கையுறை புகழ்தலும் தையல் மறுத்தலும்
ஆற்ரு நெஞ்சினே டவன்புலத் தலுமவள்
ஆற்றுவித் தகற்றலு மாகுநா லைந்து
மிரந்துபின் னிற்றற்குஞ் சேட்படுத் தற்கும்
பொருந்துவ என்மனுர் தெரிந்திசி னேரே.

(இ - ம்) பாங்கியிற் கூட்டத்தின் விரி உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) தலைவனுட்கோள் சாற்றல் முதலாகப் பாங்கி ஆற்றுவித்தகற்றல் ஈருகச் சொல்லப்பட்ட இருபதும் இரந்து பின்னிற்றற்கும், சேட்படுத்தற்கும் பொருந்தும் கிளவியென்று சொல்லுவர் ஆய்ந்தோர் என்றவாறு.

அவற்றுள், தலைவனுட்கோள் சாற்றற்குச் செய்யுள் :

"வாவுங் கலைவிந்தை காவலன் வாணன்றென் மாறையன்னீர்
ஏவுந் தொழிலெனக் கேதிய லாததிங் கேநுமக்கோர்
மேவுஞ்செய் குன்றமுஞ் சோலையு மாகப்பொன் வெற்பும் விண்ணோர்
காவுந் தரவும்வல் லேனெனை யாளுங் கடைக்கண் வைத்தே"
(த. கோ. 81)

பாங்கி குலமுறை கிளத்தற்குச் செய்யுள் :

"நீவே றுரைக்கின்ற தென்குற மாதெங்க ணோரிழைபோர்
மாவேழ வன்படை வாணன்றென் மாறை மணியையன்றித்
தாவேது மில்லாத் தமனிய மீது தலம்புரக்குங்
கோவே யழுத்துவ ரோவறி யோருங் குருவிந்தமே"
(த. கோ. 82)

எனவும்,

"இவளே
கான லண்ணிய காமர் சிறுகுடி
நீனிறப் பெருங்கடல் கலங்க வுள்புக்கு
மீனெறி பரதவர் மகளே
நீயே,
நெடுங்கொடி நுடங்கு நியம மூதூர்க்
கடுந்தேர்ச் செல்வன் காதன் மகனே
நிணச்சுரு வறுத்த வுணங்கல் வேண்டி
யினப்பு ளோப்பு மெமக்குநல னெவனோ
புலவு நாறுதுஞ் செலநின் றீமோ
பெருநீர் விளையுளெஞ் சிறுநல் வாழ்க்கை
நும்மொடு புரைவதோ வன்றே
யெம்ம னோரிற் செம்மலு முடைத்தே" (நற்றிணை. 15)

எனவும் வரும்.

தலைவன் தலைவியை உயர்த்திக் கூறற்குச் செய்யுள் :

" மிக்கா ருளரல்லர் மெல்லியன் மாதரின் மேதினிமேல்
தக்கார் புகழ்தஞ்சை வாணர் பிரான்றமிழ் நாடனையாய்
மைக்கார் நிகர்குழல் வள்ளிசெவ் வேளுக்கு வல்லவையாம்
இக்கா ரணமுணா ராதென்கொ லோநின் றியம்புவதே "
(த. கோ. 83)

எனவும்,

" திங்களுள் வில்லெழுதித் தேராது வேல்விலக்கித்
தங்களு ளாளென்னுந் தாழ்வினை - லிங்கட்
புனங்காக்க வைத்தார்போர் பூங்குழலைப் போந்தென்
மனங்காக்க வைத்தார் மருண்டு " (திணைமா. நூற் 30)

எனவும் வரும்.

பாங்கி அறியாள் போன்று வினைதற்குச் செய்யுள் :

" பொன்னிய லூசலும் பொய்தலும் மாடியெப் போதுநன்னீர்
மன்னிய நீலமு நித்தில முங்குற்று வாணன்றஞ்சை
இன்னிய லாரு மிளமரக் காவி னிடம்பிரியாக்
கன்னியர் தாம்பலர் யார்நின்னை வாட்டிய காரிகையே "
(த. கோ. 84)

எனவும்,

" வாங்கிருங் கானலுள் வண்ட லயருந்
தேங்கமழ் கூந்தன் மகளிருள்
யாங்கா கியதோ பாங்குநின் னருளே "

எனவும் வரும்.

இறையோன் இறைவி தன்மை யியம்பற்குச் செய்யுள் :

" தாளிணை மாந்தளி ரல்குல்பொற் றேரிடை சங்கைகொங்கை
கோளிணை கோலக் குரும்பைகை காந்தள் கொடிக்கரும்பார்
தோளிணை வேய்முகந் திங்கள்செவ் வாயிதழ் தொண்டை
யுண்கண்
வாளிணை வார்குழ லாய்வாணன் மாறையெம் மன்னுயிர்க்கே "
(த. கோ. 85)

எனவும்,

"முலையே முகிழ்முகிழ்த் தனவே தலையே
கிளைஇய மென்குரல் கிழக்குவீழ்ந் தனவே
செறிநிரை வெண்பலும் பறிமுறை நிரம்பின
கணங்குஞ் சிலதோன் றினவே யணங்குதற்
கியான்ற னறிவலே தானறி யலளே
யாங்கா குவள்கொ ருனே
பெருமுது செல்வ ஞெருமட மகளே" (குறுந். 337)

எனவும் வரும்.

பாங்கி தலைவியருமை சாற்றற்குச் செய்யுள் :

"புகழார் வரையெம் புரவலன் காதற் புதல்வியைநீர்
இகழா வெளியளென் றெண்ணப் பெறீரெமக் கென்றும் வண்மை
திகழா பரணன் செழுந்தஞ்சை வாணன் சிலம்பினுள்ளீர்
அகழார் கலியுல கிற்புல ஞன வணங்கவளே"
(த. கோ. 86)

எனவும்,

"நெருநலு முன்னு ளெல்லையு மோருசிறைப்
புதுவீ ராதலிற் கிளத்த ஞணி
நேரிழை வளைத்தோணின் ருேழி செய்த
வாரஞர் வருத்தங் களையா யோவென
வெற்குரை யுறுதி ராயிற் சொற்குறை
யெம்பதத் தெளிய ளல்ல ளெமக்கோர்
கட்காண் கடவு ளல்லளோ பெரும
வாய்கோன் மிளகின் மலையங் கொழுங்கொடி
துஞ்சுபுலி வரிப்புறந் தைவரு
மஞ்சுசூழ் பணிவரை மன்னவன் மகளே"
(தொல். பொருள். கள. நூ. 23 உரை மேற்கோள்)

எனவும் வரும்.

தலைமகன் இன்றியமையாமை இயம்பற்குச் செய்யுள் :

" வணைந்தா லனகொங்கை மாதுரு வாய்த்தஞ்சை வாணன் வெற்பிற்
புனைந்தா லனைய புனத்தயல் வாய்வண்டு போதகத்தே
னனைந்தா லனையவென் னல்வினை தான்வந்து நண்ணிற்றென்று.
நினைந்தா லணங்கனை யாய்தமி யேனுயிர் நிற்கின்றதே "
(த. கோ. 87)

எனவரும்.

பாங்கி நின்குறை நீயே சென்றுரை யென்றற்குச் செய்யுள் :

" மருப்பா வியதொங்கல் வாணன்றென் மாறை வனசமலர்த்
திருப்பாவை யன்னவென் சேயிழை யாட்குன் றிருவுளத்து
விருப்பா கியகுறை யுள்ளதெல் லாஞ்சொல்லி வேண்டுகநீ
பொருப்பா மொழியப் பெருரெம்ம னேரிவை போல்வனவே "
(த. கோ. 88)

எனவும்,

" தன்னையுந் தானுஞ் சாயலாட் கிஃதுரைப்பின்
என்னையு நாணப் படுங்கண்டாய் — மன்னிய
வேயேய்மென் றோளிக்கு வேறு வினியொருநா
னீயே யுரைத்துநிறு "
(தொல். பொருள். கள. நூ. 23 உரை மேற்கோள்)

எனவும் வரும்.

பாங்கியைத் தலைவன் பழித்தற்குச் செய்யுள் :

"வில்லார் நுதல்வெய்ய வேலார் விழிக்கென் மெலிவுசொல்ல
வல்லா ரிலைசொல்ல வல்லையென் றியான்றஞ்சை வாணன்றெவ்வின்
ஒல்லா திதுநுமக் கென்றுண ரேனின் றுணங்கியிந்தாள்
எல்லா மிரந்தது நின்குரை யேயல்ல வென்குறையே "
(த. கோ. 89)

எனவும்,

"மாதர் குறைமுடிக்க வல்லாயை வல்லையெனக்
காதல் சிறப்பக் கருதியது — மேதகைய
பாம்படுதே ரல்குல் பயம்படுநீர் மானமான்
தேம்படுவெண் டேர்மேற் செலல்"

(இலக்கண விளக்கம். பொருள். அகத். நூ. 137 உரை மேற்கோள்)

எனவும் வரும்.

பாங்கி பேதைமையூட்டற்குச் செய்யுள் :

"தேனுஞ் சுரும்புஞ் செறிதொங்கல் வாணன்றென் மாறைவெற்பா
மானுங் கலையும் வடிக்கணை யாலெய்து மன்னுயிரும்
ஊனுங் கவர்கின்ற தன்னையர் போலயி லொத்தகண்ணாள்
தானும் பிறருள்ள நோயறி யாத தகைமையளே"

(த. கோ. 90)

எனவும்,

"நறுந்தண் டகரம் வகுள மிவற்றை
வெறும்புதல்போல் வேண்டாது வெட்டி — யெறிந்துழுது
செந்தினை வித்துவார் தங்கை பிறர்நோய்க்கு
நொந்தினைய வல்லளோ நோக்கு" (திணைமாலை நூற். 24)

எனவும் வரும்.

காதலன் தலைவி மூதறிவுடைமை மொழிதற்குச் செய்யுள் :

"வருநீர் வனமுலை மங்கைநல் லாய்செங்கை வாணன்வையை
தருநீர் மலிவயற் றஞ்சையன் ஞளன்று தஞ்சமிலேன்
அருநீர் நவையுறக் கண்மலர் நீர்தெளித் தாற்றினளால்
இருநீர் நிலங்கொள்ளு மோவறி யாளென்னு மிவ்வுரையே"

(த. கோ. 91)

எனவும்,

"அணங்குடைப் பனித்துறைத் தொண்டி யன்ன
மணங்கமழ் பொழிற்குறி நல்கின ளுணங்கிழைப்
பொங்கரி பரந்த வுண்கண்
அங்கலுழ் மேனி யசைியிய லெமக்கே" (ஐங்குறு. 174)

எனவும் வரும்.

பாங்கி முன்னுறுபுணர்ச்சி முறையுறக் கூறற்குச் செய்யுள் :

" செறிவளர் காவி வயற்றஞ்சை வாணன் சிறுமலைமேல்
நெறிவளர் வார்குழ லேரிழை யாளன்ன நீர்மையளேற்
குறிவளர் காவின்முன் கூடிய வாறின்னுங் கூடுகநீ
கறிவளர் சாரல்வெற் பாபிற ராலென்ன காரியமே"
(த. கோ. 92)

எனவரும்.

தன்னிலை தலைவன் சாற்றற்குச் செய்யுள் :

"உரைத்தென் பிறவந்தப் பைந்தொடி யாக முருவிடில்வெண்
டிரைத்தென் கடன்முத்துந் தென்மலைச் சந்துஞ் செழும்பனிநீ
ரரைத்தென் புருகமெய் யப்பினும் வெப்ப மருதினிநின்
வரைத்தென் கருமமெல்லாந்தஞ்சை வாணன்வரையணங்கே"
(த. கோ. 93)

எனவும்,

"தோளுங் கூந்தலும் பலபா ராட்டி
வாழ்த லொல்லுமோ மற்றே செங்கோற்
குட்டுவன் றொண்டி யன்ன
வெற்கண்டு நயந்துநீ நல்காக்காலே" (ஐங்குறு. 178)

எனவும் வரும்.

பாங்கி உலகியலுரைத்தற்குச் செய்யுள் :

"விரையக நாண்மலர் மெல்லியன் மாதை விரும்பினையேல்
வரையக நாட வரைந்துகொ ணீதஞ்சை வாணன்முந்நீர்த்
தரையக நான்மறைக் கேள்வியர் வேள்வியர் சான்றவர்தம்
உரையக நாடிமுன் னிட்டன தாகு முலகியலே" (த. கோ. 94)

எனவும்,

"கோடீ ரெல்வளைக் கொழும்பல் கூந்தல்
ஆய்தொடி மடவரல் வேண்டுதி யாயின்
தெண்கழிச் சேயிருப் பநீஉந்
தண்கடற் சேர்ப்ப வரைந்தனை கொண்மோ"
(ஐங்குறு. 196)

எனவும் வரும்.

தலைமகன் மறுத்தற்குச் செய்யுள் :

" வெண்டா மரைமங்கை காதல ஞகிய வேதியன்பால்
உண்டா கியதொல் லுலகிய லாலுங்க ளாரணங்கை
வண்டார் குழலி வரைந்துகொள் வேன்றஞ்சை வாணன்வண்மை
கண்டா லருளுள்ள நீயென தாருயிர் காத்தபின்னே "
(த. கோ. 95)

எனவரும்.

பாங்கி யஞ்சி யச்சுறுத்தற்குச் செய்யுள் :

" மல்லார் புயன்றஞ்சை வாணன்வெற் பாவெமர் வந்தினியிக்
கல்லார் வியன்புனங் காவல் விடாரவர் காணின்மிகப்
பொல்லா திருண்டது போதுமற் றியாங்களும் போதுமிங்கு
நில்லா தெழுந்தரு ணீயுமிப் போது நெடுந்தகையே "
(த. கோ. 96)

எனவும்,

" விரைகமழ் சாரல் விளைபுனங் காப்பார்
வரையிடை வாரனீ யைய — வுரைகடியர்
வில்லினர் வேலர் விரைசெலு மம்பினர்
கல்லிடை வாழ்ந ரெமர் " (திணைமொழி. ஐம். 5)

எனவும் வரும்.

தலைமகன் கையுறை புகழ்தற்குச் செய்யுள் :

" சிமையார் மலயத் தமிழ்த்தஞ்சை வாணன் சிறுமலைமேல்
அமையா கியதடந் தோளன்ன மேயணி யத்தகுமால்
உமையா ளிறைவன் பயில்கயி லாயத்து மும்பர்தங்கும்
இமையா சலத்துமெல் லாமில்லை யானிக ரித்தழைக்கே "
(த. கோ. 97)

எனவும்,

" கண்ணி தகைசிறந் தனவே தண்ணென்
பூந்தழை செவ்விய போலும் வாங்கிருங்
கூந்தலு மல்குலும் பொலிய
வேந்திழை கொள்கயாம் விழைகுவம் பெரிதே "

எனவும் வரும்.

பாங்கி கையுறை மறுத்தற்குச் செய்யுள் :

“ மல்குற்ற தண்புனல் சூழ்தஞ்சை வாணன் மலயவெற்ப
நல்குற் றவையிந்த நாட்டுள வன்மையி னன்னுதலாள்
அல்குற் றடத்தெமர் கண்டா லயிர்ப்ப ரதுவுமன்றிப்
பல்குற் றமும்வரு மால்யாங்கள் வாங்கேம் பசுந்தழையே ”

(த. கோ. 98)

எனவும்,

“ இறாதும லாளர் கொள்ளா ரிவையே
யெம்மொடு வந்து கடலாடு மகளிரு
நெய்தலம் பகைத்தழைப் பாவை புனையார்
உடலகங் கொள்வோ ரின்மையின்
தொடலைக் குற்ற சிலபூ வினரே ” (ஐங்குறு. 187)

எனவும் வரும்.

தலைமகன் ஆற்று நெஞ்சினொடவன் புலத்தற்குச் செய்யுள் :

“ உழையும்வெங் காளமும் போலுங்கண் ணாளொரு
காலமுள்ளங்
குழையுமெம் பாலென்று கொண்டநெஞ் சேகலிக்
கோடைமண்மேல்
மழையுமந் தாரமும் வந்தன வாணன்றென்
மாறையின்மாந்
தழையுநம் போலிங்க னேகவின் வாடத்
தவஞ்செய்ததே ” (த. கோ. 99)

எனவும் வரும்.

பாங்கி ஆற்றுவித் தகற்றற்குச் செய்யுள் :

“ சோலையில் வாழிளந் தோகையன் னாளைத் தொழுதிரந்திம்
மாலையில் வாழி வரங்கொள்வல் யான்தஞ்சை வாணன்வெற்பா
வேலையில் வார்துகி ரன்னவெய் யோன்வெயில்
வெற்பின்மல்குங்
காலையில் வாபின்னை யென்கைய தாகுநின் கையுறையே ”

(த. கோ. 100)

எனவும்,

" நாள்வேங்கை பொன்சொரியு நன்மலை நன்னாட
கோள்வேங்கை போற்கொடிய ரெம்மையர் — கோள்வேங்கை
யன்னையா னீயு மருந்தழையா மேலாமைக்
கென்னையோ நாளை யெளிது " (திணை. மா. நூ. 29)

எனவும் வரும்.

இவற்றுள், தலைமகன் கூற்றாயினவெல்லாம் இரந்து பின்னிற்றற்கும், பாங்கிகூற்றாயினவெல்லாஞ் சேட்படுத்தற்கும் உரிய எனக் கொள்க. (28)

மடற் கூற்று, மடல் விலக்கு

145 இரந்து குறைபெறாது வருந்திய கிழவோன்
மடலே பொருளென மதித்தலும் பாங்கிக்
குலகின் மேல்வைத் துரைத்தலு மதனைத்
தன்மேல் வைத்துச் சாற்றலும் பாங்கி
தலைமக ளவயவத் தருமை சாற்றலும்
தலைமகன் தன்னைத் தானே புகழ்தலும்
அலர்முலைப் பாங்கி யருளியல் கிளத்தலும்
கொண்டுநிலை கூறலு மென்றிவை யேழும்
மடற்கூற் றிற்கு மடல்விலக் கிற்குங்
கடவ வென்மனார் கற்றறிந் தோரே.

(இ - ள்) இதுவுமது. இரந்து குறைபெறாது வருந்திய கிழவோன் மடலே பொருளென மதித்தல் முதலாகப் பாங்கி கொண்டுநிலை கூறல் ஈறாகச் சொல்லப்பட்ட ஏழுந் தலைமகன் மடற்கூற்றிற்குந் தோழி மடல் விலக்கிற்கும் உரிய கிளவி என்று சொல்லுவர் கற்றுணர்ந்தோர் என்றவாறு.

பாங்கியை இரந்து குறைபெறாது வருந்திய கிழவோன் மடலே பொருளென மதித்தற்குச் செய்யுள் :

" திருந்தார் தொழுங்கழற் சேயன்ன வாணன்றென்
மாறைவெற்பி
லருந்தா வமுதன்ன வஞ்சொனல் லாரழ
கார்குழைதோய்

பெருந்தாரை வேல்விழி தந்தவெங் காமப்
பிணிதனக்கு
மருந்தா வதுநெஞ்ச மேயில்லை வேறு
மடலன்றியே'' (த. கோ. 101)

எனவும்,

''காம முழந்து வருந்தினார்க் கேம
மடலல்ல தில்லை வலி'' (குறள். 1131)

எனவும் வரும்.

பாங்கிக்குத் தலைமகன் மடலேற்றினை உலகின்மேல் வைத்துரைத்தற்குச் செய்யுள்:

''விரையூர் குழலியர் தந்தசிந் தாகுல வெள்ளநிறைக்
கரையூர் பொழுதிளங் காளையர் தாங்கிழி கைப்பிடித்துத்
தரையூர் தொறும்பெண்ணை மாமட லூர்வர் தவிர்ந்துபின்னும்
வரையூர்வர் தஞ்சையர் கோன்வாணன் மாறையில்
வாணுதலே'' (த. கோ. 102)

எனவும்,

''மாவென மடலு மூர்ப பூவெனக்
குவிமுகி ழெருக்கங் கண்ணியுஞ் சூடுப
மறுகி னார்க்கவும் படுப
பிறிது மாகுப காமங்காழ்க் கொளினே'' (குறுந். 17)

எனவும் வரும்.

அம்மடலேற்றினைத் தலைமகன் தன்மேல் வைத்துச் சாற்றற்குச் செய்யுள்:

''வன்பணி போனிலந் தாங்கிய வாணன்றென்
மாறைவெற்பின்
மின்பணி பூண்முலை மெல்லிய லீர்குற்ற
வேண்டியுங்கண்

முன்பணி வேனின்று நாளைவெண் பூளை
முகிழெருக்கோ
டென்பணி வேன்மடன் மேல்வரு வேனிவை
யென்பணியே '' (த. கோ. 103)

எனவும்,

'' தொடலைக் குறுந்தொடி தந்தாள் மடலொடு
மாலை யுழக்குந் துயர் '' (குறள். 1135)

எனவும் வரும்.

பாங்கி, தலைமகள் அவயவத்தருமை சாற்றற்குச் செய்யுள் :

'' தொடையே யெருக்கென்பு நீயணிந் தாலென்னை
சூல்வளையூர்
மடையேய் வயற்றஞ்சை வாணன்வெற் பாமல
ரோன்வகுத்த
படையே நயனம் படைத்தபொற் பாவை
படியெடுக்க
விடையே தெனத்தெரி யாதுரை யாணி
யிடவரிதே '' (த. கோ. 194)

எனவும்,

'' கம்ப மதயானைக் கண்டன் கடற்றெண்டிக்
கொம்பர் விழிக்குவமை கூறுவதே — னம்பு
கருநீலஞ் செங்குவளை காலன்வே லாலம்
பெருநீர்மை தோற்றழிந்த பின் ''

எனவும் வரும்.

தலைமகன் தன்னைத்தானே புகழ்தற்குச் செய்யுள் :

'' நறையல ராவிரைப் போதிசை யாதிசை நான்முகத்து
மறையல ராவந்த மான்மகன் யான்றஞ்சை வாணன்வையைத்
துறையல ராவியங் காவியங் கண்ணி துணிந்துசொல்லுங்
குறையல ரார்குழ லாட்கினித் தீரக் குறையில்லையே ''
(த. கோ. 105)

எனவும் வரும்.

பாங்கி அருளியல் கிளத்தற்குச் செய்யுள் :

'' செயலார் குடம்பையிற் செந்தலை யன்றிற் சினையுளபைங்
கயலார் வனவெண் குருகின்வண் பார்ப்புள கைக்கடங்கா
மயலார் களிற்றண்ணல் வாணன்றென் மாறை
வையைத்துறைவா
வியலா தருளுடையார்க்கென்று மாமட லேறுவதே ''
(த. கோ. 106)

எனவும்,

'' வெள்ளாங் குருகின் பிள்ளையும் பலவே
யவையினும் பலவே சிறுகருங் காக்கை
யவையினும் அவையினும் பலவே ருவிமட
லோங்கிரும் பெண்ணை மீமிசைந் தொடுத்த
தூக்கணங் குரீஇக் கூட்டுள சினையே ''
(தொல். பொருள். கள. நூ. 20 உரை மேற்கோள்)

எனவும் வரும்.

பாங்கி கொண்டுநிலை கூறற்குச் செய்யுள் :

'' வெண்டோ டணிமுகப்பைங்குரும் பைக்கொங்கை
வெய்யவுண்கட்
கண்டோர் விரும்புங் கரும்பனை யாரைக்
கடற்றுறைவா
கொண்டோர் குறைமுடி கொம்பனை யார்நின்
குறைமறுத்தால்
வண்டோ விடுந்தொங்க லான்வாணன் மாறை
வளநகர்க்கே '' (த. கோ. 107)

எனவும்,

'' முளவுமா வல்சி யெயினர் தங்கை
யிளமா வெயிற்றிக்கு மிந்நிலை யறியச்
சொல்லினெ னிரக்கு மளவை
வெள்வேல் விடலை விரையா தீமே '' (ஐங்குறு. 364)

எனவும் வரும்.

இது தலைமகன் நிலையைத் தாங்கிக்கொண்டு நிற்றலாற் கொண்டு நிலையாயிற்று. இச்சூத்திரத்துள் தலைமகன் கூற்றுயின வெல்லாம் மடற் கூற்றிற்கும், பாங்கி கூற்றுயினவெல்லாம் மடல் விலக்கிற்கும் உரியவெனக்கொள்க. இவ்விரண்டு சூத்திரத்துள்ளும் எடுத்தோதப்பட்ட கிளவிகள் இவ்வியலுட் பாங்கி கூற்றுள்:

'' குறையுறற் கெதிரிய கிழவனை மறையுறப்
பெருமையிற் பெயர்ப்பினு முலகுரைத் தொழிப்பினும்
அருமையி னகற்சியு மவளறி வுறுத்துப்
பின்வர வென்றலும் பேதைமை யூட்டலும்
முன்னுறு புணர்ச்சி முறைநிறுத் துரைத்தலும்
அஞ்சியச் சுறுத்தலு முரைத்துழிக் கூட்டமோ
டெஞ்சாது கிளந்த விருநான்கு கிளவியும்

(தொல். பொருள். கள. 23)

என்பதனுலும், தலைமகன் கூற்றுள்:

'' தண்டா திரப்பினு மற்றைய வழியுஞ்
சொல்லவட் சார்த்தலிற் புல்லிய வகையினும்
அறிந்தோ ளயர்ப்பி னவ்வழி மருங்கிற்
கேடும் பீடுங் கூறலுந் தோழி
நீக்கலி னாகிய நிலைமையு நோக்கி
மடன்மா கூறு மிடனுமா ருண்டே ''

(தொல். பொருள். கள. 11)

என்பதனுலும்,

'' இரந்து குறையுற்ற கிழவனைத் தோழி
நிரம்ப நீக்கி நிறுத்த லன்றியும்
வாய்மை கூறலும் பொய்தலைப் பெய்தலும்
நல்வகை யுடைய நயத்திற் கூறியும்
பல்வகை யானும் படைக்கவும் பெறுமே ''

(தொல். பொருள். பொருளியல். 43)

என்பதனுலும் கொள்ளப்பட்டன. (29)

குறை நேர்தல், மடற்கூற்றொழிதல்.

146 தலைவி யிளமைத் தன்மை பாங்கி
தலைவற் குணர்த்தலுந் தலைவன் றலைவி
வருத்திய வண்ண முரைத்தலும் பாங்கி
செவ்வி யருமை செப்பலுந் தலைவன்
செவ்வி யெளிமை செப்பலும் பாங்கி
என்னை மறைப்பி னெளிதன நகுதலும்
அந்நகை பொருஅ தவன்புலம் பலுமவள்
தேற்றலும் கையுறை யேற்றலும் கிழவோன்
ஆற்றலு மென்னும் அவ்வொன் பானும்
குறைநேர் தற்குமடற் கூற்றொழி தற்கும்
முறைமையி னுரிய முன்னுங் காலே.

இதுவுமது.

(இ-ள்) தலைவி இளமைத்தன்மை பாங்கி தலைவற்குணர்த்தல் முதலாகக் கிழவோன் ஆற்றல் ஈருகச் சொல்லப்பட்ட ஒன்பதும் பாங்கி குறைநேர்தற்கும், தலைமகன் மடற்கூற்றொழிதற்கும் முறை யானே உரியவாங் கருதுங் காலத்து என்றவாறு.

தலைவியின் இளமைத்தன்மையைப் ாங்கி தலைவற்குணர்த்தற்குச் செய்யுள் :

"களவரும் பாகரு நீலங்கள் காமக் கடவுளுமால்
கொளவரும் பாபைங் குரும்பைக் குலஞ்செங் குமுதத்துவெண்
டளவரும் பாநண்ப னேதஞ்சை வாணன் றமிழ்வையை நாட்
டிளவரும் பாமிவண் மாட்டென்கொ லோநின் றிரப்பதுவே"
(த. கோ. 108)

எனவும்,

"நெறிமருப் பெருமை நீல விரும்போத்து
வெறிமலர்ப் பொய்கை யாம்பன் மயக்குங்
கழனி யூரன் மகளிவள்
பழன வெதிரின் கொடிப்பிணை யலளே"

(ஐங்குறு. 91)

எனவும் வரும்.

தலைவன் தலைவி வருந்தியவண்ணம் உரைத்தற்குச் செய்யுள்:

''சிலைபயில் வாணுதன் மின்னே பிறந்தவச் செவ்வியிலே
கொலைபயி லுகக் குருளையைப் போற்குறி யோனிருந்த
மலைபயில் வார்தமிழ் வாணன்றென் மாறை மயிலனையாள்
அலைபயி லால்விழி யாலென தாவி யணங்கினளே''

(த. கோ. 109)

எனவும்,

''குன்றக் குறவன் காதன் மடமகள்
வண்டுபடு கூந்தற் றண்டழைக் கொடிச்சி
வளையண் முளைவா ளெயிற்றள்
இளைய ளாயினு மாரணங் கினளே'' (ஐங்குறு. 256)

எனவும் வரும்.

பாங்கி தலைமகள் செவ்வியருமை செப்பற்குச் செய்யுள்:

''ஏடா ரலங்க லிலங்கிலை வேல்வெற்ப வேழுலகும்
வாடாமல் வந்தருள் வாணன்றென் மாறையில் வல்லியன்னாள்
சூடாள் குவளையு முல்லையஞ் சூட்டுஞ் சுனையும்பந்து
மாடா டனக்கென்கொ லோவடி யேன்சென் றறிவிப்பதே''

(த. கோ. 110)

எனவும்,

''நெறிநீ ரிருங்கழி நீலமுஞ் சூடாள்
பொறிமாண் வரியலவ னுடலு மாடாள்
சிறுநுதல் வேரரும்பச் சிந்தியா நின்றுட்கு
எறிநீர்த்தண் சேர்ப்பயா னென்சொல்லிச் செல்கோ''

(தொல். பொருள். களவு. நூ. 23 உரை மேற்கோள்)

எனவும் வரும்.

தலைவன் தலைவி செவ்வியெளிமை செப்பற்குச் செய்யுள்:

''தேன்வந்த வாயிதழ்ச் சேயிழை யாயிளஞ் செவ்விநவ்வி
மான்வந்த வாள்விழி வஞ்சிக்கு நீதஞ்சை வாணன்வெற்பில்
யான்வந்த வாசென் றியம்புதி யேலவர் யாவரென்னுள்
தான்வந் தவாவுட னேநின்னை யாரத் தழீஇக்கொளுமே''

(த. கோ. 111)

எனவும்,

"நீர்வள ராம்பற் றூம்புடைத் திரள்கா
ஞருரித் தன்ன மதனின் மாமைக்
குவளை யன்ன வேந்தெழின் மழைக்கட்
டிதலை யல்குற் பெருந்தோட் குறுமகட்
கெய்தச் சென்று செப்புநர்ப் பெறினே
யிவர்யா ரென்குவ ளல்லண் முறைஅ
தத்தக் குமிழின் கொடுமூக்கு விளைகனி
யெறிமட மாற்கு வல்சி யாகும்
வல்வி லோரி கான நாறி
யிரும்பல் லொலிவருங் கூந்தல்
பெரும்பே துறுவள்யாம் வந்தன மெனவே"

(நற்றிணை. 6)

எனவும் வரும்.

பாங்கி என்னை மறைப்பின் எளிதென நகுதற்குச் செய்யுள் :

"மண்ணும் பயில்வித்து மொன்றினுஞ் சந்திர வாணன்வெற்பா
நண்ணும் புனலின்றி யங்குரி யாதுங்க ணல்வினையாற்
கண்ணுங் கருத்துங் கலந்தன வாயினுங் கண்ணினும்முள்
எண்ணுங் குறையென்னை நீர்மறைத் தாலிங் கியல்வதன்றே"

(த. கோ. 112)

எனவரும்.

அந்நகை பொருஅது அவன் புலம்பற்குச் செய்யுள் :

"வெவ்வே லெறிந்த விழுப்புண்ணின் மீட்டும் வெதுப்பியதோர்
செவ்வே னுழைப்பவர் சீலமன் றேதிரு வேமருவார்
வைவே லமர்வென்ற வாணன்றென் மாறை மயில்பொருட்டால்
நைவேனை யஞ்சலென் னாதின்ன வாறு நகைக்கின்றதே"

(த. கோ. 113)

எனவும்,

" நயனின் மையிற் பயனிது வென்னது
பூம்பொறிப் பொலிந்த வழலுமி ழகன்பைப்
பாம்புயி ரணங்கி யாங்கு மீங்கிது
தகாஅது வாழியோ குறுமக ணகாஅ
துரைமதி யுடையுமென் னுள்ளஞ் சாரற்
கொடுவிற் கானவன் கோட்டுமா தொலைச்சிப்
பச்சூன் பெய்த பகழி போலச்
சேயரி பரந்த வாயிழை மழைக்க
ணுருஅ நோக்க முற்றவென்
பையு ணெஞ்ச முய்யு மாறே" (நற்றிணை. 75)

எனவும் வரும்.

பாங்கி தலைமகனைத் தேற்றற்குச் செய்யுள் :

" தன்கண் ணனையதன் பாங்கிய ருள்ளுந் தனக்குயிரா
மென்கண் ணருள்பெரி தெம்பெரு மாட்டிக் கிகன்மலைந்தார்
வன்கண் ணமர்வென்ற வாணன்றென் மாறையில் வந்தவளாற்
புன்கண் ணடையலை நீயினி வாடல் புரவலனே"
(த. கோ. 114)

எனவரும்.

பாங்கி கையுறை ஏற்றற்குச் செய்யுள் :

ஒலிதெண் கடல்புடை சூழுல கேழினு மூழ்வினைதான்
வலிதென் பதனை வயக்கிய தாற்றஞ்சை வாணன்வெற்பா
கலிதெங்கு மாவுங் கமுகும் பலாவுங் கதலிகளும்
பொலிதென் பொதியிலின் மேற்சந்த னுடவிப் பூந்தழையே"
(த கோ. 115)

எனவரும்.

கிழவோன் ஆற்றற்குச் செய்யுள் :

" மைப்போ தணிதொங்கல் வாணனென் னூரென
வல்வினையேற்
கப்போ தடைந்த வருந்துயர் நீங்கி
யரும்பியபொற்

சேப்போ திளமுலை யாணகை வாண்முகத்
திங்களைக்கண்
டிப்போ திளகிய தாலிந்து காந்தங்கொ
லென்னெஞ்சமே'' (த. கோ. 116)

என்வும்,

''உருஅ தவர்போற் சொலினுஞ் செருஅர்சொ
லொல்லை யுணப்படும்'' (குறள். 1096)

எனவும் வரும்.

இதனுள், பாங்கி கூற்றுயினவெல்லாம் குறைநேர்தற்கும், தலைமகன் கூற்றுயினவெல்லாம் மடற்கூற்றொழிதற்கும் உரியன வெனக்கொள்க. இதனுள் எடுத்தோதப்பட்ட கிளவிகள்:

''பண்பிற் பெயர்ப்பினும் பரிவுற்று மெலியினு
மன்புற்று நகினு மவட்பெற்று மலியினும்
ஆற்றிடை யுறுதலு மவ்வினைக் கியல்பே''
(தொல். பொருள். கள. நூ. 12)

என்பதனுற் கொள்ளப்பட்டன. இவற்றுள் சான்றோர் செய்யுள் இல்லாதவற்றிகுச் சூத்திரந்தன்னையே இலக்கியமாகக் கொள்க.
(30)

குறைநயப்பித்தல், மறுத்தல்

147 இறைவன் றனக்குக் குறைநேர் பாங்கி
யிறைவிக் கவன்குறை யுணர்த்தலு மிறைவி
யறியாள் போன்று குறியாள் கூறலும்
பாங்கி இறையோற் கண்டமை பகர்தலும்
பாங்கியைத் தலைவி மறைத்தலும் பாங்கி
யென்னை மறைப்ப தென்னெனத் தழாஅலும்
கையுறை புகழ்வுமென் றிவ்விரு மூன்றும்
மெலிதாகச் சொல்லிக் குறைநயப் பித்தற்கும்
வலிதாகச் சொல்லி மறுத்தற்கு முரிய.

இதுவும் அது.

(இ - ம்) இறைவன் றனக்குக் குறைநேர் பாங்கி இறைவிக்கு அவன்குறை உணர்த்தல் முதலாகப் பாங்கி கையுறை புகழ்தல் ஈருகச் சொல்லப்பட்ட ஆறும் பாங்கி மெலிதாகச் சொல்லிக் குறை நயப்பித்தற்கும், தலைமகள் வலிதாகச்சொல்லி மறுத்தற்கும் உரிய கிளவியாம் என்றவாறு.

இறைவன் தனக்குக் குறைநேர் பாங்கி இறைவிக்கு அவன் குறை உணர்த்தற்குச் செய்யுள்:

"இருவர்கண் டால்வரு மேதமென் றெண்ணி யெனக்கெதிரே
வருவர்வந் தாலுந்தம் வாய்திற வார்தஞ்சை வாணன்வெற்பி
லொருவர்நஞ் சாரலுழையக லார்தழை யுள்ளதெல்லாந்
தருவர்வம் பார்முலை யாயென்கொ லோசெயத்தக்கதுவே"

(த. கோ. 117)

எனவும்,

"தன்குறையீ தென்னுன் றழைகொணருந் தண்சிலம்ப
னின்குறை யென்னு நினைப்பினனுய்ப் — பொன்குறையு
நாள்வேங்கை நீழலு ணண்ணு னெவன்கொலோ
கோள்வேங்கை யன்னுன் குறிப்பு" (திணைமா. நூ. 31)

எனவும் வரும்.

இறைவி அறியாள் போன்று குறியாள் கூறற்குச் செய்யுள்:

"கலைதொடக் கீண்ட கருவியந் தேன்பல கால்கொடுமா
மலைதொடுத் தூர்ந்து வருகின்ற தாற்றஞ்சைவாணன்வென்றிச்
சிலைதொடுத் தாங்கெழில் சேர்நுத லாய்பயில் செம்பழுக்காய்க்
குலைதொடுத் தோங்குபைங் கேழ்ப்பூக நாகக் குழாங்கவர்ந்தே"

(த. கோ. 118)

எனவும்,

"தூய்மை சான்ற தொல்குடித் தோன்றி
வாய்மை நாவின் மதியான் போல
உயர்தவ முனிவர் சார்வாப்
பெயரா நிலையது பிறங்குதிரு மலையே"

எனவும் வரும்.

பாங்கி இறையோற் கண்டமை பகர்தற்குச் செய்யுள் :

'' திவாகர னேயன்ன பேரொளி வாணன்றென் மாறைநன்னாட்
டுவாமதி போலு மொளிர்முகத் தாயென் னுளிப்பதுன்மே
லவாவின னாகியொர் மானை வினவிவந் தானையின்றிக்
கவானுயர் சோலையின் வாய்வண்ட லாருழைக் கண்டனமே ''
(த. கோ. 119)

எனவும்,

'' வளையணி முன்கை வாலெயிற் றமர்நகை
யிளையா ராடுந் தளையவிழ் கானற்
குறுந்துறை வினவி நின்ற
நெடுந்தோ ளண்ணற் கண்டிகும் யாமே ''
(ஐங்குறு. 198)

எனவும் வரும்.

பாங்கியைத் தலைவி மறைத்தற்குச் செய்யுள் :

'' செவ்வண்ண வேல்விழி யாய்தஞ்சை வாணன்றென்
மாறைநன்னாட்
டிவ்வண்ண நீசொல்வ தேற்பதன் றுனின்
னிடையெனத்தா
மெய்வண்ணம் வாடி வெறிதே வருந்தி
விருந்தினராய்க்
கைவண்ண வார்தழை கொண்டுசென் றூர்தமைக்
கண்டுகண்டே '' (த. கோ. 120)

எனவும்,

'' தெருவின்கண்
காரண மின்றிக் கலங்குவார்க் கண்டுநீ
வாரண வாசிப் பதம்பெயர்த்த லேதில
நீநின்மேற் கொள்வ தெவன் '' (கலி. 60)

எனவும் வரும்.

பாங்கி என்னை மறைப்பதென்னெனத் தழாஅற்குச் செய்யுள்:

'' பரக்கின்ற செவ்விதழ்ப் பங்கயப் பாதம்
பணிந்துநின்னை
யிரக்கின்ற தொன்றையு மெண்ணலை யாலெழு
பார்முழுதும்

புரக்கின்ற கோன்றஞ்சை வாணன் பொதியிலிற்
பொய்த்தென்னை நீ
கரக்கின்ற தென்னைகோ லென்னுயி ராகிய
காரிகையே" (த. கோ. 121)

எனவும்,

''வாள்போழ் வானத்து வயங்குபு சிதறிக்
கோள்சேர்ந்து கிடந்த குழவிப் பிறையேய்ப்பப்
பொறியணி திலக நறுநுதல் வியர்ப்பப்
பொற்பப் புனைந்த நற்போ தவிழ்ந்து
நறிய நாறுநின் கூந்தலு மன்றி
யருங்கடி மூதூர் மருங்கிற் போகி
விசும்புதொட நிவந்த வியன்பெருங் கோயில்
பசும்பொ னன்கலம் பரிசி லாக
வடையார்த் துறந்த வருந்திற லயிலவன்
படைத்தலை பெயர்த்த கறையெஃகம் போலக்
கடைசிவந் தனவே கருங்கவன் மழைக்கண்
ணென்னெடு சூழா யாகி னின்னோ
டாட லஞ்சுவ றேழி நீயிறை
நிறைகட லுமிழ்ந்த நீணீர்ப் பறைவா
யோதத்துப் பனித்திரை பொருத கால்சாய்
புன்னைக் காமர் புதுப்பூ வுதிர
நூல்கான் மூத்தி னுண்ணிதி னுறைய
நெடும்பணைப் பள்ளி வீழு
மிடுமண லெக்கர்க் கானல் யானே''

எனவும் வரும்.

பாங்கி கையுறை புகழ்தற்குச் செய்யுள்:

''சூடத் தகுவன வல்லவெல் லாம்படி சொல்லினுந்தாம்
வாடத் தகுவன வல்லநல் லாய்தஞ்சை வாணன்வெற்பர்
தேடத் தகுவன வல்லதல் லாத சிலம்பினுள்ளார்
நாடத் தகுவன வல்லகல் லார நறுந்தழையே''
(த. கோ. 122)

எனவும்,

'' நெய்யொடு மயக்கிய வுழுந்துநூற் றன்ன
வயலையஞ் சிலம்பின் றலையது
செயலையம் பகைத்தழை வாடு மன்னாய் ''
(ஐங்குறு. 211)

எனவும் வரும்.

இதனுட் பாங்கி கூற்றாயின வெல்லாம் குறைநயப்பித்தற்கும், தலைமகன் கூற்றாயின வெல்லாம் குறைமறுத்தற்கும் உரியவெனக் கொள்க. (31)

குறை நயப்பித்தல், நயத்தல்

148 தோழி கிழவோன் துயர்நிலை கிளர்த்தலும்
மறுத்தற் கருமை மாட்டலுந் தலைவன்
குறிப்புவே றாக நெறிப்படக் கூறலும்
தலைவியை முனிதலும் தலைவி பாங்கி
தன்னை முனிதலுந் தன்கைக் கையுறை
யேற்றலு மெனமுறை சாற்றிய ஆறும்
வலிதாகச் சொல்லிக் குறைநயப் பித்தற்கும்
மெலிதாகச் சொல்லி மேவற்கு முரிய.

இதுவுமது.

(இ - ம்) தோழி கிழவோன் துயர்நிலைகிளத்தல் முதலாகக் கையுறையேற்றல் ஈறாக முறையே சொல்லப்பட்ட ஆறும் வலிதாகச் சொல்லிக் குறைநயப்பித்தற்கும், மெலிதாகச் சொல்லி மேவற்கும் உரிய கிளவிகளாம் என்றவாறு.

தோழி கிழவோன் துயர்நிலை கிளத்தற்குச் செய்யுள் :

'' வனையுங் குழல்வஞ்சி வாணன்றென் மாறை வரைக்களிறு
தினையுந் தழையும் பிடியொடு மேய்ந்து தெளிந்தவின்னீர்
சுனையுண் டசோக நிழற்சோக நீங்கித் துயில்வதுகண்
டெனையுங் கடைக்கணி யாவினை யாநிற்ப ரேதிலரே ''
(த. கோ. 123)

எனவும்,

''பருவர னெஞ்ச மேவ றவிராது
செருவே லுதியன் சேண்விளங்கு முசிறிக்
கருங்கழிக் காவி யொடுகலாங் கருதிய
பெருங்கண் மாயோளே நாங்கடி கொண்ட
செந்தினை கவர்ந்த பைங்கண் வேழங்
கருவரைப் பிரசங் கையின் வாங்கி
ஈயின மிரிய வீசி
வயவுப் பிடியின் வாயுறக் கொடுத்த
செவ்வி நோக்கி
யுருகு நெஞ்சமொடு நீடுநினைந்
தருகுசென் ஞமலியு மென்னையு நோக்கிக்
கழலொலி கரப்ப வொ துங்கி
நிழலென நிற்ப னொருநினை நினைத்தே''

எனவும் வரும்.

தோழி தலைமகனை மறுத்தற்கருமை மாட்டற்குச் செய்யுள் :

''கையுந் தழையுமுன் காண்டொறுங் காண்டொறுங்
கட்டுரைத்த
பொய்யுந் தொலைந்தன பூந்தழை போலரி
போர்த்துநஞ்சு
மையுங் கலந்துண்ட வாள்விழி யாய்தஞ்சை
வாணன்வெற்பர்
மெய்யுந் துவண்டதென் ஞன்முடி யாது
வெளிநிற்கவே'' (த. கோ. 124)

எனவும்,

''தேர்சே ணீக்கித் தமியனில் வந்துநும்
ஊர் யாதென்ன நணிநணி யொதுங்கி
முன்னுட் போகிய துறைவன் நெருநை
அகலிலை நாவ லுண்டுறை யுதிர்ந்த
கனிகவின் சிதைய வாங்கிக் கொண்டுதன்
முழை வேரளைவீழ்துணைக் கிடூஉம்
அலவற் காட்டி நற்பாற் றிதுவென
நினைந்த நெஞ்சமொடு நெடிதுபெயர்ந் தோனே

யுதுக்காண் டோன்றுந் தேரே யின்று
நாமெதிர் கொள்ளா மாயிற் றூனது
துணிகுவன் போலா நாணுமிக வுடையன்
வெண்மணா ணெடுங்கோட்டு மறைகோ
வம்ம வாழி கூறுமதி நீயே'' (அகம். 380)

எனவும் வரும்.

தோழி தலைமகள் குறிப்பு வேருக நெறிப்படக் கூறற்குச் செய்யுள் :

''விடையான் மிசைவரு மேருவில் லானொடு மேழிவென்றிப்
படையா னொடும்வெம் பகைகொள்வதோ பகல்
போலுமெய்ம்மை
யுடையா னுயர்தஞ்சை வாணனென் னூரென வொல்கியநுண்
ணிடையாய் பிறிதுகொ லோவறி யேன்வெற்ப ரெண்ணுவதே"
(த. கோ. 125)

எனவும்,

''மறவல் வாழி தோழி துறைவர்
கடல்புரை பெருங்கிளை நாப்பண்
மடல்புனை தேறிநிற் பாடும் பொழுதே''
(தொல். பொருள். நூ. 23 உரை மேற்கோள்)

எனவும் வரும்.

தோழி தலைவியை முனிதற்குச் செய்யுள் :

''தூற்ரு தலரை மறைப்பவர்க் கேகுறை சொல்லுகுற்ற
மேற்ரு தொழியெனை யெம்பெரு மாட்டிசென் றேற்றவர்க்கு
மாற்ரு தருள்செங்கை வாணன்றென் மாறையில் வந்துநெஞ்சம்
போற்ருது நின்றய லேன்சொன்ன தீங்கு பொறுத்தருளே"
(த. கோ. 126)

எனவும்,

''மாயோ னன்ன மால்வரைக் கவாஅன்
வாலியோ னன்ன வயங்குவெள் ளருவி
யம்மலைக் கிழவோ னின்னயந் தென்றும்
வருந்தின னென்பதோர் வாய்ச்சொற் றேருய்
நீயுங் கண்டு நுமரொடு மெண்ணி

யறிவறிந் தளவல் வேண்டு மறுதரற்
கரிய வாழி தோழி பெரியோர்
நாடி நட்பி னல்லது
நட்டுநா டார்தம் மொட்டியோர் திறத்தே''
(நற்றிணை. 32)

எனவும் வரும்.

தலைவி பாங்கியை முனிதற்குச் செய்யுள் :

''மற்றே தவர்நினை வார்தஞ்சை வாணன் வரையின் முந்நாட்
பொற்றேரின் வந்து புணர்ந்துசென் றூர்தம் பொருட்டுநம்மைக்
குற்றேவன் மங்கை குறையிரந் தாளெனுங் குற்றமிந்நா
ளெற்றே தவறுநம் பாலில்லை யாகவு மெய்தியதே"
(த. கோ. 127)

எனவும்,

''விட்டகுதிரை விசைப்பி னன்ன
விசும்புதோய் பசுங்கழைக் குன்ற நாடன்
யாந்தற் படர்ந்தமை யறியான் றானும்
வேனி லானேறு போலச்
சாயின னென்பநம் மாணல நயந்தே'' (குறுந். 74)

எனவும் வரும்.

தலைவி பாங்கிதன்கைக் கையுறை யேற்றற்குச் செய்யுள் :

''ஆற்றுந் தலைவ ரருந்துய ராற்றினு மாற்றிலனுண்
மாற்றும் புனையின் மயிலனை யாய்தஞ்சை வாணன்றெவ்விற்
போற்றுங் கொடுவினை யேன்புனை யாவிடிற் போந்தலரே
தூற்றுந் தழையென்றி தொன்றெங்ங னேவந்து தோன்றியதே"
(த. கோ. 128)

எனவும்,

''சிலம்பின் மேய்ந்த சிறுகோட்டுச் சேதா
வலங்குகுலைக் காந்த ளண்டித் தாதுகக்
கன்றுதாய் மருளுங் குன்ற நாட
னுடுக்குப் தழைதந் தனனே யவையா

முடுப்பின் யாயஞ் சுதுமே கொடுப்பிற்
கேளுடைக் கேடஞ் சுதுமே யாயிடை
வாடல கொல்லோ தாமே யவன்மலைப்
போருடை வருடையும் பாயாச்
சூருடை யடுக்கத்த கொயற்கருந் தழையே ''
(நற்றிணை 359)

எனவும் வரும்.

இதனுட் பாங்கி கூற்றுயின வெல்லாங் குறைநயப்பித்தற்கும், தலைவி கூற்றுயினவெல்லாங் குறைநேர்தற்கும் உரிய கிளவியெனக் கொள்க. (32)

கூட்டல், கூடல், ஆயங்கூட்டல், வேட்டல்

149 இறைவி கையுறை யேற்றமை பாங்கி
யிறைவற் குணர்த்தலுங் குறியிடங் கூறலும்
குறியிடத் திறைவியைக் கொண்டு சேறலும்
குறியிடத் துய்த்து நீங்கலு மிறையோன்
இடத்தெதிர்ப் படுதலு மியைதலும் புகழ்தலும்
விடுத்தலும் பாங்கி மெல்லியற் சார்ந்து
கையுறை காட்டலும் மையுறை கண்ணியைப்
பாங்கிற் கூட்டலும் நீங்கித் தலைவற்
கோம்படை சாற்றலு முலகியன் மேம்பட
விருந்து விலக்கலும் பெருந்தகை விருந்திறை
விரும்பலும் என்னத் தெரிந்தபன் மூன்றுங்
கூட்டல் முதலா வேட்டல் ஈருப்
பாங்கிக்கு வகுத்த நான்கிற்கு முரிய.

இதுவும் அது.

(இ - ம்.) இறைவி கையுறை யேற்றமை பாங்கி யிறைவற் குணர்த்தல் முதலாகத் தலைமகன் விருந்திறை விரும்பல் ஈருக ஆராய்ந்த பதின்மூன்றும் கூட்டலும், கூடலும், பாங்கிற்கூட்டலும், வேட்டலும் என நான்கிற்கும் உரியவாம் என்றவாறு.

இறைவி கையுறையேற்றமை பாங்கி யிறைவற்குணர்த்தற்குச் செய்யுள் :

"போயா னளித்தலுங் கைகுவித் தேற்றபின் போற்றியன்பாற்
சாயாத கொங்கையின் மேலணைத் தாடஞ்சை வாணன்வெற்பா
காயா மலரன்ன மேனிமெய் யாகநிற் கையுறையே
நீயாக வல்லது மாந்தழை யாக நினைந்திலளே''
(த. கோ. 129)

எனவும்,

"தந்துநீ யளித்த தண்டழை காண்டலும்
வந்தன ளெதிர்ந்த மடந்தைதன் னெஞ்ச
மண்மிசை விளங்கி வழுத்தீர் மதியா
னுண்ணியற் பனுவ னுழைபொரு ளுனித்த
வாய்மொழி யமுத மடுக்குவண் மன்னே
யானிறை பெற்றது மிலளே"

எனவும் வரும்.

பாங்கி தலைமகற்குக் குறியிடங் கூறற்குச் செய்யுள்:

''அணிமா மலர்மயி லைப்புயத் தூணங்கொ ளாகமென்னு
மணிமா ளிகைவைத்த வாணன்வண் காவலன் மாறைவெற்பா
துணிமா மரகதப் பாசறை வேலைச் சுடரவன்போற்
பணிமா மணிதிக ழும்பகல் யாங்கள் பயிலிடமே''
(த. கோ. 130)

எனவும்,

''கடும்புலால் புன்னை கடியுந் துறைவ
படும்புலாற் புட்கடிவான் புக்க - தடம்புலாந்
தாழைமா ஞாழற் றதைந்துயர்ந்த தாழ்பொழி
லேழைமா னேக்கி யிடம்'' (திணைமா. நூற். 44)

எனவும் வரும்.

பாங்கி குறியிடத்து இறைவியைக் கொண்டுசேறற்குச் செய்யுள்:

'' நாமாவி மூழ்கி நறுமலர் குற்றுநந் தாவனத்துத்
தேமா விளந்தளிர் செவ்வண்ணங் கொய்து சிலம்பெதிர்கூய்
வாமா னெடுங்கண் மடந்தைநல் லாய்தஞ்சை வாணன்
வெற்பிற்
பூமா தவிப்பந்தர் வாய்வினை யாடுதும் போதுகவே ''
(த. கோ. 131)

எனவரும்.

பாங்கி தலைமகளைக் குறியிடத்துய்த்து நீங்கற்குச் செய்யுள் :

'' கண்சாயல் கையுருக் கொண்டுதன் வேன்மயில் காந்தள்வள்ளி
யெண்சாய வென்றனை யென்றுசெவ் வேளிவ ரும்பவளம்
வண்சா யொசிக்கும் வயற்றஞ்சை வாணன் மலயமராத்
தண்சாயை நின்றணங் குந்தைய னீநிற்க சாரலிலே ''
(த. கோ. 132)

எனவும்,

'' செங்களம் படக்கொன் றவுணர்த்தேய்த்த
செங்கோ லம்பின் செங்கோட்டியானைக்
கழறொடிச் சேஎய் குன்றங்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டே ', (குறுந். 1)

எனவும் வரும்.

இறைவி இறையோனிடத்து எதிர்ப்படுதற்குச் செய்யுள் :

'' முயங்கிய நூபுரப் பங்கயத் தாளு முலைசுமந்து
தயங்கிய நூலிடை தானுமென் போலத் தளர்வுறுமிங்
கியங்கிய வாறென் மனத்திரு ணீக்கவென் றேதுணிந்தோ
வயங்கிய சீருடை யான்வாணன் மாறை மணிவிளக்கே''
(த. கோ. 133)

எனவரும்.

புணர்ச்சியின் மகிழ்தற்குச் செய்யுள்:

"தருந்தாரு வஞ்சுங் கொடையுடை யான்றஞ்சை
வாண னின்சொற்
செருந்தார் பசுந்தமிழ்த் தென்வரை மேற்செம்பொன்
மேருவெற்பாற்
கருந்தாரை நஞ்சுமிழ் வாசுகி யால்வெண்
கடல்கடைந்து
வருந்தா வமுதளித் தாள்வல்ல ளாமிம்
மடக்கொடியே" (த. கோ. 134)

எனவரும்.

புகழ்தற்குச் செய்யுள்:

"மயனார் விதித்தன்ன மாமதில் சூழ்தஞ்சை வாணன்வெற்பிற்
பயனார் பயோதரப் பாவையன் னீர்பசும் பொற்குழைதோய்
நயனார விந்தத்து நஞ்சுநும் வாயிதழ் நல்லமுது
மயனார் படைத்தில ரேலடங் காதவ் வரனுக்குமே"
(த. கோ. 135)

எனவும் வரும்.

தலைமகளைத் தலைமகன் விடுத்தற்குச் செய்யுள்:

"நேயம் புகலிட மின்றிநின் பால்வந்து நின்றதுபோ
லாயம் புகல வடைந்தரு ணியடை யாதமன்னர்
வாயம் புகவில் வணக்கிய வாணன்றென் மாறைநன்னீர்த்
தோயம் புகரிணை வேல்விழி யாய்நின் றுணையுடனே"
(த. கோ. 136)

எனவும் வரும்.

பாங்கி தலைவியைச் சார்ந்து கையுறை காட்டற்குச் செய்யுள்:

"பொய்போ லிடைநின் விழிபோற் குவளயம்
போதிவைநின்யான்
மெய்போ லசோக மிளிர்பூந் தழையிவை மெல்லியனின்
கைபோற் கவின்கொள்செங் காந்தளம் போதிவை கண்டருள்
மைபோற் குழலிதந் தேன்றஞ்சை வாணன் வரையினின்றே"
(த. கோ. 137)

எனவும்,

"நறும்பூங் கண்ணியும் பெருந்தண் கோதையு
நகைவாய்ப் பிணையலு முகைவாய்ச் சூட்டும்
புனைந்தனை யருளல் வேண்டுஞ்
சினங்கொ டானைச் செழுமட மானே"

எனவும் வரும்.

பாங்கி தலைவியைப் பாங்கிற் கூட்டற்குச் செய்யுள்:

"குனிநாண் மதிநுதற் கோகில மேநின் குழலிலெல்லாப்
பனிநாண் மலரும் பறித்தணிந் தேனிந்தப் பார்மடந்தை
தனிநா யகன்றஞ்சை வாணன்றண் சாரற் றனித்து நில்லா
தினிநா மகன்றினை யார்வினை யாடிட மெய்துதுமே"
(த. கோ. 138)

எனவரும்.

பாங்கி தலைவியை நீங்கித் தலைவற்கோம்படை சாற்றற்குச் செய்யுள்:

"சின்னுண் மலர்க்குழல் காரண மாச்செவ்வி பார்த்துழன்று
பன்னு ளுரைத்த பணிமொழி நோக்கிப் பழிநமக்கீ
தென்னு திடைப்பட்ட வென்னிலை நீமற வேலிறைவா
தன்னுக மெய்ப்புக ழான்தஞ்சை வாணன் றமிழ்வெற்பிலே"
(த. கோ. 139)

எனவும்,

"அவரை பொருந்திய பைங்குர லேனற்
கவரி மடமா கதூஉம் படர்சாரற்
கானக நாட மறவல் வயங்கிழைக்
கியானிடை நின்ற புணை" (ஐந்திணை எழு. 1)

எனவும் வரும்.

பாங்கி தலைமகனை உலகியன் மேம்பட விருந்து விலக்கற்குச் செய்யுள் :

"வலைப்பெய்த மான்றசை தேன்றோய்த் தருந்தி மரைமுலைப்பா
லுலைப்பெய்த வார்தினை மூரலு முண்டுளங் கூருவகை
தலைப்பெய்த நாளனை யான்றஞ்சை வாணன் சயிலத்தெம்மூ
ரிலைப்பெய்த தாழ்குரம் பைத்தங்கி னுலுமக் கென்வருமே"
(த. கோ. 140)

எனவும்,

"பன்னு ளெவ்வந் தீரப் பகல்வந்து
புன்னையம் பொதும்பி னின்னிழற் கழிப்பி
மாலை மால்கொள நோக்கிப் பண்ணுய்ந்து
வலவன் வண்டே ரியக்க நீயுஞ்
செலவுவிருப் புறுத லொழிகதில் லம்ம
செல்லா நல்லிசைப் பொலம்பூட் டிரையன்
பல்பூங் கானற் பவத்திரி யனவிவ
ணல்லெழி லின்னலந் தொலைய வொல்லெனக்
கழியே யோத மல்கின்று வழியே
வள்ளெயிற் றரவொடு வயமீன் கொட்குஞ்
சென்றோர் மன்ற மான்றின்று பொழுதென
நின்றிறத் தவலம் வீட வின்றிவண்
சேப்பி னெவனோ பூக்கேழ் புலம்ப
பசுமீ னுடுத்த வெண்ணெல்மாத் தயிர்மிதி
மிதவை மாவா குநவே நினக்கே
வடவர் தந்த வான்கேழ் வட்டங்
குடபுல வுறுப்பிற் கூட்டுபு நிகழ்த்திய
வண்டிமிர் நறுஞ்சாந் தணிகுவந் திண்புமி
லெல்லுத் தொழின்மடுத்த வல்வினைப் பரதவர்
கூர்வளித் கடுவிசை மண்டலிற் பாய்ந்துடன்
கோட்சுருக் கிழித்த கொடுமுடி நெடுவலை
தண்கட லசைவளி யெறிதொறும் வினைவிட்டு
முன்றிற் றுழை தூங்குந்
தெண்கடற் பரப்பினெம் உறைவி னூர்க்கே"
(அகம். 340)

எனவும் வரும்.

தலைமகன் விருந்திறை விரும்பற்குச் செய்யுள் :

"மஞ்சூட்டி யன்ன சுதைமதில் சூழ்தஞ்சை வாணன் வெற்பிற்
பஞ்சூட் டியமென் பதயுகத் தீருங்கள் பாடியின்மான்
வெஞ்சூட் டிழுதன்ன வூனும்பைந் தேனும் விருந்தினர்க்குச்
செஞ்சூட் டிளகுபொன் போற்றினை மூரலுந் தெள்ளமுதே"

(த. கோ. 141)

எனவரும்.

இதனுட் பாங்கி கூற்றுயினவெல்லாங் கூட்டற்கும், வேட்டற்கும் உரியன ; தலைமகன் கூற்றுயினவெல்லாங் கூடற்கும் கூட்டற்கும் உரியவெனக் கொள்க இம்மூன்று சூத்திரத்துள்ளும் எடுத்தோதப்பட்ட கிளவிகள், பாங்கி கூற்றுள்,

"நன்னயம் பெற்றுழி நயம்புரி இடத்தினும்" (தொல். பொருள். கள. 23) என்பதனாலும், தலைமகன் கூற்றுள்,

"வேளாண் எதிரும் விருந்தின் கண்ணும்" (தொல். பொருள் கள. 16) என்பதனாலுங் கொள்ளப்பட்டன. (33)

பாங்கியிற் கூட்டத்து விரி

150 அற்றமில் சிறப்பினிவ் வறுபத் தொன்றுங்
குற்றமில் பாங்கியிற் கூட்டத்து விரியே.

(இ – ம்) பாங்கியிற் கூட்டத்து விரியெல்லாந் தொகுத்து உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) தலைமகன் உட்கோள் சாற்றல் முதலாக விருந்திறை விரும்பல் ஈருச் சொல்லப்பட்ட இவ்வறுபத்தொரு கிளவியும் பாங்கியிற் கூட்டத்து விரியாம் என்றவாறு. (34)

## 10 பகற்குறி

பகற்குறியின் வகை

151 கூட்டல் கூடல் பாங்கிற் கூட்டல்
வேட்டலென் றொருநால் வகைத்தே பகற்குறி.

(இ - ம்) பகற்குறியின் வகை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) கூட்டல் முதலாக வேட்டல் ஈறாக நான்குவகையினை உடைத்துப் பகற்குறி என்றவாறு. (35)

பகற்குறியின் விரி

152 குறியிடங் கூறல் முதலாப் பெறலரும்
விருந்திறை விரும்பல் ஈறாப் பொருந்தப்
பகர்ந்தபன் னிரண்டும் பகற்குறி விரியே

(இ - ம்) பகற்குறியின் விரி உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) குறியிடங் கூறல் முதலாக விருந்திறை விரும்பல் ஈறாக மேற்பாங்கியிற் கூட்டத்துள் எடுத்தோதப்பட்ட பன்னிரண்டும் பகற்குறி விரியாம் என்றவாறு.

உதாரணம் மேற்காட்டினவெனக் கொள்க. (36)

ஒருசார் பகற்குரியின் வகை

153 இரங்கல் வன்புறை யிற்செறிப் புணர்த்தலென்
றொருங்கு மூவகைத் தொருசார் பகற்குறி

(இ - ம்) ஒருசார் பகற்குறியின் வகை உணர்த்துதல் நுதலிற்று

(இ - ள்) இரங்கலும், வன்பைுறயும், இற்செறிப்புணர்த்தலும் என மூன்று வகையினை உடைத்து ஒருகூற்றுப் பகற்குறி என்றவாறு. (37)

ஒருசார் பகற்குறியின் விரி

154 கிழவோன் பிரிந்துழிக் கிழத்தி மாலையம்
பொழுதுகண் டிரங்கலும் பாங்கி புலம்பலும்
தலைவன் நீடத் தலைவி வருந்தலுந்
தலைவியைப் பாங்கி கழறலுந் தலைவி
முன்னிலைப் புறமொழி மொழிதலு மின்னுயிர்ப்
பாங்கியொடு பகர்தலும் பாங்கியச் சுறுத்தலும்
நீங்கற் கருமை தலைவிநினைந் திரங்கலும்
தலைவிக் கவன்வரல் பாங்கி சாற்றலுந்
சிறைப்புற மாகச் செறிப்பறி வுறுத்தலும்
முன்னிலைப் புறமொழி மொழிந்தறி வுறுத்தலும்
முன்னின் றுணர்த்தலும் முன்னின் றுணர்த்தி
ஓம்படை சாற்றலும் மேம்படு கிழவோன்
தஞ்சம் பெறுது நெஞ்சொடு கிளத்தலும்
என்றவீ ரேழும் எல்லுக்குறி விரியே,

(இ - ம்) ஒருசார் பகற்குறி விரி உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) கிழவோன் பிரிந்துழிக் கிழத்தி மாலையம்பொழுது கண்டு இரங்கல் முதலாகக் கிழவோன் தஞ்சம் பெறுது நெஞ்சொடு கிளத்தல் ஈருகச் சொல்லப்பட்ட பதினுன்கும் ஒருசார் பகற்குறி விரியாம் என்றவாறு.

ஒருசாரென்றது அதிகாரத்தால் விரித்துரைக்கப்பட்டது. அவற்றுள் :

கிழவோன் பிரிந்துழிக் கிழத்தி மாலையம்பொழுது கண்டு இரங்கற்குச் செய்யுள் :

''ஆழ்ந்தார் தமக்கரு ளாதவர் போலிவ் வளவிலன்பு
சூழ்ந்தார் செலத்தொங்கல் சூழ்குழ லாய்சொற்
பொருள்படைத்து
வாழ்ந்தார் புகழ்தஞ்சை வாணனைப் பேணலர்
மானவெய்யோன்
வீழ்ந்தார் கலிக்கரந் தான்பனி மாலை வெளிப்படவே''
(த. கோ. 142)

எனவும்,

''நெய்தல் கூம்ப நிழல்குணக் கொழுகக்
கல்சேர் மண்டிலஞ் சிவந்துநிலந் தணியப்
பல்பூங் கானலு மல்கின் றன்றே
யினமணி யொலிப்பப் பொழுதுபடப் பூட்டி
மெய்ம்மலி காமத் தியாந்தொழு தொழியத்
தேருஞ் செல்புற மறையு மூரோ
டியாங்கா வதுகொ ருனே தேம்பட
வூதுவண் டிமிருங் கோதை மார்பின்
மின்னிவர் கொடும்பூட் கொண்கனொ
டின்னகை மேவநா மாடிய பொழிலே''

(நற்றிணை. 187)

எனவும் வரும்.

பாங்கி புலம்பற்குச் செய்யுள்:

"காலையம் போருக வாண்முகத் தாளன்பர் கையகல
மாலையம் போது வருவித்த நீர்தஞ்சை வாணன்றெவ்வ
ராலையம் போலுங்க ளாதவன் கோயி லழல்கொளுந்த
வேலையம் போடுழல் வீர்பரி காளென்றும் வெய்துயிர்த்தே''

(த. கோ. 143)

எனவும்,

''பெருமுது செல்வர் பொன்னுடைப் புதல்வர்
சிறுதோட் கோத்த செவ்வரிப் பறையின்
கண்ணகத் தெழுதிய குரீஇப் போலக்
கோல்கொண் டலைப்பப் படீஇயர் மாதோ
வீரை வேண்மான் வெளியன்றித் தன்
முரசுமுதற் கொளீஇய மாலை விளக்கின்
வெண்கோ டியம்ப நுண்பனி யரும்பக்
கையற வந்த பொழுதொடு மெய்சோர்ந்
தவல நெஞ்சினம் பெயர வுயர்திரை
நீடுநீர்ப் பனித்துறைச் சேர்ப்ப
னோடுதேர் நுண்ணுக நுழைத்த மாவே" (நற்றிணை. 58)

எனவும் வரும்.

தலைவன் நீடத் தலைவி வருந்தற்குச் செய்யுள் :

“ ஆராத வின்ப விடந்தொறு நீங்கிய வாயமென்பால்
வாராத முன்னம் வருகில ராற்றஞ்சை வாணன்வெற்பிற்
கூரா தரநல்கி வல்வினை யேனலங் கொள்ளை கொண்டு
தேரா தவனுட னேநென்னன் மாலையிற் சென்றவரே ”

(த. கோ. 144)

எனவும்,

“ இருடிணிந் தன்ன வீர்ந்தண் கொழுநிழல்
நிலவுகுவித் தன்ன வெண்மண லொருசிறைக்
கருங்கோட்டுப் புன்னைப் பூம்பொழில் புலம்ப
வின்னும் வாரார் வரூஉம்
பன்மீன் வேட்டத் தென்னையர் திமிலே ”

(குறுந். 123)

எனவும் வரும்.

தலைவியைப் பாங்கி கழறற்குச் செய்யுள் :

“ சிறந்தார் தெரிந்த செழுந்தமிழ் வாணன்றென் மாறைவெற்பா
துறந்தா ரெனையென்று சோருவ தேனிந்தத் தொல்லுலகிற்
பிறந்தா ரெவர்க்கும் பிரிவெய்து மால்வெய்ய பேரமர்க்கட்
புறந்தாழ் கரிய குழற்செய்ய வாயைய பூங்கொடியே ”

(த. கோ. 145)

எனவும்,

“ மகிழ்நன் மார்பே வெய்யை யானீ
யழியல் வாழி தோழி நன்ன
னறுமா கொன்று நாட்டிற் போகிய
வொன்று மொழிக் கோசர் போல
வன்கட் சூழ்ச்சியும் வேண்டுமாற் சிறிதே ”

(குறுந். 73)

எனவும் வரும்.

தலைவி முன்னிலைப் புறமொழி மொழிதற்குச் செய்யுள் :

"பூவலர் வாவியி னீரற்ற போதுற்ற புன்மையல்லாற்
காவலர் காமந் துறக்கிலென் ருய்கடம் பாய்மதுகை
மாவல வாணன் வயற்றஞ்சை வேந்தனை வாழ்த்தல் செய்யா
மேவலர் போலுங் கழற்றுரை யாளர் வியனறிவே"
(த. கோ. 146)

எனவும்,

"யாவது மறிகிலர் கழறுவோரே
தாயின் முட்டை போலவுட் கிடந்து
சாயி னல்லது பிறிதெவ னுடைத்தோ
யாமைப் பார்ப்பி னன்ன
காமங் காதலர் கையற விடினே" (குறுந். 152)

எனவும் வரும்.

தலைவி பாங்கியொடு பகர்தற்குச் செய்யுள் :

"முலையார் முயக்கினு மல்லா விடத்தினு மூரிமுந்நீ
ரலையா ரமுதமு நஞ்சமும் போல வணங்கனையாய்
தொலையாத வின்பமுந் துன்பமுங் காட்டுவர் தூங்கருவி
மலையா சலத்தமிழ் தேர்வாணன் மாறைநம் மன்னவரே"
(த. கோ. 147)

எனவும்,

"நோமென் னெஞ்சே நோமென் னெஞ்சே
புன்புலத் தமன்ற சிறியிலை நெருஞ்சி
கட்கின் புதுமலர் முட்பயந் தாஅங்
கினிய செய்தநங் காதல
ரின்னா செய்த னோமென் னெஞ்சே" (குறுந். 220)

எனவும்,

"என்கைக் கொண்டு தன்க ணொற்றியுந்
தன்கைக் கொண்டென் னன்னுத னீவியும்
அன்னை போல வினிய கூறியுங்
கள்வர் போலக் கொடியன் மாதோ

மணியோ டிழிதரு மருவி பொன்னென
வேங்கை தாய வோங்குமலை யடுக்கத்
தாடுகழை நிவந்த பைங்கண் மூங்கி
லோடுமழை கிழிக்குஞ் சென்னிக்
கோடுயர் பிறங்கன் மலைகிழ வோனே'' (நற்றிணை. 28)

எனவும்.

'' அசுணங் கொள்பவர் கையே போன்று
மின்பமுந் துன்பமு முடைத்தே
தண்கமழ் நறுந்தார் விறலோன் மார்பே''
(நற்றிணை. 304)

எனவும் வரும்.

தலைவியைப் பாங்கி அச்சுறுத்தற்குச் செய்யுள் :

'' பேணற் கரியநின் பெண்மையு நாணமும் பேணியவர்
காணத் தகுமென்று காண்பதல் லாற்கழி காதனெஞ்சு
பூணத் தருகினும் பொற்பல்ல வாகுதல் கற்பல்லவால்
யாணர்த் தமிழுடை யான்வாணன் மாறையி னின்னமுதே''
(த. கோ. 148)

எனவும்,

'' மனங்கா வலருழை மைத்துமென் கூர்வளை வாய்ப்பசும்பு
ளினங்காவன் மாற்றிய வேணல்கண் டாலன்னை யெப்படியுங்
கனங்காவல் கொண்ட கழையிருஞ் சாரற் கணங்குழைநின்
புனங்காவன் மாற்று மதன்பின்னர்க் காவலும் பூணும் வந்தே''
(இலக்கண விளக்கம் – அகத்-நூற் 140 உறை மேற்கோள்)

எனவும்,

'' மெய்யிற் றீரா மேவரு காமமோ
டெய்யா யாயினு முரைப்ப ரேழி
கொய்யா முன்னுங் குரல்வார்பு தினையே
அருவி ஆன்ற பைங்கா ரேறு
மிருவி தோன்றின பலவே நீயே
முருகுமுரண் கொள்ளுந் தேம்பாய் கண்ணிப்

பரியல் நாயொடு பன்மலைப் படரும்
வேட்டுவற் பெறலோ டமைந்தனை யாழநின்
பூக்கெழு தொடலை நுடங்க வெழுந்து
கிள்ளைத் தெள்விளி யிடையிடை பயிற்றி
யாங்காங் கொழுகா யாயி னன்னை
சிறுகிளி கடிதற் றேற்று ளிவளெனப்
பிறர்த்தந்து நிறுக்குவ ளாயி
னுறற்கரி தாகுமவன் மலர்ந்த மார்பே'' (அகம் 28)

எனவும் வரும்.

நீங்கற்கருமை தலைவி நினைந்திரங்கற்குச் செய்யுள் :

"குன்று கியபொன்னும் வேழக் குழாமுங் கொடைபுகழ்ந்து
சென்றூர் முகக்குஞ் செழுந்தஞ்சை வாணன்றென் மாறை
வெற்பி
னன்று மிறைவற்கு நன்றியி லேற்குமந் நான்முகத்தோ
னென்று விதித்தில னேயுயிர் போல வுடம்பையுமே''
(த. கோ. 149)

தலைவிக்கு அவன்வரல் பாங்கி சாற்றற்குச் செய்யுள் :

"நெஞ்சுக வாய்மல ரன்னகண் ணீர்மல்க நின்றவஞ்சொற்
கிஞ்சுக வாய்வஞ்சி கேட்டரு ணீயுங் கிளைத்தமிழோர்
தஞ்சுக வாய்மொழி நெஞ்சுடை யான்றஞ்சை வாணன்வெற்பின்
மஞ்சுக வார்ததன வாலவர் தேரின் மணிக் குரலே''
(த. கோ. 150)

எனவும்.

"கவர்பரி நெடுந்தேர் மணியு மிசைக்கும்
பெயர்பட விளங்கிய விளைருரு மொலிப்பர்
கடலாடு வியலிடைப் பேரணிப் பொலிந்த
திதலை யல்குல் நலம்பா ராட்டிய
வருமே தோழி வார்மணற் சேர்ப்ப
னிற்பட வாங்கிய முழவுமுதற் புன்னை
மாவரை மறைகம் வம்மதி பானாட்

பூவிரி கானற் புணர்குறி வந்துநம்
மெல்லிணர் நறும்பொழிற் காணுதவ
னல்ல லரும்படர் காண்கநாஞ் சிறிதே''
(நற்றிணை. 307)

எனவும் வரும்.

தோழி சிறைப்புறமாகத் தலைமகற்குச் செறிப்பறிவுறுத்தற்குச் செய்யுள்:

''தொடைக்கணி யார்தடந் தோளவர் கேளலர் தோகையன்னா
ருடைக்கணி யாந்தழை கொய்யா ருழவ ருடைத்ததெண்ணீர்
மடைக்கணி யார மிடுதஞ்சை வாணன் வரையின் முன்போற்
கடைக்கணி யார்கணி யார்நம்மை நாளைக் கருங்கணியே''
(த. கோ. 151)

எனவும்,

''வினை விளையச் செல்வம் விளைவதுபோ னீடாப்
பனைவிளைவு நாமெண்ணப் பாத்தித்—தினைவிளைய
மையார் தடங்கண் மயிலன்னாய் தீத்தீண்டு
கையார் பிரிவித்தல் காண்'' (திணைமாலை நூற். 5)

எனவும் வரும்.

தோழி தலைமகற்கு முன்னிலைப்புறமொழி மொழிந்து இற்செறிப்புணர்த்தற்குச் செய்யுள்:

''பயில்காள பந்திப் புயலன்ன வோதியைப் பைங்கிள்ளைகாண்
மயில்காள் சிறிது மறக்கப்பெ றீர்தஞ்சை வாணன்வெற்பிற்
குயில்காள மெங்கு மியம்புதண் சோலையிற் கூடியின்ப
மயில்காள வெங்கதிர் வேலன்பர் சால வயர்ப்பினுமே''
(த. கோ. 152)

எனவும்,

''முறஞ்செவி யானைத் தடக்கையிற் றடைஇ
யிறைஞ்சிய குரல பைந்தாட் செந்தினை
வரையோன் வண்மை பாடினர் போலக்
கிளையோ டுண்ணும் வளை வாய்ப் பாசினங்

குல்லை குளவி கூதளங் குவளை
யில்லமொடு மிடைந்த வீர்ந்தண் கண்ணியன்
சுற்றமை வில்லன் செயலைத் தோன்று
நற்றூர் மார்பற் காண்குறிற் சிறிய
நற்கவர் கறிய வுரைமின் பிற்றை
யணங்கு மணங்கும் போலு மணங்கி
வறும்புனங் காவல் விடாமை
யறிந்தனி ரல்லிரோ வறனில் யாயே''
(நற்றிணை. 376)

எனவும் வரும்.

பாங்கி தலைமகன் முன்னின்று செறிப்பறிவுறுத்தற்குச் செய்யுள் :

''கானலங் கான்மலர்க் கள்வாய்க் கருங்கணி கட்டுரையாற்
கூனலஞ் சாய்பொற் குரலுங்கொய் தாரெமர் கொற்றவயாம்
ஏனலங் கரவலும் மின்றே யொழிந்தன மேழ்புவிக்குந்
தானலங் காரமன் ஞன்றஞ்சை வாணன் றமிழ்வெற்பிலே''
(த. கோ. 153)

எனவும்,

''மால்வரை வெற்ப வணங்கு குரலேனல்
காவ லியற்கை யொழிந்தேம்யாம்—தூவருவி
பூக்கண் கழூஉம் புறவிற்றூய்ப் பொன்விளையும்
பாக்க மிதுவெம் மிடம்,'' (ஐந்திணை. ஐம். 12)

எனவும் வரும்.

பாங்கி தலைமகன் முன்னின்று செறிப்புணர்த்தி யோம்படை சாற்றற்குச் செய்யுள் :

''கனஞ்சாய நல்கிய கையுடை யானெதிர் கன்றினர்தம்
மனஞ்சாய வென்றருள் வாணன் வரோதயன்மாறைவெற்பிற்
சினஞ்சாலும் வேலண்ண லேமற வேலெம்மைச் செவ்வியிரு
தனஞ்சா யினுமினி நின்னையல் லாதில்லைத் தாழ்குழற்கே''
(த. கோ. 154)

எனவும்,

''எறிந்தெமர் தாமுழுத வீர்ங்குர லேனல்
மறந்துங் கிளியினமும் வாரா — கறங்கருவி
மாமலை நாட மடமொழி தன்கேண்மை
நீமறவ னெஞ்சத்துக் கொண்டு''' (ஐந்திணை. ஐம். 18)

எனவும் வரும்.

தலைமகன் தஞ்சம்பெருது நெஞ்சொடு கிளத்தற்குச் செய்யுள்:

''ஏவல ரேய்வழி மாந்தளிர் மேனிய ரேனலினிக்
காவல ரேமனங் காத்தனம் யாங்களி யானை செம்பொன்
ஞவல ரேபெற நல்குங்கை மேக நறுங்குவளை
மாவல ரேய்தொடை யான்றஞ்சை வாணன் வரையில்வந்தே''
(த. கோ. 155)

எனவும்,

''பெறுவ தியையா தாயினு முறுவதொன்
றுண்டுமன் வாழிய நெஞ்சே திண்டேர்க்
கைவள் ளோரி கானந் தீண்டி
யெறிவளி கமழு நெறிபடு கூந்தன்
மையீ ரோதி மாஅ யோள்வயி
னின்றை யன்ன நட்பி னிந்நோ
யிறுமுறை யெனவொன் றின்றி
மறுமை யுலகத்து மன்னுதல் பெறுமே'' (குறுந். 199)

எனவும் வரும்.

இவற்றுள், கிழவோன் பிரிந்துழிக் கிழத்தி மாலையம் பொழுது கண்டிரங்கலும், பாங்கி புலம்பலுந், தலைவனிடத் தலைவி வருந்தலும், முன்னிலைப்புறமொழி மொழிதலும், பாங்கியோடு பகர்தலும், நீங்கற்கருமை தலைவி நினைந்திரங்கலும், கிழவோன் தஞ்சம் பெருது நெஞ்சொடு கிளத்தலும் ஆகிய எழும் இரங்கற்குரிய. இவற்றுள், கிழவோன் தஞ்சம்பெருது நெஞ்சொடு கிளத்தல் ஒன்று மொழித்து ஏனைய ஆறும் வரைதல் வேட்கைக் குரியவாம். தலைவியைப் பாங்கி கழறலும், தலைவியைப் பாங்கி அச்சுறுத்தலும், தலைவிக்கு அவன்வரல் பாங்கி சாற்றலுமாகிய மூன்றும் வன்புறைக் குரிய; சிறைப்புறமாகச் செறிப்பறிவுறுத்தலும், **முன்னிலைப்**

புறமொழி மொழிந்தறிவுறுத்தலும், முன்னின்றுரைந்தலும், முன்னின்றுணர்த்தி ஓம்படை சாற்றலுமாகிய நான்கும் இற்செறிப் புணர்த்தற்குரிய எனக்கொள்க. இந்நான்கும் வரைவுகடாதற்கும் உரியவாம். (38)

## 11 பகற்குறி இடையீடு

பகற்குறி இடையீட்டின் வகை

155 விலக்கல் சேறல் கலக்க மென்றுங்
கிகப்பின்மூ வகைத்தே பகற்குறி யிடையீடு.

(இ - ம்) பகற்குறி யிடையீடு தொகுத்து உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) விலக்கலும், சேறலும், கலக்கமும் என மூன்று வகையினை உடைத்தாம் பகற்குறி யிடையீடு என்றவாறு. (39)

பகற்குறி இடையீட்டின் விரி

156 இறைவனைப் பாங்கி குறிவரல் விலக்கலும்
இறைவியைக் குறிவரல் விலக்கலு மிறைமகள்
ஆடிட நோக்கி அழிதலும் பாங்கி
ஆடிடம் விடுத்துக்கொண் டகறலும் பின்னாள்
நெடுந்தகை குறிவயின் நீடுசென் றிரங்கலும்
வறுங்கள நாடி மறுகலுங் குறுந்தொடி
வாழுமூர் நோக்கி மதிமயங் கலுமெனும்
ஏழும் பகற்குறி யிடையீட்டு விரியே.

(இ - ம்) பகற்குறியிடையீட்டு விரித்தொகை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) இறைவனைப் பாங்கி குறிவரல் விலக்கல் முதலாகக் குறுந்தொடி வாழுமூர் நோக்கி மதிமயங்கல் ஈறாகச் சொல்லப்பட்ட ஏழும் பகற்குறி இடையீட்டின் விரியாம் என்றவாறு.

இறைவனைப் பாங்கி குறிவரல் விலக்கற்குச் செய்யுள் :

'' புனமும் பசுந்தினைச் செங்குர லேந்தும் புகன்றகிள்ளை
யினமுங் குழீஇவந் திறைகொள்ளு மாலிறை யார்வளையும்
மனமுங் கவர்வெற்ப வாணன்றென் மாறை மடப்பிடியு
மனமுந் தொழுநடை பாற்பல கால்வரு மன்னையுமே ''
(த. கோ. 156)

எனவரும்.

பாங்கி இறைவியைக் குறிவரல் விலக்கற்குச் செய்யுள் :

'' நந்துசுற் றுங்கடன் ஞாலமெல் லாம்புகழ் நாமன்வளர்
சந்துசுற் றுங்கொங்கை மங்கையர் வேள்சஞ் சரீகநறை
வந்துசுற் றுந்தொங்கல் வாணன்றென் மாறைவரையின்மலர்க்
கொந்துசுற் றுங்குழ லாய்செல்ல னீயக் குளிர்பொழிற்கே ''
(த. கோ. 157)

எனவும்,

'' யாஅங் கொன்ற மரஞ்சுட் டியவிற்
கரும்புமருண் முதல பைந்தாட் செந்தினை
மடப்பிடித் தடக்கை யன்ன பால்வார்பு
கரிக்குறட் டிறைஞ்சிய செறிகோற் பைங்குரற்
படுகிளி கடிகஞ் சேறு மடுபோர்
எஃகுவிளங்கு தடக்கை மலையன் கானத்
தார நாறு மார்பினை
வாரற்க தில்ல வருகுவள் யாயே '' (குறுந். 198)

எனவும் வரும்.

இறைமகள் ஆடிட நோக்கி அழிதற்குச் செய்யுள் :

'' அருவித் தடமு மணிமுத்த யாறு மவனியெங்குந்
திருவித் தியதஞ்சை வாணன் சிலம்புமிச் சிற்றிலும்பேர்
இருவிப் புனமுமின் றென்னினைக் கின்றன வென்னையின்னே
மருவிப் பிரிபவர் போலில்லை யேமண்ணில் வன்கண்ணரே ''
(த. கோ. 158)

எனவும்,

" அளிய தாமே செவ்வாய்ப் பைங்கிளி
குன்றக் குறவர் கொய்தினைப் பைங்கால்
இருவி நீள்புனங் கண்டும்
பிரித றேற்ருப் பேரன் பினவே" (ஐங்குறு. 284)

எனவும் வரும்.

பாங்கி ஆடிடம் விடுத்துக்கொண்டகறற்குச் செய்யுள் :

" உன்னை யராவல்கு னல்லவ ரோவென் றுசாவினெங்கண்
மன்னைய ராமல் வகுத்துரை நீதஞ்சை வாணன்வெற்பி
னென்னைய ராணைகொண் டேகுகின் றேனியை யித்தனையும்
பின்னைய ராதொழி வாயித ணேயிது பெற்றனமே"

(த. கோ. 159)

எனவும்,

" விரியிணர் வேங்கை வண்டுபடு கண்ணியன்
தெரியிதழ்க் குவளைத் தேம்பாய் தாரன்
அஞ்சிலை யிடவ தாக வெஞ்செலற்
கணைவலந் தெரிந்து துணைபடர்ந் துள்ளி
வருதல் வாய்வது வான்ரேய் வெற்பன்
வந்தன ஞயி னந்தளிர்ச் செயலைத்
தாழ்வி லோங்குசினைத் தொடுத்த வீழ்கயிற்
றூசன் மாறிய மருங்கும் பாய்புடன்
ஆடா மையிற் கலுழ்பில தேறி
நீடிதழ்த் தலைஇய கவின்பெறு நீலங்
கண்ணென மலர்ந்த சுனையும் வண்பறை
மடக்கிளி யெடுத்தல் செல்லாத் தடக்குரற்
குலவுப்பொறை யிறுத்த கோற்றலை யிருவி
கொய்தொழி புனமு நோக்கி நெடிதுநினைந்து
பைதலன் பெயரலன் கொல்லோ வைதேய்
கயவெள் ளருவி சூடிய வுயர்வுரைக்
கூஉங்கண் ணஃதெம் மூரென
வாங்கதை யறிவுறன் மறந்திசின் யானே" (அகம். 38)

எனவும் வரும்.

பின்னுள் நெடுந்தகை குறிவயின் நீடுசென்றிரங்கற்குச் செய்யுள் :

'' மான்கா ணிகரின் மடமயில் காடஞ்சை வாணன்வெற்பிற்
றேன்கா ணிரைமென் சிறைக்கிள்ளை காளென் றெருமரனேய்
தான்கா ணியகொலிச் சந்தனச் சோலையைத் தன்னையின்றி
யான்கா ணியகொ லெழுந்தரு ளாததின் றென்னுயிரே ''

(த. கோ. 160)

எனவும்,

" உள்ளிக் காண்பென் போல்வன் முள்ளெயிற்
றமிழ்த மூறுமஞ் செவ்வாய்க் கமழகில்
ஆர நாறு மறல்போற் கூந்தற்
பேரமர் மழைக்கண் மடந்தை
மூரன் முறுவலொடு மதைஇய நோக்கே ''

(குறுந். 286)

எனவும் வரும்.

தலைமகன் வறுங்களநாடி மறுகற்குச் செய்யுள் :

'' செங்கேழ் விழிக்கு மொழிக்கும் பகைதிருப் பாற்கடலும்
பங்கே ருகமும் பயந்தன வாயினும் பைங்கிள்ளைகாள்
சங்கேய் தடந்துறை சூழ்தஞ்சை வாணன் றரியலர்போல்
எங்கே யினித்தங்கு வாரேனல் காத்திங் கிருந்தவரே ''

(த. கோ. 161)

எனவும்,

'' கள்ளாவி நாறுங் கமழ்கூந்தற் காரிகையென்
உள்ளாவி சென்ற வழியறியேன் — றள்ளாத
மல்ல லருவி மலைநாடி வாய்திறந்து
சொல்லல் புரியாய் துணிந்து ''

எனவும் வரும்.

தலைமகன் தலைமகள் வாழும் ஊர்நோக்கி மதிமயங்கற்குச் செய்யுள் :

" பெறவரி தாலவள் பின்சென்ற நெஞ்சமும் பேணலர்க்கு
மறவரி தானன்ன வாணன்றென் மாறை வரைப்புனஞ்சூழ்
நறவரி தாழ்முல்லை நாண்மல ரோதி நகருமெனக்
குறவரி தாமென்செய் வேனென்று சோருமென் னேருயிரே "
(த. கோ. 162)

எனவும்,

" ஆடமை புரையும் வனப்பிற் பணைத்தோட்
பேரமர்க் கண்ணி யிருந்த வூரே
நெடுஞ்சே ணரிடை யதுவே நெஞ்சே
யீரம் பட்ட செவ்விப் பைம்புனத்
தோரே ருழவன் போலப்
பெருவிதுப் புற்றன்று னேகோ யானே " (குறுந். 131)

எனவும் வரும்.

இவற்றுள், முன்னைய இரண்டும் விலக்கற்குரிய; பாங்கி ஆடிடம் விடுத்துக் கொண்டு அகறலாகிய ஒன்றும் சேறற்குரித்து; ஏனைய நான்கும் கலக்கத்திற்குரிய. (40)

## 12 இரவுக்குறி

இரவுக்குறியின் வகை

157 வேண்டல் மறுத்த லுடன்படல் கூட்டல்
கூடல்பா ராட்டல் பாங்கியிற் கூட்டல்
உயங்கல் நீங்கலென் றென்பது வகைத்தே
இயம்பிப் போந்த இரவுக் குறியே.

(இ - ம்) இரவுக்குறியின் வகை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) வேண்டல் முதலாக நீங்கல் ஈறாக ஒன்பது வகைத்து மேற்சொல்லிப் போந்த இரவுக்குறி என்றவாறு. (41)

### இரவுக்குறியின் விரி

158 இறையோன் யிருட்குறி வேண்டலும் பாங்கி
நெறியின தருமை கூறலு மிறையோன்
நெறியின தெளிமை கூறலும் பாங்கி
அவனுட் டணியியல் வினுதலுங் கிழவோன்
அவளுட் டணியியல் வினுதலு மவற்குத்
தன்னுட் டணியியல் பாங்கி சாற்றலு
மிறைவிக் கிறையோன் குறையறி வுறுத்தலும்
நேரா திறைவி நெஞ்சொடு கிளத்தலும்
நேரிழை பாங்கி யொடுநேர்ந் துரைத்தலும்
நேர்ந்தமை பாங்கி நெடுந்தகைக் குரைத்தலுங்
குறியிடை நிறீஇத் தாய்துயி லறிதலு
மிறைவிக் கிறைவன் வரவறி வுறுத்தலு
மவட்கொண்டு சேறலுங் குறியுய்த் தகறலும்
வண்டுறை தாரோன் வந்தெதிர்ப் படுதலும்
பெருமகள் ஆற்றின தருமைநினைந் திரங்கலும்
புரவலன் தேற்றலும் புணர்தலும் புகழ்தலு
மிறைமகள் இறைவனைக் குறிவிலக் கலுமவன்
இறைவியை யில்வயின் விடுத்தலு மிறைவியை
எய்திப் பாங்கி கையுறை காட்டலும்
யிற்கொண் டேகலும் பிற்சென் றிறைவனை
வரவு விலக்கலும் பெருமகன் மயங்கலும்
தோழி தலைமகள் துயர்கிளந்து விடுத்தலும்
திருமகட் புணர்ந்தவன் சேறலு மென்றுங்கு
இருபத் தேழு மிரவுக்குறி விரியே.

(இ - ம்) இரவுக்குறியின் விரிவு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) இறையோன் இருட்குறி வேண்டல் முதலாகத் திருமகட் புணர்ந்தவன் சேறல் ஈருகச் சொல்லப்பட்ட இருபத்தேழும் இரவுக்குறியின் விரி என்றவாறு.

இறையோன் இருட்குறி வேண்டற்குச் செய்யுள் :

“கருவிருந் தெண்டிசை யுங்கன மாமழை கான்றதுள்ளம்
வெருவிருந் தெம்பதிக் கேகவொண் ணாது விதம்விதமாய்
வருவிருந்தென்றும் புரந்தருள் வாணன்றென் மாறையன்னீர்
ஒருவிருந் தெங்களைப் போலெய்து மோகங்கு லுங்களுக்கே”

(த. கோ. 163)

எனவரும்.

பாங்கி நெறியின தருமை கூறற்குச் செய்யுள் :

“மலைமாது வல்லவன் வாணன் வரோதயன் மாறைவெற்பிற்
சிலைமா லுருமெங்குந் தீயுமி ழாநிற்குஞ் சிங்கமெங்கும்
கொலைமா கரியிரை தேர்ந்துழ லாநிற்குங் கொற்றவபொற்
கலைமா னுறைபதி நீவரு மாறென்கொல் கங்குலிலே”

(த. கோ. 164)

எனவும்,

“ஒருவரைபோ லெங்கும் பலவரையுஞ் சூழ்ந்த
அருவரை யுள்ளதாஞ் சீறூர் - வருவரையுள்
ஐவாயநாகம் புறமெல்லா மாயுங்காற்
கைவாய நாகஞ்சேர் காடு” (திணைமா - நூற். 13)

எனவும் வரும்.

தலைமகன் நெறியின தெளிமை கூறற்குச் செய்யுள் :

“வடுவரி நீள்கண்ணி யஞ்சலம் யாந்தஞ்சை வாணன்வெற்பிற்
கொடுவரி கேழற் குழாம்பொரு கொல்லையுங் குஞ்சரந்தேர்ந்
தடுவரி தாவு மடுக்கமுஞ் சூர்வழங் காறுமைவாய்க்
கடுவரி நாகந் தவர்மல்கு கல்லளைக் கானமுமே”

(த. கோ. 165)

எனவரும்.

பாங்கி அவனுட்டு அணியியல் வினுதற்குச் செய்யுள் :

‘‘பூந்தழை யாது மலைமலர் யாது புனையிழையுஞ்
சாந்தமும் யாது தடம்பொழில் யாது தரணியின்மேல்
மாந்தரில் வேளன்ன வாணன்றென் மாறை வளநகர்சூழ்
தேந்தரு சோலைவெற் பாவுங்க ணுட்டுறை செல்வியர்க்கே’’
(த. கோ. 166)

எனவரும்.

தலைமகன் அவள் நாட்டணியியல் வினுதற்குச் செய்யுள் :

‘‘எந்நாட் டவரணி கூறியென் பேறிங் கிகல்வடிவேன்
மைந்நாட்ட வெண்முத்த வாணகை யாய்தஞ்சை
வாணன்மண்மேல்
உந்நாட் டரிவைய ராடிடஞ் சாந்த மொளியிழைபூ
மெய்ந்நாட் டழையொடெல் லாமொழி யாமன்
மொழியெனக்கே’’
(த. கோ. 167)

எனவரும்.

தலைமகற்குப் பாங்கி தன்னுட்டணியியல் சாற்றற்குச் செய்யுள் :

‘‘வகைகொண்ட மாந்தழை காந்தளம்போது மருப்பின் முத்தந்
தகைகொண்ட சந்தனச் சாந்தணிந் தாடுவர் தஞ்சையர்கோன்
மிகைகொண்ட தெவ்வரை வெந்கண்ட வாணன்வெற்
பாவெமதூர்
நகைகொண்ட வல்லியன் னுரெல்லி நாக நறுநிழலே’’
(த. கோ. 168)

எனவும்,

‘‘ஆம்ப லணித்தழை யாரந் துயல்வருந்
தீம்புன லூரன் மகளிவ ளாய்ந்தநறுந்
தேமலர் நீலம் பிணையல் செறிமலர்த்
தாமரை தன்னையர் பூ’’ (திணைமொழி. ஐம். 40)

எனவும் வரும்.

பாங்கி தலைமகட்குத் தலைமகன் குறையறிவுறுத்தற்குச் செய்யுள் :

“புயலே றதிர்தொறும் பொங்குளை மீதெழப் போதகந்தேர்ந்
தியலே றதிரு மிருங்கங்குல் வாய்முத்த மீன்றுசங்கம்
வயலே றணிவள ருந்தஞ்சை வாணன் வரையி லுண்கண்
கயலே றணையநின் பால்வரல் வேண்டினர் காதலரே”
(த. கோ. 169)

எனவும்,

“ஒளிவெள் ளருவி யோங்குமலை நாடன்
சிறுகட் பெருங்களிறு வயப்புலி தாக்கித்
தொன்முரண் சோருந் துன்னருஞ் சாரல்
நடுநாள் வருதலும் வரூஉம்
வடுநா ணலமே தோழி நாமே” (குறுந். 88)

எனவும் வரும்.

தலைமகள் நேராது நெஞ்சொடு கிளத்தற்குச் செய்யுள் :

“விடவார் கணைவிழி மெல்லியன் மாதரை மேதினியோர்
மடவா ரெனுமுறை வாய்மைநெஞ் சேதஞ்சை வாணன்றெவ்விற்
கடவா ரணந்திரி கங்குனங் கண்ணன்ன காதலர்முட்
பிடவார் சிறுநெறி வாய்வரல் வேண்டினள் பெண்ணணங்கே”
(த. கோ. 170

எனவரும்.

தலைமகள் நேர்ந்து பாங்கியொ டுரைத்தற்குச் செய்யுள் :

“வெங்குல வாரண மேற்றவர்க் கேநல்கி வேற்றரசர்
தங்குல வாழ்வு தவிர்த்தருள் வாணன் றமிழ்ச்சிலம்பிற்
கங்குல வாவினர் காதல ராயிற் களிபயந்த
கொங்குல வாவலர் சூழ்குல லாயென்கொல் கூறுவதே”
(த. கோ. 171)

எனவும்,

''சேணோன் மாட்டிய நறும்புகை ஞெகிழி
வான மீனின் வயின்வயி னிமைக்கும்
ஓங்குமலை நாடன் சாந்துபுல ரகலம்
உள்ளி னுண்ணோய் மல்கும்
புல்லின் மாய்வ தெவன்கொ லன்னாய்'' (குறுந். 150)

எனவும் வரும்.

தலைமகள் நேர்ந்தமை பாங்கி தலைமகற்குரைத்தற்குச் செய்யுள்:

''பரவாத வண்ணம் பரவியும் பாதம் பணிந்துநெஞ்சங்
கரவாத பொன்னைநின் காரண மாகக் கயிலையென்றே
வரவா தவனஞ்சும் வெண்மா ளிகைத்தஞ்சை வாணன்வெற்பா
இரவாத வண்ணமெல் லாமிரந் தேனிவ் விரவிடையே''

(த. கோ. 172)

எனவரும்.

பாங்கி தலைமகனைக் குறியிடத்து நிறுத்திவந்து தாய்துயில் அறிதற்குச் செய்யுள் :

'' மாகந் தரியலர்க் கீந்தருள் வாணன்றென் மாறைவெற்பின்
மேகந் தருமின் னிடையன்ன மேவிரை நாண்மலர்வேய்
நாகந் தழுவுங் குடம்பையின் வாய்நடு நாளிரவிற்
சோகந் தவிர்வில வாய்த்துயி லாததென் றேகைகளே''

(த. கோ. 173)

எனவரும்.

பாங்கி தலைமகட்குத் தலைமகன் வரவு அறிவித்தற்குச் செய்யுள் :

''கந்தார நாணுங் கனிந்தசொல் லாய்நங் கடிமனைக்கே
வந்தா ரவாவின் பெருமையி னாற்றஞ்சை வாணன்வெற்பிற்
கொந்தா ரசோகந் தருஞ்செழும் போதுங் கொழுந்தழையுந்
தந்தா ரகலந் தழீஇயக லாது தணந்தவரே''

(த. கோ. 174)

எனவும்,

"அன்னாய் வாழிவேண் டன்னைநம் படப்பைத்
தண்ணயத் தமன்ற கூதளங் குழைய
வின்னிசை யருவிப் பாடுமென் னதூஉங்
கேட்டியோ வாழிவேண் டன்னைநம் படப்பை
யூட்டி யன்ன வொண்டளிர்ச் செயலை
யோங்குசினைத் தொடுத்த வூசல் பாம்பென
முழுமுத றுமிய வுருமெறிந் தன்றே
பின்னுங் கேட்டியோ வெனவுமஃதறியா
ளன்னையுங் கனைதுயின் மடிந்தன ளதன்றலை
மன்னுயிர் மடிந்தன்றாற் பொழுதே காதலர்
வருவ ராயிற் பருவ மிதுவெனச்
சுடர்ந்திலங் கெல்வளை நெகிழ்ந்த நம்வயிற்
படர்ந்த வுள்ளம் பழுதின் றாக
வந்தனர் வாழி தோழி யந்தரத்
திமிழ்பெய றலைஇய வினப்பல கொண்மூத்
தவிர்வில் வெள்ளந் தலைத்தலை சிறப்பக்
கன்றுகா லொய்யுங் கடுஞ்சுழி நீத்தம்
புன்றலை மடப்பிடிப் பூசல் பலவுடன்
வெண்கோட் டியானை விளிபடத் துழவு
மகல்வாய்ப் பாந்தட் படாஅர்ப்
பகலு மஞ்சும் பனிக்கடுஞ் சுரனே" (அகம். 68)

எனவும் வரும்.

பாங்கி தலைமகளைக் குறியிடத்துக் கொண்டு சேறற்குச் செய்யுள் :

"மின்னே யயிலொடு மின்விளக் காவந்த வெற்பரைநாம்
பொன்னே யெதிர்கொளப் போதுகம் வாபுவி யேழினுக்குந்
தன்னேயம் வைத்தருள் சந்திர வாணன் றமிழ்ச்சிலம்பின்
நின்னே ரியன்மயில் கண்டுயி ருக நிழலகத்தே"

(த. கோ. 175)

எனவரும்.

பாங்கி தலைமகளைக் குறியிடத்துய்த்து நீங்கற்குச் செய்யுள் :

"மந்தார மன்னகை வாணன்றென் மாறை மயிலனையாய்
நந்தா வனப்பொய்கை நான்கொய்கு வேன்குழ ஞுங்கங்குற்
கொந்தார் தெரியனின் செங்கனிவா யொடுங்கொங்கையொடும்
பைந்தா மரையையுஞ் சேதாம் பலையும் பகைப்பித்ததே"
(த. கோ. 176)

எனவரும்.

தலைமகன் தலைமகளைக் குறியிடத்து எதிர்ப்படுதற்குச் செய்யுள் :

"முதிரா முலையிப் பனியந்த கார முனியவல்ல
கதிரா யிரமில்லை யேழ்பரித் தேரில்லைக் காவல்வெய்யோற்
கெதிராதல் சோமற் கியல்வதன் றேநும்மில் யார்திறந்தார்
மதுரா புரித்தமிழ் தேர்வாணன் மாறை வனத்துவந்தே"
(த. கோ. 177)

எனவரும்.

தலைமகள் ஆற்றின தருமை நினைந்து இரங்கற்குச் செய்யுள் :

"செழியன் கயலைத் திசைவைத்த வாணன்றென் மாறையென்மேற்
கழியன் புடையநின் கால்கண் களாகக் கராம்பயிலுங்
குழியன்றி யும்வெஞ் சுழியொன்றும் யாறுங் குழீஇக்கொடிதாம்
வழியன்ப நீயெங்ங னேவந்த வாறிம் மழையிருளே"
(த. கோ. 178)

எனவும்,

"பெயல்கண் மறைத்தலின் விசும்புகா ணலையே
நீர்பரந் தொழுகலி னிலங்கா ணலையே
யெல்லை சேறலி னிருள்பெரிது பட்டன்று
பல்லோர் துஞ்சும் பானாட் கங்குல்
யாங்குவந் தனையோ வோங்கல் வெற்ப
வேங்கை கமழுமெஞ் சிறுகுடி
யாங்கறிந் தனையோ நோகோ யானே" (குறுந். 355)

எனவும் வரும்.

தலைமகன் தலைவியைத் தேற்றற்குச் செய்யுள் :

"வெயிலுந் தரவிந்த மென்மல ரன்னமும் விந்தைவெற்றி
மயிலும் பயில்புயன் வாணன்றென் மாறைநின்
வாள்விழிபோல்
அயிலுங் குயின்மொழி நின்னிடை யோன்மின்னு மாடளிகள்
பயிலுந் தொடைநின் குழல்போ லிருளைப் பருகினவே"
(த. கோ. 179)

எனவும்,

"குருதி வேட்கை யுருகெழு வயமான்
வலிமிகு முன்பின் மழகளிறு பார்க்கு
மரம்பயில் சோலை மலியப் பூழியர்
உருவத் துருவி னுண்மேய லாரு
மாரி யெண்கின் மலைச்சுர நீளிடை
நீநயந்து வருத லெவனெனப் பலபுலந்
தழுதனை யுறையு மம்மா வரிவை
பயங்கெழு பலவின் கொல்லிக் குடவரைப்
பூதம் புணர்த்த புதிதியல் பாவை
விரிகதி ரிளவெயிற் றோன்றி யன்னநின்
மாணல முள்ளி வரினெமக்
கேம மாகு மலைமுத லாறே" (நற்றிணை. 192)

எனவும் வரும்.

புணர்தற்குச் செய்யுள் :

"சுழிநீ ரலைகடற் றெல்லுல கேழினுந் தோற்றும் வண்மைக்
கழிநீடு மாடக மேருவின் மீதினுங் காவல்கொண்டு
வழிநீழ் புகழ்கொண்ட வாணன்றென் மாறை வரையின்மலர்ப்
பொழினீழ லும்ப ரமுதனை யாரைப் புணர்ந்தனமே"
(த. கோ. 180)

"தம்மி லிருந்து தமதுபாத் துண்டற்றா
லம்மா வரிவை முயக்கு" (குறள். 1107)

எனவும் வரும்.

புகழ்தற்குச் செய்யுள் :

'' மண்ணூர் பெரும்புகழ் மாறன்றென் மாறை வரையகிலுந்
தண்ணூர முங்கமழ் சார்வருஞ் சாரலிற் சார்ந்துறையும்
பெண்ணூ ரணங்கன்ன நின்முகந்தான் கண்ட பின்னுமுண்டோ
கண்ணூர் தடங்களின் வாயொடுங் காத கமலங்களே ''
(த. கோ. 181)

எனவரும்.

தலைமகனைத் தலைமகள் குறிவிலக்கற்குச் செய்யுள் :

'' மூரற் கதிர்முத்த வார்முலை யாவியின் மூழ்கத்தனி
வாரற்க நீதஞ்சை வாணன்வெற் பாவய மாவழங்கும்
வேரற் கடிய கவலையி னூடு வெயிலவற்குஞ்
சாரற் கருமைய தாலிருள் கூருமெஞ் சாரலிலே ''
(த. கோ. 182)

எனவும்,

'' இருள்பே ருலகின் வார லான்ற
கோட்டுமா வழங்குங் காட்டக நெறியே ''

எனவும் வரும்.

தலைமகன் தலைமகளை இல்வயின் விடுத்தற்குச் செய்யுள் :

'' மல்லையம் போர்வென்ற வாணண்றென் மாறைநின் மாளிகையாந்
தொல்லையம் போருகந் தேடவுங் கூடுந் தொடித்தளிரான்
முல்லையம் போது முகையுங்கொய் யாது முகிழ்முலையாய்
செல்லையம் பொற்பளிங் கிற்றலம் பாதஞ் சிவப்பிக்கவே ''
(த. கோ. 183)

எனவரும்.

பாங்கி தலைமகளை எய்திக் கையுறை காட்டற்குச் செய்யுள் :

'' முகையா யலராய் முலைக்குநின் வாய்க்கு முறைமுறையே
பகையா முளரியுஞ் சேதாம் பலுமிவை பைங்கழுநீர்
வகையார் தொடைபுனை வாணன்றெண் மாறையின் மௌவலன்ன
நகையா யவையிவை நின்குழற் காமுல்லை நாண்மலரே ''
(த. கோ. 184)

எனவரும்.

பாங்கி தலைமகளை இற்கொண்டேகற்குச் செய்யுள் :

'' ஒல்கா விருண்மணந் தொல்கரும் போழ்தி னுணர்ந்து நம்மை
நல்கா வியல்பன்னை நாடினு நாடு நடந்தருணி
மல்காவி சூழ்தஞ்சை வாணன்றென் மாறையின்
வள்ளையின்மேற்
செல்காவி யன்ன விழித்திரு வேநின் றிருமனைக்கே ''
(த. கோ. 185)

எனவரும்.

பிற்சென்று தலைமகளைப் பாங்கி வரவுவிலக்கற்குச் செய்யுள் :

'' வெம்போர் முருகென்ன வேல்வல னேந்தி வெறிதிங்ஙனே
வம்போர் நகரெல்லி வாரல்வெற் பாமரு வாவரசர்
தம்போர் கடந்த தடம்புய வாணன் றமிழ்த்தஞ்சைநாட்
டம்போ ருகமல்ல வோதிருக் கோயி லணங்கினுக்கே
(த. கோ. 186)

எனவும்,

'' தாமரைக் கண்ணியை தன்னறுஞ் சாந்தினை
நேரிதழ்க் கோதையாள் செய்குறி நீவரின்
மணங்கமழ் நாற்றத்த மலைநின்று பலிபெறூஉ
மணங்கென வஞ்சுவர் சிறுகுடி யோரே ;
ஈர்ந்த ணுடையை யெல்லி மாலையை
சோர்ந்துவீழ் கதுப்பினுள் செய்குறி நீவரி
னொளிதிகழ் ஞெகிழியர் கவணையர் வில்லர்
களிறென வார்ப்பவ ரேனல்கா வலரே ''
(கலி. குறிஞ்சி. 16)

எனவும் வரும்.

தலைமகன் மயங்கற்குச் செய்யுள் :

'' வஞ்சங் கலந்த கலிவென்ற வாணன்றென் மாறைவெற்பிற்
றஞ்சங் கலந்தசொற் றையலும் யானுந் தனித்தனியே
நெஞ்சங் கலந்த நிலைமையெல் லாங்கண்டு நீயமுதி
னஞ்சங் கலந்தனை யேநனை வார்குழ னன்னுதலே''
(த. கோ. 187)

எனவரும்.

தோழி தலைமகள் துயர் கிளந்து விடுத்தற்குச் செய்யுள் :

'' முன்னூ ரரவுந் தெரியா விருணெறி முன்னிநையு
மின்னூர் புனையிழை மின்னனை யாளுய்ய வேலின் வெம்போர்
மன்னூர் களிறு திறைகொண்ட வாணன்றென் மாறையன்ன
நின்னூ ரகம்புகுந் தாற்குறி காட்டு நெடுந்தகையே ''

(த. கோ. 188)

எனவும்,

'' கான மானதர் யானையும் வழங்கும்
வான மீமிசை யுருமுநனி யுரறும்
அரவும் புலியு மஞ்சுதக வுடைய
விரவழங்கு சிறுநெறி தமியை வருதி
வரையிழி யருவிப் பாட்டொடு பிரச
முழவுசேர் நரம்பினிம்மென விமிரும்
பழவிற னனந்தலைப் பயமலை நாட
மன்றல் வேண்டினும் பெறுகுவை யொன்றோ
வின்றுதலை யாக வாரல் வரினே
யேமுறு துயரமோ டியாமிவ ணொழிய
எற்கண்டு பெயருங் காலை யாழநின்
கற்கெழு சிறுகுடி யெய்திய பின்றை
யூதல் வேண்டுமாற் சிறிதே வேட்டொடு
வேய்பயி லழுவத்துப் பிரிந்தநி
னாய்பயில் குறிநிலைக் கொண்ட கோடே '' (அகம். 318)

எனவும் வரும்.

திருமகட் புணர்ந்தவன் சேறற்குச் செய்யுள் :

'' இருங்குன் றனமதி லெம்பதிக் கேக லெளிதுசெம்மை
தருங்குங் குமமுலைத் தையனல் லாய்தஞ்சை வாணன்வெற்பிற்
கருங்குஞ் சரவினம் வெஞ்சிங்க வேறஞ்சுங் கங்குலினெம்
மருங்குஞ் சுடர்விளக் காமட வார்குழை மாணிக்கமே ''

(த. கோ. 189)

எனவும்,

"நெஞ்சுநடுங் கரும்படர் தீர வந்து
குன்றுழை நண்ணிய சீறூ ராங்கட்
செலீஇய பெயர்வோள் வணர்சுரி யைம்பா
லுண்கோ லகவுநர்ப் புரந்த பேரிசைச்
சினங்கெழு தானைத் தித்தன் வெளிய
னிரங்குநீர்ப் பரப்பிற் கானலம் பெருந்துறைத்
தனந்தரு நன்கலஞ் சிதையத் தாக்குஞ்
சிறுவெள் ளிறவின் குப்பை யன்ன
வுறுபகை தரூஉ மொய்ம்மூசு பிண்டன்
முனைமுர ணுடையக் கடந்த வென்வே
லிசைநல் லீகைக் களிறுவீசு வண்மகிழ்ப்
பாரத்துத் தலைவ ளுரை நன்ன
னேழி னெடிவரைப் பாழிச் சிலம்பிற்
களிமயிற் கலாவத் தன்ன தோளே
வள்வில் லிளையர் பெருமக னள்ளி
சோலையடுக்கத்துச் சுரும்புண விரிந்த
கடவுட் காந்த ளுள்ளும் பலவுட
னிறும்பூது கஞலிய வாய்மலர் நாறி
வல்லினும் வல்லா ராயினுஞ் சென்றோர்க்குச்
சாலவிழ் நெடுங்குழி நிறைய வீசும்
மாஅல் யானை யாஅய் கானத்துத்
தலையாற்று நிலைஇய சேயுயர் பிறங்கல்
வேயமைக் கண்ணிடை புரைஇச்
சேய வாயினு நடுங்குதுயர் தருமே" (அகம். 15)

எனவும் வரும்.

இவற்றுள், இறையோன் இருட்குறி வேண்டலும், நெறியினது எளிமை கூறலும், அவள் நாட்டணியியல் வினைதலும், பாங்கியிறைவிக்கு இறையோன் குறையறிவுறுத்தலுமாகிய நான்கும் வேண்டற்குரிய; பாங்கி நெறியினது அருமை கூறலும், இறைமகள் இறைவனைக் குறிவிலக்கலும், பாங்கி இறைவனை வரவு விலக்கலுமாகிய மூன்றும் மறுத்தற்குரிய; பாங்கி அவன் நாட்டணியியல் வினைதலும், அவற்குத் தன்னாட்டணியியல் சாற்றலும், தலைமகள் நேர்ந்து பாங்கியொடு சாற்றலுமாகிய

மூன்றும் உடன்படற்குரிய ; தலைமகள் நேர்ந்ததும், பாங்கி தலைமகற் குணர்த்தலும், குறியிடை நிறீஇத் தாய் துயில் அறிதலும், இறைவிக்கு இறைவன் வரவறிவுறுத்தலும், அவட் கொண்டு சேறலுமாகிய ஐந்தும் கூட்டற்குரிய ; தலைமகளை யெதிர்ப்படுதலும், தேற்றலும், புணர்தலுமாகிய மூன்றும் கூடற்குரிய ; தலைமகள் நலம் பாராட்டலும், கையுறை காட்டலுமாகிய இரண்டும் பாராட்டற்குரிய ; தலைமகன் இறைவியை இல்வயின் விடுத்தலும், பாங்கி தலைமகளைக் கொண்டேகலுமாகிய இரண்டும் பாங்கிற் கூட்டற்குரிய ; நேராது இறைவி நெஞ்சொடு கிளத்தலும், தலைமகள் ஆற்றினதருமை நினைந்திரங்கலும், பெருமகன் மயங்கலும், தோழி தலைமகள் துயர் கிளந்து விடுத்தலுமாகிய நான்கும் முயங்கற்குரிய ; பாங்கி குறியுய்த்தகறலும், திருமகட் புணர்ந்து அவன் சேறலுமாகிய இரண்டும் நீங்கற்குரியவாம் எனக் கொள்க. இவற்றுள் நேராதிறைவி நெஞ்சொடு கிளத் தலும், பெருமகள் ஆற்றினதருமை நினைந்திரங்கலும், இறைமகன் இறைவனைக் குறிவிலக்கலுமாகிய மூன்றும் வரைதல் வேட்கைக் குரிய ; பாங்கி நெறியினதருமை கூறலும், இறைவனை வரவு விலக்கலும், தலைமகள் துயர் கிளந்து விடுத்தலுமாகிய மூன்றும் வரைவு கடாதற்குரியவாகும். (42)

## 13 இரவுக்குறி இடையீடு

இரவுக்குறி இடையீட்டின் வகை

**159 அல்லகுறி வருந்தொழிற் கருமை யென்றாங்**
**கெல்லிக்குறி யிடையீ டிருவகைத் தாகும்.**

(இ - ள்.) அல்லகுறியும், வருந்தொழிற் கருமையும் என இரண்டு வகையினை உடைத்து இரவுக்குறியிடையீடு என்றவாறு.

அல்லகுறி என்பது குறியல்ல என்றவாறு. அதனை முன்றில் என்பதுபோலக் கொள்க. அல்லகுறியாவது தலைமகனுன் நிகழ்த்தப் படுவனவாகிய புள்ளெழுப்பல் முதலியன பிறிதொன்றினுன் நிகழ்தல், வருந்தொழிற்கருமையாவது, தலைமகன் வருகின்ற தொழிற்கு அருமையாம். என்று என்பது எண்ணிடைச் சொல், ஆங்கு என்பது அசை. (43)

அல்லகுறி

160 இறைவிக் கிகுளை யிறைவர வுணர்த்துழித்
தான்குறி மருண்டமை தலைவியவட் குணர்த்தலும்,
பாங்கி தலைவன் றீங்கெடுத் தியம்பலும்,
புலந்தவன் போதலும், புலர்ந்தபின் வறுங்களந்
தலைவிகண் டிரங்கலுந் தன்றுணைக் குரைத்தலும்
தலைமக ளவலம் பாங்கி தணித்தலு
மிறைவன்மேற் பாங்கி குறிபிழைப் பேற்றலு
மிறைவிமே லிறைவன் குறிபிழைப் பேற்றலு
மவள்குறி மருண்டமை அவளவற் கியம்பலு
மவன்மொழிக் கொடுமைசென் றவளவட் கியம்பலும்
யென்பிழைப் பன்றென் றிறைவிநோதலுமென
வொன்றுபன் னென்று மல்லகுறிக் குரிய.

(இ - ள்.) இறைவிக்கு இகுளை யிறைவரவுணர்த்துழித்தான் குறிமருண்டமை தலைவி அவட்குணர்த்தல் முதலாக, என் பிழைப் பன்று என்று இறைவி நோதல் ஈருகச் சொல்லப்பட்ட பன்னிரண் டும் அல்லகுறிக்கு உரியவாகும் என்றவாறு.

இறைவிக்கு இகுளை இறைவரவுணர்த்தற்குச் செய்யுள் :

''கயல்வென்ற வுண்கண்ணி காரண மேதுகொல் கைதையங்கா
னயனின்ற புன்னையி னன்னமெல் லாமட லாழியங்கைச்
சயமங்கை தன்பெரு மான்ரஞ்சை வாணன் றரியலர் போற்
றுயரம் பெருகி யிராவொரு போதுந் துயின்றிலவே''

(த. கோ. 190)

எனவும்,

''அம்ம வாழியோ வன்னை நம் படப்பைப்
பொம்ம லோதி யம்மென் சாயன்
மின்னென நுடங் கிடைக் கின்னிழ லாகிய
புன்னை மென்காய்ப் போகுசினை யிரிய
வாடுவளி தூக்கிய வசைவிற் கொல்லா
தெண்ணீர்ப் பொய்கையில் வீழ்ந்தன
வெண்ணினை யுரைமே வுணர்குவல் யானே''

எனவும் வரும். இது தோழி தாய்க்குரைப்பாள்போல் தலைமகட்கு உணர்த்தியவாறும்.

தான்குறி மருண்டமை தலைவி பாங்கிக்குணர்த்தற்குச் செய்யுள்:

"பேசத் தகுவதொன் றன்றுகண் டாய்பிறி தோர்குறியை
நேசத் தவர்குறி யென்றுசென் றியான்குறி நின்றுவந்தேன்
வாசத் தமிழ்புனை தோளுடை யான்றஞ்சை வாணனென்னார்
தேசத் தவருமெய் தாவெய்ய நோயெய்திச் சேயிழையே"

(த. கோ. 191)

எனவும்,

"அணிகடற் றண்சேர்ப்பன் றேர்ப்பரிமாப் பூண்ட
மணியரவ மென்றெழுந்து போந்தேன் — கனிவிரும்பும்
புள்ளரவங் கேட்டுப் பெயர்ந்தே னொளியிழா
யுள்ளுருகு நெஞ்சினே னாய்" (ஐந்திணை. ஐம். 50)

எனவும் வரும்.

பாங்கி தலைமகன் தீங்கெடுத்தியம்பற்குச் செய்யுள் :

"வடியோ வெனுங்கண் மடந்தைநல் லாய்தஞ்சை வாணனைவந்
தடியோ மெனச்சென் றடையலர் போலயர் கின்றநின்கைத்
தொடியோட மென்பணைத் தோளினை வாடுந் தொழில்புரிந்த
கொடியோர் துணிந்துசெய் தார்குறி யாத குறிநமக்கே"

(த. கோ. 192)

எனவும்,

"கொடுமுண் மடற்றாழைக் கூம்பவிழ்ந்த வொண்பூ
விடையு ளிழுதொப்பத் தோன்றிப் — புடையெலாந்
தெய்வங் கமழுந் தெளிகடற் றண்சேர்ப்பன்
செய்தான் றெளியாக் குறி" (ஐந்திணை. ஐம். 49)

எனவும் வரும்.

தலைமகன் புலந்து போதற்குச் செய்யுள் :

"தேனுற்ற வாகையந் தார்த்தஞ்சை வாணனைச் சேரலர்போன்
மானுற்ற பார்வை மயில்பொருட் டாக வழிதெரியாக்
கானுற்ற கானற் கனையிருள் வாய்வரக் கற்பித்தநீ
யானுற்ற நோய்களெல் லாம்படு வாயினி யென்னெஞ்சமே"

(த. கோ. 193)

எனவும்,

"குணகடற் றிரையது பறைதபு நாரை
திண்டேர்ப் பொறையன் றொண்டி முன்றுறை
யயிரை யாரிரைக் கணவந் தாங்குச்
சேய ளரியோட் படர்தி
நோயை நெஞ்சே நோய்ப்பா லோயே" (குறுந். 128)

எனவும் வரும்.

புலர்ந்தபின் வறுங்களந் தலைவி கண்டிரங்கற்குச் செய்யுள் :

"தாதகை தண்டலை சூழ்தஞ்சை வாணன் றடந்துறைவாய்
நீதகை கொண்டெனமுன் னின்றனை யேசெந் நிறக்கனிவாய்
மேதகு முள்ளெயிற் றொண்முகைக் கொங்கை வெண்டோட்டுமென்பூங்
கேதகை யென்னுநல் லாய்கொண்கர் மாலை கிடைத்ததென்றே"

(த. கோ. 194)

எனவரும்.

தலைமகள் பாங்கியொடு உரைத்தற்குச் செய்யுள் :

"தேனே ரலங்கல் புனைபுகழ் வாணன் செழுந்தஞ்சைசூழ்
கானேர் குறியிற் கனையிருள் வாய்வந்து காலுழத்தி
யானே கியபின்பு தாம்வந்து போன தியம்புதற்கோ
மானே யிறைவர்வைத் தார்பங்க சாதம் வலம்புரிக்கே"

(த. கோ. 195)

எனவும்,

"நெய்தற் படைப்பை நிறைகழித் தண்சேர்ப்பன்
கைதைசூழ் கானலிற் கண்டநாட் போலானுன்
செய்த குறியும்பொய் யாயினவாற் சேயிழா
யையகொ லான்ருர் தொடர்பு" (திணைமொழி. ஐம். 41)

எனவும் வரும்.

தலைமகள் அவலம் பாங்கி தணித்தற்குச் செய்யுள்:

"பொய்யா தவர்தங் குறி பிழை யாரவர் பூண்டவன்பு
மெய்யாத றேறி யழுங்கன்மின் னேபுய வெற்பிரண்டான்
மையாழி வைய நிலையிட்ட வாணன்றென் மாறைவெற்பி
னுய்யான மென்கழு நீர்நறு மாலை யுடைத்தல்லவே"
(த. கோ. 196)

எனவரும்.

இறைவன்மேற் பாங்கி குறியிழைப்பேற்றற்குச் செய்யுள்:

"விம்மூர் துயர்க்கடல் வெள்ளத்துள்ளேயெம்மை வீழ்வித்துநீர்
எம்மூ ரகத்து வரலொழிந் தீரெதி ரேற்றதெவ்வர்
தம்மூரை முப்புர மாக்கிய வாணன் தமிழ்த்தஞ்சைபோல்
உம்மூர் வரத்துணிந் தோமன்பர் கூறுமவ் வூரெமக்கே"
(த. கோ. 197)

எனவும்,

"காமங் கடவ வுள்ள மினைப்ப
யாம்வந்து காண்பதோர் பருவமாயின்
ஓங்கித் தோன்றுமுயர்வரைக்
கியாங்கெனப் படுவது நும்மூர் தெய்யோ"
(ஐங்குறு. 237)

எனவும் வரும்.

இறைவிமேல் இறைவன் குறியிழைப்பேற்றற்குச் செய்யுள்:

"துறந்தன ளாகியம் போருகந் தன்னையித் தொல்வரைமேற்
பிறந்தன ளாகும் பெருந்திரு மாதெனப் பேதையரிற்
சிறந்தன ளாதலிற் செந்தமிழ் வாணன் றென் மாறையன்னுள்
மறந்தன ளாயினும் யாமொரு போதும் மறவலமே"
(த. கோ. 198)

எனவும்,

"மழைவர வறியா மஞ்ஞை யாலும்
அடுக்க னல்லூ ரசைநடைக் கொடிச்சி
தானெம் மருளா ளாயினும்
யாந்தன் னுள்ளுபு மறந்தறி யேமே" (ஐங்குறு. 298)

எனவும் வரும்.

தலைமகள் குறிமருண்டமை தோழி தலைவற்குரைத்தற்குச் செய்யுள்:

"தனையா வரும்புக ழத்தரும் வாணன் றமிழ்த்தஞ்சைமா
னனையா ளவள்குறி யாமிதென் றேநினைந் தல்லதொன்று
நினையா வருங்கங்கு னின்குறி யாவந்து நின்றதுநம்
வினையால் விளைந்ததென் றேவெறி தேயன்ப மீண்டனளே"
(த. கோ. 199)

எனவும் வரும்.

தலைமகன் சொல்லிய கொடுமையைத் தலைமகட்குத் தோழி சொல்லியதற்குச் செய்யுள்:

"பல்லியம் போலுரு மேறெங்கு மார்ப்பதும் பார்ப்பதின்றி
வல்லியம் போதகம் போர்பயில் கான்வந்து வாணன்றஞ்சை
யல்லியம் போருகை யன்னநின் கேளரு ளாசையினின்
றெல்லியம் போதுசென் றேனென்றும் கேள்வ ரியம்பினரே"
(த. கோ. 200)

எனவரும்.

என் பிழைப்பன்றென்று இறைவி நோதற்குச் செய்யுள்:

"வியலூ ரெயிற்புற நொச்சியி னூழ்மலர் வீழ்தொறெண்ணி
மயலூர் மனத்தொடு வைகினன் யான்றஞ்சை வாணன்வெற்பர்
புயலூ ரிருட்கங்குல் வந்தவ மேநின்று போயினரென்
றயலூர் நகைக்குமென் னேயென்ன பாவங்கொ லாக்கினவே"
(த. கோ. 201)

எனவும்,

"கொன்னூர் துஞ்சினும் யாந்துஞ் சலமே
யெம்மி லயல தேழி லும்பர்
மயிலடி யிலைய மாக்குர னொச்சி
யணிமிகு மென்கொம் பூழ்த்த
மணிமருள் பூவின் பாடுநனி கேட்டே (குறுந். 138)

எனவும் வரும்.

முன்னை ஞான்றும் நிகழ்ந்தவை அறிந்திருந்தும், மற்றை ஞான்று தலைமகள் இவ்வாறு சொல்லியாற்றுதல் காரணமாகவும், பாங்கி சொல்லி ஆற்றுவித்தல் காரணமாகவும் வந்தன. (44)

வருந்தொழிற் கருமை

**161 தாயும் நாயும் ஊருந்துஞ் சாமை**
**காவலர் கடுகுதல் நிலவுவெளிப் படுதல்**
**கூகை குழறுதல் கோழிகுரற் காட்டுத**
**லாகிய ஏழும் அல்லுக்குறித் தலைவன்**
**வருந்தொழிற் கருமை பொருந்துத லுரிய.**

(இ - ள்) தாய்துஞ்சாமை முதலாகக் கோழிகுரற்காட்டுதல் ஈருகச் சொல்லப்பட்ட ஏழும் இரவுக்குறிக்கண் தலைமகன் வருந் தொழிலருமைக்குப் பொருந்துதலுடையவாம் என்றவாறு.

தாய் துஞ்சாமைக்குச் செய்யுள் :

"ஆழி யகன்புவி யுள்ளன யாவு மடங்கிநள்ளென்
றூழி முடிந்தன்ன வோங்கிருள் யாமத்து மோடையினுந்
தாழி யினும்போ தலர்தஞ்சை வாணன் றரியலர்போல்
தோழிநம் மன்னைகண் ணேதுயில் கோட றுறந்தனவே"
(த. கோ. 202)

எனவும்,

"மண்ணிய சென்ற வொண்ணுத லரிவை
புனறரு பசுங்காய் தின்றதன் றப்பற்
கொன்பதிற் றொன்பது களிற்றோ டவணிறை
பொன்செய் பாவை கொடுப்பவுங் கொள்ளான்

பெண்கொலை புரிந்த நன்னன் போல
வரையா நிரையத்துச் செலீ இயரோ வன்னை
யொருநா ணகைமுக விருந்தினன் வந்தெனப்
பகைமுக வூரிற் றுஞ்சலோ விலளே'' (குறுந். 292)

எனவும் வரும்.

நாய் துஞ்சாமைக்குச் செய்யுள் :

"தண்ணென் புனல்வையை சூழ்தஞ்சை வாணன் றரியலர் போர்
பெண்ணென் பிறவியும் பேறுடைத் தன்றிப் பெரும்பதிநங்
கண்ணென் பவர்வரக் கங்குலின் ஞாளிக் கணங்குரைத்துத்
துண்ணென் கடுங்குரல் வாயன்னை துஞ்சினுந் துஞ்சிலவே''
(த. கோ. 209)

எனவரும்.

ஊர் துஞ்சாமைக்குச் செய்யுள் :

''ஒங்கண்ணல் வெம்பக டுந்திவந் தோரை யுடன்றுதும்பைத்
தேங்கண்ணி சூடிச் செருவென்ற வாணன் றென்
மாறைமின்னே
தாங்கண் ணனையர் தமைப் பிரிந் தோரநந் தனிமைகண்டோ
நாங்கண் ணுறங்கினு மோவுறங் கார்கண் ணகரவரே''
(த. கோ. 204)

எனவும்,

''குறுங்கை யிரும்புலிக் கோள்வல் லேற்றை
பூநுத லிரும்பிடி புலம்பத் தாக்கித்
தாழ்நீர் நனந்தலைப் பெருங்ளி றடூஉங்
கல்லக வெற்பன் சொல்லிற் றேறி
யாமெந் நலனிழந் தனமே யாமத்
தலர்வாய்ப் பெண்டி ரம்பலோ டொன்றிப்
புரைய நீமொழி பயிற்றிய வுரையெடுத்
தானுக் கௌவைத் தாகத்
தானென் னிழந்ததிவ் வழுங்க லூரே'' (நற்றிணை. 36)

எனவும் வரும்.

காவலர் கடுகுதற்குச் செய்யுள் :

“ புயற்கண் ணியதலைப் பூகமென் பாளைப் புதுமதுநீர்
வயற்கண் ணிறைதஞ்சை வாணன்றென் மாறையில் வஞ்சியன்னாள்
கயற்கண் ணிணையஞ்சி நீர்மல்கக் காவலர் கைப்பறையின்
செயற்கண் ணிணையல்ல வோபடு கின்றன திண்கடிப்பே
(த. கோ. 205)

எனவரும்.

நிலவு வெளிப்படுதற்குச் செய்யுள் :

“ தெண்பாற் கதிர்முத்த வெண்ணகை யாய்திகி ரிக்கிரிசூழ்
மண்பாற் புகழ்வைத்த வாணன்றென் மாறைநம் மன்னர் பொற்றேர்
பண்பாற் பரிக்கும் பரிவரு மாறென் பரந்தநிலா
வெண்பாற் கடலில்வை யம்பதி னாலு மிதக்கின்றவே ”
(த. கோ. 206)

எனவும்,

“ கருங்கால் வேங்கை வீயுகு துறுகல்
இரும்புலிக் குருளையிற் றோன்றுங் காட்டிடை
யெல்லி வருநர் களவிற்கு
நல்லை யல்லை நெடுவெண் ணிலவே ” (குறுந். 47)

எனவும் வரும்.

கூகை குழறுதற்குச் செய்யுள் :

“ நம்பே றுடைமை யிருக்கின்ற வாகடன் ஞாலத்துள்ளோர்
தம்பே றெனவந்த சந்திர வாணன் றரியலர்போல்
வம்பேறு கொங்கை மயிலிய னுமஞ்ச மன்றமராங்
கொம்பேறி நள்ளிருள் வாய்குழ றுநின்ற கூகைகளே ”
(த. கோ. 207)

எனவும்,

“ எம்மூர் வாயி லொண்டுறைத் தடைஇய
கடவுண் முதுமரத் துடனுறைவு பழகிய
தேயா வளையாய்த் தெண்கட் கூருகிர்

வாய்ப்பறை யசா அம் வலிமுந்து கூகை
மையூன் றெரிந்த நெய்வெண் புழுக்கல்
எலிவான் சூட்டொடு மலியப் பேணுதும்
எஞ்சாக் கொள்கையெங் காதலர் வரனசைஇத்
துஞ்சா தலமரு பொழுதில்
அஞ்சுவரக் கடுங்குரல் பயிற்றா தீமே'' (நற்றிணை. 83)

எனவும் வரும்.

கோழி குரற்காட்டுதற்குச் செய்யுள்:

''மன்பதை யுய்ய வருந்தஞ்சை வாணன்தென் மாறைவெற்பர்
கொன்பதி வேல்வலங் கொண்டுவந் தாற்றங்கள்
கோனடந்தான்
என்பது தேறி யிடையிரு ளூரை யெழுப்பும் வெம்முள்
பொன்பதி தாள்வளை வாய்ச்செய்ய சூட்டுவன் புள்ளினமே''
(த. கோ. 208)

எனவும்,

''கள்வ ரைக்கண் காட்டுவர் போலக்
கொள்ளுங் குரல்கூவுங் கோழி''

எனவும் வரும்.

இவை ஏழும் வரைவு கடாதற்கும் உரியவாம். (45)

இரவுக்குறி இடையீட்டின் விரி

162 திரட்டியிவ் வாறு செப்பிய வொன்பதிற்
றிரட்டியு மிரவுக்குறி யிடையீட்டு விரியே.

(இ-ள்.) கூட்டியிப்படியாற் சொல்லப்பட்ட பதினெட்டும் இரவுக்குறியிடையீட்டு விரியாம் என்றவாறு. (46)

## 14 வரைதல் வேட்கை

வரைதல் வேட்கையின் வகை

163 அச்ச முவத்த லாற்ரு மையென
மெச்சிய வரைதல் வேட்கைமூ வகைத்தே.

(இ-ள்.) அச்சமும் உவத்தலும் ஆற்ருமையும் என மூன்று வகையினை உடைத்தாம் விதிக்கப்பட்டுள்ள வரைதல் வேட்கை என்றவாறு. (47)

வரைதல் வேட்கையின் விரி

164 பருவரல் வினவிய பாங்கிக் கிறைவி
யருமறை செவிலி அறிந்தமை கூறலுந்
தலைமகன் வருந்தொழிற் கருமை சாற்றலும்
தலைமக னூர்க்குச் செலவொருப் படுதலும்
பாங்கி யிறைவனைப் பழித்தலும் பூங்கொடி
யிறையோன் றன்னைநொந் தியற்பட மொழிதலும்
கனவுநலி புரைத்தலுங் கவினழி வுரைத்தலுந்
தன்றுயர் தலைமகற் குரைத்தல் வேண்டலும்
துன்புறல் பாங்கி சொல்லெனச் சொல்லலும்
அலர்பார்த் துற்ற வச்சக் கிளவியும்
ஆறுபார்த் துற்ற வச்சக் கிளவியுங்
காம மிக்க கழிபடர் கிளவியும்
தன்னுட் கையா றெய்திடு கிளவியும்
நெறிவிலக்கு வித்தலுங் குறிவிலக்கு வித்தலும்
வெறிவிலக்கு வித்தலும் பிறவிலக்கு வித்தலுங்
குரவரை வரைவெதிர் கொள்ளுவித் தலுமென
வுரைபெற வகுத்த வொன்பதிற் றிரட்டியும்
வரைதல் வேட்கை விரியெனப் படுமே.

(இ-ள்.) பருவரல் வினவிய பாங்கிக்கு இறைவி அருமறை செவிலி அறிந்தமை கூறல் முதலாகக் குரவரை வரைவெதிர் கொள்ளுவித்தல் ஈருகச் சொற்பெற வகுத்த பதினெட்டும் வரைதல் வேட்கை விரியாம் என்றவாறு.

அவற்றுள், தலைமகளைப் பாங்கி பருவரல் வினவுதற்குச் செய்யுள் :

"விண்டார் பதிகொண்ட வேற்படை வாணன் விரைகமழ்பூந்
தண்டா மரைமங்கை தங்கிய தஞ்சைநின் ருயர் தம்மோ
டுண்டா கியமுனி வோவன்றி யாயத்தோ டுற்றதுண்டோ
வண்டார் குழலிசொல் வாய்செல்ல லேதுன் மனத்திடையே"
(த. கோ. 209)

எனவரும்.

தலைமகள் அருமறை செவிலியறிந்தமை கூறற்குச் செய்யுள் :

"மாணிக்க மென்கொம்ப ரென்சொல்லு கேன்றஞ்சை
வாணன்வெற்பர்
பேணிப் புணர்ந்து பிரிந்தபின் ரேன்றலும்
பேதைமுகம்
பாணித்த லின்றி மதிகண்டு நாணிய
பங்கயம்போல்
நாணிக் கவிழ்ந்தத னுலறிந் தாளன்னை
நங்களவே" (த. கோ. 210)

எனவும்,

"யாங்கா குவமோ வணிநுதற் குறுமகள்
தேம்படு சாரற் சிறுதினைப் பெருங்குரல்
செவ்வாய்ப் பைங்கிளி கவர நீ மற்
றெவ்வாய்ச் சென்றனை யவணெனக் கூறி
யன்னை யானுள் கழற முன்னின்
றருவி யார்க்கும் பெருவரை நாடனை
யறியலு மறியேன் காண்டலு மிலனே
வெதிர்புனை தட்டையேன் மலர்பூக் கொய்து
சுனைபாய்ந் தாடிற்று மிலனென நினைவிலை
பொய்ய லந்தோ வாய்த்தனை யதுகேட்டுத்
தலையிறைஞ் சினளே யன்னை
செலவொழிந் தனையா லளியைநீ புனத்தே,'
(நற்றிணை. 147)

எனவும் வரும்.

தலைமகள் தலைமகன் வருந்தொழிற்கருமை சாற்றற்குச் செய்யுள் :

" ஓவலில் வாயன்னை ஞாளியிவ் வூர்கண் ணுறங்கினுமூர்க்
காவலர் காய்வர் நிலாமதி காலுங் கடுங்குடிஞைச்
சேவலும் வாரண முந்தஞ்சை வாணனைச் சென்றிறைஞ்சா
மேவலர் போல்வெய்ய வாயடை யாவென் மெலிவறிந்தே "
(த. கோ. 211)

எனவும்,

" இரும்பிழி மகா அரிவ் வழுங்கன் மூதூர்
விழவின் றாயினுந் துஞ்சா தாகும்
மல்ல லாவணம் மறுகுடன் மடியின்
வல்லுரைக் கடுஞ்சொ லன்னை துஞ்சாள்
பிணிகோ ளருஞ்சிறை யன்னை துஞ்சிற்
றுஞ்சாக் கண்ணர் காவலர் கடுகுவர்
இலங்குவே லிளைஞர் துஞ்சின் வையெயிற்று
வலஞ்சுரித் தோகை ஞாளி மகிழும்
அரவவாய் ஞமலி குரையாது மடியிற்
பகலுறழ் நிலவுக் கான்று விசும்பின்
அகல்வாய் மண்டிலம் நின்றுவிரி யும்மே
திங்கள் கல்சேர்பு கனையிருள் மடியின்
இல்லெலி வல்சி வல்வாய்க் கூகை
கழுதுவழங் கியாமத் தழிதகக் குழறும்
வளைக்கட் சேவல் வாளாது மடியின்
மனைச்செறி கோழி மாண்குர லியம்பும்
எல்லா மடிந்த காலை யொருநாள்
நில்லா நெஞ்சத் தவர்வா ரலரே அதனால்
அரிபெய் புட்டி லார்ப்பப் பரிசிறந்
தாதி போகிய பாய்பரி நன்மான்
நொச்சி வேலித் தித்த னுறந்தைக்
கன்முதிர் புறங்காட் டன்ன
பன்முட் டின்றாற் றோழிநங் களவே " (அகம். 122)

எனவும் வரும்.

தலைமகன் ஊர்க்குச் செலவொருப்படுதற்குச் செய்யுள் :

" நம்பா னலனுண்ட நம்பா தகர்தந் நகர்வினவித்
தம்பா லுடன்சென்று சார்குவ மோதரி யாரைவென்று
வம்பார் கழல்புனை வாணன்றென் மாறை வளரும்வஞ்சிக்
கொம்பா கியமருங் குற்கரும் பாமொழிக் கோமளமே "
(த. கோ. 212)

எனவும்,

" படுதிரை கொழீஇய பானிற வெக்கர்த்
தொடியோர் மடிந்தெனத் துறைபுலம் பின்றே
முடிவலை முகந்த முடங்கிருப் பாவைப்
படுபுள் ளோப்பலிற் பகன்மாய்ந் தன்றே
கோட்டுமீ னெறிந்த வுவகையற் வேட்டமடிந்
தெமரு மல்கின ரேமார்ந் தனமெனச்
சென்றுநா மறியி னெவனோ தோழி
மன்றப் புன்னை மாச்சினை நறுவீ
முன்றிற் றுழையொடு கமழுந்
தெண்கடற் சேர்ப்பன்வாழ் சிறுநல் லூர்க்கே "
(நற்றிணை. 49)

எனவும் வரும்.

பாங்கி இறைவனைப் பழித்தற்குச் செய்யுள் :

" வறியார் புகழ்தஞ்சை வாணன்றென் மாறை
மடந்தையன்னாள்
அறியா டுயர்முன் னறிந்தவர் தாமத னுலமழலின்
பொறியா ருயிர்வெம் பணிமா மணியும் புதையிருள்கூர்
நெறியா ரருள்பெற நாநடு நாளிடை நீந்துதுமே "
(த. கோ. 213)

எனவும்,

" ஈயற் புற்றத் தீர்ம்புறத் திறுத்த
குறும்பி வல்சிப் பெருங்கை யேற்றை
தூங்குதோற் றுதிய வள்ளுகிர் கதுவலிற்
பாம்புமத னழியும் பானாட் கங்குலும்
அரிய வல்லம னிகுளை பெரிய

கேழ லட்ட பேழ்வா யேற்றை
பலாவம லடுக்கம் புலர வீர்க்குங்
கழைநால் சிலம்பி னுங்கண் வழையொடு
வாழை யோங்கிய தாழ்கண் ணசும்பிற்
படுகடுங் களிற்றின் வருத்தஞ் சொலிய
பிடிபடி முறுக்கிய பெருமரப் பூசல்
விண்டோய் விடரகத் தியம்பு மவர்நாட்
டெண்ணரும் பிறங்கன் மானதர் மயங்காது
மின்னுவிடச் சிறிய வொதுங்கி மென்மெலத்
துளிதலைத் தலைஇய மணியே ரைம்பால்
சிறுபுறம் புதைய வாரிக் குரல்பிழியூஉ
நெறிகெட விலங்கிய நீயி ரிச்சுரம்
அறிதலு மறிதிரோ வென்னுநர்ப் பெறினே''

(அகம். 8)

எனவும் வரும்.

தலைமகள் இயற்பட மொழிதற்குச் செய்யுள்:

'புணரா விரகமும் போகா விரவும் புணர்முலைமேல்
இணரார் பசப்பும் பிறவுமெல் லாமிருள் கூர்ந்தறல்போல்
வணரார் குழற்பிறை வாணுத லாய்தஞ்சை வாணன்வெற்பர்
உணரா திருப்பது வேறொன்று மல்லநம் மூழ்வினையே''

(த. கோ. 214)

எனவும்,

'' இப்பியீன் றுகுத்த நித்திலம்
இருளற விமைக்கு மல்கிருந் துறைவன்
அருளா துறைவா னாகவும்
இறையிருந் தனவாற் றோழியென் வளையே''

எனவும் வரும்.

தலைமகள் கனவுநலிபுரைத்தற்குச் செய்யுள்:

'' சினவாகை சூடிச் செருவென்ற வாணன்றென் மாறையினம்
மனவாழ் மனையவர் வந்துநல் லியாம மணந்ததெல்லாம்
நனவா மெனவே மகிழ்ந்தே விழித்தொன்று நான்கண்டிலேன்
கனவாய் முடிந்தது பின்னையென் னேயென்ன கைதவமே''

(த. கோ. 215)

"கேட்டிசின் வாழி தோழி யல்கற்
பொய்வ லாளள் மெய்யுறன் மரீஇய
வாய்த்தகைப் பொய்க்கனு மருட்ட வேற்றெழுந்
தமளி தைவந் தனனே குவளை
வண்டுபடு மலரிற் சா அய்த்
தமியேன் மன்ற வளியேன் யானே" (குறுந். 30)

எனவும் வரும்.

தலைமகள் கவினழிபுரைத்தற்குச் செய்யுள்:

"வாளினு நீள்விழி வாணுத லாய்தஞ்சை வாணன்றெவ்வி
ளுளினு நாளு நலந்தொலை வேனகை யாரயில்வேல்
வேளினு மேர்நல்ல வெற்பனு நீயுமென் மேனியினுந்
தோளினு நோயறி யீரறி யாததென் ரூல்வினையே"
(த. கோ. 216)

எனவும்,

"முடக்கா விறவின் முடங்குபுறப் பெருங்கிளை
புணரி யிகுதிரை தரூஉந் துறைவன்
புணரிய விருந்த ஞான்றும்
இன்னது மன்னோ நன்னுதற் கவினே" (குறுந்.109)

எனவும் வரும்,

தலைமகள் தன்றுயர் தலைமகற்குரைத்தல் வேண்டற்குச் செய்யுள்:

"வரைப்பான் மதுரத் தமிழ்தெரி வாணன்றென் மாறைவையை
நுரைப்பான் முகந்தன்ன நுண்டுகி லாயிந்த நோயவர்க்கின்
றுரைப்பா ருளரே லுயிரெய்த லாநமக் கூர்திரைசூழ்
தரைப்பால் வளரும் புகழெய்த லாமவர் தங்களுக்கே"
(த. கோ. 217)

எனவும்,

"புள்ளும் புலம்பின பூவுங் கூம்பின
கானலும் புலம்புநனி யுடைத்தே வானமும்
நம்மே போலு மம்மர்த் தாகி

யெல்லை கழியப் புல்லென் றன்றே
யின்னு முளனே தோழி யிந்நிலை
தண்ணிய கமழும் ஞாழல்
தண்ணந் துறைவர்க் குரைக்குநர்ப் பெறினே''
(குறுந். 109)

எனவும் வரும்.

பாங்கி நின்குறை நீயே சொல்லெனத் தலைமகட்குச் சொல்லற்குச் செய்யுள் :

''ஒல்லென வேயென் னுறுதுயர் தாமு முணரும்வண்ணஞ்
சொல்லென நீயிது சொல்லியென் பேறுன் றுயரமெல்லாம்
வல்லென வேகொண்ட கொங்கையர் வேடஞ்சை
வாணன்வெற்பில்
அல்லென வார்குழ லாயறி யாரல்ல ரன்பருமே''
(த. கோ. 218)

எனவும்,

''ஊருறு கோழிச் சிறுமாப் பேடை
சேவற் செய்குறி நீடின
ஊடலு முணர்த்தலுங் கூறுமாற் பெரிதே''

எனவும் வரும்.

தலைமகள் அலர்பார்த்துற்ற அச்சக்கிளவிக்குச் செய்யுள் :

''மலருந் தொடைவஞ்சி வஞ்சக மாதரு மாரனும்வா
யலருந் தடங்கை யலருந் தொடாநிற்ப வஞ்சிநெஞ்சம்
பலரும் புகழ்தஞ்சை வாணர் பிரானைப் பணியலர்போற்
புலரும் பெயருங்கண் ணீர்புல ராது புலரினுமே''
(த. கோ. 219)

எனவும்,

''அலரியாங் கொல்வதோ''

எனவும் வரும்.

தலைமகள் ஆறுபார்த்துற்ற அச்சக் கிளவிக்குச் செய்யுள் :

'' அரியுங் கரியும் பொருநெறிக் கோர்துணை யாயவர்மேற்
சொரியும் திவலை துடைக்கவென் றேகுழை தோய்ந்துநஞ்சும்
வரியும் பயில்கண்ணி வாணன்றென் மாறைநம் மன்னர் வந்து
பிரியும் பொழுதெல்லி வாய்வினை யேன்மனம் பின்செல்வதே''
(த. கோ. 220)

எனவும்,

'' குன்றக் கூகை குழறினு முன்றிற்
பலவி னிருஞ்சினைக் கலைபாய்ந் துகளினும்
அஞ்சும னளித்தெ னெஞ்ச மினியே
ஆரிருட் கங்கு லவர்வயிற்
சார னீளிடைச் செலவா னுதே'' (குறுந். 152)

எனவும் வரும்.

காமமிக்க கழிபடர் கிளவிக்குச் செய்யுள் :

'' ஓதக் கயலையுண் டண்ணுந்து விக்கி யுடல்குலுக்கிப்
பாதத் துணைநிமிர்க் குங்குரு கீர்வெண் பணிலபங்க
சாதத் திருநிதி யன்னுன் குலோத்துங்கன் தஞ்சையிலென்
காதற் சிறையுங் குறையுங்கண் டாரில்லைக் கன்னெஞ்சரே''
(த. கோ. 221)

எனவும்,

'' புன்கண் கூர்மாலைப் புலம்புமென் கண்ணேபோல்
துன்பம் உழவாய் துயிலப் பெறுதியால்
இன்கள்வாய் நெய்தால்நீ யெய்துங் கனவினுள்
வன்கணார் கானல் வரக்கண் டறிதியோ''
(சிலம்பு. கானல்வரி. 33)

எனவும் வரும்.

தன்னுட்கையாறெய்திடு கிளவிக்குச் செய்யுள்:

"விண்டலை யாவர்க்கும் வேந்தர்வண் டில்லைமெல் லங்கழிசூழ்
கண்டலை யேகரி யாக்கன்னிப் புன்னைக் கலந்தகள்வர்க்
கண்டிலை யேவரக் கங்குலெல் லாமங்குல் வாய்விளக்கும்
மண்டலு மேபணி யாய்தமி யேற்கொரு வாசகமே"
(திருச்சிற். கோ. 177)

எனவரும்.

தலைமகள் நெறிவிலக்குவித்தற்குச் செய்யுள்:

"ஈன்ரு ளினுமெனக் கன்புடை யாய்சென் றிரந்துகொண்டு
சான்ருண்மை யன்பர் தமக்குரை நீதஞ்சை காவலனைத்
தேன்ருழ் வரைத்தமிழ் சேர்த்திய வாணனைச் சேரலர்க்குந்
தோன்ரு விருங்கங்கு னீவரு மாருழி தோன்றல்ன்றே"
(த. கோ. 223)

எனவும்,

"குறையொன் றுடையேன்மற் ருேழி நிறையில்லா
மன்னுயிர்க் கேமஞ் செயல்வேண்டும் மின்னே
யராவழங்கு நீள்சோலை நாடனை நம்மில்
இராவார லென்ப துரை" (ஐந்திணை. எழு. 14)

எனவும் வரும்.

தலைமகள் குறிவிலக்குவித்தற்குச் செய்யுள்:

"வெற்றி யவாவிய வாணர் பிரான் றஞ்சை வெற்பகத்திப்
பெற்றிய சோலைப் பிறங்கிருள் வாரன்மின் பேதையின்னும்
முற்றிய வேனற் படுகிள்ளை யோப்பு முறைமையளென்
றெற்றிய காதலி ஞலிசைத் தாளன்னை யென்றுரையே"
(த. கோ. 224)

எனவும்,

"வளைவாய்ச் சிறுகிளி வினைதினை கடீஇயர்
செல்கென் ருேளே யன்னை யெனநீ
சொல்லி னெவனே தோழி கொல்லை

நெடுங்கை வன்மான் கடும்பகை யுழந்த
குறுங்கை யிரும்புலிக் கோள்வ லேற்றை
பைங்கட் செந்நாய் படுபதம் பார்க்கும்
ஆரிரு ணடுநாள் வருதி
சார ஞட வாரலோ வெனவே (குறுந். 141)

எனவும் வரும்.

வெறி விலக்குவித்தற்குச் செய்யுள் :

" *மின்னு திடித்தென்ன வன்னைகொண் டாள்வெறி விந்தை மங்கை*
*மன்னுண்மை மன்னிய வாணன்றென் மாறை வரையில் வண்டியா*
*ழென்ன வசுண மிறைகொள்ளு நாடனெனக்கருளான்*
*முன்ன ளருளிய நோய்தணிப் பானின்று மொய்குழலே* "
(த. கோ. 225)

எனவும்,

" வெறி கமழ் வெற்பனென் மெய்ந்நீர்மை கொண்ட
தறியாண்மற் றன்னே வணங்கணங்கிற் றென்று
மறியீர்த் துதிரந்தூய் வேலன் தரீஇ
வெறியோ டலம்வரும் யாய் " (ஐந்திணை. ஐம். 20)

எனவும் வரும்.

பிற விலக்குவித்தற்குச் செய்யுள் :

" பொருபான் மதியினைப் போன்மருப் பியானையிற் பொன்னெடின்பந்
தருபான் மொழிவஞ்சி சாரவந் தார் தஞ்சை வாணன் வெற்பின்
ஒருபா னெதுமல ரென்னவெந் தீயுலை யுற்றசெவ்வேல்
இருபான் மருங்கினுங் கொண்டெறிந் தாலொத்த தென்செவிக்கே " (த. கோ. 226)

எனவும்,

"காணினி வாழி தோழி யாணர்க்
கடும்புன லடைகரை நெடுங்கயத் திட்ட
மீன்வலை மாப்பட் டாஅங்
கிதுமற் றெவனோ நொதுமலர் தலையே"
(குறுந். 171)

எனவும் வரும்.

குரவரை வரைவெதிர் கொள்ளுவித்தற்குச் செய்யுள்:

"தற்பழி யாமலுஞ் சந்திர வாணன் தமிழ்த்தஞ்சைநங்
கற்பழி யாமலுங் காரண மாகக் கயல் விழிநின்
சொற்பழி யார்நமர் சொல்லுவல் லேசென்று சொல்லலையேல்
இற்பழி யாம்வழி யாநம தாருயிர்க் கேதமுமே"
(த. கோ. 227)

எனவும்,

"... ... ... எந்தையும்,
யாயு மறிய வுரைத்தீயின் யானுற்ற
நோயுங் களைகுவை மன்" (கலி. முல்லை. 11)

எனவும் வரும்.

பருவரல் வினவிய பாங்கிக் கிறைவி யருமறை செவிலி யறிந்தமை கூறலும், தலைமகன் வருந்தொழிற் கருமை சாற்றலும் ஆக இரண்டும், அலர்பார்த்துற்ற அச்சக்கிளவியும், ஆறுபார்த்துற்ற வச்சக்கிளவியும் ஆகவிரண்டும், நெறிவிலக்குவித்தல் முதலிய நான்குமாகிய எட்டும் அச்சத்திற்குரியன: பாங்கி இறைவனைப் பழித்ததும் துன்புறு பாங்கி சொல்லெனச் சொல்லலுமாகிய இரண்டும் உவத்தற்குயுயன: தலைமகனூர்க்குச் செறவொருப்படுதலும், பூங்கொடி இறையோன்றன்னை நொந்தியற்பட மொழிதலும், கனவு நலிவுரைத்தலும், கவினழி புரைத்தலும், தன்றுயர் தலைவர்க்குணர்த்தல் வேண்டலும், காமமிக்க கழிபடர் கிளவியும், தன்னுட் கையாறெய்திடு கிளவியும், குரவரை வரைவெதிர் கொள்ளுவித்தலுமாகிய எட்டும் ஆற்றுமைக்குரியன. (48)

## 15 வரைவு கடாதல்

வரைவு கடாதலின் வகை

165 பொய்த்தல் மறுத்தல் கழறல் மெய்த்தலென்
றொருநால் வகைத்தே வரைவு கடாதல்.

(இ - ள்) பொய்த்தல் முதலாக மெய்த்தல் ஈருக நான்கு கையினையுடைத்து வரைவுகடாதல் என்றவாறு. (49)

வரைவு கடாதலின் விரி

166 வினவிய செவிலிக்கு மறைத்தமை விளம்பலும்
அலரறி வுறுத்தலும் தாயறி வுணர்த்தலும்
வெறியச் சுறுத்தலும் பிறர்வரை வுணர்த்தலும்
வரைவெதிர்வுணர்த்தலும் வரையுநாளுணர்த்தலும்
அறிவறி வுறுத்தலும் குறிபெயர்த் திடுதலும்
பகல்வரு வானை யிரவுவரு கென்றலும்
இரவுவரு வானைப் பகல்வரு கென்றலும்
பகலினும் இரவினும் பயின்றுவரு கென்றலும்
பகலினும் இரவினு மகலிவண் என்றலும்
உரவோன் நாடும் ஊரும் குலனும்
மரபும் புகழும் வாய்மையுங் கூறலும்
ஆறுபார்த் துற்ற அச்சங் கூறலும்
ஆற்ருத் தன்மை யாற்றக் கூறலும்
காவன்மிக வுரைத்தலுங் காமமிக வுரைத்தலும்
கனவுநலி வுரைத்தலுங் கவினழி வுரைத்தலு
மெனமுறை நாடி யியம்பிய விருபதும்
வரைவு கடாதல் விரியெனப் படுமே.

(இ - ள்) வினவிய செவிலிக்கு மறைத்தமை விளம்பல் முதலாகக் கவினழிவுரைத்தல் ஈருகச் சொல்லப்பட்ட இருபதும் வரைவு கடாதல் விரி எனப்படும் என்றவாறு.

அவற்றுள்,

வினவிய செவிலிக்கு மறைத்தமை தலைவற்குத் தோழி விளம்பற்குச் செய்யுள் :

"தளரா விளமுலை தாங்ககில் லாது தளரிடைகண்
வளராத தென்கங்குல் வாரா யெனத்தஞ்சை வாணன்வெற்பா
விளரார் திருநுத லன்னைக்கொர் மாற்றம் விளம்பியுய்ந்தேன்
உளரா மவர்வலை யுட்பட்டு வாழ்வ துணர்ந்தருளே"

(த. கோ. 228)

எனவரும்.

அலர் அறிவுறுத்தற்குச் செய்யுள் :

"மணிவரை மாளிகை மாறை வரோதயன் வாணன்வெற்பா
பணிமொழி யாளென்னும் கொள்கொம்பு மூடிப்படர்ந்தயலார்
அணிமனை தோறுங் கொழுந்துவிட் டம்ப லரும்பிமஞ்மேல்
தணிவில தாகவிப் போதலர் பூத்ததுன் றண்ணளியே"

(த. கோ. 229)

எனவும்,

"அறிந்தோ ரறனில ரென்றலர் சிறந்த
வின்னுயிர் கழியினு நனியின் னாதே
புன்னையங் கானற் புணர்குறி வாய்த்த
பின்னீ ரோதியென் றோழிக் கன்றே
படுமணி யானைப் பசும்பூட் சோழர்
கொடிநுடங்கு மறுகி னார்க்காட் டாங்கட்
கள்ளுடைத் தடவிற் புள்ளொலித் தோவாத்
தேர்வழங்கு தெருவி னன்ன
கௌவையா கின்ற தையநின் னருளே"

(நற்றிணை. 227)

எனவும் வரும்.

தாயறிவுணர்த்தற்குச் செய்யுள் :

"திரையிற் பவளம் வடவா முகத்தெழுந் தீக்கொழுந்தின்
கரையிற் படருங் கடற்றுறைநாட கயற்கொடிபொன்
வரையிற் றிகழ்வித்த வாணன்றென் மாறை மலர்ந்தமௌவல்
விரையிற் களவையெல் லாமறிந் தாளன்னை மெய்யுறவே"

(த. கோ. 230)

எனவும்,

"நாரை நல்லினங் கடுப்ப மகளிர்
நீர்வார் கூந்த லுளருந் துறைவ
பொங்குகழி நெய்த லுறைப்ப வித்துறைப்
பல்கால் வரூஉந் தேரெனச்
செல்லா தீமோ வென்றனள் யாயே"

(ஐங்குறு. 186)

எனவும் வரும்.

வெறி அச்சுறுத்தற்குச் செய்யுள் :

"மையுற்ற நீலக்கண் மாமங்கை கோன்றஞ்சை வாணன்வெற்பி
னெய்யுற்ற வேலன்ப நீதணி யாமையி னெஞ்சினுள்ளே
யையுற் றயர்வுற்றெம் மன்னையு மாயுமென் னுரணங்கின்
மெய்யுற்ற நோய்தணிப் பான்வெறி யாடல் விரும்பினரே"

(த. கோ. 231)

எனவரும்.

பிறர் வரைவுணர்த்தற்குச் செய்யுள் :

"வெடிக்கின்ற விப்பியு ணித்திலம் பைத்தலை வெம்பகுவாய்த்
துடிக்கின்ற திங்களிற் றேன்றுந்துறைவசெஞ் சொற்புலவோர்
வடிக்கின்ற முத்தமிழ் வாணன்றென் மாறையெம் மான்மருங்கை
யொடிக்கின்ற கொங்கைகண் டாலெவர் நெஞ்சுரு காதவரே"

(த. கோ. 232)

எனவும்,

"சிறுகட் பன்றிப் பெருஞ்சின வொருத்தலொடு
குறுக்கை யிரும்புலி பொரூஉ நாட
நனிநா ணுடைமையு மன்ற
*பனிப்பயந் தனநீ நயந்தோள் கண்ணே*" (ஐங்குறு. 226)

எனவும் வரும்.

வரைவெதிர்வுணர்த்தற்குச் செய்யுள்:

"குருதிகண் டாலன்ன காந்தளஞ் சாரற் குறிவெறிதே
வருதிகண் டாய்தஞ்சை வாணன்வெற் பாவெங்கண் மாநகர்நீ
சுருதிகண் டாரொடுந் தோன்றிலெங் கேளிர்நின் சொல்லிகவார்
பருதிகண் டான்மல ராதொழி யாகயப் பங்கயமே"
(த. கோ. 233)

எனவும்,

"மாத்தோ லம்பி"

எனவும் வரும்.

வரையுநாளுணர்த்தற்குச் செய்யுள்:

"அலகம் பனகண் ணிவள்கொங்கை மென்சுணங் காகிவண்டு
பலகம் பலைசெய்யப் பூத்தன வேங்கை பனிவரைமேல்
திலகம் பதித்தெனச் சேல்வைத்த வாணன்றென் மாறைமன்னன்
உலகம் பயில்புகழ் போற்சிலம் பாமதி யூர்கொண்டதே"
(த. கோ. 234)

எனவும்,

"கோழிலை வாழைக் கோண்மிகு பெருங்குலை
யூழுறு தீங்கனி யுண்ணுநர்த் தடுத்த
சாரற் பலவின் சுளையொ டூழ்படு
பாறை நெடுஞ்சுனை விளைந்த தேறல்
அறியா துண்ட கடுவ னயலது
கறிவளர் சாந்த மேறல் செல்லாது
நறுவீ யடுக்கத்து மகிழ்ந்துகண் படுக்குங்

குறியா வின்ப மெளிதி னின்மலைப்
பல்வேறு விலங்கு மெய்து நாட
குறித்த வின்பம் நினக்கெவ னரிய
வெறுத்த வேஎர் வேய்புரை பணைத்தோள்
நிறுப்ப நில்லா நெஞ்சமொடு நின்மாட்
டிவளு மினைய ளாயிற் றந்தை
ய ரங்கடிக் காவலர் சோர்பத னொற்றிக்
கங்குல் வருதலு முரியை பைம்புதல்
வேங்கையு மொள்ளிணர் விரிந்தன
நெடுவெண் டிங்களு மூர்கொண் டன்றே'' (அகம். 2)

எனவும் வரும்.

தலைமகள் அறிவு தலைமகற்கு அறிவுறுத்தற்குச் செய்யுள்:

''வனநாண் மூளரி முகைவென்று வாணன்றென் மாறைவெற்பிற்
கனநா ணணிந்துபொற் கச்சற வீசிக் கதித்தெழுந்த
தனநாணு நுண்ணிடைத் தையனல் லாள்பழி சாற்றுவல்யா
னெனநாணி நின்பழி தான்மறைத் தாளன்ப வென்னையுமே''
(த. கோ. 235)

எனவும்,

''தன்னெவ்வங் கூறினு நீசெய்த வருளின்மை
யென்னையு மறைத்தாளென் றோழி யதுகேட்டு
நின்னையான் பிறர்முன்னர்ப் பழிகூற றோணி''
(கலி. குறிஞ்சி 8)

எனவும் வரும்.

குறிபெயர்த்திடுதற்குச் செய்யுள்:

''ஊரேர் பவரிங் குலாவவுங் கூடும்வந் தொண்சிலம்பா
வேறேர் பொதும்பரிற் போய்விளை யாடுக வேற்படையான்
மாறேர் பகைவென்ற வாணன்றென் மாறையெம் மன்னுதவப்
பேறேர் வடுவுகொண் டாலன்ன நீயுமென் பேதையுமே''
(த. கோ. 236)

எனவும்,

"விளையா டாயமொடு வெண்மண லழுத்தி
மறந்தனந் துறந்த தாழ்முளை யகைய
நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப
நும்மினுஞ் சிறந்தது நுவ்வை யாகுமென்
றன்னை கூறினள் புன்னையது சிறப்பே
யம்ம நாணுது நும்மொடு நகையே
விருந்திற் பாணர் விளரிசை கடுப்ப
வலம்புரி வான்கோடு நரலு மிலங்குநீர்த்
துறைகெழு கொண்கநீ நல்கின்
நிறைபடு நீழல் பிறவுமா ருளவே" (நற்றிணை. 172)

எனவும் வரும்.

குறிபெயர்த்திடுதற்கு மேற்காட்டிய செய்யுள் பகற்குறிக்கும் இரவுக்குறிக்கும் ஏற்குமாறறிந்து கொள்க.

பகல் வருவானை இரவு வருகென்றற்குச் செய்யுள் :

"முத்தணி நீல மணித்தகட் டுள்ளெங்கு மொய்கொளவே
வைத்தணி சேர வகுத்தது போற்றஞ்சை வாணன்வையைப்
பைத்தணி வார்திரை தோய்கருந் தாட்புன்னைப் பாசிலைவெண்
தொத்தணி பூந்துறை வாவரு வாயிருள் தூங்கிரவே"
(த. கோ. 237)

எனவும்,

"பனைத்திர ளன்ன பரேரெருழ்த் தடக்கைக்
கொலைச்சினந் தவிரா மதனுடை முன்பின்
வண்டுபடு கடாஅத் துயர்மருப் பியானை
தண்கமழ் சிலம்பின் மரம்படத் தொலைச்சி
யுறுபுலி யுரறக் குத்தி விறல்கடிந்து
சிறுதினைப் பெரும்புனம் வௌவு நாட
கடும்பரிக் குதிரை ஆஅய் எயினன்
நெடுந்தேர் மிஞிலியொடு பொருதுகளம் பட்டெனக்
காணிய செல்லாக் கூகை நாணிக்
கடும்பகல் வழங்கா தாஅங் கிடும்பை
பெரிதா லம்ம விவட்கே யதனுன்

மாலை வருதல் வேண்டுஞ் சோலை
முளைமேய் பெருங்களிறு வழங்கும்
மலைமுத லடுக்கத்த சிறுகல் லாறே'' (அகம். 148)

எனவும் வரும்.

இரவு வருவானைப் பகல் வருகென்றற்குச் செய்யுள் :

''இழைவிளை யாடு மிளமுலை சாயற் கிடந்தமஞ்ஞை
கழைவிளை யாடுங் கடிப்புனங் காத்துங் கலையகலா
துழைவிளை யாடு முயர்சிலம் பாவின்னு முன்பொருட்டான்
மழைவிளை யாடு மதிற்றஞ்சை வாணன் மலயத்திலே''
(த. கோ. 238)

எனவும்,

''நெடுமலை யடுக்கம் கண்கெட மின்னிப்
படுமழை பொழிந்த பானாட் கங்குற்
குஞ்சர நடுங்கத் தாக்கிக் கொடுவரிச்
செங்க ணிரும்புலி குழுமுஞ் சாரல்
வாரல் வாழிய ரைய நேரிறை
நெடுமென் பணைத்தோ ளிவளும் யானுங்
காவல் கண்ணினந் தினையே நாளை
மந்தியு மறியா மரம்பயி லிறும்பின்
ஒண்செங் காந்த ளவிழ்ந்த வாங்கண்
தண்ப லருவித் தாழ்நீ ரொருசிறை
உருமுச்சிவந் தெறிந்த உரனழி பாம்பின்
திருமணி விளக்கிற் பெறுகுவை
இருண்மென் கூந்த லேமுறு துயிலே'' (அகம். 92)

எனவும் வரும்.

பகலினும் இரவினும் பயின்றுவருகென்றற்குச் செய்யுள் :

''குரவுங் கணியும் விரவும்வெற் பாவெய்ய குஞ்சரமேல்
வரவுந் தியதெவ்வை மாற்றிய வாணன்றென் மாறைமின்னும்
அரவும் பணியு நுடங்கிடை யாற்றல ளாற்பகலும்
இரவும் குறவயி னீவரல் வேண்டு மிவள்பொருட்டே''
(த. கோ. 239)

எனவும் வரும்.

பகலினும் இரவினும் அகலிவண் என்றற்குச் செய்யுள் :

“தாவாத செல்வந் தருஞ்தஞ்சை வாணன் றடஞ்சிலம்பா
நீவாரல் சார னிலவல ராம்பக னீடிருளார்
மாவா னிலவு நிலமங்கை வார்குழன் மல்லிகைபோல்
ஓவா திரவெறிக் குஞ்சோலை நீழலி னூடுவந்தே”
(த. கோ. 240)

எனவரும்.

தலைமகன் நாடும் ஊரும் குலனும் மரபும் புகழும் வாய்மையும் கூறற்குச் செய்யுள் :

“தலத்திற்கு மாறைக்கு மன்னவன் வாணன் றமிழ்த்தஞ்சைசூழ்
நிலத்திற்கு மாமணி யாகுநின் னாட்டிற்கு நின்பதிக்குங்
குலத்திற்கு மாசில் குடிமைக்குஞ் சீர்மைக்குங் கோதின்மெய்ம்மை
நலத்திற்கு வாவதன் ருல்வரை யாது நடப்பதுவே”
(த. கோ. 241)

எனவும்,

“பிரைசங் கொளவீழ்ந்த தீந்தே னிருஅன்
மரையான் குழவி குளம்பிற் றுகைக்கும்
வரையக நாட வரையா வரினெந்
நிரைதொடி வாழ்த லிலள்” (ஐந்திணை. எழு. 10)

எனவும்,

“பழனக் கம்புள் பயிர்ப்பெடை யகவுங்
கழனி யூரநின் மொழிவ லென்றுந்
துஞ்சுமனை நெடுநகர் வருதி
யஞ்சா யோவிவ டந்தைகை வேலே” (ஐங்குறு. 60)

எனவும்,

“தாமரைக் கண்ணியைத் தண்ணறுஞ் சாந்தினை
நேரிதழ்க் கோதையாள் செய்குறி நீவரின்
மணங்கமழ் நாற்றத்த மலைநின்று பலிபெறூஉம்
அணங்கென அஞ்சுவர் சிறுகுடியோரே”
(கலி. குறிஞ்சி. 16)

எனவும்,

" கடிமலர்ப் புன்னைக்கீழ்க் காரிகை தோற்றாளைத்
தொடி நெகிழ்ந்த தோளளாத் துறப்பாயான் மற்றுநின்
குடிமைக்கீழ்ப் பெரியதோர் குற்றமாய்க் கிடவாதோ"
(கலி. நெய்தல். 18)

எனவும்,

" திகழ்மலர்ப் புன்னைக்கீழ்த் திருநலந் தோற்றாளை
யிகழ்மலர்க் கண்ணளாத் துறப்பாயான் மற்றுநின்
புகழ்மைக்கட் பெரியதோர் புகராகிக் கிடவாதோ"

எனவும் வரும். இவை நாடு முதலியனவற்றிற்குரிய சான்றோர் செய்யுளாம்.

ஆறுபார்த் துற்ற அச்சங் கூறற்குச் செய்யுள் :

" புராந்தகர் செஞ்சடை வெண்பிறை போனுதற் புள்ளிமிழ்பூங்
குராந்தொடை மென்குழற் கொம்பினை வேண்டிக்
கொடிமுல்லைநீண்
மராந்தழு வுந்தஞ்சை வாணன்வெற் பாவல்சி தேர்ந்திலஞ்சிக்
கராந்திரி கல்லதர் வாயெல்லி நீவரல் கற்பலவே"
(த. கோ. 242)

எனவும்,

" கரைபொரு கான்யாற்றங் கல்லத ரெம்முள்ளி வருதிராயின்
அரையிருள் யாமத் தடுபுலியே றஞ்சி யகன்றுபோக
நரையுரு மேறு நுங்கைவே லஞ்சு நும்மை
வரையர மங்கையர் வெளவுத லஞ்சுதும் வாரலையே"
(யாப்பருங்கலக்காரிகை. நூ. 30 உரை மேற்கோள்)

எனவும் வரும்.

ஆற்றுத் தன்மை யாற்றக் கூறற்குச் செய்யுள் :

" கலங்குந் தெளியுங் கனலெழ மூச்செறி யுங்கண்கணீர்
மலங்கும் பொலந்தொடி சோரமெய் சோரு மறஞ்செய்கொலை
விலங்கும் படிறுசெய் யாக்குன்ற நாட விரைந்தளிப்பா
யலங்குங் கடும்பரித் தேர்வாணன் மாறை யணங்கினையே"
(த. கோ. 243)

எனவரும்.

காவன்மிகவுரைத்தற்குச் செய்யுள் :

'' நஞ்சா ரரவந் திரிதரு கானடு நாளிரவில்
அஞ்சாது செங்கை யயில்விளக் காவணங் கின்பொருட்டான்
மஞ்சார் மதிற்றஞ்சை வாணன்வெற் பாவரல் வன்சொலன்னை
துஞ்சாள் கடுந்துடிக் கைநகர் காவலர் துஞ்சினுமே''

(த. கோ. 244)

எனவரும்.

காம மிகவுரைத்தற்குச் செய்யுள் :

" தென்னுக வண்டமிழ் வாணன்றென் மாறைச் செருந்தியுடன்
புன்னுக முங்கமழ் பூந்துறை வாசுரர் போற்றமிர்தம்
பின்னுக முன்வந்த பேதைதன் காமப் பெருங்கடற்கு
நின்னுக மன்றியுண் டோபுணை யாவது நீந்துதற்கே''

(த. கோ. 245)

எனவும்,

'' வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சார ரூட செவ்வியை யாகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே" (குறுந். 18)

எனவும் வரும்.

கனவு நலிபுரைத்தற்குச் செய்யுள் :

'' மாறாத தெவ்வென்ற வாணன்றென் மாறை வளநகர்போற்
பூணுக மெல்லியற் புல்லினை யாகவப் பொய்யைமெய்யாப்
பேணு மகிழ்ந்து பெருந்துயி லேற்றவள் பின்னைநின்னைக்
காணுள் கலங்கின ளாற்கலங் காமனக் காவலனே ''

(த. கோ. 246)

எனவும்,

"மின்னவிர் வயங்கிழை ஞெகிழச் சாஅய்
நன்னுதல் பசத்தல் யாவது துன்னிக்
கனவிற் காணு மிவளே
நனவிற் காணுனின் மார்பே தெய்யோ"

(ஐங்குறு. 234)

எனவும் வரும்.

கவினழி புரைத்தற்குச் செய்யுள்:

"ஏரேற்ற கொங்கை யிளங்கொடி மாந்தளி ரேய்ந்தவண்ணங்
காரேற்ற கங்குலிற் பீரலர் போன்றது காவியுண்கண்
வாரேற்ற பைங்கழல் வாணன்றென் மாறையில் வாவியின்கண்
நீரேற்ற செங்கழு நீர்மலர் போன்றது நின்பொருட்டே"

(த. கோ. 247)

எனவும்,

"தொடிபழி மறைத்தலிற் றேளுய்ந் தனவே
வடிக்கொள் கூழை யாயமோ டாடலி
னிடிப்பு மெய்யதொன் றுடைத்தே கடிக்கொள
அன்னை காக்குந் தொன்னலஞ் சிதையக்
காண்டொறுங் கலுழ்த லன்றியு மீண்டுநீர்
முத்துப்படு பரப்பிற் கொற்கை முன்றுறைச்
சிறுபா சடைய செப்பூர் நெய்தற்
றெண்ணீர் மலரிற் றுலைந்த
கண்ணே காமங் கரப்பரி யவ்வே"

(நற்றிணை. 23)

எனவும் வரும்.

இவற்றுள், வினவிய செவிலிக்கு மறைத்தமை விளம்பல் முதலாகப் பிறர்வரைவுணர்த்தல் ஈருகச் சொல்லப்பட்ட ஐந்தும் பொய்த்தற்குரிய; குறிபெயர்த்திடுதல் முதலாகப் பகலினும் இரவினும் அகலிவண் என்றல் ஈருகச் சொல்லப்பட்ட ஐந்தும் மறுத்தற்குரிய; உரவோன் நாடும் ஊரும் குலமும் மரபும் புகழும் வாய்மையும் கூறலாகிய ஒன்று கழறற்குரியது; வரைவெதிர் வுணர்த்தலும், வரையுநாளுணர்த்தலும், அறிவறிவுறுத்தலும்

ஆறுபார்த்துற்ற அச்சங்கூறலும், ஆற்ருத்தன்மை ஆற்றக்கூறலும் காவல் மிகவுரைத்தலும், காமம் மிகவுரைத்தலும், கனவு நலிபுரைத்தலும், கவினழிபுரைத்தலுமாகிய ஒன்பதும் மெய்த்தற் குரிய. (50)

## 16 ஒருவழித் தணத்தல்

ஒருவழித் தணத்தலின் வகை

167 செலவறி வுறுத்தல் செலவுடன் படாமை
செலவுடன் படுத்தல் செலவுடன் படுதல்
சென்றுழிக் கலங்கல் தேற்றியாற்று வித்தல்
வந்துழி நொந்துரை யென்றெழு வகைத்தே
யொன்றக் கூறிய வொருவழித் தணத்தல்.

(இ-ள்) செலவறிவுறுத்தல் முதலாக வந்துழி நோதல் ஈருக ஏழுவகையினை யுடைத்து மேற்சொல்லிய ஒருவழித் தணத்தல் என்றவாறு.

ஒருவழித் தணத்தலின் விரி

168 தன்பதிக் ககற்சி தலைவன் சாற்றலும்
மென்சொற் பாங்கி விலக்கலுந் தலைவன்
நீங்கல் வேண்டலும் பாங்கி விடுத்தலுந்
தலைவிக் கவன்செல வுணர்த்தலுந் தலைவி
நெஞ்சொடு புலத்தலுஞ் சென்ருேன் நீடலிற்
காமம் மிக்க கழிபடர் கிளவியுங்
கோற்றொடிப் பாங்கி யாற்றுவித் தலுமவன்
வந்தமை யுணர்த்தலும் வந்தோன் றன்னெடு
நொந்து வினுதலும் வெந்திறல் வேலோன்
பாங்கியொடு நொந்து வினுதலும் பாங்கி
யிறைவியை ஆற்றுவித் திருந்த வருமை
கூறலு மென்னு மாறிரு கிளவியு
மொருவழித் தணத்தலின் விரியெனப் படும்.

(இ-ம்) ஒருவழித்தணத்தலின் விரி உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) தன்பதிக்ககற்சி தலைவன் சாற்றல் முதலாகத் தலைவியைப் பாங்கி ஆற்றுவித்திருந்த அருமைகூறல் ஈறுகச் சொல்லப் பட்ட பன்னிரண்டு கிளவியும் ஒருவழித்தணத்தலின் விரி என்று சொல்லுவர் புலவர் என்றவாறு.

அவற்றுள், தன்பதிக்ககற்சி தலைவன் சாற்றற்குச் செய்யுள் :

"திரைகே தகைமணங் கூடுமெம் பாடியிற் சென்றுவந்தியான்
வரைகேன் வருந்துணை வல்லியை நீ தஞ்சைவாணன்செவ்வேல்
புரைகேழ் மதர்விழிக் தோங்கரும் பேர்முலைப் பூசல்வண்டு
நிரைகேச வஞ்சியஞ் சேலென்று தேற்றுத னின்கடனே"
(த. கோ. 248)

எனவரும்.

பாங்கி தலைமகனைச் செலவுவிலக்கற்குச் செய்யுள் :

"பறந்தாங் கிவர்பரித் தேர்கட வேலுன் பதியடைந்தான்
மறந்தாங் கமையவும் வல்லையன் பாதஞ்சை வாணனென்னர்
நிறந்தாங் கிவர்கணை போலுண்கண் மாமுகி னீர்மைகொண்டு
புறந்தாழ் கருங்குழல் வெண்முத்த வாணகைப் பொன்னினையே'
(த. கோ. 249)

எனவும்,

"விருவை யல்லை வாடைநனி கொடிதே
யருவரை மருங்கி ஞய்மணி வரன்றி
யொல்லென விழிதரு மருவிநின்
கல்லுடை நாட்டுச் செல்லல் தெய்யோ"
(ஐங்குறு. 233)

எனவும் வரும்.

தலைமகன் நீங்கல் வேண்டற்குச் செய்யுள்:

"அறையும் பொறையு மணந்தவெங் கானத் தணங்கையில்வைத்
திறையும் பிரிவதற் கெண்ணுகி லேனெண்ண லார்வரைமேன்
மறையும் படிவென்ற சந்திர வாணன்றென் மாறையில்வண்
டுறையுங் குழலிசென் றேவரல் வேண்டுமெம் மூரகத்தே"
(த. கோ, 250)

எனவரும்.

தலைமகனைப் பாங்கி விடுத்தற்குச் செய்யுள் :

''இல்லத் துறையு மிவள்பொருட் டானுமக் கியானுமொன்று
சொல்லத் தவிர்கிலன் சூழ்கழ லீர்சுடர் தோய்புரிசை
வல்லத் தமர்வென்ற வாணன்றென் மாறையில் வந்துவந்து
செல்லத் திருவுளம் வைத்தகல் வீர்நுந் திருநகர்க்கே''
(த. கோ. 251)

எனவரும்.

பாங்கி தலைவிக்கு அவன் செலவுணர்த்தற்குச் செய்யுள் :

''நிலவேய் தரள நிரைத்தன்ன வாணகை நீலநிறக்
குலவேய் நிகர்பொற் றொடிநெடுந் தோளி குறுகிவரச்
செலவே கருதினர் செந்தமிழ் வாணன் செழுங்கமலத்
தலவே தியன்பெறு நாள்பெற்று வாழ்பவன் தஞ்சையிலே''
(த. கோ. 252)

எனவும்,

''சாரற் பலவின் கொழுந்துணர் நறும்பழ
மிருங்கல் விடரளை வீழ்ந்தென வெற்பிற்
பெருந்தே னிறுஅல் கீறு நாடன்
பேரமர் மழைக்கண் கலிழத்தன்
சீருடை நன்னாட்டுச் செல்லு மன்னாய்''
(ஐங்குறு. 214

எனவும் வரும்.

தலைவி நெஞ்சொடு புலத்தற்குச் செய்யுள் :

''குளித்தா ரிளங்கொங்கை யாவியி லாவி குளிர்ப்பநம்மை
யளித்தா ரகலத் தணைத்தகன் றூரன் றணங்கின் முன்னே
தெளித்தார் செழுந்தஞ்சை வாணனென் னாரின சிந்தைநைய
வொளித்தா ரவரிங்ங னேநன்று நன்றிவ் வ பலே''
வற்டத. கோ, 253)

எனவும்,

''அளித்தஞ்ச லென்றவர் நீப்பிற் றெ தசொல்
தேறியார்க் குண்டோ தவறு'' (குறள். 1154)

எனவும் வரும்.

(இ - ள்) தன்பதிக்ககற்சி தலைவன் சாற்றல் முதலாகத் தலைவியைப் பாங்கி ஆற்றுவித்திருந்த அருமைகூறல் ஈறுகச் சொல்லப் பட்ட பன்னிரண்டு கிளவியும் ஒருவழித்தணத்தலின் விரி என்று சொல்லுவர் புலவர் என்றவாறு.

அவற்றுள், தன்பதிக்ககற்சி தலைவன் சாற்றற்குச் செய்யுள் :

"திரைகே தகைமணங் கூடுமெம் பாடியிற் சென்றுவந்தியான்
வரைகேன் வருந்துணை வல்லியை நீ தஞ்சைவாணன்செவ்வேல்
புரைகேழ் மதர்விழிக் கோங்கரும் பேர்முலைப் பூசல்வண்டு
நிரைகேச வஞ்சியஞ் சேலென்று தேற்றுத னின்கடனே"

(த. கோ. 248)

எனவரும்.

பாங்கி தலைமகனைச் செலவுவிலக்கற்குச் செய்யுள் :

"பறந்தாங் கிவர்பரித் தேர்கட வேலுன் பதியடைந்தான்
மறந்தாங் கமையவும் வல்லையன் பாதஞ்சை வாணனென்னுர்
நிறந்தாங் கிவர்கணை போலுண்கண் மாமுகி னீர்மைகொண்டு
புறந்தாழ் கருங்குழல் வெண்முத்த வாணகைப் பொன்னினையே"

(த. கோ. 249)

எனவும்,

"வீருவை யல்லை வாடைநனி கொடிதே
யருவரை மருங்கி ஞெய்மணி வரன்றி
யொல்லென விழிதரு மருவிநின்
கல்லுடை நாட்டுச் செல்லல் தெய்யோ"

(ஐங்குறு. 233)

எனவும் வரும்.

தலைமகன் நீங்கல் வேண்டற்குச் செய்யுள்:

"அறையும் பொறையு மணந்தவெங் கானத் தணங்கையில்வைத்
திறையும் பிரிவதற் கெண்ணுகி லேனெண்ண லார்வரைமேன்
மறையும் படிவென்ற சந்திர வாணன்றென் மாறையில்வண்
டுறையுங் குழலிசென் றேவரல் வேண்டுமெம் மூரகத்தே"

(த. கோ, 250)

எனவரும்.

தலைமகனைப் பாங்கி விடுத்தற்குச் செய்யுள் :

''இல்லத் துறையு மிவள்பொருட் டானுமக் கியானுமொன்று
சொல்லத் தவிர்கிலன் சூழ்கழ லீர்சுடர் தோய்புரிசை
வல்லத் தமர்வென்ற வாணன்றென் மாறையில் வந்துவந்து
செல்லத் திருவுளம் வைத்தகல் வீர்நுந் திருநகர்க்கே''
(த. கோ. 251)

எனவரும்.

பாங்கி தலைவிக்கு அவன் செலவுணர்த்தற்குச் செய்யுள் :

''நிலவேய் தரள நிரைத்தன்ன வாணகை நீலநிறக்
குலவேய் நிகர்பொற் றொடிநெடுந் தோளி குறுகிவரச்
செலவே கருதினர் செந்தமிழ் வாணன் செழுங்கமலத்
தலவே தியன்பெறு நாள்பெற்று வாழ்பவன் தஞ்சையிலே''
(த. கோ. 252)

எனவும்,

''சாரற் பலவின் கொழுந்துணர் நறும்பழ
மிருங்கல் விடரளை வீழ்ந்தென வெற்பிற்
பெருந்தே னிருஅல் கீறு நாடன்
பேரமர் மழைக்கண் கலிழத்தன்
சீருடை நன்னாட்டுச் செல்லு மன்னாய்''
(ஐங்குறு. 214

எனவும் வரும்.

தலைவி நெஞ்சொடு புலத்தற்குச் செய்யுள் :

''குளித்தா ரிளங்கொங்கை யாவியி லாவி குளிர்ப்பநம்மை
யளித்தா ரகலத் தணைத்தகன் றூரன் றணங்கின் முன்னே
தெளித்தார் செழுந்தஞ்சை வாணனென் னுரிள சிந்தைநைய
வொளித்தா ரவரிங்ங னேநன்று நன்றிவ் வ பலே''
க. கோ. 253)

எனவும்,

''அளித்தஞ்ச லென்றவர் நீப்பிற் றெ ந்சொல்
தேறியார்க் குண்டோ தவறு'' (குறள். 1154)

எனவும் வரும்.

சென்ருேன் நீடலிற் காமமிக்க கழிபடர்கிளவுக்குச் செய்யுள் :

'' மயிலாடு தண்டலை மாறை வரோதயன் வாணனென்ஞர்க்
கெயிலா கியகடற் கானலஞ் சேர்ப்பற் கிடையிருள்யான்
றுயிலா நிலையொன்றுஞ் சொல்லாய் துணையுடன்
சூழ்திரைத்தேன்
பயிலா மலரணை மேற்றுயி லாநிற்றி பாலன்னமே''

(த. கோ. 254)

எனவும்,

'' சிறுவெள்ளாங் குருகே சிறுவெள்ளாங் குருகே
துறைபோ கறுவைத் தூமடி யன்ன
நிறங்கிளர் தூவிச் சிறுவெள்ளாங் குருகே
யெம்மூர் வந்தெம் மொண்டுறைத் துழைஇச்
சினக்கெளிற் ருர்கையை யவரூர்ப் பெயர்தி
யனையவன் பிணையோ பெருமற வியையோ
ஆங்கட் டீம்புன லீங்கட் பரக்கும்
கழனி நல்லூர் மகிழ்நர்க்கென்
இழைநெகிழ் பருவரல் செப்பா தோயே ''

(நற்றிணை. 70)

எனவும் வரும்.

தலைவியைப் பாங்கி ஆற்றுவித்தற்குச் செய்யுள் :

'' ஆடுகம் வாநம் மகன்றவ ரூரக லாப்புதுநீர்
பாடுகம் வாபொற் பசலைதந் தார்திறம் பாங்கினெல்லாந்
தேடுகம் வாதஞ்சை வாணனன் ஞட்டன்பர் தேர்வழிநாஞ்
சூடுகம் வாகவ லாதவர் கானற் றுறைமலரே ''

(த. கோ. 255)

எனவும்,

'' கானல பருந்துறைக் கலிதிரை திளைக்கும்
வானு நடுமணை லேறி யானது
காண்கட ம்மோ தோழி
செறிவளை நெகிழ்த்தோ னெறிகட ஞடே ''

(ஐங்குறு. 199)

எனவும் வரும்.

பாங்கி தலைமகட்குத் தலைமகன் வந்தமை உணர்த்தற்குச் செய்யுள் :

''பண்ணுங் குழலும் பழித்தசொற் பாவை பரியலெல்லா
மண்ணும் புகழ்தஞ்சை வாணனென் னுரெனை மைக்குவளைக்
கண்ணுங் கனையிருட் கங்குலு மாரன் கணைகள்பட்ட
புண்ணும் புலரவந் தார்தம தூர்வயிற் போனவரே''

(த கோ. 256)

எனவும்,

'' அம்ம வாழி தோழி நம்மலை
நறுந்தண் சிலம்பி னுறுகுலைக் காந்தட்
கொங்குண் வண்டிற் பெயர்ந்துபுற மாறிநின்
வன்புடை விறற்கவின் கொண்ட
வன்பி லாளன் வந்தன னினியே'' (ஐங்குறு. 226)

எனவும் வரும்.

வந்தோன் றன்னொடு பாங்கி நொந்து வினுதற்குச் செய்யுள்:

''ஒருதலைக் கெய்திய கல்லதர்க் குச்செல்ல வோருயிர்த்தா
யிருதலைப் புள்ளி னியைந்தநுங் கேண்மையை
யெண்ணியெம்மூர்
வருதலைக்கொண்க நினைந்திலை வாணன்றென் மாறைவண்டு
பொருதலைக் குங்குழ லாளழ நீகண்டு போயபின்னே''

(த. கோ. 257)

எனவும்,

'' யாங்குவல் லுநையோ வோங்கல் வெற்ப
விரும்பல் கூந்தற் றிருந்திழை யரிவை
திதலை மாமை தேயப்
பசலை பாயப் பிரிவு தெய்யோ''

(ஐங்குறு. 231)

எனவும் வரும்.

தலைவன் பாங்கியொடு நொந்து வினைதற்குச் செய்யுள்:

''ஐவா யரவுற்ற தன்னவின் னவிட ராற்றியென்போல்
எவ்வா றிருந்திர்நீ ரெல்வளை யீரெதிர்ந் தாரைவென்று
மைவா ரணங்கொண்ட வாணன்றென் மாறை மருவலர்போல்
ஒவ்வா வலரையுங் கேட்டிரு வீரு மொருதனியே''

(த. கோ. 258)

எனவரும்.

பாங்கி தலைவியை ஆற்றுவித்திருந்த அருமை தலைமகற்குச் சொல்லற்குச் செய்யுள்:

''இவளா ருயிர்புரந் தியானிருந் தேன்செக்க ரிந்துவன்னப்
பவளா டவியிற் பயினித் திலம்பங்க யங்குவியத்
தவளா தவஞ்சொரி தண்டுறை வாதஞ்சை வாணன்றெவ்வின்
றுவளாமலாற்றுவி யென்றன்று நீ சொன்ன சொன்னினைந்தே''

(த. கோ. 259)

எனவும்,

''போதார் கூந்த லியலணி யழுங்க
வேதி லாட்டியை நீபிரிந் ததற்கே
யழலவிர் மணிப்பூ ணணையப்
பெயலா னவென் கண்ணே தெய்யோ''

(ஐங்குறு. 232)

எனவும் வரும்.

இவற்றுள், தன்பதிக்ககற்சி தலைவன் சாற்றலும், பாங்கி தலைவிக்கு அவன் செலவுணர்த்தலுமாகிய இரண்டும் செலவறிவுறுத்தற்குரிய; தலைமகனைப் பாங்கி விலக்கலாகிய ஒன்றும் செலவுடன் படாமைக்குரித்து; தலைவன் நீங்கல் வேண்டலாகிய ஒன்றும் செலவுடன் படுத்தற்குரித்து; தலைமகனைப் பாங்கி விடுத்தலாகிய ஒன்றும் செலவுடன்படுதற்குரித்து; தலைமகன் நெஞ்சொடு புலத்தலும், காமமிக்க கழிபடர் கிளவியுமாகிய இரண்டும் சென்றுழிக் கலங்கற்குரிய; தலைமகனைப் பாங்கி ஆற்றுவித்தலும், தலைமகன் வந்தமை தலைமகட் குணர்த்தலுமாகிய இரண்டும் தேற்றியாற்றுவித்தற்குரிய; பாங்கி வந்தோன்றன்னொடு நொந்து வினைதன் முதலாகிய மூன்றும் வந்துழி நொந்துரைத்தற்குரிய. (52)

## 17 வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவு

வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதலின் வகை

169 பிரிவறி வுறுத்தல் பிரிவுடன் படாமை
பிரிவுடன் படுத்தல் பிரிவுடன் படுதல்
பிரிவுழிக் கலங்கல் வன்புறை வன்பொறை
வருவுழிக் கலங்கல் வந்துழி மகிழ்ச்சியென்
றெருமையிற் கூறிய வொன்பது வகைத்தே
வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவே.

(இ-ம்) வரைவிடைவைத்துப் பொருள்வயிற்பிரிவு ஆமாறுணர்த்துதல் நுதலிற்று.

(இ—ள்) பிரிவறிவுறுத்தல் முதலாக வந்துழி மகிழ்ச்சி ஈருக ஒன்பது வகையினையுடைத்தாம் வரைவிடைவைத்துப் பொருள் வயிற்பிரிதல் என்றவாறு. (53)

வரைவிடைவைத்துப் பொருள்வயிற் பிரிதலின் விரி

170 என்பொருட் பிரிவுணர்த் தேந்திழைக் கென்றலும்
நின்பொருட் பிரிவுரை நீயவட் கென்றலும்
நீடே னென்றவ னீங்கலும் பாங்கி
யோடரிக் கண்ணிக் கவன்செல வுணர்த்தலும்
பூங்குழை யிரங்கலும் பாங்கி கொடுஞ்சொற்
சொல்லலுந் தலைவி கொடுஞ்சொற் சொல்லலும்
வருகுவர் மீண்டெனப் பாங்கி வலித்தலும்
பருவங் கண்டு பெருமகள் புலம்பலும்
இகுளைவம் பென்றலும் இறைமகள் மறுத்தலும்
அவர்தூ தாகிவந் தடைந்ததிப் பொழுதென
துணைவி சாற்றலும் பிணைவிழி யாற்றலும்
அவனவண் புலம்பலு மவன்வருங் காலைப்
பாகன் றன்னொடும் மேகந் தன்னொடும்
சோகங் கொண்டவன் சொல்லலும் பாங்கி
வலம்புரி கேட்டவன் வரவறி வுறுத்தலும்
வலம்புரி கிழத்தி வாழ்த்தலும் வந்துழி

நினைத்தமை வினுதலும் நினைத்தமை செப்பலும்
அனைத்தகை அவளை ஆற்றுவித் திருந்தமை
பாங்கிகூ றலுமென வாங்கெழு மூன்றும்
வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவின்
விரியென விளம்பினர் தெரிமொழிப் புலவர்.

(இ - ம்) வரைவிடைவைத்துப் பொருள்வயிற் பிரிவின் விரியாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) என் பொருட் பிரிவுணர்த்தேந்திழைக்கென்றல் முதலாகத் தலைமகளை யாற்றுவித்திருந்தமை பாங்கி கூறல் ஈருகச் சொல்லப்பட்ட இருபத்தொன்றும், வரைவிடை வைத்துப் பொருள் வயிற் பிரிவின் விரியென மொழிந்தனர் ஆராய்ந்தறிந்தோர் என்றவாறு.

அவற்றுள்,

என்பொருட் பிரிவுணர்த்தேந்திழைக்கென்றற்குச் செய்யுள்:

"கழைபோல் வளர்நெற் கவின்பெற வாரி கவர்ந்துவரும்
மழைபோல் வருகுவன் வன்சுரம் போய்த்தஞ்சை வாணன்வெற்பில்
இழைபோ லிடையாண் முலைவிலைக் காவன யாவையுங்கொண்
டுழைபோ லரிநெடுங் கண்மயி லேசென் றுணர்த்திதுவே"
(த. கோ. 260)

எனவரும்.

பாங்கி நின்பொருட்பிரிவுரை நீயவட்கென்றற்குச் செய்யுள்:

"வசையும் புகழுநின் மேலன வாந்தஞ்சை வாணன்வெற்பா
மிசையுங் கரும்பினில் வேம்புவைத் தாலன்ன வேட்கையெல்லாத்
திசையும் பரவுந் திருவனை யாடன் றிருவுளத்துக்
கிசையும் படிவல்லை யேற்சொல்லி நீபின் னெழுந்தருளே"
(த. கோ. 261)

எனவும்,

''இறவுப்புறத் தன்ன பிணர்படு தடவுமுதற்
சுறவுக்கோட் டன்ன முள்ளிலைத் தாழை
பெருங்களிற்று மருப்பி னன்ன வரும்புமுதிர்பு
நன்மா ணுழையின் வேறுபடத் தோன்றி
விழவுக்களங் கமழு முரவுநீர்ச் சேர்ப்ப
இனமணி நெடுந்தேர் பாகனியக்கச்
செலீஇய சேறி யாயி னிவளே
வருவை யாகிய சின்னாள்
வாழா ளாதனற் கறிந்தனை சென்மே'' (நற்றிணை. 19)

எனவும் வரும்.

நீடேனென்று அவன் நீங்கற்குச் செய்யுள்:

''காலைப் பொழுது கடும்பரித் தேர்பண்ணிக் கானகம்போய்
மாலைப் பொழுது வருகுவல் யான்றஞ்சை வாணனன்னாட்
டாலைப் பழன மணிந்தவெம் மூர்நும் மகங்குளிரச்
சோலைப் பயில்குயில் போன்மொழி யாயென் றுணிவிதுவே''
(த. கோ. 263)

எனவும்,

''இன்றே சென்று வருவது நாளைக்
குன்றிழி யருவியின் வெண்டேர் முடுக
விளம்பிறை யன்ன விளங்குசுடர் நேமி
விசும்புவீழ் கொள்ளியிற் பைம்பயிர் துமிப்பக்
காலியற் செலவின் மாலை யெய்திச்
சின்னிரை வால்வளைக் குறுமகள்
பன்மா ணாகம் மணந்துவக் குவமே'' (குறுந். 189)

எனவும் வரும்.

பாங்கி தலைமகட்குத் தலைமகன் செலவுணர்த்தற்குச் செய்யுள்:

''வில்லேய் குறும்பு மிறும்புமெவ் வாயும் விராயவெவ்வாய்க்
கல்லேய் கவலைக் கடங்கடந் தார்நமர் காய்ந்தெதிர்ந்தார்
செல்லேய் முரசச் செருவென்ற வாணன்றென் மாறையினின்
வல்லேய் முலைவிலை தான்தந்து நாளை மணம்பெறவே''
(த. கோ. 263)

எனவரும்.

தலைமகள் இரங்கற்குச் செய்யுள் :

"இப்பே ருவகை யினிப்பிரி யேனென்று மென்முன்சொன்ன
அப்பே ருரைபழு தாமென்ன வேயர வஞ்சுமந்த
மைப்பே ரலைகடல் வையகந் தாங்கிய வாணன்றஞ்சைச்
செப்பே ரிளங்கொங்கை மங்கைசெப் பாதன்பர் சென்றதுவே"
(த. கோ. 264)

எனவும்,

"செல்வா ரல்லரென் றியானிகழ்ந் தனனே
ஒல்வா ளல்லளென் றவரிகழ்ந் தனரே
யாயிடை, யிருபே ராண்மை செய்த பூசல்
நல்லராக் கதுவி யாங்கென்
அல்ல னெஞ்ச மலமலக் குறுமே" (குறுந். 43)

எனவும் வரும்.

பாங்கி கொடுஞ்சொற் சொல்லற்குச் செய்யுள் :

"ஆரணத் தானருள் பாரளித் தானடங் காதவரை
வாரணத்தால்வென்ற வாணன்றென் மாறை வயங்கொளி சேர்
பூரணத் தார்மதி போன்முகத் தாயென் புலம்புதிநின்
காரணத் தாலல்ல வோபிரிந் தாரின்று காதலரே"
(த கோ. 265)

எனவரும்.

தலைவி கொடுஞ்சொற் சொல்லற்குச் செய்யுள் :

"மண்டுந் திரைவையை சூழ்தஞ்சை வாணற்கு வன்புலியுஞ்
செண்டுங் கொடுத்தகல் செம்பியர் போலன்பர் சென்றுழிமுன்
இரண்டுங் கழையும் பயிலும்வெங் கானியல் கேட்டுமிந்நோய்
கண்டுங் கலங்கல்செல் லாதிந்த வூரெற் கழறனன்றே"
(த. கோ. 266)

எனவும்,

" எறும்பி யளையிற் குறும்பல் சுனைய
உலைக்க லன்ன பாறை யேறிக்
கொடுவி லெயினர் பகழி மாய்க்குங்
கவலைத் தென்பவவர் தேர்சென்ற வாறே
யதுமற் றவலங் கொள்ளாது
நொதுமலர்க் கழறுமிவ் வழுங்க லூரே" (குறுந். 12)

எனவும் வரும்.

வருகுவர் மீண்டெனப் பாங்கி வலித்தற்குச் செய்யுள்:

" தேர்த்தானை வாணன்றென் மாறைமின் னேயஞ்சல் செம்புருக்கி
வார்த்தா லனைய வழிநெடும் பாலை மடப்பெடைநோய்
பார்த்தா தவந்தணி பாதவ மின்மையிற் பைஞ்சிறகாற்
போர்த்தாலு மஞ்ஞைகண் டும்போவ ரோநம் புரவலரே"
(த. கோ. 267)

எனவும்,

" நசைபெரி துடையர் நல்கலு நல்குவர்
பிடிபசி களைஇய பெருங்கை வேழம்
மென்சினை யாஅம் பிளக்கும்
அன்பின தோழியவர் சென்ற வாறே" (குறுந். 37)

எனவும் வரும்.

பருவங் கண்டு பெருமகள் புலம்பற்குச் செய்யுள்:

" மிகவும் பரந்த கரியகண் ணீர்செங்கை வெள்வளைபோல்
உகவுந் துறந்தவ ருன்னல ராலுறை கார்பொழிய
மிகவுந் துணையுங் கலைதழு வுந்தஞ்சை வாணன்வெற்பின்
அகவும் பெடைமயி லுந்தமி யேனெங்ஙன் ஞற்றுவலே"
(த. கோ. 268)

எனவும்,

" அணிநிற மஞ்ஞை யகவ விரங்கி
மணிநிற மாமலைமேற் றூழ்ந்து - பணிமொழி
கார்நீர்மை கொண்ட கலிவானங் காண்டொறும்
பீர்நீர்மை கொண்டன தோள்" (ஐந்திணை. ஐம். 2)

எனவும் வரும்.

இகுளை வம்பென்றற்குச் செய்யுள் :

'தளஞ்சேர்ந்த வஞ்சிநின் சாயல்கண் டஞ்சித் தனித்தனிபோய்
வனஞ் சேர்ந் தயர்ந்த மயில்களெல் லாந்தஞ்சை
வாணன்வெற்பிற்
கனஞ்சேர்ந் தலர்துளி காலுமுன் னேவம்பு காலுமென்னு
இனஞ்சேர்ந் தகவின நாந்தனி வாடி யிருத்தல்கண்டே''
(த. கோ. 269)

எனவும்,

"மடவ வாழி மஞ்ஞை மாயினங்
கால மாரிபெய்தன வதனெதிர்
ஆலலு மாலின பிடவும் பூத்தன
காரன் றிகுளை தீர்கநின் படரே
கழிந்த மாரிக் கொழிந்த பழநீர்
புதுநீர் கொளீஇய வுகுத்தரும்
நொதுமல் வானத்து முழங்குகுரற் கேட்டே''
(குறுந். 251)

எனவும் வரும்.

இறைமகள் மறுத்தற்குச் செய்யுள் :

"வாவித் தகையன்ன மேதஞ்சை வாணன் வரையகத்தென்
பாவித் தனிநெஞ்சு பார்த்தஞ்சு மேகண் பயின்றகண்ணார்
தூவித் தளைமயில் கோபங்கொள் ளாவரத் தோன்றியைச்சேர்ந்
தாவித் தகந்தள ரும்மணி காலு மராவென்னவே''
(த. கோ. 270)

எனவும்,

"செல்வச் சிருஅர் சீறடிப் பொலிந்த
தவளை வாய பொலஞ்செய் கிண்கிணிக்
காசி னன்ன போதீன் கொன்றை
குருந்தோ டலம்வரும் பெருந்தண் காலையங்
காரன் றென்றி யாயிற்
கனவோ மற்றிது வினவுவல் யானே'' (குறுந். 148)

எனவும் வரும்.

அவர் தூதாகி வந்தடைந்தது இப்பொழுதெனத் துணைவி சாற்றற்குச் செய்யுள் :

'' இன்னே வருவர்நின் காதல ரேதில ரேங்கவினிக்
கொன்னே யிரங்கி வருந்தல்கண் டாய்கொற்ற நேமிவிந்தை
மன்னே யெனவந்த வாணன்றென் மாறை வரவுணர்த்த
முன்னே நடந்தன காண்கடுங் கால முகிலினமே ''

(த. கோ. 271)

எனவும்,

'' கடுங்கதிர் நல்கூரக் கார்செல்வ மெய்த
நெடுங்காடு நேர்சினை யீனக் – கொடுங்குழாய்
இன்னே வருவர் நமரென் றெழில்வானம்
மின்னு மவர்தூ துரைத்து '' (கார். நாற். 2)

எனவும் வரும்.

தலைமகளாற்றற்குச் செய்யுள் :

'' இன்புற்ற காலத் திருவர்க்கு மொன்றுயி ரென்றுசொன்னர்
அன்புற்ற காதல ராதலி னுலகன் றுரெனநாந்
துன்புற்ற காலத் தவருமு ரூரல்லர் தோழிசொல்லும்
வன்புற்ற காரளிக் குந்தஞ்சை வாணன்றென் மாறையிலே ''

(த. கோ. 272)

எனவரும்.

அவன் அவண் புலம்பற்குச் செய்யுள் :

'' விழிகுழி யும்படி தேர்வழி பார்த்தெனை வீழ்ந்துவண்டு
கொழுதிமி ருங்குழல் சோரக் கிடந்து குடங்கையின்மேல்
ஒழுகிய வஞ்சன வெள்ளத் துணங்கு மணங்கைமுன்சென்
றெழுகெனு நெஞ்சமென் னேயவ ரோவெனி லென்சொலுமே ''

(அம்பிகாபதி. கோ. 320)

எனவும்,

"வளைபடு முத்தம் பரதவர் பகருங்
கடல்கெழு கொண்கண் காதன் மடமகள்
கெடலருந் துயர நல்கிப்
படலின் பாயல் வெளவி யோளே" (ஐங்குறு. 195)

எனவும் வரும்.

மீண்டு வருகின்ற காலத்துத் தலைமகன் பாகனொடு சொல்லற்குச் செய்யுள் :

"வன்மா முடுக வலவதிண் டேரினி வாணன்றஞ்சைக்
கென்மா லுறுநெஞ்சின் முன்செல நாகிள வேறுபுல்லிப்
பொன்மா மணியும் பிரிந்திருந் தாரும் புலம்பமன்றிற்
சென்மாலை யந்திகண் டாற்றரி யாளென் றிருந்திழையே"
(த. கோ. 274)

எனவும்,

"பெரும்புன் மாலை யானது நினைஇ
யரும்பட ருழத்தல் யாவ தென்றும்
புல்லி யாற்றுப் புரையோட் காண
வள்புதெரிந் தூர்மதி வலவநின்
புள்ளியற் கலிமாப் பூண்ட தேரே" (ஐங்குறு. 486

எனவும் வரும்.

தலைமகன் மேகத்தொடு சொல்லற்குச் செய்யுள் :

"வேண்டும் பொருளைத் தரும்பொருட் போய்முற்றி
மீண்டவென்றோர்
தூண்டும் பரிமுன் றுணைமுகில் காள்சென்று
சொல்லுமிந்து
தீண்டுங் கொடிமதில் சூழ்தஞ்சை வாணனைச்
சேரலர்போல்
ஈண்டும் பசலைமெய் போர்த்திருப் பார்தமக்
கென்வரவே" (த. கோ. 275)

எனவரும்.

பாங்கி வலம்புரி கேட்டு அவன் வரவறிவுறுத்தற்குச் செய்யுள்:

"பொருகின்ற செங்கயல் போல்விழி யாய்பண்டு போயநின்கைக்
குருகின் றணிந்திறை கொள்வது காண்கநங் கொண்கர்
பொற்றேர்
தருகின்ற சங்கத் தருவன்ன வாணன் றமிழ்த்தஞ்சைவாய்
வருகின்ற தென்றுமுன் னேயோகை கூறும் வலம்புரியே"
(த. கோ. 276)

எனவும்,

"அயலின் மூதாய் பரப்ப வினமரீஇக்
கோவல ரூதுங் குழலிரங்கக் கோபந்
தவழக்கார் செய்தன்று தையலாய் வந்தார்
இமிழப் படுஞ்சங் கொலி"

எனவும் வரும்.

வலம்புரி கிழத்தி வாழ்த்தற்குச் செய்யுள் :

"மால்வண் டெனமன்னி வாணன்றென் மாறைமன் னன்புகழே
போல்வண் டமிழ்மன்னர் போற்ற விளங்குக பொன்
கொழிக்குங்
கால்வண்டல் வையைக் கரைமல்கு மல்லிகைக் கான்முகையின்
மேல்வண் டிருந்தது போற்கரு மாமுக வெண்சங்கமே"
(த. கோ. 277)

எனவும்,

"புரிவளை வான்கோடே புத்தேளொ டொத்தி
திருவமர் மார்பனு மேந்திறன் றம்மு
னுருவம் புரையுநின் கேழ்"

எனவும் வரும்.

தலைமகன் வந்துழிப் பாங்கி நினைத்தமை வினாதற்குச் செய்யுள் :

"நினையீர் பொருட்குப் பிரிந்தய ஞட்டுழி நின்றுழிவேள்
அனையீர் நினைந்து மறிதிர்கொல் லோவஞ்சொ லாலறிவோர்

வணையீ ரிதழ்க்கண்ணி வாணன்றென் மாறையை
வாழ்த்தலர்போ
னணையீ ரிதழ்க்கண்வை காவெவ்வ நோயுற்ற நவ்வியையே''
(த. கோ. 278)

எனவரும்.

தலைமகன் நினைத்தமை செப்பற்குச் செய்யுள் :

''கானெடுங் குன்றங் கடந்துசென் றேனொரு காலுமைதோய்
மானெடுங் கண்ணி மறந்தறி யேன்வண்கை வாணன்றஞ்சை
நீனெடும் பெண்ணைக் குரும்பையுஞ் சூது நெருங்குகொங்கைத்
தேனெடுங் கண்ணிமென் பூங்குழன் மாதர் திருமுகமே''
(த. கோ. 279)

எனவரும்.

தலைமகளை ஆற்றுவித்திருந்த அருமை பாங்கி கூறற்குச் செய்யுள் :

''உயரா மலகத் தருங்கனி நீர்நசைக் குண்சுரம்போய்
வியராம லில்லின் விடுத்தகன் றுளேமென் பூஞ்சிலம்பா
அயராம லஞ்சலென் றுற்றுவித் தேனிவ் வவனியெல்லா
மயராமல் வந்த பிரான்றஞ்சை வாணன்றென்
மாறையிலே''
(த. கோ. 280)

எனவரும்.

இவற்றுள், என்பொருட் பிரிவுணர்த் தேந்திழைக் கென்றலும், பாங்கி தலைவிக்கு அவன் செலவுணர்த்தலுமாகிய இரண்டும் பிரிவறிவுறுத்தற்குரிய; பாங்கி நின்பொருட்பிரிவுரை நீயவட் கென்றலாகிய ஒன்றும் பிரிவுடன்படாமைக்குரித்து; நீடேனென் றவனீங்கலாகிய ஒன்றும் பிரிவுடன் படுத்தற்கும் பிரிவுடன் படுதற்கு முரித்து; தலைமகள் இரங்கலும், பாங்கி கொடுஞ்சொற் சொல்லலும், பருவங்கண்டு பெருமகள் புலம்பலும், இறைமகள் மறுத்தலும், அவனவண் புலம்பலுமாகிய ஐந்தும் பிரிவுழிக் கலங்கற்குரிய; தலைவி கொடுஞ்சொற் சொல்லலும், வருகுவர்

மீண்டெனப் பாங்கி வலித்தலும், இகுளை வம்பென்றலும், அவர் தூதாகி வந்தடைந்ததிப்பொழுதென்றலுமாகிய நான்கும் வன்புறைக்குரிய; தலைமகளாற்றலாகிய ஒன்றும் வன்பொறைக்குரித்து; தலைமகன் மீண்டுவருங்காலைப் பாகன்றன்னொடு சொல்லலும், மேகந்தன்னொடு சோகங்கொண்டவன் சொல்லலுமாகிய இரண்டும் வரும்வழிக் கலங்கற்குரிய; பாங்கி வலம்புரி கேட்டு அவன் வரவறிவுறுத்தல் முதலாகிய ஐந்தும் வந்துழி மகிழ்ச்சிக் குரிய எனக் கொள்க. (54)

# களவியல் - விளக்கம்

நூற்பா எண்

117. ‘உளமலி காதற்களவு’ — உள்ளம் மகிழ்வதற்குக் காரணமாகிய அன்பினையுடையது களவு.

‘ஒரு நான்கு வேதத் திருநான்கு மன்றல்’— ஒரு நான்கு வேதம் : இருக்கு, யசுர், சாமம், அதர்வணம்.

இருநான்கு மன்றல் — வேதத்தில் கூறப்பட்ட மண முறைகள் எட்டு ; அவை :

1) பிரமம்
2) பிரசாபத்தியம்
3) ஆரிடம்
4) தெய்வம்
5) காந்தருவம்
6) அசுரம்
7) இராக்கதம்
8) பைசாசம்

கைக்கிளைக்குரியன : அசுரம், இராக்கதம், பைசாசம்.

பெருந்திணைக்குரியன : பிரமம், பரசாபத்தியம், ஆரிடம், தெய்வம்.

அன்பின் ஐந்திணைக்குரியது: காந்தருவம்.

119. பால் — பக்கம். ஈண்டு ஊழ் என்ற பொருளுள் ஆளப் பட்டுள்ளது.

121. வல்லி — தொய்யிற்கொடி.

122. அரிவை நாட்டம் — தலைமகளது பார்வை.

125. ஏற்புற அணிதல் — தலைவிக்குப் பொருந்தும்படியாக அணிகலன்களை அணிதல்.

127. 'இரந்து பின்னிற்றற் கெண்ணல்'

பின்னிற்றல் — இதஞ் சொல்லுதல் (மனம் மகிழக் கூறல்).

தலைவன் தலைவியை இரந்து அவள் மனம் மகிழும்படி சில சொற்கள் கூற எண்ணுதல்.

இரந்து பின்னிலை நிற்றல் :—

தலைவியை இரந்து மனம் மகிழக் கூறி நிற்றல் இரந்து பின்னிலை நிற்றல்.

மெய்தொட்டுப் பயிறல் :—

தலைவன், தலைவி மெய்யினைத் தீண்டி நெருங்குதல். தலைவி தன் மெய்யைத் தலைவன் தொட இடங்கொடுத்தால் நாணம் இலாதவள் ஆவள். நாணுடையாளெனின் தொடுதலாகிய செயல் இல்லை. நாண் நீங்குதலும் கூடாது. தொடுதலும் நிகழ வேண்டும். இந்நிலையில் அவள் புனலோடும் வழிப்புல் சாய்ந்தது போலக் கிடப்ப, வேட்கை மீதூரப்பட்டு நாணம் ஒருபாற் சாய்ந்து கிடப்ப, அக்காலத்தில் தலைவன் தீண்டற்கஞ்சிக் குழலில் வண்டையோட்டுவது போல நெருங்கி வண்டையோட்டு கையில் கைபட்டது போலத் தொடுதல். இதனால் தலைவனுக்கு ஊற்றின்பம் ஏற்படும். தலைவிக்கு நாணைத் தன்வசப்படுத்த இயலும்.

'பயிறல்' என்பதற்குப் பழகுதல் என்று பொருள் கொள்வாரு முளர். தலைவன் தலைவியை நெருங்கி நிற்றல் பழகுதலாகும். 'மெய்தொட்டுப் பயிறல்' என்பதற்கு நச்சினார்க்கினியர் புலையன் கைப்பட்ட தீம்பால் போலத் தலைவி மனங்கொண்டும் கொள்ளா மலும் இருக்கின்ற காலத்தே தொட்டான் என்று உரை கூறுவர். கோவைநூல்கள் இதனை 'வண்டோச்சி மருங்கணைதல்' என்று மறுபெயரிட்டும் வழங்குகின்றன.

**இடம்பெற்றுத் தழா அல்:—**

தழா அல் — தழுவுதல்.

தலைவன், தலைவி நிற்குமிடத்திற்கு அருகேயுள்ள மணங்கமழும் சோலையைக் கண்டு, அவ்விடத்துத் தலைவியைத் தழுவ விரும்பிக் கூறுதல்.

**இடையூறு கிளத்தல்:—**

தலைவி நாணங்கொண்டு தன் கண்களை மறைத்துக் கொண்டதனால் எழுந்த துன்பத்தைத் தலைவன் கூறுதல்.

**வறிதுநகை தோற்றல்:—**

வறிது — சிறிது. தொல்காப்பிய உரியியல் நூற்பா 'வறிது சிறிதாகும்' எனக் கூறுகிறது. தலைவி முகத்தே சிறுநகை தோற்றல் வறிதுநகை தோற்றலாகும்.

**முயங்குதலுறுத்தல்:—**

முயங்குதல் — தழுவுதல்

தலைவி தழுவுதற்குடன்பட்ட அருமையினை வலியுறுத்திக் கூறுதல்.

**129. அணிந்துழி நாணியதுணர்ந்து தெளிவித்தல்:—**

புணர்தல் நிகழ்வதற்கு முன் தலைவி தன் கொங்கை குழல் முதலியவற்றில் அணிந்திருந்த முத்துமாலை போன்ற அணிகள், புணர்ச்சியினால் வேறுபட்டதனைத் தலைவன் தன் கையினால்

வேறுபாடு தோன்றாமல் அணிவன்; அவ்வழித் தலைவி தோழியால் அணியப்பட்ட அணி இவர் கையால் அணியும்போது வேறுபடு மென்றும், இவ்வேறுபாட்டைத் தோழி அறிந்தால் ஐயம் பிறக்கு மென்றும், நாணமடைந்து முகம் வேறுபடுவள்; அவ்வேறுபாட்டை அறிந்து தலைவன் தலைவியைத் தெளிவிப்பன்.

தெய்வத்திறம் பேசல் :--

தெய்வமென்பது ஈண்டு ஊழ்; தலைவன் பலவாறு கூறியும் தலைவி தெளியாவிடத்து ஊழ்வலியினது திறங்கூறுதல்.

பெருநயப்புரைத்தல் :—

தலைவனால் கிடைத்த கூட்டம் மீண்டும் எய்துமோ? மீண்டும் இவன் வருவானோ? வாராதொழிவானோ? என்று நினைந்து தலைவி முகம் வேறுபட, தலைவன் அதனைக் குறிப்பால் உணர்ந்து தனது மிகுந்த காதலையுரைத்தல்.

இடமணித்தென்றல்:—

தலைவனது ஊர் சேய்மைக்கண் உளதோ, அணிமைக்கண் உளதோ என்று தலைமகள் கவலைப்பட, அதனைக் குறிப்பினாலறிந்த தலைவன் இடம் அணிமைக் கண்ணே உளதென்று கூறுதல்.

132. மருளுற்றுரைத்தல் — மயங்கிக் கூறுதல்.
தெருளுற்றுரைத்தல் — தெளிந்து கூறுதல்.

133. ஆயவெள்ளம் வழிபடக்கண்டு இது மாயமோ வென்றல் :—

ஆயவெள்ளம் — தோழியர் கூட்டம்.

தலைவியைத் தோழியர் கூட்டம் வழிபடுதலைக் கண்டு, இத்தகைய தோழியரிடையே யுள்ளாள் என்னைத் தனித்து வந்து கூடியது என்ன மாயமோவென்று மயங்கிக் கூறுதல்.

வாயில் பெற்றுய்தல் :—

வாயில் — தூது.

தலைவி தோழியர் கூட்டத்திற் செல்லுங்காலை உயிர்த் தோழி முகத்தை நோக்கிச் செல்ல, அதனையறிந்து அவ்வுயிர்த் தோழியைத் தலைவன் தூதாகப் பெற்று உய்வதாகக் கூறுதல்.

பயந்தோர்ப் பழிச்சல்:—

தலைவியைப் பெற்ற பெற்றோரைத் தலைவன் வாழ்த்துதல்.

135. முந்துறக் காண்டல்:— தலைவி முன்நாளில் அழகே உருக்கொண்டு தோழியர் கூட்டத்திற்கிடையே நின்ற அதே நிலையை மீண்டும் முன்போலக் காண்பது முந்துறக் காண்டல்.

137. கிழவோற் பழித்தல்:— பாங்கன் கூறிய இடிப்புரையைத் தலைவன் மறுத்துக்கூறப் பாங்கன் அவனைப் பழித்துக் கூறுவது.

பாங்கன் தன் மனத்தழுங்கல் :—

தலைவன், தலைவிபால் கொண்ட வேட்கையை ஆற்றாது கூற, பாங்கன் தான் இதற்கு என்சொல்லுவேனென்று தன்னுள்ளே இரங்குதல்.

இகழ்ந்ததற்கிரங்கல் :—

தலைவியின் பேரெழிலைக் கண்ட பாங்கன் 'தலைவியைக் காணு முன் அறிவின்றி இகழ்ந்தோமே' என்றிரங்கிக் கூறுதல்.

139. நாற்றம்:— தலைவியிடத் தேற்படும் முன்பில்லாததோர் புதிய மணம்.

தோற்றம் :— தலைவனோடு கூடியதால் பிறப்பதோர் புதிய அழகு.

ஒழுக்கம் :— கன்னிப் பெண்ணாக இருந்து பிறைதொழுத தலைவி, தலைவனோடு கூடிய கூட்டத்தால் தெய்வந்தொழுதல் முதலிய செய்வாள். இப்புதிய ஒழுக்கத்தால் தோழி தலைவியின் கூட்ட உண்மையை அறிதல் ஒழுக்கத்தாலையந் தீர்தலாகும்.

140. பெட்ட வாயில் பெற்றிரவு வலியுறுத்தல் :— பெட்பு— விருப்பு. தலைவியால் விரும்பப்பட்ட பாங்கியைத் தூதாகப் பெற்றுக் குரையிரத்தலை வலியுறுத்திக் கூறுவது.

**கெடுதி வினுதல் :—**

கெடுதி — கெட்டது ; வேட்டையினின்றும் தப்பியோடிய விலங்கு.

தலைவியைக் காண வரும் தலைவன் வேட்டுவத் தொழிலை மேற்கொண்டவன் போல் வந்து வேழம், பன்றி, நாய் முதலிய வற்றை வினுதல்.

**ஒழிந்தது வினுதல் :—**

தலைவன், ஊர், பெயர், கெடுதி, வினுவியும் தலைவி பேசாதிருப் பாள். நீர் பேசாதொழிந்ததென்னவென வினுதல்.

141 **இறைவனை நகுதல் :—** தலைவியும் தோழியும் சேர்ந் திருக்கக் கண்டு தலைவன் கையுறை யேந்திவந்து முன்பு போலக் கெடுதி வினுவ, அதற்கவர் எதிர்மொழிவர். பின்னர்த் தலைவன் அப்பாற் சென்ருகைத் தோழி தலைவியை நோக்கி நகைமொழி கூறி நகைத்து நிற்பாள்.

144. **பாங்கி குலமுறை கிளத்தல் :—** தலைவன் தான் உள்ளத்தே கொண்ட காதலைக் கூற, தோழி தங்கள் குலமுறையை எடுத்துக்கூறி இயையாதென மறுத்துக் கூறுதல்.

**பாங்கி பேதைமையூட்டல் :—**

தலைவி பிறர் துயரறியாதவளெனத் தோழி அவளது பேதை மையைத் தலைவன் உட்கொளக் கூறுதல்.

**பாங்கி முன்னுறுபுணர்ச்சி முறையுறக் கூறல் :—**

தோழி தலைவியின் பேதைமையைக் கூறத் தலைவன், தலைவி முதிர்ந்த அறிவுடையாள் என்பான். இதனைக் கேட்ட தோழி

தலைவனை நோக்கி 'தலைவ! முன் நின் வேட்கை தீர்த்தாளென்று கூறினையே அவ்வாறு இன்னுங் கூறுக' என்று கூறல்.

பாங்கி உலகியல் உரைத்தல் :—

உலகில் வேட்கை கொண்டோர் சான்றோரை முன்வைத்து வரைந்து கொள்வர். அவ்வாறு உலகியலால் நீயும் தலைவியை வரைந்து கொள்ளெனத் தோழி தலைவனுக்குக் கூறுதல்.

145. அலர்முலைப்பாங்கி அருளியல் கிளத்தல் :— தலைவன் தலைவியை அடைய மடலேறுவேன் எனக் கூற, பாங்கி மடலேறப் பனையை வெட்டுதல், அதன்கண் தங்கிய பறவைகளின் முட்டை தனைச் சிதைத்தல், பார்ப்புக்களை வதைத்தல் முதலிய பாவங்கள் சூழ்தலின் அருளுடையார்க்கு ஆகாதென்று கூறுதல் அருளியல் கிளத்தல்.

கொண்டு நிலை கூறல் :—

தலைவன் தன் உயிரைத் தாங்கிக் கொண்டு நிற்கும் நிலைமையினைத் தோழி கூறுதல்.

146. செவ்வியருமை செப்பல் :— தோழி தலைமகனுக்குத் தலைமகளது பருவக்கால அருமை கூறுதல்.

147. அறியாள் போன்று குறியாள் கூறல் :— தலைவன் குறை நேர்ந்ததனைத் தோழி தலைவிக்கு உணர்த்த, தலைவி தான் அதனைக் கேட்டறியாதது போல மனதிற்கருதாத வேறொன்றைக் கருதிக் கூறுவது.

148. மறுத்தற் கருமை மாட்டல்:— மாட்டல் — பொருத்திக் கூறுதல். தலைவன் கண்ணியும் தழையும் கொண்டுவந்து காணுந் தொறும் காணும்தொறும் நான் பலவகையாகக் கூறி மறுத்து வந்தேன். இனி அவர் வரின் என்னால் மறுத்தற்கியலாதெனப் பொருத்திக் கூறுதல்.

149. ஓம்படை சாற்றல் :— தலைமகளைத் தோழியரிடையே கூட்டி மீண்டு வந்து தலைவனுக்குத் தன் நிலைமையை மறவாதிருக்கும்படி உயிர்த்தோழி கூறுதல்.

விருந்து விலக்கல் :—

உற்ருர் ஊரிலிருந்து வந்தால் அவர்க்கு ஊண் கொடுத்து விருந்தோம்பல் உலகியல். அவ்வுலகியல் சிறக்கத் தலைமகனைத் தம்மூருக்கு வந்து விருந்துண்டு செல்லும்படி பகற்குறி விலக்கல்.

154. சிறைப்புறமாகச் செறிப்பறி வுறுத்தல் :—

சிறைப்புறம் — வேலிப்புறம். தலைவன் சிறைப்புறமாகக் குறியிடத்திற்கு வரத் தோழி தங்களுக்குற்ற இற்செறிப்பை அறிவுறுத்திக் கூறுதல்.

156. இறைமகள் ஆடிடம் நோக்கி அழிதல் :— தலைமகள் தான் களவொழுக்கம் நிகழ்த்திய இடங்களைக் கண்டு வருந்திக் கூறுதல்.

வழுங்களம் நாடி மறுகல் :—

தலைவியில்லாத தினைப்புனத்தை நோக்கித் தலைவன் வருந்துதல்.

158. பாங்கி அவனுட்டணியியல் வினுதல் :—

இயல் — பூசுதல், முடித்தல், விளையாட்டிடம் முதலியன. தலைவன் நாட்டுப் பெண்கள் அணியும் அணியையும், மற்றும் அவரது ஒப்பனை விளையாட்டிடம் முதலியனவும் வினுதல்.

இறைவியை இல்வயின் விடுத்தல் :—

தலைவன் தலைவியை மனையிற் செல்லென விடுத்தல்.

160. அவள் குறி மருண்டமை அவளவற் கியம்பல்:— தலைவி குறி மயங்கியதைத் தோழி தலைவனுக்குணர்த்தல்.

164. தலைமகன் வருந்தொழிற் கருமை சாற்றல்:— இரவுக் குறிக்கண் தலைமகன் வருதலின் கண்ணுள்ள இடர்பாட்டினைத் தலைவி தோழிக்குக் கூறுதல்.

**பூங்கொடி இறையோன்றன்னை நொந்தியற்பட மொழிதல் :—**

தோழி தலைவனை இயற்பழித்தது பொருதவளாய்த் தலைவி இயற்பட மொழிதல்.

**கனவு நலிபுரைத்தல் :—**

தலைவன் கனவிற் கூடிய காட்சி நனவில் பொய்த்துப் போன துன்பத்தைத் தோழியுடன் தலைவி கூறுதல்.

**கவினழிவுரைத்தல் :—**

விரகதாபத்தால் தலைவி தன் நலனழிந்ததனைத் தோழியொடு கூறல்.

**அலர் பார்த்துற்ற அச்சக்கிளவி :—**

ஊராருஞ் சேரியாரும் சொல்லும் அலரைக் கருதி அதனாலுற்ற அச்சத்தால் தலைமகள் கூறுதல்.

**ஆறுபார்த்துற்ற அச்சக்கிளவி :—**

தலைவன் இரவுக்குறிக்கண்வரும் வழியைப் பார்த்து அவ் வழியின் இடர்ப்பாட்டால் தோன்றும் அச்சத்தால் தலைவி கூறுதல்.

166. **அலரறிவுறுத்தல் :—** ஊரில் அலர் பரவியுள்ளதென்று தலைவனுக்கு அறிவித்தல்.

**வெறியச்சுறுத்தல் :—**

தாய் வெறியாடுபவனை வினவுதல் உட்கொண்டாள் என்று, தலைவனுக்கு அச்சுறுத்திக் கூறுதல்.

**அறிவறிவுறுத்தல் :—**

தோழி தலைமகளறிவு தலைமகனுக்கு அறிவுறுத்தல்.

**குறிபெயர்த்திடுதல் :—**

தோழி தலைவனிடம் இக்குறி இயல்பல்ல வேறோர் குறியிடை வருகவென்று கூறல்.

168. தன்பதிக்ககற்சி தலைவன் சாற்றல்:— அகற்சி—பிரிவு. தலைவன் தம் பதிக்கண் செல்லும் தம் பிரிவைத் தோழிக்குக் கூறிச் செல்லல்.

170. பருவங்கண்டு பெருமகள் புலம்பல்:— தலைவன் பிரியுங் கால் கார்காலத்தே வருவேன் என்று குறிப்பாகக் கூறிப்பிரிய, அக்கார்ப் பருவங்கண்டு தலைவி புலம்பிக் கூறுதல்.

இருளை வம்பென்றல் :—

வம்பு — காலமல்லாக் காலத்தில் தோன்றுவது.

கார்காலம் கண்டு தலைவி புலம்ப, அவள் தேறும்பொருட்டுத் தோழி ‘இது கார்காலத்தின் வந்த மேகமன்று இடையே வம்பாக வந்தது’ எனக் கூறுதல்.

# வரைவியற் கருத்து

வரைவெனப்படுவது தலைவன் தலைவியை அவளது பெற்றோர், சுற்றத்தார் முதலியோர் கொடுப்பவும், கொடாதிருப்பவும் வதுவைச் சடங்குடன் பொருந்த மணந்து கொள்தலாகும்.

இவ்வரைவு வரைவுமலிதல், அறத்தொடு நிற்றல் என்ற இரண்டு கிளவித் தொகையினை உடையது. வரைவு தொடங்கி நடக்கும் முயற்சி மிகுதல் வரைவு மலிதலாகும். அறத்தொடு நிலை என்பதற்குப் பல்வேறு பொருள் உண்டெனினும் இங்கு களவை வெளிப்படுத்தி நிற்றலே பொருளாகும்.

## 1 வரைவு மலிதல்

இது வரைவு முயல்வுணர்த்தல், வரைவெதிர்வுணர்த்தல் வரைவறிந்து மகிழ்தல், பராவல் கண்டுவத்தல் என்று நான்கு வகைப்படும்.

வரைவின் பொருட்டு நடக்கும் முயற்சியைத் தோழி தலைவிக்குத் தெரிவித்தல் வரைவுமலிதல்; தலைவனின் பெற்றோர்

மணங் கூறி வந்தபோது தலைவியின் பெற்றோர் மண வரவினை ஏற்றதனைத் தோழி தலைவிக்குக் கூறுதல் வரைவெதிர் உணர்த்தலாகும். தம்பெற்றோர் மண வரவினை ஏற்றதனால் தலைவி மகிழ்தல் வரைவறிந்து மகிழ்தலாகும்; மணம் நேர்ந்த பெற்றோர் ஏவலால் தலைவி மணத்தின் பொருட்டுத் தெய்வம் தொழுதல் கண்டு தலைவன் மகிழ்தல் பராவல் கண்டு உலத்தலாகும். இவ்வரைவு மலிதலில் தலைவன் தலைவியின் மார்பகங்களைத் தழுவியதற்கு ஈடாகப் பல வகைப் பொருள்களை அளித்ததனைத் தோழி தலைவிக்குக் கூறி வருத்தமொழிய வேண்டுவாள்; தலைவன் அளித்த பொருள்களைக் கண்டு தம்மகளுக்கு மணக் காலமென நற்றாய் மகிழ, அம்மகிழ்ச்சியைத் தலைவி நினைத்துப் பார்ப்பாள்; தலைவியின் பெற்றோர் வரைவினை எதிர்கொண்டு ஏற்றதனைத் தோழி தலைமகளுக்கு உணர்த்துவள்; அது கேட்டுத்தலைமகள் உவகை ஆற்றாது உள்ளத்தொடு கிளந்து கூறுவள்; தலைவனைத் தோழி வாழ்த்தி, மண நிகழ்ச்சியின் பொருட்டாகத் தலைவி தெய்வத்தைப் பராவியதை அவனுக்குக் காட்டுவள்; தலைமகள் தெய்வத்தை வணங்கியதைக் கண்ட தலைமகன் மகிழ்வன்.

## 2 அறத்தொடுநிலை

*களவின்கண் அறநெறியில் நின்று, முறையே ஒருவர் ஒருவர்க்கென நின்று களவை வெளிப்படுத்தி நிற்றல் அறத்தொடு நிற்றலாகும். இது முன்னிலைமொழி, முன்னிலைப்புறமொழி என இரண்டு வகையினை உடையது.*

முன்நிற்பார்க்கு நேரே கூறுதல் முன்னிலைமொழி; முன் நிற்பார்க்குக்கூற வேண்டுவனவற்றைப் பிறர்க்குக் கூறுவார் போலக்கூறுதல் முன்னிலைப்புறமொழி.

தலைமகள் அறத்தொடு நிற்றல்:—

தோழி கண்ணீரைத் துடைக்கத் தலைவி தான் அழுததற்குக் காரணம் கூறுவள்; தலைமகன் தெய்வத்தைச் சான்று காட்டிச் சூளுறவு கூறிப் பிரிய, அவன் சொல்லை மெய்யாக மதித்துத் தெளிந்தேன் என்று தலைவி தோழிக்குப் பொருந்தக் கூறுவள்; தலைமகன் நீங்கியதனைத் தலைவி தோழிக்குக் கூறுவள்; அது கேட்ட

தோழி இயற்பழித்துரைக்கத் தலைமகள் இயற்பட மொழிவாள்; தலைமகன் தெய்வத்திடம் சூளுரைத்துப் பிரிந்ததனால் கொடுந் தெய்வம் அவனைப் பொறுத்தருள வேண்டி இருவரும் செல்வோ மெனத் தலைவி தோழிக்குக் கூறுவள்; மெய் வேறுபாடு கண்டு நற்றாய் தன்னை இல்லத்தின் கண்ணே காவலிட்டதனைத் தலைவி தோழிக்குக் கூறுவள்; கனையிருளில் தலைவன் வரக் கண்டமை செவிலி கூறுவள். இந்நிலைகள் ஏழும் தலைவி அறத்தொடு நிற்கும் நிலைகளாகும்.

இவ்வேழனுள் தலைவி தான் அழுததற்குக் காரணம் கூறலாகிய ஒன்றினைத் தவிர்ந்து, ஏனைய ஆறும், தோழி வினவாதொழியவும் தலைமகள் அறத்தொடு நிற்றற்கு உரியவாம்.

**தோழி அறத்தொடு நிற்றல் :—**

தலைவியின் மெய் வேறுபாடு கண்டு செவிலி காரணம் கேட்பினும், தான் வெறி விலக்கிய வழிக் காரணம் கேட்பினும் அப்போது பூத்தரு புணர்ச்சி, புனல்தரு புணர்ச்சி, களிறுதரு புணர்ச்சி என்னும் மூன்று கிளவிகளான் தோழி அறத்தொடு நிற்பாள்

**செவிலி அறத்தொடு நிற்றல் :—**

தலைவியின் மெய் வேறுபாடு கண்டு நற்றாய் செவிலியைக் காரணம் கேட்டவிடத்துச் செவிலி முன்னிலை மொழியால் அறத் தொடு நிற்பாள். மேற்கூறப்பட்ட அனைத்தும் அறத்தொடு நிற்றலின் விரியாகும்.

## 3 களவு வெளிப்பாடு

களவொழுக்கம் அலராகி வெளிப்படுதல் களவு வெளிப் பாடாகும். இது போக்கு, கற்பொடு புணர்ந்த கவ்வை, மீட்சி என மூன்று கிளவித் தொகையினைக் கொண்டது.

போக்கு எனப்படுவது உடன் போக்கு. அதாவது தலைவன் தலைவியைத் தனதூருக்கு அழைத்துச் செல்லுதல்; கற்பொடு

புணர்ந்த கவ்வையாவது தலைவி தலைவனை உரிமை பூண்டு கற்பொடு கூடியிருத்தலை அயலார் விரவிய சேரியினர் பலரும் அறிதலாகும். மீட்சியாவது தலைவியைத் தேடிச் சென்ற செவிலி மீண்டு வருதலும், உடன் போன தலைவனும் தலைவியும் மீண்டு வருதலுமாம்.

உடன்போக்கு :—

இது போக்கு அறிவுறுத்தல், போக்கு உடன்படாமை, போக்கு உடன்படுத்தல், போக்கு உடன்படுதல். போக்கல், விலக்கல், புகழ்தல், தேற்றல் என எட்டு வகைப்படும்.

## 4 கற்பொடு புணர்ந்த கவ்வை

இது செவிலி புலம்பல், நற்றாய் புலம்பல், கவல்மனை மருட்சி, கண்டோர் இரக்கம், செவிலிபின் தேடிச் சேறல் என ஐந்து வகைப்படும்.

தலைவி தலைவனொடு சென்றதனையுணர்ந்து செவிலி புலம்புதல் செவிலி புலம்பல்; இக்காரணத்திற்காகத் தாய் புலம்புதல் நற்றாய் புலம்பல்; நற்றாய் வீட்டின்கண் இருந்து புலம்பல் கவல்மனை மருட்சி; தலைவியின் தோழியரும், தாயும் வருந்துதலைக் கண்டோர் இரங்கிக் கூறுதல் கண்டோர் இரக்கம்; செவிலி தலைவியைப் பின்னே தேடிச் செல்லுதல் செவிலி பின்தேடிச் சேறல்.

## 5 மீட்சி

உடன்போக்கில் தலைவியைத் தேடிச் சென்ற செவிலி மீண்டு வருதலும், உடன் போன தலைவனும் தலைவியும் மீண்டு வருதலும் மீட்சியாகும். இம்மீட்சி தெளித்தல், மகிழ்ச்சி, வினுதல், செப்பல் என நான்கு வகைப்படும்.

தலைவி நெடுந்தூரம் சென்று விட்டதனைச் செவிலித்தாய் நற்றாய்க்குக் கூறித் தெளிவித்தலும், உடன்போய் மீண்டு வருகாலை தலைவியினது ஊரை அடைந்தமையைக் கூறித் தலைவியைத் தெளிவித்தலும் தெளித்தல்.

முன்சென்றவர்கள் தலைவியின் வரவைத் தோழிக்குக் கூறத் தோழியர் மகிழ்தலும், தோழியர் சென்று நற்றாய்க்குக் கூற நற்றாய் மகிழ்தலும் மகிழ்ச்சி.

நற்றாய் தன் மகள் காதலனுடன் வருவதைக் கேட்டு நம் மகளை நம் மனைக்கே கொண்டு வருவானோ? தன்னகர்க்கே கொண்டு செல்வனோ? என்று வெறியாடுபவனைக் கேட்டல் வினுதல்.

முன் சென்றோர் தலைவியின் வருகையைத் தோழியர்க்குச் சொல்லுதல் செப்பல்.

இம்மீட்சி தலைவி நெடுந்தூரம் சென்றதனைச் செவிலி நற்றாய்க்குச் சொல்லுதல், தலைவன் தம்மூர் சார்ந்ததனைக் கூறல், தலைவி முன்செல்வோர் தம்மொடும் தன்வரவு தோழியர்க்கு உணர்த்தி விடுதல், முன்சென்றோர் தோழியர்க்குணர்த்தல், தோழியர் கேட்டு நற்றாய்க்குணர்த்தல், நற்றாய் வேலனை வினுதல் என்ற வகையில் விரிவு பெறும். இவற்றுள் செவிலி கூற்றாகிய ஒன்றையொழித்து ஏனையவை ஐந்தும் மடந்தையை உடன்போய் வரைந்து மீள்தற்கும், வரையாமல் மீண்டு அவன் மனையின் கண்ணேயாதல், தன் மனையின்கண்ணேயாதல் வரைந்து கொள்தற்கும் உரியவாம்.

## 6 தன்மனை வரைதல்

தலைவன் மீண்டுவந்து தலைவியைத் தன்மனையின் கண்ணே வரைந்து கொள்ளுதல் தன்மனை வரைதல். இது வினுதல், செப்பல், மேவல் என்ற மூன்று வகையினையுடையது.

இத்தன்மனைவரைதல், மண நிகழ்ச்சி பற்றி நற்றாய்க்கு ஏற்பட்ட வேட்கையைச் செவிலி வினுதல், செவிலிக்குத் தோழி வரைந்தமை உணர்த்தல், செவிலி நற்றாய்க்கு வரைந்தமை உணர்த்தல், தலைவன் தலைவியர் இருவரும் இல்லம் வந்தவழித் தலைவன் தோழிக்குத் தான் வரைந்தமையினை நுமர்க்கு இயம்புக என்றல், தோழி தான் அது முன்னே சாற்றியதாக எடுத்துரைத்தல் என்ற வரையில் விரிவு பெறும்.

## 7 உடன்போக்கிடையீடு

உடன்போக்கில் சுற்றத்தார் பின் தொடர்ந்து செல்லத் தலைமகளைத் தலைமகன் விடுத்துச் செல்லுதல் உடன்போக்கிடையீடு. இது போக்கு அறிவுறுத்தல், வரவு அறிவுறுத்தல், நீக்கம், இரக்க மொடு மீட்சி என்ற நால்வகையினை யுடையது.

ஐம்பத்தாரும் நாள் தன்னூரை விட்டு நீங்கும் தலைவி எதிர் வந்தவர்களைத் தலைமகனுடன் தான் செல்லுதலைத் தோழியர்க்கும் நற்றாய்க்கும் உணர்த்த அனுப்புதலும், அந்தணர்கள் தலைவியின் செலவை நற்றாய்க்குக் கூறுதலும் போக்கு அறிவுறுத்தல்.

சுற்றத்தார் பின் வருவதனைக் கண்டு தலைமகள் தலைமகனுக்கு உணர்த்தல் வரவு அறிவுறுத்தல்.

சுற்றத்தார் பின் வருவதனை உணர்ந்து தலைமகன் தலைமகளை விடுத்தல் நீக்கம்.

தலைவன் நீங்கியதால் தலைவி வருத்தத்தோடு சுற்றத்தார் பின்னே தன் இல்லத்திற்கு மீண்டு வருதல் இரக்கமொடு மீட்சி.

இவ்வுடன்போக்கு இடையீடு தலைவி தன் செலவினைத் தோழிக்கு உணர்த்தி விடுத்தலும், நற்றாய்க்கு உணர்த்தி விடுத்தலும், நற்றாய்க்கு அந்தணர் மொழிதலும், நற்றாய் அறத்தொடு நிற்றலின் சுற்றத்தார் பின் வந்ததனை தலைவி கண்டு தலைவனுக்கு உணர்த்தலும், தலைமகளைத் தலைமகன் விடுத்தலும், சுற்றத் தாரோடு செல்பவள் அவன் புறம் நோக்கிக் கவன்று ஆற்றுதல் என்ற வகையில் விரிவு பெறும்.

## 8 வரைதல்

தலைவன் தலைவியர் மண நிகழ்ச்சியே வரைதல். உடன் போய் தன்னூரின் கண்ணே வரைதலும், மீண்டு வந்து தன் மனைக்கண்ணே வரைதலுமாகிய இரண்டினை யொழித்து ஏனைய எல்லா வரைவின் கண்ணும், தலைமகன் அந்தணரையும் சான்றோரையும் முன்னிட்டு அருங்கலம் கொடுத்து வரைதல் தகுதியென்று புலவர் கூறுவர்.

# வரைவியல்

## வரைவின் இலக்கணம்

171 வரைவெனப் படுவ துரவோன் கிழத்தியைக்
குரவர் முதலோர் கொடுப்பவுங் கொடாமையுங்
கரணமொடு புணரக் கடியயர்ந்து கொளலே.

இவ்வோத்தென்ன பெயர்த்தோ வெனின் வரைவியல் என்னும் பெயர்த்து.

(இ – ள்) வரைவு என்று சொல்லப்படுவது தலைமகன் தலைமகளைக் குரவர் முதலாயினோர் கொடுப்பவும், கொடாதொழிய வும் வதுவைச் சடங்கொடு பொருந்த மணஞ்செய்து கோடல் என்றவாறு. (1)

## வரைவிற்குரிய கிளவித் தொகை

172 வரைவு மலிவே யறத்தொடு நிற்றலென்று
உரையமை யிரண்டும் வரைவிற்குரிய
கிளவித் தொகையெனக் கிளந்தனர் புலவர்.

(இ - ம்) வரைவிற்குரிய கிளவித்தொகை யுணர்த்துதல் நுதலிற்று.

**(இ - ள்)** வரைவு மலிவும், அறத்தொடு நிலையும் என்கின்ற இரண்டும் வரைவிற்குரிய கிளவியின்றொகை யென்று கூறினர் அறிவோர் என்றவாறு. (2)

## 1 வரைவு மலிதல்

வரைவு மலிதலின் வகை

173 வரைவுமுயல் வுணர்த்தல் வரவெதிர் வுணர்த்தல்
வரைவறிந்து மகிழ்தல் பராவல்கண் டுவத்தலென்
றொருநால் வகைத்தே வரைவு மலிதல்.

(இ - ம்) வரைவு மலிதலின் வகை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) வரைவு முயல்வுணர்த்தல் முதலாகப் பராவல் கண்டுவத்தல் ஈறாக நான்கு வகையினையுடைத்தாம் வரைவுமலிதல் என்றவாறு. (3)

வரைவுமலிதலின் விரி

174 காதலன் முலைவிலை விடுத்தமை பாங்கி
காதலிக் குணர்த்தலுங் காதலி நற்றாய்
உள்ள மகிழ்ச்சி யுள்ளலும் பாங்கி
தமர்வரை வெதிர்ந்தமை தலைவிக் குணர்த்தலும்
அவளுவகை யாற்றா துளத்தொடு கிளத்தலும்
தலைவனைப் பாங்கி வாழ்த்தலுந் தலைவி
மணப்பொருட் டாக அணங்கைப் பராநிலை
காட்டலுங் கண்டோன் மகிழ்வுமென் றீட்டிய
இருமூன்று மொன்றும் வரைவு மலிதற்காம்
விரியென விளம்பினர் மெய்யுணர்ந் தோரே.

**(இ - ம்)** வரைவுமலிதலின் விரி உணர்த்துதல் நுதலிற்று.

**(இ - ள்)** காதலன் முலைவிலை விடுத்தமை பாங்கி காதலிக் குணர்த்தல் முதலாகக் கண்டோன் மகிழ்தல் ஈறாகச் சொல்லப்பட்ட

ஏழும் வரைவுமலிதலின் விரியென விளம்பினர் மெய்யுணர்ந்தோர் என்றவாறு.

அவற்றுள், காதலன் முலைவிலைவிடுத்தமை பாங்கி காதலிக்குணர்த்தற்குச் செய்யுள்:

" தொலைவிலை யாகிய பல்பொருள் காதலர் சூதமர்நின்
முலைவிலை யாக முகந்தளித் தார்முனே வேந்தர்தம்மைத்
தலைவிலை யாகத் திறைகொண்ட வாணன் தமிழ்த்தஞ்சைநீ
யுலைவிலை யாகுக பொன்வண்ண மாறுக வொண்ணுதலே"

(த. கோ. 281)

எனவும்,

" எக்கர் ஞாழன் மலரின் மகளிர்
ஒண்டழை யயருந் துறைவன்
றண்டழை விலையென நல்கின னடே"

(ஐங்குறு. 147)

எனவும் வரும்.

காதலி நற்றாய் உள்ளமகிழ்ச்சி உள்ளற்குச் செய்யுள்:

" கயமா மலரெனுங் கண்ணியை வண்டெனுங் காளைபல்புள்
இயமா மணம்புண ரீர்ந்துறை நாட ரெதிர்ந்தவர் மேல்
வயமா நடத்திய வாணன்றென் மாறை வருகுவரேல்
நயமா மணவணி கண்டியாயு மின்புறு நம்மினுமே"

(த. கோ. 282)

எனவும்,

" குன்றக் குறவன் சாந்த நறும்புகை
தேங்கமழ் சிலம்பின் வரையகங் கமழுங்
கானக நாடன் வரையின்
மன்றலு முடையள்கொ ரேழி யாயே"

(ஐங்குறு. 253)

எனவும் வரும்.

பாங்கி தமர்வரைவெதிர்ந்தமை தலைமகட்குணர்த்தற்குச் செய்யுள் :

'' மணிப்பா லிகைமுத்தம் வைத்தாங் கடம்பலர் வார்திரைதூ
யணிப்பாய் துவலையரும்புந் துறைவர்க் கணியெதிர்ந்து
பணிப்பா சிழையல்குல் வெண்ணகை யாய்நமர் பாரநின்னேய்
தணிப்பான் முரசறைந் தார்தஞ்சை வாணன் றமிழ்நிலத்தே ''

(த. கோ. 283)

எனவும்,

'' அம்ம வாழி தோழி நம்மொடு
சிறுதினைக் காவல ளாகிப் பெரிதுநின்
மென்றோண் ஞெகிழவுந் திருநுதல் பசப்பவும்
பொன்போல் விறற்கவின் றொலைத்த
குன்ற நாடற் கயர்வர்நன் மணனே ''

(ஐங்குறு. 230)

எனவும் வரும்.

தலைமகள் உவகையாற்றாது உளத்தொடு கிளத்தற்குச் செய்யுள் :

'' சோகா குலமெய்தல் காண்டுநெஞ் சேநந் துறைவரெனும்
நீகா னுடன்பள்ளி நீள்வங்க மேறி நிலம்புரக்கும்
மாகா விரியன்ன வாணன்றென் மாறைமன் னன்பகையும்
ஏகா விருட்கங்கு லாங்கடற் காலை யெனுங்கரையே ''

(த. கோ. 284)

எனவரும்.

'' இலையடர் தண்குளவி யேய்ந்த பொதும்பிற்
குலையுடைக் காந்த ளினவண் டிமிரும்
வரையக நாடனும் வந்தான்மற் றன்னை
யலையு மலைபோயிற் றின்று '' (ஐந்திணை. எழு. 3)

எனவும் வரும்.

தலைவனைப் பாங்கி வாழ்த்தற்குச் செய்யுள் :

"மாரியஞ் சுங்கொடை வாணன்றென் மாறையில் வாழிவண்டார்
வேரியந் தொங்கல் விரைகமழ் மார்ப விடாதவம்பல்
சேரியம் பொய்கைத் துறையலர் வாடநுஞ் செவ்விமணந்
தூரியஞ் சங்கதி ரக்காட்டு நீயன்று சூட்டலரே"

(த. கோ. 285)

எனவும்,

"எரிமருள் வேங்கை யிருந்த தோகை
யிழையணி மடந்தையிற் றோன்று நாட
இனிதுசெய் தனையா லுந்தை வாழியர்
நன்மனை வதுவை யயரவிவள்
பின்னிருங் கூந்தன் மலரணிந் தோயே"

(ஐங்குறு. 294)

எனவும் வரும்.

தலைவி மணப் பொருட்டாக அணங்கைப் பராநிலை பாங்கி தலைமகற்குக் காட்டற்குச் செய்யுள் :

"உரவிப் பெருங்கலித் துன்பங்கள் போய்முத லூழியின்பம்
வரவிப் படிதன்னை வாழ்வித்த வாணன்றென் மாறையன்னுள்
புரவிப் புனைநெடுந் தேரண்ண லேநின் பொருட்டணங்கைப்
பரவிப் பரவிநின் றேவரம் வேண்டுதல் பார்த்தருளே"

(த. கோ. 286)

எனவரும்.

தலைமகள் அணங்கைப் பராநிலைகண்ட தலைமகன் மகிழ்தற்குச் செய்யுள் :

"இவ்வித் தகமிவட் கெய்திய தெவ்வண மெவ்வுலகும்
வவ்வித் திகழ்புகழ் வாணன்றென் மாறை மணப்பொருட்டால்
நவ்வித் தொகையின நாணுமென் னோக்கி நறைபுகையாச்
செவ்வித் தகைமலர் தூய்த்தெய்வம் வாழ்த்துந் திருத்தகவே"

(த. கோ. 287)

"குன்றக் குறவன் காதன் மடமகள்
மன்ற வேங்கை மலர்சில கொண்டு
மலையுறை கடவுள் குலமுதல் வழுத்தித்
தேம்பலிச் செய்த வீர்நறுங் கையன்
மலர்ந்த காந்த ளறிக்
கவிழ்ந்த கண்ணளெம் மணங்கி யோளே"

(ஐங்குறு. 259)

எனவும் வரும்.

இவற்றுள், காதலன் முலைவிலை விடுத்தமை பாங்கி காதலிக் குணர்த்தலும், தலைவி மணப் பொருட்டாக அணங்கைப் பராநிலை பாங்கி தலைமகற்குக் காட்டலுமாகிய இரண்டும் வரைவுமுயல் வுணர்த்தற்குரிய; பாங்கி தமர்வரை வெதிர்ந்தமை தலைமகட் குணர்த்தலாகிய ஒன்றும் வரைவெதிர் வுணர்த்தற்குரியது; தலைவி நற்ருய் உள்ள மகிழ்ச்சியுள்ளலும், அவள் உவகையாற்ருது உளத்தொடு கிளத்தலும், தலைமகனைப் பாங்கி வாழ்த்தலுமாகிய மூன்றும் வரைவறிந்து மகிழ்தற்குரிய: தலைமகள் அணங்கைப் பராநிலை கண்டோன் மகிழ்தலாகிய ஒன்றும் பராவல்கண் டுவத்தற்குரித்து. (4)

## 2 அறத்தொடு நிலை

*அறத்தொடு நிலையின் வகை*

**175 முன்னிலை முன்னிலைப் புறமொழி யென்ருங்**
**கன்ன விருவகைத் தறத்தொடு நிலையே.**

(இ-ம்) அறத்தொடு நிலையின் வகை உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) முன்னிலைமொழியு முன்னிலைப் புறமொழியுமென இருவகையினை யுடைத்தாம் அறத்தொடு நிலை என்றவாறு. (5)

மொழியென்பதனை முன்னும் பின்னுங் கூட்டுக.

### தலைவி அறத்தொடு நிற்றல்

176 கையறு தோழி கண்ணீர் துடைத்துழிக்
கலுழ்தற் காரணங் கூறலுந் தலைவன்
தெய்வங் காட்டித் தெளிப்பத் தெளிந்தமை
யெய்தக் கூறலு மிகந்தமை யியம்பலும்
இயற்பழித் துரைத்துழி இயற்பட மொழிதலுந்
தெய்வம் பொறைகொளச் செல்குவ மென்றலு
மில்வயிற் செறித்தமை சொல்லலும் செவிலி
கனையிருள் அவன்வரக் கண்டமை கூறலு
மெனமுறை யியம்பிய ஏழும் புனையிழைத்
தலைவி அறத்தொடு நிலைதனக் குரிய.

(இ-ம்) தலைவி யறத்தொடு நிற்றற்குரிய கிளவிகளை உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) கையறு தோழி கண்ணீர் துடைத்துழிக் கலுழ்தற் காரணங் கூறல் முதலாகச் செவிலி கனையிருள் அவன்வரக் கண்டமை கூறல் ஈருகச் சொல்லப்பட்ட ஏழும் தலைமகள் அறத்தொடு நிற்றற்குரிய கிளவியாம் என்றவாறு.

அவற்றுள் கையறு தோழி கண்ணீர் துடைத்தற்குச் செய்யுள்:

"அயிரார் திரைவந்துன் வண்டலம் பாவை யழித்தனவோ
செயிராத வன்னை செயிர்த்தன ளோசெறி நாறைதிண்போர்
வயிரா நரலும் வயற்றஞ்சை வாணன்றென் மாறையிலென்
உயிரா கியதைய னீகலுழ் வானென் னுளங்குழைந்தே"
(த. கோ. 288)

எனவும்,

"எழாஅ யாகலி னெழிலனந் தொலைய
வழாஅ தீமோ நொதுமலர் தலையே
யேனல் காவலர் மாவீழ்த்துப் பறித்த
பகழி யன்ன சேயரி மழைக்க
ணல்ல பெருந்தோ ளோயே கொல்ல
னெறிபொற் பிரிதிற் சிறுபல் காய

வேங்கை வீயுகு மோங்குமலைக் கட்சி
மயிலஃறி பறியா மன்னோ
பயில்குரல் கவரும் பைம்புறக் கிளியே'' (நற்றிணை. 13)

எனவும் வரும்.

தலைமகள் கலுழ்தற் காரணங் கூறற்குச் செய்யுள் :

''தாரணி கொண்ட விருதோ ளொருவர் தனித்துழியென்
வாரணி கொங்கை மணந்துசென் றூர்தஞ்சை வாணனென்னூர்
தேரணி வென்ற செழும்புகர் வேல்விழித் தேனினஞ்சூழ்
காரணி மென்குழ லாயது வேகலுழ் காரணமே"
(த. கோ. 289)

எனவும்.

' யாமெங் காமந் தாங்கவுந் தாந்தங்
கெழுதகை மையின ழுதன தோழி
கன்றுற்றுப் படுத்த புன்றலைச் சிறுஅர்
மன்ற வேங்கை மலர்பத நோக்கி
யேரு திட்ட வேமப் பூசல்
விண்டோய் விடரகத் தியம்புங்
குன்ற நாடற் கண்டவெங் கண்ணே'' (குறுந். 241)

எனவும் வரும்.

தலைமகன் தெய்வங்காட்டித் தெளிப்பத் தெளிந்தமை எய்தல் கூறற்குச் செய்யுள் :

''துதித்தே னணங்கொடு சூளுமுற் றேனென்ற சொல்லைமெய்யா
மதித்தே னயர்ந்து மதியிலி யேன்றஞ்சை வாணன்வையை
நதித்தே னினம்புணர் மாதர்கண் போல நகைக்கு நெய்தற்
பொதித்தே னுகர்ந்தக லுங்கழிக் கானற் புலம்பர்வந்தே''
(த. கோ. 290)

எனவரும்.

''கண்டிரண் முத்தம் பயக்கு மிருமுந்நீர்ப்
பண்டங்கொ ணுவாய் வழங்குந் துறைவனை
முண்டகக் கானலுட் கண்டே னெனத்தெளிந்தே
னின்ற வுணர்விலா தேன்'' (ஐந்திணை. எழு. 59)

எனவும் வரும்.

தலைமகன் இகந்தமை தலைமகள் பாங்கிக்கு இயம்பற்குச் செய்யுள் :

"வரியோல வண்டலை தண்டலை சூழ்தஞ்சை வாணன் வண்மைக்(கு)
உரியோ னுயர்வையை யொண்டுறை வாயுரவோர் தெளித்துங்
கரியோர் பிறரில்லை யென்றகன் றூரினிக் காரிகையால்
பெரியோர் மொழிபிற ழாரென்று தேறுதல் பேதைமையே"
(த. கோ. 291)

எனவும்,

"யாரு மில்லைத் தானே கள்வன்
றானது பொய்ப்பின் யானெவன் செய்கோ
தினைத்தா ளன்ன சிறுபசுங் கால
வொழுகுநீ ராரல் பார்க்குங்
குருகு முண்டுதான் மணந்த ஞான்றே" (குறுந். 25)

எனவும் வரும்.

இது தெளிவிடை விலங்கல்.

அதுகேட்ட பாங்கி இயற்பழித்துரைத்தற்குச் செய்யுள் :

"மழவே துறந்து மறந்தவர் போற்றஞ்சை வாணன்வென்றி
முழவேய முந்நீர் முழங்கிருங் கானன் முழுதுலகுந்
தொழவே தருந்தெய்வ நோக்கிச் செல்லேனென்று சொல்லியுநீ
யழவே துறந்தன ரானல்லர் நல்லரவ் வாடவரே"
(த. கோ. 292)

எனவரும்.

தலைமகள் இயற்பட மொழிதற்குச் செய்யுள் :

மாகப் புயன்மண்ணில் வந்தன்ன வாணன்றென் மாறைமுந்நீர்
நாகப் புகர்ச்செய்ய புள்ளிப்பைங் கான்ஞெண்டு நாகிளந்தண்
பூகக் குளிர்நிழற் பேடையொ டாடும் புலம்பரின்னு
ராகக் கருதினல் லாயினி யாரினி யாருளரே"
(த. கோ. 293)

எனவும்,

" அடம்பம னெடுங்கொடி யுள்புதைந் தொளிப்ப
வெண்மணல் விரிக்குந் தண்ணந் துறைவன்
கொடிய னுயினு மாக
அவனே தோழியென் னுயிர்கா வலனே "
(தொல். பொருள். கள. நூ. 20 உரை. மேற்கோள்)

எனவும் வரும்.

தெய்வம் பொறைகொளச் செல்குவம் என்றற்குச் செய்யுள்:

" மாதங்க நல்குங்கை வாணன்றென் மாறைவை யைத்துறைவர்
ஏதம் பயந்தில ரெங்கட்கு நீயெம் மிகநந்தனுற்
கோதம் படாதி கொடுந்தெய்வ மேயென்று கூர்பலிதூய்ப்
பாதம் பரவநல் லாயிரு வேமும் படர்குவமே "
(த. கோ. 294)

எனவும்,

" பெருந்தோ ணெகிழ வவ்வரி வாடச்
சிறுமெல் லாகம் பெரும்பசப் பூர
வின்னே மாக வெற்கண்டு நாணி
நின்னெடு தெளித்தன ராயினு மென்னதூஉம்
அணங்க லோம்புமதி வாழிய நீயெனக்
கணங்கெழு கடவுட் குயர்பலி தூஉய்ப்
பரவினம் வருகஞ் சென்மோ தோழி
பெருஞ்சே யிறவின் றுய்த்தலை முடங்கல்
சிறுவெண் காக்கை நாளிரை பெறூஉம்
பசும்பூண் வழுதி மருங்கை யன்னவே
னரும்பெற லாய்கவின் றொலையப்
பிரிந்தாண் டுறைதல் வல்லியோரே "
(நற்றிணை. 358)

எனவும் வரும்.

இல்வயிற் செறித்மை சொல்லற்குச் செய்யுள்:

" தன்போ லுலகம் புரக்கின்ற வாணன் றமிழ்த்தஞ்சையார்
மன்போ லெவர்க்கும் வழங்கியுண் ணுதவர் வைத்திழக்கும்

பொன்போ லிறுகப் பொதிந்துகொண் டாளன்னை
பூவையென்மேல்
வன்போ தியமட வாரலர் தூற்றியவாறுகண்டே''
(த. கோ. 295)

எனவும்,

''பெருநீ ரழுவத் தெந்தை தந்த
கொழுமீ னுணங்கற் படுபுள் ளோப்பி
யெக்கர்ப் புன்னை யின்னிழ லசைஇச்
செக்கர் ஞெண்டின் குண்டளை கெண்டி
ஞாழ லோங்குசினைத் தொடுத்த கொடுங்கழித்
தாழை வீழ்கயிற் றூச றூங்கிக்
கொண்ட லிடுமணற் குரவை முனையின்
வெண்டலைப் புணரி யாயமொ டாடி
மணிப்பூம் பைந்தழை தைஇ யணித்தகப்
பல்பூங் கான லல்கினம் வருதல்
கவ்வை நல்லணங் குற்ற விவ்வூர்க்
கொடிதறி பெண்டிர் சொற்கொண் டன்னை
கடிகொண் டனளே தோழி பெருந்துறை
யெல்லையு மிரவு மென்னது கல்லென
வலவ னாய்ந்த வண்பரி
நிலவுமணற் கொட்குமோர் தேருண் டெனவே''
(அகம். 20)

எனவும் வரும்.

செவிலி கனையிருள் அவன்வரக் கண்டமை கூறற்குச் செய்யுள் :

''வெங்கார் முகவெம் புருவமின் னேயன்னை மேலொருநாள்
எங்கா தலரிரு ளெய்தல்கண் டாளிந்த வேழுலகும்
மங்காமல் வந்தருள் வாணன்றென் மாறைவண் டானமஞ்சச்
சங்காழி கொண்டெறி யுங்கண்டல்வேலியந் தண்டுறைக்கே''
(த. கோ. 296)

எனவும்,

''நுழையுண் மடமகள் யார்கொலென் றன்னை
புழையு மடைத்தாள் கதவு''

எனவும் வரும்.

இவற்றுள், கலுழ்தற் காரணங் கூறலாகிய ஒன்றும் ஒழித்து ஏனையவெல்லாம் பாங்கி வினவாதொழியவும், தலைமகள் அறத்தொடு நிற்றற்கு உரியவாமாறு அறிந்து கொள்க. (6)

## பாங்கி அறத்தொடு நிற்றல்

177 எறிவளை வேற்றுமைக் கேதுவி னுவினும்
வெறிவிலக் கியவழி வினுவினும் பாங்கி
பூவே புனலே களிறே யென்றிவை
யேதுவாகத் தலைப்பா டியம்பும்.

(இ - ம்) பாங்கி அறத்தொடு நிற்றற்குரிய கிளவிகளை யுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) செவிலி தலைமகள் வேற்றுமைக்குக் காரணங் கேட்பினும், தான் வெறிவிலக்கிய விடத்துக் காரணங்கேட்பினும், பாங்கி பூவும் புனலுங் களிறுமாகிய இவை காரணமாகப் புணர்ச்சியினை அறிவிக்கும் அவட்கு என்றவாறு.

அவற்றுள், செவிலி தலைமகள் வேற்றுமை கண்டு பாங்கியை வினுதற்குச் செய்யுள்:

"பொன்னுற்ற கொங்கையு முத்துற்ற கண்ணுமிப்
போதுகண்டேன்
பன்னுற்ற சொல்லுமின் பாலுங்கொள் ளான்பதி னுலுலகும்
மன்னுற்ற வண்புகழ் வாணன்றென் மாறையென்
மானனையாட்(கு)
என்னுற்ற தென்றறி யேன்புனங் காவ லிருந்தபின்னே"
(த. கோ. 297)

எனவரும்.

வெறி விலக்கற்குச் செய்யுள்:

"அறியாமை யானென்று கேட்கலுற் றேனும்மை
யாவதொன்றுங்
குறியா மறியுயிர் கொள்ளவென் றேகுரு திப்பலிகூர்

வெறியா லிவளுயிர் மீட்கவென் றேவென்றி வேல்வலத்தீர்
சிறியார் மனையில்வந் தீர்தஞ்சை வாணன் சிலம்பினின்றே''
(த. கோ. 298)

எனவும்,

''கடவுட் கற்சுனை யடையிறந் தவிழ்ந்த
பறியாக் குவளை மலரொடு காந்தட்
குருதி யொண்பூ வுருகெழக் கட்டிப்
பெருவரை யடுக்கம் பொற்பச் சூர்மகள்
அருவி யின்னியத் தாடு நாடன்
மார்புதர வந்த படர்மலி யருநோய்
நின்னணங் கன்மை யறிந்துமண் ணந்து
கார்நறுங் கடம்பின் கண்ணி சூடி
வேலன் வேண்ட வெறிமனை வந்தோய்
கடவு ளாயினு மாக
மடவை மன்ற வாழிய முருகே'' (நற்றிணை. 34)

எனவும் வரும்.

செவிலி தோழியை வினைதற்குச் செய்யுள் :

''மண்குன்ற வந்த கலியினை மாற்றிய
வாணன்றஞ்சை
யொண்குன்ற மங்கையர் முன்னர்மின் னேயுமை
யாள்மகனைப்
பண்குன்ற வென்றசொல் வள்ளிதன் கோனைப்பைந்
தாரயிலால்
வெண்குன் றெறிந்தசெவ் வேளையிவ் வாறென்
விளம்பியதே'' (த. கோ. 299)

எனவரும்.

தோழி பூத்தரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்றற்குச் செய்யுள் :

''போருறை தீக்கணை போலுநின் கண்கண்டு போதவஞ்சி
நீருறை நீலமு நீயுநண் பாகென்று நின்மகட்கோர்

தாருறை தோளவர் தந்தனர் வாணன் றமிழ்த்தஞ்சைசூழ்
காருறை சோலையில் யாம்விளை யாடிய காலையிலே,'
(த. கோ. 300)

எனவும்,

'' தந்தார்க்கே யாமாற் றடமென்றே னின்னநாள்
வந்தார்க்கே யாமென்பார் வாய்காண்பாம் — வந்தார்க்கே
காவா விளமணற் றண்கழிக் கானல்வாய்ப்
பூவா விளஞாழற் போது '" (திணைமாலை. நூற். 39)

எனவும் வரும். அது நொதுமலர் வரைவின்கண் ணறத்தொடு நின்றதாம்.

புனல்தரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்றற்குச் செய்யுள் :

'' ஒழிதோற் றிய சொல்ல லுன்மகளோதிக் குடைந்த கொண்டல்
பொழிதோற் றிரளுந்தி வந்தசெந் நீருந்திப் பொற்பினுக்கோர்
சுழிதோற் றிடும்பகை தீர்க்கின்ற போதொரு தோன்றலுமவ்
வழிதோற்றி வந்தெடுத் தான்றஞ்சை வாணன்றென்
வையையிலே '' (த. கோ. 301)

எனவும்,

'' காமர் கடும்புனல் கலந்தெம்மோ டாடுவாள்
தாமரைக்கண் புதைத்தஞ்சித் தளர்ந்ததனோ டொழுகலான்
நீணுக நறுந்தண்டார் தயங்கப்பாய்ந் தருளினற்
பூணுக முறத்தழீஇப் போதந்தா னகனகலம்
வருமுலை புணர்ந்தன வென்பதனு லென்றோழி
யருமழை தரல்வேண்டிற் றருகிற்கும் பெருமையளே ''
(கலி. குறிஞ்சி. 3)

எனவும் வரும்.

களிறுதரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்றற்குச் செய்யுள் :

'' மண்ணலை யாமல் வளர்க்கின்ற வாணன்றென் மாறைவெற்பின்
அண்ணலை யாயிழை பாகனென் றஞ்சின மஞ்சனந்தோய்
கண்ணலை நீரிடப் பாகமு மேல்வந்த கைக்களிற்றின்
புண்ணலை நீர்வலப் பாகமுந் தோயப் பொருதவன்றே ''
த. கோ. 30 2)

எனவும்,

"சுள்ளி சுனைநீலஞ் சோபா லிகைசெயலை
யள்ளி யளகத்தின் மேலாய்ந்து — தெள்ளி
யிதணூற் கடியொடுங்கா வீர்ங்கடா யானை
யுதணுற் கடிந்தா னுளன்" (திணைமாலை. நூற். 2)

எனவும் வரும், இம்மூன்றனுள் ஒன்ருன் அறத்தொடு நிற்க அமையும் எனக் கொள்க. (7)

## செவிலி அறத்தொடு நிற்றல்

**178 மின்னிடை வேற்றுமை கண்டுதாய் வினவுழி
முன்னிலை மொழியான் மொழியுஞ் செவிலி.**

(இ - ம்) செவிலி அறத்தொடு நிற்றற்குரிய கிளவிகளை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) தலைமகள் வேறுபாடு கண்டு நற்ருய் செவிலியை வினவியவிடத்து முன்னிலை மொழியானே சொல்லுஞ் செவிலி என்றவாறு.

அவற்றுள், தலைமகள் வேற்றுமைகண்டு நற்ருய் செவிலியை வினதற்குச் செய்யுள் :

"தண்டார் தழுவிய வேலண்ணல் வாணன்றென்
றஞ்சைவெற்பில்
வண்டார் குழலிதன் வண்ணமுங் கண்ணும் வடிவுமுன்னுள்
கண்டா ரறியும் படியன வேயல்ல காரணமொன்
றுண்டா லுயிரனை யாயயி ராம லுரையெனக்கே"
(த. கோ. 303)

எனவும்,

"கண்ணுஞ் சேயறி பரந்தன்று நுதலு
நுண்வியர் பொடித்து வண்டார்க் கும்மே
வாங்கமை மென்ருேண் மடந்தை
யாங்கா யினள்கொ லென்னுமென் னெஞ்சே"
(தொல். பொருள். கள. நூ. 23 உரை மேற்கோள்)

எனவும் வரும்.

செவிலி நற்றுய்க்கு முன்னிலைமொழியான் அறத்தொடு நிற்றற்குச் செய்யுள் :

" மலைவந்த தோவெனும் வாரண வாணன்றென் மாறைமதிச்
சிலைவந்த தோவெனு நன்னுத லாயொரு செல்வரிங்கோர்
கலைவந்த தோவென வந்து வினவிநங் காரிகைக்கு
முலைவந்த தோவில்லை யோவென்னு நாளின் முயங்கினரே "
(த. கோ. 304)

எனவரும். நற்றுய் குறிப்பின் அன்றி அறத்தொடு நிற்கப் பெருள் என்றமையாற் செய்யுளில்லை. (8)

அறத்தொடு நிற்றலின் விரி இவை எனல்

179 என்றுடன் இயம்பிய எல்லாங் களவியல்
நின்றுழி அறத்தொடு நிற்றலின் விரியே.

(இ - ம்) அறத்தொடு நிற்றலின் விரி இவை என்பது உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) கையறு தோழி கண்ணீர் துடைத்துழித் தலைமகள் கலுழ்தற் காரணங் கூறல் முதலாகத் தலைமகள் வேறுபாடு கண்டு நற்றுய் வினவிய வழிச் செவிலி முன்னிலை மொழியான் மொழிதல் ஈருகச் சொல்லப்பட்டனவெல்லாங் களவொழுக்கம் வெளிப்படாது நின்றவிடத்து அறத்தொடு நிற்றலின் விரியாம் என்றவாறு. (9)

களவு வெளிப்பாட்டிற்குரிய கிளவித் தொகை

180 போக்கே கற்பொடு புணர்ந்த கவ்வை
மீட்சியென் றுங்கு விளம்பிய மூன்றும்
வெளிப்படைக் கிளவியின் வழிப்படு தொகையே.

(இ – ம்) களவு வெளிப்பாடடிற்குரிய கிளவித்தொகை உணர்த்துதல் நுலிதற்று

(இ - ள்) போக்கு முதலாக மீட்சி ஈருகச் சொல்லப்பட்ட மூன்றும் களவு வெளிப்பாட்டிற்குரிய கிளவித்தொகை என்றவாறு. (10)

## 3 உடன்போக்கு

உடன் போக்கின் வகை

181 போக்கறி வுறுத்தல் போக்குடன் படாமை
போக்குடன் படுத்தல் போக்குடன் படுதல்
போக்கல் விலக்கல் புகழ்தல் தேற்றலென்
றியாப்பமை உடன்போக் கிருநான்கு வகைத்தே.

(இ-ம்) நிறுத்த முறையானே உடன்போக்கின் வகை உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) போக்கறிவுறுத்தல் முதலாகத் தேற்றல் ஈருக எட்டு வகையினையுடைத்தாம் அன்பமைந்த உடன்போக்கு என்றவாறு. (11)

உடன்போக்கின் விரி

182 பாங்கி தலைவற் குடன்போக் குணர்த்தலு
மாங்கவன் மறுத்தலு மவளுடன் படுத்தலுந்
தலைவன் போக்குடன் படுதலும் பாங்கி
தலைவிக் குடன்போக் குணர்த்தலுந் தலைவி
நாணழி பிரங்கலுங் கற்புமேம் பாடு
பூண்முலைப் பாங்கி புகறலுந் தலைவி
ஒருப்பட் டெழுதலும் விருப்புடைப் பாங்கி
சுரத்தியல் உரைத்துழிச் சொல்லலும் பாங்கி
கையடை கொடுத்தலும் வைகிருள் விடுத்தலு
மவன்சுரத் துய்த்தலு மசைவறிந் திருத்தலு
முவந்தலர் சூட்டி உண்மகிழ்ந் துரைத்தலுங்
கண்டோ ரயிர்த்தலுங் காதலின் விலக்கலும்
தன்பதி அணிமை சாற்றலுந் தலைவன்
தன்பதி அடைந்தமை தலைவிக் குணர்த்தலு
மென்றிவை யொன்பதிற் றிருவகைக் கிளவியு
மொன்றிய வன்பி னுடன்போக்கு விரியே.

(இ-ம்) உடன்போக்கின் விரி உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) பாங்கி தலைவற் குடன்போக்குணர்த்தல் முதலாகத் தலைவன் தன்பதி அடைந்தமை தலைவிக்குணர்த்தல் ஈருகச்

சொல்லப்பட்ட பதினெட்டும் பொருந்திய அன்பினையுடைய உடன்போக்கு விரியாம் என்றவாறு.

அவற்றுள், பாங்கி தலைவற்குடன்போக்குணர்த்தற்குச் செய்யுள்:

"மைந்நீர் நெடுங்கண் மடந்தை யுடன்றஞ்சை வாணன்வெற்பா
செந்நீர் விழவணி நின்னகர்க் கேகொண்டு சேர்ந்தருண்மற்
றிந்நீர்மை யல்லதொ ராறுமின் றுலிங்கெம் மையரென்றுள்
முந்நீ ருலகுங்கொள் ளார்விலை யாக முலையினுக்கே"
(த. கோ. 305)

எனவும்,

"மூத்தோ ரன்ன வெண்டலைப் புணரி
யிளையோ ராடும் வரிமனை சிதைக்குந்
தளையவிழ் தாழைக் கானலம் பெருந்துறைச்
சில்செவித் தாகிய புணர்ச்சி யலரெழ
இல்வயிற் செறித்தமை யறியாய் பன்னாள்
வருமுலை வருத்தா வம்பகட்டு மார்பில்
தெருமர லுள்ளமொடு வருந்து நின்வயின்
நீங்கு கென்றியான் யாங்ஙன மொழிகோ
அருந்திறற் கடவுளர் செல்லூர்க் குணஅது
பெருங்கடன் முழக்கிற் றாகி யாணர்
இரும்பிடம் படுத்த வடுவுடை முகத்தர்
கடுங்கட் கோசர் நியம மாயினு
முறுமெனக் கொள்ளுந ரல்லர்
நறுநுத லரிவை பாசிழை விலையே" (அகம். 90)

எனவும் வரும்.

தலைவன் உடன்போக்கு மறுத்தற்குச் செய்யுள்:

"பாரோ முலைவிலை யென்பர்நின் கேளிரென் பல்கிளைவாழ்
ஊரோ வணியதன் றெண்டொடி யாய்விந்தை யுண்கண்களோ
தாரோ வளரும் புயன்றஞ்சை வாணன் றரியலர்போல்
யாரோ தனிநடப் பாரருங் கான மிவளுடனே"
(த. கோ. 306)

எனவும்,

“ இரும்புலிக் கிரிந்த கருங்கட் செந்நாகு
நாட்டயிர் கடைகுரல் கேட்டொறும் வெரூஉம்
ஆநிலைப் பள்ளி யல்க நம்மொடு
மாலுண் கண்ணியும் வருமெனின்
வாரார் யாரோ பெருங்க லாறே”
(தொல். பொருள். அகத். நூ. 41 உரை மேற்கோள்)

எனவும் வரும்.

பாங்கி தலைமகனை உடன்படுத்தற்குச் செய்யுள்:

“ சுருளேய் குழலுஞ் சுணங்கேய் முலையுஞ் சுமந்துகற்புப்
பொருளே யெனச்சுரம் போதுமப் போது புகழ்வெயிலான்
மருளேய் கலியிருன் மாற்றிய வாணன்றென் மாறையினி
னருளே யொழியவுண் டோநிழ லாவ தணங்கினுக்கே”
(த. கோ. 307)

எனவும்,

“ நீர்கால் யாத்த நிரையிதழ்க் குவளை
கோடை யொற்றினும் வாடா தாகுங்
கவணை யன்ன பூட்டுப்பொரு தசாஅ
வுமணெருத் தொழுகைத் தோடுநிரைத் தன்ன
முளிசினை பிளக்கு முன்பின் மையின்
யானை கைம்மடித் துயவுங்
கானமு மினியவா நும்மொடு வரினே” (குறுந். 388)

எனவும் வரும்.

தலைவன் போக்குடன் படுதற்குச் செய்யுள்:

“ நஞ்சோ வழலோ வெனுஞ்சுர மோசெல்ல நாடியவென்
னெஞ்சோ கொடியது நேரிழை யாய்நிழன் மாமதியோ
மஞ்சோ தவழ்மதில் சூழ்தஞ்சை வாணன் வரையிலவம்
பஞ்சோ வனிச்சங்கொ லோவெனுஞ் சீறடிப்
பைந்தொடிக்கே”
(த. கோ. 308)

எனவும்,

''ஆறுசெல் வருத்தத்துச் சீறடி சிவப்பவுஞ்
சினைநீங்கு தளிரின் வண்ணம் வாடவுந்
தான்வர றுணிந்த விவளினு மிவளுடன்
வேய்பயி லழுவ முவக்கும்
பேதை நெஞ்சம் பெருந்தக வுடைத்தே''
(தொல். பொருள். அகத். நூ. 41 உரை மேற்கோள்)

எனவும் வரும்.

பாங்கி தலைவிக்கு உடன்போக்கு உணர்த்தற்குச் செய்யுள்:

''பாலன்ன பாயற் பகையென்னுஞ் சீறடி பட்டுருவும்
வேலன்ன கூர்ங்கன் மிதிக்குங்கொ லென்றனர் மேதினிக்கு
மாலன்ன வாணன்றென் மாறைநன் னாட்டு வயலுகளுஞ்
சேலன்ன நீள்விழி யாய்தெரி யாதன்பர் சிந்தனையே''
(த. கோ. 309)

எனவும்,

''குன்றக் குறவ னார மறுத்தென
நறும்புகை சூழ்ந்து காந்த ளூறும்
வண்டிமிர் சுடர்நுதற் குறுமகள்
கொண்டனர் செல்வர்தங் குன்றுகெழு நாட்டே''
(ஐங்குறு. 254)

எனவும் வரும்.

தலைவி நாணழி விரங்கற்குச் செய்யுள்;

''மறவாகை வேலங்கை வாணனை மாறையர் மன்னனைத்தம்
உறவாக வெண்ணி யுருதவர் போலுயி ரோம்பியென்றுந்
துறவாத நாணந் துறப்பது வேண்டலிற் றெல்லுலகிற்
பிறவா தொழிகைநன் றேயொரு காலமும் பெண்பிறப்பே''
(த. கோ. 310)

எனவும்,

''அளிதோ தானே நாணே நம்மொடு
நனிநீ டுழந்தன்று மன்னே யினியே
வான்பூங் கரும்பி னேங்குமணற் சிறுபறை

தீம்புன னெரிதர வீழ்ந்துக் காஅங்குத்
தாங்கு மளவைத் தாங்கிக்
காம நெரிதரக் கைந்நில் லாதே'' (குறுந், 149)

எனவும் வரும்.

கற்புமேம்பாடு பூண்முலைப்பாங்கி புகறற்குச் செய்யுள் :

'செந்நாண் மலரிற் றிருவன்ன கோலத் தெரிவையர்க்கு
மெய்ந்நா ணுயிரினு மிக்கதென் ருல்விர வாவரசர்
தந்நாண் முறைமை தவிர்த்தருள் வாணன்
றமிழ்த்தஞ்சைநாட்
டந்நா ணுமுமட வாய்கற்பு நோக்க வழகிதன்றே''
(த. கோ. 311)

எனவரும்.

தலைவி ஒருப்பட்டு எழுதற்குச் செய்யுள் :

''பலரே சுமந்த வுரைகளுந் தாயர்தம் பார்வைகளும்
சிலரே சுமந்து திரியவல் லார்செய்ய செண்பகநாண்
மலரே சுமந்த வயற்றஞ்சை வாணனை வாழ்த்தலர்போல்
அலரே சுமந்து சுமந்திந்த வூர்நின் றழுங்குகவே''
(த. கோ. 312)

''சிலரும் பலருங் கடைக்க ணோக்கி
மூக்கி னுச்சிச் சுட்டுவிரல் சேர்த்தி
மறுகிற் பெண்டி ரம்பல் தூற்றச்
சிறுகோல் வலந்தன ளன்னை யலைப்ப
வலந்தனென் வாழி தோழி கானற்
புதுமலர் தீண்டிய பூநாறு குரூஉச்சுவற்
கடுமா பூண்ட நெடுந்தேர் கடைஇ
நடுநாள் வரூஉ மியறேர்க் கொண்கனொடு
செலவயர்ந் திசினல் யானே
யலர்சுமந் தொழிகவிவ் வழுங்க லூரே'' (நற்றிணை. 149)

எனவும் வரும்.

பாங்கி சுரத்தியல் உரைத்துழித் தலைமகள் சொல்லற்குச் செய்யுள் :

'' செல்லிற் கொடிய களிற்றண்ணல் வாணன்றென்
மாறைமன்னன்
வில்லிற் கொடிய புருவமின் னேயென் விளம்புதிநீ
சொல்லிற் கொடியநம் மன்னையைப் போல்பவர் சூழ்ந்திருக்கும்
இல்லிற் கொடியகொல் லோசெல்லு நாட்டவ் விருஞ்சுரமே ''
(த. கோ. 313)

எனவும்,

'' கடக்கருங் கானத்துக் காளைபின் னாளை
நடக்கவும் வல்லையோ வென்றி — சுடர்த்தொடீஇ
பெற்ருெ ளொருவன் பெருங்குதிரை யந்நிலையே
கற்ரு னஃதூரு மாறு '' (நாலடி. 398)

எனவும் வரும்

பாங்கி தலைமகளைத் தலைமகற்குக் கையடை கொடுத்தற்குச் செய்யுள் :

''பறத்திருந் தும்பர் பதைப்பப் படரும் புரங்கரப்பச்
சிறந்தெரி யாடிதென் றில்லையன் ளுடிறத் துச்சிலம்பா
அறந்திருந் துன்னரு ளும்பிறி தாயி னருமறையின்
திறந்திரிந் தார்கலி யும்முற்றும் வற்றுமிச் சேணிலத்தே ''
(திருக்கோவை. 213)

எனவும்.

'' நீற்கட லுண்ட புயல்போற் கருகி நிறைந்ததிருப்
பாற்கட லுண்ட புயல்போலு நாளும் பரிந்தருள்வாய்
சேற்கட னஞ்சுண்ட வாரூர்த் தியாகர் செழுங்கயிலை
போற்கட ளுகமன் ளுவெங்கள் மாதின் புரிகுழலே ''
(திருவாரூர். கோ. 226)

எனவும்,

'' நனைமுதிர் ஞாழற் சினைமரு டிரள்வீ
நெய்தன் மாமலர்ப் பெய்தல் போல
ஊதை தூற்று முரவு நீர்ச் சேர்ப்ப

தாயுடன் றலைக்குங் காலையும் வாய்விட்
டன்னா யென்னுங் குழவி போல
இன்னா செயினு மினிதுதலை யளிப்பினு
நின்வரைப் பினளென் றோழி
தன்னுறு விழுமங் களைஞரோ விலளே'' (குறுந். 397)

எனவும்,

'' இவளே நின்னல திலளே யாயுங்
குவளை யுண்க ணவளல திலளே
யானு மாயிடை யேனே
மாமலை நாட மறவா தீமே''

எனவும் வரும்.

பாங்கி வைகிருள் விடுத்தற்குச் செய்யுள் :

'' பொழிநான மன்றலம் பூங்குழ னீங்கள் புணர்ந்துசெல்லும்
வழிநாடி நும்பின் வருகுவல் யான்றஞ்சை வாணன்வையைச்
சுழிநாணு முந்திநின் றொல்கிளைக் கேற்பன சொல்லியின்னா
மொழிநா வடங்க மொழிந்தய லாரை முகங்கவிழ்த்தே ''
(த. கோ. 315)

எனவும்,

'' வேலும் விளங்கின வினையரு மியன்றனர்
தாருந் தையின தழையுந் தொடுத்தன
நிலநீ ரற்ற வெம்மை நீங்கப்
பெயனீர் தலைஇ யுலவை யிலைநீத்துக்
குறுமுறி யின்றன மரனே நறுமலர்
வேய்ந்தன போலத் தோன்றிப் பலவுடன்
றேம்படப் பொதுளின பொழிலே கானமும்
நனிநன் றாகிய பனிநீங்கு வழிநாட்
பாலெனப் பரத்தரு நிலவின் மாலைப்
போதுவந் தன்று தூதே நீயுங்
கலங்கா மனத்தை யாகி யென்சொ
னயந்தனை கொண்மோ நெஞ்சமர் தகுவி
தெற்றி யுலறினும் வயலை வாடினும்

நொச்சி மென்சினை வணர்குரல் சாயினும்
நின்னினு மடவ ணனிநின் னயந்த
அன்னை யல்ல ருங்கி நின்னையர்
புலிமருள் செம்ம ேனுக்கி
வலியா யின்னுந் தோய்கநின் முலையே" (அகம். 259)

எனவும் வரும்.

தலைமகளைத் தலைமகன் சுரத்துய்த்தற்குச் செய்யுள்:

"தளிபோற் கொடைபயில் சந்திர வாணன் றமிழ்த்தஞ்சையான்
அளிபோற் குளிர்ந்த விளமரக் காவு மவன்புகழின்
ஒளிபோல் விளங்கிய வெண்மணல் யாறு முவந்துகண்டு
நளிபோ தவிழ்குல லாய்மெல்ல மெல்ல நடந்தருளே"
(த. கோ. 316)

எனவும்,

"அழிவில முயலு மார்வ மாக்கள்
வழிபடு தெய்வங் கட்கண் டாஅங்கு
அலமரல் வருத்தந் தீர யாழநின்
னலமென் பணைத்தோ ளெய்தின மாகலிற்
பொரிப்பூம் புன்கி னெழிற்றகை யொண்முறி
சுணங்கணி வனமுலை யணங்குகொளத் திமிரி
நிழல்காண் டோறு நெடிய வைகி
மணல்காண் டோறும் வண்ட றைஇ
வருந்தா தேகுமதி வாலெயிற் றோயே
மாநனை கொழுதி மகிழ்குயி லாலு
நறுந்தண் பொழில கானங்
குறும்ப லூரயாஞ் செல்லு மாறே" (நற்றிணை. 9)

எனவும் வரும்.

தலைமகன் தலைமகளசைவு அறிந்திருத்தற்குச் செய்யுள்:

"வரமாமை வேற்படை வாணன்றென் மாறை வணங்கலர்கள்
புரமான வல்லழல் பொங்குவெங் கானிற் பொருந்தியகூர்

அரமான கல்லுன் னடிமல ராற்றல வாதலினுஞ்
சுரமாறு மெல்லைநல் லாயிருப் பாமிந்தச் சோலையிலே''
(த. கோ. 317)

எனவரும்.

தலைமகன் தலைமகளை உவந்தலர்சூட்டி உண்மகிழ்ந்துரைத்தற்குச் செய்யுள் :

''அடிமலர் போற்றவும் போற்றியன் பாலிவ ளாய்முடிக்கியான்
கடிமலர் சூட்டவுங் காட்டிய தாற்கள்வர் காய்ந்தெரியுந்
துடிமலர் சீர்க்கெதிர் கூகை யிரட்டுஞ் சுரத்திடையோர்
வடிமலர் வேற்படை யான்வாணன் மாறையென் மாதவமே''
(த. கோ. 318)

எனவும்,

''வண்புறப் புறவின் செங்காற் சேவல்
களரி யோங்கிய கவைமுட் கள்ளி
முளரியங் குடம்பை யீன்றிளைப் பட்ட
வயவுநடைப் பேடை யுணீஇய மன்னர்
முனைகவர் முதுபா ழுகுநெற் பெறூஉ
மாணில் சேய்நாட் டதரிடை மலர்ந்த
நன்னாள் வேங்கைப் பொன்மருள் புதுப்பூப்
பரந்தன நடக்கயாங் கண்டன மாதோ
காணினி வாழியென் நெஞ்சே நாண்விட்
டருந்துய ருழந்த காலை
மருந்தெனப் படூஉ மடவோ ளையே'' (நற்றிணை. 384)

எனவும் வரும்.

கண்டோர் அயிர்த்தற்குச் செய்யுள் :

''சையத் திரள்புயன் சந்திர வாணன் றனிபுரக்கும்
வையத் துறைகின்ற மானிட ரோவன்றி வானவரோ
நையப் படுமழல் வெஞ்சுரத் தூடு நடந்தவரென்
றையப் படுவதல் லாலுண்மை சால வறிவரிதே''
(த. கோ. 319)

எனவும்,

"வில்லோன் காலன கழலே தொடியோள்
மெல்லடி மேலன சிலம்பே நல்லோர்
யார்கொ லளியர் தாமே யாரியர்
கயிறுடு பறையிற் கால்பொரக் கலங்கி
வாகை வெண்ணெற் றொலிக்கும்
வேய்பயி லழுவ முன்னி யோரே" (குறுந். 7)

கண்டோர் காதலின் விலக்கற்குச் செய்யுள்:

"மாலுந் திருவு மெனவரு வீர்தஞ்சை வாணன்றெவ்வூர்
போலுஞ் சுரமினிப் போகவொண் ணாது பொருப்படைந்தா
லும் புரவி யருக்கனிக் கங்கு லடறகடமான்
பாலுந் தசையுமுண் டேதங்கு வீரெங்கள் பாடியிலே"
(த. கோ. 320)

எனவும்,

"எம்மூ ரல்ல தூர்நணித் தில்லை
வெம்முரட் செல்வன் கதிரு மூழ்த்தனன்
சேந்தனை சென்மோ பூந்தார் மார்ப
இளையள் மெல்லியள் மடந்தை
யரிய சேய பெருங்கலாறே"
(தொல். பொருள். அகத். நூ. 40 உரை மேற்கோள்)

எனவும் வரும்.

கண்டோர் தன்பதி அணிமை சாற்றற்குச் செய்யுள்:

"தொடங்கும் பிறைநுதற் றோகையு நீயுமுன் றோன்றுகின்ற
கடங்குன் றிரண்டுங் கடந்துசென் றுற்கம லத்தடமுங்
கிடங்கும் புரிசையுஞ் சூழ்ந்தெதிர் தோன்றுங்
கிளைத்தபைந்தார்த்
தடங்குங் குமநெடுந் தோள்வாணன் மாறையுந் தஞ்சையுமே"
(த. கோ. 321)

எனவரும்.

தலைமகன் தன்பதி அடைந்தமை தலைவிக்குணர்த்தற்குச் செய்யுள் :

" சத்தனந் தோய்ந்து தயங்குமுத் தாரந் தரித்துவிம்மு
நந்தனந் தாங்கி நடுங்கிடை போல நடத்திங்ஙனே
நொந்தனங் காலென்று நோவல்பொன் னேயொரு
நோயுமின்றி
வந்தனங் காணிது காண்வாணன் மாறை வளநகரே "
(த. கோ. 322)

எனவரும்.

இவற்றுள், பாங்கி தலைமகற்கு உடன்போக்குணர்த்தலும், தலைவிக்கு உடன்போக்குணர்த்தலுமாகிய இரண்டும் போக்கறிவுறுத்தற்குரிய; தலைமகன் மறுத்தலும், தலைவி நாணழி பிரங்கலுமாகிய இரண்டும் போக்குடம்படாமைக்குரிய; பாங்கி தலைவனை உடம்படுத்தலும், தலைவிக்குக் கற்புமேம்பாடு கூறலுமாகிய இரண்டும் போக்குடன்படுத்தற்குரிய; தலைவன் போக்குடன்படுதலும், தலைவி யொருப்பட்டெழுதலும், பாங்கி சுரத்தியலுரைத்துழிச் சொல்லலுமாகிய மூன்றும் போக்குடன்படுதற்குரிய; பாங்கி கையடை கொடுத்தலும், வைகிருள் விடுத்தலும், தலைமகன் தலைமகளைச் சுரத்துய்த்தலுமாகிய மூன்றும் போக்கற்குரிய; தலைவன் தலைவி அசைவறிந்திருத்தலும், கண்டோர் காதலின் விலக்கலுமாகிய இரண்டும் விலக்கற்குரிய; தலைவன் தலைவியை உவந்தலர் சூட்டி உண்மகிழ்ந்துரைத்தலும், கண்டோர் அயிர்த்தலுமாகிய இரண்டும் புகழ்தற்குரிய; கண்டோர் தன்பதி அணிமை சாற்றலும், தலைவன் தன்பதி அடைந்தமை தலைவிக்குணர்த்தலுமாகிய இரண்டுந் தேற்றற்குரிய. (12)

## 4 கற்பொடு புணர்ந்த கவ்வை

கற்பொடு புணர்ந்த கவ்வையின் வகை

183 செவிலி புலம்பல் நற்றாய் புலம்பல்
கவர்மனை மருட்சி கண்டோ ரிரக்கம்
செவிலிபின் தேடிச் சேறலென் றுங்குக்
கற்பொடு புணர்ந்த கௌவையை வகைத்தே.

(இ - ம்) கற்பொடு புணர்ந்த கௌவையின் வகை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) செவிலி புலம்பல் முதலாகச் செவிலி பின் தேடிச் சேறல் ஈறாக ஐந்துவகையினையுடைத்தாம் கற்பொடு புணர்ந்த கௌவை என்றவாறு. (13)

செவிலி புலம்பல்

184 வினவிய பாங்கியி னுணர்ந்த காலை
இனைய லென்போர்க் கெதிரழிந்து மொழிதலுந்
தன்னறி வின்மை தன்னைநொந் துரைத்தலுந்
தெய்வம் வாழ்த்தலு மிவ்வொரு மூன்று
மிலங்கிழைச் செவிலி புலம்புதற் குரிய.

(இ - ம்) செவிலி புலம்பலின் விரி உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) வினவிய பாங்கியின் உணர்ந்தகாலை இனையலென் போர்க்கு எதிரழிந்து மொழிதல் முதலாகத் தெய்வம் வாழ்த்தல் ஈறாகச் சொல்லப்பட்ட இவ்வொரு மூன்றும் தலைமகள் செவிலித் தாய் புலம்பற்கு உரியவாம் என்றவாறு.

அவற்றுள் செவிலி பாங்கியை வினவற்குச் செய்யுள் :

'' நலம்புனை யாயமு நீயுநற் றாயொடு நானுநன்பொன்
சிலம்புயர் சோலையுஞ் சிற்றிலும் பேரிலுந் தெண்டிரைமேல்
வலம்புரி யூர்வயல் சூழ்தஞ்சை வாணனை வாழ்த்தலர்போற்
புலம்புற மாதரெங் கேமக ளேதனிப் போயினளே ''

(த. கோ. 323)

எனவரும்.

பாங்கி செவிலிக்கு உணர்த்தற்குச் செய்யுள் :

'' வெறுத்தா ரொறுத்துரை மேலுநங் கேளிர் விழைதலின்றி
மறுத்தா ரவற்கு மணமத னாற்றஞ்சை வாணர்பிரான்
கறுத்தார் புரத்து நடந்தனள் கானைபின் காமர்கற்பாற்
பொறுத்தா ளழற்சுரந் தன்னையன் னாய்நின் பொலங்கொடியே '

(த. கோ. 324)

எனவும்.

"செவ்வாய்க் கரியகட் சிறிறுற் கேளாதுங்
கவ்வையாற் காணுது மாற்றுது — மவ்வாயந்
தார்த்தத்தை வாய்மொழியுந் தண்கயத்து நீலமும்
ஓர்த்தொழிந்தா ளென்பேதை யூர்ந்து"

(திணைமாலை. நூற். 73)

எனவும் வரும்.

பாங்கியின் உணர்ந்த செவிலி தேற்றுவார்க்கு எதிரழிந்து மொழிதற்குச் செய்யுள்:

"மாறு வளவயல் சூழ்தஞ்சை வாணன்றென் மாறையென்க
ணூறு வருந்துய ராற்றுகின் றீரறி வேகொளுத்தி
யூறு வனகடிந் தென்முலை யூறமிர் தூட்டியின் சொல்
கூறு வளர்த்ததற் கோவென்னை நீத்ததென் கோல்வளையே"

(த. கோ. 325)

எனவும்,

"அத்த நீளிடை யவனொடு போகிய
முத்தேர் வெண்பன் முகிழ்நகை மடவரல்
தாய ரென்னும் பெயரே வல்லா
றெடுத்தேன் மன்ற யானே
கொடுத்தோர் மன்றவவ ளாயத் தோரே"

(ஐங்குறு. 380)

எனவும் வரும்.

செவிலி தன்னறிவின்மைதன்னை நொந்துரைத்தற்குச் செய்யுள்:

"வழியா வரும்பெரு நீர்த்தஞ்சை வாணனை வாழ்த்தலர்போற்
கழியாத வன்புடைக் காளைபின் ஞளைக் கலந்துகொண்டல்
பொழியாத வெஞ்சுரம் போகுவல் யானென்று போங்குறிப்பால்
ஒழியாதென் முன்புசொன் ஞள்பேதை யேனென்றை
யோர்ந்திலனே"

(த. கோ. 326)

எனவும்,

''முலைக்கண்ணு முத்து முழுசெய்யும் புல்லும்
இலக்கணம் யாது மறியேன் — கலைக்கணம்
வேங்கை வெரூஉ நெறிசெலிய போலுமென்
பூம்பாவை செய்த குறி'' (நாலடி. 399)

எனவும் வரும்.

செவிலி தெய்வம் வாழ்த்தற்குச் செய்யுள் :

''இணங்கிப் புவனத் தெவருமில் லாவென்
னிளங்கொடியாள்
உணங்கிக் கழித லொழியவென் பால்வர
வுன்னையன்பால்
வணங்கிப் பலமுறை வாழ்த்துகின் றேன்றஞ்சை
வாணன்றெவ்வை
யணங்கித் திரள்புயத் தான்மல யாசலத்
தாரணங்கே (த. கோ. 327)

எனவும்,

''ஞாயிறு காயாது மரநிழற் பட்டு
மலைமுதற் சிறுநெறி மணன்மிகத் தாஅய்த்
தண்மழை தலையின் றாக நந்நீத்துச்
சுடர்வாய் நெடுவேற் காளையொடு
மடவர லரிவை போகிய சுரனே'' (குறுந். 378)

எனவும் வரும். (14)

நற்றாய் புலம்பல்

185 செவிலி யறத்தொடு நிற்றலிற் கவலையிற்
பாங்கி தன்னொடும் பாங்கியர் தம்மொடு
மயலார் தம்மொடும் பயிலிடந் தம்மொடுந்
தாங்கல ளாகிச் சாற்றிய வெல்லாம்
பூங்கொடி நற்றாய் புலம்பற்குரிய.

(இ-ம்) நற்றாய் புலம்பலின் விரி உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) செவிலி அறத்தொடு நிற்றலிற் கவலையிற் பாங்கி தன்னொடு புலம்பல் முதலாகப் பயிலிடந் தன்னொடு புலம்பல்

ஈருகச் சொல்லப்பட்டனவெல்லாம் தலைமகள் நற்ருய் புலம்பற் குரியவாம் என்றவாறு.

அவற்றுள், செவிலி நற்ருய்க்கு அறத்தொடு நிற்றற்குச் செய்யுள் :

''சகநல்க வந்தருள் சந்திரவாணன்றென் றஞ்சைநல்லாய்
முகநல்கி நல்க முலைகொடுத் தாரினமுத் தங்கொடுத்தார்
மிகநல்ல ரென்பது மன்பதை தேற விடலைபின்னே
மகநல்கு மந்தியங் கானடந் தாளுன் மடந்தையின்றே''
(த. கோ. 328)

எனவும்,

''பறைபடப் பணில மார்ப்ப விறைகொள்பு
தொன்மு தாலத்துப் பொதியிற் ருேன்றிய
நாலூர்க் கோசர் நன்மொழி போல
வாயா கின்றே தோழி யாய்கழற்
சேயிலை வெள்வேல் விடலையொடு
தொகுவளை முன்கை மடந்தை நட்பே'' (குறுந். 15)

எனவும் வரும்.

நற்ருய் பாங்கி தன்னொடு புலம்பற்குச் செய்யுள் :

''முன்னே யிதனை மொழிந்தனை யேனுந்தை முந்தைமணம்
பின்னேய் குழலி பெருளல்ல ளேபிற மாதெவர்க்குந்
தன்னேயம் வைத்தரு ளுந்தஞ்சை வாணன் றமிழ்ச்சிலம்பிற்
பொன்னே யனையநல் லாயவ மேசுரம் போக்கினையே''
(த. கோ. 329)

எனவும்,

''தன்னம ராயமொடு நன்மண நுகர்ச்சியி
னினிதாங் கொல்லோ தனக்கே பனிவரை
யினக்களிறு வழங்குஞ் சோலை
வயக்குறு வெள்வே லவற்புணர்ந்து செலவே''
(ஐங்குறு. 379)

எனவும் வரும்.

அதுகேட்ட தோழி அழுங்கல் கண்டு நற்ருய் புலம்பற்குச் செய்யுள் :

" இல்லுங் கழங்கா டிடங்களு நோக்கி
யிரங்கல்வம்பும்
வல்லும் பொருங்கொங்கை மங்கைநல் லாய்தஞ்சை
வாணனென்னுர்
புல்லுந் துணைவியர் போல்வினை யேன்பெற்ற
பூவையன்னுள்
செல்லுஞ் சுரத்தழ லன்றுன்கண் ணீரெற்
றெறுகின்றதே '' (த. கோ. 330)

எனவும்,

" செல்லிய முயலிப் பாஅய சிறகர்
வாவ லுகக்கு மாலையாம் புலம்பப்
போகிய வவட்கோ நோவேன் றேமொழித்
துணையிலள் கலிழு நெஞ்சி
னிணையே ருண்க ணிவட்குநோ வதுவே "
(ஐங்குறு. 378)

எனவும் வரும்.

நற்ருய் பாங்கியர் தம்மொடு புலம்பற்குச் செய்யுள் :

'' நேயம் புணைதுணை யாகவெங் கானக நீந்தலெண்ணி
யாயம் புலம்ப வகன்றன ளோகல் லகங்குழைய
மாயம் புகலொரு காளைபின் வாணன்றென் மாறையன்னீர்
சேயம் புயமலர் போலடி நோவவென் சில்வளையே''
(த. கோ. 331)

எனவும்,

" இதுவென் பாவைக் கினியநற் பாவை
இதுவென் பைங்கிளி யெடுத்த பைங்கிளி
இதுவென் பூவைக் கினியசொற் பூவையென்று
அலமரு நோக்கி னலம்வரு சுடர் நுதல்
காண்டொறுங் காண்டொறுங் கலங்க
நீங்கின ளோவென் பூங்க ணேளே " (ஐங்குறு. 375)

எனவும் வரும்.

நற்ருய் அயலார் தம்மொடு புலம்பற்குச் செய்யுள்:

"மேனுள் வரங்கிடந் தென்போல் வருந்தி மிகவு மெய்ந்நொந்து
ஈனு தவர்துன்ப மெய்துவ ரோவிமை யோருலகந்
தானுண நீடு மதிற்றஞ்சை வாணன் தமிழ்ச்சிலம்பின்
மானுர் விழியனே யாள்வினை யாடிய வண்டல்கண்டே"
(த. கோ. 332)

எனவும்,

"ஒருமக ளுடையேன் மன்னே யவளுஞ்
செருமிகு மொய்ம்பிற் கூர்வேற் காளையொடு
பெருமலை யருஞ்சுர நெருநற் சென்றனள்
இனியே, தாங்குநின் னவல மென்றீ ரதுமற்
றியாங்கன மொல்லுமோ வறிவுடை யீரே
யுள்ளி னுள்ளம் வேமே யுண்கண்
மணிவாழ் பாவை நடைகற் றன்னவென்
அணியியற் குறுமக ளாடிய
மணியேர் நொச்சியுந் தெற்றியுங் கண்டே"
(நற்றிணை. 184)

எனவும் வரும்.

நற்ருய், தலைமகள் பயிலிடந் தம்மொடு புலம்பற்குச் செய்யுள்:

"செயலைத் தருவின் றிருநிழ லேபெருஞ் சிற்றில்லமே
வயலைக் கொடிநொச்சி மண்டப மேதஞ்சை வாணனென்னுர்
இயலைத் தனித்தனி தந்தன ளேநமக் கின்றிதன்றே
கயலைப் பொருதகண் ணுள்மேலும் வாழ்விக்குங் கட்டளையே"
(த. கோ. 333)

எனவும்,

"கொன்ருய் குருந்தே கொடிமுல்லாய் வாடினீர்
நின்றே னறிந்தே னெடுங்கண்ணுள் — சென்ருளுக்
கென்னுரைத்தீர்க் கென்னுரைத்தாட் கென்னுதுரைத்தீர்க்
கென்னுதுரைத்தாள்
மின்னிரைத்த பூண்மிளிர விட்டு" (திணைமாலை நூற். 81)

எனவும் வரும்.

(15)

### அனைமருட்சி

186 நிமித்தம் போற்றலுஞ் சுரந்தணி வித்தலுந்
தன்மகள் மென்மைத் தன்மைக் கிரங்கலு
மிளமைத் தன்மைக் குளமெலிந் திரங்கலு
மச்சத் தன்மைக் கச்சமுற் றிரங்கலு
மெனவிவை ஐந்துமனை மருட்சிக் குரிய.

(இ - ம்) அனைமருட்சியின் விரி உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) நிமித்தம் போற்றல் முதலாக அச்சத்தன்மைக்கு அச்சமுற்றிரங்கல் ஈறுகச் சொல்லப்பட்ட ஐந்தும் அனைமருட்சிக் குரியவாம் என்றவாறு.

அனை — நற்றுய். அவற்றுள்,

நிமித்தம் போற்றற்குச் செய்யுள்:

'' வடியேய் புகர்முக வாள்வல வாணன்றென் மாறையுள்யா
னடியே தொழுந்தெய்வ மாகநிற் பேணி யரும்பலியிப்
படியே தருகுவ லென்றுமின் னேயிப் பதியுவகைக்
கொடியே வரக்கரை நீகொடி யேன்பெற்ற கொம்பினையே ''
(த. கோ. 334)

எனவும்,

'' மறுவில் தூவிச் சிறுகருங் காக்கை
யன்புடை மரபினின் கிளையோ டாரப்
பச்சூன் பெய்த பைந்நிண வல்சி
பொலம்புனை கலத்திற் றருகுவென் மாதோ
வெஞ்சின விறல்வேற் காளையோ
டஞ்சி லோதியை வரக்கரைந் தீமே'' (ஐங்குறு. 391)

எனவும் வரும்.

நற்றுய் சுரந்தணிவித்தற்குச் செய்யுள் :

'' வெஞ்சுர நாடு வியன்சுர லோகமும் வெங்கடுங்கா
னஞ்சுர தாரு வனங்களு மாக வகிற்புகைபோல்

மஞ்சுர வாடக மாமதில் சூழ்தஞ்சை வாணன்வெற்பிற்
பஞ்சுர மாகு மொழிச்சுரு ளோதியென் பைந்தொடிக்கே ''
(த. கோ. 335)

எனவும்,

'' மள்ளர் கொட்டின் மஞ்ஞை யாலும்
உயர்நெடுங் குன்றம் படுமழை தலைஇச்
சுரநனி யினிய வாகுக தில்ல
அறநெறி யிதுவெனத் தெளிந்தவென்
பிறைநுதற் குறுமகள் போகிய சுரனே '' (ஐங்குறு. 371)

எனவும் வரும்.

நற்றாய் தன்மகள் மென்மைத்தன்மைக்கு இரங்கற்குச் செய்யுள் :

'' தாமே தமக்கொப்பு மற்றில் லவர்தில்லைத் தண்ணனிச்சப்
பூமேன் மிதிக்கிற் பதைத்தடி பொங்குநங் காயெரியுந்
தீமே லயில்போற் செறிபரற் கானிற் சிலம்படிபா
யாமே நடக்க வருவினை யேன்பெற்ற அம்மனைக்கே ''
(திருக்கோவை. 228)

எனவும்,

'' உவக்கின்ற வல்லிமலர்த்தாளென் கண்களி லொற்றிக்கண்கள்
சிவக்கின்ற தற்குமுன் னேசிவந் தேறுஞ் செயலதன்றே
பவக்குன் றிடிப்பவ ராரூர்த் தியாகர் பனிவரைமேல்
நிவக்கின்ற வெஞ்சுரத் தேசென்ற வாறென் னினைப்பதுவே ''
(திருவாரூர். கோ. 395)

எனவும்,

'' அரக்காம்ப லுறும்வா யம்மருங்கிற் கன்னோ
பரற்கான மாற்றின கொல்லோ — அரக்கார்ந்த
பஞ்சிகொண் டூட்டினும் பையெனப் பையனெவென்
றஞ்சிப்பின் வாங்கு மடி '' (நாலடி. 396)

எனவும் வரும்.

நற்ருய் தன்மகள் இளமைத்தன்மைக்கு உளமெலிந்திரங்கற்குச் செய்யுள் :

'' இரும்பா மனங்கொண்ட வாறென்னை நீதன்னை
யேத்தியென்றும்
வரும்பா வலர்க்கருள் வாணன்றென் மாறை வளவயலிற்
கரும்பார் மொழியா யழலென்று கண்ணீர் துடைத்தணைத்துன்
அரும்பா முலைசெய்ய வாய்ப்பசும் பாவைக் களிக்குமின்னே ''
(த. கோ. 337)

எனவும்,

'' பல்லூழ் நினைப்பினு நல்லென் றூழ
மீளி முன்பிற் காளை காப்ப
முடியகம் புகாஅக் கூந்தலள்
கடுவனு மறியாக் காடிறந் தோளே '; (ஐங்குறு. 374)

எனவும் வரும்.

நற்ருய் தன்மகள் அச்சத்தன்மைக்கு அச்சமுற்றிரங்கற்குச் செய்யுள் :

'' நாண்மா தவிமலர் நாறிருங் கூந்த னடந்தவழிக்
கோண்மா குமிறுங் கொடுங்குரல் கேட்டொறுங்
கூர்ங்கணையால்
வாண்மா முனைவென்ற வாணன்றென் மாறை
மணிவரைவேய்த்
தோண்மா வெருவுங்கொல் லோவென்றெ ருருயிர்
சோர்கின்றதே ''
(த. கோ. 338)

எனவும்,

'' கேளாய் வாழியோ மகளைநின் ருேழி
திருநகர் வரைப்பகம் புலம்ப வவனெடு
பெருமலை யிறந்தது நோவே ஞேவல்
கடுங்கண் யானை நெடுங்கை சேர்த்தி
முடங்கு தாளுதைத்த பொலங்கெழு பூழி
பெரும்புலர் விடியல் விரிந்துவெயி லெறிப்பக்
கருந்தார் மிடற்ற செம்பூழ்ச் சேவல்

சிறுபுள் பெடையொடு குடையு மாங்க
ணஞ்சுவரத் தகுந கான நீந்திக்
கன்றுகா ணதுபுண் கண்ண செவிசாய்த்து
மன்றுநிரை பைதல் கூரப் பலவுடன்
கறவை தந்த கடுங்கண் மறவர்
கல்லென் சீறூ ரெல்லியி னசைஇ
முதுவாய்ப் பெண்டின் செதுகாற் குரம்பை
மடமயி லன்னவென் னடைமலி பேதை
தோட்டுணை யாகத் துயிற்றத் துஞ்சான்
வேட்டக் கள்வர் விசியுறு கடுங்கட்
சேக்கோ ளறையுந் தண்ணுமை
கேட்குநள் கொல்லெனக் கலுழுமென் னெஞ்சே''

(அகம். 63)

எனவும் வரும். (16)

கண்டோரிரங்கல்

187 ஆயமும் தாயு மழுங்கக் கண்டோர்
காதலி னிரங்கல் கண்டோ ரிரக்கம்.

(இ - ம்) கண்டோரிரக்கம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) தலைமகள் ஆயத்தாரும், நற்றாயும் இரங்குமாறு கண்டு அன்பினால் இரங்குதல் கண்டோ ரிரக்கம் என்றவாறு.

அதற்குச் செய்யுள் :

''நொந்துங் கலுழ்ந்துந் துணைவிய ராற்றலர் நோக்கொடின்சொல்
தந்துங் கவையுந் தணந்துசென் றுளெனத் தாள்பணியார்
மைந்துங் கதமுங் கடிந்தருள் வாணன்றென் மாறையன்னாள்
பந்துங் கழங்குமெல் லாங்கண்டு வாடும் பயந்தவளே''

(த. கோ. 339)

எனவும்,

''கயந்தலை மடப்பிடி பயம்பிற் பட்டெனக்
களிறுவிளிப் படுத்த கம்பலை வெரீஇ
யொய்யென வெழுந்த செவ்வாய்க் குழவி
தாதெரு மறுகின் மூதூ ராங்கண்
எருமை நல்லான் பெருமுலை மாந்தும்
நாடுபல விறந்த நன்ன ராட்டிக்
காயமு மணியிழந் தழுங்கின்று தாயும்
ஈன்ருேட் டாரா யிரீஇயரென் னுயிரெனக்
கண்ணு நுதலு நீவித் தண்ணெனத்
தடவுநிலை நொச்சி வரிநிழ லசைஇத்
தாழிக் குவளை வாடுமலர் சூடித்
தருமணற் கிடந்த பாவையென்
அருமக ளேயென முயங்கின ளழுமே'' (அகம். 165)

எனவும் வரும். (17)

செவிலி பின்தேடிச் செல்லல்

188 ஆற்ருத் தாயைத் தேற்றலு மாற்றிடை
முக்கோற் பகவரை விளுதலும் மிக்கோ
ரேதுக் காட்டலு மெயிற்றியொடு புலம்பலுங்
குரவொடு புலம்பலும் சுவடுகண் டிரங்கலுங்
கலந்துடன் வருவோர்க் கண்டுகேட் டலுமவர்
புலம்பல் தேற்றலும் புதல்வியைக் காணுது
கவலைகூர் தலுமெனு மிவையொன் பானுஞ்
செவிலிபின் தேடிச் சேறற்குரிய.

(இ - ம்) செவிலி பின்தேடலின் விரி உணர்த்துதல் நுதலிற்று.

(இ – ள்) ஆற்ருத் தாயைத் தேற்றல் முதலாகப் புதல்வியைக் காணுது கவலை கூர்தல் ஈருகச் சொல்லப்பட்ட ஒன்பதும் செவிலி பின்தேடிச் சேறற்குரியவாம் என்றவாறு.

அவற்றுள், செவிலி ஆற்ருத் தாயைத் தேற்றற்குச் செய்யுள் :

'' நன்றே யிதென்று முகமுக நோக்கி நகைநகையா
மன்றே யலர்சொல்லு மாதர்முன் னேதஞ்சை
வாணன்ருெல்சீர்
சென்றே பரந்த திசைகளெல் லாஞ்சென்று தேர்ந்தணங்கை
யின்றே தருவனன் னேவருந் தாதிங் கிருந்தருளே ''

(த. கோ. 340)

எனவரும்.

ஆற்றிடை முக்கோர்பகவரை விஞதற்குச் செய்யுள் :

'' ஒருவெண் குடையிரு நீழன்முக் கோல்கொண்
டொழுக்கத்திஞல்
அருவெங் களரியைந் தாறுசெல் வீரரு ளீரெழுபார்
மருவெண் டிசைபுகழ் வாணன்றென் மாறையென்
வஞ்சியன் ஞள்
பொருவெஞ் சுடரிலே வேலொரு காளேபின் போயினளே ''

(த. கோ. 341)

எனவும்,

'' சேயின் வரூஉ மதவலி யாவுயர்ந்
தோமை நீடிய கானிடை யத்த
முன்ஞ ஞெம்பர்க் கழிந்த வென்மகள்
கண்பட நீராழ்ந் தன்றே தந்தை
தன்ஞா ரிடவயிற் ருெழுவே ஞுண்பல்
கோடேந் தல்கு லரும்பிய திதலே
வாஅர்ந் திலங்குவா லெயிற்றுப் பொலிந்ததார்ச்
சில்வளேப் பல்கூந் தலளே யவளே
மையண லெருத்தின் முன்பிற் றடக்கை
வல்வி லம்பி னெய்யா வண்மகிழ்த்
தந்தை தன்ஞா ரிதுவே
யீன்றேன் யானே பொலிகநும் பெயரே ''

(நற்றிணே. 198)

எனவும் வரும்.

மிக்கோர் ஏதுக்காட்டற்குச் செய்யுள்:

'' இயங்கா வனமென் மகளொரு காளைபின் னேகினளென்
றுயங்கா தொழியஃ துலகியல் பாலுல வும்புயரேய்
வயங்கா டகமதில் சூழ்தஞ்சை வாணன் மணங்கமழ்தார்ப்
புயங்காதல் கொண்டணைந் தாளய னூர்தந்த பூமகளே ''

(த. கோ. 342)

எனவும்,

'' சீர்கெழு வெண்முத்த மணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினு நீர்க்கவைதா மென்செய்யுந்
தேருங்கா னும்மக ளுமக்குமாங் கனையளே ''

(கலி. பாலை. 9)

எனவும் வரும்.

செவிலி யெயிற்றியொடு புலம்பற்குச் செய்யுள்:

'' செருமக ளேயும் புயத்தய லான்பின் செலவிடுத்தென்
னொருமக ளேயென் றுனையயிர்த் தேன்புனை யோவியம்போல்
வருமக ளேதஞ்சை வாணனென் னூர்துன்னும் வன்சுரத்தோர்
அருமக ளேயுரை யாயவள் போன வதரெனக்கே ''

(த. கோ. 343)

எனவும்,

'' முலைமுகஞ் செய்தன முள்ளெயி றிலங்கின
தலைமுடி சான்ற தண்டழை யுடையை
யலமர லாயமொ டியாங்கணும் படாஅன்
மூப்புடை முதுபதி தாக்கணங் குடைய
காப்பும் பூண்டிசின் கடையும் போகலை
பேதை யல்லை மேதையங் குறுமகள்
பெதும்பைப் பருவத் தொதுங்கினை புறத்தென
வொண்சுடர் நல்லி லருங்கடி நீவித்
தன்சிதை வறித லஞ்சி யின்சிலை
யேறுடை யினத்த நாறுயிர் நவ்வி
வலைகாண் பிணையிற் போகி யீங்கோர்
தொலைவில் வெள்வேல் விடலையோ டென்மக
ளிச்சுரம் படர்தந் தோளே யாயிடை

யத்தக் கள்ள ராதொழு வறுத்தெனப்
பிற்படு பூசலின் வழிவழி யோடி
மெய்த்தலைப் படுதல் செய்யே னித்தலை
நின்னொடு வினவல் கேளாய் பொன்னொடு
புலிப்பற் கோத்த புலம்புமணித் தாலி
யொலிக்குழைச் செயலை யுடைமா ணல்குல்
ஆய்சுளைப் பலவின் மேய்கலை யுதிர்த்த
துய்த்தலை வெண்காழ் பெறூஉங்
கற்கெழு சிறுகுடிக் கானவன் மகளே'' (அகம். 7)

எனவும் வரும்

செவிலி குரவொடு புலம்பற்குச் செய்யுள்:

''இரவேய் குழலியிவ் வேதிலன் பின்செல்ல லென்றுசொல்லாக்
குரவே யறவுங் கொடியைகண் டாய்கொடிக் கோகனகந்
தரவே யெனவந்த சந்திர வாணன் றரியலர்போஞ்
சுரவே யழல்வழி யேதனிப் போயவென் றேகையையே''
(த. கோ. 344)

எனவும்,

''தான்றாயாக் கோங்கந் தளர்ந்து முலைகொடுப்ப
ஈன்றாய்நீ பாவை யிருங்குரவே — யீன்றாள்
மொழிகாட்டா யாயினு முள்ளெயிற்றாள் சென்ற
வழிகாட்டா யீதென்று வந்து''
(திணைமாலை. நூற். 65)

எனவும் வரும்.

செவிலி சுவடுகண்டு இரங்கற்குச் செய்யுள்:

''தொடுசிலைக் கானவ ரோடிய வேற்றுச் சுவடுவையே''
யடுசிலைக் காளை யடியவை யேயறிந் தோரறிய
இடுசிலைப் பார்புரக் குந்தஞ்சை வாண னிசைக்குருகப்
படுசிலைப் பாவை பதமிவை யேவண்டு பாடுகவே''
(த. கோ. 345)

எனவரும்.

செவிலி கலந்துடன் வருவோர்க் கண்டு கேட்டற்குச் செய்யுள்:

"யானகம் போத வருந்தநும் போல்வனப் பெய்திவெய்ய
கானகம் போயினர் கண்டனி ரோகற்ப காடவிசூழ்
வானகம் போர்பயில் வானவற் கீந்தருள் வாணன் றஞ்சைத்
தேனகம் போருக மாதனை யாளுமொர் செல்வனுமே''

(த. கோ. 346)

எனவரும்.

கலந்துடன் வருவோர் புலம்பல் தேற்றற்குச் செய்யுள்:

''யான்கண்ட வண்ணலு மெண்ணருங் காதலி னேகியவென்
மான்கண் டனகண் மயில்கண்ட மாதரு மாதருமந்
தான்கண்ட தண்ணளிச் சந்திர வாணன் றரியலர்போம்
கான்கண்ட மெய்குளி ரப்பொய்கை சூழ்தஞ்சை
காண்பர்களே''

(த. கோ. 347)

எனவும்,

''நண்ணிநீர் சென்மி னமரவ ராபவேல்
எண்ணிய வெண்ண மெளிதரோ — எண்ணிய
வெஞ்சுட ரன்னானை யான்கண்டேன் கண்டாளாந்
தண்சுட ரன்னாளைத் தான்" (திணைமாலை. நூற். 89)

எனவும் வரும்.

செவிலி புதல்வியைக் காணாது கவலைகூர்தற்குச் செய்யுள்:

'' நாணினுந் தாரணி கற்புநன் றென்று நயந்துமுத்தம்
பூணினும் பாரமி தென்னுமென் பொன்னையிப் போதெனக்குச்
சேணினுஞ் சார்புகழ் வாணன்தென் மாறைமன் சேரலரைக்
காணினும் காணவந் தோவரி தாலிந்தக் கானிடையே''

(த. கோ. 348)

எனவும்,

"காலே பரிதப் பினவே கண்ணே
நோக்கி நோக்கி வாளிழந் தனவே
யகலிரு விசும்பின் மீனினும்
பலரே மன்றவிவ் வுலகத்துப் பிறரே" (குறுந். 44)

எனவும் வரும். (18)

கற்பொடு புணர்ந்த கவ்வையின் விரி இவையெனல்

189 முற்பட மொழிந்த முறையெழு மூன்றுங்
கற்பொடு புணர்ந்த கௌவையின் விரியே.

(இ - ம்) கற்பொடு புணர்ந்த கௌவையின் விரி உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) செவிலி தேற்றுவார்க்கு எதிரழிந்து மொழிதல் முதலாகச் செவிலி புதல்வியைக் காணாது கவலைகூர்தல் ஈருகச் சொன்ன இருபத்தொன்றும் கற்பொடு புணர்ந்த கௌவையின் விரியாம் என்றவாறு. (19)

## 5 மீட்சி

மீட்சியின் வகை

190 தெளித்தல் மகிழ்ச்சி வினுதல் செப்பலென
வெளிப்பட வுரைத்த மீட்சிநால் வகைத்தே.

(இ - ம்) நிறுத்த முறையானே மீட்சியின்வகை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) தெளித்தல் முதலாகச் செப்பல் ஈருக நான்கு வகையினை யுடைத்தாம் மீட்சி என்றவாறு. (20)

மீட்சியின் விரி

191 தலைவிசே ணகன்றமை செவிலிதாய்க் குணர்த்தலுந்
தலைவன் றம்மூர் சார்ந்தமை சாற்றலுந்
தலைவிமுன் செல்வோர் தம்மொடு தன்வரல்
பாங்கியர்க் குணர்த்தி விடுத்தலு மாங்கவர்

பாங்கியர்க் குணர்த்தலு மாங்கவர் கேட்டு
நற்றாய்க் குணர்த்தலும் நற்றாய் கேட்டவன்
உளங்கோள் வேலனை வினுதலும் எனவுடன்
விளம்பிரு மூன்று மீட்சியின் விரியே.

(இ - ம்) மீட்சியின் விரி உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) தலைவி சேணகன்றமை செவிலி தாய்க்கு உணர்த்துதல் முதலாக நற்றாய் கேட்டு அவன் உளங்கோள் வேலனை வினுதல் ஈறாகச் சொல்லப்பட்ட ஆறும் மீட்சியின் விரியாம் என்றவாறு

அவற்றுள், தலைவி சேணகன்றமை செவிலி தாய்க்கு உணர்த்தற்குச் செய்யுள் :

"ஏடார் மலர்க்குழல் வல்லியை யன்னையித் தீவினையே
னுடா விடமில்லை ஞாலத் தகல்வயி னன்கமலக்
காடார் பழனக் கழனிநன் னாடு கடந்துதன்னூர்
வாடா வளமனை கொண்டுசென் றானொரு வள்ளலின்றே"

(அம்பிகாபதி கோ. 409)

எனவும்.

''தெறுவ தம்ம நும்மகள் விருப்பே
யுறுதுய ரவலமொ டுயிர்செலச் சாஅய்ப்
பாழ்படு நெஞ்சம் படரடக் கலங்க
நாடிடை விலங்கிய வைப்பிற்
காடிறந் தனணங் காத லோளே'' (ஐங்குறு. 313)

எனவும் வரும்.

தலைவன் தம்மூர் சார்ந்தமை சாற்றற்குச் செய்யுள் :

'' நினையா னெதிர்ப்பட்ட நீடிருங் குன்றிது நீகுடைந்த
சுனையா மதுமலர்ச் சோலைக ளாமுவை தூயவண்டன்
மனையா மிவையினி வாணன்றென் மாறையை
வாழ்த்தலர்போல்
இனையா தெளுந்தருண் மானனை யாய்நம் மெழினகர்க்கே''

(த. கோ. 350)

எனவும்,

"முளிவயிர்ப் பிறந்த வளிவளர் கூரெரிச்
சுடர்விடு நெடுங்கொடி விடர்முகை முழங்கும்
இன்னா வருஞ்சுரந் தீர்ந்தன மென்மெல
வேகுமதி வாழியோ குறுமகள் போதுகலந்து
கறங்கிசை யருவி வீழும்
பிறங்கிருஞ் சோலைநம் மலைகெழு நாட்டே"

(ஐங்குறு. 35)

எனவும் வரும்.

தலைவி முன்செல்வோர் தம்மொடும் தன்வரல் பாங்கியர்க்கு உணர்த்தி விடுத்தற்குச் செய்யுள் ;

"புனையல ரேதிலர் காதலந் தாயர் பொருமையிற்போ
யினைதுயர் யாதொன்று மின்றிவெங் கானிகந் தியானுமம்பொன்
வனைகழ லானும் வருவதெல் லாஞ்சென்று வாணன்றஞ்சை
துனைவுட னேகுகின் றீர்சொல்லு வீரென் றுணைவியர்க்கே"

(த. கோ. 351)

எனவும்,

"கவிழ்மயி ரெருத்திற் செந்நா யேற்றை
குருளைப் பன்றி கொள்ளாது கழியுஞ்
சுரநனி வாரா நின்றன ளென்பது
முன்னுற விரைந்தனி ருரைமின்
இன்னகை முறுவலென் னாயத் தோர்க்கே"

(ஐங்குறு. 397)

எனவும் வரும்.

முன்சென்றோர் பாங்கியர்க்கு உணர்த்தற்குச் செய்யுள் :

"போதலர்ந் தல்லை முனியுமெல் லோதிப் புனையிழைதன்
காதலன் பின்வரக் கண்டனம் யாங்கண்டல் வேலிமுந்நீர்
மாதலந் தன்னிரு தோள்வைத்த வாணன்றென் மாறைவண்ணச்
சூதலந் தொல்கவிம் மித்திரள் மாமுலைத் தோகையரே"

(த. கோ. 352)

எனவரும்.

பாங்கியர் கேட்டு நற்றாய்க்கு உணர்த்தற்குச் செய்யுள்:

"வாளேய் விழிநின் மயிலனை யாடஞ்சை வாணன்வெற்பில்
வேளே யனைய விடலையின் னேசுர மீண்டினிநங்
கேனேய் பதிவரு மென்னநல் லோர்சொல்லக் கேட்டனமிந்
நாளே யனையநன் னாளுள வோசென்ற நாள்களிலே"
(த. கோ. 353)

எனவும்,

"மானதர் மயங்கிய மலைமுதற் சிறுநெறி
தான்வரு மென்ப தடமென் றோளி
யஞ்சின ளொதுங்கி யவனொடு
பஞ்சின் மெல்லடி பரல்வடுக் கொளவே"
(தொல். பொருள். அகத். நூ. 42 உரை மேற்கோள்)

எனவும் வரும்.

நற்றாய் தலைமகனுளங்கோள் வேலனை வினாதற்குச் செய்யுள்:

"தென்மாறை நன்னகர் மன்னவன் வாணன் செழுந்தஞ்சைசூழ்
பொன்மா திரத்துப் புலனுணர் வீர்சுரம் போய்வருவோன்
என்மானை யென்மனை யிற்றரு மோதன்னை யீன்றநற்றாய்
தன்மா நகருய்க்கு மோசொல்லு வீரொன்று தானெனக்கே"
(த. கோ. 354)

எனவும்,

"வேளுருக நின்னை வினவுவேன் றெய்வத்தாற்
கூறுயோ கூறுங் குணத்தினாய் — வேளுருக
என்மனைக் கேறக் கொணருமோ எல்வளையைத்
தன்மனைக்கே யுய்க்குமோ தான்" (திணைமாலை. நூற். 30)

எனவும் வரும்.

இவற்றுள், தலைவி சேணகன்றமை செவிலி தாய்க்குணர்த்தலும், தலைவன் தம்மூர் சார்ந்தமை சாற்றலுமாகிய இரண்டும் தெளித்தற் குரிய; தலைவி முன் செல்வோர் தம்மொடு தன்வரல் பாங்கியர்க் குணர்த்திவிடுத்தலும், பாங்கியர் நற்றாய்க்குணர்த்தலுமாகிய இரண்டும் மகிழ்ச்சிக்குரிய; நற்றாய் தலைமகன் உளங்கோள்

வேலனை வினுதலாகிய ஒன்றும் வினுதற்குரித்து; முன்செல்வோர் பாங்கியர்க்கு உணர்த்தலாகிய ஒன்றுஞ் செப்பற் குரித்து. (21)

வரைதற்குரிய கிளவிகள்

192 மடந்தையை யுடன்போய் வரைந்து மீடற்கு
மவள்மனை வரைதற்குந் தன்மனை வரைதற்கு
மிவையைந்து முரிய செவிலிகூற் றெழித்தே.

(இ-ம்) செவிலியின் கூற்றொழித்து ஏனைய ஐந்து கூற்றின் பகுதி உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மடந்தையை யுடன்போய் வரைந்து மீடற்கும், வரையாமல் மீண்டும் அவள் மனையின்கண்ணேயாதல் தன்மனையின் கண்ணேயாதல் வரைந்து கோடற்கும் இலக்கணத்தினுரியவாம் செவிலி கூற்றுய ஒன்றையும் ஒழித்து அல்லாத ஐந்தும் என்றவாறு. (22)

## 6 தன்மனை வரைதல்

தன்மனை வரைதலின் வகை

193 வினுதல் செப்பல் மேவலென் றிறைவன்
தனுதில் வரைதல் தான்மூ வகைத்தே.

(இ-ம்) தலைமகன் மீண்டு வந்து தன் மனையின்கண்ணே வரைதல் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) வினுதலும், செப்பலும், மேவுதலும் என மூன்று வகையினையுடைத்தாம், தலைமகன் மீண்டு வந்து தன் மனையின் கண்ணே வரைதல் என்றவாறு. (23)

தன்மனை வரைதலின் விரி

194 பணிமொழி நற்றுய் மணனயர் வேட்கையிற்
செவிலியை வினுதலுஞ் செவிலிக் கிகுளை
வரைந்தமை யுரைத்தலும் வரைந்தமை செவிலி
நற்றுய்க் குணர்த்தலு முற்றுங் கிருவருந்

தலைவியில் வந்துழித் தலைவன் பாங்கிக்
கியான்வரைந் தமைநுமர்க் கியம்புசென் றென்றலும்
தானது முன்னே சாற்றிய துரைத்தலு
மென்னுமிவ் வைந்து மின்னிலை வேலோன்
மன்னிய தன்மனை வரைதலின் விரியே.

(இ - ம்) மீண்ட தலைமகன் தலைமகளைத் தன்மனையின்கண்ணே வரைந்து கோடலின் விரி உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) பணிமொழி நற்றாய் மணனயர் வேட்கையிற் செவிலியை வினுதல் முதலாகப் பாங்கி தானது முன்னே சாற்றிய துரைத்தல் ஈருகச் சொல்லப்பட்ட ஐந்தும், மீண்ட தலைமகன் தலைமகளைத் தன்மனையின்கண்ணே வரைந்து கோடலின் விரியாம் என்றவாறு.

அவற்றுள், பணிமொழி நற்றாய் மணனயர் வேட்கையிற் செவிலியை வினுதற்குச் செய்யுள் :

''தாமாக மேவினு நம்மனைக் கேவந்து தண்சிலம்பார்
மாமா தினைமணஞ் செய்வதற் கேமரு வார்கமலப்
பூமாது கேள்வன் புகழ்த்தஞ்சை வாணன் பொருப்பிலினி
யாமா றுயிரனை யாய்சொல்வ மோவவ ரன்னையர்க்கே''
(த. கோ. 355)

எனவும்,

''நும்மனைச் சிலம்பு கழீஇ யயரினு
மெம்மனை வதுவை நன்மணங் கழிகெனச்
சொல்லி னெவனே மற்றே வென்வேன்
மையற விளங்கிய கழலடிப்
பொய்வல் காளையை யீன்ற தாய்க்கே'' (ஐங்குறு. 399)

எனவும் வரும்.

செவிலிக்கு இகுளை வரைந்தமை உணர்த்தற்குச் செய்யுள் :

''என்னு மியம்புவ தியாய்க்கினி நாமன்னை யின்றுதம்மிற்
கொன்னுரு நித்திலக் கோதைநம் மாதைக் கொடிநெடுந்தேர்க்

கன்னுடற் மண்கொண்ட வாணன்றென் மாறையிற்
காதலர்தாம்
நன்னாள் மணம்புணர்ந் தாரென்று தூதர் நவின்றனரே''
(த. கோ. 356)

எனவரும்.

வரைந்தமை செவிலி நற்றாய்க்கு உணர்த்தற்குச் செய்யுள்:

''எனைக்கே ளிருநின் றியற்றவங் கேமண வின்பமெய்தி
யனைக்கேண்மை நண்ணிய வண்ணல்பின் னாகநம்
மன்னையின்றிம்
மனைக்கே வருமென வந்துசொன் னார்தஞ்சை
வாணன்வெற்பிற்
சுனைக்கேழ் கனைக்கமு நீர்க்குழ லாய்சில தூதரின்னே''
(த. கோ. 357)

எனவும்,

''மள்ள ரன்ன மரவந் தழீஇ
மகளி ரன்ன வாடுகொடி நுடங்கும்
அரும்பதங் கொண்ட பெரும்பத வேனிற்
காதல் புணர்ந்தன ளாகி யாய்கழல்
வெஞ்சின விறல்வேற் காளையொ
டின்றுபுகு தருமென வந்தன்று தூதே''
(ஐங்குறு. 400)

எனவும் வரும்.

உற்றாங்கிருவருந் தலைவிஇல் வந்துழித் தலைவன் பாங்கிக்கு யான் வரைந்தமை நுமர்க்கியம்பு சென்று என்றற்குச் செய்யுள்:

''கோபுரஞ் சோலை கொடிமதின் மாடங் குலாவிமையோர்
மாபுரம் பொலுந்தென் மாறை வரோதயன் வாணன்வெற்பில்
நீபுரந் தேதந்த மாதையங் கியாம்வரை நீர்மைபொன்செய்
நூபுரஞ்சூழடி யாய்சென்று கூறு நுமர் தமக்கே''
(த. கோ. 358)

எனவரும்.

பாங்கி தானது முன்னே சாற்றியதுரைத்தற்குச் செய்யுள் :

"அன்னைக் கியம்பின ஞண்டகை யான்முன் னறிந்துதென்னன்
தன்னைப் பணிந்துகுற் றேவல்செய் யாது சமர்க்கெழுந்த
மன்னைப் புறங்கண்ட வாணன்றென் மாறை வரையிலெங்கள்
பொன்னைப் புணர்ந்துநுங் கேண்முன்னர் நீபொன்
புனைந்ததுவே"
(த. கோ. 359)

எனவும்,

"கருவிரன் மந்திக் கல்லா வன்பார்ப்
பிருவெதி ரீர்ங்கழை யேறிச் சிறுகோல்
மதிபுடைப் பதுபோற் ரேன்று நாட
வரைந்தனை நீயெனக் கேட்டியா
னுரைத்தென னல்லெனோ வஃதென் யாய்க்கே"
(ஐங்குறு. 280)

எனவும் வரும்.

இவற்றுள் நற்ருய்மணனயர் வேட்கையிற் செவிலியை வினு தலாகிய ஒன்றும் வினுதற்குரித்து. செவிலிக்கு இகுளை வரைந்தமை யுணர்த்தலும், வரைந்தமை செவிலி நற்ருய்க்கு உணர்த்தலும், பாங்கி தானது முன்னே சாற்றியதுரைத்தலுமாகிய மூன்றும் செப்பற்குரிய ; தலைமகன் யான் வரைந்தமை நுமர்க்கியம்பு சென்று என்றலாகிய ஒன்றும் ஏவுதற்குரித்து. (24)

உடன்போய் வரைந்து மீளுதலின் விரி

195 ஆதி யொன்றெழித் தல்லன நான்கும்
மாதினி யுடன்போய் வரைந்து மீடற்கு
நீதியி னுரிய நினையுங் காலை.

(இ - ம்) தலைமகன் புணர்ந்துடன்போய்த் தலைமகளைத் தன்னூரின் கண்ணே வரைந்து கோடல் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) நற்ருய் மணனயர்வேட்கையொழித்து அல்லாத நான்கும் தலைமகன் புணர்ந்துடன்போய்த் தலைமகளைத் தன் னூரின்கண் வரைந்துமீடற்கு உரியவாம் ஆராயுங்காலத்து என்றவாறு. (25)

ஒருவகை மீண்டுவரைதலின் விரி

**196 இருவரில் விற்கு மியைந்தபன் னொன்று
மொருவகை மீண்டுவரைதலின் விரியே.**

(இ – ம்) ஒருவகை மீண்டுவரைதலின் விரி உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) தலைமகள் தம்மூர் சார்ந்தமை யுணர்த்தல் முதலாகப் பாங்கி தானது முன்னே சாற்றியது உரைத்தல் ஈருகச் சொல்லப் பட்டன. அவள்மனை வரைதற்கும், தன்மனை வரைதற்கும் உரிய கிளவி பதினொன்றும் உடன்போய் மீண்டு வரைந்து கோடலின் விரியாம் ஒருபடியாக என்றவாறு.

ஒருபடியென்றது மேற்சூத்திரங்களுட் கவற்சி நீக்குதற்கு எனக் கொள்க. (26)

## 7 உடன்போக்கிடையீடு

உடன்போக்கிடையீட்டின் வகை

**197 போக்கறி வுறுத்தல் வரவறி வுறுத்தல்
நீக்கம் இரக்கமொடு மீட்சி யென்றுங்கு
உடன்போக் கிடையீ டொருநால் வகைத்தே.**

(இ - ம்) உடன்போக்கிடையீட்டின் வகை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) போக்கறிவுறுத்தல் முதலாக இரக்கமொடு மீட்சி ஈருக நான்கு வகையினை யுடைத்தாம் உடன்போக்கிடையீடு என்றவாறு. (27)

உடன்போக்கிடையீட்டின் விரி

**198 நீங்குங் கிழத்தி பாங்கியர் தமக்குத்
தன்செல வுணர்த்தி விடுதலுந் தலைமகள்
தன்செல வீன்றுட் குணர்த்தி விடுத்தலு**

மீன்றுட் கந்தணர் மொழிதலு மீன்றுள்
அறத்தொடு நிற்றலிற் றமர்பின் சேறலைத்
தலைவி கண்டு தலைவர்க் குணர்த்தலுந்
தலைமக டன்னைத் தலைமகன் விடுத்தலுந்
தமருடன் செல்பவ ளவன்புற நோக்கிக்
கவன்றுற் றலுமென நுவன்றவை யாறும்
முடன்போக் கிடையீட்டு விரியா கும்மே.

(இ-ம்) உடன்போக்கிடையீட்டு விரி உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) நீங்குங்கிழத்தி பாங்கியர் தமக்குத் தன்செலவுணர்த்தி விடுத்தல் முதலாகத் தமருடன் செல்பவள் அவன்புற நோக்கிக் கவன்றுற்றல் ஈருகச் சொல்லப்பட்ட ஆறும் உடன்போக்கிடையீட்டு விரியாம் என்றவாறு.

அவற்றுள், நீங்குங்கிழத்தி பாங்கியர் தமக்குத் தன்செலவுணர்த்தி விடுத்தற்குச் செய்யுள்:

''வளவேய் மிடைந்த வழிப்படர் வீர்செங்கை வாணன்றஞ்சைத்
தளவேய் நகையென் றுணைவியர் பாற்சென்று
சாற்றுமின்போர்க்
களவே ளனையவோர் காளைபின் போயினள் கான்பனிநீத்
திளவேனில் வல்லிபெற் றுங்கெவ்வ நீத்தெழி
லெய்தியென்றே''
(த. கோ. 360)

எனவும்,

''சேட்புல முன்னிய வசைநடை யந்தணிர்
நும்மொன் றிரந்தனென் மொழிவ லெம்மூர்
யாய்நயந் தெடுத்த வாய்நலங் கவின
வாரிடை யிறந்தன ளென்மின்
நேரிறை முன்கையென் னையத் தோர்க்கே''
(ஐங்குறு. 384)

எனவும் வரும்.

தலைமகள் தன்செலவு ஈன்றாட்கு உணர்த்திவிடுத்தற்குச் செய்யுள் :

"வாயார நுங்களை வாழ்த்துகின் றேன்தஞ்சை வாணன்வெற்பிற்
சாயாத மாதவத் தாழ்சடை யீரன்பர் தம்மொடின்றியான்
சேயாறு தேர்மிசைச் செல்வதெல் லாமெங்கள் சேரியிற்சென்
றியாயா கியகொடி யாட்கினி தாக வியம்புமினே"
(த. கோ. 361)

எனவும்,

"கடுங்கட் காளையொடு நெடுந்தே ரேறிக்
கோள்வல் வேங்கை மலைபிறக் கொழிய
வேறுபல் லருஞ்சுர மிறந்தன ளவளெனக்
கூறுமின் வாழியோ வாறுசென் மாக்கள்
நற்றோ ணயந்துபா ராட்டி
யெற்கெடுத் திருந்த வறனில் யாய்க்கே"
(ஐங்குறு. 385)

எனவும் வரும்.

நற்றாய்க்கு அந்தணர் மொழிதற்குச் செய்யுள் :

"மருள்கொண்ட சிந்தை மலைகிழ வோய்தஞ்சை
வாணன்வெற்பில்
வெருள்கொண்ட மென்பிணை வென்றகண் ணாள்வென்றி
வேல்வலங்கை
யருள்கொண்ட நெஞ்சினோ ரண்ணல்பின் னேயகன்
றாளகல்வா
னிருள்கொண்ட கொண்டல்செல் லாவரைசூழு
மிருஞ்சுரத்தே" (த. கோ. 362)

எனவும்,

"புன்கண் யானையொடு புலிவழங் கத்த
நயந்த காதலர் புணர்ந்துசென் றனளே
நெடுஞ்சுவர் நல்லின் மருண்ட
இடும்பை யுறுவிநின் கடுஞ்சூன் மகளே" (ஐங்குறு. 386)

எனவும் வரும்.

நற்ரு யறத்தொடு நிற்றலின் தமர்பின் சேறலைத் தலைவி கண்டு தலைவற்குணர்த்தற்குச் செய்யுள் :

'' உவலைப் பதுக்கை முரம்புசெல் லாம லுலகமங்கை
தவலைத் தவிர்த்த தமிழ்த்தஞ்சை வாணன் றரியலர்போங்
கவலைக் கடத்துச் சிலைத்திரை கோலிக் கடும்பகழித்
துவலைப் படைக்கட ரேன்றல்பொற் றேர்வங்கஞ்
சூழ்கின்றதே ''
(த. கோ. 363)

எனவரும்.

தலைமகளைத் தலைமகன் விடுத்தற்குச் செய்யுள் :

'' ஆறலை வெஞ்சிலைக் கானவ ரேலென்கை யம்பொன்றினு
னூறலை யஞ்சலெ னுண்ணிடை யாய்நும ரேவலர்முன்
சேறலை யஞ்சுவல் செல்வல்பைம் பூகச் செழும்பழுக்காய்த்
தாறலை தண்டலை சூழ்தஞ்சை வாணன் றமிழ்வெற்பிலே ''
(த. கோ. 366)

எனவும்,

'' வினையமை பாவையி னியலி நுந்தை
மனைவரை யிறந்து வந்தனை யாயிற்
றலைநாட் கெதிரிய தண்பெய லெழிலி
யணிமிகு கானத் தன்புறப் பரந்த
கடுஞ்செம் மூதாய் கண்டுங் கொண்டு
நீவிளை யாடுக சிறிதே யானே
மழகளி றுரிஞ்சிய பராரை வேங்கை
மணலிடு மருங்கி னிரும்புறம் பொருந்தி
யமர்வரி னஞ்சேன் பெயர்க்குவெ
னுமவரின் மறைகுவன் மாஅ யோளே ''
(நற்றிணை. 362)

எனவும் வரும்.

தமருடன் செல்பவள் அவன்புலம் நோக்கிக் கவன்ருற்றற்குச் செய்யுள் :

'' ஏமா னெனவஞ்சு மெற்காத் தலினவ் விரவிபொற்றேர்
வாமானின் வாழ்வன வாகபன் றட்டஞ்சை வாணனென்னர்

போமா னதரிடத் தென்னையர் தோன்றப் புறங்கொடுத்த
கோமான் மணிநெடுந் தேர்நுகம் பூண்ட குரதகமே''
(த. கோ. 365)

எனவும்,

''அறஞ்சா லியரோ வறஞ்சா லியரோ
வறனுண் டாயினு மறஞ்சா லியரோ
வாள்வனப் புற்ற வருவிக்
கோள்வ லென்னையை மறைத்த குன்றே''
(ஐங்குறு. 312)

எனவும் வரும்.

இவற்றுள், முன்னைய மூன்றும் போக்கறிவுறுத்தற்குரிய. பின்னைய மூன்றும் வரவறிவுறுத்தல் முதலாகிய மூன்றற்குந் தனித்தனி உரிய எனக் கொள்க. மேற்கூறப்பட்ட கிளவிகள் இதற்கும் ஏற்பன அறிந்து கொள்க. (28)

## 8 வரைதல்

அந்தணர் சான்றோர் முன்னிட்டு அருங்கலங் கொடுத்து வரைதல்

199 தன்னூர் வரைதலுந் தன்மனை வரைதலு
மென்னுமிவ் விரண்டொழித் தெவற்றினுங் கிழவோ
னந்தணர் சான்றோர் முன்னிட் டருங்கலந்
தந்து வரைறகுதி யென்ப.

(இ - ம்) வரைதலுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) உடன்போய்த் தன்னூரின்கண்ணே வரைதலும், மீண்டு வந்து தன்மனைக் கண்ணே வரைதலுமாகிய இரண்டும் ஒழித்து அல்லாத எல்லா வரைவின் கண்ணும் தலைமகன் அந்தணரையும், சான்றோரையும் முன்னிட்டு அருங்கலங் கொடுத்து, வரைதல் உலகத்தியற்கை எனச் சொல்லுவர் புலவர் என்றவாறு.

அவற்றுள், அவ்வாறு வரைந்துகொண்டுழிக் கண்டோர் மகிழ்ந்து கூறியதற்குச் செய்யுள் :

" சேலார் புனல்வையை சூழ்தஞ்சை வாணன்றென் மாறையினம்
வேலா னெனப்பிறர் வேட்டவர் யார்மணம் வெண்டுகிலின்
பாலா ரமளியும் பாற்கட லானது பங்கயக்கண்
மாலா யினனிவ னுந்திரு வாயினள் மாதுமின்றே "

(த. கோ. 366)

எனவும்,

" கயற்க ணாளையுங் காமனன் னானையும்
இயற்றி னார்மண மேத்தருந் தன்மையார்
மயற்கை யில்லவர் மன்றலின் மன்னிய
இயற்கை யன்புடை யாரியைந் தார்களே "

(சீவக. பதுமை. 181)

எனவும் வரும்.

# வரையியல் - விளக்கம்

நூற்பா எண்

171. வரைவு:-- தலைமகன் தலைமகளைப் பெற்றோர் முதலானோர் கொடுப்பவும், கொடாதிருப்பவும் வதுவைச் சடங்குடன் பொருந்த மணஞ்செய்து கொள்வது.

அகப்பொருட் கைக்கோள்கள் களவு, கற்பென இரண்டு. இவ்விரண்டிற்கும் தொல்காப்பியர் களவியல், கற்பியலென ஈரியல் வகுத்துரைத்தார். நம்பியார் இவ்வீரியல்களுக்குமிடையே வரையியலென ஓரியலை அமைத்துக் கொண்டுள்ளார். கைகோள் இரண்டெனக் கூறி, அவ்விரண்டிற்குமிடையே வரையியலெனத் தனியியல் வகுத்துக் கூறியதனால் முன்னதனோடு முரண்படுமோவெனின் முரண்படாது. இவ்வியல் கற்பின் நிமித்தமாகிய வரைவு கூறுதலான் இதுவும் கற்பின்பாற்படும். இவ்வாறெனின் இதனைக் கற்பின்பாற் பகுத்துக் கூறாமல் வரையியலெனத் தனியாக வகுத்துரைத்த காரணம் என்ன ? இவ்வியலில் வரைவு மலிதல் தொடங்கி உடன் போக்கிடையீடு இறுதியாகப் பலவகை கூறி, வகை ஒவ்வொன்றிற்கும் கிளவிகள் பலவாக விரித்துக் கூறுகின்றார். இதுவே தனியியல் அமைப்பிற்குரிய காரணமாகும்.

அடுத்துக் கைக்கோள் இரண்டனுள் இவ்வியலில் கூறப்படுவது களவா? கற்பா? என்ற ஐயமெழுதலியல்பு. புணர்தலும் புணர்தல் நிமித்தமும் குறிஞ்சி என்றாற்போல, இல்வாழ்க்கையும் இல்வாழ்க்கை நிமித்தமாகிய வரைவும் கற்பென்ற கைகோளேயாகும்.

174. **காதலன் முலைவிலை விடுத்தமை பாங்கி காதலிக் குணர்த்தல்:—** தலைவியின் முலைக்கு விலையாகத் தலைவன் பல வகையான பொருள்களைத் தந்ததனைத் தலைவி தோழிக்குக் கூறி, வருத்தமொழிய வேண்டுதல்.

**காதலி நற்றாய் உள்ள மகிழ்ச்சியுள்ளல்:**

தலைவி தலைவன் வரவிடுத்த முலைவிலைப் பொருள்களைக் கண்டு, நமக்கு மணக்காலமென்று நற்றாய் உள்ளத்தெழும் மகிழ்ச்சியை நினைத்துப் பார்த்தல்.

**பாங்கி தமர்வரைவெதிர்ந்தமை தலைவிக்குணர்த்தல்:—**

தலைமகனின் பெற்றோர் மணம் பேசிவரத், தலைவியின் பெற்றோர் அதனையேற்று வரவேற்றதனைத் தோழி தலைவிக்குக் கூறுதல்.

**தலைவி மணப் பொருட்டாக அணங்கைப் பராநிலை காட்டல்:—**

தலைவி தன் மணத்தின் பொருட்டாக வழிபடு தெய்வத்திற்குச் சிறப்புச் செய்து வாழ்த்தி நிற்கும் நிலையினைத் தோழி தலைவனுக்குக் காட்டல்.

**தலைவன் தெய்வங்காட்டித் தெளிப்பத் தெளிந்தமை யெய்தக் கூறல்:—**

'தலைமகன் தெய்வத்தைச் சான்றுகாட்டிச் சூளுறவு கூறிப் பிரிந்தான். அவன் சொல்லை மதியிலியாக யான் மெய்யாக மறந்து மதித்துத் தெளிந்தேன்' என்று தலைவி தோழிக்குப் பொருந்தக் கூறுவது.

**இகந்தமை இயம்பல் :—**

இகத்தல் — நீங்குதல். தலைவி தலைமகன் நீங்கினமை கூறல்.

**தெய்வம் பொறைகொளச் செல்குவமென்றல் :**

தெய்வத்தின் முன் பிரியேனென்று சூளுரைத்துப் பிரிந்து சென்ற தலைவனைக் கொடுந்தெய்வம் சீற்றமடையாமல் பொருத்தருள வேண்டிக்கொள்தற்கு இருவரும் செல்வோம் என்று தலைவி தோழியிடம் கூறுவது.

**இல்வயிற் செறித்தமை செப்பல் :—**

மெய்வேறு பாட்டாலும், ஊரிலுள்ளார் அலர் தூற்றுதலாலும் நற்றாய் உள்ளத்தில் வெறுப்படைந்து மனையின்கண் தன்னைக்காவல் செய்தாளென்று தலைவி தோழிக்குக் கூறல்.

177. வெறி — வெறியாட்டு. முருகக் கடவுளின் பொருட்டுப் பலியிட்டு அக்கடவுள் ஆவேசிக்க ஆடுங்கூத்து. இது பெரும்பான்மை வேலனால் நிகழ்த்தப்படுதலின் வேலன் வெறியாட்டு என்பர். வேலன் என்போன் முருகக் கடவுளுக்கு வழிபாடு செய்பவன். முருகனுக்குரிய வேலைக் கையில் தாங்கியமை பற்றி இப்பெயர் பெற்றான். இவன் கழங்கு பார்த்துக் குறி சொல்வதுமுண்டு. வேலன் வெறியாட்டு இக்காலத்தில் வேலன் துள்ளல் எனவும் அழைக்கப்படுகின்றது. இவ்வெறியாட்டில் ஆடு கோழி முதலியனவும் பலி கொடுக்கப்படுகின்றன.

**பாங்கி வெறி விலக்கல் :—**

செவிலி வெறியாடுபவனை அழைத்துத் தலைவிக்கு வந்த நோய் தீருமாறு சொல்லவேண்டும் என்று வேண்டியவழி, வேலன் வெறியாடுவான்; அதுபோழ்து தோழி அத்தெய்வத்தை ஆட வேண்டாமென விலக்குதல் பாங்கி வெறி விலக்கலாகும்.

**பூத்தரு புணர்ச்சி :—**

தலைவன் தலைவிக்கு அளித்த பூவினால் ஏற்பட்ட உறவு பூத்தரு புணர்ச்சி. தலைவியும் தோழியும் ஒருகால் இளம்பிராயத்தே

மலைப்பகுதிக் கண்ணுள்ள பொழிலில் விளையாடி மகிழ்ந்தனர். அதுபோழ்து அழகுமிக்க காளைப்பருவத்தானொருவன் சுனையின்கண் பூத்த குவளைப்பூக் கொண்டு அவ்வழியே சென்றான். தலைவி அவனை நோக்கி 'இப்பூவை எம் பாவைக்கு அணியத் தகுமின்' என்றாள். இளமைக் காலத்தே நிகழ்ந்த நிகழ்ச்சியினை நினைந்து நினைந்து அன்பு பூண்ட இவள் இக்காலை அவனையே மணக்க நினைத்து வருந்தி நின்றாளெனத் தோழி செவிலிக்குக் குறிப்பாகக் களவினைப் புலப்படுத்தி அறத்தொடு நிற்றல் பூத்தரு புணர்ச்சி.

புனல்தரு புணர்ச்சி:

புனல் தந்த நட்பால் ஏற்பட்ட உறவினைக் கூறுவது புனல்தரு புணர்ச்சி.

புனலாடச் சென்ற தலைவி, ஆற்றில் நீராடுங்கால் நீர்ச்சுழலால் இழுக்கப்பட்டு அமிழ்ந்தாள்; அதுபோழ்து அங்கு வந்த காளையொருவன் திடும்மென நீரிற் குதித்து அவளைத் தழுவியெடுத்து உயிர் காத்தான். அவன் தொட்டுத் தழுவியமையால் கற்புக்கு இழிவு நேராவண்ணம் அவனையே மணந்து கொள்ளக் கருதி வருந்தி நின்றாளெனத் தோழி செவிலிக்குக் குறிப்பாகக் களவினைப் புலப்படுத்தி அறத்தொடு நிற்றல் புனல்தரு புணர்ச்சி.

களிறுதரு புணர்ச்சி:—

களிறுதரு நட்பால் ஏற்பட்ட புணர்ச்சி களிறுதரு புணர்ச்சி.

தலைவியும் தோழியும் தினைப்புனம் காத்தகாலை மதவேழமொன்று எதிர்ப்பட்டது. அவ்வேழம் தினைப்பயிரையும் அழித்து அவர்களையும் நெருங்க, அவர்கள் அஞ்சி அரற்றினர். அதுபோழ்து அங்குவந்த தோன்றலொருவன் யானையால் தாக்குண்ணு வகையில் அவளைத் தன்கையாலெடுத்து ஒருபாலணைத்துக் கொண்டு, தன்கைவேலெறிந்து யானையை விலக்கிக் காத்தனன். அங்ஙனம் மெய்தொட்டமையால் அவனையே மணக்கக்கருதி வருந்தினாளெனத் தோழி செவிலிக்குக் குறிப்பாகக் களவினைப் புலப்படுத்தி அறத்தொடு நிற்றல் களிறுதருபுணர்ச்சி.

**181 தலைவி நாணழிவிரங்கல் :—** உடன்போக்கில் நாணழிவு படுமேயென்று தலைவியிரங்கிக் கூறுதல்.

**பாங்கி கையடை கொடுத்தல் :—**

கையடை — அடைக்கலம். உடன்போக்கில் தோழி தலைமகளைத் தலைமகனுக்கு அடைக்கலம் கொடுத்தனுப்பல்.

**கண்டோரயிர்த்தல் :—**

தலைவன் தலைவியர் வடிவின் மேம்பட்டால் கண்டோர் ஐயமுற்றுக் கூறுதல்.

184. **செவிலி தேற்றுவோர்க் கெதிரழிந்து மொழிதல் :—**

அழிந்து மொழிதல் — நொந்து கூறல். தோழியினால் உடன்போக்குணர்ந்த செவிலியை ஆற்றுவிப்போரிடம் செவிலி மனம் நொந்து கூறல்.

186. **நிமித்தம் போற்றல் :—** காகம் கரைந்தால் ஊர்க்குச் சென்றார் வருவாரென்று உலகில் நம்பிக்கையுண்டு. இதுபோல நன்நிமித்தம் கூறும் சகுனப்புள்ளை வாழ்த்துதல் நிமித்தம் போற்றல்.

**சுரந்தணிவித்தல் :—**

தலைவன் தலைவியர் செல்லுகின்ற சுரத்தின் வெம்மை குளிருமாறு கூறுதல்.

188. **ஆற்றிடை முக்கோர் பகவரை வினாதல் :—**

முக்கோல் — திரிதண்டு. சூலம் போன்ற அமைப்பினையுடைய தண்டினைத் தாங்கி வருவோர்; அந்தணர் உடன்போக்கில் செவிலி தலைவியைத் தேடிச் செல்லுங்கால் எதிர்வரும் முக்கோல் தாங்கிய அந்தணரை வினவுதல் முக்கோர் பகவரை வினாதல்.

**செவிலி குரவொடு புலம்பல் :—**

குரவு — குராமரம். உடன்போக்கில் தலைவியைத் தேடிச் சென்ற செவிலி தன் துயரைக் குராமரத்தொடு கூறிப்புலம்பல்.

சுவடு கண்டிரங்கல் :—

செல்லும் நிலத்தில் பதிந்துள்ள பாதக்குறியைக் கண்டு செவிலி இரங்கிக் கூறுதல்.

198. தமருடன் செல்பவள் அவன்புற நோக்கிக் கவன்றுற்றல் :— பெற்றோருடன் செல்லும் தலைவி அவன்புறங் காட்டிப் போதலை நோக்கிக் கவலைப்பட்டுத் தேறுதல்.

# கற்பியற் கருத்து

இவ்வியல் கற்பொழுக்கம் கூறுவது. பொலிவமைந்த சிறப் பினையுடைய கற்பென்று கூறப்படுவது உள்ள மகிழ்ச்சியும் ஊட லும், ஊடல் உணர்த்தலும் பிரிவும் பிறவும் பொருந்தியதாகும். கற்பென்பது இல்வாழ்க்கை, பரத்தையிற்பிரிவு, ஓதற்பிரிவு, காவற் பிரிவு, தூதிற்பிரிவு, துணைவயிற்பிரிவு, பொருள்வயிற் பிரிவு என்ற ஏழு கிளவித் தொகையினையுடையது.

**இல்வாழ்க்கை :—**

தலைவன் தலைவியர் கூடி இல்லின்கண் வாழும் வாழ்க்கையின் சிறப்புரைத்தல். இது தலைவன் மகிழ்ச்சி, தலைவி மகிழ்ச்சி, தோழி மகிழ்ச்சி, செவிலி மகிழ்ச்சி என்ற நான்கு வகையினை யுடையது.

இவ் இல்வாழ்க்கை தலைவன் தலைவி முன் தோழியைப் புகழ்தல், தலைவனைத் தோழி வாழ்த்தல், தோழி தலைவியை வரையும் நாளளவும் வருந்தாது இருந்தமை வினவ, அவள்

தான் வருந்தாது இருந்தமைக்குக் காரணம் கூறல், பின்னர்த் தோழி தலைவனிடம் வரையும் நாளளவும் நிலைபெற ஆற்றியிருந்த நிலைமை வினுதல், திருமண மனையின்கண்ணே வந்த செவிலிக்குத் தோழி இருவரது அன்பும் உறவும் உணர்த்தல், தோழி இல் வாழ்க்கை நன்றெனச் செவிலிக்கு உணர்த்தல், தலைவியின் மணமனை சென்றுவந்த செவிலி தலைமகள் கற்பினையும், அவளது நன்மனை வாழ்க்கைத் தன்மையினையும், தலைவன் தலைவியர் காதலையும் நற்ருய்க்கு உணர்த்தல் என்ற வகையில் விரிவு பெறும்.

பரத்தையிற் பிரிவு :—

பரத்தை காரணமாகத் தலைமகன் தலைவியைப் பிரிந்து செல்லுதல். இது வாயில் வேண்டல், வாயில் மறுத்தல், வாயில் நேர்வித்தல், வாயில் நேர்தல் என்ற நான்கு வகை பெறும்.

பரத்தையிற் பிரிந்த தலைமகன் தோழியைத் தனக்கு வாயிலாகும்படி வேண்டுதல் வாயில் வேண்டல்; தலைமகன் பாணன் முதலியவர்களை வாயிலாக அனுப்பத் தலைவி அவர்களையேற்காமை மறுத்தல்; (தலைமகளை வாயிலை ஏற்றுக் கொள்ளும்படி செய்தல் வாயில் நேர்வித்தல்;) தலைமகள் வாயிலை ஏற்றுக் கொள்ளுதல் வாயில் நேர்தல்,

இப்பரத்தையிற் பிரிவின் கிளவிகள் உணர்த்தவுணரும் ஊடற்குரிய கிளவிகள், உணர்ந்த வுணராக் கிளவிகள் என இரு வகைப்படும்.

உணர்த்தவுணரும் ஊடற்குரிய கிளவிகள் :—

தலைவன் பரத்தையிற் பிரிந்த வழி தலைவியின் புலவிக்கு ஏது ஈதெனக் கண்டோர் கூறலும், பிரிவில் தலைவி தனிமைப் பட்ட வழி துன்பமுற்று இரங்கிக் கூறுதலும், தோழி அது குறித்து வினுதலும், தலைமகனின் பரத்தையொழுக்கத்தைத் தலைமகள் உணர்த்தலும், தலைவியைத் தோழி கழறலும், தலைவி தோழிக்குச் செம்பூச் சூட்டி, செவ்வாடை யுடுத்து, செஞ்சாந்து பூசி செவ்வணி பூட்டி தலைவன் முன் வழி விடுப்ப அவ்வணியினை உழையர் கண்டு அழுங்கிக் கூறலும், பரத்தையர் கண்டு பழித்தலும், பரத்தையர் உலகியல் நோக்கி விடுத்தலின் தலைவன் வரவு கண்டு வாயில்கள் மொழிதலும், வரவுணர்ந்த தோழி தலைவிக்கு உணர்த்தலும்,

தலைவி எதிர்கொண்டு பணிதலும், புணர்ச்சியில் மகிழ்தலும் உணர்த்தவுணரும் ஊடற்குரிய கிளவிகளாகும்.

**உணர்த்தவுணரா ஊடற்குரிய கிளவிகள்:—**

தலைவன் ஊடல் தீர்க்குமாறு கூறவும், தலைவி அது தீராளாய் நீட்டித்தலுக்குரிய கிளவிகள் உணர்த்தவுணரா ஊடற்குரிய கிளவிகள்.

தலைவி தோழிக்கு வெள்ளணி அணிந்து விடுத்தபோது தலைவன் வாயில் வேண்டலும், தலைவி நெய்யாடினள் எனத் தோழி சாற்றலும், தலைவன் தன்மனத்து உவகை கூறலும், தலைவிக்குத் தலைவன் வரவு தோழி கூறலும், தலைவி புலத்தலும், வாயில்களை விடுத்தபோது தலைவி அவர்களை மறுத்தலும், விருந்தொடு வந்த பொழுது தலைவி பொறுத்தல் கண்டு தலைவன் மகிழ்தலும், விருந்து கண்டு நீங்கிய ஊடல் பின்னர் வெளிப்படக் கண்டு சீரேல் என்றவள் சீரடி பணிதலும், இஃது எம்தாய் தந்தையர் காணின் நன்றன்று என்று தலைவி கூறலும், அங்கவர் யாரையும் அறியேன் என்று தலைவன் கூறலும், தலைவி காமக்கிழத்தியைக் கண்டமை பகர்தலும், தோழி புலவி தவிர்த்தலும், பின்னர்த் தோழி தலைவனை அன்பிலை கொடியை என்றலும் பிறவும் இக்கிளவியின் பாற்படும்.

மகனையும் ஆற்ருமையையும் வாயிலாகக் கொண்டு தலைமகன் வந்தவழித் தலைமகள் எதிர்கொள்ளுதலும், தலைமகளைப் புணர்ந்து நீங்கியபின் வந்த தோழியொடு தன்மகனைப் புகழ்தலும், தலைவனைத் தலைவி புகழ்தலும், தோழி மனைவியைப் புகழ்தலும் பிறவும் உணர்த்தவுணரா ஊடற்குரியவாம். ஆயினும் முன் கூறியன போல ஊடற்சிறப்பற்றவை யாகும்.

**பிறபிரிவுகளின் கிளவித் தொகைகள்:—**

கற்பிற்பிரிவு அறுவகைப்படும். இவற்றுள் பரத்தையிற் பிரிவினைத் தவிர்த்து ஓதற்பிரிவு, காவற் பிரிவு, தூதிற் பிரிவு, துணைவயிற் புரிவு, பொருள்வயிற் பிரிவு என்பனவற்றின் கிளவித் தொகைகள். பிறிவறிவுறுத்தல், பிரிவுடன் படாமை, பிரிவுடன் படுத்தல், பிரிவுடன் படுதல், பிரிவுழிக் கலங்கல், வன்புறை, வன்பொறை, வருவழிக் கலங்கல், வந்துழி மகிழ்ச்சி என்ற ஒன்பது வகையினையுடையது.

# கற்பியல்

கற்பு

200. பொற்பமை சிறப்பிற் கற்பெனப் படுவது
மகிழ்வு மூடலு மூட லுணர்த்தலும்
பிரிவும் பிறவும் மருவிய தாகும்.

இவ்வோத்து என்னபெயர்த்தோவெனின், கற்புணர்த்தினமை யிற் கற்பியல் என்னும் பெயர்த்து.

(இ - ம்) கற்பென்னுங் கைகோளது இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) பொலிவமைந்த சிறப்பினையுடைய கற்பென்று சொல்லப்படுவது உள்ள மகிழ்ச்சியால் ஊடலும், ஊடலுணர்த்தலும் பிரிவும் பிறவும் பொருந்தியதாம் என்றவாறு.

பிற என்றதனுற் பிரிந்துழி வரும் விகற்பம் எல்லாம் கொள்ளப் படும். (1)

கற்பிற்குரிய கிளவித் தொகை

201 இல்வாழ்க் கையே பரத்தையிற் பிரிவே
லோதற் பிரிவே காவற் பிரிவே
தூதிற் பிரிவே துணைவயிற் பிரிவே
பொருள்வயிற் பிரிவெனப் பொருந்திய வேழும்
வளமலி கற்பின் கிளவித் தொகையே.

(இ - ம்) கற்பினது கிளவித்தொகை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) இல்வாழ்க்கை முதலாகப் பொருள்வயிற் பிரிதல் ஈறுகச் சொல்லப்பட்ட ஏழும் கற்பின் கிளவித்தொகை என்றவாறு.

## 1 இல்வாழ்க்கை

இல்வாழ்க்கையின் வகை

202 கிழவோன் மகிழ்ச்சி கிழத்தி மகிழ்ச்சி
பாங்கி மகிழ்ச்சி செவிலி மகிழ்ச்சியென்
றீங்கு நால்வகைத் தில்வாழ்க் கையே.

(இ - ம்) இல்வாழ்க்கையின் வகை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) கிழவோன் மகிழ்ச்சி முதலாகச் செவிலி மகிழ்ச்சி ஈறுகச் சொல்லப்பட்ட நான்கு வகையினையுடைத்தாம், இல்வாழ்க்கை என்றவாறு. (3)

இல்வாழ்க்கையின் விரி

203 தலைவன் றலைவிமுன் பாங்கியைப் புகழ்தலுந்
தலைவனைப் பாங்கி வாழ்த்தலுந் தலைவியை
வரையுநா ளளவும் வருந்தா திருந்தமை
யுரையா யென்றலும் பெருமக ளுரைத்தலுந்
தலைவனைப் பாங்கி வரையுநா ளளவும்
நிலைபெற வாற்றிய நிலைமை வினுதலும்
மன்றல் மனைவரு செவிலிக் கிகுளை
யன்புற வுணர்த்தலும் வாழ்க்கைநன் றறைதலும்
மணமனைச் சென்று வந்த செவிலி

பொற்றொடி கற்பியல் நற்றாய்க் குணர்த்தலும்
நன்மனை வாழ்க்கைத் தன்மை யுணர்த்தலு
மன்னவர் காத லறிவித் தலுமெனு
மின்னவை பத்தும் இல் வாழ்க்கை விரியே.

(இ - ம்) இல்வாழ்க்கையின் விரி உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) தலைவன் தலைவிமுன் பாங்கியைப் புகழ்தல் முதலாக அன்னவர் காதல் அறிவித்தல் ஈறாகச் சொல்லப்பட்ட பத்தும் இல்வாழ்க்கை விரியாம் என்றவாறு.

அவற்றுள், தலைவன் தலைவிமுன் பாங்கியைப் புகழ்தற்குச் செய்யுள் :

"நின்மே லடுத்த பசலையின் காரண நின்றுணைவி
யென்மே லடுத்த வியல்பினன் றேபெற்ற தேழுலகுந்
தன்மே லடுத்த புகழ்த்தஞ்சை வாணன் றமிழ்க்கிரிநுண்
பொன்மே லடுத்தன போற்சுணங் கீன்ற புணர்முலையே"

(த. கோ. 367)

எனவும்,

"அதிரிசை யருவிய பெருவரைத் தொடுத்த
பஃறே னிறாஅ வல்குநர்க் குதவும்
நுந்தைநன் னாட்டு வெந்திறன் முருகென
நின்னோய்க் கியற்றிய வெறிநின் றோழி
யென்வயி னோக்கலிற் போலும் பன்னாள்
வருந்திய வருத்தந் தீரநின்
திருந்திழைப் பணைத்தோள் புணரவந் ததுவே"

(தொல். பொருள். கற். நூ. 5 உரை மேற்கோள்)

எனவும் வரும்

தலைவனைப் பாங்கி வாழ்த்தற்குச் செய்யுள் :

"தெரியா டகவிதழ்ப் பூங்கொன்றை வேணியுந் தேவியும்போற்
பிரியா துறையப் பெறுகுதி ராற்பிறை மானுநெற்றிப்

புரியாழ் நிகர்மொழிப் பூவையு நீயும் புணர்ந்தபல்கேழ்
வரியார் சிலையண்ண லேதஞ்சை வாணன்றென் மாறையிலே"
(த. கோ. 368)

எனவும்,

"எக்கர் ஞாழற் பூவி னன்ன
கணங்குவள ரிளமுலை மடந்தைக்
கணங்குவளர்த் தகறல் வல்லா தீமே" (ஐங்குறு. 149)

எனவும் வரும்.

பாங்கி, தலைவியை வரையு நாளளவும் வருந்தா திருந்தமை: விளுதற்குச் செய்யுள்:

"கோங்கநன் மாமுகைக் கொங்கைநல் லாய்மணம் கூடுமெல்லை
யாங்கன மாற்றி யிருந்தனை நீயிப மாசயிலந்
தாங்கன மாறத் தலம்புனை வாணன் றமிழ்த்தஞ்சைவாழ்
பூங்கன மார்குழ லாரலர் மாலைப் பொறைசுமந்தே"
(த. கோ. 369)

எனவரும்.

தலைமகள் வருந்தாதிருந்ததற்குக் காரணங் கூறற்குச் செய்யுள்

"மைதோய்ந் தலர்ந்த மலர்த்தடஞ் சூழ்தஞ்சை
வாணனென்னர்
மெய்தோய்ந்த செந்நிற வேல்விழி யாய்துயர்
வெள்ளம்வெற்பர்
கைதோய்ந் தளிப்ப வசோகத்த வாய்நிறங் கால்வனவாய்
நெய்தோய்ந் தனதழை யேபுனை யாக்கொண்டு நீந்தினனே"
(த. கோ. 370)

எனவும்,

"மட்டம் பெய்த மணிக்கலத் தன்ன
விட்டுவாய்ச் சுனைய பகுவாய்த் தேரை
தட்டைப் பறையிற் கறங்கு நாடன்
றொல்லைத் தீங்க ணெடுவெண் ணிலவின்

மணந்தனன் மன்னனெந் தோளே
யின்று முல்லை முகைநா றும்மே'' (குறுந். 193)

எனவும் வரும்.

பாங்கி தலைவனை வரையு நாளளவும் நிலைபெற ஆற்றிய நிலைமை வினாதற்குச் செய்யுள்:

'' அயிரை பரந்த வந்தண் பழனத்
தேந்தெழின் மலர தூம்புடைத் திரள்கால்
ஆம்பல் குறுநர் நீர்வேட் டாங்கிவள்
இடைமுலைக் கிடந்து நடுங்க லானீர்
தொழுதுகாண் பிறையிற் றோன்றி யாநுமக்
கரிய மாகிய காலைப்
பெரிய நோன்றனிர் நோகோ யானே'' (குறுந். 178)

எனவரும்.

மன்றல்மனைவருசெவிலிக்கு இருவர் அன்புறவுணர்த்தற்குச் செய்யுள்:

'' வளங்கொண்ட தஞ்சை வரோதயன் வாணன்றென்
மாறையன்னாள்
இளங்கொங்கை கொண்டுழு தீரங்கொள் மார்பின்முத்
தேற்பவித்தி
விளங்கொண் பிறைநுதல் வேர்தரும் போகம்
விளைத்தன்புசேர்
உளங்கொண் டருத்துத லாலன்னை யூர
னுவப்புறுமே'' (த. கோ. 372)

எனவரும்.

பாங்கி இல்வாழ்க்கை நன்றென்று செவிலிக்குணர்த்தற்குச் செய்யுள்:

'' சினவேய் சுளியுங் களிற்றண்ணல் வாணன்றென் மாறையினம்
மனவே யகலல்குல் வல்லியன் னாள்மறை யோர்முதலாம்
சனவே தனைகெடத் தானங்க ளீதலிற் சாலவுநன்
றெனவே நடக்கின்ற தாலன்னை நாடொறு மில்லறமே''
(த. கோ. 373)

எனவரும்.

மணமனைச் சென்றுவந்த செவிலி, தலைமகள் கற்பு நற்றாய்க்கு உணர்த்தற்குச் செய்யுள் :

"ஒன்றே நமக்குவந் தெய்திய நன்மை யுடன்றெதிர்ந்தார்
வன்றே லமர்வென்ற வாட்படை வாணன்றென் மாறையில் வாழ்
நின்றேகை கற்பி னிலைமையெண் ணுதெதிர் நின்றுவென்றிட்
டன்றே வடக்கிருந் தாள்மடப் பாவை யருந்ததியே"
(த. கோ 374)

எனவரும்.

செவிலி நற்றாய்க்குத் தலைமகள் நன்மனை வாழ்க்கைத்தன்மை உணர்த்தற்குச் செய்யுள் :

"விண்மே லமரர் விரும்பம ராவதி வெள்ளமுந்நீர்
மண்மே லடைந்தன்ன வாழ்க்கைய தானது வாணன்றஞ்சைப்
பண்மே லளிமுரல் குங்குமத் தோளவர் பங்கயம்போல்
கண்மே லருள்பெற்று வாழ்மட மாதர் கடிமனையே"
(த. கோ. 375)

எனவும்,

"முளிதயிர் பிசைந்த காந்தள் மென்விரல்
கழுவுறு கலிங்கங் கழாஅ துடீஇக்
குவளை யுண்கண் குய்ப்புகை கமழத்
தான்றுழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவ னுண்டலி
னுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதன் முகனே"
(குறுந். 167)

எனவும் வரும்.

செவிலி நற்றாய்க்கு இருவர் காதலும் அறிவித்தற்குச் செய்யுள் :

"நனையகத் தல்கிய நாண்மல ரோதி நயந்துறையும்
மனையகத் தல்லிடை வைகுத லாற்றஞ்சை வாணனென்னார்
வினையகத் தல்குதல் செல்லுவ ரேனுமவ் வேந்தர் பொற்றேர்
முனையகத் தல்கல்செல் லாதொரு நாளு முகிழ்நகையே"
(த. கோ. 376)

எனவும்,

"கானங் கோழிக் கவர்குரற் சேவல்
ஒண்பொறி யெருத்திற் றண்சித றுறைப்பப்
புதனீர் வாரும் பூநாறு புறவிற்
சீறூ ரோளே மடந்தை வேறூர்
வேந்துவிடு தொழிலொடு செலினுஞ்
சேந்துவர லறியாது செம்மல் தேரே" (குறுந். 242)

எனவும் வரும்.

இவற்றுள், தலைவன் தலைவிமுன் பாங்கியைப் புகழ்தலாகிய ஒன்றும் கிழவோன் மகிழ்ச்சிகுரித்து ; தலைவனைப் பாங்கி வாழ்த்தல் முதலாகச் செவிலிக்கு வாழ்க்கை நன்றென்றறைதல் ஈறுகச் சொல்லப்பட்ட ஆறனுள், பெருமகள் உரைத்தலாகிய ஒன்றுங் கிழத்தி மகிழ்ச்சிக்குரித்து ; அல்லாத ஐந்தும் பாங்கி மகிழ்ச்சிக் குரிய ; செவிலி நற்றாய்க்குத் தலைமகள் கற்பியல் உணர்த்தல் முதலாகிய மூன்றுஞ் செவிலி மகிழ்ச்சிக்குரிய எனக்கொள்க. (4)

## 2 பரத்தையிற் பிரிவு

பரத்தையிற் பிரிவின் வகை

204 வாயில் வேண்டல் வாயில் மறுத்தல்
வாயினேர் வித்தல் வாயி னேர்தலென்
றுய பரத்தையி னகற்சிநால் வகைத்தே.

(இ - ம்) பரத்தையிற் பிரிவின்வகை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) வாயில்வேண்டல் முதலாக வாயினேர்தல் ஈறுக நான்கு வகையினை யுடைத்தாம் பரத்தையிற்பிரிவு என்றவாறு. (5)

உணர்த்த உணரும் ஊடற்குரிய கிளவிகள்

205 காதலன் பிரிவுழிக் கண்டோர் புலவிக்
கேதுவீ தாமிவ் விறைவிக் கென்றலுந்
தனித்துழி யிறைவி துனித்தழு திரங்கலு
மீங்கிது என்னெனப் பாங்கி வினுதலு
மிறைமகன் புறத்தொழுக் கிறைமக ளுணர்த்தலுந்
தலைவியைப் பாங்கி கழறலுந் தலைவி

செவ்வணி யணிந்து சேடியை விடுப்புழி
யவ்வணி யுழையர்கண் டழுங்கிக் கூறலும்
பரத்தையர் கண்டு பழித்தலும் பரத்தைய
ருலகிய ஞேக்கி விடுத்தலிற் றலைவன்
வரவுகண் டுவந்து வாயில்கள் மொழிதலும்
வரவுணர் பாங்கி யரிவைக் குணர்த்தலும்
முதிரா மென்முலை யெதிர்கொண்டு பணிதலும்
புணர்ச்சியின் மகிழ்வுமென் றுரைத்த பன்ஞென்று
முணர்த்த வுணரு மூடற்குரிய.

(இ - ம்) பரத்தையிற்பிரிவில் உணர்த்தவுணரும் ஊடற்குரிய விரி உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) காதலன் பிரிவுழிக்கண்டோர் புலவிக்கு ஏது ஈதாம் இவ்விறைவிக்கென்றல் முதலாகப் புணர்ச்சியின் மகிழ்தல் ஈருகச் சொல்லப்பட்ட பதிஞென்றும் உணர்த்தவுணரும் ஊடற்குரியவாம் என்றவாறு.

அவற்றுள், காதலன் பிரிவுழிக் கண்டோர் புலவிக்கு ஏது ஈதாம் இவ்விறைவிக்கென்றற்குச் செய்யுள் :

'' மாறையர் காவலன் வாணன்றென் றஞ்சையில் வாணுதற்கிவ்
வாறையர் காரண மாகுமென் றேகொங்கை யானையுடன்
சாறையர் வீதிய ரிப்பறை யார்ப்பத் தயங்குகுழல்
சூறையர் சூறைகொள் வான்வய லூரனைச் சூழ்ந்தனரே ''
(த. கோ. 377)

எனவரும்.

தனித்துழி இறைவி துனித்தழுது இரங்கற்குச் செய்யுள் :

'' வன்போ தணிதொங்கல் வாணன்றென் மாறை மகிழ்நர்நம்மேல்
அன்போடு நன்னெஞ் சறிவறைபோக வழலுள்வெந்த
பொன்போ னிறங்கொண் டிரவுங்கண் ணீரும் புலர்வதுபார்த்
தென்போ லெவரிங்ங னேயிமை யாம லிருப்பவரே ''
(த. கோ. 378)

எனவும்,

''சிறைபனி யுடைந்த சேயரி மழைக்கண்
பொறையரு நோயொடு புலம்பலைக் கலக்கிப்
பிறருங் கேட்குந ருளர்கொ லுறைசிறந்
தூதை தூற்றுங் கூதிர் யாமத்
தானுளம் புலம்புதொ றுளம்பும்
நாநவில் கொடுமணி நல்கூர் குரலே'' (குறுந். 86)

எனவும் வரும்.

ஈங்கிது என்னெனப் பாங்கி வினாதற்குச் செய்யுள்:

''எம்மா திரமும் புரவலர்த் தேடி யிரந்துழல்வோர்
தம்மா துயரந் தணித்தருள் வாணன் றமிழ்த்தஞ்சைவாழ்
நம்மாவி யன்னவர் நாடொறு நாடொறு நல்கவுநீ
விம்மா வருந்துவ தென்பிரிந் தாரின் விளங்கிழையே''

(த. கோ. 379)

எனவரும்.

இறைமகன் புறத்தொழுக்கு இறைமகள் உணர்த்தற்குச் செய்யுள்:

'தாராக நல்கினர் காரிகை யாய்தஞ்சை வாணன்றன்னைச்
சேரா தவரென்னத் தீவினை யேனையச் செங்கண்வன்கட்
காரா கழனிக் கரும்பினஞ் சாயக் கதழ்ந்துசெந்நெல்
ஆரா தயலிற்பஞ் சாயாரு மூர ரயலவர்க்கே''

(த. கோ. 380)

எனவும்,

''என்கேட்டி யேழா யிருநிலத்தும் வானத்தும்
முன்கேட்டுங் கண்டு முடிவறியேன் — பின்கேட்
டணியிகவா நிற்க வவனணங்கு மாதர்
பணியிகவான் சாலப் பணிந்து''

(திணைமாலை. நூற். 135)

எனவும் வரும்.

தலைவியைப் பாங்கி கழறற்குச் செய்யுள் :

"புனையலங் காரநங் கற்பியல் போற்றியும் போற்றருஞ்சீர்
மனையறம் பாலித்தும் வாழ்வதல் லாற்றஞ்சை வாணனன்னு
டனையவண் டார்குழ லாரணங் கேநமக் கன்பரிந்நாள்
இனையரென் ருர்வமில் லாவுரை யாட லியல்பல்லவே"
(த. கோ. 381)

எனவும்,

"இதுமற் றெவனோ தோழி துனியிடை
யின்ன ரென்னு மின்னாக் கிளவி
இருமருப் பெருமை யீன்றணிக் காரான்
உழவன் யாத்த குழவியி னகலாது
பாஅற் பைம்பயி ராரு மூரன்
திருமனைப் பலகடம் பூண்ட
பெருமுது பெண்டிரே மாகிய நமக்கே" (குறுந். 181)

எனவும் வரும்.

தலைவி செவ்வணியணிந்து சேடியை விடுப்புழி அவ்வணி உழையர் கண்டு அழுங்கிக் கூறற்குச் செய்யுள் :

"வேளாண் மரபு விளக்கிய வாணன்மின் னார்கழல்சூழ்
தாளான் வளங்கெழு தஞ்சையன் னீர்சங்கந் தந்தநன்னீர்த்
தோளா மணியன்ன தொல்குல வோடையிற் றோன்றியபூ
வாளா வலர்தொடுப் பார்க்கெங்ங னேவந்து வாய்த்ததுவே"
(த. கோ. 382)

எனவும்,

"அரத்த முடீஇ யணிபழுப்பப் பூசிச்
சிரத்தையாற் செங்கழுநீர் சூடிப் — பரத்தை
நினைநோக்கிக் கூறினு நீமொழிய லென்று
மனைநோக்கி மாண விடும்" (திணைமா. நூற். 144)

எனவும் வரும்.

பரத்தையர் கண்டு பழித்தற்குச் செய்யுள் :

'' படியொன்று சாலி யனையவர் சேரிப் படர்பவளக்
கொடியொன்று நீல மலர்ந்தது காட்டக் கொடியவெம்போர்
வடியொன்று கூரிலை வேல்வல்ல வாணன்றென்
மாறையிற்பொற்
றொடியொன்று தோள்மட வார்சேரி வாய்வந்து
தோன்றியதே ''
(த. கோ. 383)

எனவரும்.

பரத்தை யுலகியல் நோக்கி விடுத்தலிற் றலைவன் வரவு கண்டு உவந்து வாயில்கள் மொழிதற்குச் செய்யுள் :

'' வாருந்து பச்சிள நீர்முலை யார்மதன் வாணன் றஞ்சை
யாருந் தொழத்தகு மெம்பெரு மாட்டிதன் னேவலினுற்
சேரும் பரத்தையர் சேரியி லேசென்ற சேடியைக்கண்
டூருந் திரைப்புன லூரன்வந் தானின் றுலகியற்கே ''
(த. கோ. 384)

எனவரும்.

தலைமகன் வரவு பாங்கி அரிவைக்குணர்த்தற்குச் செய்யுள் :

'' தள்ளா வளவயல் சூழ்தஞ்சை வாணன் றரியலர்போல்
உள்ளா துனைப்பண் டகன்றன ராயினு முள்ளியிப்போ
தெள்ளாது வந்துன் கடையினின் றூர்நம் மிறைவர்குற்றங்
கொள்ளா தெதிர்கொள்வ தேகுண மாவது கோமளமே ''
(த. கோ. 385)

எனவரும்.

தலைவனைத் தலைவி எதிர்கொண்டு பணிதற்குச் செய்யுள் :

'' மருவிற் பெருநல மன்னுவ தாந்தஞ்சை வாணன்வெற்பர்
ஒருவிற் பசலை யுருக்குவ தாநமக் கூடலெவ்வா(று)
இருவிற் புருவ விளங்கொடி யேயெய்து மெய்தலில்லாத்
திருவிற் புனைநறுந் தார்வரை மார்பர் திருமுனின்றே ''
(த. கோ. 386)

எனவரும்.

புணர்ச்சியின் மகிழ்தற்குச் செய்யுள் :

" மன்னவர் காம நெடுங்கடல் வாணன்றென் மாறையன்னுள்
தொன்னலம் வார்முலே மத்தந் தழீஇத்தடந் தோளிணையாம்
பன்னக நாணிற் கடைந்திதழ் வார்திரைப் பட்டநன்னீர்
இன்னமிழ் தார்ந்திமை யோரமை யாவின்ப மெய்தினரே "

(த. கோ. 387)

எனவரும். (6)

உணர்த்த உணரா ஊடற்குரிய கிளவிகள்

206 வெள்ளணி யணிந்து விடுத்துழிப் புள்ளணி
மலேவே லண்ணல் வாயில் வேண்டலும்
தலேவிநெய் யாடிய திருவே சாற்றலுந்
தலேவன் தன்மனத் துவகை கூறலும்
தலேவிக் கவன்வரல் பாங்கி சாற்றலுந்
தலேவி யுணர்ந்து தலேவனெடு புலத்தலும்
பாணன் முதலாப் பாங்கன் ஈருப்
பேணிய வாயில்கள் பெரியோன் விடுத்துழி
மறுத்தலும் விருந்தொடு வந்துழிப் பொறுத்தல்கண்
டிறையோன் மகிழ்தலு மிறைமகள் விருந்துகண்
டொளித்த வூடல் வெளிப்பட நோக்கிச்
சீறே லென்றவள் சீறடி தொழலும்இஃ
தெங்கையர் காணின் நன்றன் றென்றலு
மங்கவர் யாரையு மறியே னென்றலும்
காமக் கிழத்தியைக் கண்டமை பகர்தலுந்
தாமக் குழலியைப் பாங்கி தணித்தலுந்
தணியா ளாகத் தலேமக னூடலு
மணிவளேப் பாங்கி யன்பிலே கொடியையென்
றிணர்த்தார் மார்பனே யிகழ்தலும் பிறவு
முணர்த்த வுணரா வூடற் குரிய.

(இ - ம்) உணர்த்த உணரா ஊடற்குரிய கிளவிகளே உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) வெள்ளணியணிந்து விடுத்துழித் தலைவன் வாயில் வேண்டல் முதலாகப் பாங்கி தலைவனை அன்பிலை கொடியையென் றிகழ்தல் ஈருகச் சொல்லப்பட்டனவும், பிறவும் உணர்த்த உணரா ஊடற்குரியவாம் என்றவாறு.

அவற்றுள்,

வெள்ளணியணிந்து விடுத்துழிப் புள்ளணி மலைவேல் அண்ணல் வாயில்வேண்டற்குச் செய்யுள் :

'' என்பாற் குறையை நினைந்து மருதெதிர் கொள்ளவல்லே
தன்பாற் புலவி தணிசென்று நீதஞ்சை வாணன்வைய
மன்பாற் பரவும் புகழுடை யானரு ளேயனையா
யுன்பாற் புலவி யுருள்வண்ண வார்குழ லொண்ணுதலே''
(த. கோ. 388)

எனவரும்.

தலைவி நெய்யாடியது இகுளை சாற்றற்குச் செய்யுள் :

'' மலர்புரை யேர்கொண்ட வாட்கணெங் கோமங்கை வாணன்றஞ்சைப்
புலர்புகழ் பாலற் பயந்துநெய் யாடினள் பாங்கெவர்க்கு
மலர்புரை நீடொளி யாடியுட் பாவையன் னட்குளநீர்
புலர்புன லூரவென் னேதிரு வுள்ளமிப் போதுனக்கே''
(த. கோ. 389)

எனவும்,

'' குவளை மேய்ந்த குறுந்தா ளெருமை
குடநிறை தீம்பால் படுஉம் ஊர
புதல்வனை யீன்றிவள் நெய்யா டினளே''
(தொல். பொருள். கற். நூ. 5 உரை மேற்கோள்)

எனவும் வரும்.

தலைவன் தன் மனத்துவகை கூறற்குச் செய்யுள் :

'' மையணி வேல்விழி வாணுதல் கூர்ந்தது வாணன்றஞ்சைக்
கொய்யணி நாண்மலர் கொம்பரன் னாள்குழ விப்பயந்து

நெய்யணி மேனியி லையவி பூண்ட நிலையறிந்தே
கையணி வால்வளை யைக்கண்ட நாளினுங் காதன்மையே''
(த. கோ. 390)

எனவரும்.

தலைவிக்கு அவன்வரல் பாங்கி சாற்றற்குச் செய்யுள் :

''ஏரார் புதல்வன் பிறந்தனன் வாழிய வென்னுமுன்னே
வாரார் வளமனை வந்துநின் றூர்கங்குல் வாணன்றஞ்சை
நீராவி நீல நெடுங்கண்மின் னேநின்னை நீப்பதல்லால்
தேரா தொழிகுவ ரோபெரி யோர்தஞ் சிறுவனையே''
(த. கோ 391)

எனவும்,

''நெடுநா வொண்மணி கடிமனை யிரட்டக்
குரையிலைப் போகிய விரவுமணற் பந்தர்ப்
பெரும்பாண் காவல் பூண்டென வொருசார்த்
திருந்திழை மகளிர் விரிச்சி நிற்ப
வெறியுற விரிந்த அறுவை மெல்லணைப்
புனிறுநாறு செவிலியொடு புதல்வன் றுஞ்ச
வையவி யணிந்த நெய்யாட் டீரணிப்
பசுநெய் கூர்ந்த மென்மை யாக்கைச்
சீர்கெழு மடந்தை யீரிமை பொருந்த
நள்ளென் கங்குற் கள்வன் போல
வகன்றுறை யூரனும் வந்தனன்
சிறந்தோன் பெயரன் பிறந்த மாறே''
(நற்றிணை. 40)

எனவும் வரும். இது, முன்னிலைப் புறமொழி.

தலைவி உணர்ந்து தலைவனொடு புலத்தற்குச் செய்யுள் :

''வயங்கே ழுலகும் புரக்கின்ற வாணன்றென் மாறையன்ன
நயங்கேழ் பெருவள நல்குநல் லூர நயந்துநண்ணி
முயங்கேல் சிறுவற் பயந்தவென் மேனியின் முத்துவடந்
தயங்கே ரகமுழு தும்பழு தாமது தானினக்கே''
(த. கோ. 392)

எனவும்,

"கரும்புநடு பாத்தியிற் கலித்த வாம்பல்
சுரும்புபசி களையும் பெரும்புன லூர
புதல்வனை யீன்றவெம் மேனி
முயங்கன்மோ தெய்யநின் மார்புசிதைப் பதுவே"
(ஐங்குறு. 65)

எனவும் வரும்.

பாணன் முதலாகப் பாங்கன் ஈருகப் பேணிய வாயில்கள் பெரியோன் விடுத்துழித் தலைமகள் பாணனை மறுத்தற்குச் செய்யுள்

"தலையா கியதன்மை யூரற்கு வாணன் றமிழ்த்தஞ்சைசூழ்
மலையா கியமதில் வையைநன் ளுட்டெங்கை மான்படுக்குங்
கலையாகு நின்னிசைக் கண்ணிகொண் டேஎதிர் கன்றுதின்னிப்
புலையா கடக்கவெம் மிற்போக போக புறங்கடையே"
(த. கோ. 393)

எனவும்,

"புலைமக ஞதலிற் பொய்ந்நின் வாய்மொழி
நில்லல் பாண செல்லினிப் பரியல்
பகலெஞ் சேரி காணி
னகல்வய லூர ஞணவும் பெறுமே"
(தொல் பொருள். கற். நூ. 9 உரை மேற்கோள்)

எனவும் வரும்.

வாயில் மறுக்கப்பட்டபாணன் கூறற்குச் செய்யுள்:

"நினக்கே தகுநின் னெடும்புன லூரனு நீயுமவன்
தனக்கே தகுவை தமிழ்த்தஞ்சை வாணன் றடங்கிரிசூழ்
புனக்கே கயமன்ன நின்னடி போற்றிப் புகன்று கன்றும்
எனக்கே தகுமிகை யாலெம்பி ராட்டி யெறிந்தகல்லே"
(த. கோ. 394)

எனவரும்.

தலைமகள் விறலிவாயின் மறுத்தற்குச் செய்யுள்:

"வன்புன லூர்வையை சூழ்தஞ்சை வாணனை வாழ்த்தலர்போற்
கண்புன லூருமென் காதல்கண் டேநின் கடைத்தலைக்கே

தண்புன லூரன்வந் தானென்று சாற்றினை தானமுறப்
பண்புன லூரர்களெல் லாம்படி யேற்றுண்ணும் பாண்மகளே ''
(த. கோ. 395)

எனவும்,

'' விளக்கி னன்ன சுடர்விடு தாமரைக்
களிற்றுச்செவி யன்ன பாசடை தயங்க
வுண்டுறை மகளி ரிரியக் குண்டுநீர்
வாளை பிறழு மூரற்கு நாளை
மகட்கொடை யெதிர்ந்த மடங்கெழு பெண்டே
தொலைந்த நாவி னுலைந்த குறுமொழி
யுடம்பட் டோராத் தாயரோ டொழிபுடன்
சொல்லலை கொல்லோ நீயே வல்லைக்
கன்றுபெறு வல்சிப் பாணன் கையதை
வள்ளுயிர்த் தண்ணுமை போல
வுள்யாது மில்லதோர் போர்வையஞ் சொல்லே ''
(நற்றிணை. 310)

எனவும் வரும். பிறவும் அன்ன.

விருந்தொடு வந்துழித் தலைமகள் பொறுத்தல்கண்டு தலைமகன் மகிழ்தற்குச் செய்யுள் :

'' புரவே யெதிர்ந்த நமக்கு விருந்தின்று போலவென்றும்
வரவே புணர்ந்தநம் மாதவம் வாழிய வாணன்றஞ்சைக்
குரவேய் கருமுகிற் கொந்தள பாரக் குரும்பைக்கொங்கை
யரவேய் நுடங்கிடை யாள்விழி யூர்சிவப் பாற்றுதற்கே ''
(த. கோ. 396)

எனவும்,

'' தடமருப் பெருமை மடநடைக் குழவி
தூண்டொறும் யாத்த காண்டகு நல்லில்
கொடுங்குழை பெய்த செழுஞ்செய் பேதை
சிறுதாழ் செறித்த மெல்விரல் சேப்ப
வாழை யீர்ந்தடி வல்லிதின் வகைஇப்
புகையுண் டமர்த்த கண்ணள் தகைபெறப்
பிறைநுதற் பொறித்த சிறுநுண் பல்வியர்

அந்துகிற் றலையிற் றுடையினள் நப்புலந்து
அட்டி லோளே யம்மா வரிவை
எமக்கே வருகதில் விருந்தே சிவப்பா ளன்று
சிறியமுள் ளெயிறு தோன்ற
முறுவல் கொண்டே முகங்கான் கம்மே''
(நற்றிணை. 120)

எனவும் வரும்.

தலைமகள் விருந்துகண்டொளித்த ஊடல் பள்ளியிடத்து வெளிப் படத் தலைமகன் சீறேல் என்றவள் சீறடிதொழற்குச் செய்யுள்:

''தெரியோர் பொருட்டன்று தேர்வின்றி யூடல்
செயிர்த்தவர்க்குக்
கரியோர் தெளித்தென்ன காரணங் காட்டுவர் கானுண்டுதேன்
வரியோர் தொடைப்புயன் வாணன்றென் மாறை
மலர்த்திருவே
பெரியோர் பொறுப்பரன் றேசிறி யோர்கள் பிழைத்தனவே''
(த. கோ. 397)

எனவரும்.

இஃதெங்கையர் காணின் நன்றென்றற்குச் செய்யுள்:

''எண்போன நெஞ்சமு நீருமென் பாத மிறைஞ்சுதல்நுங்
கண்போலு மெங்கையர் காணினன் றேரகயன் மாத்திரத்துத்
திண்போ தகந்தொறுந் தீட்டிய வாணன் செழுந்தஞ்சைசூழ்
வண்போ தளவிய நீர்வையை நாட்டுறை மன்னவரே''
(த. கோ. 398)

எனவரும்.

அங்கவர் யாரையும் அறியேன் என்றற்குச் செய்யுள்:

''பாவைநீ புலவியி னீடல் பாவியேற்கு
ஆவியொன் றிரண்டுடம் பல்ல தூற்றுநீர்க்
கூவல்வாய் வெண்மணல் குறுகச் செல்லுமே
மேவிப்பூங் கங்கையுள் விழைந்த வன்னமே''
(சீவக. குணமாலை. 167)

எனவரும்.

தலைமகள் காமக்கிழத்தியைக் கண்டமை பகர்தற்குச் செய்யுள் :

"போயே தெருவிற் றனிவிளை யாடும் புதல்வற்புல்ல
நீயே திலையல்லை நின்மக னேயிவ னீயுமவன்
தாயே வருகெனச் சேயன்ன வாணன் றமிழ்த்தஞ்சைமான்
ஏயே யெனநிற்ற லானறிந் தேன்தன்னை யெங்கையென்றே"
(த. கோ. 400)

எனவும்,

"நாயுடை முதுநீர்க் கலித்த தாமரைத்
தாதின் அல்லி யயலிதழ் புரையும்
மாசில் அங்கை மணிமருள் அவ்வாய்
நாவொடு நவிலா நகைபடு தீஞ்சொல்
யாவரும் விழையும் பொலந்தொடிப் புதல்வனைத்
தேர்வழங்கு தெருவிற் றமியோற் கண்டே
கூரெயிற் றரிவை குறுகினள் யாவரும்
காணுந ரின்மையிற் செத்தனள் பேணிப்
பொலங்கலஞ் சுமந்த பூண்டாங் கிளமுலை
வருக மாளஎன் னுயிரெனப் பெரிதுவந்து
கொண்டன ளின்றோட் கண்டுநிலைச் செல்லேன்
மாசில் குறுமக ளெவன்பே துற்றனை
நீயுந் தாயை யிவற்கென யான்தன்
கரைய வந்து விரைவனென் கவைஇக்
களவுடம் படுநரில் கவிழ்ந்து நிலங்கிளையா
நாணி நின்றோள் நிலைகண் டியானும்
பேணினெ னல்லனோ மகிழ்ந வானத்
தணங்கருங் கடவு ளன்னோள் நின்
மகன்தா யாதல் புரைவதாங் கெனவே" (அகம். 16)

எனவும் வரும்.

தலைமகளைப் பாங்கி புலவி தணித்தற்குச் செய்யுள் :

"மாவா ரணமன்ன வாணன்றென் மாறைநம் மன்னர் நின்னைப்
பாவாய் பணியவும் பார்க்கிலை நீயிடப் பாகமங்கை

தாவாத சங்கரன் கங்கைதன் கொங்கை தழீஇயிதழி
பூவார் சடைமுடி மேல்வைத்த போதும் பொறுத்தனளே''
(த. கோ. 401)

எனவும்,

''உப்பமைந் தற்றாற் புலவி யதுசிறிது
மிக்கற்றால் நீளவிடல்'' (குறள். 1302)

எனவும் வரும்.

தலைமகள் புலவி தணியாளாகத் தலைமகன் ஊடற்குச் செய்யுள்

''தழங்கார் புனல்வையை சூழ்தஞ்சைவாணன்றன தருள்போற்
பழங்காத லெண்ணலென் பைதனெஞ் சேயிவள் பண்டுபைம்பொற்
கழங்கா டிடமுங் கடிமலர்க் காவுங்கடந்து புள்ளும்
வழங்கா வழிநமக் கோர்துணை யாய்வந்த மானல்லளே''
(த. கோ. 402)

எனவும்,

''எவ்வி யிழந்த வறுமையர் பாணர்
பூவில் வறுந்தலை போலப் புல்லென்று
இனைமதி வாழிய நெஞ்சே மனைமரத்
தெல்லுற மௌவ னாறும்
பல்லிருங் கூந்தல் யாரளோ நமக்கே''
(தொல். பொருள். கற். நூ. 5 உரை மேற்கோள்)

எனவும் வரும்.

பாங்கி அன்பிலை கொடியை என்று இணர்த்தார் மார்பனை இகழ்தற்குச் செய்யுள் :

''மைந்நாண் மலர்த்தொடை வாணன்றென் மாறையெம் மன்னருவந்
தந்நாண் முயங்கி யமிழ்தென வார்ந்தனி ரார்வமுற்று
முந்நாண் மதிவட்ட மென்முலை மாதை முனிந்துநஞ்சென்
றிந்நாண் மிகவுவர்த் தீர்புல வாநிற்றி ரெங்களையே''
(த. கோ. 403)

எனவும்,

'' வேம்பின் பைங்கா யென்றோழி தரினே
தேம்பூங் கட்டி யென்றனி ரினியே
பாரி பறம்பின் பனிச்சுனைத் தெண்ணீர்
தைஇத் திங்கட் டண்ணிய தரினும்
அதுவே வெய்ய வுவர்க்கு மென்றனிர்
ஐய வற்று லன்பின் பாலே '' (குறுந். 196)

எனவும் வரும். (7)

இதுவுமது

207 ஆயிழை மைந்தனு மாற்று மையுமே
வாயி லாக வரவெதிர் கோடலும்
மணந்தவன் போயபின் வந்த பாங்கியோ
டிணங்கிய மைந்தனை யினிதிற் புகழ்தலும்
தலைவனைப் புகழ்தலுஞ் சிலைநுதற் பாங்கி
மனைவியைப் புகழ்தலு மினைய வை பிறவு
மனைவகை மொழிந்த வதன்பாற் படுமே.

இதுவும் அது.

(இ - ள்) ஆயிழை மைந்தனும் ஆற்றுமையும் வாயிலாகத் தலைமகன் வந்துழித் தலைமகள் எதிர்கோடல் முதலாகப் பாங்கி மனைவியைப் புகழ்தல் ஈருகச் சொல்லப்பட்டனவும், பிறவும் அத் தன்மைத்தாகிய உணர்த்த உணரா ஊடற்குரியவாம் என்றவாறு.

இவை வேறுகூறியது அவைபோல ஊடற்சிறப்பின்மை நோக்கி என்க.

அவற்றுள், மகனும் ஆற்றுமையும் வாயிலாகத் தலைமகன் வந்துழித் தலைமகள் எதிர்கோடற்குச் செய்யுள் :

'' வெள்ளம் பரந்தன்ன வேட்கையென் ருலு மிகப்பெரியோர்
உள்ளஞ் சிறியவர் மேற்செல்வ ரோவொளிர் கோமளஞ்செய்
வள்ளங் கமல மலர்த்தஞ்சை வாணன்றென் மாறையன்னப்
புள்ளம் புனல்வய லூரபுன் காமம் புகல்வதன்றே ''
(த. கோ. 404)

எனவும்,

''வெண்ணுதற் கம்பு ளரிக்குரற் பேடை
தண்ணறும் பழனத்துக் கிளையோ டாலு
மறிவில் யாணர் மலிகே ழூரநீ
சிறுவரி னினைய செய்தி
நகாரோ பெருமநிற் கண்டிசி னேரே'' (ஐங்குறு. 85)

எனவும் வரும்.

தலைமகனைப் புணர்ந்து நீங்கியபின் வந்த பாங்கியொடு தன் மகனைப் புகழ்தற்குச் செய்யுள்:

''இருமையி லேயும் பயன்களெல் லாந்தன்னை யீன்றநமக்
கொருமையி லேவந் துறத்தகைந் தான்மைந்த
ஞெண்சுடர்போல்
வருமயி லேகொண்டு மாதடிந் தானன்ன வாணன்றஞ்சைத்
திருமயி லேயனை யாய்புன லூரனைத் தேருடனே''
(த. கோ. 405)

எனவும்,

''இம்மை யுலகத் திசையொடும் விளங்கி
மறுமை யுலகமு மறுவின் றெய்துப
செறுநரும் விழையுஞ் செயிர்தீர் காட்சிச்
சிறுவர்ப் பயந்த செம்ம லோரெனப்
பல்லோர் கூறிய பழமொழி யெல்லாம்
வாயே யாகுதல் வாய்த்தனம் தோழி
நிரைதார் மார்பன் நெருநல் ஒருத்தியொடு
வதுவை யயர்தல் வேண்டிப் புதுவதின்
இயன்ற வணியன் இத்தெரு விறப்போன்
மாண்டொழின் மாமணி கறங்கக் கடைகழிந்து
காண்டல் விருப்பொடு தளர்புதளர் போடும்
பூங்கட் புதல்வனை நோக்கி நெடுந்தேர்
தாங்குமதி வலவவென் றிழிந்தனன் றாங்காது
மணிபுரை செவ்வாய் மார்பகஞ் சிவணப்
புல்லிப் பெரும செல்லினி யகத்தெனக்
கொடுப்போற் கொல்லான் கலுழ்தலின் தடுத்த
மாநிதிக் கிழவனும் போன்மென மகனொடு

தானே புகுதந் தோனே யானது
டடுத்தனெ ஞுகுத ஞணி யிடித்தவன்
கலக்கினன் போலுமிக் கொடியோ னெனச்சென்
றலைக்குங் கோலொடு குறுகத் தலைக்கொண்
டிமிழ்கண் முழவி னின்சீர் அவர்மனைப்
பயிர்வன போலவந் திசைப்பவுந் தவிரான்
கழங்கா டாயத் தன்றுநம் அருளிய
பழங்கண் ணோட்டமும் நலிய
அழுங்கினன் அல்லனோ வயர்ந்ததன் மணனே''

(அகம். 66)

எனவும் வரும்.

தலைவி தலைவனைப் புகழ்தற்குச் செய்யுள்:

''கொண்டானிற் றுண்ணிய கேளிர்மற்றில்லை குறிப்பினென்று
தண்டா தவர் சொன்ன சால்புகண்டேன்றல மேழ்புரக்கும்
வண்டார் மலர்ப்புயன் வாணன்றென்மாறை மகிழ்நர் முந்நாள்
உண்டா கியபழங் கேண்மையிந் நாளு மொழிந்திலரே''

(த. கோ. 406)

எனவரும்.

பாங்கி மனைவியைப் புகழ்தற்குச் செய்யுள்:

''சிறந்தார் புகழ்தருந் தீம்புன லூரன் செய் தீமையெல்லா
மறந்தார்வ மெய்தி வணங்குத லாலிவள் வாணன்றஞ்சை
நிறந்தா ரகையன்ன நித்திலம் போலு நெடுங்குலத்திற்
பிறந்தார் நிறைந்தகற் போர்வடி வேபெற்ற பெற்றியளே''

(த. கோ. 407)

எனவும்,

''யாயா கியளே மாஅ யோளே
மடைமாண் செப்பிற் றமிய வைகிய
பொய்யாப் பூவின் மெய்யா யினளே
பாசடை நிவந்த கணைக்கா னெய்தல்
இனமீ னிருங்கழி யோத மல்குதொறுங்
கயமூழ்கு மகளிர் கண்ணின் மானும்

தண்ணந் துறைவன் கொடுமை
நம்மு ணுணிக் கரப்பா டும்மே" (குறுந். 9)

எனவும் வரும். பிறவுமன்ன. (8)

பரத்தையிற் பிரிவின்விரி இவையெனல்

208 மூன்றுசூத் திரத்து மொழிந்தவை யெல்லா
மான்ற பரத்தையி னகற்சியின் விரியே.

(இ - ம்) பரத்தையிற் பிரிவின்விரி உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) காதலன் பிரிவுழிக் கண்டோர் புலவிக்கு ஏது ஈதாம் அவ்விறைவிக்கு என்றல் முதலாகப் பாங்கி மனைவியைப் புகழ்தல் ஈருகச் சொல்லப்பட்டனவெல்லாம் பரத்தையிற் பிரிவின் விரியாம் என்றவாறு.

இவை வாயில்வேண்டல் முதலாக நால்வகைக்கும் ஏற்குமாறு அறிந்துகொள்க. (9)

ஓதல் முதலிய பிரிவுகளுக்குரிய கிளவிகள்

209 பிரிவறி வுறுத்தல் பிரிவுடன் படாமை
பிரிவுடன் படுத்தல் பிரிவுடன் படுதல்
பிரிவுழிக் கலங்கல் வன்புறை வன்பொறை
வருவழிக் கலங்கல் வந்துழி மகிழ்ச்சியென்
றிருமையிற் கூறிய வொன்பது வகைய
கல்வி முதலா வெல்லாப் பிரிவும்.

(இ - ம்) நிறுத்த முறையானே ஓதற்பிரிவு முதலிய ஐவகைப் பிரிவுகளின் வகை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) பிரிவறிவுறுத்தல் முதலாக வந்துழி மகிழ்ச்சி ஈருகச் சொல்லப்பட்ட ஒன்பது வகையினை உடையவாம் கல்வி முதலாகிய ஐவகைப் பிரிவும் என்றவாறு.

## 3 ஓதற் பிரிவு

அவற்றுள், கல்விக்குப் பிரிவு தலைமகனுன் உணர்ந்த தோழி தலைமகட்கு உணர்த்தற்குச் செய்யுள் :

'' மல்வித் தகங்கொண்ட தோளுடை யான்றஞ்சை
வாணன்ருெல்சீர்
நல்வித் தகன்புவி நாவில்வைத் தோன்வையை நாடனையாய்
கல்வித் தடங்கட னீந்திய காதலர் கற்றவர்முன்
சொல்வித்த வென்றழ லார்சுரம் போகத் துணிந்தனரே ''

(த. கோ. 408)

எனவரும்.

தலைமகன் கல்விக்குப் பிரிந்துழித் தலைமகள் கார்ப்பருவங் கண்டு புலம்பற்குச் செய்யுள் :

'' யாணர்க் குழன்மொழியென் செய்கு வேன்கல்வி
யெல்லையெல்லாங்
காணப் பிரிந்தவர் காண்கில ராற்கடன் மேய்ந்துதஞ்சை
வாணற் கெதிர்ந்தவர் மங்கையர் போலுமென் வல்லுயிரின்
ஊணற்ப மென்னவெண் ணுவரு மேக முருமுடனே ''

(த. கோ. 409)

எனவரும்.

ஓதற்குப் பிரிந்துழிக் கார்ப்பருவங் கண்டு வருந்திய தலைமகளைத் தோழி யாற்றுவித்தற்குச் செய்யுள் :

'' காதற் கயம்படிந் துன்னெடு காமக் கனிநுகரா
தோதற் ககன்ற வுணர்வுடை யோருடை நீருலகம்
மாதர்க்கமைந்தருள் வாணன்றென் மாறை வரக்கடவர்
ஆதற் கணங்களை யாய்புய லேது அறிந்தருளே ''

(த. கோ. 410)

எனவும் வரும். பிறவுமன்ன.

## 4 காவற் பிரிவு

காவற் பிரிவு தலைமகனுன் உணர்ந்த தோழி தலைமகட்கு உணர்த்தற்குச் செய்யுள் :

'' விண்காவல் கொண்ட திலோத்தமைதான் முதன்
மெல்லியலார்
கண்காவல் கொண்டருள் காரிகை காவலர் கார்க்கடல்சூழ்
மண்காவல் கொண்ட மனத்தின ராயினர் வாணன் றஞ்சைப்
பண்காவல் கொண்ட மொழிச்செய்ய வாயிதழ்ப்
பைங்கிளியே ''

(த. கோ. 411)

எனவரும்.

தலைமகன் காவற்குப் பிரிந்துழித் தலைமகள் கூதிர்ப்பருவங் கண்டு வருந்தியதற்குச் செய்யுள் :

'' மன்னுயிர் காவலன் வாணன்றென் மாறையில் வந்தளியார்
என்னுயிர் காவல ரேந்திழை யாயித யம்புலர்த்திக்
கொன்னுயிர் வாடை கொடும்பனி நீரிற் குளிர்குழைத்துப்
பின்னுயி ராமலென் மேற்பூசு நாளுமென் பேசுவதே ''

(த. கோ. 412)

எனவரும்.

காவற்குப் பிரிந்துழிக் கூதிர்ப்பருவங் கண்டு வருந்திய தலைமகளைத் தோழி யாற்றுவித்தற்குச் செய்யுள் :

'' வரற்கால மென்றென் றெனப்பல கூடல் வளைத்துதிரம்
விரற்கால வின்று மெலியன்மின்னே சென்று மேதினிகாத்
துரற்கால குஞ்சர மஞ்சமஞ் சூர்ந்துறை வீசுகின்ற
சரற்காலம் வந்தடைந் தார்தஞ்சை வாணன் தமிழ்வெற்பரே''

(த. கோ. 413)

எனவரும்.

## 5 தூதிற் பிரிவு

தூதிற்குப் பிரிவு தலைமகனுன் உணர்ந்த தோழி தலைமகட்கு உணர்த்தற்குச் செய்யுள் :

*" தூதாக வன்பர் செலத்துணிந் தாரென்றுஞ் சொற்புலவோர்*
மாதாக வன்பசி தீர்த்தருள் வாணன்றென் மாறையிந்து
மீதாக வம்பு கிடந்தன போலுண்கண் மெல்லியலிப்
போதாக வம்புகல் வோரிக லார்தம் புரம்புகவே "

(த. கோ. 414)

எனவரும்.

தலைமகன் தூதிற்குப் பிரிந்துழித் தலைமகள் முன்பனிப் பருவங் கண்டு வருந்தியதற்குச் செய்யுள் :

*" மலிகின்ற வண்புகழ் வாணன்றென் மாறையை*
வாழ்த்தலர்போன்
மெலிகின்ற சிந்தையு மேனியுங் கொண்டு விளர்ப்பெனும்பேர்
பொலிகின்ற கஞ்சுகம் போர்த்திருந் தேனைப் புரந்தருளார்
நலிகின்ற முன்பனி நாளினண் ணார்முனை நண்ணினரே "

(த. கோ. 415)

எனவரும்.

தூதிற்குப் பிரிந்துழி முன்பனிப் பருவங் கண்டு வருந்திய தலைமகளைத் தோழி ஆற்றுவித்தற்குச் செய்யுள் :

*" சுற்றுங் குழல்சின் பிணிவிடுப் பான்வந்து தோன்றினர்பார்*
முற்றும் பொழிகின்ற முன்பனி நாள்முகி லுங்கடலும்
வற்றும் பருவத்து மண்புரப் பான்தஞ்சை வாணனென்ஞர்ச்
செற்றும் படையின்வெம் போர்தணிப் பானன்று சென்றவரே "

(த. கோ. 416)

எனவும் வரும். பிறவுமன்ன.

## 6 துணைவயிற் பிரிவு

வேந்தர்க்குற்றுழி உதவியிற்பிரிவு தலைமகனுன் உணர்ந்த தோழி தலைமகட்கு உணர்த்தற்குச் செய்யுள்:

''நண்பான மன்னர்க் கிடர்தணிப் பானெண்ணி நல்லுதவிப்
பண்பான மன்னர் படர்தலுற் ருர்பனி நீர்பொழியுந்
தண்பா னலந்தொடையம்புய வாணன் றமிழ்த் தஞ்சைவாழ்
வெண்பா னலங்கொள்செவ் வாயன்ன மேயன்ன
மென்னடையே''
(த. கோ. 417)

எனவரும்.

தலைமகன் வேந்தர்க்குற்றுழி உதவியிற் பிரிந்துழித் தலைமகள் பின்பனிப்பருவங் கண்டு வருந்தியதற்குச் செய்யுள்:

''இன்னற் படுகின்ற வென்னை யெண்ணுர்தமக் கின்றுணையாம்
மன்னர்க்குதவிப் பிரிந்தநங் காதலர் வாணன்றஞ்சைக்
கன்னற் கடிகை யறிவதல் லாற்பகல் காண்பரிதாம்
பின்னற் கனையிருள் கூர்துன்ப மேவிய பின்பனியே''
(த. கோ. 418)

எனவரும்.

வேந்தர்க்குற்றுழி உதவியிற்பிரிந்துழிப் பின்பனிப்பருவங் கண்டு வருந்திய தலைமகளைத் தோழி ஆற்றுவித்தற்குச் செய்யுள்:

''வடுக்கண் டனையகண் மங்கைநல் லாய்தஞ்சை
வாணன்வெற்பின்
அடுக்கங் குளிர வசைகின்ற வாடை யகன்றவர்க்கு
நடுக்கஞ்செய் பின்பனி நாளின்வந் தாரமர் நண்பனுற்ற
இடுக்கண் களையவென் றேயகன் கான மிகந்தவரே''
(த. கோ. 419)

எனவரும்.

## 7 பொருள்வயிற் பிரிவு

பொருள்வயிற் பிரிவு தலைமகனால் உணர்ந்த தோழி தலைமகட்கு உணர்த்தியதற்குச் செய்யுள்:

"மஞ்சைப் புனைமதின் மாறை வரோதயன் வாணர்பிரான்
தஞ்சைப் பதியன்ன வெண்ணலர் போற்றனி நாமிருக்க
நெஞ்சைப் பொருள்வயின் வைத்துநங் கேள்வர்நன்
னீண்மதியின்
பிஞ்சைப் புரைநுத லாய்பிரி வானின்று பேசினரே"

(த. கோ. 420)

எனவரும்.

தலைமகன் பொருள்வயிற் பிரிந்துழித் தலைமகள் இளவேனிற் பருவங்கண்டு வருந்தியதற்குச் செய்யுள் :

"நங்க ணிரங்க வரும்பொருள் தேட நடந்தவன்பர்
செங்க ணிருங்குயி லார்ப்பது கேட்கிலர் செந்தமிழோர்
தங்க ணிடும்பை தவிர்த்தருள் வாணன்றென் றஞ்சைவஞ்சி
திங்க ணிவந்தது போற்கவி னார்முகத் தேமொழியே"

(த. கோ. 421)

எனவரும்.

பொருள்வயிற் பிரிந்துழி இளவேனிற் பருவங்கண்டு வருந்திய தலைமகளைத் தோழி ஆற்றுவித்தற்குச் செய்யுள் :

"வார்த்தன பார மடமயி லேஃகுயின் மாருதமாந்
தேர்த்தனி வீரன் திருநாளும் வந்தது சேர்மின் சென்றூர்
தார்த்தட மேரு வெனும்புய வாணன்றஞ் சாபுரிகின்
றூர்த்தது கேட்டுவந் தார்பொருள் தேட வகன்றவரே"

(த. கோ. 422)

எனவரும். பிறவுமன்ன

## சிலபிரிவுகளின் பொதுக்கிளவிகள்

கல்வியிற்பிரிவு முதலாகிய ஐந்தனுள்ளும் தூதும் உதவியும் காரணமாகிய பிரிவின்கண் அவ்வினை ஓர் யாண்டின் முடியாது நீட்டித்து முடிந்துழித் தலைமகளுருவு வெளிப்பாடு கண்டு சொல்லி யதற்குச் செய்யுள் :

"மைக்குஞ் சரநிரை யாற்றஞ்சை வாணன் மருவலரைக்
கைக்குங் களங்கெழு பாசறை யூடு கயலும் வில்லும்
மொய்க்குஞ் சுடரிள வம்புலி தானு முயங்கியெல்லாத்
திக்குந் தொழவரு மேசுரு ளோலைத் திருமுகமே"

(த. கோ. 423)

எனவும்,

"முல்லை நாறுங் கூந்தல் கமழ்கொள
நல்ல காண்குவ மாஅ யோயே
பாசறை யருந்தொழி லுதவிநங்
காதனன் ஞட்டுப் போதரும் பொழுதே"

(ஐங்குறு. 446)

எனவும் வரும்.

பாசறைமுற்றி மீண்டு ஊர்வயின் வந்த தலைமகன் பாகற்குச் சொல்லியதற்குச் செய்யுள் :

"மால்கொண்ட வாரண வாணன்றென் மாறை வலவநண்ணூர்
கால்கொண்ட வாளமர் கையகல் பாசறைக் கைவயின்முட்
கோல்கொண்ட வாறுநின் னேவல்கொண் டியானிக்கொடி
நெடுந்தேர்
மேல்கொண்ட வாறுநம் மூர்வந்த வாறும் வியப்பெனக்கே"

(த. கோ. 424)

எனவரும்.

தலைமகளோடிருந்த தலைமகன் கார்ப்பருவங்கண்டு உவந்து சொல்லியதற்குச் செய்யுள் :

"கொத்தல ரோதியங் கொம்பரன் ஞள்பொங்கு கொங்கைவிம்ம
முத்தல ராக முயங்கினம் யாமுழு நீர்விழிபோல்

மைத்தலர் நீல மலர்வயல் சூழ்தஞ்சை வாணன்வண்மைக்
கைத்தல மான வினிப்பொழி வாழிய கார்முகிலே''
(த. கோ. 425)

எனவும்,

''தாழிரு டுமிய மின்னித் தண்ணென
வீழுறை யினிய சிதறி யூழிற்
கடிப்பிகு முரசின் முழங்கி யிடித்திடித்துப்
பெய்தினி வாழியோ பெருவான் யாமே
செய்வினை முடித்த செம்ம லுள்ளமோ
டிவளின் மேவின மாகிக் குவளைக்
குறுந்தா ணண்மலர் நாறும்
நறுமென் கூந்தன் மெல்லணை யேமே'' (குறுந். 270)

எனவும் வரும். (10)

# கற்பியல் - விளக்கம்

கற்பு :—

கற்பிக்கப்படுவது கற்பு. கற்பித்தல் என்பது அறிவும், ஒழுக்கமும் தலைவனால் கற்பிக்கப்படுதலும், பெற்றோர், செவிலி, மற்றும் அந்தணர் முதலிய சான்றோரால் கற்பிக்கப்படுவதும் எனக் கற்பித்தல் பலவாகும்.

களவின்கண் ஒழுகிவந்த ஒத்தார் இருவர் ஊரறிய மணஞ் செய்து கொண்டு இல்லறம் நடத்துதலே கற்பென்றும் கூறுவர். கற்பென்பதற்குத் தொல்காப்பியர் கரணத்தொடு பொருந்தி கொள்ளுதற்குரிய மரபினையுடைய கிழவன், கொள்ளுதற்குரிய மரபினையுடைய கிழத்தியை, கொடுத்தற்குரிய மரபினையுடையார் கொடுப்பக் கொள்வதென்பார்.

203 பெருமகளுரைத்தல் :— தலைவி தான் ஆற்றி இருந்த காரணத்தைத் தோழிக்கு உரைத்தல்.

**மன்றல்மனைவரு செவிலிக்குஇருவரது அன்புறவுணர்த்தல் :—**

திருமண மனையின்கண்ணே வந்த செவிலிக்குத் தோழி இருவரது அன்பும் உறவும் உணர்த்தல்.

205 **தனித்துழி இறைவி துனித்து அழுது இரங்கல் :—** பரத்தையிற் பிரிவின்கண்ணே தலைவி தனிமைப்பட்டவழி துன்ப முற்று இரங்கிக்கூறுதல்.

**இறைமகன் புறத்தொழுக்கு இறைமகள் உணர்த்தல் :—**

புறத்தொழுக்கு — பரத்தையர் ஒழுக்கம். பரம் என்ற சொல்லுக்கு வடமொழியில் அந்நியம் என்று பொருள். அந்நியம் புறமாகும். எனவே புறத்தொழுக்கு, பரத்தையர் ஒழுக்கமாம்.

தலைவன் தன்னிடத்தொழுகுமொழுக்கம் இன்று பரத்தையரிடம் ஒழுகுகின்ருன் என்று தலைவி தோழிக்குக் கூறுதல் இறைமகன் புறத்தொழுக்கு இறைமகளுணர்த்தலாகும்.

**செவ்வணி :—**

தலைவி பூப்பெய்தி மூன்றுநாட் கழித்து நான்காம் நாள் நீராடிய பின், அந்நிகழ்ச்சியைப் பரத்தையிற் பிரிந்த தலைவனுக்கு உணர்த்தும் முறையாகும். இந்நிகழ்ச்சியில், தலைவி தோழிக்குச் செம்பூச் சூட்டிச் செவ்வாடையுடுத்துச் செஞ்சாந்து பூசி செவ்வணி பூட்டிச் செப்புப் பாலிகையுள் செம்பூவும் நீருமிட்டுக் கொடுத்துத் தலைவன் முன்வழி விடுப்பத் தோழி அங்குச் சென்று தலைவன் அடிமீது பூவையும் நீரையும் பெய்து திரும்புவாள். தலைவியின் பூப்பு நிகழ்ச்சியைத் தலைவன் இதனல் அறிவான்.

206 **வெள்ளணி :—** தலைவி புதல்வனைப் பெற்றெடுத்துப் பதினைந்துநாட் கழித்துப் பதினைரும்நாள் நெய்யாடிய நிகழ்ச்சியைப் பரத்தையிற் பிரிந்த தலைவனுக்கு உணர்த்தும் முறையாகும். இந் நிகழ்ச்சியில் தலைவி தோழிக்கு வெண்பூச்சூட்டி வெள்ளாடையுடுத்து வெண்சாந்து பூசி, வெண்முத்துப் பூட்டிச் செப்புப் பாலிகையுள்

வெண்பூவும் நீருமிட்டுக் கொடுத்துத் தலைவன் முன்வழி விடுப்பாள். தோழி அங்கு சென்று தலைவனடி மீது பூவையும் நீரையும் பெய்து திரும்புவாள். இதனால் தலைவன் புதல்வன் பிறந்தமையுணர்வான்.

**விருந்து கண்டொளித்த ஊடல் :—**

தலைமகன் பரத்தையிற் பிரியத் தலைமகள் ஊடல் கொள்வாள். தலைமகன் மீண்டு வருகாலை விருந்துடன்வர தலைவி கொண்ட ஊடல் நீங்கும். இதுவே விருந்து கண்டொளித்த ஊடல் ஆகும்,

# ஒழிபியற் கருத்து

ஒழிபெனப்படுவது அகப்பாட்டிற்குரிய உறுப்புக்களையும், அகப்பாட்டிலக்கணத்தினின்று வழுவியதனையும், வழுவமைதியினையும் தழுவியதாகும்.

அகப்பாட்டு உறுப்புக்கள் :—

திணை, கைகோள், கூற்று, கேட்போர் இடம், காலம், பயன், முன்னம், மெய்ப்பாடு, எச்சம், பொருள் வகை, துறை எனப் பன்னிரண்டு.

திணையும் கைகோளும் அகத்திணையியலில் சொல்லப்பட்டன.

கூற்று :—

இது களவிற் கூற்றிற்குரியார், கற்பிற் கூற்றிற்குரியார் என இருவகைப்படும்.

களவிற் கூற்றிற்குரியார் :—

தலைவன், தலைவி, பார்ப்பான், பாங்கன், பாங்கி, செவிலி என்ற அறுவர்.

**கற்பிற் கூற்றிற்குரியார் :—**

நற்றாய், கண்டோர், பாணன் கூத்தர், விறலி, பரத்தை, அறிவர் என்ற எழுவர். ஆகக் கூற்றிற்குரியவர் பதின்மூவர்.

**கூற்றிற்குரிமையில்லாதார் :—**

தந்தை, தன்னையர், உயங்கு நோய் அறிவோர், ஊரவர், அயலோர், சேரியோர் என்போர்.

**தலைவன் கூற்றிற்குச் சிறப்பு விதி :—**

உடன்போக்கில் தலைமகள் தமர் பின் சென்றால், தலைமகன் தலைமகளோடு ஆணையும் கூறுவன்.

**தலைவி கூற்றிற்குச் சிறப்புவிதி :—**

உடன் சென்று மீண்ட தலைமகள் தலைமகனோடு சுரத்தியல்பு கூறலும், அவன் பிரிந்த காலத்து வருந்தி நெஞ்சொடும் பிறரொடும் சுரத்தியல்பு சொல்லுதலும் உரியள்.

**நற்றாய் கூற்று நிகழாவிடம் :—**

நற்றாய் தலைவனொடும் தலைவியொடும் கூறமாட்டாள்.

**நற்றாய் கூற்றிற்குச் சிறப்பு விதி :—**

தலைவியின் உடன்போக்கை அறிந்தபோது நற்றாய் அந்தணர், தெய்வம், அயலோர், அறிவர், சிந்தை நோய், அறிவோர், செவிலி, தோழி, கண்டோர் என்பாருடன் கூற்று நிகழ்த்துவாள்.

**செவிலி கூற்று நிகழுமிடம் :—**

தலைவியது உடன்போக்கை அறிந்தபோது செவிலித்தாய், நற்றாய் தோழி முதலியவருடன் கூற்று நிகழ்த்துவாள்.

**கண்டோர் கூற்று நிகழுமிடம் :—**

கண்டோர் செவிலித்தாய், நற்றாய், தோழியர், தலைவன், தலைவி என்போருடன் கூற்று நிகழ்த்துவர்.

மேற்சொல்லப்பட்டோரேயன்றி பார்ப்பான், பாங்கர், பாணர், கூத்தர், விறலியர், பரத்தையர், அறிவர் என்ற எழுவரும் தலைமகனோடும், தலைமகளோடும் இடந்தொறும் இடந்தொறும் பொருந்தியவற்றைக் கூறுவர்.

கூற்றுப் பற்றிய புறனடை :—

தலைவன் இடைச்சுரமருங்கில் தலைவியிடம் ஆணை கூறலும், தலைவி உடன்போய் மீண்டவளாயின் சுரத்தியல் பேசலுமுண்டு. அதுகாலை நெஞ்சு, நாண், அறிவு, பரிதி, திங்கள், மாலை, புள், மா, புணரி, கானல் முதலியவற்றோடும், பிறவற்றோடும் தன் சொல் கேட்குநபோலவும், தனக்கவை இன்சொல் சொல்வன போலவும் ஏவல் செய்குந போலவும், தேற்றுந போலவும் உட்கொண்டு தலைவி பேசுதலுமுண்டு. கூற்றிற்குரியார் பதின்மூவரும்யாரொடும் கூறாது தம்மொடு தாமே கூறியுமமைவர்.

கேட்போர் :—

தலைவன் கூற்றும், தலைவி கூற்றும் பார்ப்பான் முதலாகிய பதின்மரும் கேட்பர்.

இடம் :—

முறைப்பட்ட காரியம் நிகழும் நிலம் இடமாகும்.

காலம் :—

இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்றபடி நின்று உலகத்துள்ள பொருள்களை அறியும்படியாக நடப்பது காலம்.

பயன் :—

இப்பொருளை இது பயக்கும் என்பது பயன்.

முன்னம் :—

முன்னமென்பது குறிப்பு. இத்தன்மையர்க்கு இவ்விடத்து இன்னது தருமெனக் குறிப்பினை வெளிப்படுத்துவது முன்னம்.

மெய்ப்பாடு :—

மெய்ப்பாடென்பது சுவை. நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், உவகை, வெகுளியென்னும் எட்டும் எண்வகைச் சுவையாகும். இவ்வெட்டு வகை மெய்ப்பாடும் அவ்விடத்து நிகழும் பொருளைக் கேட்டோர் மெய்யினிடத்தே வெளிப்பட நிற்பன. மெய்ப்பாடு — வெளிப்பாடு.

எச்சம் :—

ஒரு சொல்லேயாயினும், குறிப்பேயாயினும் கூட்டிப் பொருள் முடித்தல் வேண்டி நிற்பது எச்சம்.

பொருள்வகை :—

இத்திணைக்கே இப்பொருள் உரித்தாவதன்றி எல்லாத்திணைக்கும் பொதுவாய் நிற்கும் நிலைமை பொருள் வகையாகும்.

துறை :—

அகத்திணையியலில் சொல்லப்பட்ட மக்களும், மாவும் முதலியன வன்றிப் பிற பொருள்களும் ஒரு செய்யுளில் பொருந்தி வரலாம். அங்ஙனம் வந்தாலும் முன்சொன்ன பொருள்களோடு, பிற பொருள்களைப் பொருந்தும் வகைகளை ஆய்ந்து, இலக்கணம் வழுவாதபடி உரைப்போரும் கேட்போரும் கூறியதாகவோ, கேட்டதாகவோ இல்லாமல், பாடலை உரைக்கும் புலவன் தன் கூற்றாக உரைப்பது துறையாகும். கவிக்கூற்றே துறையென்பார் நற்கவிராச நம்பி.

எச்சப் புறனடை :—

அகப்பாட்டுறுப்புக்கள் பன்னிரண்டுள் எச்சம் என்னும் உறுப்பினைத் தவிர்ந்து அகப்பாட்டென்று தொடரவும் பெறும்.

அகப்பாட்டின் வரும் பொருள்கள் :—

அகப்பாட்டில் உவமைப் பொருளும் இறைச்சிப் பொருளும் என்ற இருவகைப் பொருளும் வரும்.

**உவமவகை :—**

அகப்பாட்டினுள் அமைந்து கிடக்கும் உவமப்பொருள் உள்ளுறையுவமம், வெளிப்படையுவமம் என இருவகையினை யுடையது.

இவையிரண்டனுள் உள்ளுறையுவமம் எனப்படுவது ஆராய்ந் தறியும் பகுதியினையுடைத்தாய், புள்ளொடும் விலங்கொடும் பிறவொடும் தோன்றும்.

வெளிப்படையுவமம் வினை, பயன், மெய், உரு புலப்படுமாறு நின்று விளங்கும்.

இறைச்சிப் பொருளென்பது தெய்வம் முதலாகிய பொருளின் கண்ணே பிறக்கும்..

**அகப்புறக் கைக்கிளை :—**

இது வழுவமைதிக்குரியது. காமம் அமையாத இளமைத் தன்மையினையுடைய தலைமகள்பால் தலைமகன் குறிப்பறியாது சென்று சார்ந்து அவளொடு மேலும் மேலும் கூறுவது அகப்புறக் கைக்கிளை. இவ்வகப் புறக்கைக்கிளை தலைமைப்பாடில்லாதார்க்கும் இழிந்த குலத்தார்க்கும் உரியதாகும்.

**அகப்பொருட் பெருந்திணை :—**

அகன்றுழிக்கலங்கல், மடற்கூற்று, குறியிடையீடு, தெளிவிடை விலங்கல், வெறிகோள், வினைந்துடன் போக்கு, பூப்பியல் உரைத்தல், பொய்ச்சூளுரை, தீர்ப்பில் ஊடல், போக்கழுங்கியல்பு, பாசறைப் புலம்பல், பருவம் மாறுபடுதல், வன்புறை, எதிர்ந்து மொழிதல், அன்புறு மனைவியும் தானும் வனமடைந்து நோன்பு நோற்றல் என்பனவும் பிறவும் அகப்பொருட் பெருந்திணைக்குரியன.

**அகப்புறப் பெருந்திணை :—**

மடலேறுதல், விடைதழுவல், குற்றிசை, குறுங்கலி, சுரநடை, முதுபாலை, தாபதநிலை, தபுதாரநிலை என்பனவற்றில் இயற்பெயர் சுட்டாமல் வருவது அகப்புறப் பெருந்திணையாகும்.

அகப்பாட்டிற்குரியார் :—

அகப்பாட்டினுள் பாடப்படுவோர் பாட்டுடைத் தலைவன் கிளவித் தலைமகனென இருவராவர். இவருள் பாட்டுடைத் தலைவனே உயர்ந்தோர் ஆவர்.

தலைமக்கட் பெயர்கள் :—

அகப்பாட்டில் வரும் தலைமக்கட்குக் கூறப்படும் பெயர்கள், நிலப்பெயர், வினைப்பெயர், பண்புகொள் பெயர், குலப்பெயர் இயற்பெயர் என்பனவாகும்.

இப்பெயர்களுள் இயற்பெயர் கிளவித் தலைமகனுக்குச் சொல்லார்.

தலைமக்கள் வருந்திறம் :—

அகப்பாட்டில் பாட்டுடைத் தலைவன், கிளவித் தலைவன் என ஒருங்கே வருதலும், பாட்டுடைத் தலைமகனே வருதலும், கிளவித் தலைமகனே வருதலும், அவ்விருவரும் வாராதொழிதலுமுரியவாம், என்று சொன்னர் அறிந்தோர்.

அகப்புறப்பாட்டு :—

அகப்புறப்பாட்டு அகப்பாட்டிற்குச் சொன்ன இலக்கணங்களைக் கடவாது எனவே அகப்பாட்டிற்குச் சொன்ன உறுப்புக்களனைத்தும் அகப்புறப்பாட்டிற்கும் உரியனவாகும்.

முதல், கரு, உரி :—

முதல், கரு, உரி என்ற மூன்று பகுதினையுடைய பொருளும் தத்தமக்குரிய திணையோடு கூடிய இலக்கண முறைமையிற் வாராது, பிற திணையோடு மயங்குதலுமுரியவாம். இதுவே திணை மயக்கமாகும்.

அதிகாரப் புறனடை :—

ஒழிபியல் என்ற இவ்வதிகாரத்திற் கூறப்பட்ட பொருளே யன்றித் தீதில் பொருள் வேறே தோன்றினவாயினும் அவற்றை இதனுள் எடுத்தோதப்பட்ட பொருள்களோடு கூட்டி உண்மை புலப்படச் சொல்லி பிறர்க்குணர்த்துதல் குணமுடையோர்க்கு இலக்கணமாகும்.

# ஒழிபியல்

ஒழிபு

210 ஒழிபெனப் படுவ தகப்பாட் டுறுப்பும்
வழுவு மமைவுந் தழுவிய தாகும்.

இவ்வோத்து என்ன பெயர்த்தோவெனின், முன்னர் வந்த இயல் நான்கனுள்ளும் கூறிக் கூறாத ஒழிபிலக்கணம் உணர்த்தினமையான், ஒழிபியல் என்னும் பெயர்த்து.

(இ - ம்) ஒழிபாவது இதுவென்பது உணர்த்துதல் நுதலிற்று

(இ - ள்) ஒழிபென்று சொல்லப்படுவது அகப்பாட்டிற்குரிய உறுப்புக்களையும், அகப்பாட்டிலக்கணத்தினைத் தப்பியதனையும், அமைந்த நீதியினையும் பொருந்தியதாம் என்றவாறு. (1)

அகப்பாட்டுறுப்புக்கள்

211 திணையே கைகோள் கூற்றே கேட்போ
ரிடனே காலம் பயனே முன்னம்
மெய்ப்பா டெச்சம் பொருள்வகை துறையென்
றப்பா லாறிரண் டகப்பாட் டுறுப்பே.

(இ - ம்) அகப்பாட்டுறுப்பின் பாகுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) அகப்பாட்டுறுப்பாவன திணை முதலாகத் துறை ஈருகப் பன்னிரு பகுதிப்பட்டனவாம் என்றவாறு. (2)

## 1, 2, திணையும், கைகோளும்

212 அவற்றுள்,
முன்னவை யிரண்டுஞ் சொன்னவை யாகும்.

(இ - ம்) நிறுத்தமுறையானே திணையும் கைகோளும் இவை யென்பது உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) அப்பன்னிரண்டினுள்ளும் முற்பட்ட திணையும் கைகோளுமாகிய இரண்டும், மேல் அகத்திணை இயலிற் சொல்லப் பட்டனவாம் என்றவாறு. (3)

## 3 கூற்று

களவிற் கூற்றிற் குரியார்

213 தலைவன் தலைவி பார்ப்பான் பாங்கன்
பாங்கி செவிலியென் றீங்கிவ் வறுவருஞ்
சாற்றிய களவிற் கூற்றிற் குரியர்.

(இ - ம்) களவுக் கைகோளகத்துக் கூற்றிற்கு உரியோரை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) தலைவன் முதலாகச் சொல்லப்பட்ட அறுவரும், மேற் சொல்லப்பட்ட களவினகத்திற் கூற்றிற்கு உரியவராவர் என்ற வாறு. (4)

கற்பிற் கூற்றிற் குரியார்

214 நற்றாய் கண்டோர் பாணன் கூத்தர்
விறலி பரத்தை யறிவரென் றெழுவரு
மறுவரென் றவரு மாகிய வனைவருங்
குறைவறு கற்பிற் கூற்றிற் குரியர்.

(இ - ம்) கற்பிற் கூற்றிற்கு உரியோரை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) நற்றாய் முதலாகிய எழுவரும், மேற்சொல்லப்பட்ட தலைவன் முதலாகிய அறுவருமாகிய பதின்மூவரும் குற்றம் அற்ற கற்பினகத்துக் கூற்றிற்கு உரியவராவர் என்றவாறு. (5)

கூற்றிற் குரிமை யில்லாதார்

215 பயந்தோன் றன்னை யுயங்குநோ யறிவோ
ரூரவ ரயலோர் சேரியோ ரென்றிவர்
முகத்துரை நிகழா வகப்பொரு ளகத்தே.

(இ - ம்) இதுவும் அகப்பொருளகத்து முகத்துரை நிகழா தோரை உணர்த்துதல் நுதலிற்று,

(இ - ள்) பயந்தோன் முதலாகச் சொல்லப்பட்டவர் முகத்துச் சொல் நிகழா அகப்பொருளகத்து என்றவாறு.

எனவே, அவை பிறரால் எடுத்துப் பிறரால் ஒரு சொற்றந்து அடுத்துக் கூறப்படும் எனக்கொள்க.

இதற்குச் செய்யுள் :

"............எந்தையு நிலனுறப் பொருந்நின்
சீறடி சிவப்ப வேயவல் குலவி
............................
வெவனில குறுமக ளியங்குதி யென்னும்"

இத்தன்மையன தந்தை கூறினுைகத் தோழி எடுத்துக் கூறுதலாம். பிறவுமன்ன. (6)

தலைவன் கூற்றிற்குச் சிறப்பு விதி

216 தமர்வரி னிடைசுரந் தன்னிற் கிழத்தியோ
டமர்தரு கிழவோன் ஆணையுங் கூறும்.

(இ - ம்) தலைவன் கூற்றுள் வரைவியலின் ஒழிபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) புணர்ந்துடன் போகின்ற காலத்துத் தலைவன் தமர் பிற்செல்லின், தலைமகன் தலைமகளோடு ஆணையுங் கூறுவன் என்றவாறு.

உதாரணம் :

"கடுஞ்செம் மூதாய் கண்டுங் கொண்டும்
நீவிளை யாடுக சிறிதே"

என்பதாம். (7)

தலைவி கூற்றிற்குச் சிறப்பு விதி

217 உடன்போய் மீண்ட கொடுங்குழை மடந்தை
பிரிவுழித் தலைவனொடு சுரத்தியல் பேசலும்
பிரிந்துழி நெஞ்சொடும் பிறரொடும் வருந்திச்
சொல்லலு முரியள் சொல்லுங் காலை.

(இ - ம்) தலைவி கூற்றுள் வரைவியலின் ஒழிபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) புணர்ந்துடன்போய் மீண்ட தலைமகள் பிரியுங் காலத்துத் தலைமகனோடு சுரத்தியல்பு கூறலும், அவன் பிரிந்த காலத்து வருந்தி நெஞ்சொடும் பிறரொடும் சுரத்தியல்பு சொல்லலும் உரியள் ஆராய்ந்து சொல்லும் இடத்து என்றவாறு.

எனவே, புணர்ந்துடன் போகாத் தலைமகள் சுரத்தியல்பு கூறாள் என்றவாறு.

தலைமகள் பிரியுங்காலத்து அவனொடு சுரத்தியல்பு கூறற்குச் செய்யுள் :

"நினைத்தலும் நினைதிரோ வைய அன்றுநாம்
பனைத்தா ளோமைப் படுசினை பயந்த
பொருந்தாப் புகர்நிழ லிருந்தன மாக
நடுக்கஞ் செய்யாது நண்ணுவழித் தோன்றி
யொடித்துமிசை கொண்ட வோங்குமருப் பியானை
பொறிபடு தடக்கை சுருக்கிப் பிறிதோர்

அறியிடை யிட்ட வளவைக்கு வேறுணர்ந்து
என்றூழ் விடரகஞ் சிலம்பப்
புன்றலை மடப்பிடி புலம்பிய குரலே'' (நற்றிணை. 318)

என்பதாம்.

பிரிந்துழி, நெஞ்சோடு சுரத்தியல்பு கூறற்குச் செய்யுள்:

''வில்லுழவர் நாளு மறுகு புள்ளும் போவர் கொல்''

என்பதாம்.

பிரிந்துழிப் பிறரொடு சுரத்தியல்பு கூறற்குச் செய்யுள்:

''அறியாய் தோழி யவர்சென்ற வாறே
தறுகட் கொண்க னன்ன
சிறுகண் யானை திரிதரு காடே''

என்பதாம். இவை களவின் வழி வந்த கற்பின் ஒழிபு எனக் கொள்க.

நற்றாய் கூற்று நிகழாதயிடம்

218 தலைவன் றலைவியொடு நற்றாய் கூறாள்.

(இ-ம்) நற்றாய் கூற்றிற்கு எய்தியது ஒருசார் விலக்கல் நுதலிற்று.

(இ-ள்) தலைவனொடும் தலைவியோடும் நற்றாய் கூறப் பெறாள் என்றவாறு. (9)

நற்றாய் கூற்று நிகழுமிடம்

219 புணர்ந்துடன் போய துணர்ந்த பின்ன
ரந்தணர் தெய்வ மயலோ ரறிவர்
சிந்தைநோ யறிவோர் செவிலி பாங்கியொடு
கண்டோர்க் குரைக்கும் பண்புடை நற்றாய்.

(இ-ம்) நற்றாய் கூற்றுக்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) அந்தணர் முதலாகச் சொல்லப்பட்ட அனைவரோடும் நற்றாய் கூறும். தலைமகள் புணர்ந்துடன் போனவாறு தான் அறிந்தபின் என்றவாறு. (10)

செவிலி கூற்று நிகழுமிடம்

220 தாயொடும் பாங்கி தான்முத லாரொடுஞ்
சேயிழை செவிலியுஞ் செப்பு மாங்கே.

(இ - ம்) செவிலி கூற்றுக்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) நற்றாயோடும், பாங்கி முதலானாரோடும் தலைமகள் செவிலித்தாயும் சொல்லும், அவள் புணர்ந்துடன் போன தன்மை தான் அறிந்தபின் என்றவாறு.

இவ்விருவர் கூற்றிற்கும் உதாரணம் உடன்போக்கினுட் காட்டப்பட்டன. (11)

கண்டோர் கூற்று நிகழுமிடம்

221 தாயர் பாங்கியர் தலைவன் தலைவியோ
டேயு மென்ப கண்டோர் கூற்றே.

(இ - ம்) கண்டோர் கூற்றிற்கு எய்தியதன்மேற் சிறப்பு விதி உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) தாயர் முதலானவரோடு நிகழுங் கண்டோர் கூற்று என்று சொல்லுவர் புலவர் என்றவாறு.

உதாரணம் உடன்போக்கினுள்ளும் கற்பினுள்ளும் கண்டு கொள்க. (12)

விதந்து சொல்லப்படாதாரின் கூற்று நிகழும் திறம்

222 சாற்றா எழுவருந் தலைவன் தலைவியோ
டேற்றன கூறுப யிடந்தொறு மிடந்தொறும்.

(இ - ம்) மேற்சொல்லப்படாதவர் கூற்றுக்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) மேற்சொல்லப்படாத பார்ப்பானும், பாங்கனும், பாணனும், கூத்தரும், விறலியரும், பரத்தையரும், அறிவரும் என்கின்ற எழுவரும் தலைமகனோடும், தலைமகளோடும் இடந்தொறும் பொருந்தியவற்றைக் கூறுவர் என்றவாறு. (13)

தலைவி கூற்றிற்குப் புறனடை

223 நெஞ்சு நாணு நிறைசே ரறிவுஞ்
செஞ்சுடர்ப் பருதியுந் திங்களும் மாலையும்
புள்ளும் மாவும் புணரியும் கானலு
முள்ளுறுத் தியன்றவு மொழிந்தவை பிறவும்
தன்சொற் கேட்குந போலவுந் தனக்கவை
இன்சொற் சொல்லுந போலவு மேவல்
செய்குந போலவுந் தேற்றுந போலவும்
மொய்குழற் கிழத்தி மொழிந்தாங் கமையும்.

(இ - ம்) தலைவி கூற்றுக்கு எய்துவதொரு வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) நெஞ்சு முதலாகக் கானல் ஈருகச் சொல்லப் பட்டனவும், அவையல்லாத பிறவும் தன் சொற் கேட்கின்றன போலவும், தனக்கவை இன்சொற் சொல்லுகின்றன போலவும், ஏவல் செய்குந போலவும், தன்னைத் தேற்றுகின்றன போலவும் சொல்லிய மாத்திரத்தானே ஆற்றுந் தலைமகள் என்றவாறு.

பிறவும் என்றதனுற் கழியும், நெய்தலும், மரமுதலாயினவும் கொள்க. உதாரணம் மேற்காட்டியவற்றுள்ளும் பிறவற்றுள்ளும் கண்டுகொள்க. (14)

எல்லார் கூற்றிற்கும் புறனடை

224 இறையோன் முதலோர் யாரொடு மின்றித்
தம்மொடு தாமே சாற்றியு மமைப.

(இ - ம்) எல்லார் கூற்றுக்கும் எய்துவதொரு வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) மேற்சொல்லப்பட்ட தலைவன் முதலாகிய பதின் மூவரும் யாரொடுங் கூருது தம்மொடு தாமே கூறியும் அமைவர் என்றவாறு.

உதாரணம் மேற்காட்டியவற்றுள்ளும் பிறவற்றுள்ளும் கண்டு கொள்க. (15)

## 4 கேட்போர்

கிழவன் கூற்றும் கிழத்தி கூற்றும் கேட்போர்

225 கிழவோன் கூற்றுங் கிழத்தி கூற்றும்
பழமறை யோன்முதற் பதின்மருங் கேட்ப.

(இ - ம்) நிறுத்தமுறையானே கேட்போர் என்னும் உறுப்பைக் கூறுவான் றொடங்கித் தலைவன் கூற்றும், தலைவி கூற்றும் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) தலைவன் கூற்றும் தலைவி கூற்றும் பார்ப்பான் முதலாகிய பதின்மரும் கேட்பர் என்றவாறு.

தலைவன் தலைவியோடு நற்ருய் கூருள் எனவே, நற்ருயோடு அவ்விருவரும் கூருர் என்பது போதருதலான் மறையோன் முதலிய பதினொருவருள் நற்ருயை ஒழித்துப் பதின்மர் என்ருரென்க. (16)

மறையோன் கூற்றும் அறிஞர் கூற்றும் கேட்போர்

226 மறையோன் கூற்று மறிவர் கூற்று
மிறையோன் முதலா வனைவரும் கேட்ப.

(இ - ம்) மறையோன் கூற்றும் அறிவர் கூற்றும் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) பார்ப்பானும் அறிவருமாகிய இருவர் கூற்றும் தலைமகன் முதலாகிய எல்லாரும் கேட்பர் என்றவாறு.

இவ்விரண்டு சூத்திரத்தானுஞ் சொல்லியது கேட்போர் இவர் எனக் கொள்க. (17)

## 5 இடம்

இடம் இன்னது

227 நெறிப்படு கருமம் நிகழ்வுழி யிடமே.

(இ - ம்) நிறுத்த முறையானே இடம் என்னும் உறுப்பு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) முறைபட்ட காரியம் நிகழும் நிலம் இடம் என்னும் உறுப்பாம் என்றவாறு.

அன்றித் தன்மை, முன்னிலை, படர்க்கை எனினுமமையும். நெறிப்பட்ட கருமமாவன களவும் கற்பும் என்பனவாம். (18)

## 6 காலம்

காலம் இன்னது

228 சென்றதும் நிகழ்வது மெதிர்வது மெனமுறை
நின்று பொருளுணர நிகழ்வது காலம்.

(இ - ம்) நிறுத்த முறையானே காலம் என்னும் உறுப்பு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) இறந்த காலமும் நிகழ்காலமும் எதிர்காலமும் என, அடைவே நின்று உலகத்துள்ள பொருள்களை அறியும்படியாக நடப்பது காலம் என்னும் உறுப்பாம் என்றவாறு. (19)

## 7 பயன்

பயன் இன்னது

229 இப்பொருள் பயக்குமிஃ தென்பது பயனே.

(இ - ம்) நிறுத்த முறையானே பயன் என்னும் உறுப்பு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) இப்பொருளை இது பயக்கும் என்று சொல்லுவது பயன் என்னும் உறுப்பாம் என்றவாறு. (20)

## 8 முன்னம்

முன்னம் இன்னது

230 இன்னார்க் கின்னுழி யின்னது பயக்குமெனும்
முன்னம் தருவது முன்ன மாகும்.

(இ - ம்) நிறுத்த முறையானே முன்னம் என்னும் உறுப்பு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) இத்தன்மையர்க்கு இவ்விடத்து இன்னது தரும் என்னும் குறிப்பினை வெளிப்படுப்பது முன்னம் என்னும் உறுப்பாம் என்றவாறு. (21)

## 9 மெய்ப்பாடு

மெய்ப்பாடு இன்னவை

231 நகை முதலாமிரு நான்குமெய்ப் பாடும்
நிகழ்பொருள் மெய்ப்பட நிற்பமெய்ப் பாடே.

(இ - ம்) நிறுத்த முறையானே மெய்ப்பாடு என்னும் உறுப்பு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) நகையும், அழுகையும், இளிவரலும், மருட்கையும், அச்சமும், பெருமிதமும், உவகையும், வெகுளியும் என்னும் எட்டு வகை மெய்ப்பாடும், அவ்விடத்து நிகழும் பொருளைக் கேட்டோர் மெய்யின்கண்ணே வெளிப்பட நிற்பன மெய்ப்பாடு என்னும் உறுப்பாம் என்றவாறு. (22)

மெய்ப்பாடு ' வெளிப்பாடு ' எனக்கொள்க.

## 10 எச்சம்

எச்சம் இன்னது

232 சொல்லே யாயினும் குறிப்பே யாயினும்
சொல்லி முடித்தல் வேண்டுவ தெச்சம்.

(இ - ம்) நிறுத்த முறையானே எச்சமென்னும் உறுப்பு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) ஒரு சொல்லேயாயினும், ஒரு குறிப்பேயாயினும் கூட்டிப் பொருள் முடித்தல் வேண்டி நிற்பது எச்சம் என்னும் உறுப்பாம் என்றவாறு. (23)

## 11 பொருள் வகை

பொருள் வகை இன்னது

233 ஒருதிணைக் குரிமை பூணு நிலைமை
பொருள்வகை யென்மனுர் புலமை யோரே.

(இ - ம்) நிறுத்த முறையானே பொருள்வகை என்னும் உறுப்பு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) இத்திணைக்கே இப்பொருள் உரித்தாவது என்னுமல் எல்லாத் திணைக்கும் பொதுவாய் நிற்கும் நிலைமை பொருள்வகை என்று சொல்லுவர் அறிவுடையோர் என்றவாறு.

அவையாவன : நிரனிறை, மொழிமாற்று, சுண்ணமொழி மாற்று, அடிமறி மொழிமாற்று, அடிமொழிமாற்று, பூட்டுவிற் பொருள்கோள், புனல்யாற்றுப் பொருள்கோள், தாப்பிசைப் பொருள்கோள், அளைமறிபாப்புப் பொருள்கோள், கொண்டுகூட்டுப் பொருள்கோள் என ஒன்பதாம். (24)

## 12 துறை

துறை இன்னது

234 சொல்லிய வல்ல வொன்றினு மவற்றே
டொல்லும் வகைதேர்ந் துணர்த்தியல் வழாம
லுரைப்போர் கேட்போ ருண்மை யின்றி
யுரைக்கும் கவியே உரைப்பது துறையே.

(இ - ம்) நிறுத்தமுறையானே துறை என்னும் உறுப்பு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) மேற்சொல்லப்பட்ட மக்களும் மாவும் முதலாயின வன்றிப் பிற ஒன்றின ஆயினும் அவற்றை முன் சொல்லிய

வற்ருேடு பொருந்தும் வண்ணம் ஆராய்ந்து இலக்கணம் வழுவாதபடியாகத் தன்னையன்றி, உரைப்போரும் கேட்போரும் உண்டாகல் இன்றிக், கவிசொல்லும் புலவன் தானே கூறுவது துறை என்னும் உறுப்பாம் என்றவாறு.

" உழையும்வெங் காளமும் போலுங்கண் ணுளொரு காலமுள்ளங்
குழையுமெம் பாலென்று கொண்டநெஞ் சேகலிக் கோடை மண்மேன்
மழையுமந் தாரமும் வந்தன வாணன்றென் மாறையின்மாந்
தழையுநம் போலிங்ங னேகவின் வாடத் தவஞ்செய்ததே "

(த. கோ. 99)

என்னும் பாட்டிற்குத் திணை – குறிஞ்சி ; கைகோள் – களவு ; கூற்று - தலைமகன் கூற்று ; கேட்போர் - நெஞ்சு; இடம் – தனியிடம் ; முன்னிலையுமாம். காலம் – இறந்தகாலம் ; பயன் – குறை நேர்தல்; முன்னம் – இவ்விடத்து எனக்கிது தகும் என்பது ; மெய்ப்பாடு – மருட்கை ; எச்சம் – இனி யென்செய்வே மென்னுஞ் சொல் ; பொருள்வகை - சொற்ருெறும் சொற்ருெறும் பொருளற்று வந்தமையாற், புனல்யாற்றுப் பொருள்கோளாம்.

" ஏமா னெனவஞ்சு மெற்காத் தலினவ் விரவிபொற்றேர்
வாமானின் வாழ்வன வாகபன் ஞட்டஞ்சை வாணனென்ஞர்
போமா னதரிடத் தென்னையர் தோன்றப் புறங்கொடுத்த
கோமான் மணிநெடுந் தேர்நுகம் பூண்ட குரகதமே "

(த கோ 365)

என்னும் இப்பாட்டிற்குத் திணை - பாலை ; கைகோள் – கற்பு ; கூற்று – தலைமகள் கூற்று ; கேட்போரில்லை ; இடம் - சுரத்திடம் ; காலம் – இறந்தகாலம் ; பயன் – ஆற்றுவது ; முன்னம் – இக்காலத்திற்கு இது தகுவது என்பது ; மெய்ப்பாடு - உவகை ; எச்சம் நின்ருேஞயின் என்பட்டொழியும் என்னுங் குறிப்பு. பொருள்வகை– குரகதம் எற்காத்தலின் வாழ்வனவாக என இறுதியும் முதலும் பொருள்பட நிற்றலின் பூட்டுவிற் பொருள்கோள்.

''காதற் கயம்படிந் துன்ஞெடு காமக்கனிநுகரா
தோதற் ககன்ற வுணர்வுடை யோருடை நீருலகம்
மாதர்க் கமைந்தருள் வாணன்றென் மாறை வரக்கடவர்
ஆதற் கணங்கனே யாய்புய லேது வறிந்தருளே''
(த. கோ. 410)

என்னும் பாட்டிற்குத் திணை - முல்லை; கைகோள் - கற்பு; கூற்று - தோழி கூற்று; கேட்போர் - தலைமகள்; இடம் - மனையிடம்; காலம் - எதிர்காலம்; பயன் - ஆற்றுவது; முன்னம் - இவ்விடத்து இவட்கிது தகுவது என்பது; மெய்ப்பாடு - உவகை; எச்சம் - நீ வருந்தல் வேண்டாவென்னுஞ் சொல். பொருள் கோள்வகை - சொற்ருெறுஞ் சொற்ருெறும் பொருளற்று வந்தமையாற், புனல் யாற்றுப் பொருள்கோள்.

''போயே தெருவிற் றனிவிளை யாடும் புதல்வற்புல்ல
நீயே திலையல்ல நின்மக னேயிவ னீயுமவன்
தாயே வருகெனச் சேயன்ன வாணன்றமிழ்த் தஞ்சைமான்
ஏயே யெனநிற்ற லானறிந் தேன்தன்னை யெங்கையென்றே''
(த. கோ. 400)

என்னும் பாட்டிற்குத் திணை - மருதம்; கைகோள் - கற்பு; கூற்று - தலைமகள் கூற்று; கேட்போர் - தலைமகன்; இடம் - பள்ளியிடம்; காலம் - இறந்தகாலம்; பயன் - பரத்தையிற் பிரிவொழித்தல்; முன்னம் - இவ்விடத்து இவர்கிது தகுவது என்பது; மெய்ப்பாடு - அச்சம்; எச்சம் - நீ மறைத்தல் வேண்டா என்னுஞ் சொல்; பொருள்வகை - புனல்யாற்றுப் பொருள்கோள்.

''வெடிக்கின்ற விப்பியு ணித்திலம் பைத்தலை வேம்பகுவாய்த்
துடிக்கின்ற திங்களிற் ரேன்றுந் துறைவசெஞ் சொற்புலவோர்
வடிக்கின்ற முத்தமிழ் வாணன்றென் மாறையெம் மான்மருங்கை
யொடிக்கின்ற கொங்கைகண் டாலெவர் நெஞ்சுரு காதவரே''
(த. கோ. 232)

என்னும் பாட்டிற்குத் திணை - நெய்தல்; கைகோள் - களவு; கூற்று - தோழி கூற்று; கேட்போர் - தலைமகன்; இடம் - தனியிடம்;

காலம் - எதிர்காலம் ; பயன் – வரவு ; முன்னம் – இவ்விடத்து இவர்க்கிது தகுவது என்பது ; மெய்ப்பாடு—அச்சம் ; எச்சம்—வரைதல் வேண்டும் என்னுஞ் சொல் ; பொருள்வகை – புனல்யாற்றுப் பொருள்கோள். பிறவுமன்ன. (25)

எச்சத்திற்குப் புறனடை

235 அவற்றுள்,
எச்ச மின்றியு மியையு மென்ப.

(இ - ம்) எச்சவுறுப்புக் காவதொரு புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) மேற்கொள்ளப்பட்ட திணை முதலாகிய பன்னிரண்டனுள்ளும் எச்சம் என்னும் உறுப்பு ஒழிந்து தொடரவும் பெறும் அகப்பாட்டென்று சொல்லுவர் புலவர் என்றவாறு.

அதற்குச் செய்யுள் :

'' சேலார் புனல்வையை சூழ்தஞ்சை வாணன்றென் மாறையினம்
வேலா னெனப்பிறர் வேட்டவர் யார்மணம் வெண்டுகிலின்
பாலா ரமளியும் பாற்கட லானது பங்கயக்கண்
மாலா யினனிவ னுந்திரு வாயினள் மாதுமின்றே ''

(த. கோ. 366)

இதற்குத் திணை. முல்லை; கைகோள் - கற்பு; கூற்று – கண்டோர் கூற்று; கேட்போர் – தம்மிற்ரும்; இடம் – வதுவை மனையிடம்; காலம் – நிகழ்காலம்; பயன் – காட்சி; முன்னம் – இவ்விடத்து இவர்க்கிது தகும் என்பது; மெய்ப்பாடு - உவகை; எச்சம் – இல்லை; பொருள்கோள் – புனல்யாற்றுப் பொருள்கோள். பிறவுமன்ன. (26)

அகப்பாட்டினுள் வருஞ் பொருள்கள்

236 உவமைப் பொருளு மிறைச்சிப் பொருளுமென்
றிருவகைப் பொருளு மெய்துமகப் பாட்டினுள்.

(இ - ம்) அகப்பாட்டுள் வரும் பொருள்கள் இவையென்பது உணர்த்துதல் நுதலிற்று.

(இ- ள்) உவமைப் பொருளும் இறைச்சிப் பொருளும் என்று கூறப்பட்ட இரண்டு வகைப்பொருளும் வரும் அகப்பாட்டிடத்து என்றவாறு. (27)

உவமவகை

237 உள்ளுறை யுவமம் வெளிப்படை யுவமமென
எள்ளரு முவமம் இருவகை யுடைத்தே.

(இ - ம்) உவமவகை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) உள்ளுறை யுவமமும், வெளிப்படை யுவமமும் என இரண்டு கூற்றினை உடைத்தாம் அகப்பாட்டினுட் கிடக்கும் உவமப் பொருள் என்றவாறு. (28)

உள்ளுறை உவமம்

238 அவற்றுள்,

உள்ளுறை யுவம முய்த்துணர் வகைத்தாய்ப்
புள்ளொடும் விலங்கொடும் பிறவொடும் புலப்படும்.

(இ - ம்) உள்ளுறை உவமம் இவ்வியல்பிற்று என்பது உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) மேற்சொல்லப்பட்ட இரண்டுவுவமத்துள்ளும் உள்ளுறையுவமமாவது, ஆராய்ந்தறியும் பகுதியினை யுடைத்தாய்ப் புள்ளொடும் விலங்கொடும் பிறவொடும் தோன்றும் என்றவாறு.

உதாரணம் :

"இழைவினை யாடு மிளமுலை சாயற் கிடைந்தமஞ்ஞை
கழைவினை யாடுங் கடிப்புனங் காத்துங் கலையகலா
துழைவினை யாடு முயர்சிலம் பாவின்னு முன்பொருட்டால்
மழைவினை யாடு மதிற்றஞ்சை வாணன் மலயத்திலே"

இதனுள் மானைப் பிரியாது கலைவிளையாடும். எனவே, அதுபோல நீயும் தலைவியைப் பிரியாது விளையாடுக என உள்ளுறையுவமம் விலங்கொடு தோன்றியவாறு காண்க. பிறவுமன்ன. (29)

வெளிப்படை உவமம்

239 வெளிப்படை யுவமம் வினைபயன் மெய்யுரு
வெளிப்பட நின்று விளங்குவ தாகும்.

(இ - ம்) வெளிப்படை உவமம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) வெளிப்படை உவமமாவது தொழிலும் பயனும் வடிவும் நிறனும் புலப்படுமாறு நின்று விளங்குவதாம் என்றவாறு. (30)

இறைச்சிப்பொருள்

240 கருப்பொருட் பிறக்கு மிறைச்சிப் பொருளே.

(இ - ம்) இறைச்சிப்பொருள் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) இறைச்சிப் பொருளாவது தெய்வ முதலாகிய பொருளின் கண்ணே பிறக்கும் என்றவாறு. (31)

அகப்புறக் கைக்கிளை

241 காமஞ் சாலா யிளமை யோள்வயிற்
குறிப்பறி வுறுது குறுகியாங் கவளோ
டிறப்பக் கூறுவ தகப்புறக் கைக்கிளை.

(இ - ம்) வழுவமைதி கூறுவான் தொடங்கி முதற்கண் அகப்புறக் கைக்கிளை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) காமஞ்சாலா இளமைத் தன்மையினையுடைய தலைமகள் பக்கத்துத் தலைமகன் குறிப்பறியாது சென்று சார்ந்து அவளொடு மேன்மேலும் கூறுவது அகப்புறக் கைக்கிளையாம் என்றவாறு.

அன்னதாதல், ''ஊர்க்கா னிவந்த பொதும்பருள்'' என்னும் குறிஞ்சிக்கலி, 20 ஆம் செய்யுளுள்ளும், பிறவற்றுள்ளுங் கண்டு கொள்க. (32)

அகப்புறக் கைக்கிளைக் குரியவர்

242 அதுவே,

இறைமையில் லோர்க்கு மிழிகுலத் தோர்க்கும்
முறைமையி னுரித்தே முன்னுங் காலை.

(இ-ம்) அகப்புறக் கைக்கிளைக்கு உரியாரை உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட கைக்கிளை தான்தலைமைப்பாடில்லாதார்க்கும், இழிந்த குலத்தார்க்கும் முறையான் உரித்தாம் ஆராயுங்காலத்து என்றவாறு.

முறைமை என்பது மேற்சொல்லிய முறைமை. முன்னுங் காலை என்றதனால் இது பயின்று வாராது எனக் கொள்க.

''ஏ ஏ யிஃதொத்தன்'' என்னும் குறிஞ்சிக்கலி, 26 ஆம் செய்யுளுள்ளும், ''என்னோற் றனைகொல்லோ" என்னும் மருதக் கலி, 29 ஆம் செய்யுளுள்ளும் கண்டு கொள்க. (33)

அகப்பொருட் பெருந்திணை

243 அகன்றுழிக் கலங்கலும் புகன்றமடற் கூற்றுங்
குறியிடை யீடும் தெளிவிடை விலங்கலும்
வெறிகோள் வகையும் விழைந்துடன் போக்கும்
பூப்பிய லுரைத்தலும் பொய்ச் சூளுரையும்
தீர்ப்பி லூடலும் போக்கழுங் கியல்பும்
பாசறை புலம்பலும் பருவமாறு படுதலும்
வன்புறை யெதிர்ந்து மொழிதலு மன்புறு
மனைவியுந் தானும் வனமடைந்து நோற்றலும்
பிறவு மகப்பொருட் பெருந்திணைக் குரிய.

(இ-ம்) அகப்பொருட் பெருந்திணைக்குரியவை இவை என்பது உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) அகன்றுழிக் கலங்கல் முதலாகத் தலைவியும் தானும் வனமடைந்து நோற்றல் ஈருகச் சொல்லப்பட்டனவும், பிறவும் அகப்பொருட் பெருந்திணைக்குரியவாம் என்றவாறு. (34)

அகப்புறப் பெருந்திணை

244 மடலே றுதலொடு விடைதழா லென்று
குற்றிசை தன்னொடு குறுங்கலி யென்று
சுரநடை தன்னொடு முதுபாலை யென்று
தாபத நிலையொடு தபுதார நிலையெனப்
புகன்றவை யியற்பெயர் பொருந்தா வாயி
னகன்ற வகப்புறப் பெருந்திணைக் காகும்.

(இ - ம்) அகப்புறப் பெருந்திணை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) மடலேறல் முதலாகத் தபுதாரநிலை ஈறுகச் சொல்லப் பட்டன இயற்பெயர் கூடாவாயின் அகப்புறப் பெருந்திணைக் காகும் என்றவாறு.

எனவே, இயற்பெயர் கூடுமாயின் புறப்பொருட்பெருந்திணை யாம் என்பதாயிற்று. அவற்றுள், மடலேற்றிற்கு உதாரணம் நெய்தலிற் கண்டுகொள்க. விடைதழாற்கு உதாரணம் முல்லைக் கலியுட் கண்டுகொள்க. சுரநடை முதலான நான்கற்கும் உதாரணம் புறப்பொருள் வெண்பாமாலையுட் கண்டுகொள்க. (35)

அகப்பாட்டினுள் பாடப்படுவோர்

245 பாட்டுடைத் தலைவன் கிளவித் தலைவனெனப்
பாட்டினுட் பாடப் படுவோ ரிருவர்.

(இ- ம்) அகப்பாட்டினுட் பாடப்படுவோர் இவரென்பது உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) அகப்பாட்டினுள் பாடப்படுவோர் பாட்டுடைத் தலைமகனும் கிளவித் தலைமகனும் என இருவர் என்றவாறு. (36)

அகப்பாட்டின்கண் பாடப்படுவோருள் உயர்ந்தோன்

246 அவருள்,
உயர்ந்தோன் பாட்டுடைத் தலைவ னாகும்.

(இ - ம்) மேற்சொல்லப்பட்டவருள் உயர்ந்தோனை உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட இருவகுள்ளும் உயர்ந்தோன் பாட்டுடைத்தலைவனும் என்றவாறு.

" அரிபெய் சிலம்பி னும்பலந் தொடலை " (அகம் - 6) என்னும் நெடுந்தொகைப் பாட்டினுள்,

" மழைவளந் தரூஉ மாவண் தித்தன்
பிண்ட நெல்லி னுறந்தை யாங்கட்
கழைநிலை பெருஅக் காவிரி நீத்தம்
குழைமா ணொள்ளிழை நீவெய் யோளொடு
வேழ வெண்புணை தழீஇப் பூழியர்
கயநா டியானையின் முகனமர்ந் தா அங்கு
ஏந்தெழி லாகத்துப் பூந்தார் குழைய
நெருந லாடினை புனலே"

என்னுமதனானும், " வேளாப் பார்ப்பான் (அகம். 24) என்னும் நெடுந்தொகைப் பாட்டினுள்,

" கழித்துறை செறியா வாளுடை யெறுழ்த்தோள்
இரவுத்துயின் மடிந்த தானை
உரவுச்சின வேந்தன் பாசறை யேமே"

என்றதனாலும், பாட்டுடைத் தலைமகன் உயர்ந்தான் ஆதல் அறிக. இதனுள், வேந்தன் என்றது பாண்டியனை, பிறவுமன்ன. (37)

அகப்பாட்டுத் தலைமக்களுக்குக் கூறப்படும் பெயர்கள்

247 நிலைப்பெயர் வினைப்பெயர் பண்புகொள் பெயரொடு
குலப்பெய ரியற்பெயர் கூறுப வவர்க்கே.

(இ-ம்) தலைமக்கட்குக் கூறப்படும் பெயர்கள் இவை என்பது உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) நிலப்பெயர் முதலாகிய ஐந்து பெயரும், கூறுவர் மேற்சொல்லப்பட்ட தலைமக்கள் இருவர்க்கும் என்றவாறு.

அவற்றுள், நிலப்பெயராவன:— மலைநாடன். சோணாடன், பாண்டியநாடன் என்றாற் போல்வனவும்; சிலம்பன், ஊரன் சேர்ப்பன் என்றாற் போல்வனவுமாம். வினைப்பெயராவன:—

கடம்பெறிந்தான், தூங்கெயிலெறிந்தான், வடிம்பலம்ப நின்றான் என்றாற் போல்வனவும், கோவலன் வேட்டுவன் என்றாற் போல்வனவுமாம். 'கோவலன்' என்பது கோபாலன் என்னும் வடமொழித்திரிபாய் ஆபுரத்தற்றொழின்மேல் நின்றது. வேட்டுவன் என்றது வேட்டைத் தொழிலின்மேல் நின்றது. பண்புகொள் பெயராவன:— நெடுஞ்சேரலாதன், இளஞ்சேட்சென்னி, பெருவழுதி என்றாற் போல்வனவும், தோன்றல், அண்ணல் என்றாற் போல்வனவுமாம். குலப்பெயராவன :— சேரன், சோழன், பாண்டியன் என்றாற் போல்வனவும், குறவன், ஆயன் என்றாற் போல்வனவுமாம். இயற்பெயராவன குரவராதியராற் பெற்ற பெயர் எனக் கொள்க. (38)

கிளவித் தலைவனுக்குக் கூறக்கூடாத பெயர்கள்

248 அவற்றுள்,
இயற்பெயர் கிளவித் தலைவற் கிசையார்.

(இ - ம்) கிளவித் தலைமகற்குக் கூருப்பெயர் இஃது என்பது உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) மேற்சொல்லப்பட்ட பெயருட் குரவராதியாற் பெற்ற பெயரினைக் கிளவித் தலைமகற்குச் சொல்லார் புலவர் என்றவாறு. (39)

அகப்பாட்டினுள் தலைமக்கள் வருந் திறன்

249 இருவரு மொருங்கே வருதலுந் தனித்தனி
வருதலு மிருவரும் வாரா தொழிதலு
முரிய வென்மனா ருணர்ந்திசி னோரே.

(இ - ம்) அகப்பாட்டினுள் தலைமக்கள் வரும் வகையும் வாரா வகையும் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) மேற்சொல்லப்பட்ட தலைமக்கள் இருவரும் கூட வருதலும், பாட்டுடைத் தலைமகனே வருதலும், கிளவித் தலைமகனே வருதலும், அவ்விருவரும் வாராதொழிதலும் உரியவாம், அகப் பாட்டிற்குள் என்று சொன்னார் அறிந்தோர் என்றவாறு.

''அரிற்பவர்ப் பிரம்பின் வரிப்புற விளைகனி
குண்டுநீ ரிலஞ்சிக் கெண்டை கதூஉந்
தண்டுறை யூரன் பெண்டினை யாயிற்
பலவா குகநின் னெஞ்சிற் படரே
ஓவா தீயு மாரி வண்கைக்
கடும்பகட் டியானை நெடுந்தே ரஞ்சி
கொன்முனை யிரவூர் போலச்
சிலவா குகநீ துஞ்சு நாளே'' (குறுந். 91)

என்னும் பாட்டினுள் இருவரும் வந்தவாறு கண்டுகொள்க.

''பெருங்கரை நிவந்த சிறுநறு நெய்தலுங்
கருங்கயத் தமன்ற செந்தா மரையும்
அரும்பவிழ் புறவிற் பூத்த முல்லையும்
இரும்புபொதிந் திணரிய பொன்னவிழ் வேங்கையும்
ஒருங்குநின்று கமழும் பலர்மல்கு மறுகிற்
குடவர் கோமான் குணவீற் றுமுனைத்
தருந்தே ரோன்பொன் றனிபொழி தடக்கைத்
தொண்டிக் கோமான் விண்டவர்த் தேய்க்குங்
கேளோம்பு நெடுந்தகை பறையிற் சாஅய்
நன்னல மிழந்த திவினை யேனொடு
பண்டை போலா தின்றுபிறி தாகிக்
கடுங்கதிர் கரந்த தண்பனி
நெடும்புலம் படர்ந்த தண்டுறைக் குருகே''

என்னும் பாட்டினுட் பாட்டுடைத் தலைமகனே வந்தவாறு கண்டுகொள்க.

''கொண்டுழிப் பண்டம் விலையொரீஇக் கொற்சேரி
நுண்துளைத் துன்னூசி விற்பாரின் — ஒன்றுனும்
வேறல்லை பாண வியலூரன் வாய்மொழியைத்
தேற எமக்குறைப்பாய் நீ'' (ஐந்திணை. ஐம். 21)

என்னும் பாட்டினுட் கிளவித் தலைமகன் வந்தவாறு கண்டுகொள்க.

"தேரோன் மலைமறைந்த செக்கர்கொள் புன்மாலை
ஆரான்பி னுய வந்தாதுஞ் — சீர்சால்
சிறுகுழ லோசை செறிதொடி! வேல்கொண்
டெறிவது போலு மெனக்கு" (ஐந்திணை. ஐம். 7)

என்னும் பாட்டினுள் இருவரு வாராதொழிந்தவாறு கண்டு கொள்க. பிறவுமன்ன. (40)

அகப்புறப்பாட்டிற்காகும் விதி

250 அகப்புறப் பாட்டு மிகப்பில வவையே.

(இ - ம்) அகப்புறப்பாட்டுக்காவதொரு விதி உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) அகப்பாட்டிற் சொன்ன இலக்கணங்களைக் கடவாது அகப்புறப்பாட்டும் என்றவாறு.

உதாரணம் வெண்பாமாலையுள்ளும் பிறவற்றுள்ளுங் கண்டு கொள்க. இத்துணையும் கூறப்பட்டனவெல்லாம் அகப்பாட்டிற்கும் அகப்புறப்பாட்டிற்கும் உரிய உறுப்புக்களாம். (41)

முதல் கரு உரிப்பொருள்களின் வழுவமைதி

251 முத்திறப் பொருளுந் தத்தந் திணையொடு
மரபின் வாராது மயங்கலு முரிய.

(இ - ம்) ஐந்திணைக்கும் உரிய பொருளின் வழுவமைதி உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) முதல், கரு, உரி என்னும் மூன்று கூற்றவாகிய பொருளும் தத்தமக்குரிய திணையோடு கூடிய இலக்கண முறையின் வாராது பிற திணையோடு மயங்குதலும் உரியவாம் என்றவாறு.

அஃதென்னை யெனின், பெரும்பொருளகத்து, "உரிப்பொரு ளல்லன மயங்கவும் பெறுமே" என்பதனுலும், உரிப்பொருட் சூத்திரத்துள், "தேருங் காலை" என்னும் இலேசினுனும் பெறுதும்.

உதாரணம் :

“கறங்கு மணிநெடுந்தேர் கண்வா ளறுப்பப்
பிறங்கு மணன்மே லலவன் பரப்ப
வறங்கூர் கடுங்கதிர் வல்விரைந்து நீங்க
நிறங்கூரு மாலை வரும். (திணை மொழி. ஐம். 48)

என்னும் நெய்தற்பாட்டினுள் முல்லைக்குரிய மாலையாகிய முதற் பொருள் மயங்கினவாறு கண்டு கொள்க.

“அன்னாய் வாழிவேண் டன்னை”
(குறிஞ்சிப்பாட்டு. 217 - 22)

என்னும் குறிஞ்சிப் பாட்டுள்,

“மான்கண மரமுதற் றெவிட்ட வான்கணங்
கன்றுபயிர் குரல மன்றுநிரை புகுதர
ஏங்குவயி ரிசைய கொடுவாய் அன்றில்
ஓங்கிரும் பெண்ணை யகமட லகவப்
பாம்புமணி யுமிழப் பல்வயிற் கோவலர்
ஆம்பலந் தீங்குழற் றெள்விளி பயிற்று”

என்புழி முல்லைக்குரிய கருப்பொருளாகிய ஆன் கணமும், பாம்பும் கோவலரும், ஆம்பற்குழலும், அதற்குரிய முதற்பொருளாகிய மாலையும், நெய்தற்குரிய கருப்பொருளாகிய அன்றிலும் பனையும் வந்தவாறு கண்டுகொள்க.

“உரைத்திசிற் றோழியது புரைத்தோ வன்றே
யெருத்தங் கமழு மீன்றோள்
துறைப்ப வென்றி யிரீ இயரென் னுயிரே”

என்றுஞ் சிற்றட்டகத்துக் குறிஞ்சிப்பாட்டினுள் ஊடல் என்னும் உரிப்பொருள் கண்டுகொள்க.

“சிலைவிற் பகழிச் செந்துவ ராடைக்
கொலைவி லெயினர் தங்கைநின் முலைய
சுணங்கெண நினைதி நீயே
அணங்கென நினையுமென் அணங்குறு நெஞ்சே”
(ஐங்குறு. 363)

என்னும் ஐங்குறுநூற்றுப் பாலைப்பாட்டினுட் புணர்தல் என்னும் உரிப்பொருள் வந்தது.

"நாளு நாளு மாள்வினை யழுங்க
இல்லிருந்து மகிழ்வோற் கில்லையாற் புகழெ(ன)
ஒண்பொருட் ககல்வர்நங் காதலர்
கண்பனி துடையினித் தோழி நீயே"

என்பது இருத்தலென்னும் உரிப்பொருள், சிற்றட்டகத்துப் பாலைப் பாட்டினுள் வந்தது.

"வளமலர் ததைந்த வண்டுபடு நறும்பொழின்
முளைநிரை முறுவ லொருத்தியொடு நெருநற்
குறிநீ செய்தனை யென்ப வலரே
குரவ நீள்சினை யுறையும்
பருவ மாக்குயிற் கௌவையிற் பெரிதே"

(ஐங்குறு. 369)

என்பது ஊடலென்னும் உரிப்பொருள் வந்த ஐங்குறுநூற்றுப் பாலைப்பாட்டு.

"வெறுக்கைக்குச் சென்றார் விளங்கிழாய் தோன்றார்
பொறுக்கவென் றார்பொறுக்க லாமோ — வெறுப்பபோற்
பொன்னு ளுறுபவளம் போன்ற புணர்முருக்கம்
என்னு ளுறுநோய் பெரிது" (திணைமாலை. நூற் 67)

இஃது இரங்கல் என்னும் உரிப்பொருள் வந்த ஐந்திணைப் பாலைப்பாட்டு.

"இகல்வேந்தன் சேனை யிறுத்தவாய் போல"

(கலி. முல்லை. 8)

என்பது புணர்தல் என்னும் உரிப்பொருள் வந்ந கலித்தொகை முல்லைப்பாட்டு.

"புறவணி நாடன் காதன் மடமகள்
ஒண்ணுதல் பசப்ப நீசெலிற் றெண்ணீர்ப்
போதவிழ் தாமரை யன்னநின்
காதலம் புதல்வ னழுமினி முலைக்கே" (ஐங்குறு. 424)

என்பது பிரிதல் என்னும் உரிப்பொருள் வந்த ஐங்குறுநூற்று முல்லைப்பாட்டு.

"உதுக்கா ணதுவே யிதுவென மொழிகோ
நோன்சினை யிருந்த விருந்தோட்டுப் புள்ளினந்
தாம்புணர்ந் தமையிற் பிரிந்தோ ருள்ளா
தீங்குர லகவக் கேட்டு நீங்கிய
ஏதி லாளர் இவண்வரிற் போதிற்
பொம்ம லோதியும் புனையல்
எம்முந் தொடாஅ லென்குவெ மன்னே" (குறுந். 19 )

என்பது ஊடல் என்னும் உரிப்பொருள் வந்த முல்லைப்பாட்டு.

"என்னரே யேற்ற துணைபிரிந்தா ராற்றென்பார்
அன்னரே யாவ ரவரவர்க்கு — முன்னரே
வந்தாரந் தேங்கா வருமுல்லை சேர்தீந்தேன்
கந்தாரம் பாடுங் களித்து" (திணைமாலை. நூற். 106)

இஃது இரங்கல் என்னும் உரிப்பொருள் வந்த திணைமாலை முல்லைப்பாட்டு.

"பழனக் கம்புள் பயிர்பெடை யகவுங்
கழனி யூரநின் மொழிவ லென்றுந்
துஞ்சுமனை நெடுநகர் வருதி
யஞ்சா யோவிவ டந்தைக வேலே" ஐங்குறு. 60)

என்பது புணர்தல் என்னும் உரிப்பொருள் வந்த ஐங்குறு நூற்று மருதப்பாட்டு.

"அழுந்துபடு விழுப்புண் வழும்புவாய் புலரா
எவ்வ நெஞ்சத் தெஃகெறிந் தாங்குப்
பிரிவில புலம்பி நுவலுங் குயிலினுந்

தேறுநீர் கெழீஇய யாறுநனி கொடிதே
அதனினுங் கொடியா டானே மதனின்
றுய்த்தலை யிதழ பைங்குருக் கத்தியொடு
பித்திகை விரிவுமலர் கொள்ளீ ரோவென
வண்டுசூழ் வட்டிய டிரிதரு
தண்டலை யுழவர் தனிமட மகளே'' (நற்றிணை. 97)

என்பது இருத்தல் என்னும் உரிப்பொருள் வந்த நற்றிணை மருதப்பாட்டு. இரங்கற்கும் இதுவே உதாரணம்.

''கறவுப்பிற ழிருங்கழி நீந்தி யல்கலும்
இரவுக்குறிக் கொண்கன் வந்தனன்
விரவுமணிக் கொடும்பூண் விளங்கிழை யோயே''

என்பது புணர்தல் என்னும் உரிப்பொருள் வந்த சிற்றட்டகத்து நெய்தற்பாட்டு.

''கணங்கொ ளருவிக் கான்கெழு நாடன்
குறும்பொறை நாட னல்வய லூரன்
தண்கடற் சேர்ப்பன் பிரிந்தெனப் பண்டையிற்
கடும்பகல் வருதி கையறு மாலை
கொடுங்கழி நெய்தலுங் கூம்பிக்
காலை வரினுங் களைஞரோ விலரே'' (ஐங்குறு. 183)

என்பது இருத்தல் என்னும் உரிப்பொருள் வந்த ஐங்குறு நூற்று நெய்தற்பாட்டு.

''கண்டிகு மல்லமோ கொண்கநின் கேளே
யொள்ளிழை யுயர்மணல் வீழ்ந்தென
வெள்ளாங் குருகை வினவு வோளே'' (ஐங்குறு. 122)

என்பது ஊடல் என்னும் உரிப்பொருள் வந்த ஐங்குறு நூற்று நெய்தற்பாட்டு.

பிறவும் இவ்வாறு இவற்றின் நீங்கி மயங்கி வருவன எல்லாம் கண்டுகொள்க. இத்துணையும் கூறியது வழுவமைதியாம். (41)

அதிகாரத்தின் புறனடை

252 கூறிய வல்ல வேறுபிற தோன்றினுங்
கூறிய வற்ரெடுங் கூட்டி மெய்கொளக்
கூறி வுணர்த்தல் குணத்தோர்க் கியல்பே.

(இ - ம்) அதிகாரத்திற்கு ஆவதொரு புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) தீதில் பொருள் வேறே தோன்றினவாயினும் அவற்றை இதனுள் எடுத்தோதப்பட்ட பொருள்களோடு கூட்டி உண்மை புலப்படச் சொல்லிப் பிறர்க்கு உணர்த்துதல் குணமுடையோர்க்கு இலக்கணம் என்றவாறு. (42)

# ஒழிபியல்-விளக்கம்

234. துறை :— "முதலும் கருவும் முறை பிறழ வந்தாலும் இஃது, இதன்பாற்படும் என்று ஒரு துறைப் படுத்தற்கு ஏது வாகியதோர் கருவி அச்செய்யுட்குளதாகச் செய்தல் துறை" என்பது பேராசிரியர் கருத்து. நம்பியார் "அகத்திணைகளில் சொல்லப்பட்ட மக்களும் மாவும் முதலியனவன்றிப் பிற பொருள் களும் ஒரு செய்யுளில் பொருந்தி வரலாம். அங்ஙனம் வந்தாலும் முன் சொன்ன பொருள்களோடு பிற பொருள்களைப் பொருந்தும் வகைகளை ஆராய்ந்து இலக்கணம் வழுவாமலும், கூற்றிற்குரியார் கூறியதாகவோ, கேட்டற்குரியார் கேட்பதாகவோ இல்லாமலும் கவியுரைக்கும் கவிஞனே தன் கூற்றாக உரைப்பது துறை" என்றார்.

236. இறைச்சி :— இறை — தங்குதல். கருப் பொருளில் தங்கிய பொருள் என்பது இதன் விளக்கம். இது உள்ளுறை உவமத்தைப் போலவே கருப்பொருளிலிருந்து உய்த்துணர்ந்து கொள்ளும் பொருளாகும். ஆனால் இரண்டற்கும் வேறுபாடு உண்டு. உள்ளுறை என்பது கூறப்பட்ட பொருளும், உய்த்துணரும் பொருளும் ஒத்து முடிவதாகும். இறைச்சியென்பது கூறப்பட்ட பொருளும் உய்த்துணரும் பொருளும் ஒத்து முடிந்து அதனின்று மற்றொரு பொருள் அவாவப்பட்டு நிற்பதாகும்.

237. உள்ளுறை :— புல், விலங்கு முதலான கருப்பொருள் களிலிருந்து உய்த்துணர்ந்து கொள்ளும் தன்மையதாக உணர் வார்க்குப் புலப்படும் பொருள். இது அகப்பாட்டிற்குரிய உவமை வகைகளிலொன்று,

241. அகப்புறக் கைக்கிளை :— காமஞ்சான்ற இளையாள் மாட்டுக்கொள்கின்ற ஒருதலையுறவு அகத்திற்கேயுரிய அகப்பொருட் கைக்கிளையாகும். காமம் அமையாத இளையவளிடத்தில் அவளது மனக்குறிப்பையும் அறியாமல் நெருங்கி நின்று அவளிடம் மேலும் மேலும் உரையாடுவது அகப்புறக் கைக்கிளையாகும். காமம் அமையாதவளிடத்தில் கொள்ளுகின்ற இவ்வுறவு அகத்திற்புறம் பாகையால் அகப்புறக் கைக்கிளை என்றூர்.

244. குற்றிசை :— தலைவியைத் தலைமகன் முற்றத்துறந்த துறவு.

குறுங்கலி :—

முற்றத்துறந்த தலைவனை முன்நின்று அவனது மனைவியர் பழி தூற்றுவது.

சுரநடை :—

சுரத்தில் நடந்து செல்லுங்காலை தலைவி இறக்க அவளை இழந்த தலைமகன் வருந்துவது

முதுபாலை :—

கொடிய வெப்பமுடைய பாலைநிலத்தில் கணவனை இழந்து தனித்துநின்ற தலைவி புலம்புவது.

தாபத நிலை :—

காதலனை இழந்த காதலி மேற்கொண்ட தவமாகிய கைம்மை நோன்பு.

தபுதார நிலை :—

காதலியை இழந்த காதலன் தனிமைப்பட்டுப் புலம்புவது.

247. நிலப்பெயர் :— ஒவ்வொரு நிலத்திற்கும் உரியாரைக் குறிக்கும் பெயர் நிலப்பெயர். வெற்பன், ஊரன், சேர்ப்பன் என்பன போன்ற பெயர்கள்.

வினைப்பெயர் :—

ஒரு வினையினை நிகழ்த்தி அதனால் பெற்ற பெயர் வினைப் பெயர். ஆயன், வேட்டுவன் போன்ற பெயர்கள்.

# நூற்பா முதற்குறிப்பகர வரிசை


| | பக்க எண் |
|---|---|
| அகப்புறப்பாட்டும் | 416 |
| அகன்றுழிக்கலங்கலும் | 411 |
| அச்சமுவர்த்த | 235 |
| அணிந்துழி நாணிய | 132 |
| அதுவே இறைமயில் | 411 |
| அதுவே காமஞ்சான்ற | 57 |
| அதுவே புனைந்துரை | 43 |
| அதுவே மொழிந்தோர் | 58 |
| அயன்மனைப்பிரி | 72 |
| அரிவை நாட்ட | 121 |
| அல்லகுறி வருந்தொழிற் | 225 |
| அல்லாக் கல்வி | 74 |
| அவன் மனை வரை | 64 |
| அவருள் உயர்ந்தோன் | 412 |
| அவருட் காதற்பரத்தை | 71 |
| அவருளும் வரைதற் | 92 |
| அவற்றுள் அறப்புறங்காவல் | 75 |
| அவற்றுள் இயற்பெயர் கிளவி | 414 |
| அவற்றுள் உடன்போய் | 64 |
| அவற்றுள் உள்ளுறை உவமம் | 409 |
| அவற்றுள் எச்சமின்றியும் | 408 |
| அவற்றுள் ஓதற்பிரிவுடைத் | 82 |
| அவற்றுள் ஒருவழித் தணத்தற்கு | 62 |
| அவற்றுள் களவின் வழி | 69 |
| அவற்றுள் கைக்கிளை | 44 |
| அவற்றுள் கூதிர்யாமம் | 49 |
| அவற்றுள் முன்னவை | 396 |
| அவைதாம், முதற்பொருள் | 46 |
| அளவில் இன்பத் | 56 |
| அற்றமிழ் சிறப்பினிவ் | 197 |
| அறப்புறங்காவல் | 75 |
| அறிவர் கிழவோன் | 91 |

| | பக்க எண் |
|---|---|
| ஆங்குடன் போயுழி | 68 |
| ஆதியொன்றொழித் | 339 |
| ஆயமும் தாயும் | 326 |
| ஆயவெள்ளம் | 137 |
| ஆயிழைமைந்தனும் | 374 |
| ஆரணங்குயர்ந்தோர் | 51 |
| ஆற்றாத்தாயை | 327 |
| ஆற்றூறஞ்சினும் | 65 |
| இந்திரன் ஊரன் | 54 |
| இப்பொருள் பயக்கு | 403 |
| இயற்கைப் புணர்ச்சி இடந் | 56 |
| இயற்கைப் புணர்ச்சி தெய்வத்தின் | 58 |
| இயற்கைப் புணர்ச்சி வன்புறை | 122 |
| இரங்கல் வன்புறை | 198 |
| இரந்து குறை பெறாது | 174 |
| இரந்து பின்னிற்றல் | 143 |
| இரந்து பின்னிற்றற் | 124 |
| இருவகைப் பாங்கரும் | 90 |
| இருவரில்லிற்கும் | 340 |
| இருவருமொருங்கே | 414 |
| இருள் புலர் காலை | 50 |
| இல்லத் தழுங்கலும் | 80 |
| இல்வரை இகந்தது | 61 |
| இல்வாழ்க்கையே | 356 |
| இழிந்தோர் தமக்கு | 77 |
| இளமையும் யாக்கையும் | 87 |
| இளையோர் கிழவோர் | 90 |
| இறையோன்யிருட்குறி | 213 |
| இறையோன் முதலோர் | 401 |
| இறைவனைப்பாங்கி | 208 |
| இறைவன்றனக்கு | 183 |
| இறைவி கையுறை | 191 |
| இறைவிக் கிகுளை | 226 |

| | பக்க எண் | | பக்க எண் |
|---|---|---|---|
| இன்னுர்க்கின்னுழி | 404 | கிழவோன் பிரிந்துழிக் | 199 |
| | | கிழவோன் மகிழ்ச்சி | 356 |
| ஙங்ஙன மியம்பிய | 164 | குடிப் பிறந்தோரை | 89 |
| | | குரவறிற் புணர்ச்சி | 69 |
| உடன் போய் மீண்ட | 398 | குறிஞ்சி பாலை | 45 |
| உடன் போய் வரைதலும் | 64 | குறிப்பி னுணர்த்தும் | 78 |
| உதவி யந்தண | 77 | குறியிடங் கூறல் | 198 |
| உவமைப் பொருளும் | 408 | கூட்டல் கூடல் | 198 |
| உள்ளப் புணர்ச்சியும் | 59 | கூறிய வல்ல | 421 |
| உள்ளுறையுவமம் | 407 | கெழீ இய காமக் | 72 |
| உளமலி காதற் | 116 | கையறு தோழி | 296 |
| ஊடலவ்வழிக் | 73 | கையுறை யேந்தி | 141 |
| எழுதிய வல்லியுந் | 120 | கொளேவல் பாணன் | 73 |
| எறிவளே வேற்றுமைக் | 301 | சார்தல் கேட்டல் | 142 |
| என் பொருட் பிரிவுணர்த் | 263 | சாற்ரு எழுவருந் | 400 |
| என்றுடன் இயம்பிய | 305 | சிறப்புப் பெயர் | 76 |
| ஐந்திணையுடைய | 44 | செலவறிவுறுத்தல் | 257 |
| ஐயந் தீர்த்தல் | 131 | செலவிற்றேற்றலும் | 86 |
| ஒரு திணைக் குரிமை | 405 | செல்லுங் கிழத்தி | 135 |
| ஒரு புணர் வொழிந்தவற் | 66 | செல்வம் வாழ்த்தலும் | 86 |
| ஒருவழித் தணத்தல் | 62 | செவிலி நற்ருய் | 91 |
| ஒருவன்றனக்கே | 91 | செவிலி நற்ருய்க்குக் | 67 |
| ஒழிந் தோர் மன்றற் | 71 | செவிலி புலம்பல் | 316 |
| ஒழிபெனப் படுவ | 395 | செவிலியறத்தொடு | 319 |
| ஓதன் முதலா | 80 | சென்றதும் நிகழ்வதும் | 403 |
| ஓதற் ககன் ரேன் | 84 | சேயிழைக் கிழத்தியை | 88 |
| ஓதற் ருெழி லுரித் | 74 | சொல்லா தகலினுந் | 78 |
| கருப் பொருட் பிறக்கும் | 410 | சொல்லிய வல்ல | 405 |
| கல்வி முதலா | 77 | சொல்லே யாயினும் | 404 |
| கலந்துழி மகிழ்தலும் | 123 | தந்ததெய்வந் | 141 |
| களவின் வழி வந்த | 68 | தமர்வரினிடைச் | 397 |
| களவு வெளிப்படா | 63 | தலேவன் பாங்கனே | 143 |
| கன்னி விடலே | 52 | தலேவன் மாற்றந் | 134 |
| காட்சி ஐயந் | 118 | தலேவன் தலேவி | 396 |
| காட்சி முதலா | 60 | தலேவன்றலேவிமுன் | 356 |
| காதலன் பிரிவுழிக் | 361 | தலேவன்றலேவியொடு | 399 |
| காதலன் முலேவிலே | 291 | தலேவனுட்கோள் | 165 |
| காதற் பரத்தையர் | 70 | தலேவி சேணகன்றமை | 332 |
| காமஞ் சாலா | 410 | தலேவி தன்னேயும் | 81 |
| காரே கூதிர் | 48 | தலேவி பாங்கிக் | 65 |
| காலிற் சேறலுங் | 78 | தலேவியிளமைத் | 179 |
| கிழவோன் கூற்றும் | 402 | தன்பதிக்ககற்சி | 257 |
| கிழவோன் தன்னேயுங் | 89 | தன்னூர் வரைதலும் | 334 |

| | பக்க எண் | | பக்க எண் |
|---|---|---|---|
| தாயர் பாங்கியர் | 400 | புணர்தலும் பிரிதலும் | 55 |
| தாயும் நாயும் | 231 | புணர்ந்துடன் போய | 399 |
| தாயொடும் பாங்கி | 400 | புணர்ப்பதும் பிரிப்பதும் | 118 |
| திணையே கைகோள் | 395 | புலத்திற் சிறந்த | 78 |
| திரட்டியிவ்வாறு | 234 | பூத்த காலைப் | 83 |
| தீதுடைப்புலவி | 87 | பூத்தமை சேடியிற் | 85 |
| தூதிற் பிரிவும் | 82 | பெட்டவாயில் பெற் | 158 |
| தூதுந் துணைமையும் | 84 | பெருந்திணை யென்பது | 44 |
| தெய்வந் தன்னின் | 58 | பெரும் பொழுதென்று | 48 |
| தெய்வந் தெளிதல் | 140 | பொய்த்தல் மறுத்தல் | 246 |
| தெய்வம் புணர்ப்பச் | 123 | பொருவிறந் தோற்குப் | 59 |
| தெளித்தல் மகிழ்ச்சி | 332 | பொற்பமை சிறப்பிற் | 355 |
| தோழி கிழவோன் | 187 | போக்கறி வுறுத்தல் | 306 |
| தோழி செவிலி | 90 | போக்கறிவுறுத்தல் வரவறி | 340 |
| நகை முதலாமிரு | 404 | போக்கறி வுறுத்தல் போக்கே | |
| நற்றாய் அறத்தொடு | 67 | போக்கேகற்பொடு | 305 |
| நற்றாய் கண்டோர் | 396 | மக்களொடு மகிழ்ந்து | 92 |
| நன்மையினிறுத்தலும் | 87 | மடந்தையுடன் போய் | 336 |
| நாற்றமும் தோற்றமும் | 154 | மடந்தையை வாயில் | 86 |
| நான்கு வகைப் | 63 | மடமா னேக்கி | 119 |
| நிமித்தம் போற்றலும் | 323 | மடலேறுதலொடு | 412 |
| நிலப்பெயர் வினைப்பெயர் | 413 | மருதம் நெய்தலென | 51 |
| நிலமும் பொழுதுமென | 47 | மருளுற்றுரைத்தல் | 137 |
| நீங்குங் கிழத்தி | 340 | மல்குகார் மாலை | 50 |
| நெஞ்சு நாணு | 401 | மலர்தலை யுலகத்துப் | 39 |
| நெடுமால் குறும்பறை | 53 | மற்றைக் காவல் | 75 |
| நெறிப்படு கருமம் | 403 | மறையிற் புணர்ச்சியும் | 70 |
| பகற்குறி யிரவுக் | 61 | மறையோர் மன்னவர் | 57 |
| படைக்கலம் பயிறலும் | 74 | மறையோன் கூற்றும் | 402 |
| பணிமொழி நற்றாய் | 336 | மாலையாமம் | 48 |
| பயந்தோன் றன்னை | 397 | மின்னிடை வேற்றுமை | 304 |
| பரத்தையர் காதற் | 90 | முத்திறப் பொருளும் | 416 |
| பரத்தையிர் பிரிதல் | 71 | | |
| பரத்தையிற் பிரிவும் | 77 | முற்படமொழிந்த | 332 |
| பருவரல் வினவிய | 235 | | |
| பாங்கி தலைவற் | 306 | முன் வரு நீதியும் | 88 |
| பாங்கி தலைவியை | 68 | முன்னிலைப் புறமொழி | 67 |
| பாட்டுடைத் தலைவன் | 412 | முன்னிலை முன்னிலை | 295 |
| பிரிவறிவுறுத்தல் | 263 | முன்னுற வுணர்தல் | 153 |
| பிரிவறிவுறுத்தல் | | மூன்று சூத்திரத்து | 377 |
| பிரிவுடன்படா | 377 | மெய்க்கிளை யாழோர் | 57 |
| பிரிவுழி விலக்கலும் | 88 | யாரையும் நயவா | 92 |
| பின்னர் வரைந்த | 72 | வருணன் சேர்ப்பன் | 54 |

| | பக்க எண் | | பக்க எண் |
|---|---|---|---|
| வரையே சுரமே | 47 | வினவிய செவிலிக்கு | 246 |
| வரைவிடை வைத்து | 62 | வினவிய பாங்கியின் | 317 |
| வரைவு மலிவே | 290 | வினுதல் செப்பல் | 336 |
| வரைவு முயல்வு | 291 | வெய்யோன் பாடு | 51 |
| வரைவெனப் படுவது | 290 | வெள்ளணி யணிந்து | 366 |
| வலனுயர் சிறப்பின் | 79 | வெளிப்படை உவமம் | 410 |
| வாயில் வேண்டல் | 361 | வேட்கையுணர்த்தல் | 123 |
| வாயில் வேண்டலும் | 85 | வேண்டல் மறுத்தல் | 212 |
| விருந்தியற் பரத்தை | 73 | வேத மாந்தர் | 75 |
| விலக்கல் சேறல் | 208 | வேனில் நண்பகல் | 49 |
| விறற்சேய் பொருப்பன் | 52 | | |

# மேற்கோட் செய்யுள் முதற்குறிப்பகர வரிசை

## தஞ்சை வாணன் கோவை


| | பக்க எண் |
|---|---|
| அகிலேந்து | 136 |
| அடிமலர் | 314 |
| அணிமாமலர் | 192 |
| அணியுஞ் சுடர்விரி | 139 |
| அயிரார் | 296 |
| அரியுங் கரியும் | 242 |
| அரும்பாமளவிற் | 142 |
| அருவித்தடமு | 209 |
| அலகம்பன | 249 |
| அறியாமையானென்று | 301 |
| அறையும் | 258 |
| அன்னைக்கியம்பின | 339 |
| ஆடுகம் வாநம் | 260 |
| ஆரணத்தானருள் | 266 |
| ஆராதவின்ப | 201 |
| ஆழ்ந்தார் | 199 |
| ஆழியகன்புவி | 231 |
| ஆற்றுந்தலைவ | 190 |
| ஆறலை வெஞ்சிலைக் | 343 |
| இணங்கிப் | 319 |
| இப்பெருவகை | 266 |
| இயங்காவனமென் | 329 |
| இரவேய் குழலியிவ் | 330 |
| இருங்குன்றனமதி | 223 |
| இரும்பாமனங் | 325 |
| இருமையிலேயும் | 375 |
| இருவர் கண்டால் | 184 |
| இல்லத்துறையு | 259 |
| இல்லுங் கழங்கா | 321 |
| இல்வித்தக | 294 |
| இவளாருயிர் | 262 |
| இழை விளையாடு | 252 |
| இழை விளையாடு | 409 |

| | பக்க எண் |
|---|---|
| இன்புற்ற | 269 |
| இன்னற் படுகின்ற | 381 |
| இன்னே வருவர் | 269 |
| ஈன்றாளினுமெனக் | 243 |
| உயராமலகத் | 272 |
| உரவிப் | 294 |
| உரைத்தென் | 171 |
| உவலைப்பதுக்கை | 343 |
| உழையும் | 406 |
| உழையும் வெங் | 173 |
| உன்னையராவல்கு | 210 |
| ஊரோர் பவரிங் | 250 |
| என்போனநெஞ்சமு | 371 |
| எந்நாட்டவரணி | 215 |
| எம்மாதிரமும் | 363 |
| எறிதேனலம்புஞ் | 129 |
| என் காதலி | 152 |
| என்பாற் குறையை | 367 |
| என் மேலறைவ | 147 |
| என்னுமியம்புவ | 337 |
| என்னோடு நின்ற | 152 |
| எனைக் கேளிரு நின் | 338 |
| ஏடா ரலங்க | 180 |
| ஏத்துந்தமதுரை | 135 |
| ஏமானென வஞ்சு | 343 |
| ஏரார் புதல்வன் | 368 |
| ஏரேற்ற கொங்கை | 256 |
| ஏவலரேய் வழி | 207 |
| ஐவாயரவுற்ற | 262 |
| ஒருதலைக்கெய்திய | 261 |
| ஒருவெண்குடை | 328 |
| ஒல்காவிருண் | 222 |
| ஒல்லெனவே | 241 |
| ஒலி தெண்கடல் | 182 |

| | பக்க எண் | | பக்க எண் |
|---|---|---|---|
| ஒழி தோற்றிய | 303 | சிறந்தார் | 201 |
| ஒன்ரே நமக்கு | 360 | சிறந்தார் புகழ் | 376 |
| ஓங்கண்ணல் | 232 | சின்ஞண் மலர் | 195 |
| ஓதக்கயலே | 242 | சினவாகை சூடிச் | 239 |
| ஓவலில் வாயன்னே | 237 | சினவேய் சுளியுங் | 359 |
| கண் சாயல் | 193 | சீதள வாரங் | 147 |
| கந்தார நாணுங் | 217 | சீயங்கொலோ | 138 |
| கயமா மலரெனுங் | 292 | சுருளேய் | 308 |
| கயல்வென்ற | 226 | சுழிநீரலே கடற் | 220 |
| கருவிருந் | 214 | சுற்றுங்குழல் | 380 |
| கரைத்தாவி | 159 | சூடத் தகுவன | 186 |
| கலங்குந் | 254 | சூரார் சிலம்பிற் | 146 |
| கலேதொடக் | 184 | செங்கேழ் | 211 |
| கவர்பரி | 204 | செந் நாண் | 310 |
| கழைபோல் | 264 | செயலார் குடம்பை | 177 |
| களவரும் | 179 | செயலேத் தருவின் | 322 |
| கறையா ரிலங்கிலே | 128 | செருமகளேயும் | 329 |
| கனஞ்சாய | 206 | செல்லிற் | 311 |
| கனமே குழல் | 147 | செவ்வண்ண | 185 |
| காதற் கயம்படிந் | 378 | செழியன் கயலேத் | 219 |
| காதற் கயம்படிந் | 407 | செறிவளர் | 171 |
| காலேப்பொழுது | 265 | செறிவேழ | 125 |
| காலேயம் போருக | 200 | சென்றே பகைவென்ற | 134 |
| கானலங் | 206 | சேலார் புனல் | 345 |
| கானெடுங் | 272 | சேலார் புனல் | 408 |
| கானேயளகங் | 148 | சையத் திரள் புயன் | 314 |
| குரவுங் | 252 | சோகா குலமெய்தல் | 293 |
| குருதி கண்டாலன்ன | 249 | சோலேயில் | 173 |
| குவளே சிவந்து | 157 | தண்டாமரை | 162 |
| குளித்தாரிளங் | 259 | தண்டார் | 304 |
| குன்ருகிய | 204 | தண்ணென் | 232 |
| குனி நாண்மதி | 195 | தண்பட்ட மேவும் | 160 |
| கையுந்தழையு | 188 | தமிழ் தங்கிய | 128 |
| கொண்டானிற் | 376 | தருகற்பகமன்ன | 145 |
| கொத்தல ரோதியங் | 383 | தருந்தாரு வஞ்சுங் | 194 |
| கொலேகாலயிற் படை | 149 | தரையார | 160 |
| கோங்க நன்மா | 358 | தலங்காவலன் | 149 |
| கோபுரஞ்சோலே | 338 | தலத்திற்கு | 253 |
| சகநல்க | 320 | தனேயாகிய தன்மை | 369 |
| சந்தனம் | 316 | தழங்கார் புனல் | 373 |
| சிதையாமுளரித் | 127 | தழல் கண்ட | 152 |
| சிமையார் | 172 | தள்ளா வளவயல் | 365 |
| சிலேபயில் | 180 | தளரா விளமுலே | 247 |

| | பக்க எண் | | பக்க எண் |
|---|---|---|---|
| தளிபோற் | 313 | நண்பான மன்னர்க் | 381 |
| தற்பழியாமலுஞ் | 245 | நந்து சுற்றுங் | 209 |
| தன் கண்ணனே | 182 | நம்பானலனுண்ட | 238 |
| தன் போலுலகம் | 299 | நம் பேறுடைமை | 233 |
| தனஞ் சேர்ந்த | 268 | நல்லார் விழிபோ | 126 |
| தனேயாவரும் புகழ் | 230 | நலம் புனே | 317 |
| தாதகை தண்டலே | 228 | நறையலராவிரை | 176 |
| தாமாக மேவினு | 337 | நன்றே யிதென்று | 328 |
| தாரணி | 297 | நனேயகத்தல்கிய | 360 |
| தாராக நல்கினர் | 363 | நாண்மாதவி மலர் | 325 |
| தாவாத | 253 | நாணினுந் தாரணி | 331 |
| தாளினே | 167 | நாமாவி மூழ்கி | 193 |
| திரண்மா மரகதச் | 131 | நாவியுங் காரகி | 132 |
| திருந்தார் | 175 | நிலவேய்தரள் | 259 |
| திரைகேதகை | 258 | நின்மேலடுத்த | 357 |
| திரையிற் | 248 | நினக்கே தகுநின் | 369 |
| திவாகரனேயன்ன | 185 | நினேயானெதிர்ப்பட்ட | 333 |
| திளேக்குந் | 155 | நினேயீர் | 271 |
| துதித்தே | 297 | நீ வேறுரைக்கின்ற | 166 |
| துறந்தனளாகிய | 229 | நெஞ்சுக வாய் | 204 |
| தூதாகவன்பர் | 380 | நேயம் புகலிட | 194 |
| தூற்றுதவரை | 189 | நேயம் புணே துணே | 321 |
| தெண்பாற் கதிர் | 233 | நொந்துங் | 326 |
| தெரியாடகவிதழ்ப் | 357 | படம்பட்ட | 127 |
| தெரியோர் | 371 | படியொன்று | 365 |
| தென்பாற் | 137 | பண்ணும் குழலும் | 261 |
| தென்மாறை | 335 | பதியேன் மிகவிப் | 159 |
| தென்னுக வண்டமிழ் | 255 | பயில்கான பந்திப் | 205 |
| தேங்கிய காதர | 124 | பரக்கின்ற | 185 |
| தேர்த்தானே | 267 | பரவாத வண்ணம் | 217 |
| தேருத | 127 | பருந்தொன்று | 126 |
| தேன்வந்த | 180 | பல்லியம் போலுரு | 230 |
| தேனுஞ் சுரும்புந் | 170 | பலரே சுமந்த | 310 |
| தேனுற்ற | 228 | பறந்தாங்கிவர் | 258 |
| தேனேரலங்கற் | 228 | பாகையுந் தேனேயும் | 151 |
| தொடங்கும் | 315 | பாரணங்கோ | 120 |
| தொடுசிலேக்கானவ | 330 | பாரித்த திண்மை | 148 |
| தொடைக்கணியார் | 205 | பாரோ முலேவிலே | 307 |
| தொடையே | 176 | பால்போன் | 158 |
| தொலேவிலே | 292 | பாலன்ன | 309 |
| நங்கணிரங்க | 382 | புகழார் வரை | 168 |
| நஞ்சாரரவந் | 255 | புணரா விரகமும் | 239 |
| நஞ்சோ | 308 | புதியேன் | 159 |

| | பக்க எண் | | பக்க எண் |
|---|---|---|---|
| புயலே சுமந்து | 119 | மந்தார மன்னகை | 219 |
| புயலேறதிர் | 216 | மயலார் களிற்றண்ணல் | 139 |
| புயற்கண்ணிய | 233 | மயனுர் விதித்தன்ன | 194 |
| புரவே யெதிர்ந்த | 370 | மயிலாடு | 260 |
| புராந்தகர் | 254 | மருப்பாவிய | 169 |
| புறங்கூறிரும் | 151 | மருவாய | 141 |
| புனங்காவலன் | 163 | மருள்கொண்ட | 342 |
| புனமும் | 209 | மருவிற் பெருநல | 365 |
| புனையலங்கார | 364 | மல்குற்ற | 173 |
| புனையலரேதிலர் | 334 | மல்லார் | 172 |
| புனையாழி | 144 | மல்லையம் போர் | 221 |
| பூட்டிய வார்சிலை | 156 | மல்வித்தகங் | 378 |
| பூந்தழை | 215 | மலர்புரையோர் | 367 |
| பூவலர் வாவியி | 202 | மலருந்தொடை | 241 |
| பெருமான் | 138 | மலிகின்றவண்புகழ் | 380 |
| பெறவரிதாலவள் | 212 | மலைநாடு கொண்ட | 130 |
| பேசத் தகுவதொன் | 227 | மலை மாது | 214 |
| பேணற்கரிய | 203 | மலைமுழுதுங் | 144 |
| பொடுபான் | 244 | மலைவந்த | 305 |
| பொய்போலிடை | 194 | மழவே துறந்து | 298 |
| பொய்யாதவர் | 229 | மழை வளர் மாளிகை | 148 |
| பொருகின்ற | 271 | மற்றேதவர் | 190 |
| பொருமணி | 159 | மறலாயெதிர்ந்த | 156 |
| பொழிநான | 312 | மறவாகை | 309 |
| பொறைகொண்ட | 146 | மன்பதையுய்ய | 234 |
| பொன்னியலூசலும் | 167 | மன்றும் | 141 |
| பொன்னுற்ற | 301 | மன்னவர் | 366 |
| போதலர்ந்தலலை | 334 | மன்னுவுலகத்து | 133 |
| போயானளித்தலுங் | 192 | மன்னிய பார்புகழ் | 133 |
| போயே தெருவிற் | 372 | மன்னுயிர் காவலன் | 379 |
| போயே தெருவிற் | 407 | மாகந்தரியலர் | 217 |
| போருறை | 302 | மாகப் புயன் | 298 |
| மஞ்சூட்டியன்ன | 197 | மாணுதை தெவ்வென்ற | 255 |
| மஞ்சைப் புனைமதின் | 382 | மாணிக்க மென் | 236 |
| மண்குன்ற | 302 | மாதங்க | 299 |
| மண்டுந்திரை | 266 | மாரியஞ்சுங் கொடை | 294 |
| மண்ணலை | 303 | மால்கொண்ட | 383 |
| மண்ணர் பெரும்புகழ் | 221 | மால்வண்டென | 271 |
| மண்ணிற் சிறந்த | 122 | மாலாய் | 145 |
| மண்ணும் பயில்வித்து | 181 | மாலுந்திருவு | 315 |
| மணிப்பாலிகை | 293 | மாவாரண மன்ன | 372 |
| மணி பொன்சொரியுங் | 134 | மாரு வளவயல் | 318 |
| மணிவரை | 247 | மாறையர் காவலன் | 362 |

| | பக்க எண் |
|---|---|
| மான்காணிகரின் | 211 |
| மாணுகரன் | 142 |
| மிக்காருளரல்லர் | 167 |
| மிகவும் பரந்த | 267 |
| மின்னுதிடித் தென்ன | 244 |
| மின்னேயயிலொடு | 218 |
| முகத்திற் பகழி | 147 |
| முகையாயலராய் | 221 |
| முத்தணி நீல | 251 |
| முதிராமுலை | 219 |
| முயங்கிய | 193 |
| முலையார் | 202 |
| முன்னூரரவுந் | 223 |
| முன்னேயிதனை | 320 |
| மூரற்கதிர் முத்த | 221 |
| மேவிக்கலைக்கட | 142 |
| மேனாள் வரங்கிடந்த | 322 |
| மைக்குஞ்சர | 383 |
| மைதோய்ந்தலர்ந்த | 358 |
| மைந்நாண் மலர் | 373 |
| மைந்நீர் | 307 |
| மைப்போ | 182 |
| மையணி வேல்விழி | 367 |
| மையார் குவளை | 121 |
| மையுற்ற | 248 |
| மைவாளிலங்கு | 163 |
| யாணர்க்குழன் | 378 |
| யாரும்பர் தம்பத | 151 |
| யாரேயிவரென் | 161 |
| யான்கண்ட | 331 |
| யானகம் போத | 331 |
| வகை கொண்ட | 215 |
| வசையும் | 264 |
| வஞ்சங் கலந்த | 222 |
| வடியேய் புகர்முக | 323 |
| வடியோ வெனுங்கண் | 227 |
| வடுக்கண்டனைய | 381 |
| வடுவரி | 214 |
| வண்கொடி | 133 |
| வண்டலையாயத் | 155 |
| வண்புனலூர் வையை | 369 |
| வயங்கேழுலகும் | 368 |
| வரமாமை | 313 |

| | பக்க எண் |
|---|---|
| வரற்கால | 379 |
| வரியோல் | 298 |
| வருநீர்வன முலை | 170 |
| வரைப்பான் | 240 |
| வல்லாரிளங் | 162 |
| வலம்புரி போற் | 144 |
| வலைப்பெய்த | 196 |
| வழியா வரும்பெரு | 318 |
| வழுதியர் | 125 |
| வளங்கனி | 150 |
| வளங்கொண்ட | 359 |
| வளவேய் மிடைந்த | 341 |
| வறியார் புகழ் | 238 |
| வன்பணி | 175 |
| வன்போதணி | 362 |
| வன்மாமுருக | 270 |
| வனநாண் | 250 |
| வனமார் குடிஞை | 160 |
| வனைந்தாலன | 169 |
| வளையுங் குழல் | 187 |
| வாக்குந்திறனு | 163 |
| வாமக்கலையல்குல் | 140 |
| வாயார நுங்களை | 342 |
| வார்த்தன | 382 |
| வாருந்து பச்சிள | 365 |
| வாவித்தகையன்ன | 268 |
| வாவுங்கலை விந்தை | 166 |
| வாளினு நீள்விழி | 240 |
| வாளேய் விழி நின் | 335 |
| வானக் கதிரவன் | 130 |
| விட வார் கணைவிழி | 216 |
| விடையான் | 189 |
| விண்காவல் கொண்ட | 379 |
| விண்டார் | 236 |
| விண்மலை வேலன்ன | 129 |
| விண்மேலமரர் | 360 |
| விம்மூர் துயர்க்கடல் | 229 |
| வியலூரெயிற் | 230 |
| விரையக நாண்மலர் | 171 |
| விரையூர் | 175 |
| வில்லார் | 169 |
| வில்லுழவர் | 399 |
| வில்லேய் குறும்பு | 265 |

| | பக்க எண் |
|---|---|
| வின்மலை | 129 |
| வெங்கார் | 300 |
| வெங்குல வாரண | 216 |
| வெங்கோன் | 150 |
| வெஞ்சுர நாடு | 323 |
| வெடிக்கின்ற | 248 |
| வெடிக்கின்ற | 407 |
| வெண்டாமரை | 172 |
| வெண்டோடணி | 177 |
| வெம்போர் | 222 |
| வெயிலுந் தரவிந்த | 220 |
| வெவ்வேலெறிந்த | 181 |
| வெள்ளம் பரந்தன்ன | 374 |
| வெற்றியவாவிய | 243 |
| வெறுத்தா | 317 |
| வேண்டும் | 270 |
| வேளாண் மரபு | 364 |


## தொல்காப்பியம்


| | பக்க எண் |
|---|---|
| அச்சமு நாணு | 60 |
| இரந்து குறையுற்ற | 178 |
| இருவர் நூற்கு | 40 |
| இன்பமும் பொருளும் | 117 |
| எண்ணேகார | 47 |
| எற்பாடு நெய்த | 51 |
| ஒத்த கிழவனும் | 61 |
| ஒன்றே வேறே | 119 |
| காமப் புணர்ச்சியும் | 56 |
| காரு மாலையும் | 50 |
| குற்றங் காட்டிய | 153 |
| குறிஞ்சி கூதிர் | 50 |
| குறையுறற் | 178 |
| கைக்கிளை முதலாய் | 42 |
| கொடுப்போரின்றியுங் | 70 |
| சிறந்துழி | 120 |
| சொல்லிய நுகர்ச்சி | 59 |
| தண்டா திரப்பினு | 178 |
| தந்தையுந் | 67 |
| தீராத் தோற்றம் | 131 |
| தெய்வமுணவே | 52 |
| நடுவுநிலைத் திணையே | 50 |
| நன்னயம் | 197 |
| நாட்டமிரண்டு | 122 |
| நாடக வழக்கினு | 44 |
| நாற்றமுந் | 154 |
| நிற்பவை நினைஇ | 153 |
| பண்பிற் பயப்பினும் | 183 |
| பலவயினானு | 74 |
| பனியெதிர் | 50 |
| பின்பனி தானும் | 50 |
| புணர்தல் பிரிதல் | 55 |
| பூப்பின் புறப்பா | 83 |
| பெட்ட வாயில் | 161 |
| பெருமையு முரனும் | 60 |
| பெற்ற வழி | 141 |
| மாயோன் மேய | 45 |
| முதல் கருவுரி | 46 |
| முதலெனப்படுவது | 47 |
| முன்னைய மூன்றுங் | 118 |
| மூன்றன் பகுதியும் | 84 |
| வண்டே யிழையே | 121 |
| வந்த கிழவனை | 164 |
| வரைவிடை வைத்த | 66 |
| வினையின் நீங்கி | 40 |
| வேட்கை யொருதலை | 61 |
| வேண்டிய கல்வி | 82 |
| வேந்துறு தொழிலே | 82 |
| வேளாணெ திரும் | 197 |
| வைகுறு விடியல் | 50 |


### தொல்காப்பியப் பாயிரம்


தமிழ் கூறு


## சங்க இலக்கியம்

### நற்றிணை


| | |
|---|---|
| அசுணங்கொல் | 203 |
| அல்குபடருழந்த | 139 |
| அழிவில | 313 |
| அழுந்துபடு | 419 |
| அறிந்தோ | 247 |
| இவளே | 166 |
| இறவுப் புறத் | 265 |
| எம்மூர் வாயி | 231 |

| | பக்க எண் |
|---|---|
| எழாஅயாகலி | 296 |
| என் கைக் | 202 |
| ஒருமகளுடையோன் | 322 |
| ஒள்ளிழை | 126 |
| ஓதமுமொலியோ | 140 |
| கடவுட் | 302 |
| கவர்பரி நெடுந்தேர் | 204 |
| குருதி வேட்கை | 220 |
| குறுங்கை | 232 |
| சிலம்பின் மேய்ந்த | 190 |
| சிலரும் | 310 |
| சிறுவெள்ளாங் | 260 |
| சேயின் வரூஉ | 328 |
| சொல்லிற் | 127 |
| தடமருப் பெருமை | 370 |
| தொடிபழி | 256 |
| நயனின்மையிற் | 182 |
| நின்ற சொல்லர் | 135 |
| நினைத்தலும் | 398 |
| நீர்வள ராம்பற் | 181 |
| நெடுநா வொண்மணி | 368 |
| நெய்தல் கூம்ப | 200 |
| படுதிரை | 238 |
| புணரிற் புணராது | 80 |
| புறந்தாழ் | 81 |
| பெருந் தோள் | 299 |
| பெருமுது செல்வர் | 200 |
| பொன்னும் மணியும் | 82 |
| மாயோனன்ன | 189 |
| முறஞ்செவி | 205 |
| யாங்காகுவமோ | 236 |
| வண்புறப் | 314 |
| விளக்கினன்ன | 370 |
| விளையாடய மொடு | 251 |
| வினையமை பாவை | 343 |

குறுந்தொகை

| | |
|---|---|
| அயிரை பரந்த | 359 |
| அரிற்பவர் | 415 |
| அளிதோ | 309 |
| ஆடமை புரையும் | 212 |
| இது மற்றெவனோ | 364 |

| | பக்க எண் |
|---|---|
| இருடிணிந்தன்ன | 201 |
| இன்றே சென்று | 265 |
| உதுக்காணதுவே | 419 |
| உள்ளிக்காண்பென் | 211 |
| எலுவ சிறாஅ | 144 |
| எறும்பியளையிற் | 267 |
| ஒலி வெள்ளருவி | 216 |
| கருங்கால் வேங்கை | 233 |
| கருங்கோற்குறிஞ்சி | 46 |
| காணினி | 245 |
| காமங் காமமென்ப | 146 |
| காலேபரிதப் | 332 |
| கானங்கோழி | 361 |
| குணகடற் | 228 |
| குன்றக் கூகை | 242 |
| கேட்டிசின் | 240 |
| கொங்குதேர் | 133 |
| கொன்னூர் | 231 |
| கோடலெதிர் | 130 |
| சிறைபணியுடைந்த | 363 |
| செங்களம்படக் | 193 |
| செல்வச் சிறாஅர் | 268 |
| செல்வாரல்ல | 266 |
| சேணோன் | 217 |
| ஞாயிறு | 319 |
| தாழிருடுமிய | 394 |
| தீண்டலு மியைவது | 128 |
| நசைபெரி | 267 |
| நனைமுதிர் | 311 |
| நீர்கால் | 308 |
| நோமென்னெஞ்சே | 202 |
| பறைபடப் | 320 |
| புள்ளும் புலம்பின | 240 |
| பெயல்கண் | 219 |
| பெருவரை | 145 |
| பெறுவதியையா | 207 |
| மகிழ்நன் | 201 |
| மட்டம் பெய்த | 358 |
| மடவவாழி | 268 |
| மண்ணிய சென்ற | 231 |
| மாவென | 175 |
| முடக்காலிறவின் | 240 |
| முலையே | 168 |

| | பக்க எண் |
|---|---|
| முளிதயிர் | 360 |
| யாஅங், கொன்ற | 209 |
| யாமெங் காமந் | 297 |
| யாயாகியளே | 376 |
| யாயும் யாயும் | 134 |
| யாருமில்லைத் | 298 |
| யாவது மறிகிலர் | 202 |
| வளைவாய்ச் | 243 |
| விட்ட குதிரை | 190 |
| வில்லோன் | 315 |
| வேரல் வேலி | 255 |
| வேம்பின் | 374 |

ஐங்குறுநூறு

| | |
|---|---|
| அணங்குடைப் | 174 |
| அத்த நீளிடை | 318 |
| அம்ம வாழி | 261 |
| அம்ம வாழி தோழி | 293 |
| அளியதாமே | 210 |
| அறஞ்சாலியரோ | 344 |
| இதுவென்பாவை | 321 |
| இம்மையுலகத் | |
| இரவினுனு | 149 |
| எக்கர் | 358 |
| எக்கர் ஞாழற் | 292 |
| எமக்கு நயந் | 152 |
| எரிமருள் | 294 |
| கடற்கோடு | 148 |
| கடுங்கட்காளை | 342 |
| கண்டிகு மல்லமோ | 420 |
| கணங்கொளருவிக் | 420 |
| கரும்புநடு | 369 |
| கருவிரன் மந்தி | 339 |
| கவிழ்மயிரெருத்திற் | 334 |
| காமங் கடவ | 229 |
| கானலம் | 260 |
| குன்றக் | 180 |
| குன்றக் குறவன் | 292 |
| குன்றக் குறவன் | 295 |
| குன்றக நாடன் | 139 |
| கோடீரெல்வளைக் | 171 |

| | பக்க எண் |
|---|---|
| சாரற் பலவின் | 259 |
| சிலைவிற்பகழி | 417 |
| சிறுகட் பன்றி | 249 |
| செல்லிய | 321 |
| சேட்புலமுன்னிய | 341 |
| தன்னமராயமொடு | 320 |
| தெறுவதெம்ம | 333 |
| தோளுங் | 171 |
| நாரை நல்லினங் | 248 |
| நும்மனைச்சிலம்பு | 337 |
| நெய்யொடு | 187 |
| நெறிமருப்பெருமை | 179 |
| நொதுமலாளர் | 173 |
| பல்லூழ் நினைப்பினு | 325 |
| பழனக் கம்புள் | 253 |
| பழனக் கம்புள் | 419 |
| புறவணி நாடன் | 419 |
| புன்கண்யானையொடு | 342 |
| பெரும்புன்மாலை | 270 |
| போதார் கூந்த | 262 |
| மழை வரவறியா | 230 |
| மள்ளர் கொட்டின் | 324 |
| மன்னரன்ன | 338 |
| மறுவில்தூவிச் | 323 |
| மின்னவிர் | 256 |
| முல்லை நாறுங் | 383 |
| முளவுமாவல்சி | 177 |
| முளிவயிற் பிறந்த | 334 |
| யாங்கு வல்லுநையோ | 261 |
| வருவையல்லை | 258 |
| வளமலர்ததைந்த | 418 |
| வளைபடு | 270 |
| வளையணி முன்கை | 185 |
| வெண்ணுதற் | 375 |

பரிபாடல்

| | |
|---|---|
| முன்புற்றறியா | 132 |

கலித்தொகை

| | |
|---|---|
| அன்னையோ | 129 |
| இகல் வேந்தன் | 418 |

| | பக்க எண் |
|---|---|
| எந்தையும் | 245 |
| கடிமலர்ப் | 254 |
| காமர் கடும்புனல் | 303 |
| சீர்கெழு வெண்முத்த | 329 |
| தன்னெவ்வங் | 250 |
| தாமரைக்கண்ணியை | 222 |
| தாமரைக்கண்ணியை | 253 |
| தெருவின்கட் | 185 |
| பண்டுநம் | 129 |

அகநானூறு

| | |
|---|---|
| அம்மவாழி | 145 |
| அரிபெய் சிலம்பி | 413 |
| அன்னாய்வாழி | 218 |
| இம்மையுலகத் | 375 |
| இரும்பிழி | 237 |
| ஈயற்புற்றத் | 238 |
| கயந்தலை மடப்பிடி | 327 |
| கானமானதர் | 123 |
| கேளாய் வாழியோ | 325 |
| கோழிலை | 249 |
| தேர் சேணீக்கிற் | 188 |
| நாயுடை முதுநீர் | 372 |
| நெஞ்சு நடுங் | 224 |
| நெடுமலை | 252 |
| பன்னு ளெவ்வஞ் | 196 |
| பனைத் திரளன்ன | 251 |
| பெருநீரழுவத் | 300 |
| முலைமுகஞ் செய்தன | 329 |
| மூந்தோரன்ன | 307 |
| மெய்யிற்றீரா | 203 |
| விரியினர் | 210 |
| வேலும் | 312 |
| வேளாப் பார்ப்பான் | 413 |

புறநானூறு

| | |
|---|---|
| வயலைக்கொடியின் | 76 |

பத்துப்பாட்டு

| | |
|---|---|
| அன்னாய் வாழி (குறிஞ்சிப் பாட்டு) | 417 |

| | பக்க எண் |
|---|---|

இறைனார் அகப்பொருள்

| | |
|---|---|
| ஓதல் காவல் | 71 |
| களவினுட் தவிர்ச்சி | 63 |
| களவு வெளிப்படா | 63 |
| காப்புக் கைமிக்கு | 65 |
| பிரிவின் நீட்டம் | 83 |
| முற்படப் புணராத | 69 |

சிலப்பதிகாரம்

| | |
|---|---|
| ஓடுந் திமில் | 125 |
| துறைமேய் | 150 |
| புண்கண்கூர் | 242 |
| மடந்தாழ | 76 |

சீவகசிந்தாமணி

| | |
|---|---|
| கயற்கணாளையுங் | 345 |
| பாவைநீபுலவி | 371 |

திருக்குறள்

| | |
|---|---|
| அணங்கு கொல் | 120 |
| அளித்தஞ்ச | 259 |
| இருநோக் | 122 |
| உப்பமைந்தற்றாற் | 373 |
| உருஅ தவர்போற் | 183 |
| கண்டு கேட்டுண்டு | 130 |
| காமமுழந்து | 175 |
| தம்மிலிருந்து | 220 |
| தொடலைக் | 176 |
| முகைமொக்கு | 129 |

நாலடியார்

| | |
|---|---|
| அரக்காம்பனாறும் | 324 |
| கடக்கருங் | 311 |
| முலைக்கண்ணு | 319 |

ஐந்திணை ஐம்பது

| | |
|---|---|
| அணிகடற் | 227 |
| அணிநிற | 267 |
| எறிந்தெமர் | 207 |

| | பக்க எண் |
|---|---|
| கொடுமுள் மடற்ருழை | 227 |
| கொண்டுழிப் பண்டம் | 415 |
| தேரோன் மலேமறைந்த | 416 |
| மால்வரை வெற்ப | 206 |
| வெறி கமழ் | 244 |

ஐந்திணை எழுபது

| | |
|---|---|
| அவரை பொருந்திய | 195 |
| இலேயடர் | 293 |
| கண்டிரண் | 297 |
| குறையொன் | 243 |
| பிரைசந் கொள | 253 |

திணைமொழி ஐம்பது

| | |
|---|---|
| ஆம்பலணித் தழை | 215 |
| கறங்குமணி | 417 |
| நெய்தற் படப்பை | 229 |
| விரைகமழ் | 172 |
| வேங்கைமலர | 163 |

திணைமாலே ஐம்பது

| | |
|---|---|
| செவ்வாய்க் | 318 |

திணைமாலே நூற்றைம்பது

| | |
|---|---|
| அரத்தமுடீஇ | 364 |
| என்கேட்டி | 363 |
| என்னரேயேற்ற | 419 |
| ஒருவரைபோ | 214 |
| கடும்புலால் | 192 |
| கொன்ருய் | 322 |
| சுள்ளி | 304 |
| தந்தார்க்கே | 303 |
| தன்குறையீதென்ஞன் | 184 |
| தாழை தவழ்ந்துலாம் | 149 |
| தான்ருயாக | 330 |
| திங்களுள் | 167 |
| நுண்ணிநீர் | 331 |

| | பக்க எண் |
|---|---|
| நறுந் தண்டகரம் | 170 |
| நாள் வேங்கை | 174 |
| வினை விளேயச் | 205 |
| வெறுக்கைக்குச் | 418 |
| வேருக நின்னே | 335 |

கார் நாற்பது

| | |
|---|---|
| கடுங்கதிர் | 269 |

புறப்பொருள் வெண்பாமாலே

| | |
|---|---|
| கருந்தடங்கண் | 119 |
| தாமரைமேல்வைகிய | 120 |
| திரு நுதல் | 121 |

சிற்றட்டகம்

உரைத்த சிற்ருேழி
சுறவுப் பிறழிருங்கழி
நாளு நாளு

கோவை நூல்கள்

| | |
|---|---|
| உவக்கின்ற வல்லி (திருவாரூர்க் கோவை) | 324 |
| ஏடார் மலர்க்குழல் (அம்பிகாபதிக் கோவை) | 333 |
| தாமே தமக்கொப்பு (திருக்கோவையார்) | 324 |
| நீற்கடலுண்ட (திருவாரூர்க் கோவை) | 311 |
| பறந்திருந் (திருக்கோவையார்) | 311 |
| விண்டலே (திருச்சிற்றம்பலக் கோவை) | 243 |
| விழிகுழி (அம்பிகாபதிக் கோவை) | 269 |

பிற இலக்கிய மேற்கோள்கள்

| | |
|---|---|
| அடம்பம னெடுங்கொடி | 299 |
| அதிரிசை | 35 |

| | பக்க எண் |
|---|---|
| அம்மவாழியோ | 226 |
| அம்மவாழி வெம்முலை | 157 |
| அறநிலை யொப்பே | 117 |
| அறியாய் தோழி | 399 |
| ஆக்கியோன் | 35 |
| ஆறுசெல் | 309 |
| இப்பியீன்றுகுத்த | 239 |
| இரும்புலி | 308 |
| இருள்பே நலகின் | 221 |
| இவளே | 312 |
| ஈயலின் | 271 |
| ஊருறு கோழி | 241 |
| எம்மூரல்ல | 315 |
| எவ்வியிழந்த | 373 |
| ஏனல் காவல் | 164 |
| கண்ணிதகை | 172 |
| கண்ணுஞ் | 304 |
| கண்ணுஞ் சேயரி | 155 |
| கம்பமதயானை | 176 |
| கருத்துரை கண்ணழிவு | 41 |
| கரைபொரு | 254 |
| கழித்துறை செறியா | 413 |
| கள்வரைக்கண் | 234 |
| கள்ளாவி | 211 |
| காணுமரபிற் | 136 |
| காலங்களனே | 35 |
| குவளைமேய்ந்த | 367 |
| கையது செயலைந் | 161 |
| சீதவிரைக் கனகச் | 160 |
| தந்து நீயளித்த | 192 |
| தன்னையுந் | 169 |
| திகழ்மலர் | 254 |
| தீண்டா நாண் | 84 |
| துயிலின்றி | 80 |
| தூதும் பொருளும் | 83 |

| | பக்க எண் |
|---|---|
| தூய்மை சான்ற | 184 |
| நறும்பூங் கண்ணியும் | 195 |
| நுழையுண் | 300 |
| நெடுவேறுடக்கிய | 134 |
| நெருநலு | 168 |
| நெறி நீரிருங்கழி | 180 |
| நோக்கினும் | 138 |
| பண்டிப் புனத்துட் | 158 |
| பருப்பொருட்டாகிய | 35 |
| பருவரனெஞ்ச | 188 |
| பனியிருங் | 79 |
| பிறைநுதலான் | 126 |
| புணரிற் புணராது | 80 |
| புரிவளை | 271 |
| புலைமகனுதலிற் | 369 |
| பூத்த வேங்கை | 161 |
| பெருங்கரை நிவந்த | 415 |
| பையுண் மாலை | 156 |
| பொழிப்பெனப்படுவது | 42 |
| மணன்மலி | 79 |
| மருந்திற்றீராது | 124 |
| மறவல் வாழி | 189 |
| மனங்காவலருழை | 203 |
| மனவேரல்குல் | 138 |
| மாதர் குறை முடிக்க | 170 |
| மாயோனன்ன | 189 |
| மானதர் மயங்கிய | 335 |
| முதல்வழி சார்பென | 40 |
| முற்படப் புணராத | 69 |
| முன்னுந் | 156 |
| முன்னோர் நூலின் | 40 |
| வாள் போழ் | 186 |
| வெள்ளாங்குருகின் | 177 |

# திருப்பனந்தாள் அறக்கட்டளை வெளியீடுகள்

1. தேவாரத் திருமுறை
   பதிப்பாசிரியர் — தி. பொ. பழநியப்பப் பிள்ளை

2. சேக்கிழார் தமிழ்ப் பரிசுத் தொகுதி
   பதிப்பாசிரியர் — டாக்டர். அ. சிதம்பரநாதச் செட்டியார்

3. கம்பர் நினைவுப் பரிசுத் தொகுதி
   பதிப்பாசிரியர் — பூவராகம் பிள்ளை

4. ஆதி குமரகுருபர அடிகள் நினைவுத் தமிழ்ப் பரிசுத் தொகுதி
   பதிப்பாசிரியர் — மு. அருணசலம் பிள்ளை

5. தேவாரத் திருமுறை (இரண்டாம் பாகம்)
   பதிப்பாசிரியர் — க. வெள்ளைவாரணன்

6. சிவஞான போத மூலமும் – சிற்றுரையும்
   பதிப்பாசிரியர் — ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை

7. ஞானமிர்தம் மூலமும் பழைய உரையும்
   பதிப்பாசிரியர் — ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை

8. Special Lectures on Saiva Siddhanta
   K. M. Balasubramanian

9. பன்னிரு திருமுறை வரலாறு (முதற்பகுதி)
   பதிப்பாசிரியர் — க. வெள்ளைவாரணன்

10. சுந்தர காண்டம் (முதற்பகுதி)

11. Of Human Bondage And Divine Grace
Dr. V. A. Devasenapathy

12. திருவாசகம் (முதற்பகுதி)
பதிப்பாசிரியர் — நீ. கந்தசாமிப் பிள்ளை

13. Collected Lectures On Saiva Siddhanta (1946 — 1954)

14. The Relevance of Saiva Siddhanta Philosophy
N. Murugesa Mudaliar

15. பன்னிரு திருமுறை வரலாறு (இரண்டாம் பாகம்)
ஆக்கியோன் — க. வெள்ளைவாரணன்

16. யாப்பருங்கலக் காரிகை
பதிப்பாசிரியர் — சு. சாமி ஐயா

17. தமிழ் இலக்கிய வரலாறு
13, 14, 15 நூற்றாண்டு
தி. வை. சதாசிவ பண்டாரத்தார்

18 தமிழ் இலக்கிய வரலாறு
250 — 600 A. D.
தி. வை. சதாசிவ பண்டாரத்தார்

19. திருமூலர் அருளிய திருமந்திர மாலை
முந்நூறு உரையும் விளக்கமும்
சித்தாந்தப் புலவர் வித்துவான் திரு. ந. சிவப்பிரகாச தேசிகர்

20. புகழேந்தியும் நளவெண்பாவும்
வெ. பழனியப்பன்

21. நாற்கவிராச நம்பி இயற்றிய அகப்பொருள் விளக்கம்
வெ. பழனியப்பன்

AUP